E: 1011

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீமத்

மாணிக்கவாசகசுவாமிகள் புராணம்.

# திருத்தொண்டர்புராணசாரவிளக்கம்.

நம்பியாண்டார்நம்பிகள் சரித்திரம்.

சேக்கிழார் புராணம்.

---

இவை

ஸ்ரீ வன்றொண்டரவர்கள் மாணுக்கர்

காரைக்குடி. ராம. சொ.

சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

செய்யப்பெற்று,

---

டையூர் ப. ராம. லெ. ராம.

இலக்குமணச்செட்டியாரவர்களால்

சிதம்பரம்

ஸ்ரீ குஞ்சிதசரண பிரஸில்,

பதிப்பிக்கப்பெற்றன.

விபவஸு புரட்டாசிமீ ௨௰௨

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# முகவுரை.

அநாதிமலமுத்தசர்வஞ்ஞதாதிசுத்தசாட்குண்ணியபரமபதியாகிய பரமசிவனொருவனே ஆண்டவன். அநாதிமலபெத்த தாமசாதி திரிகுண பசுக்களாகிய அரிபிரமேந்திராதி தேவர் முனிவர்முதலிய யாவரும் அவனடிமைகளே. இவ்வடிமைகளாகியபசுக்களை அவரவர்வினைவழியே செலுத்தி வினைப்போகங்களூட்டி ஆளுகின்ற தலைமை பரமசிவனுக்கே உரியதாதலால் அவனொருவனையே பசுபதியென்று சுருதி ஸ்மிருதி புராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களும் விளக்குகின்றன. இதனை, யசுர்வேதம், "ஏஷா மீசே பசுபதி: என்றும்; யசுர்வேத ஆரணியகம், "நமோ ஹிரண்ய பாகவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயே அம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோநம:" என்றும் வருகின்ற மந்திரமுதலியவைகளாற் காணலாம். இத்தகைய பசுபதியாகிய பரமசிவன், பசுக்களாகிய தேவர்முதலியசீவர்கள், மலமறைப்புடையராதலால்,தனதுசொரூபநிலையை உள்ளபடிஉணர்ந்து தாமாகஅணுகிவந்துய்யமாட்டார்களென்பதுநோக்கியே அவரவர் வினைக்கியைந்தபடிவசிக்கின்ற தத்துவபுவனங்களில் அவரவர்பக்குவங்களுக்குத்தக்க அருளுருவங்காட்டி அந்தந்தமட்டில் வழிபடச்செய்து சிறிதுசிறிதாக அத்தத்துவங்களைக் கடந்து மேன்மேற்சென்றுய்யும்படியருள்புரிவன். அவ்வாறு சிவபிரானை வழிபடுகின்றவர்கள் அவனது திருத்தொண்டர்வழிபாடுமெய்யன்புடன் செய்துவந்தாற்றான் அவ்வழிபாடு பயன்றருவதாம். "அன்பர்பணிசெய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டால்— இன்பநிலை தானேவந்தெய்தும் பராபரமே." "குலவுசிவ பூசையின்மே லவனடியார் பூசையுங்கைக் கோடல் வேண்டும்.'' என்றார் பெரியார்.

இத்தகைய மெய்த்தொண்டர்வழிபாடு செய்யுமுறையில் வஞ்சித்துப் பொருள்கவரும் வாஞ்சையினால் வெளிவேடம்பூண்டுதிரியும் பொய்த்தொண்டரைநம்பி வழிபட்டுப் பொருளும் புண்ணியமுமிழந்து புலம்புறாமல், மெய்த்தொண்டர் செயல்குணவகைகள் இத்தகுதியனவென்று உலகெலாமுணர்ந்துவழிபாடுசெய்துய்தற்காகவே, சிவபிரான், எப்பற்றுமின்றி மேல்நிலையில்நின்று தன்னையே வழிபாடுசெய்துவாழும் மெய்த்தொண்டர்களைப் பூமியில் மானுடராய்வந்து உலகர்கண்டுய்தற்குரிய செய்தற்கரிய செயல்கள்செய்துவரும்படி அனுப்பியருளினர். இவர்களே, ஈண்டு அடியேன் விளக்கும் திருத்தொண்டர் புராணசாரத்திற் கூறப்படும் மெய்த்தொண்டர்கள். இவர்கள் முன்னர்ச் சிவவர்க்கத்தவராதலால், அவ்வாறே ஒவ்வொரு புராணசாரத்திலும் குறிப்புரையில் விளக்கினேன். இவர்களைச் சிவபிரான் பற்பல சாதியினராய்வரும்படி செய்ததென்னையோவெனில், மேன்மேற்சாதியார், தத்தம் சாதியுயர்வுநோக்கி இறுமாந்து அகந்தைவசத்தராய் நின்றுள்ளதுங்கெட்டொழியாமல், சாதியுயர்வே முத்திநிலை தருவதன்று. அவ்வச்சாதிக்குரிய விதிமுறைபேணி அகந்தைமுதலிய துர்க்குணங்களை அறவேநீக்கித் திருவருளிலடங்கிப் பற்றற்றுநின்று, தத்தம்பருவத்துக்கியைந்த சிவவழிபாடு சிவனடியார் வழிபாடுசெய்து அவ்விசேடத்தால் தத்துவங்களைக்கடந்து மேற்சென்று சிவபதநிழலில் வாழ்தலே முத்திநிலையாம். இது எல்லாச்சாதியார்க்கு முரியதே. கீழ்க்கீழ்ச்சாதியாரும் அந்தந்தச்சாதிமுறையில் வரம்புகடவாதுநின்றே சிவவழிபாடு முதலிய சிவதருமங்கள் செய்துய்தற்கிடமுண்டு. அத்தருமங்களை பற்றற்றுநிற்கும் பத்திவைராக்கிய நிலைக்குரிய முத்திநிலைதருவதாம். அச்சாதிதர்மங்களைச் சிறியனவாகநினைத்து மேற்சாதியர்க்குரிய தர்மங்களைச்செய்யப்புகுவது, அத்தர்மபலனை ஒழித்தலுமன்றிச் சர்வஞ்ஞனாகிய இறைவன்வகுத்தவரம்பு கடந்த பெரும்பாதகமாய் மீளாநரகுக்காளாகவுஞ்செய்துவிடும் என்பன வாதியுண்மைநிலையை உலகெலாமுணர்ந்து சாதிவரம்புகடவாமல் அந்தந்த நிலையில்நின்றே பத்திவைராக்கிய திடசித்தராய்ச் சாதிக்குரிய சிவதர்மங்

களை செய்துய்கவென்னுந் திருவுளப்பெருங்கருணையினாலேயே அவ்வாறு பற்பலசாதியினராய்வரும்படிசெய்தருளினரென்க. இம்முறையைத், தமது சாதிவரம்புகடவாது திடபக்திவைராக்கியசிவஞானநிலையராய்நின்று சாதிக்குரிய சிவதர்மங்களைச்செய்து சிவாஞ்ஞையினால் மாசெல்லாம் நீக்குந்தேசுமிக்க சிவாக்கினியில்முழுகி மகரிஷியாய்வந்து நடனகுஞ்சிதபதநிழலிற் புகுந்துவாழும் திருநாளைப்போவார் முதலிய திருத்தொண்டர்களின் திவ்வியசரித்திரங்கள் செவ்வே விளக்குகின்றன.

இத்திருத்தொண்டர்களின் திவ்விய சரித்திரங்களை, இவர்கள் பூமியில் அவதரிக்குமுன்னரே சிவபிரான் ஆசைமிகுதியால் உமாதேவியாரே கேட்டற்குரியரெனத் திருவுளங்கொண்டு அவர்க்கு அந்தரங்கத்தானத்தில் உபதேசித்தருளினர். இந்நூல் சிவரகசியமென விளங்குகின்றது. பின்பு சிவமே தாமாய்வந்தருளிய சுந்தரமூர்த்திநாயனார் தொகுத்துப்பாடியருளினர். இது, திருத்தொண்டத்தொகை எனும் பெயர்பெற்றுச் செந்தமிழ் வேதமாகிய தேவாரத்துட் சிறந்துவிளங்குகின்றது. பின்புசுந்தரர் திருக்கயிலைக்கெழுந்தருளும்போது அவரது சுயம்பிரகாசசொரூபநிலைகண்டெழுந்து வணங்கிய உபமந்நியர் அகஸ்தியர்என்னும் இருமகரிஷிகளும் அங்கு விரும்பிய முனிவர்கேட்பச் சுந்தரசரித்திரங்கூறுமுறையில் எல்லாநாயன்மார்சரித்திரங்களும் விளக்கியருளினர். இவை உபமந்நிய பக்தவிலாசம் அகஸ்தியபக்தவிலாசமென விளங்குகின்றன. திருத்தொண்டத்தொகைப் பொருளைத் திருநாரையூர்ப் பொல்லாவிநாயகர் தமதுதிருவருட்பூர்த்தி பெற்ற நம்பியாண்டார்நம்பிகளுக்கு விரித்துரைத்தருளினர். அந்நம்பிகள் வகுத்துப் பாடியருளினர். இது திருத்தொண்டர் திருவந்தாதி என விளங்குகின்றது. பின்பு சிற்சபேசர் திருவருளால் சேக்கிழார்பெருமான் விரித்துப் பாடியருளினர். இது திருத்தொண்டர் புராணமென்பதாம். இதுவே, எப்புராணங்களினும் வேதாகமாதி விசேடநூல்களினும் மேலாய்விளங்கும் பெருநன்மையுடைமையால் பெரியபுராண

மென விளங்குகின்றது. இதனைச் சேக்கிழார்பெருமான் முதலிலேயே "மாக்கதை" என்றுகுறிப்பித்தருளினர். பின்பு சிற்சபேசராற்சிறப்பித்துப் பாடப்பெற்ற உமாபதிசிவாசாரியர், ஒவ்வொருநாயன்மார்சரித்திரமும் ஒவ்வொரு திருவிருத்தமாகச்சுருக்கிச் சாரமாகப்பாடியருளினர். இதுதிருத்தொண்டர்புராணசாரமென விளங்குகின்றது. இவையெல்லாம் சுசடறக் கற்றவர்க்கன்றி மற்றவர்க்கு விளங்காமையால் யாவரும் இவ்வுண்மைநாயன்மார்சரித்திரங்களைப் படித்தறிந்து அன்புசெய்துய்கவென்றெழுந்த திருவுளப்பெருங்கருணையினுல், எக்களங்கமுமின்றி நிட்களங்கலோகப்பிரசித்த சிவாநுபூதிப்பெருஞ்செல்வராய்விளங்கிய ஆறுமுகநாவலசற்குருநாதசுவாமிகள் இப்பெரியபுராணத்தை வசனமாக்கித் தந்தருளினர்.

இவ்வாறே, சிவபிரான், நந்தீசர், உபமந்நியர், அகஸ்தியர், பொல்லாவிநாயகர், நம்பியாண்டார், சேக்கிழார், உமாபதி, ஆறுமுகநாவலர் ஆகிய ஒன்பதின்மரும் இவ்வுண்மைநாயன்மார் மகிமைகளை உலகெலாமுணர்ந்துய்கவென்ற பெருங்கருணையால் ஒவ்வோர்முறையாக விளக்கிவைத்தார்கள். பரமசிவனை முதலாய இவ்வொன்பதின்மரும் ஆசைமீதூரப் பேசுபுகழ்படைத்த உண்மைநாயன்மார்மகிமையை, அறிவு சிறிதுமில்லாத நாயினுங்கடையேன் நினைத்தற்கும் அருகனல்லேனுயினும், இம்மகிமையை மேலுமேலும் எடுத்துப்பாராட்டித் துதித்தல் எவற்றினுஞ்சிறந்த சிவத்தொண்டென்னுமுண்மையை, இவ்வொன்பதின்மரும் வழிவழியாக மேற்கொண்டு காட்டியருளிய முறையேபற்றி ஓராற்றலுமில்லாத எளியேற்கு முய்திகிட்டுமென்ற ஆசைவயத்தனுய் இவ்வொன்பதின்மர் திருவடிகளை வணங்கித் திருவருளையே எப்பொழுதும் வேண்டிநின்று திருத்தொண்டர் புராணசாரவிளக்கம் என இதனை ஒருவாறுகச்செய்தேன். பிழைபொறுத் தருளும் பெரியார் திருவடிகளைப்பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

நமது ஸற்குருநாதசுவாமிகள் சுமார் நூறுவருஷங்களுக்குமுன் செய்தருளிய பெரியபுராணவசனம், உண்மைநாயன்மார் சரித்திரங்களை

## முகவுரை.

யாவருந் தெரிந்துய்கவென்னுங் கருணையினால் அவ்வவர் சரித்திரமுறை
மாத்திரமேசெய்தார்கள். அக்காலநிலையினவசரம்நோக்கி அதுவேபோதிய
தென்பதே திருவுளக்கருத்தாதலால் அம்மட்டிலமைந்தார்கள். அந்நாயன்
மார்களின் உள்ளீடான மகிமாவிசேடங்களும் விளக்கத்திருவுளங்கொண்
டால் அவ்வாறுசெய்திருப்பார்கள். அவர்கள்செய்த பெரியபுராணசூசன
முதலியன, பின்புபரிசீலனஞ்செய்துமுடிக்கக்கருதி முதலில் ஒருவாறாகக்
குறித்துவைத்துள்ளனவே. பின்னையோர் அவ்வாறே அச்சிட்டனர். இது
அவர்கள் சரித்திரத்தாலுந்தெரிந்தது. அடியேன், நாவலர்பெருமான்
பெரியபுராணத்தை வசனமாக்கிக்காட்டியருளியதையே கடைப்பிடித்துத்
திருவடி சிரமேற்கொண்டு திருத்தொண்டர் புராணசாரத் திருவிருத்தங்
களின் தாற்பரியங்களை வசனமாகவிளக்கினேன். இதனில் நாயன்மார்
கள் சரித்திரமட்டிலன்றி அங்கங்கே சிற்சில உள்ளீடானமகிமைகள், சேக்
கிழார்பெருமான் குறிப்பாகவும் தெளிவாகவும்கூறியருளிய திருவாக்குமுத
லிய பிரமாணங்கள்கொண்டே விளக்கினேன். அவைகளை அடியேன்
கருத்தென்றெடுத்துக்காமல் சேக்கிழார்பெருமான் முதலிய சிவானுபூதிப்
பெருஞ்செல்வர்கள் திருவுளக்கருத்தென்றேகொண்டு யாவர்க்கும் உபயோ
கிக்கும்படி பெரியார் திருவடிகளை மேலும்பணிந்து பிரார்த்திக்கின்றேன்.

ராம. சொ.

உ

சிவமயம்.

# சிறப்புப்பாயிரம்.

இந்நூலாசிரியர் மாணாக்கருள் ஒருவராகிய
**தேவிகோட்டை சோ. வேலுச்சாமிக்கவிராயரவர்கள் இயற்றியது.**

பொன்மலி யுலகினும் புண்ணியத் தலங்கண்
மன்மலி பெருமை வயங்குபூ வுலகிற்
சீதநீர் புடைசூழ் திருநாவ லூரின்
மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திட
வருசுந் தரமணி மணிவாக் கதனிற்
றருதிருத் தொண்டத் தொகைநூ றனிப்பா
முத்திவித் தென்றே மொழியுமா நிலைபெற
அத்தொகைப் பொருடேர்ந் தைங்கரத் தண்ணலால்
நம்பி யாண்டார் நம்பிகள் வகுத்தருள்
அன்பாந் தாதியங் குறமென வவிர்தர
இதன்மேற் பொன்மன் றிறைதந் தருளிய
முதலிடை முடியினு முறைநின் றிலங்கிமெய்க்
கதிதரு முதலாய்க் கவின்று விரிதரத்
துதிதிருத் தொண்டர் புராணஞ் சொற்றனர்
திருவருள் விளக்குநஞ் சேக்கிழார் பெருமான்
அருமையோர்ந் துமாபதி யாரதன் சாரம்
முன்னோ ருவப்ப மொழிந்தனர் யாப்பால்
இந்நூல் யாவு மிறையருட் புலமைகூர்
அன்னோர்க் கல்லதை யறிவரி தாகலின்
அரியநுண் பொருளெலா மாங்காங் கெளிதிற்
றெரிதரு வாறொரு சேரத் திரட்டி
ஓராவுரை நடையி னுயர்திருத் தொண்டர்
புராணசார விளக்கம் புகன் றனன்
றேவைமா நகரிற் றெய்வத் தன்மை
மேவுவன் றொண்ட விழுப்பெருங் குரவர்பால்
அன்பானன் னூறெளிந் தான்றமா ணாக்கருட்
பொன்பான் மணியெனப் பொலிவுறு நிலையினன்
கலைபல வுணர்ந்த காட்சினமக் கேற்ப
நிலவுநல் லொழுக்க நெறியிற் சிறந்தோன்
மூதுணரா று முகநா வலர் கோன்
பாதநேர் பணிந்தருட் பாங்குபெற் றுயர்ந்தோன்
பிறப்பிறப் புற்றுழல் பிறதெய் வங்களை
மறப்பினும் பரமென மதியாத் திண்மையன்
என்னி லாரு மெனக்கினி யாரிலை

யென்னி லும்மினி யாரொரு வன்னுள
னென்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே
என்றுவா கீச ரியம்புமந் திரப்பொருள்
ஒன்றவாய்த் தனைய வுறுதியே பற்றி
மீக்கொள் சமய விசேடநிர் வாண
தீக்கைபெற் றருணூற் றிறனறிந் தடங்கி
அன்பே வடிவனா யகம்புற நிறைசிவன்
இன்பார் பூசனை யியற்றிவாழ் சீலன்
சிவனுமை குமரர் சீரடி யவர்ச்சார்
பவமகன் மெய்ந்நூல் பற்பல செய்தோன்
பரமெனப் பிறரைப் பறைமய லவர்தந்
தரமில் சொல்லாற் றடுமா றுது
சிறுவரு மறுத்துமெய் தெள்ளிநி னிறுத்தற்
குறுமுறை நூல்பல வுலகிற் களித்தோன்
மேன்மை மாணாக்கர் விரும்பிக் கேட்க
நான்மைகள் பலவு நுண்பொரு ளெண்மையிற்
போதித் தனைய புலவர் குழாத்து
ளாதித் தன்போ லமைந்தொளி ராசான்
உய்கண் டந்தரு ளொளிர் திருத்தில்லையின்
மெய்கண்ட நாம வித்தியா சாலை
தாபித் தன்பினிற் சார்வார்க் குணவுமுன்
ஆபத் திரிக்குநூ லறிவுமுன் னருள்வோன்
தன்னோக் கதனாற் சாரும் விருப்புறீஇ
யென்னுங் குணமிலா வெளியே னெனையும்
வாவென வழைத்து வாய்மைநூ லுணர்த்தி
ஆவன துலக்கி யல்லன விலக்கியாள்
பெருந்தகை யாளன் பேணு வளம்பல
பொருந்துகா ரைக்குடிப் புண்ணிய மனையான்
மகுடதன வைசியர் மரபினில் வந்தோன்
முகவிப கற்பக மூர்த்திபொற் கோயிற்
பராவுமெய் யடிமைப் பண்புறு வகுப்பினன்
இராம நாதவேட் கினிய குமாரன்
திருநாவுக் கரசெனுஞ் சீர்நிறை புதல்வனை
வருசிவ நேசர் மகிழத் தந்தோன்
மிக்க சிவனருள் மேனிகொண் டுற்றெனுஞ்
சொக்கலிங் கப்பெயர்த் தூயதே சிகனே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பெரியபுராணம் என்னும் பிரசித்தநாமத்

# திருத்தொண்டர் புராணம்.

திருச்சிற்றம்பலம்.

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றிநின்
றூதி யாரரு ளாதலி னஞ்செழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம்.

என்று மின்பம் பெருகு மியல்பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்று தெங்கு நிலவி யுலகெலாம்.

திருச்சிற்றம்பலம்.

இம்மூன்று திருவிருத்தங்களும் [illegible]யபுராணத்துள் உயிர் போற் சிறந்து விளங்குகின்றன. இம்மூ[illegible]றையும் நித்தியநியமமாகச் "சொல்லியபாட்டின் பொரு[illegible]" [illegible]நோக்கி மெய்யன்புடன்பாராயணஞ்செய்துவந்[illegible]அவரருளால் பெரியபுராணபாராயணபலன் சித்திக்குமென்பது[illegible]யோர்கருத்தென்க.

உ

# திருச்சிற்றம்பலம்.

## ஸ்ரீமந்

# மாணிக்கவாசகசுவாமிகள் புராணம்.

---

சத்தி யாய்ச்சிவ மாகித் தனிப்பர
முத்தி யான முதலைத் துதிசெயச்
சுத்தி யாகிய சொற்பொரு ணல்குவ
சித்தி யானைதன் செய்யபொற் பாதமே.

## ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள் புராணசாரம்.

திருக்கயிலைத் திருநந்தி தேவர்சிவ னருளாற்
றிருவாத வூராதி சைவகுலந் திகழத்
தெருட்கனியுஞ் சம்புபா தாசிரய ரன்பார்
சிவஞான வதியம்மை செய்தவச்சே யாகி
அருட்குலவு திருவாத வூரரெனும் பேர்பூண்
டடல்வழுதி யமைச்சராய்ப் பரிகொளுமா றளித்த
பொருட்குரியன் சுந்தரே சுரனெனத்தேர்ந் தவன்முன்
போற்றியரு மதிபெற்றுப் பெருந்துறையிற் புகுந்தே.

குருமொழிபெற் றறங்கள்புரிந் தரசனிடர் தாக்காக்
குறிநிலைநின் றரன்பரிகள் கொணர்கோலங் காட்டிப்
பரிநரியா கிடமுனிய நதிபெருகப் பரன்மண்
பரித்தடிபட் டுணர்த்தரசன் வேண்டிடவுந் துறைபோய்த்
திருவடிபூ சித்திருந்து கழுக்குன்றில் வைத்துச்
சிற்சபையிற் புக்கொழித்து மூகைமொழி நிகழ்த்திப்
பொருவரும்வா சகங்கோவை வரைவித்துச் சிவனே
பொருளென்று குஞ்சிதத்தாள் புக்கமர்ந்தா ரன்றே.

ஸ்ரீமந் மாணிக்கவாசகசுவாமிகள், திருவருளால் மலமுத்தராய்த் திருக்கயிலாசத்திலே ஒருமுகம், இருபதம், முக்கண், நாற்புயம், நீலகண்டம், சடாமுடி முதலியனவிளங்குகின்ற ஸ்ரீகண்டருத்திர சிவரூபமே வகித்துச் சிவாஞ்ஞைமுழுதும் நடாத்தி, அரி பிரமேந்திராதி தேவர் முனிவர் யாவரும் தம்மையே முதலில் வணங்கி வேண்ட, அவரைச் சமயநோக்கி உட்புகுத்தலும் நீக்கலுஞ்செய்கின்ற அதிகாரம்பெற்று முதற்றிருக்கோபுரத்து வீற்றிருந்தருளுகின்ற திருநந்திதேவரே. அதிகாரநந்தி என்னுந்திருப்பெயரும் இவ்வுண்மை விளக்கும். சிவசந்நிதிகளில் நேர்முகமாயுள்ளநந்தி, வாகனமாகிய ரிஷபநந்தியே. நந்தி என்றபெயர் மாத்திரமேபற்றி வேற்றுமை நோக்காதார் உண்மைதெரிந்து அந்தந்த முறையில் வழிபாடுசெய்தற்கே அவ்வுண்மை விளக்கலாயிற்று.

சிவபிரான், தமதியல் முழுதும் வாய்ந்த அதிகாரநந்தி தேவரைப் பூமிக்கு அனுப்பி பரசமய நிராகரணமும் சைவசமய ஸ்தாபனமுஞ் செய்விக்கத் திருவுளங்கொண்டருளி, ஒருசமயம் அங்கு வந்த தேவர்களை உடனே உட்புகுத்தாதது குற்றமென்றொரு காரணங்காட்டி, நீ மானுடனாய்ப் பூமியிற் செல்க. நாமே அங்கு வந்து மீண்டுவாராப் பேரின்பு தருவோமென்றருள, அவ்வாணை சிரமேற்கொண்டு பாண்டிநாட்டில் திருவாதவூரில் ஆதிசைவர்களாகிய சிவப்பிராமணகுலத்தில் சம்புபாதாசிரயர் சிவஞானவதியம்மையார் செய்த அருந்தவத்தால் புத்திரராய் வந்தருளினர். இதனை மணிவாசகதீபிகை விளக்குகின்றது. ஆலாஸ்யமான்மியம், "ஆதிசைவ சுவம்ஸோத்த முத்தாபலசு சுந்தர:" என்பது முதலிய வாக்கியங்களால் தெளிவிக்கின்றது. திருவிளையாடல்

ஆயவளம் பதியதனி லமாத்தியரி லருமறையின்
தூயசிவா கமநெறியின் றுறைவிளங்க வஞ்சனையான்
மாயனிடும் புத்தவிரு ளுடைந்தோட வந்தொருவர்
சேயவிளம் பரிதியெனச் சிவனருளா லவதரித்தார்.

என்று மேற்கூறியவுண்மையையேவற்புறுத்துகின்றது. இதனில் புத்தநெறிமுதலியபரசமயமருளிருள்ஓடவும், சைவத்துறைவிளக்கத்தெருளொளிகூடவும் திருவுளங்கொண்டருளிய சிவனருளால், ஒருவர் (நந்திதேவர்) இளம்பரிதியென வெப்பத்தின் கொடுமை

இல்லாத அதிசாந்த ஞானசூரியனாக அவதரித்தார் என்னும் பொருள்விளக்கங்காண்க. இத்திருவிருத்தத்தில் "அமாத்தியர்" என்றதன்பொருள் சமீபத்திலிருப்பவரென்பதேயாம், இதனை, இவர் முன்னும் கயிலையில் சமீபத்திலிருந்ததும் இப்போதும் சிவாலயங்களில் சிவனுக்குச் சமீபத்திலிருந்து பூசிக்கும் சிவப்பிராமணர் குலத்துவந்ததும், மேலும் அரசனைத்திருத்தி உய்விக்கும்படி அவனுக்குச் சமீபத்திலிருந்ததும் செவ்வே தெளிவிக்கும். இனி, வாதவூரர் புராணமும்,

அங்கதின் மறையோரி லருள்புனைமாத் தியர்குலத்தில்
தன்னிகரில் சைவநெறித் தலைவன். என்றே விளக்குகின்றது. இதனில், "அருள்புனை அமாத்தியர்" அருளையே அணிகலனாப்புனைந்து சமீபத்திருந்து பூசிப்பவர் என்றும், அதனால் நிகரில்லாதவர் என்றும், அம்மட்டில் அமையாது "தலைமைச் சைவநெறியன்" ஆதிசைவநெறியர் என்றும் நன்கு விளக்குதல் காண்க. ஆலாஸ்யமான்மியம் ஆதிசைவரென்று தெளிவாய்க்கூறியபடி அம்மொழிபெயர்ப்பாகிய திருவிளையாடற்புராணமும், அதற்கு மாறுபடாது கூறலே முறையாதலால் அமாத்தியர் என்னுஞ் சொல்லால் ஆதிசைவரென்றேஉய்த்துணரவைத்தோதியது. வாதவூரர் புராணமும் "அருள்புனை அமாத்திய"ரென்று விசேஷணந் தந்துவிளக்கி மேலும்"சைவநெறித்தலைவன்" தலைமைச்சைவநெறியன் என்று தெளிவித்தது. வாதவூரர் புராணவிருத்தியுரைக்காரரும் இவ்வாறே "சைவநெறித்தலைவன்" என்றதைத் தலைச்சைவநெறியன் என விகுதி பிரித்துக்கூட்டி, ஆதிசைவநெறியன் என்று உரைத்தனர். தலைச்சைவம்—ஆதிசைவம். இவ்வாறு முன்னுக்குப் பின் மாறுபடாமல் பொருள்கொள்வர் உண்மையுணர்ந்தஉத்தமர்.

மேற்கூறியவாறு திருவாதவூரில் ஆதிசைவர் குலத்தில் அவதரித்தருளிய மாணிக்கவாசகசுவாமிகள், திருவாதவூரர் என்னுந் திருநாமம் பூண்டு, குருமுகமாக ஓதியுணர்தலே முறையென்பதை உலகர்க்குணர்த்தி உய்விக்கத் திருவுளங்கொண்டு அவ்வாறே வேதாகமாதி சகல சாஸ்திரபாரங்கதராய்த் திருவருள் விளக்கம் பொலிய வளர்ந்துவந்தனர். அப்போது, அரிமர்த்தனபாண்டியர் ராஜகாரியம் வகித்து நடத்தும் அறிவு ஆற்றல் முதலியகுணமெல்

லாம் அமைந்த மந்திரிகள் பலர் தமக்கு அவிரோதிகளாயிருக்க வும், திருவருள் செலுத்தலால் திருவாதவூரர் மகிமை தெரிந் தழைத்து உயிர்த்துணை மந்திரியாக்கி முதன்மைதந்து தென்ன வன் பிரமராயன் என்று திருப்பெயருஞ் சூட்டினர். அப்பெயர் தென்னவனை (அரிமர்த்தனபாண்டியனை) நன்னெறிப்படுத்தி உய் விக்கவந்த பிரமசொரூபியாகிய ராஜன் என்னும் பொருள்விளக்கி நிற்றலும் அவ்வுண்மையை வலியுறுத்தும். மந்திரியாராகிய வாத வூரர் அரசரை ராஜகாரியங்கள் ஒன்றும் தாக்காமல் எல்லாமும் தாமே வகித்து உடற்றுணையாயும், தமது சார்பினால் நாளடை விலே பரிபாகமுறும்படி உயிர்த்துணையாயுமிருந்து அரசு புரிந்து வருநாளில்ஒருநாள், குதிரைப்பாகர்கள் நற்குதிரைகளின்மைதெரி விப்ப, அரசர் மந்திரியாரைநோக்கிவேண்டுந்திரவியங்கள்கொண்டு சென்று நற்குதிரைகள் வாங்கிவருகவென்று கூறினர். வாதவூரர் நாற்பத்தொன்பதுகோடி திரவியங்கள் எடுத்து ஒட்டகங்களில் முன் செல்லும்படி அனுப்பிவிட்டுத், திருவாலவாயிற் பொற்மு மரைவாவி ஸ்நானஞ்செய்து சித்திவிநாயகரையும் மீனாக்ஷியம்மை யாரையும்பணிந்துசென்று சுந்தரேசரைவணங்கி, எம்பெருமானே இப்பொருளெல்லாம் தேவரீருக்கும் அடியார்க்கும் உபயோகமா கும்படி செய்தருளுகவெனவேண்டி நிற்குஞ்சமயம், பூஜகர் ஒரு வர் வந்து விபூதிதரப் பெற்றுமகிழ்ந்து பூசிக்கொண்டு, இது நீ எண்ணியபடி செய்கஎன்றருளும் சிவாஞ்ஞையும், அது செவ்வே நிறைவேறுமென்றுணர்த்தும்நன்னிமித்தமுமாகுமெனநிச்சயித்து மேலும் பணிந்து விடைபெற்றுவந்து சிவிகைமேலெழுந்தருளி ராஜவரிசைகள் பரிவாரங்கள் சூழச்செல்வாராயினர்.

இதற்குமுன் திருக்கயிலையில் அருளியபடிசெய்யத்திருவுளங் கொண்டு சந்நிதியில் விபூதி மூலமாக அநுமதியும் நன்னிமித்தமுங் காட்டியருளிய சோமசுந்தரப்பெருமான், அன்புடன் வழிபடு வாரைப் பிறவிக்கடல் கடப்பித்துத் திருவருட் பெருந்துறையி லேற்றியருளுதலை விளக்கும் திருப்பெருந்துறைச் சிவாலயத்தில், திருக்குருந்தமூலத்தில் தென்முகமாக திருக்கரத்திற் சிவஞான போதத்திருமுறைதிகழ ஒரு பிராமணரூபியாய்த் திருத்தொண் டர்சூழ வீற்றிருந்தருளினர். வாதவூரர் அவ்வெல்லை சமீபிக்க

வரும்போதே பற்பல அற்புதச் செயல்கள் நிகழக்கண்டு ஆனந்த பரவசராய், நம்மையாட்கொண்டருளும் அருட்குருநாதன் அமர்ந்தருளுமிடமே இதுவெனக்கருதி, அன்புமுன்செல்ல அருள்வந்திழுப்ப அவ்வழிச்சென்று ஆலயமடைந்து அங்குள்ள தீர்த்த ஸ்நான சிவநியமங்கள் முடித்துச், சிவயோகநாயகி ஆத்மநாதர் திருமுன் பணிந்து வலம்வரும்போது, தென்முகத்தமர்ந்த சிவ குருநாதர் திருவருளுருவந் தெரிசிக்கப்பெற்றுத் திருக்கரங்கள் சிரமேற்குவியக், கண்ணீர்பெருகக் கசிந்துளமுருகக்கருணையமுது பருகிக்கடிது வந்து திருவடிகளிற் பலமுறை பணிந்து, திருவடியைப் பிடித்துக்கொண்டு வாய்குழற நாத் தழுதழுப்பக் கண்டம் விம்மப் பொருமித்துதித்தனர். மூலாகமம் ஓதினவராகிய குருந்தமூல குருநாதர், காலம் கணுத்தோற்றம் நிமித்த முதலிய ஒன்றையும் நோக்காது, வந்தடைந்த சீலமுள்ள சீடர்களது தீவிர தர பரிபாகம் ஒன்றைமாத்திரம் தேர்ந்து உடனே அருளுகின்ற தேசிகராய்க், குருத்துவசின்னமாகிய செங்கழுநீர்மாலைசூடித்திருவடிகளில் பக்குவான்மாக்களின் ஆணவமலப் பகையைவென்றமையைக் குறிக்கும் வீரக்கழலணிந்து, அப்போது வாதவூரர் தத்தஞ்செய்த உடல் பொருள் ஆவி மூன்றையும் ஏற்றுக்கொண்டு, அவர் முடிமீது திருவடிசூட்டித் திருக்கரஞ்சேர்த்தி, சூக்கும பஞ்சாக்ஷரத்தில் ஈற்றிலுள்ள பாச எழுத்துக்களை நீக்கி, நீக்கிய இடத்தில் மெய்ப்பானந்தம் விளைநிலமாகிய முன்னெழுத்துக்களைச்சேர்த்துள்ள முத்தி பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தருளி, அவர் சர்வபரிபூரண சிவனேயாகும் நிலையைவிளக்கியருளினர். வாதவூரர்தமது நாவிலிருந்து பாடச்செய்பவள் பிரமசத்தியாகிய சரஸ்வதியன்று, சிவபிரானது ஞானசத்தியே என்பதுவிளங்க மாணிக்கம்போலும் ஞானமய வாசகங்களாற் பாடித்துதித்தனர். குருநாதர் திருவுளமகிழ்ந்துஅன்பனே நின்பெயர் மாணிக்கவாசகனென்று திருவாய் மலர்ந்தருளினர். வாதவூரர் அவரையே பூசித்துக்கொண்டு அடியாருடனிருந்தனர். குருநாதர் வாதவூரர் திருவாசகங்களைமேலும் கேட்டு மகிழவும், அரசன் பொருளெல்லாம் திருப்பணிகளிற் செலுத்தி அரசனுக்கு அவர் மகிமை தெரிவித்து அவனை முத்தி நிலையிற் புகுத்தியருளவும், புத்தநெறிமாற்றிச் சைவநெறிவிளக்க

வும் திருவுளங்கொண்டு, அன்பனே நீ, சில கருமமுண்டு இங்கிருக்குகவென்றுகூறி மறைந்தருளினர். வாதவூரர் வருந்திப் பிரிவாற்றாது பற்பல திப்பிய வாசகம்புகன்று ஒருவாறு புறம்போந்து தமது வரவை எதிர்பார்த்து நிற்கும் படைஞர்களை ஆடிமாசத்திற் குதிரைகள் வருமென அரசர்க்குச் சொல்லுகவென்று அனுப்பிவிட்டுப் பொருளெல்லாம் ஆத்மநாதர்கோயில் திருப்பணி நித்திய பூசை திருவிழா முதலியவற்றிற்கும் சிவனடியார்க்கும் உபயோகித்துக்கொண்டே அங்கிருந்தனர்.

குதிரை வாங்கும்படி கொடுத்த அரசருடைய பொருள்களை இவ்வாறு செய்தது விரோதமன்றோவெனில்? அரசரை உய்விக்கவே திருவருளால் மந்திரிபோல் வந்தனராதலால், அவரை நன்னெறிப்புகுத்தி உய்விக்குமுறையில் இதுவே பொருத்தமாம். இதனாற்றான் சிவசந்நிதியில் இப்படியே வேண்டிக்கொண்டனர். சிவபிரானும் இதற்கே அனுமதி கொடுத்தருளினர். செய்தது சிவதருமமானாலும் அரசர் பொருளை, அவர் சொன்னபடி செய்யாதொதுக்கியதுமுறையோவெனில்? இவ்வரசரும் இவர்க்குமுன்னையரும் பின்னையரும் சுந்தரபாண்டியராய் அரசுபுரிந்த சோமசுந்தரப்பெருமானுடைய குடிகளே. சுந்தரேசரே இவ்வரசுக்கும் பொருளுக்குமுரிய முதல்வர். ஆதலால் அதுவே முறையாம். இதனை, இடைஇடையே பகைவரால் வந்த ஆபத்துக்களைச் சுந்தரேசரே முன்னின்று நீக்கியருளுதலாலும் அவ்வரசரெல்லாம் ஆயுளெல்லையிலொழிந்துவிட ஒருகாலத்தும் ஒழிவின்றி நித்தியராய் எப்போதும் பாதுகாத்துவருதலாலும் தெளியலாம். அன்றியும், இவ்வரசையும் பொருளையும் எப்போதும்உடையவர் சுந்தரேசரேயாதலாற்றான், முன் சுந்தரேசபாதசேகரபாண்டியர், ராஜகாரியங்களில் செலவைச் சுருக்கிச் சிறுகச்செய்து மிகுதியாகச் சுந்தரேசர் திருப்பணிக்கே செலுத்தி வந்தனர். இவ்வரிமர்த்தனபாண்டியனும் இவ்வாறு செய்வதே முன்னையோர் முறையென்பதையும், தனக்குப் பகையின்மையைத் தன்பெயரே விளக்குதலையும், இப்போதுகுதிரைப்படை அநாவசியமென்பதையும் யோசிக்காமல், இப்பெரும் பொருளைக் குதிரைவாங்கக் கொடுத்தது, சிவதருமங்களிற் செலுத்தி உய்ய நினையாத அறிவின்மையேயாத

லால், அறியாது கூறியதை ஒதுக்கிவிட்டுச் சிவதருமஞ்செய்து அவ்வரசனை உய்வித்தலையே மேற்கொண்ட வாதவூரர், எப்பொழுதும் அப்பொருட்குரிய சுந்தரேசரையே வேண்டி அவரநுமதிப்படி செய்தனர். இது அவ்வரசர்க்குயிர்த்துணையாகிய தமது உபகாரச் செயலேயாம். இனி உலகமுறையிலும், பிதிரார்ச்சிதமாகத் தடாதகாதேவியார்க்கு வந்து அவரால் நாயகரிடம் ஒப்பிக்கப்பெற்றமையாலும் இவ்வரசும் பொருளும் சுந்தரேசர் சொந்தமேயாதலால் வாதவூரர்அவரநுமதிபெற்று அவ்வாறுசெய்ததே உலகநீதியுமாம். இதனை, அவ்வரசர் பின்பு அதுவே முறையென்று தெளிந்துபணிந்து அவ்வரசையும்ஒப்புக்கொள்ளும்படி பன்முறை வேண்டவும் அதனைத்துச்சமாகஒதுக்கிவிட்டுத் திருவருள்வழியே சென்ற உண்மைநிலையும் வலியுறுத்தும்.

ஆடிமாசஎல்லை சமீபித்தவுடன் அரசர் குதிரை வரவில்லையே என்று திருமுகம் அனுப்பினர். அதுகண்ட வாதவூரர் ஆத்மநாதர் சந்நிதியிற் பணிந்துவேண்ட, அவர் சமீபத்தில் வருமென்றுபதில் அனுப்புக என்றருள, அவ்வாறு அனுப்பினர். அரசர் குதிரை வரவை எதிர்நோக்கியிருந்தனர். பின்பு சிவபிரான் வாதவூரர் கனவில் குருவடிவங்காட்டிவந்து, அன்பனேகுதிரைகளைநாம்கொண்டு வருகிறோம். நீ முன்பு செல்லுகஎன்றருளினர். வாதவூரர்வணங்கி மதுரைக்குவந்து அரசர்முன் சென்றனர். அரசர், பொருள் எவ்வளவு வாங்கிய குதிரைகள் எவ்வளவு என்று கேட்ப, வாதவூரர் அரசரே பொருளும் அளவில்லை, குதிரையும் அளவில்லை. பின்வருகின்றன. இதனால் நீர் துரங்கபதியென்னும் பெயர்பெறுவீர் என்றனர். அரசர் மகிழ்ந்து வெகுமான வரிசைகள் செய்தனர். வாதவூரர் மீனாக்ஷிசுந்தரேசரை* வணங்கித் திருமாளிகைக்கு வந்தனர். சுற்றத்தாரெல்லாரும் அவரைநோக்கி, மந்திரித்தொழில் பிராமணதருமமன்று; ஒருவாறு செய்யினும் அரசர் மனசுக்கிசைந்தன செய்தலேதகுதியாம். நீதிநன்குணர்ந்த உங்களுக்கு நாங்கள்சொல்வது மிகையே. ஆயினும் நீர் செய்வது ஒன்றும் நன்மையாய்த் தெரியவில்லை. குதிரை வருகின்றனவென்றபடி வரவில்லையே. நாளை என்சொல்வீர். உமதுசெயலை நோக்கும்போது உறவர் நண்பர் முதலியர்களைப் பேணுங்கருத்திலீர்போலும் என்று கூறினர்.

வாதவூரர், அவர்களை நோக்கி நம்மைச் சிவபிரான் குருவடிவங்காட்டி அடிமைக்கொண்டருளினர். சுற்றமும் அதன்மேலுந் தொடரும் இஷ்டமும் நீக்கிவிட்டோம். துன்பம் இன்பம் அவமானம்வெகுமான முதலியதேகசம்பந்தமும்ஒழிந்தோம். பொருட்பற்று முற்றுமற்றது. கோபஞ்செருக்கு முதலியவெல்லாம்நீக்கினோம். இருவினைகளும் ஒழிந்தன. தந்தையும் தாயும் வித்தியா குருவும் ஞானகுருவும் சங்கரனே. நிராசையேமனைவி. பலவகைச் சீவருமே மைந்தர்கள். வெளிவேடங்காட்டி உலகரை வஞ்சித்தல் முதலிய மாசில்லாத சிவனடியார்களே சுற்றத்தவர். பிறவிகளே பகை. ஊரார்சமைத்த அன்னமெல்லாம் நம்முடையவே. பூமியே படுக்கை. தைத்த கோவணமே உடுக்கை. சிவத்துவ விளக்கச் சிறப்பெலாம் நிறைந்த திருநீறே சந்தனம். ருத்திராக்ஷமே ஆபரணம். திருவைந்தெழுத்தே செபம். திருவருளால் இந்நிலைமைகள் என்றும் மாறா. இனி இப்பொழுதே இறக்கினும் என்றும் இருக்கினும் அரசன் தண்டிக்கினும் மகிழ்விக்கினும் மேலுலகில் வாழ்வுறினும் கீழ்நாகில்தாழ்வுறினும் இவற்றால்விருப்புவெறுப்புற்றுச் சிவபிரானை மறந்துவிடோம். பழவினையாகிய பிராரத்தகர்மானுபவம் எவராலுமாற்றமுடியாது. ஆதலால் ஆவன ஆகுக. நீங்கள் கூறியவெல்லாம் சுதந்திரசிவாஞ்ஞையாலன்றிப் பரதந்திரர்களாகிய நமது புத்தியாலாகா. நீங்கள் பதறிக்கூறுதலாலாவதொன்றுமில்லை என்றெடுத்துக்கிவிட்டுச் சிவத்தியான நிலையிலிருந்தனர்.

வாதவூரர் கூறிய இவ்வுண்மைகளால் இவரது மலமுத்த சிவசொரூபநிலைமை விளக்கமாகும். இதனாலிவர் இனிஅரசதண்டனையால் பலமுறை வருந்தினதாக இறைவனைத் துதிப்பனவெல்லாம் உலகர் துக்ககாலங்களில் வருந்தி மயங்காமல் இறைவனடியே பற்றித்துதிசெய்து துன்பநீங்கி உய்யுமுறைகாட்டச்செய்தஅருட்செயலே என்பதுதெளிவாம். மறுநாள் அரசர் வாதவூரரைஅழைத்துக்குதிரைகளேன்வந்திலவென்ன, மூன்றுநாளுள்வரும், குதிரைக்கூடங்கள் விரிவாயமைப்பிக்குக என்றனர், ஏவலாளர் அவ்வாறு செய்வித்தனர். மூன்றுநாள் கழிந்தன. அரசர், குதிரைகள்வந்தில இவனைத்தண்டித்து நமது பொருளைவாங்குகஎன்றனர். ஏவலாளர் அவ்வாறு செய்தனர். சுகதுக்கங்கள் தாக்காத அதீத நிலையாய்

நிற்றலால் வருந்தாமைகண்டு கடுந்தண்டஞ்செய்தனர். வாதவூரர் அதுவுந் தாக்காது நின்று சுந்தரேசரைத் துதித்தனர். சுந்தரேசர் நந்திகணங்களை நோக்கி, நரிகளைக் குதிரைகளாக்கி குதிரை வீரர் களாய் வருகவென்றருளித், தாமும் வீரக்கழலணிந்து வாட்படை யேந்திச் சாய்ந்தகொண்டைத் திருமுடிச்சாத்து வாகுவலயம் கண்டிகைகுண்டலம் திருநீற்றுத்திரிபுண்டாம் வெண்பட்டுடை முதலியனவிளங்குந்திருக்கோலத்துடன், வேதசிவாகமாதிகளையே குதிரையாக்கி அதன்மீது வீற்றிருந்து வந்தருளினர். குதிரைகள் வருதலைத்தூரத்தே தெரிந்த அன்பர் சிலர் விரைந்துவந்து வாத வூரர்க்குத் தெரிவிப்ப, அவர் அரசருக்கு அறிவிப்ப அரசர் அவரு டன் ஊர்ப்புறத்தில் ஒரு மண்டபத்து வந்திருந்தனர். அதன் மேலும் சுந்தரேசர் சிறிதுநேரம் தாமசித்தனர். அரசர், இத்தனை யும் இவன் செய்யுமாயமேஎன்று தண்டனைசெய்வித்தனர். பின்பு குதிரைகள் பந்திபந்தியாய் வருதல்கண்டு மகிழ்ந்து வாதவூரரை அழைத்து நன்மொழிகூறி இவருள்ளே தலைவர் யாரென்றார். அக் குறிப்பறிந்து வருவார்போல வேதக்குதிரைவீரர் விரைந்துவந்து குதிரையை நடத்திக்காட்டினர். மற்றை வீரர்களும் அவ்வாறு செய்தனர். அவர்களைநோக்கி உங்கள்தலைவர் யாவரென்றார். இவ ரென்று கூறினர். அப்போது சுந்தரேசர் நேர்வந்தருளிச் சிறிது கருணைநோக்கஞ்செய்ய, அரசர் எழுந்து சிரமேற் கைகூப்பினர். உடனே ஆ! ஆ!! நாம்ஒருகுதிரைவீரனைக்கும்பிட்டதென்னென்று மீள ஆசனத்திராது நாணிநின்றனர். சுந்தரேசர், அரசனே, மந் திரியார் நமக்கும் நம்மவர்க்கும் அளவிலாப்பொருள் தந்தனர். நாமும் அளவுபடாத குதிரைகள் கொண்டுவந்தோம். இவைகள் தேவர்க்கன்றி மனிதர்க்கிசைவனவல்ல. விலைமதிப்பில்லாதன. சம யம்வந்தால் மதிலையுந்தாவிச்செல்லும். கண்ணும் நுழையாத நீர் செல்லும் சாலகங்களிலும்செல்லும். வீதிமார்க்கத்திற்முன்செல்லு மென்பதில்லை. வெளியெல்லாம் வழியாகச் செல்லும். கடலை கொள்ளுமுதலியவென்பதில்லை, பசிவந்தால் தின்னுதனவுந் தின் னும். இக்குதிரையெல்லாம் உன்னுடையவாக வாங்கிக்கொள்வ தால் நாளை எவ்விதமானாலும் அதுபற்றி உனக்கும் நமக்கும் யாதொரு தொடர்புமில்லை, இது குதிரைவியாபார வழக்கமென்று

கூறி, குதிரையிலக்கணமெல்லாம் விளக்கிக்கயிறுமாறி அவ்வரசன் கையிற் கொடுத்தனர். அரசன் ஆபரணாதிகளணிந்து பூசித்து குதிரைப்பாகர்களிடஞ்சேர்க்க, அவர்களவைகளைக் கூடங்களிற் சேர்த்தனர்.

அரசர், வேதக்குதிரைவீரருக்கும் மற்றையர்க்கும் வெண் பட்டாடை முதலிய வரிசைகள் செய்தனர். சுந்தரேசர் வேதக் குதிரையோடு சென்றனர். வீரர்களும் அவரோடு சென்றனர். அரசர் வாதவூரருக்கு அரிய வரிசைகள்செய்து பாராட்டினர். வாதவூரர் திருமாளிகைசென்று சிவத்தியானத்திருந்தனர். அரசர் தமதுகோயிலையடைந்தனர். சுந்தரேசர் தமதுகோயிலுட்சென்று இத்திருவிளையாடல்களை மீனாக்ஷியம்மையார்க்குச் சொல்லியருளி னர். சூரியன் அஸ்தமனமாயது. பகலில்வந்த குதிரையெல்லாம் நரிகளாகிமனிதரைச்சுமந்து சவுக்கடிபட்டு வருந்தியநாம் நல்வினை வசத்தால் நமது வடிவம் பெற்றோம். விடியுமுன் ஓடிப்போவதே உபாயமென்று சங்கிலித்தொடர்களை முறித்துக்கொண்டு உள்ள குதிரைகளைக் கடித்திடர்செய்து ஊளையிட்டன. காவலாளர் உட் புகுந்தனர். வலியநரிகள், மதிலைத்தாண்டியோடின. வலியில்லா தன, சால முதலிய துவாரங்களின் வழியிலோடின. சில மூப்பு முடம் குருடு நோயுள்ளவைகள் கிடந்து வருந்தின. ஊரெங்கும் நரிகளினோசையே நிறைந்தது. விடிந்தபின் அவையெல்லாங்காட் டிற்கோடின. காவலாளர் அரசருக்குத் தெரிவித்தனர். அரசர், கோபங்கொண்டு மற்றை மந்திரிகளை நோக்கி, நம்பொருள் முழு துங்கவர்ந்து நரிகளைக்குதிரையாக்கிப் பகலிற்காட்டி மயக்கிய இக் கள்வனை இனி என்செய்வதென்றுகூற, மந்திரிகள் தலைகவிழ்ந் திருந்தனர். இந்நிகழ்ச்சியறியாதுசிவமேநோக்கியிருந்த வாதவூரர் அங்குவந்தனர். அரசர் மிகக்கோபித்து கடுஞ்சொற்கூறிக் கடுந் தண்டனை செய்வித்தனர். வாதவூரர் பிறரெவராலுஞ் சகிக்கமுடி யாத தண்டனை நிகழும்போதும் சிவனையே துதித்துநின்றனர். சிவபிரான், அவர் மகிமையை அரசர்க்குணர்த்தி உய்விக்கத் திரு வுளங்கொண்டு, வைகைநதி பெருகும்படி ஆஞ்ஞாபித்தனர். அந் நதி பெருவெள்ளமாய் நகர்மதிலைக்கடந்துட்புகுந்து வீடுகளையும் வீழ்த்தியது. ஊர்ச்சனங்கள்பதறிஎழுந்தோடுவாரும்பிள்ளைகளைத்

தேடுவாரும் பொருள்களை எடுப்பாரும் மறந்து திகைப்பாரும் அந்தோ இவ்வெள்ளம் நகருள்ளும் வரக்காரணமென்னென்பாரும் அரசர் நீதிதவறினரோவென்பாரும் சுந்தரேசர் திருவிளையாடலோ வென்பாருமாயினர். அரசர் வருந்தி மந்திரிகளுக்கு ஆஞ்ஞாபிக்க அவர்கள் சனங்களை அழைப்பித்து இன்னார்க்கு இவ்வளவென்று வரையறைசெய்து அணைகோலி அடைக்கச்செய்தனர். அவ்வரை யறையில் ஒருபாகம்வந்தியம்மையார்க்குரியமிக்கப்பட்டது. இவர் தினந்தோறும் பிட்டுச்சமைத்து சுந்தரேசருக்கு நிவேதித்து வரு பவர். மக்கள் சுற்றமுதலிய பற்றற்றவர். எல்லாஞ் சுந்தரேசர் திருவடியேஎன்றுபற்றிநின்றுவழிபடுகின்றவர். தமக்களந்த கரை அடைக்க ஆளில்லாமல், எம்பெருமானே உன்னையொழிய ஒரு பற்றுமில்லாத எளியேன் யாது செய்வேன் கூலியாள் கிட்டுமோ வென்று வருந்துஞ்சமயம், அன்பர் துன்பஞ்சகியாதஅருள்வள்ள லாகிய சுந்தரேசர் அழுக்குத்துணியுடுத்து மண்வெட்டி, கூடை சுமந்து கூலிவேலை கொள்வாருண்டோவென்று கூறிக்கொண்டு வந்தனர். அம்மையார் அப்பா என் பங்குக்கரை அடைப்பாயோ என்ன, கூலியாதென்ன, பிட்டுத்தருவேனென்ன, முன்புதந்தால் பசி நீங்கிச்சென்று கரைஅடைப்பேனென்ன, அவ்வாறுகொடுப்ப துணியை விரித்து வாங்கியுண்ணும்போது, தாய் முலைப்பாலினும் மிகுசுவையுள்ள இது சுந்தரேசர்க்கே அர்ப்பணமாகவென்றுகூறி, தாய்தந்தையில்லாது தனியாய்வந்த எனக்கு, இந்த அரியசுவைப் பிட்டளித்துப் பசிநீக்கிய அன்னே? இனி உன்வேலை செய்வேன் என்று கூறிச்சென்று, நான் வந்தியம்மையின் கூலியாளென்று கணக்கிலெழுதிக் கொள்ளச்செய்து, அவசரவேலை பார்ப்பவர் போல், மண்ணைவெட்டிக் கூடைநிறையஅள்ளி வருந்தித்தூக்கிச் சிரசில்வைப்பார். மிகுபாரமென்று கீழே கொட்டுவார். குறைத்து எடுப்பார். சும்மாடு நழுவியதாகத்தள்ளி மண்கூடைய இறக்கி வைப்பார், சும்மாட்டைஎடுத்துச்சிரசில்வைத்துஇறுக்கிக்கட்டுவார்.

அம்மண்ணைக் கரையில் கொட்டுவார். கடியவேலை செய்திளைத்தார்போல மாநிழலையடைந்து கூடையே தலையணையாக நிலமே சயனமாக நித்திரைசெய்பவர்போற் பயில்வார். விழித்தெழுவார். ஆடுவார். பாடுவார். அயலில் வேலைசெய்பவர்கள் பராக்கடையும்படி மண்ணைக்குவிப்பார். பாய்ந்து குதிப்பார். பாடுவார். ஓடுவார். மீள்வார். வேலைமிகுதியால்வேர்வைவந்ததாக மாறும்படிவாயொலியாற் காற்றழைப்பார். அம்மையார் முன்வருவார். அன்னேவேலை நடக்கின்றது சீக்கிரம் பிட்டிடுவாயென்று மேலும் வாங்கியுண்பார். அதனால் இளைப்புநீங்கி வலியடைந்தவர் போல மண்ணை வெட்டுவார். கூடையிற்கொண்டுபோய்ப் பிறர்பங்கில்கொட்டுவார் அவ்வுடைப்பு நீங்கியதுகண்டு தோள்தட்டுவார். பக்கத்து நிற்பாரைக்கட்டித்தழுவுவார். மண்சுமந்துசென்று உடைப்பில்கொட்டும்போது தடுமாறி வீழ்வார்போல விழுவார். நீந்தி வருவார். கூடையை ஆற்றில் நழுவவிடுவார். நீந்திப்போய்எடுப்பார். நீர்வடியும்படிகட்டுமவிழத்தட்டுவார். அவிழ்ந்ததைக்கட்டுவார். மீண்டுங் கூடையை உடைப்பிலிட்டு எடுப்பார்போல வீழ்ந்து சுழியிலாழ்வார். ஆபத்துற்றவர்போற் காணாது தூரத்திற்போய் மேலெழுவார். நீந்திக்கரையேறுவார். மண்ணை வெட்டுவார். மண்வெட்டி கழலச்செய்வார். ஆப்பிட்டிறுக்குவார். மடியிற் பிட்டை அள்ளித் தின்பார். பிறர்க்குங் கொடுப்பார். ஏவிச்செய்விப்பவர் இத்தனையுங்கண்டும் அடிக்கமனமெழாது பிரம்பை நீட்ட கைகளைநீட்டிச் சிரிப்பார். இப்படியே பற்பல திருவிளையாடல் செய்வாராயினர்.

அப்போது பங்குகள் அடைபட்டமை பார்க்கவந்தவர்கள் வந்தியம்மையார் பங்கு அடைபடாது அடுத்த கரைகளையும் கல்லிச் செல்வதுகண்டு கோபங்கொண்டு இப்பங்கு அடைப்பவன் யார் என்று வினவித்தண்டிக்கச் சமீபித்தும் சுந்தரேசராகியகூலியாளர் திருமேனி தெரிசித்த அளவிலே கோபமாறித் தம்பி எல்லாப்பங்கும் அடைபட்ட பின்னும் எதனால் இந்தப்பங்கு அடையா

திருக்கின்றாயென்னப், பதிலின்றி இறுமாந்திருந்தனர். அது கண்டும், வெள்ளம் அடுத்த கரைகளை அழித்துச்செல்வது தெரிந்தும் அடிக்கப்பயந்து, இவன் பித்தனோ? வந்தியை ஏமாத்த வந்த எத்தனோ? பேயாற் பிடிபட்டவனோ? பாடலாடல்செய் வித்தியாதரனோ? பெருஞ்செல்வனாயிருந்து அதனையிழந்துவாடினவனோ? நெடுங்காலம் வாழ்ந்துகெட்டராஜகுமாரனோ? மன்மதனும்ஆசைப்படும் பேரழகுடைய இவன் கூலியாளாய் வந்ததென்னையோ? பேணி வளர்த்துவந்த தாய் தந்தையரையிழந்து தனித்தவனோ? இவன் கூலிவேலை செய்தவனல்லன். அதனை இவன் மேனிகாட்டுகின்றது என்று பற்பலகூறி, அரசர்க்குத் தெரிவிப்போமென்று சென்று பணிந்து எம்பெருமானே, வைகைக்கரைஅடைத்தாயின வந்தி என்பாளொருத்தி பங்குமட்டும் அடைபடவில்லை. அவளுடைய கூலியாளென்றொருவன் வந்து கணக்கில் எழுதுவித்தான். ஒழுங்காக வேலைசெய்திலன். அவனழகு முதலிய சிறப்புநோக்கி அடிக்கவும் பயந்துவந்தோம் என்றனர். அரசர், மந்திரிகளுடன் வந்து ஒருபங்கு மாத்திரம் அடைபடாமல் அடுத்த பங்கையும் அழிப்பதுகண்டு இதனை அடைப்பவன் யாவனென்ன, ஏவலாளர் முன்புரிந்த அருந்தவத்தால், அரிபிரமாதியருங் கனவிலுங் காண்டற்கரிய சுந்தரேசரைப் பிடித்துவரக்கண்டு அரசர் கோபவசப்பட்டு நிற்றலாற், பிரம்பால் முதுகிலடித்தனர். அவர் சிறிதிருந்த கூடைமண்ணை உடைப்பிற்கொட்டி மறைந்தருளினர்.

அவரைத்தேடி ஏவலர் வந்தியம்மையாரிடஞ் சென்றனர். அம்மையார் தமது பிட்டுண்டுவந்த சுந்தரேசர் திருவருளால் சிவகணங்கள் கொண்டுவந்த விமானமீதெழுந்தருளிச் சிவலோகஞ் சென்றருளினர். முதுகிலடித்த அடி அவ்வரசர் முதுகிற்பட்டது. மந்திரி முதலிய சர்வசனங்கள் மேலும் அரிபிரமேந்திராதி தேவர் முனிவர் மேலும் பட்டது. சமஸ்த சராசரங்களிலும் பட்டது. கருவிலுள்ள சிசுக்களும் தழும்புடனுதித்தன. சர்வலோகங்களிலும் என்மேலடிபட்டது என்மேலடிபட்டது என்னும் ஒலியே பரம்பியது. அப்பேரொலி பெருகி எங்கும் நாதமயமாய் விளங்குதலும், நாதங்கடந்த சுந்தரேசர் மறைந்தருளியதும், அவர்கொட்டிய சிறிது மண்ணால் அக்கரை மலையளவின்மேலுமுயர்ந்ததும்

கண்ட அரசர் திகைத்து நின்றனர். அப்போது, சுந்தரேசர் அசரீரியாய்த்தோன்றி, பாவவழிநீக்கி நீதிவழியே செலுத்துஞ் செங்கோலரசனே! உன்பொருள் தருமவழியில் வந்த சுத்தமுடையதாதலால் வாதவூரனால் நமக்கும் நமதன்பர்க்கும் உபயோகமாகியது. அவனை நீ வருத்தினை. நரிகளைப் பரியாக்கித் தந்தோம். அவைகள் நரியாயோடின. அதனாலாவது அநித்தியவியல்புகண்டு ஆசைநீங்காமல் மேலுங்கஷ்டஞ்செய்தாய். அது சகியாதுவைகை பெருகச்செய்து வந்திதந்த பிட்டுண்டு பிரம்படிபட்டுக் கரை உயர்த்தி அவள் வருத்தம் நீக்கி சிவலோகஞ் சேர்ப்பித்தோம். இத்தனையும் வாதவூரன் பொருட்டே செய்தோம். இவனது நிஷ்களங்க சொரூப நிலையை அறிந்திலை. உனக்கு இம்மை நலன் மறுமை நலன் மெய்வீட்டின்பநலன் முழுதுந் தேடித்தந்தவுத்தமனிவனே. இவனிச்சித்தபடியேசெய்து நெடுநாளிருந்தரசுபுரிந்து நமதருள்பெற்று வாழுகவென்றருளினர்.

அரசர், அந்தோ அநித்தியமான இவ்வாசையும் பொருளையுமே பெரிதா நினைத்து நம்மை உய்விக்கவந்த சிவனே திருவாதவூரரென்றுணராது தீமைகள் செய்தேனே. நமது பொருளை, அநித்தியமான குதிரைக்குக் கொடுப்பதில் ஆன்மலாபமில்லையாதலால், நம்மை உய்விக்கவந்தருளியதற்கிணங்கச் சிவபணியிலேயே செலுத்தி, ஆன்மலாபந் தேடிக்கொள்ளும் உபாயம் உணராத நமக்கு அதனைத் தேடித்தந்தவரென்றறிந்து அவரைச் சிவமாகப் போற்றி வாழ்வதொழிந்து தீமைகள் செய்தேனே என்றஞ்சி இப்பாதகம் எப்போது நீங்குமோவென்று பதைபதைத்துதிருக்கோயிலிற் சிவயோகநிலையிற் வீற்றிருந்தருளுகின்ற அவர் திருவடியிற்பணிந்து எம்பெருமானே அடியேனை உய்விக்கவந்தருளிய தேவரீரது அருணிலையறியாது, அல்லல்வாழ்க்கையால் மயங்கிச் செய்த அபசாரமுழுதும் பொறுத்தருளி, இந்த அரசாட்சியைத் தேவரீரே மேற்கொண்டு அடியேனை அடிமைக் கொண்டருள வேண்டுமென்று மேலும் பணிந்தனர். வாதவூரடிகள், அரசரே சுந்தரேசர் அசரீரியாயருளியபடியேசெய்யும். சிதம்பரத்துக்குச் செல்வதே நமது விருப்பம் என்றுகூறி, அரசர் வருந்துதல் நோக்கித்தேற்றுவாராய் அரசரே நீர் தீமைசெய்ததாக நினைத்து வருந்

துவதொழிக. உம்மை அடுத்தபடியால் நமக்கு லௌகிக வைதிகங்கள் தெளிவாயது. அதனால் சித்தசுத்தி உண்டாயது. அதனால் "அத்தேவர்தேவ ரவர்தேவ ரென்றிங்ஙன், பொய்த்தேவுபேசிப் புலம்புகின்ற பூதலத்திலே" அத்தேவரை நோக்காத ஸ்திரபக்தி மெய்த்தேவாகிய மகாதேவாடியிலேயே செல்லப்பெற்றது. இத்தகைய நிர்ச்சலன சிவபத்தியால் மாயாவிருத்திப் பிரபஞ்சவாதனை நீங்கி தீவிரதாபரிபாகமுற்றது. அதனால் ஆத்மாக்களிடத்திற் பொதுவாகச்செல்லும் சிவகருணையே சிறப்பாகிய திருவருளாநவிற் குருமூர்த்தியாய்வந்து திருவடிசூட்டிச் சச்சிதானந்த சொரூப சிவமயமாக்கியது. இப்பரமசிவனே மூவரையுந்தந்து முத்தொழில் நடாத்து முழுமுதல்வன். பிரமவிஷ்ணுவாதி சகல சீவர்க்கும் பக்குவத்தளவிலருளும் பசுபதி அவனே இத்திருவாலவாயில் எல்லார்க்கும் முன்னே சுயம்புலிங்கரூபியாய்த் தோன்றியருளி மேருமந்தா கயிலாசாதி சகல தலங்களிலும் சிவலிங்க மூர்த்திகளாயிருந்து போகமோக்ஷந்தந்தருள்கின்றனன். கண்ணுவாரதியர்க்குவேதப்பொருளைவிளக்கியருளினன். அவனேஎன்னை சிதம்பரத்துக்கு வரும்படி அருளினன். அங்குச் செல்லுதற்கு உடன்படுகவென்றருளிவிட்டுச், சுந்தரேசனை வணங்கிச்செல்வாராயினர். அரசர் மேலும்பணிந்து பிரிவாற்றாது வருந்திப் பின்வந்து வாதவூரர் நில்லும் நில்லுமென்றருளவும் பிரியமாட்டாது கூப்பிடுதூரஞ் சென்றனர். வாதவூரர், அரசரே நீர் சுந்தரேசர் அருளியவாறே பேணிச் சைவநெறிபாதுகாத்து அரசுபுரிந்துய்க. இனி மறுது நிற்குகவென்று வற்புறுத்தியருளினர்.

அரசர் அவ்வாணையை மறுக்கமாட்டாது அவர் திருவுருவங் கண்ணுக்குத் தோன்றும்வரை சிரமேற் கைகுவித்தபடியேநின்று, தீமைபலசெய்யவும் சிறிதும் முனியாது நன்மையே செய்துவந்த அவரது திருவருட்பெருமையை நினைந்துநினைந்துருகிக்கண்கணீர் பெருகத் திசைநோக்கி வணங்கியெழுந்து ஒருவாறுகத் திரும்பித் திருவாலவாய்க்குவந்து திருமுன் பணிந்தெழுந்து அஞ்சலித்து நின்று, பிரம்படியையுந் திருமேனியிலேற்றருளிய திருவருளை

நினைந்துருகி துதிசெய்வாராயினர். எம்பெருமானே! முன், பார்த்தப்ராகரம் (அர்ச்சுனாடித்தழும்பு) என்னும்பேர் என்றும் விளங்கும்படி அவ்வர்ச்சுனர் வில்லாலடித்ததையும் சாக்கியநாயனர் கல்லாலெறிந்ததையும் அவர்கள் திடபக்தி விசேடத்தாற் பொறுத்தருளினீர். அன்பு சிறிதுமின்றிப் பெரியார்க் கிடருஞ் செய்த கடையேனடித்தபிரம்படியையும் பொறுத்தருளியதென்னையோ? (குமாரர் பிரமனைக்குட்டியதும் இடைச்சிகள் விஷ்ணுவை மத்தாலடித்ததும் வேறிடஞ்செல்லாமையால் அவ்விருவரும் எங்குநிறைந்தவரல்லர். ஏகதேசிகளேயென்பதுவிளக்கமாயது.) கடையனேன் தேவரீர் திருமேனியிலடித்த பிரம்படி அண்டபிண்டசராசரங்களெங்கும்பட்டது. இதுவே தேவரீரெங்கும்நிறைந்துநின்றருளும் சர்வவியாபகவியல்பைநேரிலும்விளக்கியது. அடியேன்முதுகிலும் பட்டதனல் தேவரீர் திருமேனியனுயினேனே? மருந்துகைப்பாயிருப்பினும் உண்டவர்க்கினிய சுகந்தருதல்போல, அறிவுமயங்கி அநித்தியஉலகைப்பற்றிநின்ற அடியேற்குக் கைப்பாயிருந்த சிவதரும திவ்வியமருந்தைப்புகட்டித் திவ்வியபலனைத் தந்தருளிய தெய்வப்பெரியானன்றோ திருவாதவூரடிகளென்றறிந்து பணிந்தின்புறவதொழிந்ததுமன்றித், தண்டித்தலுஞ் செய்தேன். திருவருளே உருவாய் வந்தருளிய இவரைத்தண்டித்த பெரும்பாவி எப்படிஉய்வேன். பாதகனுகிய அடியேனை மீளாநரகிலழுத்தாமல் உண்மையறிவித்து "தாயினும் நல்லசங்கரன்" என்னும் சுருதிநிலைவிளக்கியருளிய தேவரீர் திருவருளுக்குச் சிறியேன்செய்யுங் கைம்மாறுளதாமோ? வேதாகமவிதிப்படி சிவயாகஞ்செய்கின்ற மேலோர்கள்தருகின்ற அவியமுதிலுமிகுசுவையினதென்று விளக்கவோ வந்தியம்மையார் பிட்டமுதைவேண்டி உண்டருளினீர். தாயில்லாத தேவரீருக்கு இவளொருதாயாயினளோ? சிறுத்தொண்டரும் கண்ணப்பரும்படைத்தஅமுதம்போல இப்பிட்டமுதமும் வலியவந்துண்டருளியதனல் எக்காலத்தும் மெய்யன்பருக்கு எளிவந்தருளுமியல்பு விளக்கமாயது என்பனமுதலிய கூறித்துதித்து வணங்கிவந்து சைவந்தழைப்ப அரசுபுரிந்திருந்து செகநாதனென்னொருபுத்திரனைப்பெற்று உரியகாலத்தில்முடிசூட்டி வைத்துவிட்டு மணிவாசக சிவத்தியானபராயணமர்ந்து சிவபதநிழலிற்சேர்ந்தனர்.

இவர்க்கு நன்மைகூறிச் சென்றருளிய வாதவூரடிகள் மிகுந்த ஆவலுடன்பெருந்துறையடைந்து சிவயோகநாயகிஆத்மநாதரைப் பணிந்துசென்று முன்போல அங்குவந்திருந்தருளும் குருந்தமூல குருநாதரைப் பணிந்து கண்ணீர்பெருகக்கசிந்துருகிநிற்பக், குருநாதர்நெற்றியில் விபூதிசாத்தினர். சாத்தும்போது குருபாதமே புகலென்பதுவிளங்க, அத்திருவடியைக் கரங்களாற் பற்றிக்கொண்டு குனிந்துநின்று மேலும்பணிந்து அடியாருடனிருந்தனர். அந்நாளில்குருநாதர், அடியார்களைநோக்கி அன்பர்களே நாம்வந்த காரியம்பூர்த்தியாயது. நீங்களிருங்கள் கயிலைக்குச்செல்கின்றோமென்றருள, அவர்கள் இனி என்றுகாண்போமென்று புலம்புதல் கண்டு, இக்குருந்தடியில் நமதுபாதங்களைப்பூசித்துக்கொண்டிருங்கள். அக்கினிதீர்த்தத்தில் ஒருசோதிதோன்றும்; அதனில்முழுகி நமது கயிலைக்குவாருங்களென்று ஆறுதல்கூறி நிறுத்திவிட்டுச் சென்றனர். வாதவூரடிகள் அதன்பின்னும் கண்ணீரும்கம்பலையும் பெருக உடன்வருவதுகண்டு, ஒருகொன்றைமரநிழலில் வீற்றிருந்தருளி, அன்பனே! இங்குவரும் பக்தர்க்கருளவே இக்குருந்தடியில் என்றும் வசிக்கின்றோம். இதுநாதமெல்லாம் வந்தொடுங்குமிடமாதலாலும், உமைகாணநடஞ்செய்தலாலும் சுழுமுனைமார்க்கத்துச்சியில் எப்போதும் நிறைந்துள்ள பரநாதத்தைக்குறிப்பதாகிய சங்கத்தொனியேயன்றி வேறுவாத்தியங்கள் இத்தலத்தில் நமக்கு ஆகா, நீ இவைகளையறிந்து நமதுபாதங்களைப்பூசித்துக்கொண்டு இவ்வடியார்களுடனிருந்து அவர்கள்சோதியில்முழுகும்போது நீயுஞ்செல்லாமல் உத்தரகோசமங்கைமுதலிய தலங்கள் பணிந்து, திருக்கழுக்குன்றில் சிலநாள்வசித்துச் சிதம்பரத்துவந்திருந்து, புறச்சமயநீக்கிச் சைவஸ்தாபனஞ்செய்து நமதுகுஞ்சிதபாதநிழலிற்புகுந்து வாழ்க. நீ செல்லுந் தலங்களில் இக்குருவடிவங்காட்டுகின்றோம். வருந்தாதொழிகவென்று நெற்றியில் நீறு சாத்தியருளினர்.

வாதவூரடிகள் மேலும்வணங்கி எம்பெருமானே, அடியேனுக்கு உபதேசித்தருளிய இப்பெருந்துறையில் முத்தியின்பமுந்தந்தருளாமல் சிதம்பரம்புகும்படி அருளியதென்னையோவென்று விண்ணப்பித்தனர். அன்பனே, குளவி, தானெடுத்தபுழுவை அவ்விடத்திலன்றி வேறோரிடத்துவைத்துத் தனதுருபமுறச்செய்யுமுறையாலுங்காண்கவென்றருளி, அச்சிதம்பரஸ்தலமகிமைவிளக்கிச்சென்றனர். அதன்மேலுஞ்சகியாது வருந்துதல்நோக்கி, மார்போடணைத்துச்சிமோந்து முத்தமிட்டு நமது அருமைக்குழந்தாய், நீநமதுபிரிவைச்சகிக்கமாட்டாயென்றே நீமதுரையிலிருந்து மீண்டும் வந்தசமயம் முன்போலிங்கிருந்தோம். இப்போது அடியார்களைச் சிலகாலமிங்கிருந்துவரும்படிசெய்தோம். அடியார்களுடன் குருந்தடியில் நம்மைப் பூசித்துக்கொண்டிருந்து முற்கூறியபடி செய்க. வருந்தாதொழிக நிற்குகவென்றருளிநடந்தனர். அவ்வாணையைமறுக்கமாட்டாது அவர்திருமேனிதெரியும்வரையும்நின்று ஒருவாறாக மீண்டுவந்து அடியார்களுடன் குருந்தநிழலில் திருவடி பூசித்துக்கொண்டிருந்து இடைஇடையே தமதுதிருவாக்கினின்று திருவருள்மயமாகி வெளிவருகின்ற "நமச்சிவாய வாழ்க" என்று தொடங்குஞ் சிவபுராணம், திருச்சதகம், திருப்பள்ளியெழுச்சி, செத்திலாப்பத்து, அடைக்கலப்பத்து, ஆசைப்பத்து, அதிசயப்பத்து, புணர்ச்சிப்பத்து, வாழாப்பத்து, அருட்பத்து, பிரார்த்தனைப்பத்து, குழைத்தபத்து, உயிருண்ணிப்பத்து, திருப்பாண்டிப்பதிகம், திருவேசறவு, அற்புதப்பத்து, சென்னிப்பத்து, திருவார்த்தை, திருவெண்பா, பண்டாயநான்மறை என்னும் இருபதுவகைத் திருப்பாடல்கள்பாடிச் சிவத்தியானநிலையில் வீற்றிருந்தருளினர்.

அப்போது அக்கினிதீர்த்தத்தில் தோன்றிய சோதியுள்ளே அடியாரெல்லாரும் முழுகினர். சிவபிரான் உமாதேவியாருடன் இடபாரூடராய்அங்குவந்தனர். அடியார்கள் சிவகணநாதர்களாய் வந்துபணிந்தனர். சிவபிரான் அவர்களைநோக்கி நமது அருமை

மைந்தனுகிய மணிவாசகன் பலதலங்கள்சென்று திருவாசகம்பாட வும் புத்தரைவாதில்வெல்லவும் சைவசமயத்தையே எங்கும்விளக் கவும் இன்னுஞ்சிலகாலம் பூமியிலிருக்கவேண்டுமாதலால் அவன் நம்மைப்பிரிந்து சகிக்கமாட்டான் நீங்களாவதுடனிருந்தால் ஆறு தலாயிருக்குமென்பது குறித்தே நம்மைப்பிரியாத உங்களை இங் கிருந்துவரச்செய்தோம். மானுடசரீரசம்பந்தமலினநீங்கி உங்கள் திவ்வியசரீரம்பெறுதற்கே உங்களை அக்கினிச்சோதியில் முழுகச் செய்தோம் என்றுகூறிஅவர்களுடன்சென்றருளினர். வாதவூரர், இவையெல்லாம் சிவயோகநிலையில்தெரிந்துதீர்த்தக்கரைக்குவந்து அன்புமீதூரத்துதித்துக் குருநாதர்சந்நிதியிற்பணிந்து திருப்பாது கையிரண்டும் சிரமேல்வைத்துக்கொண்டு சென்று உத்தரகோச மங்கையில் குருவடிவங்காணப்பெறுமல், எம்பெருமானே அடி யேனைக்கைவிடுதல் முறையோவெனுங் குறிப்பமைந்த நீத்தல் விண்ணப்பம்பாடியருளச், சிவபிரான் குருவடிவங்காட்டக் கண்டு மகிழ்ந்து பணிந்து சோழநாட்டிற் பலதலங்கள் தரிசித்துத் திரு வாரூரில்திருப்புலம்பல்பாடிச் சீகாழியிற்பிடித்தபத்துப்பாடித் திரு வண்ணுமலையில்திருவெம்பாவை திருவம்மானைபாடியருளித், திருக் கழுக்குன்றுக்குவந்துபணிந்து திருப்பாதுகைகளை இங்குவைக்குக வென்னுங் குறிப்புணர்த்துங் குருவடிவங்கண்டு மகிழ்ந்து அக் குறிப்பும் விளக்கும் திருப்பதிகம்பாடிச் சிலநாளமர்ந்தருளினர்.

பின்பு சிதம்பரம்நோக்கிச்சென்று எல்லைபணிந்து, திருவருள் விளக்கப் பெருவளம் பற்பலகண்டுட்சென்று சிவகங்காஸ்நானநிய மங்கள் முடித்துவந்து சிற்சபேசர் திருவடிவங் குருவடிவாய்ப் புன்சிரிப்புடன் அன்பனே வருகவென்றழைத்தருளும் குறிப்பு நோக்கி, இன்பமீதூர அன்பேவடிவாக அருள்நடனம் நோக்கி மெய்ம்மயிர்பொடிப்ப விழிநீர்பெருக நெகிழ்ந்துளமுருக நிலமுற விழுந்து பலமுறைபணிந்து நித்தியானந்தநிறைகடல்மூழ்கிக் கைத் தலங்குவித்துத் திருவருள்மயமாய்த் திருவாக்கினின்றும் வெளி

வருகின்ற கண்டபத்து என்னும் நிருத்ததரிசனத் திருப்பதிகம் பாடியருளி ஒருவாறு புறம்போந்து, திருப்புலீச்சரமும் அனந்தேச்சரமும் பணிந்து தில்லைத்திருவீதிவலம்வரும்போது சிவானந்தமேலீட்டினால் "தில்லையாண்டானைக்கொண்டன்றே" = தில்லையில் அருநடம்புரியும் ஆண்டவனைப் பிரிவறக்கொண்ட சுத்தாத்துவிதக்கலவியின் தொடர்பினாலல்லவா, "அடியேன் ஆடுங்குலா" அடியேனும் அவ்வருள் நடனானந்தம் வாய்க்கப்பெற்றுக்குலாவுதல் என்னும் திருவுளக்கருத்துத் திருவாக்கில் வெளிவருகின்ற குலாப்பத்தும், கோயில்மூத்ததிருப்பதிகம், கோயிற்றிருப்பதிகம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல்களும், மகளிர்பொற்சுண்ணமிடித்தல் முதலிய செயல்கண்டு அவர்கள்கூறுதலாகத் திருப்பொற்சுண்ணம் திருக்கோத்தும்பி திருத்தெள்ளேணம் திருப்பூவல்லி திருவுந்தியார் திருத்தோணோக்கம் திருப்பொன்னூசல் அன்னைப்பத்து குயிற்பத்து திருத்தசாங்கம் அச்சப்பத்து எண்ணப்பதிகம் ஆனந்தமாலைஎன்னும் திருப்பாடல்களும் பாடியருளித் தில்லைஎல்லையின்புறத்தே ஒருபர்னசாலையில் சிவத்தியானநிலையிலமர்ந்து சிற்சபேசதெரிசனஞ்செய்துகொண்டு வீற்றிருந்தருளினர்.

அந்நாளில், உலகப்பற்றுநீங்கிச் சிவனையேபற்றிச்சிவவேடப்பொலிவினராய்ச் சிவநியமத்திருத்தொண்டுகளேசெய்து சிவக்ஷேத்திரங்களெங்கும் தெரிசித்துவருகிற சிவபத்தரொருவர், திருக்கேதீச்சரம்முதலிய சிவஸ்தலங்கள்தெரிசித்தற்காக இலங்கைபுகுந்து, எங்கும் புத்தசமயம் பரம்புதலால் அரசனும் புத்தனாய் அதனை வளர்த்துவருதல்கண்டு, சிற்சபேசனைவணங்கி எம்பெருமானே! இப்புத்தமதக்கொள்கையை நீக்கியருளுகவென்ற பிரார்த்தனையுடன் தில்லைத்திருச்சிற்றம்பலம் வாழ்கவென்றே எப்போதும் கூறிக்கொண்டு சஞ்சரித்தனர். அவர் திருமேனித் திருநீற்றுப்பொலிவு சிவநாமப்பொலிவுமுதலியகண்டு பொறுதபுத்தர் சிலர்

யரசனுக்குத்தெரிவிப்ப, அவன் இதவசனங்கூறி அழைப்பிக்க, அவர்வந்து தில்லைத்திருச்சிற்றம்பலம்வாழ்கவென்று கூறிக்கொண்டு வீற்றிருந்தருளினர். அரசன் நீர் இவ்வாறுகூறுங்காரணமென்னென்றுகேட்ப, அரசனே! சோழநாட்டில் சிதம்பரமென்றொரு சிவஸ்தலமுள்ளது. அத்தலமகிமைகள் அளவுபடா. எத்தலங்களினுஞ் சிறந்தது. அதனில் சர்வரோகமும்நீக்கிச் சர்வசுகமுந்தரும் சிவகங்காதீர்த்தமுள்ளது. மெய்ஞ்ஞானரூபமாய்விளங்கும் சபையிற் சிவபிரான் பஞ்சகிருத்திய நடனஞ்செய்தருளுகின்றார். அவரே, எத்தேவரையும் அடிமைகளாகவைத்தாளுகின்ற மகாதேவர். அவரே யாவர்க்கும் இகபரமோக்ஷந்தந்தருளும் பரமபதி. பல்லாயிரம் பஞ்சாக்ஷரபலன்தருவது திருச்சிற்றம்பலம் என்னுந்திவ்வியமந்திரம். ஆதலாற்றான் தில்லைத்திருச்சிற்றம்பலம் வாழ்கவென்று எப்போதுஞ் செபித்துவருகின்றேனென்றனர். அங்கிருந்த புத்தகுரவன் அடா சைவனே, சிதம்பரத்தில்வந்து எங்கள்கடவுளன்றி வேறுகடவுளில்லை என்று வாதித்துவென்று, உங்கள்கடவுள் ஆடுஞ்சபையை எங்கடவுள் இருக்கும் பள்ளியாக்குவனென்றெழுந்து சீடருடன் சிதம்பரத்துவந்து திருக்கோயிலுள்ளொருமண்டபத்திருந்தான். அரசனும், சிதம்பரமகிமை தீர்த்தமகிமைகேட்டபோதே தன்மகள் ஊமைத்தன்மை அங்குநீங்கக்கூடுமென்று கருதினனாதலால், மகளையும் அழைத்துக்கொண்டு சைனியஞ்சூழ அம்மண்டபத்து வந்திருந்தனன்.

திருத்தொண்டர்கள், சிவாலயத்துட்புறமதத்தர்கள் வந்துவிட்டனரே என்று வருந்தி விலக்கவும் போகாமையால், தில்லைமூவாயிரர் முதலிய பெரியார்க்குத் தெரிவிப்ப, எல்லாரும் வந்து புத்தகுரவனை நீ எங்கள் கோயிலுட்புகுந்ததென்னென்று கேட்ப, அவன், உங்களுடன் வாதித்து உங்கள் மதத்தை நிராகரித்துப் புத்தமதமே மெய்யென விளக்கவே வந்தோமென்றனன். அவர்கள், புத்தனே உன்னைவெல்வது அரிதன்று மிகஎளிதே. ஆயினும்

தக்கது இது, தகாதது இது என்று கூறுதற்கு மத்தியில் ஒரு தலைவர் வேண்டுமென்று கூறிவிட்டுச், சோழராஜாவுக்கும் வித்துவான்களுக்கும் ஓலை அனுப்பினர். அவர்கள் கனவில் சிற்சபேசர் வாதவூரனை அழைத்துவந்து வாதுசெய்விக்குகவென்றருளினர். விடிந்தபின் யாவருங்கூடிக் கனவு நிகழ்ச்சிகூறி வியந்து பர்னசாலையடைந்து பணிந்துவேண்ட வாதவூரடிகள், சபாநாதனை வணங்கிமண்டபத்துவந்து, நீறில்லாத நெற்றியைப் பார்ப்பது பாவமாதலால் திரை சூழ்வித்துஅதனுள்ளே திவ்வியாசனத்தில் வீற்றிருந்தருளினர். சோழராஜர் முதலிய யாவரும் வந்து பணிந்து பக்கத்திருந்தனர். எல்லாரும்நிறைந்தபின், சோழராஜாஎழுந்துவாதவூரடிகளை மேலும் வணங்கி அஞ்சலித்துநின்று, எம்பெருமானே! சிவநிந்தகர்களாகிய இப்புத்தர்களை வாதில் வெல்வது தேவரீர் கடமை; வென்றபின் அனைவரையுந் தண்டிப்பது அடியேன் கடமை என்றனர். புத்தரெல்லாம் நடுநடுங்கினர். அடிகள், புத்தகுரவனை நீ வந்தகாரணமென்னென்றுகேட்ப, அவன், எங்கடவுளன்றி வேறு கடவுளில்லை என்பது விளக்கி இப்பொன்னம்பலத்தில் எங்கள் தெய்வத்தைத் தாபித்தற்கே வந்தேனென்றனன்.

அடிகள், புன்முறுவல்செய்து முன்னைத்தவமில்லாமூடனே, முயல் யானைபாகுமா? அஃதிருக்கட்டும் உன் கடவுளிலக்கணமும் அவனையடையுமார்க்கமும் கூறுவாயென்ன அவன், பிறவிக்குருடனுக்கு சூரியனொளி காட்டமுடியாதன்றோ! அதுபோல எங்கள் பிடகாகம ஞானமில்லாத உமக்கு அவைகளைக்காட்ட முடியுமா? ஆயினும் நீர் கேட்டதற்கு மறுமொழி கூறவேண்டியதவசியமே. எங்கடவுள் சீவரிடத்துள்ள இரக்கத்தால் எல்லா யோனிகளினும் பிறந்து அந்தந்த உயிர்க்கெல்லாம் நன்மையேசெய்து பிடாகாகமங்கள்கூறி மெய்யடியார்க்குபதேசித்துக் கொலை களவு கட்குடிபொய் முதலிய பாவங்களைநீக்கி அரசமரநிழலிலிருப்பன். உருவம் வேதனை குறிப்பு செய்கை விஞ்ஞானம் (ரூபம் வேதனைசம்ஞை

சம்ஸ்காரம் விஞ்ஞானம்) ஆகிய பஞ்சகந்தங்களுடன் ஒரேக்ஷணத்திற்சேர்ந்து அறிவுண்டாகப்பெற்று அடுத்த க்ஷணத்தில் அவ்வைந்துடன் அவ்வுயிரும் அழிவதே முத்தியாமென்றனன். வாதவூரார், சோழராசனைநோக்கி அரசனே, முழுமூடனாய் அறிவிழந்து பிதற்றுமிப்புத்தன் நமது சைவத்தினுண்மை எவ்வாறுணர்வன். அவன் கூறியவற்றிலேயே வினவுவோமென்றுகூறிப், புத்தனே உன்கடவுள் பிடகாகமங்கள் ஓதினானென்றாய். ஒருவன் விரிந்த நூலைப்பாடுதற்கு உயிர் உடல் வாக்கு முதலிய கருவிகளும் அறிவும் நீடித்திருந்தாற்றான் அச்செயல் நிகழும், நீயோ அறிவு முதலிய ஐந்தும் ஒரேக்ஷணத்தில் தோன்றி அழிந்துவிடுமென்றாய் அறிவழிந்தால் அந்நூல்கூறுவதெப்படி உன்கடவுள் ஒருகணத்தில் அழியும் அறிவு முதலிய கொண்டுதானா அப்பெருநூல்கள் செய்தான். உன் அறிவுகெட்டவாதம் சிறுவர்க்கும் நகையாமன்றோ! நீ நூலுண்டென்றது பொய்யாய் ஒழிதலால் ஒரு நூலும் உனக்கு இல்லையென்பதை முதலிற்காணுதி. இனிச் சீவர் துன்பம் நீக்குதற்கு உன் கடவுள் எல்லாயோனிகளிலும் பிறந்தனனென்றாய். பிறர் மயங்குந்துன்பம் நீக்கவந்தவன். தானும் பெருமயக்கமுடையனேல் அம்மயக்கம் நீங்குமோ? உன் கடவுள் கொலையை மனசிலும் நினையானென்றாய். அவன் எல்லாயோனியிலும் பிறப்பனென்றதனால் நாய் நரி புலி முதலியவைகளாய்ப் பிறந்தபோது புல்லுந் தழையுமா தின்றான். மூடனே உருவ முதலிய ஐந்தும் அழிந்துவிடுமென்றாயே. உன் கடவுளுக்கு உருவமேது. அவன் சீவர்க்கருள வடிவங்கொண்டானென்பதெவ்வாறு பொருந்தும்? உன் கடவுளுக்கு உருவுமில்லை உருவமில்லாதவன் நூல் சொன்னதுமில்லையாதலால், எல்லாம் அழிதலே முத்தி என்று கூறும், உனது அசட்டுப் பிடகநூல் சொன்னவர் யாவர். நீ இருபத்தொருவரென்றெண்ணுகின்ற புத்தரெல்லாம் தாயர் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வருவரென்கின்றாய், பிறக்கும்போதே தாய்க்

கொலைசெய்து நாகூறும் பாதகர் தாமோ உனக்குக் கடவுளாவார். உன் கடவுளிலக்கண மிகஅழகன்றோ? பிருதிவி அப்பு தேயு வாயு ஆகிய நான்குபூதங்களின் கலப்பால்உருவமுண்டு, உயிர்வேறில்லை என்கின்றாய் நீ உறங்கும்போது ஒரு பாம்பு உன்மேற்சென்றால் அதனை நாற்பூதக்கலப்பினால் வந்த தேகம் அறிகின்றதா? உடம்பு இறக்குங்கால் உயிர் அதனை விட்டு நீங்கும். ஆதலால் உடம்பின் வேறாய் உயிருண்டென்பதை அறிகுதி. ஆகாசமுமில்லை அதனிற் றோன்றும் ஓசையுமில்லை என்கின்றாய். நீ உண்டெனக்கொண்ட நான்கு பூதமும் கலத்தற்கு இடந்தந்து நிற்பது ஆகாசமல்லவா? நீ கூறும் பிருதிவியில் நாற்றமும், அப்புவில் சுவையும், தேயுவில் ஒளியும், வாயுவில் ஸ்பரிசமும் தானே தோன்றும். நீ பேசும் சப்தம் எங்கிருந்து வந்தது. ஆகாசத்திலல்லவா? இதனால் ஆகாசபூதமும் உண்டென்பது தெரிவாய். திசை என்பதொன்றில்லை என்கின்ற நீயே வடதிசையில் அரசமரநிழலில் உன்கடவுளிருக்கின்றானென்று அத்திசைநோக்கி வணங்குவதென்னையோ? பொய்யர் பித்தர் மூடர் கூட்டத்தில் நீ கூறுவது பொருந்துமன்றி அறிஞர் சபையிலேறுமா? நீரின்றி வாடுதலும் நீருண்டால் தழைத்தலும் நேரே கண்டும் மரமுதலிய தாவரங்கள் உயிருள்ளன வல்லவென்கின்ற மூடனே அத்தாவர சரீரங்கள் அவ்வுயிர்களின் வினைக்குத் தக்கபடி இறைவனால்அமைக்கப்பட்டனவென்றறிவாயாக. உயிர்க்கொலை பாதகமென்கின்ற நீ அவ்வூனைத்தின்பதென்னை. கொன்றால் தான் பாதகமென்பையோ? உண்பவரில்லையேல் கொன்று விற்பவருமிலர். விற்பவர், உண்பவர்க்காகவே கொல்லுதலால், அப்பாவம் மிகுதியாக உண்பவரையே சாருமென்க. பஞ்சகந்தங்களுடன் உயிரும் அழிதலே முத்தியென்கின்றாய், உயிரழிந்தால் முத்தி பெறுபவர் யார். பெறுவாரில்லையேல் முத்தியுளதாகுமோ? ஆதலால் நீ கூறும் முத்தியும் பொய்யே, அதனைத்தரும் உன் கடவுளும் பொய்யே. அவன் பிடகநூல் சொன்னானென்பதும்

பொய்யே. மேலுங்கூறியவெல்லாம் அபத்தமேஎன்பது காண்பா யாகவென்றருளினர்.

இவையெல்லாங்கேட்ட புத்தன் ஒன்றையேனும் மறுத்து ஞாயங்கூறவும், தன் பக்ஷத்தை நிறுத்தும் உபாயந் தேறவுமாட்டாது 'சேஷம்கோபேனபூரயேத்'என்ற மூடநிலையனுய்க்கோபங் கொண்டு, எங்கடவுளும் முத்தியும்பொய்என்றீரே. உங்கடவுளும் முத்தியுமுரைப்பீரென்றனன். அதுகேட்ட அடிகள், ஆல நிழலி லிருந்து ஞானோபதேசஞ் செய்பவனும், சிற்சபையில் உலகெலா முணர்ந்துய்யும்படி நடனஞ்செய்பவனும், விபூதியணிந்த மேனிய னும், உமாதேவியாரை ஒருபாதியிற் கொண்டவனுமாகிய எங் கடவுள் மகிமைகூறுதலரிதேயாம். அவன் இத்தன்மையனென்று கூறும் அளவுட்பட்டவ னல்லனென்றுகூறி மேல் தொடங்கும் போது, புத்தன், சைவரே நீர் விரித்துரைக்கவேண்டா. என் கேள்விக்கு விடைகூறுமென்று கூறுகின்றான். உங்கடவுள் செப மாலை கையிற்கொண்டு ஆலநிழலிலிருப்பது, தனக்குமேலொருநற் கடவுளை நோக்கிச் செய்யுஞ் செபதியானந்தானே! தனக்குமேலா னவர்காண நடிப்பதன்றித் தானாக இச்சைப்படி நடஞ்செய்வ துண்டோ? மேனியில் நீற்றைப்பூசுவது அதனிலும்உயர்வென்று தானே! மங்கையைப் பாதியிற் கொண்டவனென்று மகிமை கூறிய நீர் துறவியாயிருப்பதென்னையோ? ஒரு பாதிபெண்ணாக ஒரு வடிவம் உலகிலுண்டோ? என்றனன். வாதவூரர் நகைத்து, மூடனே உன் கேள்விக்குச் சமாதானம் வேதாகமப் பிரமாணங் கூறி விளக்கவேண்டும். நீ அந்நூல் கேட்டற்குரிய யோக்கியதை இல்லாதவன். அன்றியும் அசட்டு மதப்படுகுழியிலாழ்ந்து சைவ நிந்தையே புரியும் பெரும்பாதகனுமாயினாய் உன்முன் அந்நூல் கூறுதல் பாதகமாதலால் ஸ்தூலமாக விளக்குவோமென்றுகூறி அருளுகின்றார்.

எங்கடவுள் செபமாலை கொண்டது, உலகர் அவ்வாறு தன்னைச் செபநியான முறையில் வழிபாடு செய்தற்கே என்பதை நீ அறியுந் தரத்தனோ? ஆயுதத்தொழில் பிறர்க்குப் பழக்குவோர் தாமும் கையில் ஆயுதங்கொண்டு காட்டல் போலுமென்றறிக. எம்பிரான் செய்யும் நடனத்தினுண்மையறியாதும் ழறினை. சிருஷ்டி முதலிய ஐந்தொழில்களே அந்நடனத்தில் நிகழ்கின்றன. அத்தொழில்கள் ஆன்மாக்கள் வினைப்போகமனுபவித்து முடிந்தவழி நித்தியானந்தமுறச் செய்வனவே, அதனாற்றான் அதற்குஆனந்த நடனமென்னும் பேர் விளங்குகின்றது. ஆன்மாக்களைஐந்தொழில் களுட்படுத்தி ஆட்டுதலே அந்நடனத்தினுண்மை, இது, நடனி களை ஆட்டுகின்ற நட்டுவன் தானும் ஆடிக்காட்டுதல் போலுமென் றறிக. எம்பிரான் விபூதியணிவது, ஆன்மாக்கள் பிறவிநோய்நீங்கி உய்தற்கேயாம். இது, பிள்ளைகள் நோய் நீங்கி உய்தற்குத் தாயர் மருந்துண்டல்போலுமென்றறிக. இன்னுமிதனுண்மைவேதாகமாதி சிவசாஸ்திரங்களும் சாபால முதலிய வேதாந்தங்களும் விரிவாய் விளக்குகின்றன. விபூதி, மகதைசுவரியமே. ஐசுவரியம், ஈசுர சம்பந்தமே. ஈசுரன், சிவனொருவனே. அவனே, எப்பொருளுந் தோன்றியமுறையே தன்னிடத் தொடுங்கத் தான் ஒன்றிலும் ஒடுங்காமல் மிஞ்சிநிற்கும் நித்திய முத்தனென்பதை நெருப்பி லிட்டன எல்லாம் ஒடுங்கிச் சாம்பராக, ஒடுங்காது மிஞ்சிநிற்கும் அச்சம்பராகிய விபூதியை அவன் மேனியிலணிந்து விளக்குதலா லுங்காண்க. ஒரு பாதியில் உமை வடிவங்காட்டி அர்த்தநாரீசுர ரெனப் போகமூர்த்தியாய் விளங்குவது ஆன்மாக்களெல்லாம் கர்மபோகம் அனுபவித்தற்கேயாம். இவ்வுண்மையறியாது, மற் றைத்தேவர் முதலிய சீவர்கள் ஆணும் பெண்ணும் வெவ்வேறாய் இருந்து இச்சித்துக்கூடி அநித்திய அற்ப இன்பமனுபவித்தல் போல் நினைந்தனை. ஒரே வடிவில் கூடுதல் எவ்வாறும். நீயுமிவ்வடி வம் உலகிலுண்டோவென்றனை, இது லோகாதீத ஞானமயமென்

றறிக. யோகமூர்த்தியாயிருந்து யோகத்தைஅருள்பவனும்அவனே யாம். குருடர்கள் கையிலுள்ள தடியையன்றி வேறொன்றையறி யார். அதுபோல உண்மைஞானக்கண்ணில்லாக்குருடனாகியநீயும் உன் கையிலுள்ள பொய்ந்நூலன்றி மெய்ந்நூலொன்று முணரா துழறினை. எங்களிறைவனே! யாவர்க்கு முதல்வன். அவனே யோகி, அவனே போகி. அவனே அரூபி. அவனே வெகுரூபி. அவனே சச்சிதானந்த சொரூபி. அதற்கு எதிர்மறையான அநிர்த ஜடதுக்கலேசமுமில்லாதவன் அவனே ஆன்மாக்களுய்தற்கிரங்கிச் சிற்சபையில் ஆனந்தநடனமூர்த்தியாய் விளங்குகின்றான். மூர்த்தி யாயினும் அவனுக்கு அடிமுடியாதி அவயவங்களில்லை. அவனே பூவுமணமும்போல எங்குநிறைந்த பரிபூரணன். அவன்மகிமைகளை நீ எங்ஙனம் அறிவாயென்றருளிவிட்டு, சாஸ்வதியை நோக்கி நாமடந்தாய்! சிவநிந்தை செய்த தக்கன் பக்கஞ்சார்ந்த தீமை யால் மூக்கறுபட்டதை மறந்தனையா? இன்னும் பெருந்தண்டனை பட்டு வருந்தாமல், சிவநிந்தனை செய்கின்ற இப்புத்தர் நாக்கை விட்டு நீங்குகஎன்று ஆஞ்ஞாபித்தருளினர். அவளும் அஞ்சி நீங்கினள். புத்தர்களனைவரும் ஊமைகளானார்கள்.

ஈழநாட்டரசன் வணங்கி எம்பெருமானே தேவரீர் திருவாக் கின் வல்லபந்தெரிந்தேன். மேலும் அவ்வருள் வாக்கினால் அடி யேன் புத்திரியின் ஊமைத்தன்மையை நீக்கி அடிமை கொண்ட ருள்கவெனவேண்டி, அவானுமதிப்படி புத்திரியை அழைத்துவர, அவள், வணங்கி அஞ்சலித்துநிற்ப, அருணோக்கஞ்செய்து, புத் தர் முன்கேட்டவைகளுக்கு மறுமொழி கூறுகவென்றருளினர். அப்பெண்மணி புத்தர் இழிவென்று கூறியவைக்குச் சமாதானம் கூறினள். அவ்வற்புதங்கண்டு யாவருமகிழ்ந்தனர். வாதவூரர், அப்பெண்மணி கூறியவைகளைஅமைத்து மகளிர்விளையாட்டாகிய சாழலாகப் பாடியருளினர். அது திருச்சாழலென விளங்குகின் றது. ஈழநாட்டரசன் விபூதி ருத்திராக்ஷந் தரித்துவந்து வாத

ஊரைப் பணிந்து அடிமையாயினன். சோழராஜனும் தில்லைமூவா யிரவர் முதலிய எல்லாரும் பணிந்து துதித்தனர். ஈழமன்னன் புத்தர்கள் ஊமையாய் வருந்துதல்கண்டு வாதவூரடிகளை வணங்கி எம்பெருமானே, இவர்கள் செய்த பிழைபொறுத்தருளி ஊமை நீங்கும்படிசெய்தருளுகவென்றுவேண்டினன். சோழர்முதலியரும் அவ்வாறே அருளவேண்டுமென்று பணிந்தனர். அப்புத்தர்களும் வணங்கி அஞ்சலித்து நின்றனர். அவர்கட்கும் திருவருள் நோக் கஞ் செய்தருளினர். யாவரும் ஊமைநிலை நீங்கி மேலும்பணிந்து எம்பெருமானே, திருநீறு முதலிய சிவசின்னந் தரித்தற்குரிய நற்றவம் புரியாத பாவிகளாகிய அறிவிலாச் சிறியேம்செய்த அப சாரமெலாம் பொறுத்தருளி விபூதி ருத்திராக்ஷ பஞ்சாக்ஷரம்காவி உடைதந்து அடிமைகொண்டருளுகவென்று வேண்டினர். வாத வூரர் இரங்கி அவ்வாறு செய்தருளினர். சிவசாதனம் பெற்றுச் சைவராகிய அவரனைவரும் முன்னைத்துவராடைமுழுதுநெருப்பில் இட்டனர். வாதவூரடிகள் அரசர்முதலிய யாவருஞ் சூழவந்து சிற்சபேசரை வணங்கி முன்னிருந்த தபோவனத்து வந்தனர். யாவரும்உடன்வந்துபணிந்து எப்போதுமிங்கிருந்தருள்கவென்று வேண்டிச் சென்றனர். புத்தநிலைமாறிச் சைவராகிய அரசர் முத லிய யாவரும் இத்தலமே நமக்குப் புகலிடமென்று வசித்துச் சிற் சபாநாத தெரிசனத்துடன் வாதவூரர் பாதசேவை செய்து கொண்டு சிவநியம சீலராய் வாழ்ந்தனர்.

வாதவூரர், திருப்படையாட்சியும், திருப்படையெழுச்சியும், அச்சோப்பதிகமும், சிவலோக யாத்திரைப்பத்தும் பாடியருளிச் சிவயோக நிலையிலமர்ந்தருளும்போது, சிதம்பரஸ்தலம் சிவலோக மாகவே தோன்றக்கண்டு, சுத்தாத்துவித நித்தியானந்தக் கலவி யிற்றிளைத்து வீற்றிருந்தருளினர். சிற்சபேசர், அவர் மகிமையை உலகெலாமுணர்ந்தோதி உய்யும்படி பிராமணரூபியாய் ஓலைகள் வாரிச்சேர்த்த புஸ்தகமுங்கொண்டுவந்து சிவயோக நிலையிலிருக்

கின்ற வாதவூரடிகள் முன்பு பணிவுகாட்டி நின்றருளினர். அடிகள் இருமென்றபின் இருந்தனர். அவரை, அடிகள், நீரெங்கிருப்பவரென்றுகேட்ப, அடியேன் சகல வளங்களும் விளங்குகின்ற பாண்டியதேசத்திருப்பவன் என்றருளினர். உடனே அடிகள், அதிப்பிரியமுற்று உபசாரங்கூறி வந்தகாரியம் யாதென்ன, தேவரீர் மகிமைதெரிந்து ஆவல்மிகத் தெரிசித்தற்கே வந்தேன். தத்துவ புவனவாசிகளாகிய பிரமவிஷ்ணுவாதியர்க்கெட்டாத தத்துவாதீத நிலையிலிருந்தும் ஆன்மாக்களுய்யத் திருவுளங்கொண்டு, தில்லைமன்றிலே திருநடனஞ்செய்கின்ற சிற்சபேசனைப், பாண்டியன் முதலியருங்கண்டுய்யும்படி மதுரையிலே குதிரைமீது வந்தருளச் செய்தருளிய தேவரீரது அபாரமகிமையினாலேபாண்டிய தேசம் பெருவாழ்வு பெற்றது. பின்பு தேவரீர், பெருந்துறையிற் குருபாதசேவை செய்திருந்து, திருக்கழுக்குன்று பணிந்து தில்லைக்கு வந்து சிற்சபேசரை வணங்கிப் புத்தரைவென்று ஊமை நீக்கியருளியமகிமைகள்தெரிந்து சிவனடியாரெல்லாரும்பாராட்டுகின்றார்கள். தேவரீர் பாடியருளிய திருப்பாடல்கள் முழுதும் எழுதித்துன்பநீங்கி உய்தற்கே வந்தனன் என்று வேண்டினர். அடிகள், முற்காலத்திற் பற்பலதலங்களிற் பாடியருளிய திருப்பாடல்களெல்லாமும் அந்தந்தப்படியே கூறியருளினர். அம்பலத்தையர் முழுதும்எழுதிய பின்னரும் அத்திருவாசகத் திருவமுதம் தெவிட்டாமையால், திருச்சிற்றம்பலத் திருக்கோவையாரும்பாடி அருளுகவென்று வேண்டினர். அடிகள் அவ்வாறே பாடியருள, முழுதும் எழுதி அப்புத்தகத்தைக் கைக்கொண்டு அங்கிருந்தபடியே மறைந்தருளினர். உடனே வாதவூரடிகள், கண்ணீர் பெருகக்கசிந்துளமுருகக் கைகள்மேற்குவியமெய்ம்மயிர்பொடிப்ப நிலமுறவிழுந்து பலமுறைபணிந்து எம்பெருமானே, அரிபிரமாதியரும் அறிதற்கரிய அருமைத்திருவடிகள் பூமியில்நடந்தனவோ! தேவரீர் பாடியருளிய திருமறையையும் எழுதாத திருக்கரங்கள்

அறியாச் சிறியேன் ஆற்றாதுரைத்த மொழிகளையும் ஆசைமேல் மேற்காட்டி எழுதியதென்னையோ? என்று துதித்து ஆனந்தபரவசராயமர்ந்தருளினர்.

புத்தகங் கைக்கொண்டு வந்த சிற்சபேசர், சபைமுன்பு தம் மைப்பணிந்து நிற்கும் பிரமவிஷ்ணுவாதி தேவர் யாவர்க்கும், நமது மெய்யன்பன்பாடிய இத்திருப்பாடல்களைக் கேட்டுய்யுங்களென்று தாமே படித்து அப்பொருள் நயங்களெல்லாம் விளக்கி அருளி, முடிவில் மாணிக்கவாசகர் சொல்ல அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது என்று கையெழுத்தும் வைத்துச்செஞ்சோதித் திருக்கரத்தால் மைக்காப்புஞ்சாத்தி அப்புத்தகத்தைப் பஞ்சாக்ஷரத் திருப்படிமேல் வைத்தருளினர். பின்பு முறைப்படி பூசிக்கவந்த பூஜகர், முன்னில்லாதஇப்புத்தகமிங்கிருப்பது தெய்வச்செயலேயென வியந்து ஊரில் யாவர்க்குந் தெரிவிப்ப, எல்லாரும் வந்துகண்டு மகிழ்ந்து, அரிபிரமாதி தேவரும் உட்புகமுடியாத இச்சபையில் இப்புத்தகம் வந்தது சிற்சபேசர் திருவருளேயாம். இப்புத்தகம் அவர் திருவாக்கின்வந்த வேதாகமங்களோ? அந்தமிலின்பச் செந்தமிழ் நூலோ. திருக்காப்பு நீக்கித்தெரியவேண்டியதவசியமென்றார்கள். அவர்கள் அநுமதி பெற்றுத் தில்லைவாழந்தணருளொருவர், சிவனேயென விதிப்படி பூசித்து வணங்கித் திருக்காப்பு நீக்கி முதலிலுள்ள திருவகவல் நான்கும் திருச்சதகமுதலாய திருப்பாடல்கள் ஆறுநூறும் திருக்கோவையார் நாலுநூறும் ஆகிய திருவாயிரம் மூழுதும் இன்னிசையுடன் படித்து, முடிவில் மாணிக்கவாசகர் பாடியது அழகிய திருச்சிற்றம்பலமுடையார் எழுதியது என்பதும் படித்தனர். எல்லாருங் கண்ணீர் பெருகக்கசிந்துருகி இது எம்பெருமான் செயலோ. வீட்டுநெறிசேர்தற்கு இனி வேறு நூலும் வேண்டுமோ? வேத வேதாந்தங்களைக் கோதுநீக்கித் தெளித்தெடுத்த சுத்தாத்துவித சித்தாந்தசைவ நித்தியானந்த நிறைதமிழ்ச் சுருதியன்றே! இத்

திருவருட் புத்தகமென்று யாவருஞ் சிரமேற்கொண்டு கண்களிலொற்றி எண்களிலடங்கா இன்பமீதூர, இதனுண்மை பொருளை இதனைப்பாடியருளினவரும் இச்சபாநாதராலும்பாராட்டப்பெற்றவருமாகிய ஸ்ரீமந் மணிவாசகப்பெருமானிடங்கேட்டின்புறுவோமென்றுவந்து பெருமான்றிருவடிகளிற்பணிந்து அப்புத்தகத்தை அவர் திருமுன் வைத்து எம்பெருமானே நமது சிற்சபேசர் இப்புத்தகத்தை பஞ்சாக்ஷரப்படிமீது வைத்தருளினர். இதனை எல்லை இல்லாப்பெருந்தவத்தாற் காணப்பெற்று முழுதும்படித்து மகிழ்வுற்றோம். இதனுண்மைப் பொருளையும் தேவரீர் முகமாகத் தெரிந்து பெருமகிழ்வுற்று வாழுதற்கே இங்கு வந்தோமென்று மேலும் பணிந்து அஞ்சலித்து நின்றனர்.

வாதவூரடிகள் அந்தோ ஒன்றுக்கும்பற்றாத நாயினுங்கடையேன் திருவருள் வேண்டிச்செய்த இப்பாடல்களையும், எம்பெருமான் இனிது வந்தெழுதிப் பாராட்டும்படி, எத்தவஞ்செய்தேன் என்று பரிந்துபுலம்பினர். அதுகண்ட அனைவரும் எம்பெருமானே சபாநாதர் தேவரீரிடத்து வந்தருளிச்செய்த செயல்கள் தெரிய விரும்புகின்றோமென்றார்கள். அடிகள், சபேசர் ஒருபிராமணராய் வந்து பணிவுகாட்டி நின்றதும், பாண்டியநாடென்றதும், பலமுறை பாராட்டியதும், திருக்கரஞ்சிவப்ப எழுதியதும், மேலுந் திருக்கோவையார் பாடுவித்தெழுதி மறைந்ததும் கூறியருளினர். யாவருங்கேட்டு மிகமகிழ்ந்து எம்பெருமானே இத்திருவாசகப் பொருளை விரித்தருளுகவென்று வேண்டினார்கள். அடிகள் இதன் பொருள் இதனை எழுதிய சிற்சபேசர் திருமுன் விளக்கத்தக்கதென்று சென்றருளினர். பாடியருளிய மணிவாசகப்பெருமானே இத்திருவாசகப்பொருள் சொல்வது தமக்கும் அரிதென்று சிற்சபேசர் திருமுன்பு சென்றருளிய இதனால், இத்திருவாசகம், திருவருள் மயமே. இதனைத் திருவருள் தான் விளக்கவேண்டும். எவராயினுந் திருவருளாலன்றித்தமது கல்வியறிவுமட்டில் அரியத்

தக்கதன்றென்பது முதலிய அருமைப்பாடுகள் தெளிவாம். திருவாதவூரடிகள், சிற்சபை முன்புவந்தருள, யாவரும் உடன் வந்து, இத்திருமுறையினுண்மைப்பொருளை மணிவாசகப்பெருமான் திருவாயினாற்கேட்டுய்யும் பாக்கியம் பெற்றோமென்று மிக மகிழ்ந்து நிற்ப, அன்பர்களே! இத்திருமுறையின் பொருள் வாக்குமநாதீத கோசரமாய் நின்றருளும் இச்சபாநாயகரேயா மென்று யாவருங்கேட்கத் திருவாய்மலர்ந்தருளித் திருக்கரம் நீட்டிக்காட்டிக்கொண்டுசபையினுள்ளே புகுந்தருளினர். அவரை யாவருங்கண்டிலர். புகுந்தவர் பரமநடன குஞ்சிதபாதமலர் நிழலின்கண்ணே சுத்தாத்துவித நித்தியானந்த பரபோகந்துய்த்து வீற்றிருந்தருளினர்.

வாழிமணி வாசகர்தம் வாசமலர் பாதம்
வாழிமணி வாய்மலர்ந்த வண்டமிழின் வேதம்
வாழிமணி கண்டனருள் வான்சைவ போதம்
வாழிமணி நீறடியார் வாழ்த்துசிவ நாதம்.

ஸ்ரீமந் மாணிக்கவாசகர் சரித்திரம்
முற்றிற்று.

---

குறிப்பு:—இப்புராணம், பெரும்பாலும் திருவிளையாடற் புராணத்தை நோக்கியும் சுந்தரேசர் மண்சுமந்தருளிய பின் மணிவாசகர் திருப்பெருந்துறைக்கு வந்திருந்து குருநாதரருளியபடி பல தலங்கள் பணிந்து அதன்மேற் சிதம்பரஞ்சென்றதை அப்புராணம் விரித்து விளக்காமல் மண்சுமந்தபடலம் (௬௧) பாட்டில்... வாதவூர்முனிகள்...பதிபல பணிந்துபோந்து...தில்லைமூதூர்சேர்ந்தார் என்று சுருக்கிவிட்டபடியால் உள்ளபடி விளக்கும் வாதவூரர் புராணத்தை நோக்கியும் எழுதினேன்.

ராம. சொ.

சிவமயம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தொண்டர்புராணசாரவிளக்கம்.

## காப்பு.

திருநாரை யூரமர்பொல் லாதமணி காழிச்
சேய்மணிவா கீசமணி சுந்தரமா மணிசீர்
அருள்வாத வூர்மணிதொண் டத்தொகைவாழ் மணிக
ளருண்மொழித்தே வெனுமணிமெய் கண்டமணி யருணூல்
தருவாய்மை யருணந்தி மணிநிகம ஞான
சம்பந்த மணியுமா பதிமணியாஞ் சைவப்
பொருணூல்சொல் பதினெருமந் திரமணிகள் கமலப்
பொன்னடிகள் சென்னியுறப் போற்றிநினைந் துய்வாம்.

## நூல்.

மல்குபுகழ் வன்றொண்ட ரருளா லீந்த
வளமருவு திருத்தொண்டத் தொகையின் வாய்மை
நல்கும்வகை புல்கும்வகை நம்பி யாண்டார்
நம்பிதிரு வந்தாதி நவின்ற வாற்றாற்
பல்குநெறித் தொண்டர்சீர் பரவ வல்ல
பான்மையா ரெமையாளும் பரிவால் வைத்த
செல்வமிகுந் திருத்தொண்டர் புராண மேவுந்
திருந்துபய னடியேனுஞ் செப்ப லுற்றேன்.

இதன்விளக்கம்—சிவனேயாகிய தமதுசர்வவியாபகநிலையை விளக்குகின்றதும், அரிபிரமாதிமலசகிதசீவர்களது சிறுபுகழ்போலாகாமல், என்றும் ஒரேபடித்தாய் எங்கும்நிறைந்து நிலவுகின்றதுமாகிய பெரும்புகழையுடைய சுந்தரமூர்த்திநாயனர், உலகெலாமுய்யும்படி திருவருளாற்பாடியதும், பெரும்பாலும் நாயன்மார்

பெயர்மாத்திரம் அமைந்ததுமாகிய சகலவளமும்நிறைந்த திருத்தொண்டத்தொகையின்கண்ணே, வகைவிரிகள் வெளிவரவமைந்துள்ள உண்மைப்பொருளைத், திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் அருளிபபடி, நம்பியாண்டார்நம்பிகள், நாயன்மார்அவதரித்தருளிய தலம், ஜாதி, தொண்டு, பேறுமுதலியனமட்டில் விளக்கிவகைத்திருவந்தாதியாகப் பாடியருளியமுறையால், சரியாதிநால்வகையாய் அவற்றின் உட்பிரிவுபலவாய்ப் பல்கிவிரியுஞ் சித்தாந்தசைவநெறித்திருத்தொண்டராகிய அந்நாயன்மார்சிறப்பை விரித்துப்பாடிப்பரவுதற்கு இவன் ஒருவனே வல்லானெனத்திருவுளங்கொண்டு, "உலகெலாமுணர்ந்தோதற்கரியசிற்சபாநாயகர்" சகளநிஷ்கள சதாசிவமுகத்துவந்தவேதசிவாகமங்களினும் மேலானதுபெரியபுராணமே என்று "உலகெலாமுணர்ந்தோதி நின்றுய்யும்படி" சகள நிஷ்களாதீத சிதாகாசவெளியிலே விளக்கியருளிய "உலகெலாம்" என்னுந் திவ்விய பஞ்சாக்ஷரமுதலைக்கொண்டு, தொண்டர்சீர்பரவியகாரணத்தால் தொண்டர்சீர்பரவுவார் என்னுந் திருநாமம்பெற்ற சேக்கிழார்பெருமான் எம்மை அருள்வழிப்புகுத்தி ஆட்கொண்டருளுந் தயையினால் விரித்துப்பாடி ஸ்ரீமங்கடராஜராஜவளவனால் திருமுன்வைத்தருளிய அருட்செல்வ நிறைந்த திருத்தொண்டர்புராணத்திலுள்ள யாவரும்விரும்பத்தக்கதிருத்தமாகியசாரத்தை அடியேனும்பாடத்தொடங்கினேன் என்பதாம்.

இத்திருவிருத்தத்தில் அடியேனும்என்றஉம்மையால், திருத்தொண்டர்மகிமையைத் தியாகேசர் திருவருளால் சுந்தரமூர்த்தி நாயனார் தொகுத்துப்பாடினர். பொல்லாப்பிள்ளையார் திருவருளால் நம்பியாண்டார்நம்பிகள் வகுத்துப்பாடினர். சிற்சபேசர் திருவருளால் சேக்கிழார்பெருமான் விரித்துப்பாடினர். இத்திருத்தொண்டர்மகிமைபாடிஉய்யக்கருதிய அடியேன், முன்னிருவர் தொகைவகைகளைமேற்கொண்டு அவ்விருசெயலினும்மேலாய் விரித்தருளிய சிவானுபூதிப் பெருஞ்செல்வராகிய தொண்டர்சீர்பரவுவாரைப்பாடினால் அப்பயன்முற்றும் பெற்றுய்யலாமெனத் துணிந்தே, அவர்சரித்திரத்தைத் திருத்தொண்டர் புராணவரலாலாறெனச் சுருக்கிப்பாடித் துதித்தமைந்தேன். ஆயினும் முற்கொண்ட கருத்து அம்மட்டிலமையாது மேலெழுதலால், திருத்

தொண்டர் புராணசாரமென்று இந்நூல் சுருக்கிப்பாடத்தொடங் கினென்னென்பது இந்நூலாசிரியர் திருவுளக்கருத்தெனக்கொள்க. இது கர்ணபரம்பரையாலுந் தெரிந்தது.

திருக்கைலாசத்திலே உமாசகிதராய் வீற்றிருந்தருளுகின்ற சிவபிரான், தமக்கு நேரிலுள்ள சுத்தவித்தியாமயநிலைக்கண்ணாடி யிலுள்ள தமது சுந்தரசாயாரூபத்தை, உமாதேவியார் விருப்பம் நோக்கிச் சுந்தராவருக என்று அழைத்தருள, அக்கண்ணாடியினி ன்று சுத்தவித்தியாமயசிவரூபமே தமதுரூபமாகமூன்றுகண்ணும் நான்குதோளும் பிறைமுடியும் முதலியனவிளங்க, மற்றெல்லா வுருத்திரர்களினுஞ்சிரேஷ்டராய் ஓர்உருத்திரர் வெளிவந்தருளித் திருமாலைத் திருத்தொண்டுபுரிதல் திருநீற்றுக்கோயில் (விபூதி பாத்திரம்) ஏந்திக்கொண்டு பக்கத்தில் நிற்றலாகிய திருவணுக்கத் திருத்தொண்டு செய்துவருவாராயினர். சிவபிரான் சுந்தரா என் றழைத்தருளிய அப்பெயரே அவர்க்குச் சிறப்புப்பெயராயது.

பிரமசிருஷ்டியில்வரும் கர்மசரீரிகளாகிய சீவர்கள், சைவ நெறிநின்றுய்தற்குரிய தமிழ்வேததேவாரம், இச்சுந்தரர்முகமாக வெளிவருதற்காகவே, சிவபிரான், இவரைச் சுத்தவித்தையாகிய முதற்காரணத்தினின்றும் தமதுசிருஷ்டி (சிவசிருஷ்டியில்) ஞான சரீரியாய் வெளிவரச்செய்தருளினர். இவ்வுண்மை இவர்பாடி யருளிய "தான் எ(ன்)னை முன்படைத்தான் அது அறிந்து தன் பொன்னடிக்கு நான் எ(ன்)ன பாடல் (பாடினேன்) அந்தோ" என்ற திருவாக்குத்தெளிய விளக்குகின்றது. பின்பு உமாதேவி யார் அக்கண்ணாடியில் * தமது சாயாரூபத்தை அழைத்தருள, உருத்திரசத்திகளிருவர் ஞானசரீரிகளாய் வெளிவந்தருளித்திரு மாலைத்திருத்தொண்டு புரிந்துவருவாராயினர். அவ்விருவர் சிறப் புப்பெயர்கள் கமலினி அநிந்திதை என்பனவாம்.

இம்மூவரும் சிவசிருஷ்டியில் ஞானசரீரிகளாய் வந்தவர்க ளாதலால், சிவனும் சிவசத்தியும்போலக் காமாதி விகாரகுணங் கள் எக்காலத்தும் எவ்விதத்தும் தம்மை அணுகப்பெறாமல் நிர்

விகாரிகளாய்ச் சர்வஞ்ஞராதி அஷ்டமங்களதிவ்வியகுணசம்பந்நர்
களாயுள்ளவர்களே. இதனால் இவர்கள் நந்தவனம்புகுந்து மலர்
கொய்து திருமாலைபுனைந்துசாத்தித் திருமுனின்று தெரிசித்து
வரும் நியமத்திருத்தொண்டு பல்லூழிகாலம் இடையீடின்றி
நிகழ்ந்துவருகின்றது.

விஷ்ணுமூர்த்தி, கடல் கடையத்தொடங்கும்போது விக்கி
னேசுரபூசனை மறந்தமையால், அமுதங்கிட்டாதொழிந்ததுமன்றி
விஷமெழுந்து மேனியுங் கருகும்படிவெதுப்ப, வருந்திக் கயிலை
புகுந்து ஓலமிட்டலற, சிவபிரான் சுந்தரரை ஏவியருள, அவர்
இரக்கமிகுதியால் விரைந்துசென்று ஒரு திருக்கரத்தை நீட்டி
யருள, உடனே துரத்திவந்த விஷம் நாவற்கனியளவாய் அக்கரத்
தின்கண்வந்தது. அதனைச்சிவபிரான் திருக்கரத்திற்கொடுத்தருள,
அவர் வாங்கி என்றுமுள்ளதமது முழுமுதற்றலைமை அறிவிலார்க்
கும் விளங்கும்படி திருக்கண்டத்தில் வைத்தருளி, விஷ்ணுவாதி
யாரை நோக்கி விக்கினேசுரரைப் பூசித்துக்கடையுங்கள் அமுதங்
கிடைக்குமென்றனுப்பிவிட்டுச், சுந்தரரைநோக்கி நீ யாவரையுந்
துரத்திய ஆலாலத்தைக்கிரகித்துவந்தமையால் உன்பெயர் ஆலால
சுந்தரனென்றருளினர்.

இச்சுந்தரர் முகமாகத் தமிழ்வேதம்வெளிவரக்கருதிய சிவபி
ரான், இவர்தமிழ்நாட்டுக்குவந்து பாடத்திருவுளங்கொண்டனர்.
கயிலையிற் பாடச்செய்யலாமேயெனில், சுவர்க்கபோக முதலிய
அற்பசுகமேதந்து அனுபவமுடிவில் மீட்டும் பூமியில் தள்ளிவிடும்
அற்பபுண்ணியமாகிய யாகாதிதவங்கள்போல, இடையில் அழிந்
தொழியாமல், மீளவிடாது தொடர்ந்துநின்று மேல்மேற் செலுத்
தித்திருவடி வாழ்வையேதரும் சரியை கிரியாயோக சிவபுண்ணி
யங்களாகிய அருந்தவம்புரிந்து வந்தவர்களே அக்கயிலையிலுள்ள
வர்களாதலாலும், அத்தவம் புரிவார் கர்ம பூமியிலுள்ளவர்களாத
லாலும், அத்தவம்இது, செய்யுமுறைஇது, பலன்இது, பலன்
தருகின்ற முதல்வன் அரிபிரமாதியர்போல அழிந்தொழியாமல்
என்றுமுள்ள பரமசிவனேஎன்பனவாதி உண்மைதெளிந்தாலன்றி
ஊக்கஞ் செல்லாதாதலால், அவ்வுண்மை இதுவோ, அதுவோ

என்ன மயங்கக்கூறும் ஆரியவேதம் போலாகாமல் விளங்கக்கூறுவது அவ்வேதசாரமாகிய தமிழ்வேதமேயாதலாலும், அதனை அத்தமிழ் வழங்கும் தேசத்துவந்து பாடினாற்றான், சிவாலயாதிகளும் மேலுஞ் சாசனபெலச்சிறப்புற்று அவர்கள் அவ்வழிபாடு செய்துய்தற்கு ஏதுவாமாதலாலும், தமிழ் நாட்டுக்கு வந்துபாடும்படி திருவுளங்கொண்டதே பொருத்தமென்க.

இப்பொருத்தநோக்கிச் சுந்தரரைப் பூமிக்கனுப்பத்திருவுளங்கொண்ட சிவபிரான், காரணமின்றி அனுப்பினால் பூமியிலுள்ளார் அருந்தவம்புரிந்து கயிலாயம் அடைந்தாலுமென்ன? சிவரூபராய் நீங்காதிருந்த ஆலாலசுந்தரரையும் ஒருகாரணமுமின்றிச் சிவபிரான் பூமிக்கு அனுப்பிவிட்டாராதலால், அக்கயிலாசபதவி என்ன நிலைவரமென்று அவரவர் செய்யுந்தவங்களிற் பராமுகராவராதலாலும், ஏதேனும் ஒரு குற்றங்காரணமாக அனுப்பினால் திருவணுக்கராயிருந்த சுந்தரரும் ஒரு சிறுகுற்றத்தால் நீக்கப்பட்டாரென்று பயந்து குற்றஞ்செய்யாமல் நன்னெறிபற்றி நின்றுய்வாராதலாலும், விஷ்ணுபிரமாதியர்க்குந்தனித்தனி உபசாரத்தலைமை கூறும் ஆரியவேதத்தை, அத்தலைமை முதலிய கோதுநீக்கி வடித்தெடுத்துச்சீரிய தமிழ்வேதமாகப்பாடுவது சிவனைஒத்த மலமுத்தராலன்றி வேறெவராலுமுடியாதாதலாலும், தம்மைவழிபடுவார்க்குங்குற்றமுறாதருள்கின்ற ஞானமய மலமுத்த சுத்த சரீரியாகிய அச்சுந்தரர், நந்தவனத்திலே அவ்விரு பெண்களைப் பார்க்கும்படியும், அவர்கள் இவரைப்பார்க்கும்படியும் சிவபிரானே செலுத்த, அதுதெரிந்த சுந்தரர் பல்லூழிகாலம் சிவநெறியில் மாறாது உறைத்துநின்ற தமது மனசைத், திருவருளாணைகாட்டித் திருப்பிவற்புறுத்தி அவ்விருபெண்களிடத்திற் செலுத்தினர். அவ்விருவரும் அவ்வாறே அவரைநினைத்தனர். இது ஒருநிமிஷநேரமுமாகாது. உடனே மூவரும் அவரவர் பணியிற்சென்றனர். சிவபிரான் சுந்தரரை மாதர்மேல் மனம் வைத்தனையாதலால் பூமிக்குச்சென்று அவ்விருவரையுங்கலந்தணைவாயென்று அவ்விருவருடன் ஏவியருளினர். இதனால் ஆணும் பெண்ணுங்கூடுங்கலவி அக்கயிலையில் எக்காலத்துமில்லையென்பதும், கலவியில்லாதவிடத்தில் நினைவுமில்லையென்பதும், சுந்தரர் சிவாஞ்ஞைநோக்கியே நினைத்தாரென்

பதும் தெளிவாம். காமதகனஸ்தானமாகிய கயிலையில் எக்காலத்தும் பிறரெவர்க்குமே கலவி நினைவுகளில்லையென்றால் இம்மூவர் நிலைமை மேலுங்கூறுவானேன். இம்மட்டிலேயே உலகமுய்தற்காகவே சிவபிரான் ஏவியருள அம்மூவரும் பூமியில் மானுடரூபிகளாய் வந்தருளினரென்பது தெளிவாமென்க.

இவ்வுண்மைகள் பெரியபுராணத் திருமலைச்சருக்கமுதலாகப் பற்பல இடங்களிலுள்ளனவே. அவைகளை உற்றுநோக்காத சிலர் விபரீதவுணர்வுகொண்டு, அம்மூவரும் கர்மசரீரிகளாகிய சீவர்போற் காமநோக்கமுள்ளாரென்பனவாதிய பழுதுகூறிப் பிராயச்சித்தமில்லாத சிவத்துரோகிகளாய் மீளாநரகுக்கு ஆளாகாமல் உண்மையுணர்ந்துய்யும்படி, சுந்தரர் சொரூபநிலை சிறிது விளக்கினும். இவையெல்லாம் பெரியபுராண முதலிய உண்மைநூற் பிரமாணங்களே என்பதை யாவரும் ஒத்துக்கொள்ளும்படி நமது சிவசுந்தரசாயாரூப சிவமகிமாசங்கிரகத்தில் அந்தந்தப்பிரமாணங்களை எடுத்துக்காட்டி விளக்கியிருத்தலைச் செவ்வேநோக்கி உண்மை தெளிக.

இனிச்சுந்தரருடைய புராணசாரம் பாடத்தொடங்கிய உமாபதிசிவாசாரியர், மேற்காட்டிய பூர்வ சரித்திரமுழுதும் ஒரு சுட்டுச்சொல்லில் அடங்கவைத்து, இவர் பூமிக்குவந்தருளியதுமுதல் மீண்டு கயிலைக்கு எழுந்தருளியதுவரையுள்ள சரித்திரத்தை இரண்டு திருவிருத்தங்களால் விளக்கியருளினார். அச்சுட்டுச்சொல் யாதெனில்? முதலாவது திருவிருத்தமுதலில் "தண்கயிலையது நீங்கி" என்றதிலுள்ள " அது " என்பதேயாம். இதனைப்பகுதிப்பொருள் விகுதி என்று ஓதுக்காமல் மேற்கூறியவாறு கொள்ளுதலே அச்சரித்திரமுறையாகும். கொள்ளாவிட்டால், சுந்தரர் புராணசாரமுழுதுங் கூறப்புகுந்த உமாபதிசிவாசாரியர் அவருடைய பூர்வ சரித்திரங்கூறும் திருமலைச்சருக்க சாரங்கூறுதொழிந்தாரென்றகுறை நேரும். அது நேராமல் அச்சரித்திரமும் அச்சுட்டிலமையவைத்தமை விளங்கவே அத்திருவிருத்தங்களிலுள்ள "செப்பினரே" "மேவினரே" என்ற இருபயனிலைகளுக்கும் சுந்தரர் என்னும் எழுவாயை அங்கும்வைத்து விளக்காமல், பூர்வ சரித்திரத்துவந்த அப்பெயரையே பின்னுங்கொள்ளும்படி தொட

வைத்தருளினார். அது நோக்கியும் ஆசிரியர்கருத்து அதுவென் பதே துணிபாம். ஆதலால் "தண்கயிலையது" என்ற தொடர் மொழியை தண் அது கயிலை எனமாற்றித் தண்ணிய அக்கயிலை எனப்பொருள்கொண்டு அதனைப் பண்டறிசுட்டாக்கி அப்பூர்வ சரித்திரமுழுதும் அதன்கண் அமைந்துள்ளதாகவே விரித்துக் கொள்வர் மேலையோரென்க.

## சுந்தரமூர்த்திநாயனார் புராணசாரம்.

தண்கயிலை யதுநீங்கி நாவ லூர்வாழ்
சைவனார் சடையனார் தனய னாய்
மண்புகழ வருட்டுறையா னோலை காட்டி
மணம்விலக்க வன்றொண்டா யதிகை சேர்ந்து
நண்பினுட னருள்புரிய வாரூர் மேவி
நலங்கிளரும் பரவைதோ ணயந்து வைகித்
திண்குலவும் விறன்மிண்டர் திறல்கண் டேத்துந்
திருத்தொண்டத் தொகையருளாற் செப்பி னாரே.

செப்பலருங் குண்டையூர் நெல்ல ழைத்துத்
திருப்புகலூர்ச் செங்கல்செழும் பொன்னாச் செய்து
தப்பின்முது குன்றர்தரும் பொருளாற் றிட்டுத்
தடத்தெடுத்துச் சங்கிலிதோள் சார்ந்து நாதன்
ஒப்பிறனித் தூதுவந்தா றாடு கீறி
யுறுமுதலை சிறுமதலை யுமிழ நல்கி
மெய்ப்பெரிய களிறேறி யருளாற் சேர
வேந்தருடன் வடகயிலை மேவி னாரே.

இ-ம். மேற்கூறியவாறு சிவாஞ்ஞையால் சீவர்களுய்யும்படி திருவவதரிக்கத் திருவுளங்கொண்டருளிய ஆலாலசுந்தரர், எக் காலத்தும் வெம்மையின்றி யாவருக்குந் தண்மையே செய்துய்விக் கின்ற திருக்கயிலையினீங்கித், தமிழ்வழங்கும் பூமியில் அருந்தவம் புரிந்துள்ள திருமுனைப்பாடிநாட்டுத் திருநாவலூரிலே, பிரமகுலப் பிராமணரின் மேல் நான்குபடி உயர்ந்த சதாசிவகுலப் பிராமணர் களாகிய ஆதிசைவப்பிராமணர்களில், அரும்பெரும் தவம்புரிந்த

சடையனார் இசைஞானியாராகிய தம்பதிகள் மத்தியில் மூன்று வயசுள்ள தேசோமய சுபாலரூபராய்த் தோன்றியருளினர். இது திருநாவலூர்ப்புராணத்தும் விளக்கமே; தம்பதிகளிருவரும் இக்குழந்தை சிவபிரான் தந்தருளிய திருவருட்செல்வமே என்று பேணி வளர்த்து வந்தனர். இப்பாலரிடத்துள்ள சிவசம்பந்த விளக்கம் நோக்கி இவரை, யாகாதிசாமானிய தவத்தினரால் கிட்டு தற்கரிய சிவனே என்னுமுண்மைகண்டு, சரியை கிரியாதிவிசேட தவத்தினர் யாவரும்போற்றி வழிபாடுசெய்து வந்தனர். இப் பாலர்க்குச் சிவபிரானே திருவருளினால் ஆரூரர் என்று நாமகரண முஞ்செய்தருளி, இனிமேலும் இவருக்கு ஆவனவெல்லாம் நாமே செய்வோம். இவர் செயலெல்லாம் நமது செயலே என்னும் உண் மையையும், இம்முதற்செயல் தாமே செய்தமுறையில் உய்த் துணர வைத்தருளினர். இதனை நாமகரணமும் என்ற எச்ச உம் மையும் விளக்கும். இந்நாமம், சிவநாமமேயாம். இதனை இச்சுந் தரரும் "அம்மான்றன்றிருப்பேர் கொண்டவாரூரன்" என்று திருவாரூர்த் தேவாரத்தில் விளக்கியருளினர். இவரது சிவவிளக் கப்பொலிவை உள்ளபடி காணப்பெற்றஅந்நாட்டு அரசராகிய நர சிங்கமுனையரையர், இவரை அபிமானபுத்திரராகக்கொண்டு தமது வெகுமான ராஜவரிசையில் வைத்துப்பாராட்டிவந்தனர். வரினும் இவர்தமது குலமுறையேமேற்கொண்டு வளர்ந்து வந்து மணம் புரிதற்குரிய காளைப்பருவமுற்றனர். அதுபதினாறுவயசாமென்க. சடையனார்; புத்தூர்ச் சடங்கவி சிவாசாரியர் புத்திரியாரைமணம் பேசி நிச்சயித்துச் சுபதினத்தில் அவ்வூர்க்குச் செல்லுதற்குரிய பயணச் செயல்கள்புரிய, ஆரூரர், திருமணக் கோலங்கொண்டு, அதுவே அருள்மணக்கோலமாகி, அப்புத்திரியார் முதலியர்க்கு அனுக்கிரகிக்கச் செல்கின்ற உண்மை நிலையை விளக்கக், குதிரை மீது எழுந்தருளி ராஜவரிசையும் பொலியச் சகலவைபவங்களும் மலியத் தாய் தந்தையர் சுற்ற முதலியர்சூழ அவ்வூரிற்சென்று சடங்குகளெல்லாம் முறையேநிகழக் கல்யாணமண்டபத்தில்மண மகள் பக்கத்துவந்திருப்ப வீற்றிருந்தருளினர்.

அப்போது சீவர்க்கு வினைப்போகங்களை நியதிக்குமாறுக ஊட்டுவதில்லை என்பதை விளக்கவே, முன் கயிலையில் நியமித்த

நியதிக்குவேறாகிய இவ்வொருமணத்தைவிலக்கி, அந் நியதிப்படி இருமணங்கள் பின் செய்விக்கத் திருவுளங்கொண்ட சிவபிரான் பிராமணரூபியாய் அங்குவந்து வல்வழக்கிட்டுத் திருவெண்ணெய் நல்லூர் சென்று அடிமைகொண்டருளி, முன்னிகழ்ந்த பித்தனென்ற மகா மந்திரவன்மை விளக்கவோ? இச்சுந்தரர் சிவனே என்னும் உண்மைகாட்ட முன்பு ஆரூரர் என்று நாமகரணஞ் செய்த தாமே, ஆண்டானடிமைத்திறங்காட்டி உலகை உய்விக்க ஏவியருளிய முறைமைக்கிணங்கவோ? இன்னும் என்னென்ன நயங்கள் கருதியோ? இப்பொழுது வன்றொண்ட நாமஞ்சூட்டி அழைத்து, நம்மைத் தமிழ்மொழிகளாற் பாடுவாயென்று கூறி நெடுங்காலவிருப்பத்தை வெளியிட்டருளினர். இதுவும் இவரைக் கண்ணாடியினின்று வெளிவரச்செய்தது, உலகெலாமுய்விக்கும் தேவாரம் பாடுதற்கே என்ற உண்மையை விளக்கும். அப்போது வன்றொண்டர், தேவரீர் மகிமை அளவுகடந்த பெருங்கடலாகும் நாயேன் எதனையறிந்து என் சொல்லிப்பாடுவேனென்று வேண்டச், சிவபிரான் நீ முதலில் நம்மைப் பித்தனென்றனை. அது நமது நாமங்களுட் சிறந்த நாமமே. சாசனத்திலும் அப்பெயரே யுள்ளது. அவ்வுண்மைதெரிந்தேகூறினை. நம்மிருவர்கருத்துக்கும் ஒத்தது அதுவே, ஆதலால் பித்தன் என்றே முதலில் வைத்து பாடுவாயென்றருள, அப்படியே "பித்தா" என்று தொடங்கி அத்திவ்விய நாமத்தினுண்மை முதலிய நன்மைகளை விளக்குதற்குரிய மெய்ஞ்ஞானந் தந்தருளுமுறை தெரிவித்தற்கே அஞ்ஞான இருள்நீக்கி ஞான ஒளியைத்தருகின்ற "பிறைசூடி." என்பது முதலிய அருள்மொழிகளை அதன்மேற்றொடுத்துப்பாடியருளினர். கேட்டுமகிழ்ந்த சிவபிரான், உலகெலாமுய்யும்படி இன்னும்பற்பலவிதமாக நமது மகிமைகளைத்தலமெங்குஞ்சென்று பாடுக என்றருளினர். இதுவும் தம்மைப்பாடுதற்கே இவரை அழைத்துப் பூமிக்கனுப்பிய உண்மையை விளக்கும். சடங்கவி சிவாசாரிய புத்திரியார், சுந்தரமூர்த்திகளது திருவருள் நோக்கச் சிவதீக்ஷாவிசேடத்தால், இவரையே அநவரதம்தியானித்திருந்து சிவபதநீழலிற் கலந்தருளினர். இதுவரைநிகழ்ந்த சரித்திரமுறையில் உள்ளீடான அரும்பொருள்கள்பற்பலஉள்ளன. இப்படியே

மேலும் உள்ளன. அவையெல்லாம், திருவருளை, புராணமென்ற பெயர்பெற்றுவிளங்குகின்ற பெரியபுராணமூலமாகத் திருவருளை முன்னிட்டு அதனுளடங்கிநின்று தெரிவனவன்றிக் கல்வித்திறத்தால் முனைந்து நின்றறிதற்கெளியனவல்லவாதலால், அறிவிலாச் சிறியேனிம்மட்டிலமைந்தேன். திருவருளிலடங்கி நின்றுணரும் உத்தமபக்த சிலர் உள்ளபடிகண்டு எமக்குமுணர்த்தி உய்யக் கொண்டருளும்படி பணிந்து நிற்கின்றேன்.

இவ்வாறு சிவாஞ்ஞைபெற்ற சுந்தரர், திருநாவலூர்சென்று பாடித் திருத்துறையூர்க்குவந்து, உலகர் சமுசாரபந்தநீங்கினும் சரியைகிரியாதிவிசேடதவநெறியிற்புகுதற்கும், திருவருளைவேண்டியே பெற்றுய்கவென்று விளக்குவாராய்த், தவநெறிதந்தருளுக வென்றுமுன்மணம்விலக்கிய சிவபிரானைப்பாடிவேண்டிக்கொண்டு பெண்ணைநதி கடந்து திருவதிகைசமீபிக்கவந்து, திருநாவுக்கரசு நாயனர் கைத்தொண்டுஞ்செய்திருந்த இத்திருப்பதியை மிதித்தற்கு அஞ்சுகின்றேனென்று, புறத்தே சித்தவடமடத்திலிருந்து, வீரட்டானேசுரர்வந்து திருவடிசூட்டப்பெற்றுப் பதிகம்பாடிச் சென்று, சிதம்பரத்தின் எல்லையைப் பணிந்து போந்து கோபுரத்தை வணங்கிக் கோயிலையடைந்து திருநடநந் தரிசித்து ஆனந்தவெள்ளத்தழுந்திப் பதிகம்பாடிநின்று, அன்பனே! நீ திருவாரூருக்குவருக என்றதிருவ நண்மொழி சிரமேற்கொண்டுசென்று, திருஞானசம்பந்தர் திருவவதார ஸ்தலமன்றோவென்று, சீகாழியைமிதித்தற்கஞ்சிப் புறத்தே வணங்கி வலமாகச்செல்லுங்கால், தோணியப்பர் உமாசமேதராய்க்காட்சிகொடுத்தருள, வணங்கிப் பாடி மேற்செல்லும்போது, தியாகேசர் இச்சுந்தரர் சிவசொரூபரென்பதை அங்கும் விளக்குவாராய்த், திருவாரூரிலுள்ளவர்க்கு, நமது ஆரூரனைஆராதகாதலினுல்நாமேஅழைத்தோம்; ஆராதகாதலுடன் வருகின்றுன் என்றுகூறி, அவன் நாமேவவியச்சென்று அழைக்கவேண்டிய அத்தனை பெருந்தகுதியுடையவனே என்பதை நம்ஆரூரன்என்றஉரிமைவாக்காலுணரவைத்து, அழைத்து வருகவென்றருளினர். உடனேயாவரும்நகரெங்கும் அலங்கரித்து எதிர்சென்றுவணங்கி அழைக்க, வருகின்றசுந்தரர், திருவாரூர்ப் பிறந்தாருமகிமைவிளக்குவாராய் அவர்களைநோக்கித் தியாகேசர் "எம்மையும் ஆள்வரோகேளீர்" என்றுபாடிக்கொண்டு தேவாசிரி

யன்முன்பணிந்துபுகுந்து வன்மீகநாதரைவணங்கிநிற்ப, வன்மீகநாதர் ஆரூரனே! நம்மை உனக்குத்தோழமையாகத் தந்துவிட்டோம்; நீமுன்கொண்டமணக்கோலமேஎப்போதுங்கொண்டுஇப்பூமியெங்கும் விளையாடுவாயென்றுதிருவாய்மலர்ந்தருளினர். உனக்கு நான்தோழனென்றமையாது தந்துவிட்டோமென்ற உறுதிமொழி நீஎன்னைக்கொண்டுஉனக்குவேண்டியஎச்செயலும்செய்துகொள்ளலாமென்னும் குறிப்பையுணர்த்துதல் காண்க. அன்றுமுதல் அவர்தம்பிரான்றோழரென்று யாவராலுந் துதிக்கப்பெற்றனர். அரிபிரமேந்திராதிதேவர்முதலிய சீவர்யாவரும் தம்பிரானடிமைகளே. சுந்தரர்சிவசொரூபரேயாதலால் தம்பிரான்றோழரென்றருளப்பெற்றனர். குபேரனும்தோழனன்றோஎனின்? அதுஅவன் அதற்கென்றேதவஞ்செய்து வேண்டிப்பெற்றஉபசாரமே. இது இவர் வேண்டுதலுமின்றிச் சிவனேவலியஉனக்குநான் தோழனென்றுகூறப்பெற்றஉண்மையேயாம். அவன்சிவனுக்குத் தோழன் என்பதிலும் சுந்தரர்க்குச்சிவன்தோழன்என்பதிலுமுள்ளதாரதரம் நோக்கியும்உண்மைதெளிக. (சுத்தக்கிரயமாகத்) தந்துவிட்டோம் என்றமட்டிலமையாது விளையாடுவாய் என்றும்கூறிய அருள்வாக்கும் அவ்வுண்மைமுதலிய அரும்பொருள்களைவிளக்கும். பின்பு சுந்தரர் தினந்தோறும் தெரிசித்துக்கொண்டிருந்தனர்.

இதற்குமுன் கயிலையினின்று சிவாஞ்ஞையால்வந்த கமலினியார், திருவாரூரிலே *ருத்திரகணிகையர்குலத்திற் புத்திரியாராய் அவதரித்துச், சிவனருள்பெற்ற பெரியார்களால் திருவாதிரைநாளில் பரவையாரென்றுநாமகரணஞ் செய்யப்பெற்றுவளர்ந்து மங்கைப்பருவமுற்று, வன்மீகநாதநியமதெரிசனஞ்செய்துவருவாராயினர். சிவபிரானேஅடியார்க்குத் தெரிவித்து இவ்விருவருக்குந் திருக்கல்யாணஞ் செய்வித்தருளினர். தாய்தந்தையர் முதலிய தொடர்பின்றிச், சிவனும்சிவனடியார்களுமே நாமகரணந் திருக்கல்யாணஞ்செய்வித்தஇதனாலும், இவ்விருவரும், அப்பிதாமாதாக்கள் செய்ததவவிசேடத்தால்மக்களென்று கூறும்படிவந்ததுஉபசாரமே, உண்மைசிவரூபசத்திரூபர்களே என்பது தெளிவாம்.

---

* இக்குலத்தை பதியிலார்குலமென்ப. இதன் பொருள் பரமபதியாகிய சிவபிரானுக்கே (இல்லார்) பத்தினிகளென்பதாம்.

அரிபிரமாதிதேவர்க்கும் சிவனைமுன்வணங்கிய தவவிசேடத்தாற்றான் சிவனடியார்களைவணங்கக்கிடைக்குமென்று திருநாவுக்கரசு நாயனார் 'தொழப்படுந்தேவர்தொழப்படுவானைத் தொழுதபின்னர்த்,தொழப்படுந்தேவர்தம்மாற்றொழுவிக்குந்தந்தொண்டரையே' என்று தெரிவித்தமுறைமையை, இச்சுந்தரர் தாமே செய்துகாட்டுவாராய், ஒருதினந் தேவாசிரயமண்டபத்திருந்த சிவனடியாரை நோக்கிச், சிவபிரான் இவர்க்குஎன்னை அடியனாக்குவது எந்நாளென்கின்ற அவாவினராய்க் கோயிலுட்புகும்போது, இவர் திருவுளக்கருத்தைவெளியிடக்கருதியதிருவருளால், விறன்மிண்டநாயனார் புறம்புகூறி முனிந்துநிற்பச் சிவபிரான் எதிர்வந்து அடியாரைப்பாடுக என்றருளினர். சுந்தரர் அடியார்மகிமை அளவுகடந்தது; என்னென்றுபாடுவேன் பாடுஞ்சத்திதந்தருளுகஎன்றுவணங்கினர். இதனால்அடியாரைவணங்கும்பெரும்பேற்றை முன்புசிவவணக்கப்பெருந்தவமே தருமென்பதும், முன் சிவனைப்பாடுதற்கும் இவ்வாறுவேண்டாத சுந்தரர், இப்பொழுது சத்திவேண்டிக்கொண்டதனால் சிவமகிமையிலும் சிவனடியார்மகிமைவிசேடமும், சிவஸ்துதியாகிய தேவாரங்களெல்லாவற்றிலும் சிவனடியார் துதியாகிய திருத்தொண்டத்தொகை விசேடமும் செவ்வேதெளியலாம். உடனே சிவபிரான் அடியார்மகிமைகளைவிரித்துக்கூறி, உலகெலாம் அல்லல் தீர்ந்துய்தற்காகவே "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்றருளினர். அதனைமுதலாகக்கொண்டுசுந்தரர் தேவாசிரய மண்டபத்துவந்து, ஒவ்வொருவருக்கும் அடியேன் அடியேன் என்று திருத்தொண்டத்தொகைபாடி வணங்க, விறன்மிண்டர்முதலிய அடியார்யாவரும் மகிழ்ந்து சுந்தரரைஎதிர்வணங்கித்திருக்கூட்டத்து நடுவில் அமர்ந்தருளும்படி வேண்டிக்கொள்ள, நடுநாயகராய் வீற்றிருந்தருளினர். இத்திருத்தொண்டத்தொகைஉலகெலாமுய்தற்கு முக்கியகாரணமே. இதற்காகவே சுந்தரர் பூமிக்குவந்தனர் அது சிவாஞ்ஞையாதலால் ஒருகாலத்தும் போகாதமனசை மாதரிடத்துவலிந்துபோகச்செய்தனரென்பதுமுதலியஉண்மைகளைப் பெரியபுராணத்திருமலைச்சருக்கத்தில் "மாதவஞ்செய்த தென்றிசைவாழ்ந்திடத்; தீதிலாத்திருத்தொண்டத்தொகைதரப், போதுவாரவர்மேன்மனம்போக்கிடக், காதன்

மாதருங்காட்சியிற்கண்ணினார்" என்ற திருவிருத்தம் விளக்கும். இதனில் தீதிலாத்திருத்தொண்டத்தொகை என்றதற்குத் தன்னை மெய்யன்புடன் நியமபாராயணஞ்செய்வார்க்குத் தீதுகளை இல்லையாக்குந் திருத்தொண்டத்தொகை என்றும், காதன்மாதர் என்றதற்குத் தம்மைவழிபடுவார்க்கும் அல்லலக்காதுகின்ற சத்திமார்களென்றும் உண்மைப்பொருள்கொள்வாருத்தமரென்க. தன்னைப் பாடச்சொல்லும்போது தன்மகிமை ஒன்றுங்கூறாமல் "பித்தன்" என்றமட்டிற்கூறிய சிவபிரான், இப்போது அடியார்மகிமை விரித்துவிளக்கி ஒருவரிமுழுதும் கூறினமையால் தேவாரங்கள்எல்லாவற்றினும் திருத்தொண்டத்தொகை சிறந்ததென்பதும் சிவபிரானுக்கு இதில் அதிவிருப்பமுண்டென்பதுந் தெளிவாம்.

சுந்தரர்மகிமை உள்ளபடிதெரிந்து குலதெய்வமாகவழிபட்டு நெல்லுமுதலியன அனுப்பிவருங்குண்டையூர்க்கிழவர், தானியாதி விளைவுகுறைதலால் தடைநேர்ந்துவருந்துதல்நோக்கிச், சிவபிரான் மலை அளவான நெற்கொடுத்தருள, அதனைச் சுந்தரருக்குத்தெரிவிப்ப அவர் அங்குவந்து 'நீளநினைந்தடியேன்" என்றுபாடியருளச், சிவகணங்கள் நெல்மலைமுழுதுந்திருவாரூரிற்பரவையார் திருமாளிகையிலும் வீதிகளிலும்நிறைக்க, வீதிகளெங்குமுள்ளநெல்லை அந்நகரவாசிகள் எடுத்துக்கொள்ளும்படி பரவையார்பறைசாற்றுவித்தருளினர். சுந்தரசிவமகிமையறியாதசிலர்மானுடரென்றுநினைத்து நரகுறாமல், இவர்கயிலாயத்துள்ள அபரசிவனே என்பதைநேரே கண்டுவணங்கிஉய்யும்பொருட்டே அவர்க்குஅக்கயிலாயத்துள்ள சிவகணங்களேநெல்லுச்சுமக்கும்வேலையாட்களாய்வந்து உண்மை விளக்கின.

இவ்வுண்மையுணர்ந்த கோட்புலிநாயனார், சுந்தரரைவணங்கிச் சர்வாலங்காரவாத்தியகோஷாதிவைபவங்கள்பொலிய நாட்டியத்தான்குடிக்கு அழைத்துவந்து தமது திருமாளிகையில் திவ்வியாசனத்தில் வீற்றிருந்தருளச்செய்து பூசித்துத்தமது புத்திரிகளுடன்வணங்கி இவர்களை ஏற்றருளுகஎன்று பிரார்த்திக்க,இவர்கள் நமக்குப்புத்திரிகள் என்றுகூறி மடியில்வைத்து உச்சிமோந்து ஆதரித்துக் கோயில்சென்று பதிகம்பாடி அதில் கோட்புலிநாயனாரைச்சிறப்பித்துத்தாம் அப்புத்திரிகளுக்குப்பிதா என்பதையும்

விளக்கியருளினர். இதனாலும் இவர் காமாரியேயென்பது தெளிவாம். பின்பு திருப்புகலூரிற்சென்று பாடிப்புறத்துவந்து, செங்கற்களைத் தலையணையாகவைத்துச்சயனித்து எழுந்து; அக்கற்கள் தங்கமாயிருப்பதுகண்டு, இது சிவாஞ்ஞையென்று எடுத்துக்கொண்டு "தம்மையேபுகழ்ந்திச்சைபேசினுந்" என்ற பதிகம்பாடிச் செல்லும்வழியிலே, திருப்பனையூர்ச் சிவபிரான் திருநடக்கோலங் காட்டியருளத்தெரிசித்து "மாடமாளிகை" என்றெடுத்து "அரங்கிலாடவல்லாரவரேயழகியரே" என்றுபாடிச்சென்று,திருப்பாச்சிலாச்சிராமத்தில் சுவாமியை வணங்கிப்பொருள் கொடாமையால் "வைத்தனன்றனக்கே" என்றெடுத்து "இவரலாதில்லையோ பிரானார்" என்றுஉரிமைவிளக்கப்பதிகம்பாடிப் பொற்குவைபெற்றுத் திருமுதுகுன்றம்நோக்கிச் செல்லும்போது, சிவபிரான் பிராமணரூபியாய்க் கூடலையாற்றூர்வழிகாட்டிமறைந்தருள, "வடிவுடை" என்றெடுத்து "அடிகளிவ்வழிபோந்தவதிசயமறியேனே" என்று பாடிக் கூடலையாற்றூர்சென்றுவணங்கிப் பின்பு திருமுதுகுன்றம் வந்துபாடிச், சுவாமி பன்னீராயிரம்பொன் கொடுத்தருள, இப்பொன்முழுதும் திருவாரூரில்தந்தருளுகவென்றுவேண்ட, இம்மணிமுத்தநதியிலிட்டுத் திருவாரூர்க்குளத்திலெடுத்துக்கொள்ளுகவென்றருள, மச்சம்வெட்டிக்கொண்டு அப்படியேசெய்து; சிதம்பரசபாநாயகனைவணங்கி "மடித்தாடுமடிமை" என்றெடுத்து, முன்திருப்பேரூரில் இத்திருநடனக் கோலங்கண்டதை வைத்துப்பாடித் திருவாரூர்க்குவந்து பரவையாரைஅழைத்துக்கொண்டு வன்மீகநாதரைவணங்கிக் கோயில்வலமாகக் கமலாலயதீர்த்தத்தின் ஈசான மூலையிலிறங்கித்தடவிப் பொன்காணுமல் "பொன்செய்தமேனியீர்" என்றுபாடிப்பின்பு அங்குவந்த பொன்முழுதுமெடுத்து மச்சத்துடன் ஒப்புநோக்கிக் குறைவுதெரிந்து மேலும்பாடி, மாற்றுச் சரியானதுகண்டு திருமாளிகைக்குஅனுப்பிவிட்டு, வன்மீகநாதரை வணங்கிச்சென்று வீற்றிருந்தருளினர். முன்குளத்தில் இன்ன இடத்தில் என்று சுவாமிகூறவில்லை. சுந்தரர் ஈசானமூலையில்வந்தது காணுதபோது வேறிடங்களிற்பாராமல் அங்குநின்றேபாடினதும் உற்றுநோக்குவார்க்கு இவரது சிவசொரூபநிலை விளக்கமாம். சேக்கிழார்பெருமான் "ஏத்தாதே" என்ற திருவிருத்தத்தில்

இவரை "நீத்தாருந்தொடர்வரியநிலைநின்றார்" என்றுவிளக்கியதனாலும் இவ்வுண்மைதெளியலாம். பின்பு சீகாழிவலமாகத் திருக்குருகாவூர்க்குச் செல்லும்போது, சிவபிரான் பிராமணராய்த் தண்ணீர்ப்பந்தரமைத்துக் கட்டுச்சோறும் வைத்துக்கொண்டிருந்து, இந்த அன்னமுண்டு இளைப்பாறிச்செல்லுக என்றருளச், சுந்தரர் தமது அடியார்கள் வரிசையாயிருந்து புசிக்கத்தாமும்புசித்து நீர் அருந்தி அந்நிழலில் சயனித்திருப்பச், சுவாமி அக் காவணத்துடன்மறைந்தருளினார். சுந்தரர் விழித்தெழுந்துஅதிசயித்துக்குருகாவூர் சென்றுவணங்கி " இத்தனையாமாற்றமறிந்திலன் " என்று பதிகம்பாடியருளினார். வரிசையாயிருந்து புசித்தஇடம்வரிசைப்பத்து என்றுவிளங்குகின்றது. பின்பு சுந்தரர் தொண்டைநாடு சென்றுதிருக்கச்சூர்ஆலக்கோயில் வணங்கிப்புறத்துவந்தபோது, சிவபிரான் பிராமணராய்ப் பிக்ஷைஎடுத்துவந்துண்பித்து மறைந்தருள,'முதுவாயோரி'என்றுபாடிக்காஞ்சிபுரமுதலிய தலங்களைவணங்கித் திருக்காளத்திமலைமேற்சென்று சுவாமியைத்தரிசித்துவலப் பக்கத்தில் நிற்கின்ற கண்ணப்பநாயனார் சீபாதங்களில் வணங்கி அங்கிருந்தபடியே வடநாட்டுத் தலங்களைப்பாடித் திருவொற்றியூர்க்குவந்து பதிகம்பாடி அங்கிருந்தருளினர்.

இதற்குமுன் கயிலையினின்று வந்தருளிய அநிந்திதையார் ஞாயிறுகிழவர் என்னுந் தவசிரேஷ்டருக்குப் புத்திரியாராய் அவதரித்துச் சங்கிலியார் என்னும் பேர்பூண்டு தெய்வத்தன்மைவிளங்கவளர்ந்துவந்தார். அவ்விளக்கத்தாலே இவர்மானுடரல்லர் சிவசத்தியேஎன்பதை யாவரும் அறியலாம். அவ்வுண்மையறியாமல், இவரை மணம்புரிய விரும்பினவனும், மணம்பேசவந்தவர்களும் இறந்தார்கள். இதனாலும் இவர்தெய்வமேஎன்பதுநன்குதெளிந்த பிதாவானவர், சங்கிலியார் திருவொற்றியூரிலே திருத்தொண்டு செய்துகொண்டிருக்கும்படி கருதும் குறிப்புநோக்கி, அவ்வாறே செய்துஅவரைவணங்கி அனுமதிபெற்றுச்சென்றனர். சிவபிரான் கயிலையில் இவ்விருவருக்கும் ஆஞ்ஞாபித்தநியதிப்படி, சபதஞ் செய்வித்து அடியார் மூலமாகத்திருக்கல்யாணஞ்செய்வித்தருளினர். சுந்தரர் சங்கிலியாருடன் பேரின்பவாழ்வினராய்வீற்றிருந்தருளினர். இதனை "இந்நிலையிற்பேரின்பமினிதமர்வார்" என்றசேக்கிழார் திருவாக்காற்றெளிக.

சிலநாள் அங்குவசித்தருளிய சுந்தரர், திருவாரூர் தெரிசிக்க விரும்பி "பத்திமையும்" என்றுபாடிப், பின்னும் அவ்விருப்பம் அதிகரித்தலால் பிரிந்து திருவாரூருக்குச் செல்வாராயினர். அப்போது அவர் கண்கள் மறைந்தன. உலகத்தார் உறுதி தவறினால் இடருண்டாமென்பதைக்காட்டுதற்கே சிவபிரான் நமதுகண்களை மறைத்தருளினர். அதனை மேற்கொண்டு விளக்குவோமெனத் திருவுளங்கொண்டு "அழுக்குமெய்கொடு" என்றுபாடி உண்மை விளக்கிக், குறித்தபடி திருவாரூருக்குச் செல்லவேவழிக்கொண்டனர். இவர் திருவொற்றியூரிலிருந்தால் கண்மறையாது. அங்ஙனமாகவும் முதலில் "பித்தாபிறைசூடி" என்று பாடியவுடனே சிவபிரான் நீ உலகெலாமுய்யும்படி எல்லாத் தலங்களினுஞ் சென்று "பல்லாறுலகினினம்புகழ்பாடுவாய்" என்றருளிய ஆஞ்ஞைமேற்கொண்டனராதலாலும், இடையில் நிகழ்ந்தசபதமாறியபிரிவு ரூபபேதத்தைக்குறித்ததே; சொரூபநிலையிற் பிரிவின்மையே என்றுமுள்ளது ஆதலாலும் இப்புறக்கண்மறைந்தது உலகர்க்குக்காட்டுநிமித்தமேயாதலாலும், இதனைச்சிலநாள்மேற்கொண்டு மாற்றிக்கொள்ளுவோமென்று திருவுள்ளந்துணிந்தனராதலாலும், உலகர் தமக்குவந்த கஷ்டங்களைத்திருவருளைவேண்டிமாற்றிக்கொள்ளுக என்று விளக்குங்கருத்தினராய்ப் பலதலங்களில் பதிகம்பாடிக் கண்பெற விரும்பினராதலாலும் பிரிந்துசென்றனர். இவ்வுண்மை "குற்றமொன்றுஞ்செய்ததில்லை கொத்தையாக்கினீர்" என்றது முதலிய பற்பலதிருவாக்குக்களாற் செவ்வேகாணலாம்.

இவ்வாறுபிரிந்த சுந்தரர், திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் பெற்றுச்சென்று, காரைக்காலம்மையார் தலையால் நடந்த திருவாலங்காட்டைமிதிக்கப்படாதென்றுபுறத்தேநின்று துதித்து காஞ்சிபுரத்துவந்துபாடி இடக்கண்பெற்றுச் செல்லும் வழியில் 'தென்றிருவாரூர்புக்கெந்தைபிரானாரையென்றுகொலெய்துவதே என்றுபாடி மிகுந்தஆவலுடன் குற்றாலமென்று வழங்குகின்ற திருத்துருத்தியில் வந்துதம்து திருமேனியின்மேலுள்ள, நோய் நீங்கப்பிரார்த்தித்துச், சிவாஞ்ஞையால் சிவதீர்த்தத்தில் முழுகி நீங்கப்பெற்று, "மின்னுமாமேகங்கள்" என்றெடுத்துச்"சொன்னவாறறிவார்" என்றுபாடித் திருவாரூர்க்குவந்து பரவையுண்மண்

டவியில், தூவாயாரைப்பாடிச்சென்று 'குருகுபாய' என்றெடுத்த பதிகத்தில்''அக்கிரமங்கள்செய்புமடிகளாரூரர்க்கு'' என்றுஉண்மை விளக்கிச்சென்று, வன்மீகநாதரைவணங்கி ''மீளாவடிமை'' என்று பாடி வலக்கண்ணும்பெற்று மகிழ்ந்துவந்து தேவாசிரயமண்டபத்துவீற்றிருந்தருளினர். இவர் அந்நேரம் அர்த்தசாமத்தின் மேலாகியும் பரவையார் திருமாளிகைக்குச் செல்லாமல் அங்கிருந்தது, இவர் சொரூபமகிமையைச் சிவபிரான் தூதுசென்று விளக்கும் உண்மைநோக்கியேபோலும். ''ஊடுதல்காமத்துக்கின்பமதற்கின்பங், கூடிமுயங்கப்பெறின்'' என்பது அகப்பொருணூற்றுணிபாதலால் அதனுண்மையை உலகர்க்கு விளக்குவாராய்ப், பரவையார்ஊடிநிற்பதுதெரிந்தசுந்தரர், தியாகராஜப்பெருமானை வேண்டப்பெருமான் இடபாரூடராய்த் திருநந்திதேவர் சிவகணங்கள் அரிபிரமாதிதேவர் முனிவர்பல்லாயிரவர் சூழச்சென்று வாயிலில் நிறுத்திவிட்டுத், தம்மைப்பூஜிக்கின்ற சிவாசாரியவடிவினராயுட் புகுந்து இணங்காமையால் மீண்டுவந்து பரவையாரின் ஊடல் முதிர்ச்சியைவிளக்கிப், பின்பு அவ்வூடல் மிகமுதிர்ந்து சாய்தலை விளக்குவாராய்த், தமது சுயரூபத்துடன் சென்றருளப், பரவையார் கண்டஞ்சிநடுங்கி எதிர்வந்துபணிந்துஊடல்நீங்கி உவகைகூர்ந்துபணிமொழிகூறித் தாழ்ந்துநிற்றல்கண்டுவந்து சுந்தரரை அங்குச்செல்வித்துத், தாம் பூங்கோயிலில் வீற்றிருந்தருளினர். பரவையார் திருமாளிகை எங்கும் அலங்காரவகைஎல்லாஞ்செய்து தூபதீப பூரணகும்பாதிவரிசையுடன் எதிர்வந்துபணிந்து பூசித்து ஒதுங்கிநிற்பச், சுந்தரர், அவரைஅழைத்துக்கொண்டு உட்புகுந்து அவருடன், இன்னதன்மையது இவ்வளவினது இம்மட்டிற்றான் செய்வது என்னும் வரம்பின்றிப்பெருகுந் திருவருட்செயல்வகைகளையே எடுத்துப்பாராட்டித்துதித்து, இருவர் மனமும் ஒருமையுற்றுக்கலந்துநிற்கும் இன்பநிலையில் வீற்றிருந்தருளினர். இதுதான் இவ்விருவருங்கூடியனுபவிக்கும் இன்பம், இது சிவானுபவப்பேரின்பமேயாம். இதனைச்சேக்கிழார்பெருமான் ''இருவருந் தம்பிரானார்தாமிடையாடிச்செய்த, திருவருட்கருணை வெள்ளத் திறத்தினைப் போற்றிச்சிந்தை, மருவுபே ரின்பவெள்ளத் தழுந்திய புணர்ச்சி வாய்ப்ப, வொருவரு ளொருவர்மேவு நிலைமையி லுயிரொன் றானார்.'' என விளக்கியருளினர். இதனாலும் இதன்

முன்னும் பின்னும் பலமுறைகூறும் உண்மைகளாலும், இவ்விருவரும், மற்றைத்தேவர் முனிவர் முதலிய சீவர்களிடத்துள்ளசிற்றின்பநிலையினரன்றென்பது தெளிவாம்.

உலகரில் பிணக்குநீக்கி இணக்கிவைத்தற்கு ஒருவர் இருவர் செல்வதேவழக்கம். இவ்விருவரும் உலகாதீத சிவசத்திவர்க்கத்தவராதலால் உலகாதீத சிவபிரானே சென்றருளினர். இவரும் ரகசியமின்றி உலகெலாந் தெரிந்துய்யும்படி திருநந்திதேவர் சிவகணங்கள் தேவர் முனிவர் பல்லாயிரவர்சூழச் சென்றருளியதே அவ்வுண்மையை விளக்கும். இப்படி ஒருதூது எங்கேனும் எக்காலத்துமுள்ளதன்றென்பது யாவருந் தெரிந்ததே. இத்தூது சென்றது உலகெலாமுய்தற்கன்றி இவ்விருவருய்தற்கன்றென்பதைச்சேக்கிழார் "ஞாலமுய்யவெழுந்தருளுநம்பிதூதர்" என்பது முதலிய பலவாக்கியங்களால் விளக்குகின்றார். இதனால் ஞாலமுய்ந்ததெப்படியெனில்? இவ்விருவருஞ் சிவசத்திசொரூபராதலால், இவர்கள்பிரிந்திருந்தால் உலகம்விருத்திபெற்றுய்யாதென்று சிவபிரான் சேர்த்து வைத்தமையாலென்க. இத்தூதிலுண்மைகள்பற்பலவாம். அவையெல்லாம்எவராலும் எடுத்துக்கூறமுடியாதென்பதை; உய்யவந்த தேவநாயனார் திருக்களிற்றுப்படியாரில்

"மோக மறுத்தவர்க்கே முத்தி கொடுப்பதென
வாகமங்கள் சொன்ன வவர்தம்மைத்—தோகையர்பாற்
றூதாகப் போகவிடும் வன்றொண்டன் றொண்டுகளை
யேதாகச் சொல்வே னியான்." என்று விளக்கியருளினார்.

அன்றியும் அதிதீவிர பரிபாகசீவன் முத்தர்களைப், பிராரத்தகர்மம் தாக்காமலும், ஆகாமியம் வந்தேறாமலும் சிவபிரான் தாமே முன்னின்று தாங்கிக்கொள்ளும் உண்மையும் விளக்குதற்கே தூது சென்றனரென்பதுந் தெளிவாம். இவ்வுண்மைகள் ஒன்றையும் நோக்காமல் யாரேனும் இவ்விருவரையும் சிற்றின்பம் அனுபவிக்கும் மனிதநிலையில் வைத்துக்கூறின், அவர் சிவபிரானால் தண்டிக்கப்படுவாரென்னும் உண்மைநோக்கி, அவ்வாறுகூறாதுய்கவெனத் திருவுளங்கொண்ட பெருங்கருணையினாலே சிவபிரான், அதனை ஏயர்கோன்கலிக்காமநாயனார், மூலமாக விளக்குவாராய், உத்தமோத்தமபக்தசிரேஷ்டராகிய அக்கலிக்காமர், சுந்தரர் சிவபிரானை தூதாக ஏவியது பெருந்தவறென்றுகூறி, அதனால் சூலைநோயுற்று

வருந்தச்செய்து, இந்நோய் சுந்தரனாற்றான் நீங்குமென்று தெரிவித்துச், சுந்தரர்க்கும் நீக்குவாயென்றருளினர். அவ்வாறே சுந்தரர் வருவது கலிக்காமர்தெரிந்து, அவரைப் பார்க்கமனமின்றி வாளால் உயிர்நீங்கிக்கிடப்ப, வந்துகண்ட சுந்தரர் அவ்வாளைக் கையிலெடுப்ப, உடனே அவர் உயிர்பெற்றெழுந்து வணங்கச் சுந்தரரும் அவரை வணங்கினர். இருவரும்அதிப்பிரியநண்பராயினர் உயிர்பெற்றெழும்படி சுந்தரர் ஒன்றுஞ்செய்ததில்லை. அவர் வந்தவுடனே உயிர்பெற்றெழுந்த இதனாலேயே தூதினுண்மை விளங்கும்படி சிவபிரானே இவ்வாறு செய்வித்தாரென்பது தெளிவாம் சுந்தரர், கலிக்காமநாயனாருடன் திருப்புன்கூர் முதலிய பலதலங்கள் தெரிசித்துக்கொண்டு திருவாரூர்வந்து வீற்றிருந்தருளினர்.

சிவபிரான், சேரதேசத்திலும் சுந்தரர் மகிமையை விளக்குவாராய்ச் சேரமான்பெருமானாயனாரதுசிவபூசைமுடிவில் தினமுந்தவறாது செய்துவந்த குஞ்சிதபாதச்சிலம்போசை ஒருநாள் தாமசிப்பிக்க, நாயனார் வாளாயுதத்தைஎடுப்ப, உடனேசிலம்போசை கேட்பித்தருளி, அன்பனே, தில்லையில் நமதுசுந்தரனது திருப்பாடல்கேட்டின்புற்று நின்றோமாதலால் சிலம்போசைசெய்யத்தாமசித்தனம் என்றருளினர். உடனேசேரர் ஆ! ஆ! சர்வஞ்ஞசிவனையுங்கூட, நியமச்செயலை மறப்பித்துத்தமது வசப்படுத்திய சுந்தரரைத் தரிசித்து வணங்காது காலங்கழித்து விட்டோமேயென்று பதைப்புற்றுப், பரிவாரஞ்சூழத் திருவாரூர்க்குவந்து, சுந்தரதரிசனானந்தவெள்ளதழுந்தி வணங்கியபடியே கிடந்தனர். சுந்தரரும் அவரைவணங்கி எடுத்துத்தழுவிஅதிப்பிரியநண்புரிமைகாட்டினர். அதனால் சேரமான்றோழர் என்றபெயரும் பெற்றனர். பின்பு சுந்தரர் அவர் கையைப்பிடித்துக்கொண்டு கோயில்சென்று தெரிசிப்பித்துவந்து பரிசனங்களுடன் விருந்துசெய்வித்திருந்து, அவ்வரசருடன் வேதாரணியஞ்சென்று, திருக்கதவு திறக்கவும் அடைக்கவும்பாடியருளிய இருவர் மகிமையை நினைந்துருகி "யாழைப் பழித்தன்ன" என்றுபாடிப்பணிந்திருந்து அரசருடன் மதுரை சமீபிக்கவருங்கால், பாண்டியராஜா, தன்புத்திரியைவிவாகஞ்செய்திருந்த சோழராஜாவுடன் வந்துவணங்கி அழைப்ப, மூவேந்தருடன் திருக்கோயிலிற் சென்றுபாடிச் சிலநாள் அங்கிருந்து, அம்மூவருடன் அந்நாட்டுத்தலங்கள் தெரிசித்து வருங்கால், இருவர்

அனுமதிபெற்று நீங்கச், சேரருடன் திருக்சுழியல் வந்துபாடிஅங் கிருக்கும்போது, சிவபிரான் காளைப்பருவமுள்ள அதிசுந்தரரூப ராய்த்தோன்றியருள, தெரிசித்து அரசருக்குங்காட்டிக், காளையார் கோயில் தரிசித்துப்பாடிப் பணிந்திருந்து திருவாரூர்க்கு வந்து சுவாமியை வணங்கித் திருமாளிகையில் வீற்றிருந்தருளினர்.

ஒருநாள் இருவருந்தூதுளங்கீரை ஆய்ந்துகொண்டிருந்தார்கள் பரவையார், சேரர் ஆய்ந்ததைமாத்திரங்கொண்டு போய்ப்பாகஞ் செய்துஅமுதுபடைத்துபசரிக்கத், திருவமுதுசெய்துவெளிவந்த பின், சுந்தரர் ஆய்ந்தகீரைகிடத்தலைநோக்கியசேரர், இதனைமாதே வியார் பாகஞ்செய்யாமை என்னையோவென்றுநினைக்கச், சுந்தரர் பரவையாரைநோக்க, அவர் அதுநிர்மாலியம்என்றுகூறி அதனை எடுப்ப, அதனுள்ளே ஒரு சிவலிங்கமிருக்கக்கண்டசேரர், அத்தி யற்புதஆனந்தபரிதராய் வணங்கிச்சுந்தரர் மகிமைநேரிலுங்கண்டு மகிழ்ந்தனர். இதனால், சுந்தரர் கயிலையில்செய்துவந்ததிருமாலைப் பணி நெடுநாளாய் விட்டபடியால் அவர் கையிலொரு பச்சிலையா வது தமது சிரசிலணிந்தின்புறவே சிவபிரான் அங்குத்தோன்றின ரென்பதும், பரவையார், சுந்தரசிவத்தின்வேறல்லாதசிவசத்தியே யாதலால், அவர் சொரூபநிலைஉள்ளபடி தெரிந்து அவ்வாறுசெய் தனரென்பதும், முதலிய உண்மைகள் விளக்கமாம்.

சுந்தரரை அரசர் தமது நகர்க்குவரும்படிவேண்ட, அதற்கி சைந்துஅவருடன்சுவாமியைவணங்கிக், காவிரித்தென்கரைவழிச் சென்று திருக்கண்டியூரைவணங்கிமேற்செல்ல, அப்போதுகாவிரி வடகரையில் திருவையாறு தோன்றக்கண்ட அரசர், அந்நதி ஓட முஞ்செல்லமுடியாத பிரளயவெள்ளமென மிகுவேகத்துடன் ஓடு தல்தெரிந்தும், சுந்தரரைவணங்கி அடியேன்மனம் திருவையாறு தெரிசிக்க விரும்புகின்றது போய்வணங்கி வருவோம் என்றனர். இதனால், அவ்வரசர், சுந்தரரைச் சர்வசத்திமானாகிய சிவனேஎன் றுள்ளபடி நினைத்தே அவ்வாறு வேண்டினரென்பது தெளிவாம். சுந்தரர் அந்நதித்தென்கரைவந்துபாடி "ஐயாறுடையவடிகளோ" என்று ஒவ்வொரு திருப்பாட்டினும் அழைத்தருளினர். அப் போது கன்றின் அழைப்பொலிகேட்டுக் கனைப்பொலி காட்டும் பசுப்போலப், பஞ்சநதேசுரர், சராசரங்களெல்லாங்கேட்க 'ஓலம்' என்றுஒலித்தருளினர், உடனே அவ்வெள்ளம் பளிங்குமலைபோல

மேற்கிலுயர்ந்துநிற்ப, கிழக்கில் நீரின்றிமணற்பரப்பாயிருந்தது. அரசர் மிகமகிழ்ந்து சுந்தரரைவணங்க அவரும்வணங்கி அரசரே! இது நம்பெருமான் உமக்கருளியதன்றோ! என்றுகூறியருளினர். இதனால்(வெறுநாழியுருளும்)ஆற்றலில்லாத அறிவினர்களிடத்தே தலையெடுத்து நின்றாடும் அகந்தை (நிறைநாழியுருளாது) ஆற்றல் அறிவுமுற்று நிறைந்தாரிடத்து அணுத்துணையும்நிகழாதென்பது செவ்வேகாண்க. பின்பு சுந்தரர், அரசருடன் பல்லாயிரம் பரிசனங்கள் சூழச்சென்று பஞ்சநதேசுரரைத் தெரிசித்து திரும்பித் தென்கரையேறினவுடனே,மேற்குயர்ந்துநின்றவெள்ளம்கிழக்கே பாய்ந்துசென்றது. இச்சடமாகிய அப்பு பூதமுதலிய பஞ்சபூதங்களும், அவற்றாலாகிய அசேதனப்பிரபஞ்சமும், சேதனப்பிரபஞ்சமுமாகிய அண்டபிண்ட சராசரங்களெல்லாமும், சுந்தரர், ஆணைவழிநடப்பனவே. இவர்அவற்றைநடத்தி ஆளுகின்றபரமேசுரரே என்பது சாமானியருங்கண்டுய்யவே திருவருளால் இவ்வருஞ்செயல் நிகழ்ந்தது. சுந்தரர் அரசருடன்சென்று, அவரது ராஜதானியாகிய பெருமாக்கோதைத் திருநகரிலுள்ள திருவஞ்சைக்களந் தெரிசித்துப்பாடி வெளிவந்தனர். அவரை, அரசர், யானைமேல் வீற்றிருந்தருளச்செய்து, பின்னிருந்து சாமரம் வீசிக்கொண்டு வந்து, தமது அரண்மனையில் ரத்தினசிங்காசனத்தில் எழுந்தருளுவித்துப்பூசித்து விருந்துசெய்து கொண்டாடி ஆனந்தசாகரத்து ழுழ்கி உடனிருந்தனர்.

சிலநாளானபின்சுந்தரர், வன்மீகநாதரை நினைந்து "பொன்னு மெய்ப்பொருளும்" என்றெடுத்து " ஆரூரானைமறக்கலுமாமே " என்றுபாடித்திருவாரூர்க்கெழுந்தருள, அரசர் பிரிவாற்றாதுவருந்தித்தடுக்கமுடியாமல் அளவில்லாத வஸ்திராபரணாதி பலதிரவியங்களைச் சுமையாட்கள் மூலமாகமுன் அனுப்பிவிட்டுச், சுந்தரரை வணங்கிநிற்ப, அவரைத்தழுவிச்சமாதானஞ் செய்துசென்று திருமுருகன்பூண்டிசமீபிக்கவரும்போது, சிவாஞ்ஞையால் பூதகணங்கள் வேடர்களாய்வந்து திரவியங்களைக் கவர்ந்துகொள்ள, அது தெரிந்த சுந்தரர் கோயிலுட்சென்று "கொடுகுவெஞ்சிலைவடுகவேடுவர்" என்றெடுத்து "எத்துக்கிங்கிருந்தீரெம்பிரானீரே" என்று உரிமைவிளக்கத் திருப்பதிகம்பாடி அத்திரவியமுழுதும் பெற்றுச் சென்று திருவாரூர்க்குவந்து சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டி

ருந்தனர். அரசர் கொடுத்ததைக்கவர்ந்து நேரே கொடுத்த இத்ஞால், சிவபிரான், சுந்தரர்க்குவேண்டிய எல்லாமுந்தாமேசெய்வாராய், இவரைமூன்றுவயசு நரபாலராய்வரச்செய்துநாமகரணமுஞ் செய்ததுமுதல் யாவுந்தாமேசெய்துவருகின்றாராதலால், அந்நியமத்துக்குமாறாய் முன்வந்தமணம் விலக்கினதுபோல, இப்பொழுதும் அரசர் கொடுத்தாரென்பதைவிலக்கி நேரிற்கொடுத்தருளினரென்பதும்,பறிகொடுத்தசுமையாட்கள்ஓடிச்சென்றுஅதிதூரத்துவந்த சுந்தரர்க்குத் தெரிவித்தமையால்,அத்தனைதூரவழியெங்கும் முன்னும்பின்னும் பக்கங்களிலும்பல்லாயிரம்(௩௭௯)திருத்தொண்டர் திருக்கூட்டஞ் செறிந்துவருகின்றதென்பதும் தெளிவாம்.

திருவாரூரில் வீற்றிருந்தருளுஞ் சுந்தரர், சிலநாளான பின் சேரர்பெருமானைநினைந்துசெல்லும்போது,அவிநாசிஎன்னுந்திருக்கோயிலைத்தன்னிடங்கொண்டதிருப்புக்கொளியூரில்,ஒருமனையில் இன்பஒலியும் மற்றொருமனையில்துன்பஒலியும் நிகழுதல்தெரிந்து என்னென்றுகேட்க, அங்குள்ளார்வணங்கிச்சுவாமீ, சுந்தரலிங்கம் அவிநாசிலிங்கம் என்ற பிராமணப்பிள்ளைகள், சிலவருஷங்களுக்கு முன், குளத்தில் குளிக்கும்போது, சுந்தரலிங்கத்தை முதலைவிழுங்கிவிட்டது. அவிநாசிலிங்கத்துக்கு இன்றுஉபநயனக்கல்யாணம் நடக்கிறமனையில் மங்களஒலிகேட்டுச். சுந்தரலிங்கத்தின் பிதாமாதாக்கள்.நமதுபிள்ளையிருந்தால் இக்கல்யாணஞ்செய்துஇன்புறலாமேஎன்றஏக்கத்தால்துன்புற்றழுகின்றனரென்றுகூறும்போது அப்பிதாமாக்களும் வந்துவணங்கித்துதிக்கச், சுந்தரர், அவ்விருவரும் புத்திரசோகத்தையும்மறந்து வந்துவணங்கும் அன்புக்கிரங்கி அவிநாசியப்பர் பேரனுக்கு உபநயனம் நிகழ்தல்போல, (பேரையுடையவன்பேரன்)நமதுபேரனுக்கும் இப்பொழுதே உபநயனம் நிகழுகஎனத்திருவுளங்கொண்டு, அக்குளக்கரையில்வந்து நீருமின்றிப்பொட்டலாயிருப்பதுதெரிந்தும், திருப்பதிகம் பாடும்போது நீர்நிறைந்து முதலையும்வந்தது; அப்பதிகத்திரண்டாவது திருப்பாட்டிலே சுவாமீ உன்பேரனுடன்வந்த என்பேரனை முதலைவிழுங்கச்செய்தது அருளுக்கு அழகாகுமாவென்று குறிப்பித்து,நான்காவது திருப்பாட்டு " உரைப்பாருரை " என்றெடுத்து " கரைக்கான்முதலையைப் பிள்ளைதரச்சொல்லுகாலனையே"என்றுமுடிக்கு முன்னரே முதலைவயிற்றினுள்ளே, பிள்ளையினுடம்பு முன்சென்ற

வருஷங்களும் பூமியிலிருந்தே வளர்ந்ததுபோல வளர்ந்துநிரம்ப, அவ்வுடம்பில் அவ்வுயிரையமன்கொண்டுவந்துசேர்ப்ப,அம்முதலை கரையில்வந்து பிள்ளையைஉமிழ்ந்தது. மாதாஓடி எடுத்தணைத்து வந்துநாயகனுடன் சுந்தரர்திருவடிகளில் நமஸ்கரித்தனள். தேவர் புஷ்பமாரிபெய்தனர். பிராமணர் தொண்டர் முதலிய யாவரும் அரகரமுழக்கஞ்செய்தனர். சுந்தரர் சுந்தரலிங்கத்தைஅழைத்துச் சென்று சுவாமிதெரிசனஞ்செய்து பதிகம்பாடித் திரும்பிவந்து உபநயனக்கல்யாணஞ் செய்வித்தருளி மலைநாட்டை அடைந்தனர். அவ்வற்புதமகிமையைஅந்நாட்டவர்கள் சேரர்க்குவந்துதெரிவிப்ப, அவர்க்குவஸ்திராபரணதிதிரவியங்களை அள்ளிப்பொழிந்து திருவாரூர்ச் சைவசிகாமணி வருகின்றார். நம்மையாண்டருளும் தலைவர் வருகின்றார். நமக்கு உயிர்த்துணைவர்வருகின்றார். உலகெலாமுய்யவந்த பரமாசாரியர் வருகின்றாரென்று முரசறைவித்துத் திருநகரெங்கும் அலங்கரிப்பித்து விரைந்துவந்து சுந்தரர்திருவடிகளிலே நமஸ்கரித்து, யானைமேல் எழுந்தருளச்செய்து தாம் பின்னிருந்து வெண்குடை பிடித்துக்கொண்டு சகல வரிசைகளும் பொலியஅரண்மனையில்வந்து சுந்தரரை ரத்தினசிங்காசனத்திருத்திப்பூசித்து வணங்கினர்.

இவ்வாறு தினமும் வழிபாடுசெய்துவர வீற்றிருந்தருளுகின்ற சுந்தரர் ஒருநாள் அரசர் ஸ்நானஞ்செய்யுஞ் சமையம் திருவஞ்சைக்களத்துவந்து வணங்கிப்பாடினர். அப்பதிகத்தில் சுந்தரர் கயிலைக்கு எழுந்தருளக்கருதுங்குறிப்புநோக்கிக்கயிலாசபதி, பட்டவர்த்தன யானைமீது நமதுசுந்தரனை அழைத்துவருகஎன்று அரிபிரமாதி தேவர்க்கு ஆஞ்ஞாபித்தனர். அந்தயானைபிரணவமேரூபமாயுள்ளது. (உ௲) தந்தபந்திகளையுடையது. சிவனொருவனே ஏறுதற்குரியது. சுந்தரர் சிவபிரானில் வேறல்லராதலால் அத்தகைய யானைமீது எழுந்தருளிவரும்படி அருளினர். அத்தேவர் யாவரும் யானையுடன் திருவஞ்சைக்களத்து வந்து கோயில் வாயிலில்நின்று சுந்தரர் வெளிவரக்கண்டு வணங்கி அஞ்சலித்து நின்று தேவரீர்இவ்வானைமீது எழுந்தருளிவரும்படி கயிலாஸபதி ஆஞ்ஞாபித்தருளினர் என்று விண்ணப்பித்து மேலும் வணங்கினர். சுந்தரர் சேரரும் வருகவெனத்திருவுளங்கொண்டு யானைமேலேறி வீற்றிருந்தருளித் திருக்கூட்டஞ்சூழமேற்செல்வாராயினர்

பிரமவிஷ்ணுவாதியர்சேவித்துக்கொண்டுசென்றனர். சேரர்பெருமான், சுந்தரர் திருவுளமுணர்ந்து பக்கத்துநின்ற குதிரைமீதேறி அதன்செவியில் பஞ்சாக்ஷரங்கூறி, அவ்வலியால்அதுமேற்செல்ல நடத்திக்கொண்டு விரைந்து மூன்வந்து சுந்தரரை வலஞ்செய்து வணங்கி முன்னணியாகச் செல்வாராயினர். கயிலைக்கு மானுடவடிவுடன் செல்லுதல் எக்காலத்தும் எவராலுமியலாததே. இவர்கள்வடிவம்பிறர்பார்வைக்கு மானுடமாயினும் உண்மையின் அருள்மயமும் அன்புமயமுமாகிய திவ்விய சரீரமேயாதலால் அவ்வாறு சென்றனர். இதனாலுமிவர்கள் சீவவர்க்கத்தினரல்ல ரென்பது தெளிவாம். சேரர்பிரான் மேற்சென்றதுணர்ந்து அவருடைய பரிசனங்கள், அன்பின்வலியால் முன் சரீரங்களைநீக்கி வீரசரீரிகளாய் மேற்சென்றுவணங்கி அவரைச்சூழ்ந்து சென்றனர்.

இவ்வாறு யாவரும் மேற்செல்லும்போது, முன்பு உலகமுய்தற்காகக் கயிலாஸபதி உத்தரவினால் சுந்தரர் மானுடராய்வந்து, அதற்கிணங்கச்சீவர்கள் எதனையும் சிவபிரானை வணங்கிவேண்டி அருள்பெற்றுவாழுமுறை காட்டுதற்காகவே தாமும் வேண்டுதல் முதலிய செய்துவந்தமைநோக்கி, அவ்வுண்மையுணரும் திண்மையறிவில்லார்சிலர், இவர் சீவரிலொருவரென்றும் இருபெண்களை மோகித்துமணந்து சிற்றின்பநுகர்ந்தவரென்றும் இவை முதலிய பாதகங்கூறிநரகுறுதபடி திருவுள்ளமிரங்கிச்சுந்தரரே, 'தானெனை முன்படைத்தான்' என்றுபாடும் பதிகத்தில், தமது சொரூபநிலையும், தம்மை அரிபிரமேந்திராதி தேவர் யாவரும்வந்து வணங்கி அழைத்துச்சூழ்ந்து சேவித்து வருதலுமுதலிய உண்மைகளை விளங்கவைத்துப்பாடிக்கொண்டு; சென்று திருக்கயிலாயத்தென்றிருவாயிலில் யானையினிறங்கி முதற்கோபுரமுன்பு வந்தருளினர். சேரர் குதிரையினின்றிறங்கி அங்குவந்து நின்றருளினர். சுந்தரர் உட்புகுந்து, நெடுந்தூரத்தில் நீங்கியகன்று தாயைக்கண்டு அணைதல்போல, அதிவேகமாகத்திருமுன்புவந்துவணங்கினர். உடனே சிவபிரானும் மிகுந்த ஆவலுடன் சுந்தரனே வந்தனையோ என்று தமது ஆராமையைவிளக்கி அழைத்தருளினர். இவ்வாறு சிவபிரான் வேறு எவரிடத்தும் எக்காலத்துஞ்செய்யாத அருள் விசேடத்தினருமை நோக்கி அங்கிருக்கும் மந்திரமகாமுனிவர்கள், இப்பெருஞ்சிறப்புடைய பெரியவர் யாரோஎன்று தம்முள்ளே கரு

திருக்குறிப்புணர்ந்த சிவபிரான் இச்சுந்தரன் ஆரூரன் என்னும் நமது பேர்பெற்றநம்முறவினன் என்று திருவாய்மலர்ந்தருளினர். இதனை முன்னரே சுந்தரர் யானைமேல்வரும்போது பாடியபதிகத்தில் "நந்தமரூரனென்றான்" என்பதுமுதலிய மந்திரவாசகங்களால் விளக்கியருளியதனாற்காண்க. இவர் சர்வஞ்ஞசிவனே என்பது இதனாலும் தெளிவாம். சிவபிரான் வந்தனையோவென்று அளவு கடந்த ஆவல்காட்டிய அருமைவாசகங்கேட்ட சுந்தரர் உளங்கசிந்துருகமேலும் பலமுறை வணங்கியெழுந்து பரம்பரையானந்தமே ஒருவடிவாய்நின்றதுபோலப்பேரின்பவெள்ளத்திரண்டறக்கலந்து விளங்கும் சுத்தாத்துவிதநிலைய சர்வபரிபூரண சிவமேயாய் நின்றனர். இதனைச் சேக்கிழார்பெருமான் "பரம்பரையானந்த, வடிவு நின்றது போன்றின்ப வெள்ளத்து மலர்ந்தனர் வன்றொண்டர்" என்ற திவ்வியவாக்கியங்களால் விளக்கியருளினர். இங்குப்"பரம்பரையானந்தம்" என்ற உண்மைமுன்னும், பூமிக்குவந்தபின்னும் எப்பொழுதும் இடையீடில்லாது தொடர்ந்தேநிற்கும் நித்தியானந்தசொரூபரே சுந்தரரென்பதும், இவர் பெண்களை மோகித்து வேண்டினரென்பது முதலிய செயல்கள், திருவருளால் மானுடராய் வந்ததற்கிணங்க நம்மனோர் திருவருளை வேண்டிநின்றுய்யு முறை காட்டச்செய்தனவே என்பதும் செவ்வே தெளிவாம். சேக்கிழார்பெருமான் ஆதிமுதல்இவ்வுண்மை பற்பலஇடங்களிற் கூறிவந்தும், அறிவிலார்மயங்காது நிச்சயித்துணரும்பொருட்டே முடிவிலும் 'பரம்பரையானந்தம்' என்றமெய்ம்மொழிகளைவைத்து விளக்கியருளினர்.

பின்பு, சுந்தரர், எமபெருமானே சோரர் புறத்தேநிற்கின்றனரென்று விண்ணப்பிக்க, உடனே சிவபிரான், திருநந்திதேவர் மூலம் அவரை அழைத்தருளத், திருமுன்புவந்த சேரர்பிரான் பன்முறைவணங்கித் துதித்தனர். சிவபிரான்நாம் அழைக்காமல்வந்ததென்னென்று புன்சிரிப்புடன் வினவ, அரசர், மேலும்வணங்கி எம்பெருமானே தேவரீரின் வேறுபடாதசுந்தரர் திருவுளக்குறிப்பின்படி, அவரைச்சேவித்துக்கொண்டுவந்து புறத்திலேதான் நின்றேன். தேவரீருடைய திருவருள்வெள்ளம் திருநந்திமுகமாகப்பெருகிப்புறத்துவந்து அலைகளினால் உள்ளே தள்ளியதனால் திருமுன்வரப்பெற்றேனென்று விண்ணப்பித்து, அடியேன் தேவரீரைப்

பாடிய திருவுலாப்பிரபந்தந் திருச்செவி சாத்தியருளுகவென்று வேண்டித்திருமுன்பாடி வணங்கினர். சிவபிரான் முழுதுங்கேட்டு மகிழ்ந்து, அன்பனேஆலாலசுந்தரனுடன் நமது கணநாதர்யாவர்க்குந்தலைமை நிலையில் வாழுகவென்றருளினர். அவ்வாணையின்படி சுந்தரர் முன்போல ஆலாலசுந்தரராய்த் திருவணுக்கத்திருத்தொண்டு மேற்கொண்டு நின்றனர். பணிபுரிந்து பக்கத்து நிற்றல் நோக்கிச்சிலர், இவர் பாமுத்திபெற்றிலரென்று அறிவுமயங்கிக் கூறிப்பாதகத்துக்காளாகாமல் இவரதுபரம்பரையானந்தசொரூப நிலைமுதலிய உண்மைகள்நோக்கி உள்ளபடிநினைந்து வழிபாடு செய்துய்வாராக. கூடுமன்பினிற் கும்பிடலேயன்றி, வீடும்வேண்டாவிறலின் விளங்குகின்ற சேரரும் அவ்வாணையின்படி சிவகணநாத சிரேஷ்டராய்த் திருப்பணிமேற்கொண்டனர். பரவையார் சங்கிலியாரிருவரும் திருவருளால் அங்குவந்து முன்போலக் கமலினியார் அநிந்திதையாராய் முன்னைத்திருத்தொண்டு புரிந்து வாழுகின்றனர்.

சுந்தரமூர்த்திநாயனார் புராணசாரவிளக்கம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

## தில்லைவாழந்தணர்புராணசாரம்.

---

நல்லவா னவர்போற்றுந் தில்லை மன்று
ளுடைகஞ்செய் பெருமானுக் கணியார் நன்பொற்
றெல்லைவான் பணியெடுத்தற் குரியார் வீடுந்
துறந்தநெறி யார்தொண்டத் தொகைமுன் பாடத்
தில்லைவாழ் முந்தணரென் றெடுத்து நாதன்
செப்புமரு ளுடையார்முத் தியார் பத்திக்
கெல்லைகாண் பரியாரொப் புலகிற் றாமே
யேய்ந்துளா ரமையாள வாய்ந்து ளாரே.

இ-ம். தில்லைவாழந்தணர்கள் உண்மைத்தொண்டர் தடையின்றிப்புகுந்து தரிசித்துநிற்கும் சமயங்களில் அரிபிரமாதி தேவ

ரும், உட்புகுதப்பெறாமல் புறநின்றுபோற்றுகின்ற சிற்சபாநாதர்க்கு முன் சிவாஞ்ஞையால் மகுடாகம முறையே நடந்துவரும் பூஜாவிதிவிளக்கப் பதஞ்சலிபகவான் பத்ததியாகச்செய்து யானைமீது திருவீதிவலம்புரிவித்துச் சிற்சபையில்வைத்த அப்பத்ததி விதிப்படிசெய்கின்ற நித்தியநைமித்திகாதி சிவபூசைத் திருத்தொண்டு திருவாபரணாதி செம்பொற்றிருத்தொண்டு முதலியனசெய்துவருகின்ற மூவாயிரத்தொகையினர். இத்தொண்டுக்கின்றியமையாத சமைய விசேஷ நிருவாண தீக்ஷை ஆசாரியாபிஷேக சிவசமஸ்காரங்களெல்லாம் அச்சிவாகம முறைப்படியேபெற்றுச் சரியை கிரியா யோக ஞானநெறியினிற்கின்றவர்கள். வேதசிவாகமாதி சிவசாஸ்திரமுழுதுந்தெளிந்து அம்முறைவழுவாது இல்லறநெறியினிற்கின்றவர்கள் சிவயாகங்கள்செய்து உலகைவாழ்விக்கின்றவர்கள். தியாகேசரால் " தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன் " என்று பாராட்டப்பெற்றவர்கள். இப்பெரியார்கள் எம்மையெல்லாம் நல்வழிப்படுத்தியாளும்படி நமக்கு வாய்க்கப்பெற்றவர்களாதலால் இவர்களை எப்போதும் வணங்கிவாழ்வோமென்பதாம்.

குறிப்பு:—இவர்கள், தில்லைநடேசதெரிசனமே எளிதில்முத்திதருமென்பதை எப்போதும் அணுக்கராய்ப்பூசித்துநின்றுயாவருக்குந்தெரிவித் துய்வித்தற்கு வந்தருளிய சிவவர்க்க பெருஞ்செல்வரென்க. இப்புராணசாரம் பாடியருளிய உமாபதிசிவமே சிதம்பரமான்மிய மொழிபெயர்ப்புக் கோயிற்புராணத்தில் பதஞ்சலி பத்ததியினுண்மை விளக்கியருளினார்.

திருச்சிற்றம்பலம்.

## திருநீலகண்டநாயனார் புராணசாரம்.

தில்லைநகர் வேட்கோவர் தூர்த்த *ராகித்
தீண்டிலெமைத் திருநீல கண்ட மென்று
சொல்லுமனை யாடனையே யன்றி மற்றுந்
துடியிடையா ரிடையின்பந் துறந்து மூத்தங்

*ஆகி—உவ உருபு. போன்று என்பதாம்.

கெல்லையிலோ டிறைவைத்து மாற்றி நாங்க
ளெடுத்திலமென் றியம்புமென விழிந்து பொய்கை
மெல்லியலா ளுடன்மூழ்கி யிளமை யெய்தி
விளங்குபுலீச் சரத்தரனை மேவி னாரே.

இ-ம். திருநீலகண்டநாயனுர், சிதம்பரத்தில் குயவர்குலத்தில் அவதரித்தவர். பொய்நெறியெல்லாம்நீக்கி மெய்ந்நெறியேபற்றிச் சிவபத்தி அடியார்பத்தியிற் சிறந்து, ஒரே மாதுபாகம் நோக்கி நின்றுநடனஞ்செய்கின்ற சிற்சபாநாதரையே வழிபாடு செய்து, ஒரே மாதைநோக்கி இல்லறம்புரிந்து வாழ்கின்றவர். சிற்றின்பத்திற் செலுத்தும் இளமைப்பருவமேற்பட்டிருந்தும் அவ்வின்ப நுகர்ச்சியிற்புத்திசெல்லாது குறைந்துவருதலால் அத்துறையில் எளியராயிருந்தனர். இதனுல் அருட்பெருஞ்செல்வராய் இல்லற நெறிவழுவாது நிற்பவரென்பது தெளிவாம். அவர்பத்தினியாரும் அவர்போல அருந்ததியைக்காட்டிலும் கற்பிற்சிறந்தவர். சிவபிரானுடைய கண்டம் உலகர்க்கிடர்செய்த விஷத்தைத் தன்னுளடக்கிக்காத்ததன்றேவென்று அன்புமிகுந்து திருநீலகண்டமந்திரமே செபித்துவருதலால் திருநீலகண்டர்என்றேபேர்பெற்றனர். இவர் சிற்சபேசதெரிசனஞ்செய்துவரும் வழியில் பெருமழையில் நனைந்து ஒருவீட்டின் புறத்தில் ஒதுங்கித்திருநீலகண்டம்என்றுகூறிக்கொண்டிருந்தனர். அது பரத்தைவீடாதலால் இவரது மகிமை தெரிந்த அவள் வந்துபணிந்து திருமேனியீரம்நீக்கி அதிபரிமள சந்தனலேபனுதிகளால் உபசரிப்ப, அவள் பத்திமிகுதியால் அச்செயல்களுக்கிணங்கிமழைவிடும்வரை அங்கிருந்துவந்தனர். களங்கமுள்ளவராகுல் சந்தனுதிகளை அழித்திவிட்டுவருவர், எக்காலத்தும்நிட்களங்கரோஎன்பது இதனுலுந்தெளிவாம். சந்தனுதிகளால் தூர்த்தர்போலவந்ததுகண்ட பத்தினியார்பிணங்கி நின்றனர். பிணக்குநீக்க நெருங்கும்போது அவர் " தீண்டுவீராகிலெம்மைத்திருநீலகண்டமென்ருர்' அவ்வாணைகேட்டவுடனேவிலகிநின்றுஎன்னை என்று கூருமல் எம்மைஎன்றதனுல், வேறு விவாகமுறையிலும் மற்றை மாதரையும் மனத்தாலுந் தீண்டேனென்று சபதங்கூறினர். பத்தினியார் என்றும்போலப் பணிவிடைகள் செய்துடனி

ருக்கவும், அவரை மனத்தினாலுந்தீண்டாது, இந்நிகழ்ச்சி பிறரும் அறியாது ஓரேமனையில் வாழ்ந்திருந்து வயோகதிகாரயினார். இவ்வுண்மைபக்தவிலாசங்களாலும், சேக்கிழார்பெருமான் 'மாதொருபாகநோக்கி' என்ற குறிப்பினாலும், அவர் தங்கண்மனைவியாருமருந்ததிகற்பின்மிக்கார் என்ற இறந்ததுதழீஇய எச்சஉம்மையாலும், "மல்குசீர்த்தொண்டர்" "சீலமார்கொள்கையென்னுந்திருந்துவேட்கோவர்" "சேணிடையுந்தீங்கடையாத்திருத்தொண்டர்" என்றருளிய வெளிப்படையாலும், "நிறையுடையவேட்கோவர்" என்று தில்லைவாழந்தணர்களும், "வென்றவைம்புலனான்மிக்கீர்" என்று சிவபிரானுங்கூறினமையாலும் மேலும்பல ஏதுக்களாலும் செவ்வேதெளியலாம்.

இவரது நிலைதவறாத பேரன்பின் திடத்தை யாவர்க்கும்விளக்கி உய்வித்தற்பொருட்டே, சிவபிரான் ஒருசிவயோகியாய்வந்து ஓடொன்றைக் கொடுத்து மறையச்செய்து, நெடுநாட்சென்று வந்துகேட்டுக் காணாதுவருந்திய அவரையும்அழைத்துக்கொண்டு தில்லைவாழந்தணர் சபையில்தெரிவித்து, அவர்கள் தீர்மானித்தபடி, குளத்தில்மூழ்கிச்சத்தியஞ்செய்வீரென்றுதிருப்புலீச்சரத்து (இளமையாக்கினார்கோயில்) திருக்குளத்துவந்துநிற்ப, உடன்வந்த நாயனார் சபதப்படி பத்தினியாரைத்தீண்டாமல் இருவரும் ஒரு தண்டினிருபக்கம்பிடித்து மூழ்கி இளமைபெற்றெழுந்துதேசோமய திவ்யரூபிகளாய்நின்றனர். யாவரும் அதிசயித்தனர். தேவர் புஷ்பமழை பொழிந்தனர். சிவபிரான் இடபாரூடராய்க்காட்சி கொடுத்தருளி, சிதேந்திரியர்களாயிருந்து உலகை உய்விக்கவந்த அன்பர்களே! இந்தஇளமைநீங்காமல் நமதுபக்கத்திருந்துவாழுக வென்றருளினர். இருவரும்சிவலோகமடைந்துபேரின்பம்பெற்று வாழ்ந்தனர்.

குறிப்பு:—இந்நாயனார் பற்று முற்றும் அற்ற நியமந்தவறா நிலையினர்க்கே முத்தி கைகூடுமென்பதுகாட்டத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## இயற்பகைநாயனார் புராணசாரம்.

எழிலாருங் காவிரிப்பூம் பட்டி னத்து
　　ளியல்வணிக ரியற்பகையா ரிருவர் தேட
வழலாய பிரான்றூர்த்த மறையோ னாகி
　　யாயிழையைத் தாவேண்டி யணைய வையுன்
கழலாரப் பணிந்துமனைக் கற்பின் மேன்மைக்
　　காதலியைக் கொடுத்தமர்செய் கருத்தால் வந்த
பிழையாருஞ் சுற்றமெலாந் துணித்து மீளப்
　　பின்னுகனை ரழைத்தருளப் பெற்று ளாரே.

இ-ம் இயற்பகைநாயனார், காவிப்பூம்பட்டினத்திலேவைசிய குலத்தில் அவதரித்தவர். உதாரமுதலிய உத்தமகுணங்களே உருவாய் வந்தபெருஞ்செல்வர். அடியார் குறிப்பறிந்து கொடுத்து அவரேவல்செய்தலே இல்லறநெறிக் குறுதியென நிற்கின்றவர். இவர் எதனையும் இல்லையென்னாதுகொடுத்துவரும் உறுதியையாவர்க்கும் விளக்கும்படி, சிவபிரான் பிராமணராய் விபூதியாதி சிவவேடத்துடன் தூர்த்தவேடமும் விளங்கவந்தனர். நாயனார் வணங்கி உபசரித்து அவர் அங்குவந்த விஷயந்தெரியுங் குறிப்பினராய்நின்றனர். பிராமணர் தாம் விரும்பிவந்தது உலகவிரோதமாதலால் உடனே கூறாமல் ஒருபொருளை விரும்பிவந்தேனென்ன, அதுயாதென்ன, நீ இல்லையென்னாதுதருவது றுதியானாற்சொல்லலாமென்ன என்னிடத்துள்ளயாவும் சிவனடியார்க் குரியனவேயென்ன, உன் மனைவியை விரும்பிவந்தேனென்றார். நாயனார் முன்னிலுமிகமகிழ்ந்து பத்தினியாருக்குத் தெரிவித்து அவரை அடியார் பத்தினியாயினரென்றுவணங்கி அழைத்துவந்து அவர்முன் விடுத்து யாவர்க்கும் வழித்துணையாகிய அவர்க்கு வழித்துணையாய்ச் சென்று தடுத்த சுற்றத்தார் யாவரையுங்கொன்றுநீக்கித், திருச்சாய்க்காடு சமீபித்தவுடன் அவரனுமதிப்படிதிரும்பி, அரிபிரமாதி தேவரும் ஓலமிடவுங்கிட்டாதவர். நாயனாரை 'இயற்பகைமுனிவாஓலமீண்டநீவருவாயோலம்' என்றழைப்ப, மிகவிரைந்துசென்று உமாதேவியாருடன் இடபாரூடராய்த்தோன்றக்கண்டு வணங்கிச்சிவபிரான்

அடியார்க்கருளுவது இன்னவிதமென்று சொல்ல முடியாதாத லால் "சொல்லுவதறியேன்" என்று பன்முறைதுதிப்ப நீயும்மனை வியும் நம்முடன்வருகவென்றருளினர். இருவரும் சிவலோகஞ்செ ன்று பெருவாழ்வு பெற்றனர். இவரால் இவர் முன் இவர் நினை வோடிறக்கப்பெற்ற சுற்றத்தவர்யாவரும் வானுலகிலின்புற்றனர்.

குறிப்பு:—இந்நாயனார்யான் எனதுஎன்னும் அகங்காரம் மம காரம் முற்றும்விட்டு அருள்பற்றிச்சென்றவர்க்கே முத்திகைகூடு மென்பது காட்டத்திருவருளால்வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வமென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## இளையான்குடிமாறநாயனார் புராணசாரம்.

---

மன்னியவே ளாண்டொன்மை யிளைசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்து வைகி
யுன்னருநள் ளிருண்மனையி லுண்டி வேண்டி
யும்பர்பிரா னணையவய லுழுது வித்துஞ்
செந்நென்முளை யமுதுமனை யலக்கா லாக்கிச்
சிறுபயிரின் கறியமுது திருந்தச் செய்து
பன்னலரு முணவருந்தற் கெழுந்த சோதிப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே.

இ—ம் மாறநாயனார், இளையான்குடியிலே தொன்றுதொட்டு நிலைபெற்றுள்ள சுத்தசைவவேளாளர்குலமாகிய சற்சூத்திரகுலத் திலே அவதரித்தவர். இவர், மேல்மூன்று சாதியார்முதலியயாவ ர்க்கும் தானியாதி விளைவித்தளித்து, அவரவர் வருணாச்சிரம தரு மம் வழுவாது நின்றுய்யச்செய்யுந்தமது குலத்துக்குரியபொதுத் தருமம், தம்மிடத்தே சிறப்புச் சிவதருமமாகி விளங்கச், சிவனடி யாரைவணங்கி அழைத்துவந்து ஆசனத்திருத்திச் சிவாகமவிதிப் படி சிவமந்திரங்களால் சிவனுகவே பூசித்துப், பாதோதகமுட் கொண்டு அன்னுதிகள்படைத்து தூபதீபம்புரிந்து நிவேதித்துக் கற்பூரதீபம் விளக்கி உண்பித்தலாகிய மாகேசுரபூசையே, இல்ல றத்துக்குரிய சிறப்பினதென்று தினமும் நடத்திவரும்நலத்தினுல்

தானியாதிவிளைவு பெருகப்பெருஞ்செல்வராய்வாழ்ந்தனர். இவர் செல்வங்குறையினும் அன்புகுறையாது தமது நியமத்தொண்டில் நிலைநிற்பவரென்பதை உலகர்தெரிந்து; புண்ணியங்களை செய்து வந்த நமக்கு வறுமைதந்தனரென்று கடவுளை நோகாமல், இவ் வறுமை முன் வினையால்வந்தது, இதுபோல இப்போது செய்யும் புண்ணியபலன் இனிமேல் கடவுளருளாற்கிடைக்குமென்றுதுணிந்துய்யும்படி, சிவபிரான் இவரது செல்வங்குறையச் செய்தருளினர். குறைந்தபின்னுஞ் சொத்துக்களைவிற்றும் கடன்வாங்கியும் மாகேசுரபூசைநடத்திவந்தனர். ஒருநாட் கடனுங்கிட்டாமல் பட்டினியாய் இரவிற் கதவடைத்தபின், சிவபிரான் சிவபத்தவேடம் பூண்டு வந்து கதவைத்தட்ட, நாயனர் வந்துபணிந்து ஈரந்துடைத்து வேறு வஸ்திரந்தரிப்பித்துக் குளிர்நீக்கி ஆசனத்திருத்தி, இவரை உண்பித்தற்கு என்செய்வோமென்றுவருந்த, மனைவியார் அந்தோ பாதிராத்திரியாயிற்றே எவ்விதஉதவியுமில்லையேபெரும் பாவியானேனே என்றுமிகவருந்தி, இன்று பகல் விதைத்தமுளை நெல்வந்தால் அன்னமாக்கலாமென்றுகூற, அதனை ஞாபித்ததற்கு மகிழ்ந்து, மழையும் இருளுஞ்செறிந்து வழிகுழிதெரியாது மறைத்துநிற்கும் நடுராத்திரியில் "ஒருபொருளுங்காட்டாதிருளுருவங் காட்டும், இருபொருளுங்காட்டாதிது" என்றபடிசிவப்பொருளைக் காட்டாது ஆன்ம அறிவைமறைத்ததுமன்றித் தன்னையுங் காட்டாதுநிற்கும் ஆணவமலஇருளையுங்கடந்து, திருவருள் விளக்கத்தாற் சிவப்பொருளையேகண்டுநிற்கும் இந்நாயனர் இவ்விருளுக்கு அஞ்சுவரோ! திருவருளைப் பற்றிச்சென்று முளைநெல்லை வாரிக் கொண்டுவந்தனர். வாசலில்நின்ற மனைவியார்வாங்கி அலம்பிவிறகில்லையேஎன்ன, நாயனர்,மனைமேல் அலக்குகளைஅறுத்துவீழ்த்த அவ்விறகினால் தீமூட்டி நெல்லைப்பதமாவறுத்து அரிசியாக்கிஉலையிலிட்டுக், கறிக்குஎன்செய்வோமென்ன, நாயனர் தோட்டத்திற் குழிநிரம்பாக் கீரைமுதலிய பிடுங்கிவரச், கைச்சாதுரியத்தால்பல வகைக்கறிகளாக்கியதுகண்டநாயனர், ஆனசத்திருந்தவரை வணங்கித்திருவமுது செய்தற்கு எழுந்தருளுகஎன வேண்ட, உடனே அவர் சோதியாய்த்தோன்றியருள, இருவருங்கண்டு திகைத்து நிற்குஞ்சமயம் சிவபிரான், உமாசமேதராய் இடபாரூடராய் வந்தருளி, மாகேசுரபூஜை வழுவாதுசெய்தநீங்களிருவரும் நம்துபத

நிழலிற் பேரின்புற்றுவாழுக என்றருள்செய்து மறைந்தருளினர். அவ்விருவரும் அப்பேறுபெற்றுவாழ்ந்தனர். முளைநெல்லைவறுத்தது ஆணவமலம் வலிகெட்டொழிந்ததையும், கீரைமுதலியபிடுங்கியது பிராரத்த அனுபவமுடிவையும் ஆகாமியம் வந்தேறுமையையும் விளக்கும்.

குறிப்பு;—இந்நாயனார் ஆகமவிதிப்படி செய்யும் மாகேசுர பூசை மலவலிநீக்கி வினைப்போகம் ஒழித்துத்திருவடிப்பேறுதரு மென்பதை விளக்குதற்குத்திருவருளால் வந்தருளியசிவவர்க்கப் பெருஞ்செல்வமென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## மெய்ப்பொருணாயனார்புராணசாரம்.

---

சேதிபர்நற் கோவலூர் மலாட மன்னர்
திருவேட மெய்ப்பொருளாத் தெளிந்த சிந்தை
நீதியினு ருடன்பொருது தோற்ற மாற்று
னெடுஞ்சினமுங் கொடும்படையு நிகழா வண்ண
மாதவர்போ லொருமுறைகொண் டணுகி வாளால்
வன்மைபுரிந் திடமருண்டு வந்த தத்தன்
காதலுற நமர்தத்தா வென்று நோக்கிக்
கடிதகல்வித் திறைவனடி கைக்கொண் டாரே.

இ-ம். மெய்ப்பொருணாயனார், குறுநிலமன்னர். சேதிநாட்டிலே திருக்கோவலூரில் மலைநாட்டரசராய் நீதிதவறாது பகைவென்று சைவநெறிதழைத்தோங்க அரசுசெய்கின்றவர். சிவசாஸ்த்திரங்களினுண்மை தெளிந்து, சிவனடியார் திருவேடமும் சிவாலயமும் சிவனெனவழிபடுதலே மெய்ப்பொருளெனக்கண்டுறுகப் பற்றிநிற்கும் உறுதிப்பாட்டினால், சிவனடியார்வரூதிதாரணங்கண்டளவே மகிழ்ந்துவணங்கி வேண்டியவெல்லாங்கொடுத்தும், சிவாலயங்களெங்கும் நித்தியநைமித்திகாதி பூசனைகள் சிவாகமவிதிப்படி சிறப்புறநடத்தியும் வருகின்றவர். இச்சிவபுண்ணியவிசேடத்

தால்பெருகிவளரும் பெருஞ்செல்வமிறைந்த இவரதுநாட்டைப் பிடிக்கக்கருதி, முத்திநாதனென்றொருபகைவன், பலமுறைபடை களுடன்வந்து தோல்வியடைந்தும், இவர்விபூதியில்வைத்தஅன்பு தெரிந்து வஞ்சித்துவெல்வானாய், விபூதிதரித்துவந்து பலவாயில்க ளிலும்காவலாளர்கள் விபூதிகண்டு வணங்கிவிலகிநிற்பஉட்சென்று முதல்வாயில் காக்குந் தத்தனென்னும் புத்திமான், அரசர் சயனித்திருத்தலால் சமயந்தெரிந்து செல்லுகஎன, அரசற்கு உறுதி கூறவந்தேனென்று அவனையுங்கடந்துட்செல்லுங்கால், மாதேவி யார் பாதம்வருட அரசர் சயனித்திருப்பது தெரிந்தும் நெருங்கு தல்கண்டு, தேவியார் அரசர்க்கறிவிக்க, அரசர் எழுந்துவணங்கி நிற்ப, அப்பாதகன் உங்கள் சிவனருளிய ஆகமம் எங்குமில்லாத தொன்றுபதேசிக்க வந்தேனென்றுகூறினன். உங்கள் சிவன்என் றதனாலேயே கபடந்தெரிவதாயிருக்கவும் அன்பின் முதிர்ச்சியால் அரசர்அதனை அருளுகவென்று தாழ்ந்தனர். பெரும்பாவிதனித்து வருகவென்றுகூற, அரசர் தேவியாரை உள்ளே செலுத்திவிட்டு அவனை ஆசனத்திருத்தி வணங்குஞ்சமயம் மறைத்து வந்த வாளி னால் கொலைப்பாதகம் புரிந்தனன். முன்னரே அங்குமனம்வைத்த தத்தன் ஓடிவந்து கொல்லப்புகும்போது, அத்தருணத்திலும், தத் தனே இவர்நம்மவர் இடரின்றிப்போகவிடுவாயென்று ஆஞ்ஞாபித் தருள அவன்நெடுந்தூரம் உடன்சென்று அப்பாதகனுயிர்நீங்காது போகும்படி அனுப்பிவிட்டுவந்து அறிவிப்ப, அரசர் அதுதமக்கோர் பேருதவியாகமகிழ்ந்து, மக்கள் மந்திரி முதலியாரைநோக்கி விபூதி யில் அன்புதவறாது சைவந்தழைக்க, அரிசுபுரிகஎன்றுபோதித்து விட்டுத் தியானநிலையினிற்பச் சிற்சபேசர் காட்சிகொடுத்தருளிக் குஞ்சிதபாதத்திற் சேர்த்துக்கொண்டனர்.

குறிப்பு:—இந்நாயனார் "மாலறநேய மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத்தொழுமே" என்ற சிவாகம சித்தாந்த நிலையேமுடிந்த நிலையென்பது விளக்கி உய்விப்பத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

# விறன்மிண்டநாயனார்புராணசாரம்.

---

விளங்குதிருச் செங்குன்றூர் வேளாண் டொன்மை
  விறன்மிண்டர் திருவாரூர் மேவு நாளில்
வளங்குலவு தொண்டரடி வணங்கா தேகும்
  வன்றொண்டன் புறகவனை வலிய வாண்ட
துளங்குசடை முடியோனும் புறகென் றன்பாற்
  சொல்லுதலு மவர்தொண்டத் தொகைமுன் பாட
வுளங்குளிர வுளதென்று ரதனா லண்ண
  லுவகைதர வுயர்கணத்து ளோங்கி னாரே.

இ-ம். விறன்மிண்டநாயனார், மலைநாட்டில்திருச்செங்குன்றூரில்வேளாளர்குலத்தில் அவதரித்தவர். இவர், அநித்தியமாகியபிரபஞ்சப்பற்று முற்றும்விட்டுநித்தியனாகிய சிவனையேபற்றி வழிபடும் விசேடதவத்தால், சிவனடியார்களையேபற்றி வழிபடு முறையில், முதலில் சிவனேசர் திருக்கூட்டத்தை வணங்கிப் பின்பு சிவனை வணங்கிவரும் நியமசீலர், சிவஸ்தலங்களெங்கும் இம்முறையே தெரிசித்துவந்து திருக்கூட்டம்நிறைந்த திருவாரூரில் தேவாசிரய மண்டபத்துள்ள சிவநேசர் திருத்தொண்டு செய்து வாழுங்கால், முன்னெல்லாம் தேவாசிரயன் முன்பணிந்தே பின் கோயிலுட்புகுதும் சுந்தரமூர்த்திநாயனார், ஒருநாள் இவ்விறன் மிண்டரன்பின் றிடத்தையும் திருத்தொண்டர்மகிமையையும்விளக்கக்கருதிய திருவருள்வசத்தால் தேவாசிரயன் முன்பணியாது செல்லுதல் கண்டவுடன், இவனும் புறகு இவனை வலிய அடிமை கொண்ட சிவனும் புறகென்று கூறினர்.

இதனால் சிவனது முழுமுதற்றலைமையிற்சிறந்தது சிவநேசர் தலைமையென்பது விளக்கமாம். இதனை "ஈசனெதிர் நின்றாலுமீசனருள் பெற்றுயர்ந்த, நேசரெதிர் நிற்ப தரிதாமால் தேசுவளர், செங்கதிர்மு னின்றாலுஞ் செங்கதிர வன்கிரணந், தங்குமணல் நிற்பரிதே தான்." என்றுபெரியார் கூறுதலாற்காண்க. சுந்தரர்தியாகேசர் திருவருளால் தேவாசிரயன் முன்புவந்து " அடியார்க்கும்

அடியேன்" என்று "ஞாலமுய்ய நாமுய்ய நம்பிசைவநன்னெறியின் சீலமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன்பாட" அதுகேட்ட விறன்மிண்டர் மிகமகிழ்ந்து இச்சுந்தரர்க்குஅடியாருடனுந்தலைமை யுள்ளதுஎன்றார். சிவனையேபற்றிய சிவவர்க்கத்தினராகிய இவரே முன்பு புறகுஎன்றும் பின்பு உள்ளது என்றுங்கூறுவரேல்உண்மை யடியார் மகிமைபுறத்துள்ள வேடஞ்செயல்வகைகளால் அறியத் தக்கதோ! ஆந்தரங்கஉரிமைநோக்கி உண்மைகண்டுவழிபாடுசெய் துய்வருத்தமரென்க. இவ்வாறு சிவநேசர் திருக்கூட்டத் திருத் தொண்டே செய்துவந்த விறன்மிண்டநாயனார் திருவருளால் சிவ பதநிழலில் திருக்கூட்டத்தலைவராய் சுத்தாத்துவித நித்தியானந் தம்பெற்று வாழ்ந்தனர்.

குறிப்பு:— இவர் உண்மையன்பர்வழிபாடே நன்மையின்பு தருமென்பது காட்டியுய்விக்கத் திருவருளால்வந்தருளிய சிவ வர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## அமர்நீதிநாயனார்புராணசாரம்.

---

பழையாறை வணிகரமர் நீதி யார்பாற்
பரவுசிறு முனிவடிவாய்ப் பயிலு நல்லூர்க்
குழைகாதர் வந்தொருகோ வணத்தை வைத்துக்
கொடுத்ததனை யெடுத்தொளித்துக் குளித்து வந்து
தொழிலாரு மதுவேண்டி வெகுண்டு நீரித்
துலையிலிடுங் கோவணநேர் தூக்கு மென்ன
வெழிலாரும் பொன்மனைவி யிளஞ்சே யேற்றி
யேறினர்வா னுலகுதொழ வேறி னாரே,

இ-ம். அமர்நீதிநாயனார், சோழநாட்டில் திருப்பழையாறைநகர் வைசியர் குலத்தவதரித்தவர். இவர் சிவனடியார்க்கு அமுதளித் தல் * கந்தை கீள் உடை கோவணமுதலிய கொடுத்து வழிபடும்

* கந்தம் — தோள். கந்தை—தோள்வஸ்திரம். கீள்—லங் கோடு. உடை—அரையின்வஸ்திரம்.

மாகேசுரபூஜா நியமப்பெருஞ்செல்வர். திருநல்லூரில் மகோற்சவ தினமுழுதும் மாகேசுவரபூசை நடத்துகின்றவர். சிவபிரான்தமது அருள்மயமாகிய கோவணமகிமைகாட்டி, இவரதுபேரன்பையாவர்க்கும் விளக்கி உய்விக்கத்திருவுளங்கொண்டு, பிராமணப் பிரமசாரியாய்த் தண்டின்மீதிருகோவணங்களுடன் வந்தனர். நாயனார் வணங்கிநிற்ப, அன்பரேநீர், சிவனடியார்க்குஅன்னவஸ்திராதிகள் கொடுப்பதுதெரிந்து வந்தனமென்றார். நாயனார் இங்கே பிராமணர்க்குத்தனிமையாகப்பிராமணர் சமைப்பதுமுண்டு; திருவமுது செய்தருளுகஎன்றுவேண்ட, இக்கோவணத்தை வைத்திருந்து தருகஎன்றுகொடுத்தனர். நாயனார்வாங்கிப்பெட்டகத்துள்வைத்தனர். பின்பு சுவாமி அதனை மறைத்துவிட்டு மழையில்நனைந்து வந்தனர். நாயனார் வணங்கி அமுதுசெய்ய உள்ளெழுந்தருளுகஎன்று வேண்ட, முன்புதந்த கோவணத்தைத்தருக என்றனர். உட்சென்றுகாணாதுதிகைத்து, வேறொன்றுகொண்டுவந்து உண்மைகூறி, இதைத் தரித்துக்கொண்டு அமுது செய்தருளுகவெனவேண்டினர். சுவாமி கோபித்து நீ நமது கோவணமகிமை தெரிந்து அபகரித்தற்காகவே எல்லாருக்குங் கோவணங் கொடுக்கிறவனென்றுபிரசித்திசெய்து சமயம்பார்த்துஎன்கோவணத்தை எடுத்துக்கொண்டாயென்று கூறினர். நாயனார் மேலும்வணங்கி அடியேன் இதனை அபகரிக்கமனத்திலும் நினைத்திலேன், இவ்வொன்றுக்கு அனேகந்தருகிறேன். இப்பிழை பொறுத்தருளுக என்றுவேண்டினர். அவையெல்லாம் நமக்கேன் நமது கோவணநிறைதந்தால் போதுமென்று தண்டிலிருந்த கோவணத்தைநீட்ட நாயனார் மகிழ்ந்து தராசில்ஒருதட்டில் அதனைவைத்து, மற்றொரு தட்டில் தாம்கொண்டுவந்த கோவணத்தையிட, நிறைஒவ்வாமை கண்டு, மேலும் பலகோவணங்கள், வஸ்திரங்கள், சொர்ண ரத்நாதிகள் ஒன்றொன்றாகவேண்டி இடுந்தோறும் கோவணத்தட்டு மேலும்தாழ, நாயனாரித்தனையுமிட்டதட்டு மேலேறியது. நாயனார் வணங்கிச், சுவாமி இனி அடியேனும் பத்திநியும்புத்திரனுந்தானிருக்கின்றோம். தராசிலேற அநுமதிதந்தருளுகவென்று வேண்டி உடன்பாடுதெரிந்து, பத்திநி புத்திரருடன் தராசைவலஞ்செய்து இதுவரை சிவனடியார் திருத்தொண்டு தவறாது செய்துவந்தோ

ாலுல், நேர் நிற்கட்டுமென்று கோயிலைநோக்கிவணங்கி பஞ்சா
ஷரஞ்செபித்துக்கொண்டு ஏறினார். அருள்வடிவாகிய கோவண
ிமையும் அன்புவடிவாகிய நாயனார் மகிமையும்சமமாதலால்தட்
ரண்டும்ஒத்துநின்றன. கண்டாரெல்லாரும் அரகரகோஷஞ்செய்
ார்கள் தேவர் பூமழைபெய்தனர். சிவபிரான் உமையம்மையா
ோடு ரிஷபாரூடராய்க் காட்சிகொடுத்தருளினர். நாயனார் தரா
ில் நின்றபடியே வணங்கித்துதிக்க அன்பனே நீ நமது உலகடை
துபேரின்புறுகஎன்றருள உடனே அத்தராசேவிமானமாச்செல்ல
ர்வரும் சிவலோகமடைந்து நித்தியானந்தம்பெற்று வாழ்ந்தனர்.

குறிப்பு:—இவர் கீழுள்ள அடிமைகளாகிய நம் அன்புமே
லற ஏற மேலுள்ள ஆண்டவனாகியசிவனருள் தாழ்ந்துதாழ்ந்து
வந்து நம்மிடம்பதியுமென்பதுகாட்டி நம்மை உய்விக்கத்திருவரு
ளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வமென்க.

திருச்சிற்றம்பலம்.

## எறிபத்தநாயனார்புராணசாரம்,

திருமருவு கருவூரானி லையார் சாத்துஞ்
சிவகாமி யார்மலரைச் சிந்த யானை
யரனெறியோ ரெறிபத்தர் பாக ரோடு
மறவெறிய வென்னுயிரு மாற்றீ ரென்று
புரவலனார் கொடுத்தபடை யன்பால் வாங்கிப்
புரிந்தரிவான் புகவெழுந்த புனித வாக்காற்
கரியினுடன் விழுந்தாரு மெழுந்தார் தாமுங்
கணநாத ரதுகாவல் கைக்கொண் டாரே.

இ-ம். எறிபத்தநாயனார் கருவூரில் சிவாலயவழிபாடும் சிவ
னடியார்திருத்தொண்டுமேசெய்கின்றநியமசீலர். சிவனடியார்க்கு
யாரேனும் இடர்செய்யின் அவர்களைக்கொன்று, அவ்வடியார்
செய்யுந்தொண்டுகள்இடரின்றிநிகழச்செய்கின்ற மழுவாயுதங்கை
யிற்கொண்டவர். சிவகாமியாண்டார் பூங்கூடைதூக்கிக்கொண்டு

வரும்போது, அந்நகர்க்கரசர்புகழ்ச்சோழநாயனாரது பட்டவர்த்தன்யானைபின்வந்து பறித்துக்கொட்டியது திருமுடியிலேறுமலர்களை யானைநிலத்தில் சிந்தியது முறையோ*"சிவதாசிவதா"என்று முறையிட்டலறினர். எறிபத்தர்ஓடிவந்து யானையை உதைத்தனர். யானையோ யாரையும்வெல்லும் வலிமிக்கது. மதமிகுந்தசமயம். நவமி உற்சவக்களிப்பு மேலீட்டினால் மேலிருவர் பக்கத்து மூவராகிய ஐந்துபாகர் அடக்கவும் அடங்காதுசெல்வது. அவ்வுதையைப் பொறுக்குமா? உடனே திரும்பியது. அப்பொழுது எவரும் நடுங்கியோடும் நிலையதாயிருந்தும், நாயனார் சிவதுல்லிய சர்வவல்லவராதலினால் அசையாது முன்னின்றுதுதிக்கையை மழுவினால் வெட்டினர் அலறிவீழ்ந்திறந்தது. பாகர் ஐவரையும்கொன்றனர். மேலும்மழுவேந்திநின்றனர். யானையும்பாகருமிறந்தமை பகைவராலென்று கேள்வியுற்ற அரசர், யுத்தசந்நத்தராய்க் குதிரைமீதுவந்து நாயனார் நிற்பதுதெரிந்து ஆ! ஆ!! நான் கெட்டேன் இப்பெரியவர் குற்றமின்றிக்கொல்லமாட்டார். இவர் இக்கொடியயானை முன்வந்தபோது, யாதோர் அபாயமும்வாராமல் தப்பியது யான்செய்தபெருந்தவமேயென்றுகூறித்தனித்துவந்து வணங்கிச்சுவாமீ, இக்குற்றத்திற்கு இத்தண்டனை போதியதோவென்றனர். நாயனார் நிகழ்ந்ததைக்கூறினர். அரசர்இதுஎன்னால் வந்ததாதலால் என்னையுங்கொல்லவேண்டும்; நானும் பாதகனாயினேன். திருக்கரத்து மங்கலமழுவாற்கொல்லுதல் தகாது. இவ்வாளாற்கொன்று குற்றம்நீக்கியருளுகவென்று வாளைநீட்டினர். நாயனார், இவ்வுத்தமர்க்கு நான்செய்த குற்றம்நீக்கிக் கொள்வேனென்று அவ்வாளை வாங்கித்தம் கழுத்தில்வைத்தனர். அரசர்மிக நடுங்கி வாளைப்பின்னின்றிழுக்க நாயனார்கழுத்தைஅரிதற்குஇழுக்கின்ற இந்த நிலையில், ஓர் வாக்கு, மெய்யன்பினிலைமையை விளக்குதற்கே யானைபூவைச்சிதறும்படி திருவருள்செய்ததென்றெழுந்தது. உடனே பாகருடன் யானையும் எழுந்தது. இருவரும் ஒரு

---

*சிவதாஎன்பது துக்கத்தாற்புலம்பும் ஓரிடைச்சொல் லென்பர். சிவதன்—மங்களம்கொடுப்பவனென்பதாம். ஆதலால்அவனை அழைத்ததாகக்கொள்ளுதலே பொருத்தமென்க.

வரை ஒருவர் வணங்கிமகிழ்ந்தனர். முன் சிந்தியமலர்களும் பூங் கூடையில் நிறைந்தன. சிவகாமியாண்டார் தமது பணிநோக்கிச் சென்றனர். நாயனார் அரசரை அந்தயானைமேலேறிச்செல்லும்படி வேண்டினர். அரசர் அவரைவணங்கிக்கொண்டு அவ்வாறு சென்ற னர். எறிபத்தநாயனார் இப்பெருந்தொண்டேசெய்திருந்து திருவரு ளாற்சிவலோகமடைந்து நித்தியானந்தப் பெருவாழ்வுபெற்றனர்.

குறிப்பு:—இவர் சிவனடியார்க்கு இடர்செய்வாரைக் கொல் லுதல், சிவனடியார் திருத்தொண்டு வழுவாது நடைபெறுதலும், இடர்செய்தார்க்கு அதுவே தண்டனையாய் அப்பாதகம்வளர்ந்து பின் அவரை வருத்தாதொழிதலுமாகிய இருவித சிவபுண்ணிய மாமென்னும் உண்மைவிளக்கி உய்விக்கத் திருவருளால் வந்தரு ளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## ஏனாதிநாதநாயனார் புராணசாரம்.

---

ஈழக் குலச்சான்றா ரெயின னூர்வா
 ழேனாதி நாதனா ரிறைவ னீற்றைத்
தாழத் தொழுமாபார் படைக ளாற்றுந்
 தன்மைபெறு வதிசூர னமரிற் றோற்று
வாழத் திருநீறு சாத்தக் கண்டு
 மருண்டார் தெருண்டார்கை வாள்வி டார்நேர்
வீழக் களிப்பார்போ னின்றே யாக்கை
 விடுவித்துச் சிவனருளே மேவி னாரே.

இ—ம். ஏனாதிநாதநாயனார், சோழநாட்டில் எயினனூரில் சான்றார்குலத்தில் அவதரித்தவர். விபூதியே சிறந்தபொருளென உறுதிகொண்டவர். அரசர்க்குவாள்வித்தைபயிற்றிவரும்பொருள் முழுதும் சிவனடியார்க்குபகரித்துவருபவர். இவருடைய தாய பாகத்தொருவன்பொறாமையால்விரோதியாய், நாமிருவரும்போர் செய்வோம் அதனில் வென்றவரேவாள்வித்தைபயிற்றுரிமையும்,

அதனால்வரும் பொருளுங்கொள்ளவேண்டுமென்றான். நாயனார், இசைந்து யுத்தசந்நத்தராய்வர, அவனும் போர்செய்து தோற்றோடி, வஞ்சித்துவெல்லக்கருதி, மறுதினம் தனிவந்து பிறரும் உடன் வந்திறவாமல், நாமாத்திரம் தனிநின்று போர்செய்வோம் என்றனன், நாயனார் அவன்கூறிய வெளியிடத்துவந்து நின்றனர். அவர்க்குவிபூதியிலுள்ளமெய்யன்புதெரிந்தஅவன், நெற்றிநிறைய விபூதிதரித்து, அதனை நாயனார்கண்டால் தூரத்தே வணங்குவர் நமதுகருத்துமுடிவுறுமென்று கேடகத்தால் நெற்றியைமறைத்து வந்து, யுத்தந்தொடங்கினன். நாயனார் இடைதெரிந்து வெட்டப் புகுஞ்சமையம் கேடகத்தை மாற்றினன், நாயனார் விபூதிகண்டு நடுங்கி, ஆ! கெட்டேன்! இவர்சிவனடியாராயினர். இவர்நம்மைக் கொல்லநினைத்தபடி செய்கவென்று வாளைவிட்டுநிற்கக்கருதி, விட்டால் இவர்க்கு நிராயுதரைக்கொன்றதோஷம்வருமென்று அதனை விடாது யுத்தஞ்செய்வார்போலநிற்ப, மகாபாதகன் நினைத்தபடியேசெய்தான். சிவனருள் இத்தன்மையது இவ்வளவினதென்று யாவர்கூறுவர். மலவலிகடந்ததீவிரதரபரிபாகிகள்உடலுள்ளவரை அநுபவிக்கவேண்டிய பிராரத்தகர்மாநுபவகாரணபாசவலியைப், பகைவன்வாளால் ஒழித்தருளியசிவபிரான் வெளிவந்தருளி, அன்பனே நம்முடன்பிரியாவாழ்வுறுகவென்றருளினர். நாயனார் அவ்வாறே திருவடிநிழலில் என்றும்நீங்காத நித்தியானந்தம்பெற்று வாழ்ந்தனர்.

குறிப்பு:—இவர் உயிர்க்கிறுதிவரினும் விபூதியில் அன்புசிறிதுந்தவறாதிறுகப்பற்றிநிற்கும் நிலையே பாசநீக்கமும் சிவத்துவப் பேறுந் தருமென்ற சித்தாந்தநிலைவிளக்கிஉய்விக்கத்திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வமோங்க.

திருச்சிற்றம்பலம்.

---

## கண்ணப்பநாயனார் புராணசாரம்.

---

வேடாதி பதியுடுப்பூர் வேந்த னாகன்
விளங்கியசேய் திண்ணனார் கன்னி வேட்டைக்
காடதில்வாய் மஞ்சனமுங் குஞ்சிதரு மலருங்
காய்ந்தின மென்றிடுதசையுங் காளத்தி யார்க்குத்

தேடருமன் பினிலாறு தினத்தளவு மளிப்பச்
சீறுசிவ கோசரியுந் தெளியவிழிப் புண்ணீர்
ஓடவொரு கண்ணப்பி யொரு கணப்ப
வொழிகவெனு மருள்கொடரு குறநின் றூரே.

இ-ம். கண்ணப்பநாயனார் பூர்வம்பாண்டவரில்நடுநாயகமாக விளங்கிய அர்ச்சுனரே. இவர், பாசுபதாஸ்திரம்வேண்டிப் புரிந்த தவநிலையில் வேடரூபியாய்ப்பன்றியைத்துரத்திவந்த சிவபிரானுடன் யுத்தஞ்செய்து, உமையருளால் யதார்த்தரூபங்கண்டு வணங்கிநிற்ப, நீ வேண்டிய வரமென்னென்றுகேட்கப், பாமுத்தி தந்தருளுகஎன்றனர். அஸ்திரம் வேண்டியே தவஞ்செய்தாய் நமது தரிசனப்பேற்றால் மற்றெல்லாம்மறந்து முத்திவேண்டுகின்றனை. காண்டற்கரும்பொருள் காணப்பெற்றால், அங்குவேண்டுவதுஅப் பெரும்பொருளன்றிச் சிறுபொருளன்று. இது புத்திசாதுரிய பத்திமான்கள்முறையே; ஆயினும், நீ முன் விரும்பியதுதந்துஅச் செயலும் இச்சென்மத்திற் சேஷமின்றி ஒழிக்கவேண்டுமாதலால் அதனை இப்பொழுதுதந்து பின்புமுத்திதருவோம். நீ யுத்தமுகத்தில் நம்மை வேடனென்று கூறினமையால் வேடனாய்ப் பிறந்து நம்மை வேடரியல்பிற்பூசித்துஆறுநாளில் பாமுத்திபெறுகவென்றருளினர்.

அப்படியே திருக்காளத்தி மேற்றிசை உடுப்பூரில்வேடராசனாகிய நாகனுக்குப் புத்திரராய் அவதரித்தனர். உடனே எடுத்தணைத்த நாகன் கைக்குக்கனமாய்த் திண்மையாயிருந்ததுகண்டு, திண்ணனென்றுபெயரிட்டனன். திண்ணனார்வளர்ந்துவந்து வில்வித்தைதெளிந்து இனங்களுடன் வேட்டையாடும்போது, ஒரு பன்றி தப்பியோட விரைந்தோடி, ஆணவமல வலியையடியோடு களைதல்விளங்க வாளினால் வெட்டினர். பிரியாத நாணன் காடனிருவரும் திருவருளும் வாசனமலமும்போலத் தொடர்ந்து வந்து, இப்பன்றியைக் காய்ச்சித்தின்று தண்ணீர்குடித்து இளைப்பாறிச் செல்வோமென்ன, நாயனார் தண்ணீரெங்குளதென்ன, நாணன் நேர்தோன்றுமிப்பெரியதேக்கின் புறத்தே பொன்முகலியாறோடுகின்றதென்ன, நாயனார் பன்றியைத்தூக்கி வருகவென்றுகூறி,

(க) அத்தேக்கையேநோக்கிச்சென்று காளத்திமலைகண்டு, இம்மலையிற்செல்வோமென்ன (உ) நாணன் அங்குநல்லகாட்சியேகாணப்படும் (ங) கோணமில்குடுமித்தேவரிருப்பர்கும்பிடலாமென்றான், (ச) நாயனார் நாணனே இம்மலையைப்பார்த்துக்கொண்டு அணுக அணுக என்மேலொரு சுமைநீங்காதிருந்து இப்போது நீங்குவதாகத்தெரிகின்றது, (ரு) அன்றியும் முன்னெல்லாம் வேட்டை முதலியவைகளிலேயே ஆசைப்படும் என்மனசு வேறாய் ஓர் விருப்பமுற்று விரைந்து செல்கின்றது, (சா) குடுமித்தேவர் எங்கிருக்கின்றார் விரைந்து வருகவென்று வேகமாச்சென்று பொன்முகலி சமீபித்தவுடன், காடனைத்தீக்கடைந்துவையென்று நிறுத்திவிட்டு, நாணன்உடன்வர அடிவாரத்துவந்து தத்துவவரிசைகள் முழுதுங்கடந்தமை விளங்க அம்மலைப்படிகளைக்கடந்தேற ஏற, முற்றவமானது அன்பைமேன்மேலறச்செய்து அதன் சொரூபமிதுவேயென விளங்கும்படி எடுத்துக்காட்ட மேற்சென்று தத்துவாதீத சிவலிங்கப்

---

(க) இது, சித்தாந்தங்கூறியபடி மனமெங்குமலையாமல் அகப்பூசனை முறையில் திருவருளைப்பற்றி இருதயத்தில் சிவமூர்த்தி பாவனையால் ஒரு குறியில் நிறுத்தி மேற்செல்லுதலை விளக்கும்.

(உ) இது, பிரபஞ்சக்காட்சிமுற்றும்நீங்கிச்சிவக்காட்சியே வெளியாதலை விளக்கும்.

(ங) இது, அதர்வசிகையில், எந்த வாதிகளாலும் மறுக்கமுடியாமல் முடிந்தமுடிவாய் "சிவன் ஒருவனே யாவராலுந்தியானிக்கத்தக்கவன் நித்திய மங்களத்தைச்செய்பவன் அந்நியரான பிரமவிஷ்ணுவாதி தேவர் யாவரையுங் கைவிட்டு அவன் ஒருவனையே தியானிக்குக, அதர்வசிகை முற்றிற்று. "என்று கூறிய முழுமுதற்றலைவராகிய மகாதேவரைத்திருவருள் காட்டுதலை விளக்கும். குடுமி—சிகை.

(ச) இது, இவரை வேறெனக்காணப்படாது பந்தித்திருந்த தனுகாரணாதிகள் திருவருளால் வேறெனக்காணப்பட்டொழிதலை விளக்கும்.

(ரு) இது, உலகப்பற்று நீங்கி உலகாதீத சிவத்தைபற்றிச் செல்லுதலை விளக்கும்.

(சா) இது, இதுவரைதொடர்ந்துவந்த வாசனாமலம் அருள்வெள்ளங்கண்டஞ்சிமெலியுஞ் சமயந்திருவருள்வலியினால் அதனைஇம்மட்டிலொழிகவென்று நிறுத்திவிட்டுச் சிவத்தைக்காட்டுதற்குஉடன்வருகின்றதிருவருளுடன் செல்லுதலை விளக்கும்.

பெருமானுக்கு நேர்வரும்போதே சிவபிரான், பொதுக்கருணை மூநிர்ந்த சிறப்புத்திருவருட் பார்வை செய்தருள, உடனே நாயனார் தரிசனவேதியால் இரும்பு பொன்னாதல்போல,முற்சார்புகள் முற்றும் விட்டொழிதலால், முன்புள்ள தோல் நரம்புமுதலியவற்றாலாகிய உடம்புமாறித், திவ்விய தேசோமயமான மெய்யன்பே வடிவாய் விளங்கச்சென்று காளத்தியப்பரைக் கண்டமாத்திரமே அதிவேகமாயோடி அதிமோகமாய்க்கட்டியணைத்துச்சிமோந்துள்ளங்குளிர்ந்துருகக்கண்ணீர் பெருகநின்று அன்புமொழிபலகூறிக் காளத்திநாதர் முடிமீது பத்திரபுஷ்பங்கண்டு, இது செய்ததுயாரோவென்றனர். முன்னெல்லாம் நாணனை வினவியேவந்தவர்,இப்பொழுது வேறொன்றுந்தோன்றாமல் சிவம் ஒன்றையேகண்டு அன்பேசிவமாய்அதீதநிலையில்நிற்றலால், நாணன்நிற்பதுந்தோன்றாது தாமேகூறினர். நாணன் முன்பு ஒரு பார்ப்பான் இத்தேவர் முடியில் தண்ணீர்வார்த்துப்பச்சிலையும்பூவுஞ்சூட்டி உணவும்ஊட்டினன்; இப்பொழுதும்அவன் செய்தனன்போலுமென்றான். நாயனார் இவைகள் இவர்க்கு உகந்தசெயலாமென்று நிச்சயித்துஉணவு கொண்டுவரக்கருதி, சுவாமீ தனித்திருக்கின்றீரே உமக்கு உணவு வேண்டுமே என்பார், பிரியமாட்டாது வருந்துவார், பின் உணவு நோக்கியே ஒருவாறு செல்வார், திரும்பிவருவார், கட்டியணைப்பார், கண்ணீர்பெருக நிற்பார், மீளுவார், திரும்புவார், இத்தகைய அற்புதச்செயல்கள் இவரது பேரன்பைவிளக்கக், கீழிறங்கி வந்தனர். உடன்வந்த நாணன் இவர் செயலைக் காடனுக்குக்கூறினன். அதனையும் காடன் இவரை நோக்கிக்கூறுதலையுந்தெரியாது, பன்றிஇறைச்சியைநெருப்பில்காய்ச்சி வாயிலிட்டுச்சுவைபார்த்து தேக்கிலையில்வைத்து ஒருகையில் எடுத்துக்கொண்டு, புஷ்பங்களை குடுமியுள்ளும், பொன்முகலிநீரைவாயினுள்ளும், வில்லைமற்றொருகையிலுங்கொண்டுவந்து, சுவாமி முடியில் முன்னுள்ள புஷ்பங்களைச் செருப்புக்காலால்தள்ளி, வாயிலுள்ள நீரை அபிஷேகித்து, பூவைச்சூட்டி, இறைச்சியை முன்வைத்து, உண்டருளுமென்று வேண்டி, அவர் அதனை விரும்பி, உண்டபின்மகிழ்ந்து, மிருகங்களால்இடர்வாராது பாதுகாக்குங்கருத்தினராய், பகலும் இரவும், விழித்தபடியே வில்லையேந்திக்கொண்டு சுவாமியையே நோக்கி நின்று, விடியற்காலம் இறைச்சிகொண்டுவரச் சென்றனர்.

நித்தியபூஜகர் சிவகோசரியார்வந்து, சுவாமி உண்டுமிஞ்சிய இறைச்சி சிதறிக்கிடப்பதுகண்டு வருந்திச் சுத்தப்படுத்தி, மீண்டு ஸ்நானமுதலியனசெய்து வந்துசம்புரோக்ஷணைபுரிந்து பூஜித்துச் சென்றனர்நாயனார்பலஇறைச்சிகள்சுவைபார்த்துத்தேனுங்கலந்து கொண்டுவந்து பூசித்து இனியமொழிகள்கூறி உண்பித்து, முன் போற் சுவாமியை நோக்கியேநின்று விடியற்காலம் வனம்புகுந்த னர். சிவகோசரியார்வந்து மிகவருந்திமுன்போற் பூசித்துச்சென் றனர். நாணனும் காடனும் திண்ணனார் தெய்வப் பயித்தியரானா ரென்றுகூற, நாகன் வருந்திவந்து பலஉபாயங்கள் செய்தும் தன் வழிவாராமையால் ஏக்கத்துடன் திரும்பினன். நாயனார் அவன்வந் ததுந்தெரியாது சிவமயமாய் நின்றனர். வழக்கப்படி இருவர்பூச னையும் நிகழ்ந்துவர, ஐந்தாநாட் சிவகோசரியார் இவ்வனுசாரம் அறிவில்லாவேடர்செயலேயென்றுகருதி, எம்பெருமானே இதனை நீக்கியருளுக எனவேண்டிச் சென்றனர். அவர்கனவில்காளத்தி நாதர்தோன்றி, அன்பனே உன்உதபகால பூஜையின் பின் உச்சிக் காலபூஜை செய்துவருகின்ற அவனை இவ்வுலகவேடனென்றுநினை யாதே; உலகாதீத நிலையனே. அவன் வடிவு நமது அன்புமயமே. இரத்தமாமிசாதியமானுடவடிவன்று. அவன் அறிவு முழுதும் நம் மையே அறியுஞ் சிவஞானமே. பாசஞான பசுஞானங்களல்ல. அவன் செயல் முழுதும் நமக்கும் பேரின்பமேதரும் லோகாதீதச் செயலே. உலகர் செயலல்ல. நமது முடிமேற் பூவைக்கழிக்கும் செருப்படி, நமது இளங்குமரன் சிற்றடியிலுமிக இன்பந்தருகின் றது. வாயாலுமிழ்நீர், அவனதுஅன்பேவடிவமாகிய அதிபரிசுத்த பாத்திரத்தினின்று வருதலால், கங்காதி தீர்த்தங்களிலும் விசேட தீர்த்தமேயாம் என்பனவாதி அருமைகள்விளக்கி, நமது பின்பக் கம் ஒளித்திரு, அவன் மெய்யன்பின் நிலைமைகாட்டுவோமென்று கூறிமறைந்தருளினர். சிவகோசரியார், விழித்தெழுந்துமகிழ்ந்து இப்பெரியர்செயலை அநாசாரமென்ற பாதகனேனே எனவரு ந்தி, விடியும்வரை அவரையே தியானித்திருந்து, முன்போல் அநு சிதமென்றுசுத்திசெய்யாமல் உதபகாலபூசைமுடித்துப்பின்பக்கத் தொளித்திருந்தனர்.

நாயனார், வழக்கப்படி வருங்கால் துர்ச்சகுனங் கண்டு, இது இரத்தங்காட்டுகின்றதே சுவாமிக்கு என்ன அபாயமோ என்றுபதறிவேகமாகவரும்போது, காளத்திநாதர் வலக்கண்ணில் இரத்தம் ஒழுகச்செய்துகொண்டிருப்ப, தூரத்திற் கண்டளவே பதைபதைத்தோடிவந்து வீழ்ந்தார். எழுந்தார் கட்டியணைத்துக் கொண்டுகதறினார். இரத்தத்தைத்துடைத்தார். மேலும்ஒழுகுதல் கண்டார். ஐயோஎன்செய்வேனென்றார். ஆவிசோர்ந்துவீழ்ந்தார். ஒருவாறு எழுந்தார். வெட்டுக்காயந்தீர்க்கும்மூலிகைபிடுங்கிப்பிழிந்தார். மேலும் இரத்தம் பெருகுதல்கண்டார். சுவாமீ இத்தீமை செய்தபாவிகள் யாரென்றார். வில்லையெடுத்தார். எங்கும்பார்த்தார். ஒருவரையுங்காணாதுதிரும்பினார். திகைத்துநின்றார். அவரிடத்து நிகழ்ந்த ஆராமைஆராலும் அளவிடற்கரியதே. அவ்வாறுநிற்கும் அவர்மனசில், "ஊனுக்கூனிடுக." என்னும் வேடச்சாதிவழக்கப் பழமொழிவிளங்கியது. உடனே தமது வலக்கண்ணை அம்பினால் இடந்தெடுத்து அப்பினார். இரத்தம் நீங்கிக்கண்ணும் தெளிவாய் விளங்கக்கண்டார். ஆனந்தங்கொண்டார். கூத்தாடினார். இவர் கண்ணை அம்பினால் இடந்தெடுத்தபோது, இவர் உடம்புஊனுடம்பாயிருந்தால், இரத்தம் பாந்து உபாதிமிகுந்து ஒரு செயலும் நிகழாது. முன்கூறியபடி அன்பேவடிவாதலால் உபாதியின்றிப்பேரானந்தமே விளைத்தது. அன்பும் அருளும் ஒற்றுமையுள்ளவாதலால் அன்பாகிய தமது கண்ணை அருளாகிய சுவாமிகண்ணில் அப்பினவுடனே மேலும் மருந்து முதலிய பக்குவம்பண்ண வேண்டாது தெளிவாய் விளங்கியது. சுவாமி பின்னரும் இடக்கண்ணில்இரத்தம் ஒழுகச்செய்தனர். நாயனார் மற்றைக்கண்ணையும் அம்பினால் எடுத்துஅப்பநினைந்து, சுவாமி கண்ணிருக்குமிடந்தெரியவேண்டி, அக்கண்ணுக்கு அருகில் செருப்புக்காலால் நிதானமாக ஊன்றிக் கொண்டிருந்து, இடது கண்ணில் அம்பைவைத்தனர். உடனே சுவாமி"நில்லுகண்ணப்பநில்லுகண்ணப்ப என்அன்புடைத்தோன்றல் நில்லுகண்ணப்ப" என்று கூறிக்கொண்டே, அவ்விலிங்கத்திற்றோன்றிய திருக்கரத்தால் நாயனார் திருக்கரத்தைப் பிடித்தருளித், தலையன்பே உருவாய்வந்த நமது தலைமகனே, உன்னைஇடையறாது பார்த்துக்கொண்டித்தலேயாவர்க்கும் இன்பந்தருகின்றநமக்கு நீ தருவதோர் பேரின்பமாகும். ஆதலால் நீ நம்மைவிட்டு நீங்

காமல் நமது வலப்பக்கத்திலேயே எப்போதும்நின்று காட்சிதருக வென்று திருவாய்மலர்ந்தருளினர். அருளியவாறே "அன்பேசிவ மென்பதாருமறிந்து" உய்யும்படி யாவர்க்கும் அன்புதந்து அருளிற்புகுத்தும்.பெருந்தலைவராய் அணிமையினின்றருளுகின்றனர்.

குறிப்பு:—இவர், பக்குவமுறையிற் பலதிறப்படும் தடஸ்த நிலை அன்பெல்லாம் மேன்மேற்சென்று இதற்குமேல் வேறில்லை எனமுடிந்துவிளங்கும்தத்துவாதீதசொரூபநிலைமெய்யன்பு இதுவே என்றுதீவிரதாபரிபாகர்க்குவிளக்கியருளும்படி திருவருளால்வந்தருளியசிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க. இதனை, அரிபிரமேந்திராதி தேவர் முனிவர் யாவரும் தம்மை வணங்கி உய்யும்படி அருளுகின்ற திருவருட்பெருஞ் செல்வர்களாகிய திருஞானசம்பந்தர், முதலிய சமயாசாரியரும், இங்குவந்து இவரை அன்பின் சொரூபமேயென்றுவணங்கித்துதித்தமையாலும்,அவர்களருளியதேவார திருவாசகாதி திராவிடசுருதியெல்லாம் ஆங்காங்குவிதந்து பாராட்டுதலாலும்,

கண்ணப்ப னொப்பதோ ரன்பின்மை யென்றமையாற்
கண்ணப்ப னொப்பதோ ரன்பதனைக்—கண்ணப்பர்
தாமறிதல் காளத்தி யாரறித லன்றிமற்
றாரறியு மன்பன் றது. என்றுசித்தாந்த சுருதியாகியதிருக்களிற்றுப்படியார் தெளிய விளக்குதலாலும் காணலாம்.

திருச்சிற்றம்பலம்.

---

## குங்குலியக்கலயநாயனார் புராணசாரம்.

---

சீல்மலி திருக்கடவூர்க் கலயனா ராந்
திகழ்மறையோர் பணிவறுமை சிதையா முன்னே
தாலியைநெற் கொளவென்று வாங்கிக் கொண்டு
சங்கையில்குங் குலியத்தாற் சார்ந்த செல்வர்
ஞாலநிகழ் திருப்பனந்தா ளுதர் நேரே
நாபதியுந் தொழக்கச்சா லயந்து போதப்
பாலமுத முண்டாரு மரசு மெய்திப்
பரிந்தமுது செயவருள்சேர் பான்மை யாரே.

இ—ம். கலயநாயனார், திருக்கடவூரில் பிராமணகுலத்தில்அவதரித்தவர். குங்குலியதூபமுதலிய தொண்டுசெய்தலால் குங்குலியக்கலயரென்று வழங்கப்பெற்றனர். திருவருளால் வறுமை வந்தும், சொத்தெல்லாம் விற்றுவிற்றுப் பணிதவறாது செய்துவந்தனர். உணவின்றி மக்களும் சுற்றமும் வருந்துதலால், பத்தினியார் நெல்வாங்கும்படி தாலியைக்கொடுப்ப, வாங்கிச்சென்று, ஒருவன் ஒருபொதிசுமந்து வருதல்கண்டு இஃதென்னெனக், குங்குலியமென்றான். நாயனார்மகிழ்ந்து, சிவபணிக்குரிய அரும்பொருள் கிடைத்திருப்ப வேறொன்றுகொள்வது தகாதென்றுதுணிந்தனர். இத்துணிவு, அத்தாலிஇவர் உயிர்நிலையேயாதலால், உயிரைக்கொடுத்துவாங்குவது உயிர்க்குறுதிதருஞ்சிவபூஜாத்திரவியமே. உடற்குறுதிதரும் நெல்லன்றெனணும்உண்மையுடன், இவர் உடற்பற்றுமுற்றும்நீங்கி நிற்றலைவிளக்கும். துணிந்த நாயனார், தாலியைக் கொடுத்து பொதியை வாங்கிக்கோயிலிற் பெட்டகத்துவைத்து, அப்பணி செய்துகொண்டிருந்தனர். இவர் இப்பணிவசத்தாய்ச் சிவத்தையேபற்றி மற்றெப்பொருளிலும் பற்றற்று நிற்றலால், தாலியைநிறைசெய்து அப்பொதிக்குள்ளதுகொடுத்துமேற்கொண்டுள்ளதைக்கைக்கொள்ள நினையாமல்கொடுத்துவிட்டார். இதனால் உயிர்ப்பற்றும் ஒழிந்துநிற்கும் உண்மைவிளக்கமாம். இவர் செயலிவ்வாறிருக்கப் பத்தினியார், மக்களுடன் பசியால்வாடி நித்திரை செய்கின்றபோது, திருவருளால்அம்மனையேபெருந்திருமாளியாக குபேரன் நெல் அரிசி முதலிய எல்லாமும் மலைமலையாகக் குவித்து வைத்தனன். சுவாமி கனவில்தோன்றி அதனை விளக்கியருளினர். விழித்தெழுந்த பத்தினியார், அப்பொருள்களை நேரேகண்டுதிருவருளைத்துதித்து, விரைந்துதிருவமுதுபாகஞ்செய்து நாயகர்வரவை நோக்கி வாயிலில்நின்றனர். கோயிலிலிருக்கின்ற நாயனாரைச்சிவபிரான் அன்பனே, உன் கிருகத்திற்சென்று பாலன்னமுண்டு பசி நீங்குகவென்றருள, நாயனார் அவ்வாணையைமறுக்கமாட்டாதுவந்து பத்தினியார் வாயிலில் நிற்றல்நோக்கியே தமது மனை இதுவெனத் தெரிந்து, இது திருவருளே என்றுட்புகுந்து பத்தினியாரைவினவ இவையெல்லாம் நமது வீரட்டானேசர் திருவருளால் வந்தனவென்ன, நாயனார் திருவருளை நினைந்துருகிநின்றனர். பத்தினியார்,

சிவனடியார்களுடன் நாயகரைவிதிப்படி தூபதீபாதிகளாற்பூசித்து அமுதுசெய்வித்தார். நாயனார்பெருஞ்செல்வராய் மாகேசுரபூசை குங்குலியதூபப்பணிமுதலியன மேலும்பெருகச்செய்துவந்தனர்.

இந்நாளில், திருப்பனந்தாளிற்சிவலிங்கப்பெருமான், ஒருபக்கஞ்சாய்ந்திருப்பதைநோக்கி வணங்கக்கருதிய அரசன், பலஉபாயங்கள்செய்துநேர்வாராமையால்இலிங்கத்தில்மெத்தென்றபொருள்களை வைத்தணைத்து அதன்மேல் பெருவடஞ்சேர்த்து யானைகள் சேனைகளாலிழுக்கச்செய்து வருந்துவானாயினன். அதனைநாயனார் கேள்வியுற்றுஅங்குவந்து, அரசன்சேனையானைகள் இழுத்திழுத்து ஆற்றுமலிளைப்பது கண்டிரங்கி, அடியேனு மிவ்வாறிளைப்பேனென்று அவ்வடத்தைத் தமதுகழுத்திற்சேர்த்திழுத்தனர். உடனே சுவாமிநேர்நின்றனர். இதனால், முன்னும் ஒருவர் மெய்யன்புவடத்தாலிழுக்கச்சாய்ந்தனர். இப்பொழுதும் இந்நாயனார்மெய்யன்புவடத்தாலிழுக்க நிமிர்ந்தனராதலால் அவர் அன்பின்வசத்தரே ஆனைசேனை ஆடம்பரவசத்தரன்றென்பது தெளிவாம். உடனே அரசன் நாயனாரைவணங்கி, அவர்முன்னிலையாகவே அக்கோயிற்றிருப்பணிகள் செய்தனன். நாயனார்மீண்டு திருக்கடவூர்வந்திருந்தனர். அப்போது திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசரிருவரும் வருகின்ற திருவெழுச்சிதெரிந்து எதிர்சென்றுவணங்கிக் கோயில் வந்து அவர்கள் பதிகம்பாடிவெளிவருஞ்சமயம் வேண்டி அழைத்துவந்து பூசித்து அவரவர் திருத்தொண்டர்கள் பல்லாயிரவருடன் தமதூமாளிகையில் திருவமுதுசெய்யும் பெரும்பாக்கியம்பெற்று நியமத்தொண்டுகள் செய்திருந்து சிவபதநிழலிற்பேரின்பம் பெற்றனர்.

குறிப்பு:—இந்நாயனார், சிவாகமங்கள் சிவபூசாவிதானத்தில் தூபதீபநைவேத்தியாதிகளின் தாற்பரியங்கூறுமிடத்துத், தூபப்பணிஆணவமலவலியின்நீக்கம்வேண்டிச்செய்வதென்னும்உண்மை நோக்கி, அதனையேமுதன்மையாகக்கொண்டு எந்தஇடர்வரினும் நழுவவிடாது செய்துவந்தால், மற்றெப்பொருளினும் பற்றொழிந்து முத்திபெற்றுய்யலாமென்பதுகாட்டியுய்விக்கத்திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## மானக்கஞ்சாற நாயனார் புராணசாரம்.

கஞ்சநகர் மானக்கஞ் சாறனார் சீர்க்
காதன்மகள் வதுவைமணங் காண நாதன்
வஞ்சமலி மாவிரதத் தலைவ னாகி
வந்துபுகுந் தவளளக மகிழ்ந்து நோக்கிப்
பஞ்சவடிக் காமென்ன வரிந்து நீட்டும்
பத்தரெதிர் மறைந்திறைவன் பணித்த வாக்கால்
எஞ்சலில்வண் குழல்பெற்ற பேதை மாதை
யேயர்பிராற் குதவியரு ளெய்தி னாரே.

இ-ம். மானக்கஞ்சாறநாயனார், கஞ்சாறு என்னும் நகரில் வேளாளர்குலத்தில்அரசர்சேனாபதிக்குடியில் அவதரித்தவர். சிவனடியார் குறிப்பறிந்து ஏவல் செய்தலே உயிர்க்குறுதியென்று செய்துவருகின்றவர். இவர் தமது புத்திரியை ஏயர்கோன்கலிக்காமநாயனார் மணஞ்செய்ய விரும்புவதுநோக்கி, அவ்வாறே நிச்சயித்தனர். அவரும் அவ்வூர்க்கு வந்தனர். கல்யாணச்சடங்குகள் நடக்கின்றசமயம்சிவபிரான், மகாவிரதசமயத்தவர் வேடம்பூண்டு அங்குவந்தனர். கஞ்சாறர் புத்திரியையும் அழைத்துவந்து வணங்கினர். மாவிரதியார்ஆசீர்வதித்து இவள்கூந்தல் நமதுபஞ்சவடிக்கு (பூணூலுக்கு) ஆகுமென்றனர். உடனே நாயனார் கூந்தலை அடியோடு அரிந்துகொடுத்தனர். இது மூண்டிதமானால் மணவாளர் ஏற்கமாட்டாரே; சுமங்கலப்பெண்ணை முண்டிதமாக்குதல்விரோதமன்றோ! என்பனவாதிய உலகமுறைதோன்றாத உலகாதீதநிலையில் சிவனடியார் கருத்தின்படி நிற்றலைவிளக்கும். கூந்தலைவாங்கினவர், ஆகாயத்தில் உமாதேவியாருடன் இடபாரூடராய்த்தோன்றக்கண்டு நாயனார் வணங்கித்துதிக்கச், சுவாமி அவருக்குஎன்றுந் தம்மை நீங்காதுவாழும் பெரும்பேறு கொடுத்தருளிமறைந்தருளினர். அதுதெரிந்த கலிக்காமர், முண்டிதப்பெண்ணைவிவாகஞ்செய்தல் சாஸ்திரவிரோதமன்றோஎன்று திகைத்துநின்று, அன்பனே கூந்தலைமீளக் கொடுத்தனம் மணஞ்செய்து வாழுகவென்றருளக்

கேட்டு மகிழ்ந்து, அருளால் கூந்தல் வளரப்பெற்ற அப்பெண்ணை விவாகஞ்செய்தழைத்துக்கொண்டு சென்றனர். மானக்கஞ்சாறர் சிவலோகத்தையடைந்து சிவபதம்பிரியாப்பெருவாழ்வுபெற்றனர்.

குறிப்பு:—இவர், உலகப்பற்று முற்றும்அற்ற உலகாதீதநிலையிற் சிவனையேபற்றிநின்று சிவனடியார் எதனை விரும்பினும் இது ஒப்போதப்போஎன்றுநோக்காமல் உடனே கொடுப்பதே, மலவிருள் அடியோடொழிந்து பசுபோத நீக்கத்துச்சிவபோக நித்திய மங்களம் பெறுதற்கேதுவாமென்பது காட்டியுய்விக்கத்திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## அரிவாட்டாயநாயனார் புராணசாரம்.

---

தாவில்கண மங்கலத்துள் வேளாண் டொன்மைத்
தாயனார் நாயனார் தமக்கே செந்நெற்
றூவரிசி யெனவிளைவ தவையே யாகத்
துறந்துணவு வடுவரிசி துளங்கு கீரை
ஆவினிலைந் துடன்கொணா வோர்கமரிற் சிந்த
வழிந்தரி வாள் கொண்டூட்டியரியா முன்னே
மாவடுவி ஞெலியுமரன் காமுந் தோன்றி
வாள்விலக்கி யமரர்தொழ வைத்த தன்றே.

இ-ம். அரிவாட்டாயநாயனார், சோழநாட்டில் கணமங்கலத்தில் சற்சூத்திரகுலத்தில் அவதரித்தவர். சிவபிரானுக்கு செந்நெல் அரிசி செங்கீரை மாவடுவும் பஞ்சகவ்வியமும் தினமும் கொடுத்தலாகிய நியமத்திருத்தொண்டு செய்துவரும்பெருஞ்செல்வர். திருவருளால் செல்வங் குறைந்தும், நெல்லரியுங் கூலிவேலை செய்துவருஞ்செந்நெற்களைச் சுவாமிக்குங், கார்நெற்களைத் தம் உணவிற்கும் உபயோகித்துவந்தனர். சிவபிரான் வயல்முழுதுஞ் செந்நெல் வேலையைச்செய்தனர். நாயனார் மிகமகிழ்ந்துஅப்பணிசெய்துவருநாள், மனைவியார் தோட்டத்து இலைக்கறிமுதலியவற்றைப்பாகம்

பண்ணிக்கொடுக்க உண்டுவந்தனர். அவைகளும் ஒழிந்தபின் தண்ணீர் குடித்துப் பணிதவறாது செய்தனர். ஒருநாள் மனைவியாரும் தாமும் அரிசி முதலியனகொண்டு கோயிலுக்குவரும் வழியில், பசியால் தள்ளாடிவிழும்சமயம், மனைவியார் கையாலணைத்தும் முடியாமல், எல்லாம் நிலத்தில் வெடிப்பினுள் சிந்திவிடக்கண்டு; நாயனார் வருந்தி, நியமந்தவறினபின் உடம்புடனிரேனென்று, அரிவாளைக்கழுத்தில்வைத்து ஊட்டியையும் அரியும்போது, அவ்வெடிப்பினின்று மாவடுவைக்கடித்துத்தின்னுகின்ற ஓசையுடன், சிவபிரானுடைய திருக்கரமேலெழுந்து நாயனார் கையைஅரியவிடாது தடுத்தது. உடனே நாயனார் அவ்வோசையே சிலம்போசையாக மகிழ்ந்து, கழுத்திலுள்ள இரத்தம் ஊறுமுழுது நீங்கித்திட சரீரியாய் எழுந்துவணங்கி, எம்பெருமானேசிறியேன்அறியாச்செயல் கண்டும், வெடிப்பிடமே முன்னிலையாகவந்தருளி, நியமந்தவறாது அமுதுசெய்தபேரருளை என்னென்று கூறுவேனென்று துதித்து நின்றனர். சிவபிரான் உமாதேவியாருடன் இடபாரூடராய்த் தோன்றி, அன்பனே, உன்செயல் யாருஞ்செய்தற்கரிய அதிநன்மையதே. நமது லோகத்துக்குவந்துன்மனைவியுடன் எப்பொழுதும் பிரியாது வாழுகவென்றருளி; உடனழைத்துச் சென்றனர். இருவரும் சிவலோகஞ்சென்று பிரிவிலாப்பேரின்பப்பெருவாழ்வு பெற்றனர். இவர்செய்த அரியசெயல் உலகாதீதமான திருவருட்செயலாதலால் இதனைத் திருக்களிற்றுப்படியார்,

"செய்யி லுகுத்த திருப்படி மாற்றதனை
ஐய விதுவமுது செய்கவெனப்—பையவிருந்
தூட்டி யறுத்தவற்கே யூட்டி யறுத்தவரை
நாட்டியுரை செய்வதென்னோ நாம்." என்று விதந்துபாராட்டியது.

குறிப்பு:—இவர், திடபக்திமுறையிற் செய்யும் நியமசிவநிவேதனத்தால், தற்போதமுற்று மொழிந்து பிராரத்தகர்மசேஷமின்றி முத்தியின்புறுதலை விளக்கியுய்விக்கத்திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## ஆனாயநாயனார் புராணசாரம்.

மங்கலமா மழநாட்டு மங்கலமா நகருண்
மருவுபுக ழானாயர் வளரா மேய்ப்பார்
கொங்கலர்பூந் திருக்கொன்றை மருங்கு சார்ந்து
குழலிசையி னைந்தெழுத்துங் குழைய வைத்துத்
தங்குசரா சரங்களெலா முருகா நிற்பத்
தம்பிரா னணைந்து செவிதாழ்த்தி வாழ்ந்து
பொங்கியவான் கருணைபுரிந் தென்று மூதப்
போதுகவென் றருளவுடன் போயி னாரே.

இ—ம். ஆனாயநாயனார், மழநாட்டிலே மங்கலவூரில்இடையர் குலத்தில் அவதரித்தவர். அக்குலத்தலைவராய்ப் பசுநிரைகள் சுக முற்றுவாழமேய்த்து வருகின்றவர். காந்தர்வ வேதமுறைப்படி வேய்ங்குழலிலே சிவபரமான இசைபாடிமகிழ்விக்கின்றவர், ஒரு நாள் மாலைகள்போற் பூங்கொத்துகள்தொங்க முழுதும்பொன்னிறமாய்த் தோன்றுகின்ற கொன்றைமரத்தைப்பார்த்துச், சிவரூபமாகவே நினைத்து மனங்கசிந்துருகத் திருவைந்தெழுத்துக்களை வேய்ங்குழலிலமைத்துப்,பலவகை இசைநுணுக்கமெல்லாம்விளங்கப்பாடிக்கொண்டு நின்றனர். அவ்விசை சிவமயமாய்எங்கும்வியாபித்தலால், பசுக்களெல்லாம் புல்மேய்தலையும் மறந்து அசையும் விடாதணுகிவந்து அவ்விசையைநோக்கியே அசைவற்றுநின்றன. கன்றுகள் பாலுண்டலை மறந்துநின்றன. எருதுகளும் அவ்வாறுயின. அங்கங்கே வேலைசெய்வாரும், ஓங்கிய மண்வெட்டி ஓங்கியபடியே நிற்றல்முதலிய குறைத்தொழிலினராய் நின்றனர். ஒன்றுக்கொன்று பகையாயுள்ள சிங்கம், யானை முதலிய மிருகங்கள் பகையின்றி நெருங்கிவந்து அசையாது நின்றன. ஆடுகின்றமயில்கள் ஆடாதுநின்றன. மற்றும் பக்ஷிகளும் அவ்வாறுயின. இசையிற்சிறந்த வித்தியாதரர், கின்னரர் முதலியரும் தத்தம்தொழின் மறந்துவந்து தேவாமுதையும் வேம்பினுங் கசப்பாய் வெறுத்து இவ்விசையமுதமினிதுண்டு மகிழ்ந்தனர், மாக்கொம்புகள் நதிகள்

முதலியவும் அசைவின்றிநின்றன. இவ்வாறுசராசரசீவகோடிகளை எல்லாம் தன்வசமாக்கி மேற்செல்லுகின்ற பஞ்சாக்ஷரபாராதகீத ரூபமெய்யன்பு வடம்பற்றியிழுப்பச், சிவபிரான், அம்பாசமேத ரிஷபாரூடராய் ஆகாயத்துவந்தருளி, மெய்யன்பனே கயிலாசத் தில் நமதுஅன்பர்களும் இவ்வினிய இசையமுதுண்டு மகிழும்படி நீ எப்போதும் பக்கத்திருந்து வாசிக்குகஎன்று அழைத்துக் கொண்டுசெல்ல; அப்படியே அவ்வின்னிசைபாடிக் கொண்டுசென்று அனவரத பஞ்சாக்ஷரகீதம்புரிந்து சிவமேயாயமர்ந்தருளினர்.

குறிப்பு:—இவர், எப்பற்றும் நீங்கிச்சிவரூபமே நோக்கிச்சிவ மயமாய்நின்று செய்யும் பஞ்சாக்ஷரகீதமே பராநாதசொரூபசிவத் துடன் சேர்ந்துவாழும் பேரானந்தந்தருமென்பது காட்டத் திரு வருளால் வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வரென்க,

திருச்சிற்றம்பலம்,

---

## மூர்த்திநாயனார் புராணசாரம்.

---

வழங்குபுகழ் மதுரைநகர் மூர்த்தி யாராம்
வணிகர்திரு வாலவாய் மன்னர் சாத்த
தழங்குதிர முழங்கைதாத் தேய்த்த வூறுந்
தவிர்ந்தமணர் வஞ்சனையுந் தவிர மன்னன்
இழந்தவுயி ரினனாக ஞால நல்க
வெழில்வேணி முடியாக விலங்கு வேடம்
முழங்குபுக ழணியாக விரைநீ றாக
மும்மையுல காண்டருளின் மூன்னி னாரே.

இ-ம். மூர்த்திநாயனார், பாண்டிநாட்டில் மதுராபுரியில்வைசி யர்குலத்தில் அவதரித்தவர். ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசர், அபிஷேகத் துக்குரியசந்தனங்கொடுத்துவருகின்றவர், வருங்காலத்தில், பாண் டியராசனைவென்று அரசுசெய்கின்ற கன்னடதேசத்தரசன், சம ணர் துர்ப்போதனையால் தானுஞ்சமணனாகி இந்நாயனாரையுஞ்சம ணராக்கநினைத்து இணங்காமையால், இவர்க்குச் சந்தனக்கட்டை கொடுக்கப்படாதென்று தடுத்துவிட்டான். நாயனார் சுவாமியை வணங்கி இப்பாதகனிறந்தொழிவதும், சைவம்வளர்க்குஞ்சற்புரு

க்ஷன் அரசனாவதும் எக்காலமோவென்று பிரார்த்தித்துக்கொண்டு சந்தனக்கல்லில் கையைத்தேய்த்தனர். தோல்நரம்புஎலும்புதேய்ந்து இரத்தம்பாய்ந்தது. சுவாமி அசரீரியாய் அன்பனே உன்றிடபத்தியால் இவ்வாறுசெய்தலொழிக; நீயேஅரசனாயிருந்துகொடுங்கோலரசனால்வந்ததீமைநீக்கி, உன்பணியை என்றுஞ்செய்து சிவலோகத்தையடைக என்றருளினர். நாயனார் தேய்த்தலொழிந்தனர். கையும்ஊறுநீங்கியது. அன்றிரவே, அப்பாதகனிறந்தனன். அவனுக்குப்புத்திரனில்லாமையாற்காலையில்மந்திரிகள், பட்டத்துயானையைப்பூசித்து இந்நாட்டுக்கு அரசனைத்தெரிந்தெடுத்துவருகவென்றுகண்களைமறைத்துவிட்டனர். யானை,கோயிலிற்சுவாமியை நோக்கித்துதித்துநிற்கின்ற நாயனார்முன்வணங்கித் துதிக்கையினாலெடுத்து முதுகில்வைத்துக்கொண்டு வந்தது. மந்திரிகள்வணங்கி மகுடாபிஷேகத்துக்குரிய கிரியைதொடங்கினர். நாயனார், சமண் சமயம்நீங்கிச் சைவசமயமேஎங்கும் ஓங்கினாற்றான் அரசாட்சியை மேற்கொள்வோமென்றனர். மந்திரிகள் தேவரீர்திருவுளப்படியே செய்தருளுக என்றனர். நாயனார், நமக்கு விபூதிதான் அபிஷேகம்; ருத்திராக்ஷந்தான் ஆபரணம்; சடைதான் மகுடம் என்று கூறி, அவ்வாறேமகுடாபிஷேகங்கொண்டருளித் திருவாலவாயிற் சென்று, சித்திவிநாயக மீனாக்ஷிசுந்தரேசுரபாதங்களில் வணங்கித், திருவருளைநினைந்து மனங்கசிந்துருக மேலும் பிரார்த்தித்துக்கொண்டுவந்துசிங்காசனத்திருந்து, அந்நியசமயக்கொடுமைகளைநீக்கிச் சைவந்தழைத்தோங்கநெடுங்காலம் அரசுசெய்துவந்து சிவபதநிழலிற்கலந்து நித்தியானந்தம்பெற்றுவாழ்ந்தனர். இவர், விபூதிருத்திராக்ஷம்சடைமூன்றையேமேற்கொண்டு உலகைஆண்டுவந்தமையால் "மும்மையாலுலகாண்டமூர்த்திக்குமடியேன்" என்றுசுந்தரமூர்த்திகளால் துதிக்கப்பெற்றனர்.

குறிப்பு:— இவர், விபூதி, ருத்திராக்ஷாதி சிவசின்னங்களில் இடையறாத மெய்யன்புசெய்தலே தத்துவாதீதமுத்திநிலையைத் தருமென்னும்உண்மைகாட்டி உய்விக்கத்திருவருளால்வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## முருகநாயனார் புராணசாரம்.

மன்னுதிருப் புகலூர்வாழ் முருக னாராம்
மறையவர் கோவர்த்த மானீச்ச ரத்தார்
சென்னியினுக் கழகமரு மலர்கள் கொய்து
திருமாலை புகழ்மாலை திகழச் சாத்தி
கன்னிமதிற் கழுமலநா டுடைய நாதன்
காதன்மிகு மணங்காணுங் களிப்பி னாலே
யின்னல்கெட வுடன்சேவித் தருளான் மீளா
திலங்குபெரு மணத்தானை யெய்தி னாரே.

இ-ம். முருகநாயனார்சோழநாட்டில்திருப்புகலூரில் பிராமண குலத்தில்அவதரித்தவர். இவர், திருவருளால் பதிபசுபாசமென்னு முப்பொருள்களில் பாசம் பசுக்களைப்பந்தித்து நல்வழிச்செல்லவி டாதுதடுப்பதென்றும் பசுக்கள், பாசமாகிய அசத்தைச்சார்ந்த போது அசத்தாயும் பதியாகிய சிவத்தைச்சார்ந்தபோது சத்தா யும், சார்ந்ததன்வண்ணமாய்ச்சதசத்தாய்நிற்பதென்றுமுணர்ந்து பாசநீக்கமும், சிவத்துவப்பேறும்பெற்றுப், பதிஞானமாகிய சிவ ஞானத்தின் முடிந்தஎல்லையில் உறைத்துநிற்றலால், உலகப்பற்று முற்றும்நீங்கிச் சிவத்தையேபற்றிநிற்கின்றவர். இதனைச் சேக்கி ழார்பெருமான் "ஞானவரம்பின்றலைநின்றார்" என்றுசுருங்கச்சொ ல்லி விரிந்துவிளங்கவைத்தருளியதனாற்றெளிக. இந்நிலையில்நிற்கி ன்றநாயனார், அந்நிலைதளரவிடாது அதற்குயிராய்ப்பாதுகாப்பது, சிவதீக்ஷாவிதிநியமசிவபஞ்சாக்ஷரசெப சிவபூஜாமுறையினிற்றலே யாம். சிவனையேபற்றிநிற்கும் நமக்குச்சிவபூஜாநியமம்வேண்டா வென்றொதுக்கின், முன்னைநிலையும்நழுவியொழிதலுமன்றி, நன்றி மறந்த பிராயச்சித்தமில்லாதசிவத்துரோகமே விளைக்குமென்னும் சிவாகமத்தினுண்மை நன்குணர்ந்தவராதலால் தினந்தோறும் விடி யுமுன்விதிப்படிஸ்நானஞ்செய்து, நால்வகைமலர்களெடுத்துவந்து கோவை, இண்டை, தாமம், மாலைகண்ணி, பிணையல், தொங்கல் முதலிய பலவேறுவகையதிருமாலைகள்செய்து, அப்புகலூர்வர்த்த

மானீசுரசுவாமிக்குச்சாத்திச், சிவாகமவிதிப்படிபூசித்துத்தேவாரப் பதிகங்களிலுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரம் (பஞ்சாக்ஷரமமைந்ததேவாரப் பதிகங்கள்)செபிக்கின்றநியமசீலர். திருஞானசம்பந்தர்க்கும்அதிப் பிரியநண்பராய், அப்பிள்ளையாரும்அப்பரும் பல்லாயிரந்திருத்தொ ண்டர்களுடன் தமது திருமாளிகையில் திருவமுதுண்டு வசித்திரு ந்து, தமதுதிருத்தொண்டைத் தேவாரத்திற் சிறப்பித்துப்பாடும் பெருமைபெற்றவர். மேற்கூறியதிருத்தொண்டுகளைநெடுங்காலம் புரிந்துவந்து திருஞானசம்பந்தர் திருவருட்பெருமணத்திற் சிவ சோதியிற்கலந்தருளினர்.

குறிப்பு:—இவர், சீவன் முத்தநிலையினராயினும் ஸ்ரீபஞ்சா க்ஷரசெபசிவபூஜாதியதிருத்தொண்டுகளுஞ்செய்துவருதலேமுறை மையாமென்னும் உண்மைகாட்டியுய்விக்கத் திருவருளால் வந்தரு ளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## உருத்திரபசுபதிநாயனார் புராணசாரம்.

---

பங்கமில்வண் புகழ்நிலவு தலையூர்வாழும் பசுபதியா
ரெனு மறையோர் பணிந்து செந்தேன்
அங்கமல மடுவினிடை யல்லு மெல்லு
மகலாதே யாகளமா யமர்ந்து நின்று
திங்கள்வளர் சடைமுடியா னடிகள் போற்றித்
திருவெழுத்து*முருத்திரமுந் திகழ வோதி
மங்கையிட முடையபிரா னருளான் மேலை
வானவர்க டொழுமுலகின் மன்னி னாரே.

இ—ம். உருத்திரபசுபதிநாயனார், சோழநாட்டில் திருத்தலை யூரில் பிராமணகுலத்தில் அவதரித்தவர். இவர், சிவனொருவனே பரமபதி. அவனுக்குஉகந்தசெயல், அவனை அகத்தும்புறத்தும்வழி படுதலே என்பது தெளிந்து, ஸ்ரீருத்திரசெபதியான வழிபாடு

செய்துவருகின்றவர். இருக்குயசுர்சாமமென்னும் மூன்றுவேதங்களின் நடுவிலுள்ளயசுர்வேதம், மற்றிருவேதங்களுக்கும் உயிராய் விளங்குகின்றது. இவ்வேதத்தின் ஏழுகாண்டங்களுள் நடுக்காண்டம், இந்தயசுர்வேதத்துக்கு உயிராம். இக்காண்டத்துக்கு இதன் மத்தியிலுள்ள ஸ்ரீருத்திரம் உயிராம். இவ்வுருத்திரம், இதன்மத்தியிலுள்ள ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உயிராக்கொண்டு விளங்குகின்றது. இதுவே, சகலவேதசாரமாய் எவற்றினும் முடிந்தமுடிவாகிய சிவபரத்துவசர்வவியாபகசைவசித்தாந்தநிலையதாய் விளங்கலால் இத்தகைய ஸ்ரீருத்திரமந்திரசெபதியான வழிபாடுமேற்கொண்ட இந்நாயனார் தினந்தோறும் தடாகத்தில் கழுத்தளவினதாகிய நீரினுள்ளே இருகரங்களும்சிரமேற்குவித்துநின்று அகோராத்திரம்சிவத்தியானத்துடன் ஸ்ரீருத்திரசெபமே நெடுங்காலஞ் செய்துவந்து சிவபதநிழலில் நித்தியானந்தப்பேறுபெற்றனர்.

குறிப்பு:—இவர், வேதங்கள் பலதேவர்க்கும் பரமசிவனால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தலைமைநோக்கிக்கூறும்பரத்துவமெல்லாம் உபசாரமே. சிவனொருவனுக்கே ஆதியிலும், மத்திகளிலும், உபசாரத்தலைவர் யாவரையுங்கைவிட்டுச் சிவனொருவனே தியானிக்கத்தக்கவனென்று முடிவிலும் அறுதியிட்டுக்கூறும் சிவபரத்துவமே உண்மையென்பதுவிளக்கி உலகைஉய்விக்கத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநாளைப்போவார்நாயனார் புராணசாரம்.

நன்மைதிகழ் மேற்கா நாட் டாதனூர்வாழ்
நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப்
பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்
பொய்கையமைத் தடலேறு பிரிய நோக்கி
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால் வாய்ந்த
வண்டழலி னிடைமூழ்கி மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து நாதன்
விளங்குநடந் தொழுமன்றுண் மேவி னாரே.

இ-ம். திருநாளைப்போவார்நாயனார், சோழநாட்டில் மேற்கானாட்டு ஆதனூரில்நீசர்குலத்தில்அவதரித்தவர். அப்பொழுதேஉலகப்பற்றுமுற்றுமின்றிச் சிவபெருமானையேபற்றி இடையறாதுநினைந்துருகுஞ் சிவஞானத் தெளிவுடன் வந்தவர். நந்தனார் என்னும் பெயருள்ளவர். அவ்வூரில் வெட்டிமைக்காகவிடப்பட்ட விளைநிலத்தில்பயிர்செய்து சீவிக்கின்றவர். சிவாலயங்களில்பேரி, மத்தளம், வீணைகளுக்கு வார் தோல் நரம்புகளும் பூஜைக்குக் கோரோசனையுங்கொடுத்துப்புறம்பே சந்நிதிநேர்நின்று சிவகீதங்கள்பாடி ஆனந்தக்கூத்தாடுவார். ஒரு நாள், திருப்புன்கூரில் கோயில்வாயிலின் புறத்துநின்று, அந்தோ பாவியேற்குச் சுவாமி திருமேனிகாணக் கிடைக்குமோவென்றுளமுருகினர். உடனே சுவாமிரிஷபநந்தியை விலகச்செய்துகாட்சிகொடுத்தருள, மிகமகிழ்ந்துதெரிசித்தின்புற்றுக்கோயிலருகிலுள்ள பள்ளத்தைப்பெரிய திருக்குளமாக்கினர். இப்படியே பலதலங்களுஞ்சென்று பணியுமிவர், சிதம்பரதெரிசனம்விரும்பி அன்றிரவு முழுதுமுறங்காமல் விடிந்தபின், நமது சாதிக்கு உட்புகும் யோக்கியதை இல்லையே இதுவும் திருவருள் போலுமென்று அங்குச்செல்லுதலை ஒழிவார். ஆசைமிகுதலால் நாளைப்போவேனென்பார். இவ்வாறு பலநாளும் கூறுதலால் திருநாளைப்போவார் என்ற பேர்பெற்றனர். ஆசை மேன்மேல் வளர்தலால் ஒருவாறு துணிந்து சிதம்பர எல்லையிற்சென்று உள்ளே ஓமப்புகை முதலியகண்டு உட்புகாமல், புறத்தே வலஞ்செய்து சிற்சபேச தெரிசனத்துக்கு இவ்விழிபிறப்புத் தடைசெய்கின்றதே என்று வருந்தி நித்திரைசெய்யும்போது, சுவாமி அவர் கனவில்மெய்யன்பனே நீ நெருப்பில் முழுகிவருக என்றருளித்தில்லைவாழந்தணர்க்கும் ஆஞ்ஞாபித்தனர். அவர்கள் தென்மதிற்கோபுரவாயில் முன் ஒரு குழியில் நெருப்பமைத்துத்தெரிவிப்ப,நாயனார் திருவருளை நினைந்துருகித் திருவடித் தியானத்துடன் அப்பெருநெருப்பில்மூழ்கி, முப்புரிநூல் சடாமுடி விபூதிருத்திராக்ஷ சிவவேடத்துடன் உத்தமோத்தம பிராமண முனிவராயெழுந்தார். யாவரும் அதிசயித்தார்கள். தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். தில்லைவாழந்தணர் கைதொழுதுடன்வர, நாயனார் கோபுரவாயில் கடோறும் வணங்கி மிகவிரைந்து சிற்சபை முன்வந்தனர். யாவ

ரும் கண்டிலர். அவரைச் சிற்சபேசர் தமது குஞ்சிதபாத நிழலிற் சேர்த்தருளினர்.

இந்நாயனார் லோகாதீத நிலையாராயிருந்தும், சிவபிரான்,வேத சிவாகமங்களில் விதித்தவருணாச்சிரமதரும வரம்புகடவாது, தமது சாதிக்குரிய சிவதருமங்களை செய்துவந்து, சிதம்பரநகருள்ளும் புகுதாமல், நெருப்பின்முழுகி நீசவடிவொழிந்து, பிராமணமுனிவராய் விதிவழிநின்ற வுறுதிப்பாட்டினால், தில்லைவாழந்தணர் முதலிய உத்தமரும்புறத்தேநிற்பக், குஞ்சிதபாதநிழலிற் புகுதப்பெற்றனர். இப்படியே சகல சாதியாரும் சாதிவரம்புகடவாத நிலையிலேயே நின்று உய்திபெறுகின்றனர், மாஞ்செடி கொடி முதலிய பயிர்களுங்கூட அதன தன் தகுதிக்கியைந்ததாரதாரநிலையில்வைத்து வரம்புகடவாது பரிபாலிக்கப்பெற்று வருகின்றன. இம்முறையே இறைவன் கட்டளை என்பதைச் சிறிதும் நோக்காமல், இக்காலத்துச்சிலர் அவ்வரம்பையழித்து மனம்போனபடியே எல்லாம்ஒரே சாதியென்று உண்டுஉடுத்துச், சனசமுகங்களிலும் பிரசங்கித்து வருகின்றார்கள். இதுகண்டு பறையர் முதலியரும் பிராமணரின் மேலாக நினைத்து உந்நதாசனங்களிலிருந்து பிரசங்கித்து அறிவிலாரையிழுத்துஒன்றுசேர்க்கின்றார்கள். இப்பெரும்பாதகத்துக்கு இறைவன்புரியும் தண்டனைக்கு எல்லையில்லையாதலால், சிவசாஸ்திரங்கள் விதித்த வருணாச்சிரம நெறிகடவாது நிற்றலேஇறைவன் கட்டளையென்றுள்ளபடி துணிந்து, மேற்காட்டிய பாதகப்பிரசங்காதிகளால் மனங்கலங்காமல் நெறிகடவாதுபற்றி நிற்கும் உத்தமர் செயலே கடைப்பிடித்துநின்றுலகெலாமுய்யும்படி திருவருளை பிரார்த்திக்கின்றனம்.

குறிப்பு:—இந்நாயனார் ஞானங்கைவந்ததென்று சிவசாஸ்திர விதிவிலக்குகளை உல்லங்கனஞ்செய்து மனப்போக்கிலே நின்று பிறரையுங்கெடுப்பது தீர்விலாப்பெரும்பாதகமாதலால்,இறைவன் அவ்வச்சாதிகளுக்கமைத்த வரம்புகடவாதுநின்று, அந்தந்தமட்டில் இயன்ற சிவதர்மங்களைச் செய்துவந்தால், அவ்விறைவன் சாதியின் சிறுமைநோக்கி ஒதுக்காமல் நிறைதவறாது தன்னையே நோக்கிநிற்கும் அன்பின்பெருமையே நோக்கிப்பிறர்க்கரிய பெரு

வாழ்வு தந்தருள்வனென்னும் உண்மைவிளக்கியுய்விக்கத்திருவரு ளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரொன்க.

திருச்சிற்றம்பலம்.

---

## திருக்குறிப்புத்தொண்டநாயனார் புராணசாரம்

---

கொந்தலர்பூம் பொழிற்கச்சி நகரே காலிக்
குலத்தலைவர் தவர்குறிப்புக் குறித்து ளார்பால்
வந்திறைவர் நமக்கின்று தாரீ ராகின்
வருந்துமுட லெனவாங்கி மாசு நீத்த
கந்தைபுல ராதொழிய மழையு மாலைக்
கடும்பொழுதும் வரக்கண்டு கலங்கிக் கன்மேற்
சிந்தமுடி புடைப்பளவிற் றிருவே கம்பர்
திருக்கைகொடு பிடித்துயர்வான் சேர்த்தி னாரே.

இ-ம். திருக்குறிப்புத்தொண்டநாயனார், தொண்டை நாட்டிலே காஞ்சிபுரத்தில் ஏகாலியர் குலத்தில் அவதரித்தவர். இவர், சிவனடியார் குறிப்பறிந்தேவல் செய்தலால்இப்பெயர் பெற்றனர். ஏகாம்பரநாதர் இவரது மெய்யன்பையாவர்க்கும் விளக்கி உய்விப்பாராய்க், குளிர்காலத்தில் ஒரு சிவபக்தராய் அழுக்குவஸ்திரத்துடன் வரக்கண்டு வணங்கிச், சுவாமீ இதனை வெளுத்துத்தருகிறேனென்று வேண்டினர். சிவபத்தர், இது மிகுந்த அழுக்கேறி ஒருவர் கையால் எடுக்கவுங்கூடாதாயிருந்தாலும், குளிர் மிகுதியால் விடமுடியாதவனாயிருக்கின்றேன். பொழுதுபடுமுன் தரமுடியுமானால் வெளுத்துத்தருக, தாமசித்தால்இந்தவுடம்புக்கிடர்செய்தவராவீரென்று கொடுத்தனர். நாயனார் வாங்கிவிரைந்துதோய்த்துச் சிறிது அழுக்குநீக்கி வெள்ளாவியில் வைத்துப்பின் வெளுக்கப் புகும்போது, திருவருளால் விடாமழை பெய்தது. மழை விட்ட பின் உலர்த்திக்கொடுப்போமென்று தாமசித்தார். பொழுதுகழிந்தது, நாயனார் மிகவருந்தி, முன்னமே காற்றிலுலரும்படி வீட்டினுள்ளே கட்டாதொழிந்தேன், சிவபத்தர் திருமேனிக்குத் தீமை

செய்த பாதகனாயினேன். இதற்குத்தீர்வு உயிர்விடுதலே என்று வெளுக்குங்கல்லில் தலையைமோதினர். அக்கல்லில் சிவபிரான் திருக்கரந்தோன்றி அச்சிரசைத்தாங்கிக்கொண்டது. உடனேரிஷபாரூடராய் எதிர்வந்து அன்பனே உன்மெய்யன்பின் திடத்தை யாவர்க்கும் விளக்கினோம். இனிநமதுலகடைந்தின்புறுக என்றருளினர். அவ்வாறே சிவலோகத்திற் சிவானந்தப்பெருவாழ்வுபெற்றனர்.

குறிப்பு;—இவர், எந்தச்சாதியினராயினும் அவ்வச்சாதியினுக்கியைந்த சிவனடியார் தொண்டுசெய்துய்யலாம். அத்தொண்டின் நியமம் எவ்விதத்திலும் தவறாதுபுரியும் அன்புறுதி வேண்டுமெனவிளக்கி உய்விக்கத்திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## சண்டேசுரநாயனார் புராணசாரம்.

---

வேதமலி சேய்ஞலூ ரெச்ச தத்தன்
விளங்கியசேய் மறைபயிலும் விசார சன்மர்
கோதனமேய்ப் பவன்கொடுமை பொறாது தாமே
கொண்டுநிரை மண்ணியின்றென் கரையி னீமற்
றுதகியின் மணலிலிங்கத் தன்பா லாட்டத்
தாதைபொறா தவையிடறுந் தாள்கண் மாளக்
காதிமலர்த் தாமமுயர் நாம மூண்ட
கலமகனும் பதமருளாற் கைக்கொண் டாரே.

இ-ம். சண்டேசுரநாயனார், சோழநாட்டிலே திருச்சேய்ஞலூரில் பிராமணகுலத்தில் காசியபகோத்திரத்தில் அவதரித்தவர். இவர் தமது சாதிக்குரிய வைதிகசைவநிலை விளங்கச் சாதகர்மவிசாரசர்ம நாமகரணாதி சடங்குகளுடன் உபநயனம்பூண்டு, முன்னைத்தொடர்பினால் வேதசிவாகமாதி சகல சாஸ்திரங்களும் பிறர் போதிக்கு முன்னரே நிர்ச்சந்தேகமாகத்தெளிந்து பிரமசரியநிலை

யில் நிற்கும்போது, ஒருநாள் ஓர் இடையன் தன்னைக்குத்தவந்த பசுவை அடித்ததுகண்டு, அப்பசுக்களின் அரியபெரிய தெய்வத் தன்மையை நினைந்து, அன்பின்றிடத்தால் அவனைக்கோபித்து விலக்கிவிட்டு, அப்பசுக்களையுடைய பிராமணரெல்லார்க்குந் தெரிவித்து அனுமதிபெற்றுத்தாமே மேய்த்துவந்தனர். இவர், பசுக்களை உணவுமுதலிய வகைகளால் உபசரித்துவரும் அதிநன்மையினால், முன்னிலும் மிகச்செழித்துப் பாலுமிகுதியாய்க் கொடுப்பதறிந்த பிராமணர் யாவரும் நாயனாரை மிகப்பாராட்டினர். பசுக்கள் நாயனார் செய்யும்உபசாரவிசேடத்தால் பிரிவாற்றாமல்அணுகி வந்து கனைத்து மனமுருகித் தாமே பால்பொழிந்தன. நாயனார் இப்பால் சிவபிரானுக்கு அபிஷேகமாகட்டுமென்று, மண்ணியாற்றங்கரையில் ஒரு மணல்மேட்டில் திருவாத்திநிழலில் மணலினால், சிவாகமவிதிப்படி கெர்ப்பக்கிருகம், அர்த்தமண்டப மகாமண்டப விமான கோபுராதிகளுடன் திருக்கோயிலமைத்து, மணலினால்சிவலிங்கந்தாபித்து அப்பாலை அபிஷேகித்துப்பூசித்து வருவாராயினர். இவர் வேதமுதலிய சிவசாஸ்திரமெல்லாம்முற்றொடர்பினால்தாமே தெளிந்ததுபோலச், சிவபூசைக்கின்றியமையாத விதிக்கிரமங்களெல்லாம் பிறருணர்த்தவேண்டாது, தாமே செய்துவந்தனர். இதனுண்மை தெரியாது பிராமணரெல்லாம், நாயனார் பிதாவினிடம் உன்மகன் எங்கள் பசுப்பாலை மணலிற்கொட்டி விளையாடுகின்றானென்றார்கள். பிதா, இது எனக்குத்தெரிந்திலது. இனிநடவாமல் செய்கிறேன் பொறுத்துக் கொள்ளுங்களென்று சொல்லி, மறுநாள் மறைந்துசென்றொரு மரத்தின்மேலிருந்தனர். நாயனார் வழக்கப்படி பூசை தொடங்கிப்பாலை அபிஷேகிப்பதுகண்டபிதா, பின்னின்று தண்டினாற் பலமுறை முதுகிலடித்தனர். நாயனார் [illegible]னுடம்பின்சார்பின்றி அன்பேசொரூபராயிருத்தலால்முதுகிலடிப்பது தோன்றாது அபிஷேகித்துவந்தனர். பிதாமுன் வந்துபாற்குடங்களைக்காலாற்சிந்தினர். நாயனார் சிவோன்முகராயிருத்தலால் சிவபூஜாத்திரவியம் சிதறுண்டதுதெரிந்து, புறநோக்கிநேர்நின்ற பிதாவைக்கண்டு சிவபூசைக்கிடர்செய்யும் சிவத்துரோகத்தீர்வு, அது செய்தாரைக் கொல்லுதலேயென்னுஞ் சிவாகமத்துணிவின்படி, அவரைக்கொன்று அத்துரோகம்நீக்கக்கருதியகருணையினால்

பக்கத்திற்கிடந்த ஒருதுரும்பையெடுக்க, அதுவேமழுவாயுதமாக அதனால் அவர் காலைவெட்டிநீக்கிவிட்டு, மேலும் பூசித்துக்கொண்டிருந்தனர். (எடுத்த துரும்பே மழுவானது நோக்கியும் இவர்சிவமேயாய் விளங்குதல் தெளியலாம்.) உடனே சிவபிரான், ரிஷபத்தின்மீது உமாசமேதராய்த்தோன்ற நாயனார் மகிழ்ந்தெழுந்து வணங்கித்துதித்துநிற்பச், சிவபிரான் அவரை எடுத்தணைத்துச்சிமோந்து திருமேனியைத்தடவியருளினர். திருக்கரந் தீண்டப்பெற்றவுடன் அம்மானுடவடிவே சிவரூபமாய்த் தேசோமயமாய் விளங்கியது. சிவபிரான் அன்பனே நம்பொருட்டு உன் பிதாவைக் கொன்றனை. உனக்கு நாமே நித்தியபிதா, உன்னை நமது தொண்டர்க்கெல்லாந் தலைவனாக்கி, நமது நிவேத்தியபாகம், உடுப்பன சூடுவனவெல்லாம்உனக்கேயாகச், சண்டேசுரபதவியைத்தந்தோமென்றருளிப், பட்டாபிஷேகமாகத்தமது சடையிலுள்ள கொன்றைப்பூமாலையை எடுத்து நாயனார் சடாமுடியிற் சூட்டியருளினர். உடனே எல்லா உலகங்களும் இன்புற்றுச் சிவ[illegible]மமுழக்கஞ்செய்யவும், எங்கும் பூமழைபொழியவும், சிவகணங்கள் பாடியாடவும், வேதங்கள் துதிக்கவும், சைவசமயந் தழைத்தோங்கவும் சண்டேசுரபதஞ்சார்ந்து, சகல சீவரும் தரிசித்துய்யும்படி சிவானுபூதிப் பெருஞ்செல்வராய் வீற்றிருந்தருளினர். இவர் பிதா இவர் மழுவால் வெட்டப்பெற்ற விசேடத்தாலும், சிவத்துரோகம் நீங்கப் பெற்றமையாலும், முன்னெல்லாம் வைதிகசைவநிலை நின்றமையாலும், இவரைப் புத்திரராகப்பெற்று வளர்த்த திருத்தொண்டினாலும், திருவருளால் சிவலோகத்தையடைந்துபேரின்பமெய்தினர்.

குறிப்பு:—இவர்சிவபூசனைபுறத்தேநிகழுங்கிரியாமாத்திரத்ததன்று, அகத்தும் புறத்தும் சரீராதிபற்றற்றுச் சீவகரணம்முழுதுமாறிச்சிவகரணமாகநின்று செய்வதேசிவபூசனையாகுமென்பதும், அதற்கு இடர்செய்தார் யாவராயினும் அவரைக்கொன்றொழிப்பதே அவரைச் சிவத்துரோகத்தினீக்கியருள்வதும் பெரும்புண்ணியமென்பதும் விளக்கிஉய்விக்கத் திருவருளால் வந்தருளியசிவவுர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசுநாயனார் புராணசாரம்.

---

போற்றுதிரு வாமூரில் வேளாண் டொன்மைப்
    பொருவில்கொறுக் கையரதிபர் புகழ னார்பான்
மாற்றருமன் பினிற்றிலக வதியா மாது
    வந்துதித்த பின்புமரு ணீக்கி யாருந்
தோற்றியமண் சமயமுறு துயர நீங்கத்
    துணைவாரு டரவந்த சூலை நோயாற்
பாற்றருநீ ளிடரெய்திப் பாடலிபுத் திரத்திற்
    பாழியொழித் தானதிகைப் பதியில் வந்தார்.

வந்துதமைக் கையாருளா னீறு சாத்தி
    வண்டமிழா னோய்தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்தபொடி விடம்வேழம் வேலை நீந்தி
    வியன்சூலங் கொடியிடபம் விளங்கச் சாத்தி
யந்தமிலப் பூதிமக னரவு மாற்றி
    யருட்காசு பெற்றுமறை யடைப்பு நீக்கிப்
புந்திமகிழ்ந் தையாற்றிற் கயிலை கண்டு
    பூம்புகலூ ரான்பாதம் பொருந்தி னாரே.

இ-ம். திருநாவுக்கரசுநாயனார், பூர்வம் திருக்கயிலாசத்திலே சிவத்துவம்பழுத்தசீலராயிருந்தும், திருவருளால் சீவர்களைச்சைவ நெறியினிற்பித்துய்வித்தற்காகவே, பரமுத்திப்பேரின்பு வேண்டாது, சீவன்முத்த நிலையினராகவே திருவருட்டிருமேனிதரித்து வீற்றிருந்தருளிய வாகீச மகாமுனிவரே. இராவணன் கயிலாசத்தை அடிவாரத்தின் கீழிருந்து அசைத்தபோது, அம்மலையுச்சி நாற்பதுகோடி யோசனை உயரத்தின்மேல், தாமரைப் பொகுட்டு வடிவாய்ப்பத்துக்கோடியோசனைஉயரமும், அகலமுமுள்ளமாணிக்கரத்தின சிகரத்தின்மீது, ஒருகோடியோசனைவிரிவுள்ள திருக்கோயிலிலே, மந்திரமய சிங்காசனத்தில் வீற்றிருந்தருளுஞ்சிவபிரான், தமது திருவடிப்பெருவிரல் நுனியினால் சிறிது அழுத்தினமட்டிலே

அம்மலைக்கீழகப்பட்டுக்கிடந்தழுதலறினுன். அவ்வழுகை கேட்டிராங்கிவந்தவாகீசமுனிவர், நீ, முறையோடு வணங்கிவேண்டினுல் தாயினும் இரக்கமிக்க சிவபிரான் உன் இஷ்டத்தை பூர்த்திசெய்தருள்வர். மூடபுத்தியால் நசுக்குண்டு வருந்துகின்றனே. எம்பெருமான் சாமகானப்பிரியர் நீ அன்புடன் அதனைப்பாடினுல் அன்புக்கிரங்கி வந்தருள்வரென்று உய்தற்குரிய உபாயங்கூறிச் சென்றனர். அவன் அவ்வாறு பாடினன். சிவபிரான் அவன்எதிர் வந்துஉய்யும்வண்ணம்அனுக்கிரகித்து, வாகீசமுனிவரைஅழைத்து நீ, துஷ்டனுக்கு உபகாரஞ் செய்தமையால், மானுடனுப்பிறந்து துஷ்டசமயம்புகுந்து வருந்திக், துஷ்டோபகாரதோஷம் நீங்கப் பெற்றுவருகவென்று ஆஞ்ஞாபித்தருளினர். உமாதேவியார், எம்பெருமானே இம்முனிவன் ஒருசீவனுக்கிரங்கிய சீவகாருணியம் பிறவிக்கேதுவாகலாமா? என்றுகூறச், சிவபிரான், நீ, கூறியது பொதுநோக்கமாம். பகுத்து நோக்கும்போது துஷ்டர்க்கிரங்குவது சீவகாருணியமாகாது, அது அவர் செய்யும் துர்ச்செயலுக்கு உதவியாய் அவர்க்கும் பிறர்க்கும் கேடுவிளைக்கின்றவன்கண்மையாகவே முடியும். இம்முனிவனே நமது சார்வினுல் பிரபஞ்சச் சார்பொழிந்து மலமுத்தனுய் விளங்குகின்முன். இவன் எங்கிருப்பினும் இவனது சொரூபநிலை தவமுது. அன்றியும் இவனும் பூமியிற் சைவசமயந் தழைத்தோங்க வேண்டும். இது தான் அந்தரங்கதாற்பரியம். இதற்காகவே துஷ்டோபகாரமாகிய குற்றங்காட்டி மானுடனுகும்படி கூறியதன்றிவேறில்லை. அங்கும் இவனுக்கு முன்னின்று அருள்புரிவோம் என்றருளினர். இதனைச் சேக்கிழார்பெருமான் "திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டின் நெறி வாழ, வரும்ஞானத் தவமுனிவர் வாகீசர்." என்று முதற்றிருவிருத்தத்திலேயே சுருங்கச்சொல்லி விரிந்து விளங்கவைத்தருளியது நோக்கியும் தெளியலாம்.

வாகீசமுனிவர், சிவாஞ்ஞையின்படி பூமிக்குவருமுன், அவர்க்குத்துணையாய் உமாதேவியாரே வந்தருளினரென்று ஆன்ருேர் கூறும்படி, பூமியில் நடுநாட்டின் உட்பிரிவாகிய திருமுனைப்பாடிநாட்டில் திருவாமூரில் சற்சூத்திர வேளாளர் குலத்தில், அருந்தவம்புரிந்த அறப்பெருஞ் செல்வராகிய புகழனுர் மாதினியார்

இருவருக்கும் புத்திரியாராய்த் திலகவதியம்மையார் வந்தருளி னர். சில வருஷங்களுக்குப்பின், அவ்வாகீசமுனிவர் அவ்விருவ ருக்கும் புத்திரராய்த்தோன்றி, அந்நிய சமயமருள் நீக்கியருளு தற்கே வந்தவரென்பது விளங்க, மருணீக்கியாரென்னும் நாமம் பெற்று வளர்ந்துவந்து, யாவராயினும் குருமுகமாக அறிதலே முறை என்பதை விளக்குவாராய், வித்தியாரம்பஞ் செய்யப்பெற் றுச் சகல சாஸ்திரசம்பந்நராய் விளங்கினர். அப்போது திலகவதி யார்க்கு பன்னிரண்டு வயசாயது. இவரை மணம்புரிய விரும்பிய கலிப்பகையார், சிலமுதியவர் மூலமாகத் தாய்தந்தையர் சம்மதந் தெரிந்தும் மணம்புரியவருமுன், அரசனேவலால் பகைவருடன் யுத்தம்புரிய வடதேசஞ்சென்றனர். அப்போது புகழனார்சிவபத மடைந்தனர். அவர் பத்தினியார் மாதினியார் இவ்வருட்பெருமக் கள் வாஞ்சையுமின்றி நாயகரைப்பிரியாத தலைபன்பு விளங்க அவ ருடன் கூடச்சென்றனர். மக்களிருவரும், விதிப்படி தகனக்கிரி யாதிகள் செய்து முடித்தனர். இந்த நிலையில், முன்பு யுத்தம் புரி யச்சென்ற கலிப்பகையார் வானுலகஞ்சென்றமை தெரிந்த திலக வதியார், எனக்கு அவர் நாயகரென நிச்சயிக்கப்பட்டமையால் என்னுடம்பு அவருக்கே உரியதென்று அவர்க்குச் சமர்ப்பணஞ் செய்யத்துணிந்தனர். அது தெரிந்து தம்பியார் வேண்டுதற்கிண ங்கி, அவர்க்குத் துணைபுரிவாராய், அவ்வுடம்பைவிடாது தவவிரத சீலராய்வாழ்ந்தனர், மருணீக்கியார், செல்வம் அநித்தியமாதலால் உள்ளபோதே சிறிதுந்தாமசியாது தருமவழியிற் சேர்த்தலே முறையென்று நமக்கெல்லாம் விளக்குவாராய், பற்பல தருமங்கள் செய்துவந்து சமுசாரந்துக்கமென்றொதுக்கிவிட்டுத் தவமார்க்கத் திலேயே நின்றனர். அந்நெறி நிற்கும் மருணீக்கியார், சைவசம யமே கீழுள்ள எல்லாச்சமயங்களையும் தனக்குப்படிவரிசையான அங்கங்களாகக்கொண்டு, தான் அங்கியாய் விளங்குவதென்னு முண்மையேயாவர்க்கும் விளக்கியருளுஞ்சிவஞானப்பெருஞ்செல் வராயிருந்தும், சிவபிரான் முன் வாக்களித்தபடி வந்தருளாமை யினால் பாடலிபுத்திர நகரில் பல்லவரா[illegible]யும் வசப்படுத்தி அவ ளுகாவிற் பரம்புகின்ற சமண் சமயத்திற்புகுந்தனர். இது, நாய கன், குறித்த காலத்துவந்தருளாவிடின் நாயகி என்றுமுள்ளஉய ர்ந்த சயனத்தைவிட்டு வெறுந்தரையிற் சயனித்தல் போலும்.

அன்றியும் முன்னைச் சிவாஞ்ஞையின்படி துர்ச்சமயத்திற்புகுந்து திரும்பவேண்டிய முறையுமாம். அதுவும் அச்சமயிகள் செய்யும் வஞ்சனை கொடுமை துர்ப்பல முதலியன நேரேகாட்டிசைவசமய மகிமைவிளக்கி உலகைஉய்விக்கச்செய்யுந்திருவருட்செயலேயாம். இதுவே உண்மை என்பதைச் சேக்கிழார்பெருமான், ''நல்லாறு தெரிந்துணர்ந்தும் நம்பாரு ளாமையினாற், கொல்லாமை மறைந்துறையும் அமண்சமயங் குறுகுவார்'' என்றெதிர்காலத்தாற் கூறியது முதலிய அருமைத் திருவாக்குக்களாலுந் தெளியலாம். நாயகி ஊடித்தரையிற் சயனித்தாலும், நாயகனை ஒரு நிமிஷமும் மறவாது அனவரத தியானத்துடன் அந்தரங்கவழிபாடு செய்து கொண்டேயிருப்பாள். அதுபோல, மருணீக்கியார்,சமணர்களால் தருமசேனர் என்று பேர்கொடுத்துபசரிக்கப்பெற்று, அம்மதமாகிய உவர்த்தரையிற்கிடந்தபோதும், அனவரத சிவத்தியான அந்தரங்கவழிபாடு செய்துகொண்டேயிருந்தனர். இதனை, இவர்திருவாய்மலர்ந்தருளிய " இரவும் பகலும் பிரியாது வணங்குவனெப்பொழுதும்" "நெஞ்சமுமக்கேயிடமாகவைத்தேன்நினையாதொருபோதுமிருந்தறியேன்" " துணிந்தேயுமக் காட்செய்து வாழலுற்றால்" "சலம்பூவொடு தூபமறந்தறியேன் றமிழோடிசை பாடன்மறந்தறியேன், நலந்தீங்கிலும் உன்னைமறந்தறியேனுன்னாமமென்னாவின்மறந்தறியேன்" "வயந்தேயுமக்காட்செய்துவாழலுற்றால்" " வஞ்சம்மனமொன்று மில்லாமையினால்" என்பனவாதி தேவாரங்களாலும்செவ்வே தெளியலாம். நலம் தீங்கிலும்என்றது சைவநிலையிலும்சமணநிலையிலுமென்க.

ஆனால் இந்நிலையினர்சமண்சமயம்புகுந்திருப்பானேன்எனில்? அதனைஅடியோடு தொலைத்தற்கும் அற்புதச்செயல்காட்டிசைவம் வளர்த்தற்கும் உரியசெம்மைநெறி அதுவாதலால், அங்கிருந்தே அவ்வாறு செய்தனரென்க. இதனை,அப்பூதியடிகள், நம்மையுடையவர்கழற்கீழ்நயந்த திருத்தொண்டாலே, இம்மையிலும் பிழைப்பதெனவென்போல்வாருந்தெளியச்''செம்மைபுரிதிருநாவுக்காசர்' " நாணிலமண்பதகருடன், ஒன்றிய மன்னவன்சூழ்ச்சி திருத்தொண்டினுறைப்பாலே வென்றவர்தந்திருப்பேர் ''பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறுமவர்பெருமை'' என்பனவாதி உண்மை

வாக்கியங்கள்கூறி "தரையின்மிசை வீழ்ந்தவர்தஞ் சரணகமலம் பூண்டு" கிடந்தமையாலுந் தெளியலாம். இவர் இவ்வாறு சமண் சமயத்துள்ளிருக்கும்போது, திருவதிகையில் திலகவதியார் சுவாமியை வேண்ட, அவர் கனவில்தோன்றி உன் தம்பி சமணனாய் விட்டானென்று வருந்தாதே; அவன் முன்பு கயிலாயத்தில்அருந் தவம்புரிந்துள்ள வாகீசமுனிவனே, அவனை நமது அருளாகியசூலை நோயை அனுப்பி அழைத்து ஆள்வோமென்றருளிச் சூலையை விடுப்ப, அதனால் மருணீக்கியார் மிகவருந்துவாராய், சமணாது மருந்து மந்திர தந்திராதிகள் ஒன்றாலும் நீங்காமைகாட்டித், திலகவதியாரிடம் வந்துவணங்கி அவர் கொடுத்த விபூதிபஞ்சாக்ஷரமும்பெற்று அவராழைத்துவரத், திருவதிகை வீரட்டானேசுரர் திருக்கோயிற் கோபுரவாயில்களில் வணங்கி ஆவல் மீகவிரைந்து சென்று திருச்சந்நிதியடைந்தார். தெரிசிக்கப்பெற்றார், தம்மை மறந்தார். தந்நாமங்கெட்டார். சிவமேயாய் இரண்டறத்தழுவி வாழும் சிவபோகக்கலவியில் நிகழும் பேரானந்தப்பெருவெள்ளத் தழுந்தினார். அவ்வானந்தவெள்ளம்புறத்தும் பொழிவதாக "கூற்றாயினவாறு" என்னுந்திருப்பதிகம் அவர்திருவாக்கினின்றுவெளி வந்தது. அதனைக்கேட்டுவந்தவீரட்டானேசுரர், அப்பதிகத்துள்ள சொல், பொருள், தொடை இன்னிசை முதலிய இன்பநலங்கள் நோக்குந்தோறுந் திருவுள்ளத்தெழுந்த ஆனந்த மேலீட்டினால், "அன்பனே! நீயே நாவுக்கரசு, நாவுக்கரசு, நாவுக்கரசு" என்று சிதாகாசத்தெழுந்த திருவாக்கினால் விளக்கியருளினர். பௌருஷீகமாகிய வேதமத்தியிலெழுந்த பஞ்சாக்ஷரத்தினுஞ் சிறந்ததாய், அபௌருஷிக அருள்மய ஞானவெளிமத்தியிலெழுந்த "நாவுக்கரசு" என்னும் திவ்யபஞ்சாக்ஷரமே திருநாமமாகப்பெற்ற வாகீசப் பெருந்தகையார், சர்வஞ்ஞதாதி அஷ்டமங்களதிவ்யகுணசிவமேயாயிருந்தும், நம்மனோரெல்லாரும் அவர் காட்டும் நெறிபற்றிநின்றுய்யும்படி "தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும், நாயகன் சேவடி தைவருசிந்தையும் நைந்துருகிப், பாய்வது போலன்புநீர்பொழி கண்ணும் பதிகச்செஞ்சொன், மேய செவ்வாயும்" ஆணவமலவலியை அகழ்ந்தெறியும் சிவஞானமேயாகிய உழவாரப்படையும் உடையாராய், முக்காரணங்களாலும் இடை

யருத்திருத்தொண்டு செய்துகொண்டு, தம்மைச் சூலைநோயென்றொரு வியாசங்காட்டிச் சமணிலை நீக்கியிழுத்துவந்த திருவருளை வியந்து, அத்திருத்தலத்தில் வீற்றிருந்தருளினர். இவர் சர்வஞ்ஞதாதி எண்குணசிவமே என்பதை, இவர்கூறும் மறுமாற்றத்திருத்தாண்டகத்தில் "எண்குணத்துளோமே" என்று முடித்ததிருவாக்குத் தெளிவாய் விளக்குகின்றது. இம்மகிமை யெல்லாங்கண்ட திலகவதியம்மையார், தாம் வேண்டியதன்மேலும் அருளிய வீரட்டானேசுரர் திருவருளைநினையுந்தோறும் மனங்கசிந்துருக ஆனந்தசாகரத்தழுந்தி, அனவரதம்அத்தலத்திலேயே அகத்தும்புறத்தும் அரிய திருத்தொண்டுகள் செய்தமர்ந்திருப்பாராயினார்.

இம்மகிமை கேள்வியுற்ற சமணர்கள், நமக்கெலாம் மேலாயிருந்தவர் நமது சமயத்தைத் தள்ளிவிட்டுச் சைவமயத்திற்புகுந்தது அரசன் தெரிந்தால், அவனுஞ் சைவனாய்விடுவான். நமது சமயம் அழிந்து நமது சீவிதவிருத்தியுந் தொலைந்துவிடுமென்று, அரசனிடம்வந்து அரசனே, தருமசேனன் தமக்கையிருக்குமிடஞ் சாரவிரும்பிச், சூலைநோய் வந்ததாகவும் அது இங்கு நீங்கிலதென்றும் பொய்கூறி, நமது சமயத்தையிகழ்ந்து போய்ச்சைவனாய்விட்டான். தண்டிக்காவிட்டால் நமது உத்தமசமயத்துக்குக்குறைவுவருமென்றார்கள். அரசன் மந்திரிகளை ஏவினான். அவர்கள் திருவதிகையில் வந்து தெரிவிப்ப, வாகீசர், சர்வான்மாக்களையுந் தமக்கடிமையாக்கொண்டு, தாம் ஆர்க்கும் அடிமையாகாத முழுமுதற்றலைவராகிய சிவபிரானுக்கே நாம் என்றும்மீளா அடிமை. உங்கள் அரசன் நம்மை அழைக்கக்கடவனல்லன். நாமும் அங்குவந்துபெற வேண்டிய குறையுடையோமல்லோம் என்பது முதலிய கெம்பீர வாக்கியங்களமைந்த "நாமார்க்குங் குடியல்லோம்" என்னுமறுமாற்றத் திருப்பதிகம்பாடி மறுத்தருளினர். மந்திரிகள் வணங்கி நின்று வருந்திவேண்டினார்கள். நாயனார், திருவருளே முன்னிற்கும்போது நாம் எங்கிருப்பினும் நமது நிலைக்குப்பழுதில்லை, அன்றியும் அரசன் திருந்திச் சைவனாதற்கும் இதுசாதகமாகுமெனத் துணிந்து பாடலிபுத்திரநகர்க்குவந்தனர். அவரை அரசன் சமணர் துர்ப்போதனையால் நீற்றறையில் வைப்பித்தான். நாயனார் இடையறாதுநெருப்புஎரிகின்ற அந்நீற்றறையுள்ளே திருவடிநிழற்பேரின்

புற்றிருந்தனர். ஏழுநாட்சென்றும் முன்னிலும் அதிகமாய்ப் புடமிட்ட தங்கம்போல்விளங்குதல்கண்டு, சமணர்கள் அரசனைநோக்கி நமது சமயமந்திரபெலத்தால் தப்பித்துக்கொண்டான். இனி நஞ்சையூட்டினால் இறந்துவிடுவானென்றார்கள். அரசன் இதனிலும் அம்மந்திரத்தால் தப்பித்துக்கொள்ளலாமே என்றெண்ணுஞ் சுயபுத்தியிழந்து, சமணர்வசப்பட்டு நிற்கும் மூடபுத்தியால், நஞ்சு கலந்த சோற்றையுண்பிக்க, அதனையும் அமுதாகஉண்டருளினர். பின்னும் மதமிகுந்த கோபாதிசயமென்னும் பட்டவர்த்தனயானையையேவ, எவரையும் கொல்லும் வல்லபமிகுந்தயானை அதிகோபத்துடன் வந்தும், நாயனார் திருவேடம் தெரிசிக்கப்பெற்றளவிலே அதிசாந்தமாய் வலம்வந்துவணங்கி, மேலும் முடுக்குகின்றசமணர் முதலிய யாவரையும்கொன்று பெருங்கலக்கம் விளைத்தது.

அதுகண்டும் அறிவுகெட்ட அரசன் அப்பாதகர்சொன்னபடி நாயனாரைக்கல்லுடன்கட்டிக்கடலில்தள்ளும்படிசெய்தான். நாயனார் சர்வாண்டங்களும் எதிர்த்துவரினும், திருவருள்வலியினால் தமக்கு எக்காலத்தும் எவ்வித ஊனமுமில்லையென்பது துணிந்த சிவாநுபூதிப்பெருஞ்செல்வராதலால் சமணர்களின் துர்ப்பெலமும், அவர் புரியும் இடரொன்றும் தம்மை அணுகாது அவர்க்கே தீங்குவிளைக்குமென்பதும், எவ்விடத்துந் தலைவணங்காது ராசாங்கத்தமர்ந்த சைவசமயம் ஒன்றே சர்வவல்லபமுள்ளதென்பதுங்கண்டு உலகெலாம் உய்தற்காகவே சமணர் செய்த கொடுஞ்செயல்கள் ஒன்றையுந்தடுக்காதிருந்தனர். அப்பாதகர்கள் கடலில் தள்ளும்போதே, நமது வாகீசத்திருவடிகள், கரையின்றி விரிந்தாழ்ந்த பிறவியாகிய ஏழுகடல்களில், மும்மலமாகியகற்களில், அதிசூக்குமமூலகர்மமாகிய கயிற்றாற்கட்டப்பட்டுக்கிடக்கின்ற சீவர்கள், அக்கடல்களைக் கடந்து திருவடிக்கரையேறச்செய்வது, ஸ்ரீ பஞ்சாக்ஷரமேஎன்னு முண்மை விளக்குவாராய் "சொற்றுணை" என்னும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடத்தொடங்கினர். உடனே கயிறுஅறுபட்டது. கல்லுமிதந்தது. அதுவேதெப்பமாக, நமதுஅரசுகள் எப்போதும் சிவானந்தப்பெருவெள்ளத்தின்மீதுசுத்தவித்தியாமயபீடத்துவீற்றிருந்தருளுகின்ற தமதியல்புவிளங்க, எடுத்த திருப்பதிகத்தைப் பாடிக்கொண்டு செல்வாராயினர். கடலரசனாகிய வருணன், அடி

யேன் முன்செய்த தவவிசேடமன்றோ! இவ்வாகிச சுத்தசைதன்னியபரமசிவனைத்தாங்கும் பெரும்பாக்கியந்தந்ததென்னும்பெருங்களிப்புடன், தாங்கிச்சென்று திருப்பாதிரிப்புலியூரின் பக்கத்திற் சேர்த்தனன். அரசுகள், கடலேதிருவீதியாக கல்லேசிவிகையாக வருணன் தாங்க எழுந்தருளிவந்த அற்புத மகிமைதெரிந்து, பல்லாயிரந்திருத் தொண்டர்கள் ஆரவாரமுழக்கஞ்செய்து வந்துபணிந்து சூழ்ந்துவரத், திருக்கோயிலுட்சென்று சுவாமியைவணங்கி முன்னின்று,"ஈன்றாளுமாயெனக்கெந்தையுமாய்" என்னும் திருப்பதிகம்பாடி அதனில் சமண்குழுவிலிருக்கும்போதும் முன்னின்று அவர்கள்செய்த அகிதமெல்லாம் இதமேயாகும்படி இடையறாதுடனிருந்துபாதுகாத்துவந்த அருமைவிளக்கி, அத்தலத்துவசித்தருளினர். பின்புநாயனார் முன்திருவருட்சூலையால்வலிந்திழுத்துச் சுத்தாத்துவிதக் கலவிதந்தருளிய பிராணநாயகராகிய வீரட்டானேசுரரை நினைந்தெழுந்துவருதலைத், திருத்தொண்டர் சிவநாமமுழக்கத்தாற்றெரிந்த திருவதிகை வாசிகள்யாவரும், சமணிருள் முழுதுந்தொலைத்தெழுந்த சிவசூரியோதயங் கண்டகளிப்பிறாற், செயபேரிமுழக்கத்துடன் சிவநாமமுழக்கஞ்செய்துகொண்டுநாயனாருடைய " தூயவெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும், நாயகன் சேவடி தைவரு சிந்தையும் நைந்துருகிப், பாய்வதுபோ லன்புநீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல், மேய செவ்வாயும்"கொண்டுவிளங்குஞ் சிவவேடப்பேரழகுகண்டுமனங்கசிந்துருகப்பன்முறை வணங்கியெழுந்து முன்னரே அரசுகளுடன் வருகின்ற திருத்தொண்டரோடு சேர்ந்து இருபெருங்கடல்கள் ஒருங்குவருதல்போல நெருங்கிச்சூழ்ந்துவர, நாயனார் திருக்கோயிலுள்வந்து சுவாமியைவணங்கி "வெறிவிரவுகூவிளம்"என்று திருப்பதிகம்பாடித்துதித்துப் புறம்போந்து மேலும் பதிகங்கள் பாடிக்கைத்தொண்டுஞ்செய்துகொண்டு வீற்றிருந்தருளினர்.

அந்நாளில், பல்லவராஜன் அந்தோஒப்புயர்வில்லாத பெரியார்க்கு, இப்பாதகர் சொற்படி பற்பலதீங்குசெய்து மகாபாதகனாயினேனே என்று பதைபதைத்துவந்து, நாயனார் திருவடிகளில்வணங்கிக்கிடந்து எம்பெருமானே அறிவிலாச்சிறியேன் பிழைபொறுத்து ஆட்கொண்டருளுகஎன்று வேண்டினன். நாயனார், அரசனே

நீ செய்தனவெல்லாம் நன்மையாகவேமுடிந்தன. சைவசமயத்தின் மகிமாபெலத்தையும்விளக்கின, நீயும் நேரேகண்டமையாலன்றே உள்ளீடில்லாத சமண்சமயத்தை யொழித்துச் சைவனாகிவந்தனை ஆதலால் நீ பிழைசெய்ததாக நினைந்துவருந்தாதொழிகவென்று ஆதரித்தருளினர். அரசன் நாயனாரது அதிசாந்தசொரூபநிலைதெரிந்து, மேலுமனங்கசிந்துருக வணங்கிச்சென்று, பாடலிபுத்திரநகரிலுள்ள சமண்பாழிபள்ளிகளை இடித்துக்கொண்டுவந்து, திருவதிகையிலே குணதரேச்சரமென்றொரு சிவாலயஞ்செய்வித்து, நித்திய பூசாதிகள் நடப்பித்து, வாசிச சிவத்தியானமுமறவாத சிந்தையனாயிருந்தனன். நாயனார், திருவெண்ணெய்நல்லூர்முதலிய தலங்கள் பணிந்துபாடித்திருப்பெண்ணாகடத்துவந்து, சுவாமியை வணங்கி அடியேன் சமண்சமயம்புகுந்த அநாசாரநீக்கம் விளங்கச் சூலரிஷபமுத்திரை வைத்தருளுகவென்று "பொன்னார்திருவடி" என்னுந் திருப்பதிகம்பாட, அவ்வாறே சிவாஞ்ஞையால் ஒரு சிவபூதம் நாயனார் திருத்தோள்களில் அவ்விருமுத்திரைகளும் வைத்தது. நாயனார் மகிழ்ந்துவணங்கித் திருவரத்துறை முதலிய தலங்கள்பணிந்து, சிதம்பரம் நோக்கிச்சென்று திருவெல்லை வணங்கி அங்குள்ளபறவையாதிகள், நந்தவனங்கள், வாவிதடங்கள், உய்யானங்கள் முதலியவைகளில் நிகழும்அற்புதச்செயல்கள்கண்டு மகிழ்ச்சிகொண்டு, மேலைக்கோபுரவழிச்சென்று, திருவீதியிற் சிவமேநிலவுகின்றஅற்புதமகிமைநோக்குந்தோறும்மனமுருகவணங்கியுட்புகுந்து; வலஞ்செய்து சிற்சபைமுன் கோபுரம்பணிந்துவந்துசபாநாயகர் திருநடனத்திருக்கோலந்தெரிசித்தளவே, திருவருள்வசத்தராய்ச் சிவானந்தப் பெருவெள்ளத்தழுந்தி, திருக்கரஞ்சிரமேற்குவிய, திருக்கண்கள் சிவானந்தநீர்பொழியத், திருமேனிமயிர்பொடிப்பத், திருமுன்வீழ்ந்து பன்முறைவணங்கியெழுந்து, திருவுருவையே நோக்கிநின்று, நடராசராசவள்ளலார், அன்பனே! என்றுவந்தனை என்னுந் திருக்குறிப்புவிளக்குந் திருமுகமலர்ச்சியுந் திருப்புன்முறுவலுந் திருவருட்பொலிவுங்கண்டு திருவுள்ளத்தில் முதிர்ந்தெழுந்த பேரன்பாகிய திருவமுதம்பெருகித் திருவாக்கின் வழிவெளிவந்து பொழிவதாகத், திருவிருத்தமுந் திருநேரிசையும் பாடியருளி, அத்திருப்பாடல்களினிறுதிதோறும் 'என்றுவந்தாய்'

என்றவினாவுக்கு விடைகூறியதாக, "அத்தாவுன்னுடல்காண்பான் அடியனேன் வந்தவாறே" என்று விளக்கியருளினார்.

மேலும்சிதம்பரமே சிற்சபேசதெரிசனமே யாவர்க்குமுடற்குறுதிதரும் சாலியன்னமாகிய அமிர்தமும்,உயிர்க்குறுதிதரும்சிவஞானமிர்தமும், அவ்வுயிர்மீண்டுவாராது என்றுந் திருவடிநிழலில் வாழுஞ் சுத்தாத்துவித நித்தியானந்த பரமுத்தியமிர்தமுந் தருவதென்னும் வேதசிவாகமாதிகளினுண்மைவிளங்க "அன்னம்பாலிக்குந்தில்லைச்சிற்றம்பலம்" என்றுதிருப்பதிகம்பாடித், திருவேட்களமுதலியதலங்கள்பணிந்து உய்திவேண்டுவார்சிற்சபேசனை அனவரததியானஞ்செய்கஎன நம்மனோர்க்குவிளக்குவாராய்'அம்பலக்கூத்தனைத், தினைத்தனைப்பொழுதும்மறந்துய்வனோ" என்றுபாடி மீண்டுஞ்சிதம்பரம்வந்து'அரியானை'முதலியபதிகங்கள்பாடியருளிக்கைத்தொண்டுஞ்செய்துகொண்டிருக்குநாளில், ஞானசம்பந்தரைத்தரிசிக்கவிரும்பிச், சிற்சபேசர் விடைபெற்றுச்சிவமேநிலவுந்திருவீதியில் அங்கப்பிரதக்ஷிணஞ்செய்துசென்று, சீகாழி சமீபிக்கவருவதறிந்த ஞானசம்பந்தர், வாகீசரது சிவசொரூப நிலையுள்ளபடி நோக்கி, இவ்வாகீசசிவதெரிசனம் நமக்குக்கிடைப்பது முற்றவப்பயனே எனமகிழ்ந்து, அடியார்கூட்டத்துடன் ஊருக்குவெளியில் வந்து, வாகீசர் தூரத்தில்வரும்போதே, முன்னெல்லாம் மனசில் துதித்துவந்த அப்பரது திருவேடப்பொலிவு நேரே காணப்பெற்றோம். இவர் நமது பிதாவாகிய பரமசிவனேஎன்று நிலத்தில்விழுந்து வணங்கி எழுந்துசென்று, வாகீசரும் நெருங்கிவந்துவணங்கத், தாமும் மேலும்வணங்கி அப்பரே என்றழைத்தருளினார். அன்றுதொட்டே அவர்க்கு அப்பர்என்ற திருநாமம் வழங்குகின்றது. இருதிறத்திருத்தொண்டர்பல்லாயிரவரும்எதிரெதிர்வணங்கிஆரவாரமுழக்கஞ்செய்து ஆனந்தக்கடலிலமுழ்ந்தினார்கள். இருவரும்திருத்தோணித்திருக்கோயிற்குவந்தனர். சம்பந்தர், அப்பரேஉங்கள் * சுவாமியைப்பாடுக என்றருள, அவ்வாறுபாடிவணங்கிச் சம்பந்தர் திருமடத்தில் சென்று, அவருடன் அளவளாவி ஒருவர்ஒருவரிற்கலந்த நண்புரிமைநாளுக்குநாள் மேன்மேல் வளர்ந்தோங்க,

* உங்கள் சுவாமியையென்ற அருள்வாக்குத்தம்மைக்காட்டிலும் அப்பர் இருத்தொண்டுரிமை மிக்குடையாரென்பதை விளக்கும்.

ஆனந்தபரவசராய்க்காலந்தோறும் சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டிருந்து, பலநாளானபின் மற்றுந்தலங்கள் தெரிசிக்கவிரும்பிச் சம்பந்தர்க்குத்தெரிவிப்ப, அவர்பிரிவாற்றாதுடன்வரத், திருக்கோலக்காவுக்குவந்துபாடிச்செல்லுங்கால், மேலுமுடன்வருஞ் சம்பந்தரைவணங்கித், தேவரீர் மெல்லடிவருந்தும் உடன்வருதலொழிக என மிகப்பரிந்துவேண்டி நிறுத்திச்சென்றனர். இந்நிகழ்ச்சி சம்பந்தர் புராணத்தில்,

வாக்கின் பெருவிறன் மன்னர் வந்தணைந் தாரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை யாரும்
ஆக்கிய நல்வினைப் பேறென் றன்பர் குழாத்தொடு மெய்ந்தி
யேற்கும் பெருவிருப் போடு மெதிர்கொள வெய்தும் பொழுதில்.

சிந்தை யிடையறா வன்புந் திருமேனி தன்னி லசைவுங்
கந்தை மிகையாங் கருத்துங் கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும் வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய.

கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற் பரவுமெய்க் காதற்
றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற வணைந்தங் கரசு மெதிர்வந் திறைஞ்ச
மண்டிய வார்வம் பெருக மதுர மொழியருள் செய்தார்.

என்னபமுதலியதிருவிருத்தங்களாலும்திருநாவுக்கரசுபுராணத்தில், "எழுதரிய மலர்க்கையாலெடுத்திறைஞ்சிவிடையின்மேல்வருவார் தம்மை, அழுதழைத்துக் கொண்டவர்தாம் அப்பரே யெனவவரு மடியே னென்றார்" என்னுந் திருவிருத்தத்தாலும் காண்க.

பின்பு சம்பந்தர் நமது அப்பருடைய பின்னழகுங்கண்டின்புறுதற்குஇஃதோரேதுவாமெனக்கருதி அப்பர்வேண்டியபடியே அங்குநின்று, அவ்வழகுங் கண்டுமகிழ்ந்து திரும்பினர். இதனால் இதுவரை சம்பந்தர் திருமுன் அப்பமூர்த்திகள் பின்காட்டாமலே உடன் வசித்துவந்த அருமைவிளக்கமாம். இவ்வாறு வாகீசரும், சம்பந்தர் பிரிவாற்றாது அவரை மனத்துட்கொண்டு பலதலங்கள் பணிந்துசென்று திருச்சத்திமுத்தத்திற் சுவாமியை வணங்கி, "கோவாய்" என்றெடுத்து "பூவாரடிச்சுவடென்மேற்பொறித்துவை" என்றுவேண்டினர். சுவாமி, நல்லூர்க்கு வாவாஎன்றருள

மிகவிரைந்து திருநல்லூர்க்கு வந்துவணங்கி எழும்போது, சுவாமி அன்பனே "உன்னுடைய நினைப்பதனைமுடிக்கின்றோம்" என்று திருவடிகளைச்சிரசின்மேல்வைத்தருளினர். அப்பமூர்த்திகள் பேரானந்தப்பெருங்கடலின் முழுகி "நினைந்துருகும்" என்றெடுத்து "நனைந்தனைய திருவடியென் றலைமேல்வைத்தார் நல்லூரெம்பெருமானார் நல்லவாறே" என்று பாடிக்காலந்தோறுந் தெரிசித்துக்கொண்டிருந்து, திருப்பழனந்தெரிசித்துத், திங்களூரிற்சென்று, அப்பூதியடிகள் தண்ணீர்ப்பந்தரில், "திருநாவுக்கரசு" என்று எழுதியிருப்பதுகண்டு விசாரித்து அவர்வீட்டிற்குவந்தனர். அப்பூதிநாயனாரோ, திருநாவுக்கரசர் கடலில் கல்மீதுவந்தது முதலிய பற்பல அற்புதமகிமைகள் கேள்வியுற்ற அந்நாள்முதலாகத், திருநாவுக்கரசு என்னும் பிரணவசகித திவ்ய பஞ்சாக்ஷரசெபதியானபாராய் அவரைப் பரமசிவமே என்று வழிபாடுசெய்து வருகின்ற நியமசீலர். அங்குவந்த திருநாவுக்கரசரை முன்பார்த்தவரல்லாதலால் யாரோ ஒரு சிவனடியாரெனத்தெரிந்து அம்மட்டிலேயே பாதங்களில் வணங்கி உபசரித்துநின்றனர். வாகீசர் உமது தண்ணீர்ப்பந்தரில் உமதுபேரெழுதாது வேறொருபேரெழுதியதென்னென்று கேட்ப, அந்தோ இவர் சைவராயிருந்தும், திவ்வியபஞ்சாக்ஷரத்தை வேறொருபேரென்றனரே என்று சகிக்காமல், தமது நிலைகலங்கிப் பலவார்த்தைகள் பேசிமுடிவில், அப்பமூர்த்திஎன்று தெரிந்து பதைபதைத்துப் பாதங்களில் வீழ்ந்து பற்றிக்கொண்டு கதறிக், கண்ணீர்பெருகவாய்குழற உலகெலாமுய்யவந்தபரதெய்வமே, உண்மையறியாதுளறினேனேஎன்று வருந்திஎழுந்துஓடிப் பத்தினி புத்திரர் சுற்றத்தார் யாவரையும், நமதுகுலதெய்வம்வலிய வந்து வாயிலினிற்கின்றது வாருங்கள் வாருங்கள் என்றழைத்து வந்து, அவர்களுடன் மேலும் பன்முறைவணங்கி, அழைத்துட்சென்று திவ்யாசனத்தெழுந்தருளுவித்துப், பாதபூசைசெய்து, திருவமுதுசெய்தருளவேண்டி, அதற்குரியவெல்லாம் பாகஞ்செய்து, தம்மக்களில் மூத்த திருநாவுக்கரசரை நுனிவிரிந்த வாழைக்குருத்து அரிந்துவரும்படி ஏவ, அவர் இத்தொண்டுசெய்ய எத்தவஞ்செய்தேனென்று மகிழ்ந்துசென்று அரியும்போது, சர்ப்பம் தீண்டி விஷந்தலைக்கேற மயங்கியும், அத்தொண்டு பூர்த்தியாக

வேண்டுமென்ற மெய்யன்பின் விசேடத்தால், விரைந்தோடிவந்து மாதாகையிற் கொடுத்துக்கீழ்விழுந்துயிர் நீங்கினர். மாதா பிதா இருவரும் அவர் சேஷ்டபுத்திரராய் ஒத்தகருத்தினராய் உத்தமராயிருந்தும், அக்கவலை சிறிதுந்தோன்றாமல், அந்தோ நமது குலதெய்வந்திருவமுதுசெய்தற்கு இடையூறுவந்ததேஎன்று வருந்தி அவ்வுடம்பையொருபக்கத்து மறைத்துவிட்டுவந்து, அப்பமூர்த்திகளைத் திருவமுது செய்தருளுகஎன்றுவேண்ட, மூர்த்திகள் திருவருளால் உண்மைதெரிந்து, அவ்விருவர்செய்த செயற்கருஞ் செயல் நினைந்து பரிந்து, அவ்வுடம்பைக்கொண்டுவரச்செய்து திருக்கோயில் முன்வைப்பித்து "ஒன்றுகொலாம்" என்னுந் திருப்பதிகம்பாடியருள, அம்மந்திரவாக்கமிர்தக் காற்றுப்பட்டவுடனேபுத்திரர் உணர்வுபெற்றெழுந்து வணங்கினர். மாதாபிதா இருவரும் முன் வருத்தமில்லாததுபோல, இப்பொழுது மகிழ்ச்சியுமின்றி நமது குலதெய்வம் உரியநேரத்தில் திருவமுது செய்யவொட்டாது, இடையூறு செய்தானேஎன்று வருந்திநிற்பதுதெரிந்த, அரசுகள் விரைந்துவந்து திருவமுதுசெய்துசிலநாள் அங்குவீற்றிருந்தருளித் திருப்பழனத்துவந்து "அழலோம்புமப்பூதி, குஞ்சிப்பூவாய்நின்ற சேவடியாய்" என்று அப்பூதிநாயனாரைச் சிறப்பித்துப்பாடியருளி அங்கிருந்து பலதலங்கள்தெரிசித்து, முன்பு திருவடிசூட்டிய திருநல்லூரை நினைந்துவந்து சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டிருந்து திருவாரூர் சமீபிக்கவரும்போது, அந்நகரவாசிகள் திருத்தொண்டர் யாவரும் நகரெங்கும் அலங்கரித்துப் பூரணகும்பமுதலிய மங்கலவரிசைகள்பொலிய எதிர்வந்து வணங்கிவாழ்த்தக், திருக்கோயிற்குவந்துதேவாசிரயன் முன்பணிந்துசென்று வன்மீகநாததியாகேசசந்நிதியடைந்து தெரிசித்துச் சிவானந்தப்பெரும்போகந்திளைத்துத்திருப்பதிகம்பாடி புறம்போந்திருந்து மேலும் பற்பலபதிகங்கள்பாடி ஒருபதிகத்தில் அங்குச்செயற்கரிய திருத்தொண்டுசெய்திருந்த நமிநந்தியடிகளை "தொண்டர்க்காணி" எனச்சிறப்பித்தருளிப், பலதலங்கள் தெரிசித்துவந்து திருவாரூரிலேயே நெடுநாளிருந்து, திருவாதிரைத் திருநாளில் வீதிவிடங்கத்தியாகேசர் பவனிவந்தருளுந் திருவீதியிலே, அரிபிரமேந்திராதிதேவர்முனிவர்யாவர்க்கு முன்னின்று தெரிசிக்கின்ற திருத்தொண்டர்பலர்க்கும்முன்

னின்று தெரிசித்து, அத்திருப்பவனித் திருக்கோலக்காட்சி முதலிய தெய்வச்சிறப்பெலாம் நோக்கிமகிழ்ந்தயர்ந்தனர்.

பின்பு திருப்புகலூர் தெரிசிக்கச் சமீபித்து வரும்போது, முன்னரே அத்தலத்துவந்து வீற்றிருந்தருளுகின்ற சம்பந்தர், நமது அப்பரைப்பிரிந்து நெடுநாளாயின. இப்பொழுது அருள்கூர்ந்து இங்கு எழுந்தருளுகின்றார். எதிர்சென்று தெரிசித்தின்புறுவோமென்ற பேராசையினால் விரைந்தெழுந்து திருக்கூட்டஞ்சூழ வந்தனர். தமது பிள்ளையார் வருவதுதெரிந்து அப்பரும்மிகமகிழ்ந்து நெருங்கிவந்தனர். இரண்டுபாற்கடல்கள் எதிர்வந்தொன்றாகச் சேர்ந்து பேரொலிசெய்தால்போல, இருதிறத்துத் திருநீற்றுத் திருத்தொண்டர்பல்லாயிரவரும் எதிரெதிர்வணங்கிஒன்றுசேர்ந்து அரகரமுழக்கஞ்செய்ய, அப்பர் பிள்ளையை வணங்கினர். அதன் முன்னரே பிள்ளையார், அப்பரை வணங்கி அப்பரே தேவரீர் வருநாளில் திருவாரூரில் நிகழ்ந்தமகிமை யென்னென்று வினவியருளினர். அப்பர், அவரை நோக்கி உலகெலாமுய்யவந்த சிசுரூப சிவரத்தினமே, திருவாரூரில் திருவாதிரைத் திருவிழாச் சிறப்பு இத்தன்மையதென்பாராய் "முத்துவிதானம்" என்னும் பதிகத்தால் விளக்கியருளினர். சம்பந்தர், அப்பரே திருப்புகலூரில் வீற்றிருந்தருளுக அடியேன் திருவாரூர் தெரிசித்துவருகின்றேன் என்றுவேண்டி, அனுமதிபெற்றுச்சென்றனர். அப்பமூர்த்திகள், எதிர்வந்த முருகநாயனார் மேலும்வணங்கி உபசரிக்கக், கோயிலுட்சென்று பணிந்துபதிகம்பாடித் திருமடத்தமர்ந்து அடுத்த தலங்கள் தெரிசித்துவந்து வீற்றிருந்தருளினர். பின்பு சம்பந்தர் திருவாரூரினின்று வந்தருளுந் திருவெழுச்சிதெரிந்த அப்பர் எதிர்சென்றுவணங்கி அழைத்து வந்துடனிருக்குநாளில், சிறுத்தொண்டர், திருநீலநக்கர்முதலியரும்வந்து இவ்விருவருடனமர்ந்திருப்ப, திருத்தொண்டின் சிறப்பு முதலிய சிவமகிமாவிசேடாகசியங்களெல்லாம் எடுத்துவிளக்கியின்புற்று வாழ்ந்தனர். இருவரும் மேலும்பலதலங்கள் தெரிசிக்கவிரும்பிச் சுவாமியைவணங்கிவிடைபெற்றுச்செல்லும்போது, பிள்ளையார், அப்பர் தம்முடன் வருதலால் நடந்துவந்தனர். அதனை அப்பர்கண்டு சகிக்கமாட்டாமல் சிற்றடிவருந்துமே என்று பரிந்து சிவிகையிலெழுந்தருளுக என

வேண்டவும் உடன்படாது, வயதுமுதிர்ந்த பிதா நடந்துவரப் பிள்ளை சிவிகையிலேறி வருதல்கூடாதென்பதை விளக்கி நடந்தே வந்தனர். அப்பர் மிகவருந்தி, உலகெலாமுய்யவந்த குழந்தை நாயககுருமணியே, தேவரீர் எப்போதும் ஏறிக்கொண்டு செல்லு தற்கே, சிவபிரான் ஆஞ்ஞைதந்த சிவிகையிலேறாமல் நடந்துவருதல் அவ்வாஞ்ஞையைக் கடந்ததாகுமே. அடியேன் பொருட்டுச் சிவாஞ்ஞையையுங்கடந்து நடந்து செல்லாது சிவிகைமேல் வருக வென்றுமேலும்பிரார்த்திப்ப, அதனை மறுக்கமுடியாத சம்பந்தர், அப்பரே தேவரீர் சென்றருளும் திருத்தலமிதுவென்றுதெரிவித்தால்அடியேன்அங்குவந்து தெரிசிக்கின்றேன்; முன்சென்றருளுக வெனவேண்ட, அப்பர் அதற்கிசைந்து, இனிமேலும் அவருடன் செல்லும்போதெல்லாம் இம்முறைப்படிசெல்வாராய்முன்சென்று திருவம்பர்மாகாளத்து வந்தருளினர். சம்பந்தருஞ் சிவிகைமேற் சென்றுதிருவம்பருக்குவந்தருளினர். இருவரும்சுவாமிதெரிசனஞ் செய்திருந்து திருக்கடவூருக்கு வந்தார்கள். குங்குலியக்கலயநாயனார் பூரணகும்பதீப முதலியன பொலியவந்துவணங்கியுபசரிப்பச் சென்று, சுவாமிதெரிசனஞ்செய்துகொண்டு அவர் திருமாளிகையில் திருத்தொண்டர் குழாத்துடன்திருவமுது செய்திருந்து திருவீழிமிழலை சமீபிக்கவந்தார்கள்.

இவ்விருபெருமக்கள் திருவெழுச்சிதெரிந்து திருவீழிமறையோர் திருநகரலங்கரித்துத், திருத்தொண்டர்களுடன்சகலவைபவங்களும் நிறைய எதிர்வந்துவணங்கி உபசரிப்பத், திருவீதிவலமாகத் திருக்கோயிலுள்வந்து திருவீழிநாதர் திவ்வியரூபம் தெரிசித்துச் சிவானந்த போகந்திளைத்துத் திருப்பதிகங்கள் பாடித் துதித்தார்கள் அப்போதுஅப்பமூர்த்திகள்,அவ்வற்புதக்காட்சியில் விளைந்த ஆனந்தானுபவவிசேடநிலையை, யாவரும் பெற்றுவாழுக வென்றெழுந்தபெருங் கருணையினால் உலகெலாமிங்குவந்து நேத்திரார்ப்பணேசுர தெரிசனஞ்துய்கவென்று ஆஞ்ஞாபித்து அதனை எதிர்மறைமுகத்தால் வற்புறுத்திவிதிப்பாராய் "திருவீழிமிழலையானைச் சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" என்றுஒவ்வொரு திருப்பாட்டிலும் விளங்கவைத்துப்பாடியருளினர். திருவள்ளுவநாயனார் "தாமின்புறுவதுலகின்புறக்கண்டு, காமுறுவர் கற்றறிந்

தார்" என்றுவிளக்கியது இப்பெரியாரது லோகோபகாரச்செயல் நோக்கியேபோலும். பின்பு இருவரும் ஒருவாறு புறம்போந்து பிரிவாற்ருது காலந்தோறும் தெரிசித்துக்கொண்டு, அத்தலத்தி லேயே வடக்குத்திருவீதி மேற்கிலும் கிழக்கிலுமுள்ளதிருமடால யங்களில் வீற்றிருந்தருளினர். அப்போது பஞ்சகாலம்வந்தது. வீழிநாதர் இருவர் கனவில்வந்து, இப்பஞ்சத்தால் உங்கள் மேனி களுக்குயாதும் வாட்டமில்லையாயினும் * உங்களைவழிபட்டுடன் வருகின்ற அடியார் பொருட்டுப், பொற்காசு தருகின்ரேமென்ற ருளித், திருக்கோயிலில் கிழக்குமேற்குப் பீடங்களில் ஒவ்வொரு பொற்காசு வைத்தருளினர். இருவரும் தினந்தோறும் அக்காசு கள் கொண்டு, சிவனடியாரெல்லாரும் உண்ணவருகவென்று இரு பொழுதும் பறைசாற்றித்தெரிவித்து, அடியார்யாவரும்யாதொரு குறையுமின்றியுண்டு தத்தமக்குரிய திருத்தொண்டுகள் இடையூ ரின்றி நிகழும்வண்ணம், மாகேசுரபூசை நாளுக்குநாள் அதிகமாக நடத்திவந்தார்கள். ஞானசம்பந்தர் சிவபுத்திராரதலினுலும்வாய்த் தொண்டுமாத்திரம் செய்தலினுலும் அவர்பெற்ற காசு வட்டங் கொடுத்து மாற்றப்பெற்றது. அப்பமூர்த்திகள் அடிமையாதலா லும் கைத்தொண்டுஞ்செய்தலினுலும் வட்டமின்றி மாற்றப்பெற் றது. இருதிருமடங்களிலும் பல்லாயிரம் சிவனடியார்கள் உண்டு மகிழ்ந்துவந்தனர். பின்பு பஞ்சம்நீங்கிஎங்கும் மழைபெய்துதானி யாதி சகலவளங்களும் மலிந்தன.

இருவரும் திருவாஞ்சியமுதலிய தலங்கள்வணங்கிக்கொண்டு வேதாரணியஞ்சென்று அத்தலத்தார் யாவரும் எதிர்கொண்டு பணிந்துபசரிப்பத், திருக்கோயில் திருச்சந்நிதியில்வந்து, திருக் கதவு திருக்காப்பிட்டிருப்பதும், அது திருமறைகளின் ஆணை என் பதும், பன்னெடுங்காலமாக அரிபிரமாதிதேவர்முனிவராலும் அவ் வாணைகடந்து அக்கதவு திறக்கமுடியாமல் வேறுவழி செய்துட் சென்று தெரிசித்துவருவதும்தெரிந்து, அவ்வாரிய வேதங்களின்

---

* இதனல் இருவர் திருமேனிகளும் ரக்தமாம்ஸாதிகளாலாகிப் பசி முதலியவைகளால் வருந்தும் கர்மசரீரங்களல்ல, திருவருள்மய திவ்யசரீ ரங்களே என்பது தெளிவாகின்றமை காண்க.

ஆணையை, அவற்றின்சாரமாய்த்தெளித்தெடுத்த சிரியதமிழ்வேதமாகிய தேவாரங் கடந்துசெல்லுந்திருவருள்வலியுடைய தென்பதும், அவ்வேதங்கள், அவற்றைப்பாடியருளிய சிவபிரான், உலகர்களின்பக்குவபேதம்நோக்கிப், பலதேவர்க்கும்பரத்துவங்கூறித் தமது கட்டளையை அவ்வுலகர்க்கெல்லாம் விளக்கும்படிவைத்த பொதுநூல்களேயென்பதும், அவைகள் அச்சிவாஞ்ஞையை மேற்கொண்டு அக்கட்டளையை உலகர்க்கு விளக்குகின்ற அவ்வதிகாரமட்டில் நிற்பதன்றி, அவ்வரணையைக்கடந்து, தாமாகவொன்றையேனுஞ்செய்யும் ஆற்றலுள்ளனவல்லவென்பதும், சிவமே தாமாகத் திருவருள்மேனிகொண்டு ஒருமையினிற்கின்ற உண்மைத் திருத்தொண்டர்கள், சிவபிரான் செய்யுஞ்செயலெல்லாம் அவரைப்போலத் தாமே செய்யவல்லவர்களென்பதும், இதனால் அவ்வேதங்களுடன் இம்மெய்த்தொண்டர்க்குள்ள இடையீடு, அஃதாவதுவேதங்களைக்காட்டிலும் இவர்க்குள்ளவல்லபம்மிகப்பெரிதென்பதும்பின் வருஞ் செயலாலுங்கண்டு உலகெலாமுய்யும்படி † அம்மெய்த்தொண்டரிருவருட் சம்பந்தர், அப்பரே நாம் நேர்வழி சென்றே தெரிசிக்கவேண்டும்; இத்திருக்கதவு திறக்கப்பாடியருளுகவென்றருளினர். அப்பமூர்த்திகள், இச்செயல், சிவனைப் பிரியாதுடனின்று செலுத்துகின்ற சிற்சத்திமூலமாகவேநிகழுமுறைநோக்கியே முதலிற் சிற்சத்தியை விசேடிப்பாராய் "பண்ணினேர் மொழியாளுமைபங்கரோ" என்றெடுத்து "கதவினைத் திறந்தருள் செய்மினே" என்று பாடியருளினர். அதனைத் திருச்செவி சாத்தியருளிய வேதவனேசர், அச்சுருதிமுதலில்சத்தியையியந்ததும் சொல்நயம், பொருள்நய முதலிய மகிமைகளும் நோக்கி நோக்கி அதன் வசத்தராய் நிற்றலால், அத்திருப்பதிகம் பூர்த்தியாகும்வரைதிருக்கதவைத்திறக்காது தாமசித்தல்நோக்கிப், பதினொராவது திருப்பாசுரம் "இரக்கம் ஒன்றிலீர்" என்று உறைத்துப்பாடியருளினர்.

---

† இதனை, சம்பந்தர்புராணம் (ருகஉ) திருவிருத்தம்,

திருமறை நம்பர் தாமுன் பருள் செய்த வதனைச் செப்பும்
ஒருமையி னின்ற தொண்டர் தம்பிரா னூர்பா லொக்க
வருமருட் செய்கை தாமே வருத்திட வல்லா ரென்றும்
பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க் கிடையீடு பெரிதா மன்றே.

என்று விளக்குதலாற்காண்க.

* உடனே வேதவனேசர் திருக்கதவு திறந்தருளினர். வேதங்களெல்லாம் தாமேமுழங்கின. தேவரெல்லாம் ஆரவாரித்தனர். பூமழைபொழிந்தனர். திருத்தொண்டர் சிவநாமகோஷஞ்செய்தனர். தலத்தாரெல்லாம் பன்னெடுங்காலமாகக் கிடைக்கப்பெருதபெருவாழ்வுபெற்ரோமென்று பெருமகிழ்வுற்றார்கள். அப்பர், சம்பந்தர் இருவரும் உட்சென்று தெரிசித்துச்சிவானந்தந்திளைத்து பிரிவாற்ருதுநின்று ஒருவாறு புறம்போந்தார்கள். அப்பொழுது நாவரசர் சம்பந்தரை இத்திருக்கதவு திருக்காப்பிடுதலும் நிகழ்ந்து வரும்படி பாடியருளுக என்று வேண்டினர்.

சம்பந்தர் "சதுரம்மறை" என்றெடுத்தனர். அச்சொல்முடியுமுன்னரே திருக்கதவு மூடிக்கொண்டது. இது, முன் அதிசாந்தராகிய அப்பர், நம்மை இரக்கமில்லீரென்றனராதலால், இனிநமது இளங்குழந்தை பாடத்தொடங்கும்போதே அக்கதவைஅடைக்க வேண்டியதவசிமெனத் திருவுளங்கொண்ட வேதவனேசர் திருவருளேயாம். சம்பந்தர் பதிகமுழுதும் பாடியருளினர். பின் இருவரும் திருச்சந்நிதித்திருவீதியில் திருமடங்களிரண்டில் வீற்றிருந்தருளினர். அப்போது நாவரசர் திருக்காப்பிடப்பட்டுள்ளிருந்த சிவமாகியபொருளை, அக்காப்புநீக்கிவெளியிடுதல் சிவகுமாரர்க்கே உரித்தாயிருக்க, அதனை நாம் செய்தது பொருத்தமன்று; வேதவனேசர் திருவுள்க்கருத்தறியாமற் செய்யப்புகுந்தமையாற்ருன், நாம் பாடியபோது அரிதிற்றிறந்து, உரிமைப்புதல்வர் பாடத்தொடங்கின உடனே எளிதில் அடைத்தனர்போலுமென்றெண்ணித், திருவுளந்தெரியாது செய்ததுதவறென்று கவலையுற்று, அருநித்திரை செய்தமர்ந்தனர். சுவாமி அவர்கனவில்வந்துவாய்மூரிலிருக்கின்ரேம் வருகவென்றருளினர். அரசுகள், உடனே 'எங்கேஎன்னை' என்றெடுத்து "அங்கேவாவென்றருளினஅதென்கொலோ" என்று பாடிக்கொண்டெழுந்து, கனவிற்காட்டிய கோலத்துடன் செல்

---

* இதனை நாவுக்கரசர் புராணம் (உசுஅ) திருவிருத்தத்தில்,
பண்ணி னேரு மொழியாளென் றெடுத்துப் பாடப் பயன்றுய்ப்பான்
தெண்ணீர் முடியார் திருக்காப்புத் திறக்கத் தாழ்க்கத் திருக்கடைக்காப்
பெண்ணீ ரிரக்க மொன்றில்லீ ரென்று பாடி யிறைஞ்சுதலும். என்று
விளக்குதலாலுணர்க.

கின்ற சுவாமியைத் தொடர்ந்தனர். சுவாமி, சமீபித்தவராயும்* அரசுகள்விரைந்து நெருங்கநெருங்க மிகத்தூரித்தவராயுஞ்சென்று அங்கு ஒருகோயில்காட்டியுட்புகுந்தொளித்தனர். அச்சமயம் சம்பந்தர், முன்னரே அப்பர் அங்குப்போந்தது தெரிந்து தாயைத் தொடருமிளங்கன்றுபோல விரைந்துவந்து காணப்பெற்றுமகிழ்ந்னர். அப்போது வாகீசர், சுவாமியை நோக்கி எம்பெருமானே, தேவரீர் திருக்கோயில் வாயிலை உமது உரிமைப்புதல்வரே திறக்க வேண்டுமென்னுந் திருவுளக்கருத்தறியாமல் திறப்பித்த அடியேனுக்கு ஒளிக்கலாம்; ஒரு சொல்லில் அடைப்பித்த உமதிளம்புதல்வரிங்குவந்து நிற்கின்றனர்; இவர்க்கு நீர் எப்படி மறைந்திருக்க முடியுமென்று விண்ணப்பித்தனர். உடனே சுவாமி, அப்பர்கருத்தின்படி பிள்ளையார்க்கு முன்பு தோன்றி அவர் முகமாகக்காட்சி கொடுத்தருள, அரசுகள் தம்கருத்துமுற்றியதெனமகிழ்ந்து'பாடவடியார்' என்று திருத்தாண்டகம் பாடியருளினர். சுவாமி அப்பதிகம்பெற்றுமகிழ்ந்து எழுந்தருளினர். பின் இருவருந்திருவாய்மூரையடைந்துதெரிசித்திருந்துவேதாரணியம்வந்து வசித்தார்கள்.

அப்போது, ஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் அனுப்பிய தூதர்களால், மதுரையில் சமண்சமயம் பரம்பி நமது சைவசமயத்துக்கிடர்செய்வது தெரிந்து, அங்குச் சென்றுசைவஸ்தாபனம் செய்யத்திருவுளங்கொண்டெழுந்தனர். உடனே அப்பர், அப்பிள்ளையிடத்துவைத்த அளவுகடந்த அன்பின்மிகுதியால், பிள்ளை அருமைநோக்கி, அப்பாதகச்சமண்காட்டுட்புகுதவிட்டிருக்க மனம் பொருந்தாமையால் வற்புறுத்துவாராய், பிள்ளாய் அங்குச்செல்லுதற்கு நான் உடன்படேன் என்றனர். அன்றுமுதல் அவர்க்குப் பிள்ளையார் என்னும்பேர்வழங்குவதாயிற்று. சம்பந்தர், அக்கொடுஞ்சமணே எங்கும்பரந்துசெறிந்த காடாந்தகாரசண்டமாருதத்துள்ளும், சிறிதும் சலனமின்றி இடையறாது பிரகாசித்துக்கொண்டே விளங்குகின்ற தெய்வாத்தினதீபங்களாகிய சைவப்பெருமக்களிருவரையும் காணும்விருப்பமிகுதலால், அங்குச்சென்று அச்சமணிருள் தொலைத்துச் சைவஒளி பெருக்கி நிலைநிறுத்தியன்றிவேறொன்றுஞ்செய்யேன் என்றனர். அதன்மேலும் அப்பர், அப்பாவிகள் எனக்குச்செய்த தீமைகள்

பில, நீர் செல்லுதலில் என்மனம்வருந்துகின்றது. ஆதலால் நீரிங் கிரும். நான் போய் அப்பாதகர் செயலை ஒழித்துவருவேன் என் றருளினர். சம்பந்தர், அப்பாதகர்செய்தஉய்வில்லாப்பெருந்தீமை கள் ஒன்றேனும் உம்மை அணுகாது நீங்கப்பெற்றுவந்து, திரு வருட்பெருவலிவிளக்கிய தேவரீர் இவ்வாறுகூறியதென்னை. அம் மையப்பர் நம்முள்ளத்திருத்தலால் பகைவர் செய்யுந்தீமையெல் லாம் நமக்கு நன்மையாகவேமுடியுமென்று "வேயுறுதோளிபங் கன்" எனும்பதிகம்பாடி அப்பரைச் சமாதானஞ் செய்துகொண்டு பிள்ளையார் தமது திருவுளக்கருத்தின்படி சென்றருளினர்.

பின்பு வாகீசர், அங்கிருந்து நாகபட்டணமுதலிய தலங்கள் வணங்கிச்சென்று, மேலும் திருவீழிமிழலையிற் பலநாளமர்ந்திரு ந்து, திருவாவடுதுறைவந்து சுவாமியை வணங்கிச் சம்பந்தர்க்குப் பொன் கொடுத்ததைச் சிறப்பித்துப்பதிகம்பாடித், திருப்பழை யாறை வடதளிக்குநேர்வந்து அஞ்சலிசெய்தனர். அக்கோயில் சிவலிங்கப்பெருமானை மறைத்துச் சமணர்கள் தமது பாழியாக்கி இருப்பதை அறியாதசிலர் இது சமண்பாழியன்றோவென்றனர். அதுகேட்ட அரசுகள், இது சிவாலயமன்றாகில் நமது கையஞ்ச லிக்காது என்று கூறிவிட்டுச், சுவாமீ, இப்பாதகர் மறைத்ததை நீக்கி அவர்களைத்தொலைத்தருளும்; தேவரீரை நேரே தெரிசித் தன்றிப்போகேனென்று பக்கத்து வீற்றிருந்தருளினர். உடனே சுவாமி அரசன்கனவில்ஆஞ்ஞாபித்தருள, அரசன் எழுந்துவியந்து வந்து சுவாமி கனவிலருளிய அடையாளநோக்கியுட்சென்று, சிவ லிங்கப்பெருமான் மறைப்புளகப்பட்டிருப்பது தெரிந்து, பதை பதைத்துஅப்பமூர்த்திகள்,சீபாதங்களில்வணங்கி,எம்பெருமானே பொறுத்தருள்களென்றுபிரார்த்தித்துச்சமணரனைவரையுங்கொன்று மறைப்பெல்லாம் நீக்கி, விமானமுதலியவற்றை விளக்கி அப்பரை அழைத்துவந்து, அவர் திருமுன்னாகச் சம்புரோக்ஷணஞ்செய்து, நித்தியபூஜாதிகளுக்குரிய நிபந்தங்களும் நியமித்தனன். அப்பர் காலந்தோறுந் தெரிசித்துக்கொண்டு சிலநாளங்கிருந்தனர்.

பின்பு திருவானைக்காமுதலியதலங்கள்வணங்கித்,திருப்பைஞ் ஞீலிக்குச்செல்லும்போது, சிவபிரான் ஒரு பிராமணராய் அவ்வழி யில் ஒரு குளமுண்டாக்கிக் கட்டமுதுவைத்திருந்து, அப்பரை

நோக்கி வழிநடந்து இளைப்புற்ற தொண்டர்களுடன் அமுதுண்டு செல்கவென்றுகூறி உண்பித்து, முன்சென்று திருப்பைஞ்ஞீலி சமீபிக்க மறைந்தருளினர். அப்பர் கண்டு திருவருளைநினைந்துருகித், திருக்கோயில் சென்றுபணிந்து திருப்பதிகம்பாடிச் சிலநாள் அங்கிருந்து, திருவண்ணாமலைமுதலிய சிவஸ்தலங்கள்தெரிசித்துத் திருப்பதிகம்பாடித், திருக்காளத்திக்குவந்துதிருமலையேறித் தெரிசித்துவணங்கித் திருக்கண்ணப்பர் திருவுருவங்கண்டு அன்பின் சொரூபஅநுபவநிலையிலமுழ்ந்திச் சிவானந்தந்திளைத்து, இத்தென் கயிலையநுபவம்போல வடகயிலையுந் தெரிசித்தின்புறக்கருதி ஸ்ரீசைலம், காசிமுதலிய தலங்கள்தெரிசித்துக்கொண்டு, உடன்வருந் தொண்டர் யாவரையும்நிறுத்திவிட்டு, ஆசைமிகுதியால் வேறொன்றிலும் நோக்கமின்றி, இரவும் பகலும் வெப்பமிகுந்து கற்களும் பரந்த சுரமார்க்கத்தில் அதிவேகமாக நடந்தனர். கால்கள்தேய்ந்தன. கைகளால் தாவிச்சென்றனர். கைகளுந்தேய்ந்தன. மார்பினால் நகர்ந்தனர். மார்புந்தேய்ந்து எலும்புகளும் பழுதுபட்டன. அதன்மேலும் ஆசை சிறிதுந்தளராதெழுந்தும் திருமேனியிடங் கொடாமையால், அவ்விடத்தில் கயிலாசபதியையேதியானித்துக் கொண்டுபூமியிற்கிடந்தனர். சிவாஞ்ஞையின்றித்திருக்கயிலைக்குச் செல்லுதல் எத்துணைச் சிறந்தாராலுமுடியாதென்னும் உண்மை விளக்குதற்கும், இன்னுமிவரைத் தமிழ்நாட்டிலிருந்து சீவர்களுய்யும்படி திருப்பதிகங்கள் பாடச்செய்தற்குந் திருவுளங்கொண்டே இவ்வாறுஇவர் திருமேனியைதளர்வுபடுத்தியசிவபிரான்,ஒருமுனிவராய்வந்து உடம்பெல்லாங்குறைந்தும் இக்கொடுங்காட்டில்வந்ததென்னென்றனர். வாகீசர், திருக்கயிலாச தெரிசனத்தின்பொருட்டே என்றனர். அந்தோ இக்கொடுஞ்சுரத்தில்வந்து இத்தனைக் கஷ்டப்படுவானேன் இம்மட்டிலாவது திரும்புவதே நலமென்றனர். நாவரசர் எப்படியாயினும் திருக்கயிலை தெரிசித்தன்றித் திரும்பேனென்றனர். உடனே சுவாமி ஆகாசத்தில் அசரீரியாய் நின்று அன்பனே எழுந்திரு என்றருள, அரசுகள் ஊறுமுழுது நீங்கித்திவ்விய மேனியுடன் எழுந்து தமது எண்ணம் முற்றுற வேண்டினர். சுவாமி, அன்பனே இத்தடாகத்தில்மூழ்கித்திருவையாற்றிலெழுந்து அங்குத் திருக்கயிலாசந் தெரிசித்தின்புறுக என்

றருளினர். அப்பமூர்த்திகள் அத்தடாகத்தில் ஸ்ரீ பஞ்சாக்ஷரஞ் செபித்து மூழ்கித், திருவையாற்றிலே ஒருவாவியிலெழுந்து ஆங்குள்ள சராசரங்களெல்லாஞ் சத்திசிவமாக்கண்டு அதனைப்பதிகத்தில் விளக்கித் திருக்கோயில் முன்வந்தனர். அக்கோயிலே திருக்கயிலாசமலையாக அதன்மேல் செம்பொற்றிருக்கோயிலிலே அரி பிரமாதிதேவர் முனிவர் யாவருந்துதிப்பத், தேவமாதர்கள் திருமுன் நடிப்பத், திருநந்திதேவர் திருப்பிரம்பினால் நெருக்குஒதுக்கி நடுநின்றுலாவச், சிவகணங்கள் வாத்தியகோஷஞ்செய்ய, வேத சிவாகமங்கள் இருபக்கத்துமுழங்க, மேலும் பற்பல சிறப்பெல்லாம் பொலியத், திவ்விய ரத்தினசிங்காசனத்தின்மீது சிவபிரான் உமாசமேதராய் வீற்றிருந்தருள்வது கண்டார்; அளவுகடந்த ஆனந்தங்கொண்டார். பரவசராய்ப்பன்முறை பணிந்துநின்றார். அன்புவெள்ளம்பெருகமிதந்துசென்றார். அருள்வெள்ளங்குடைந்தார். அணுகிவந்தடைந்தார். தெரிசனானந்தத்திருவமுதம் திருவிழிவாய்மடுத்தார். திருவருட்டிருக்கோலந் திருவுள்ளத்தகப்படுத்தார். திருப்பதிகம் எடுத்தார் திருத்தாண்டகந் தொடுத்தார். அவரிடத்து அங்கு நிகழ்ந்த ஆராத அன்புரிமைச்செயல்கள் ஆராலும் அளவிடற்கரியனவே. இவ்வாறு திருமுன்பு தெரிசித்தின் புற்று நின்றருளும் திருநாவுக்கரசரெதிரே, சிவபிரான் திருக்கயிலைத்திருக்கோல மறைத்தருளி முன்னுள்ள திருக்கோயிற்றிருக்கோலமே காட்டியருளினர். அப்பமூர்த்திகள் வருந்தி ஒருவாறு தெளிந்து திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு அங்குவசித்தருளிப், பின்பு திருநெய்த்தானம்பணிந்து திருப்பூந்துருத்திக்குவந்துதெரிசித்துப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருமடத்தில் வீற்றிருந்தருள்வாராயினர்.

அப்போது மதுராபுரியினின்று திரும்பிவந்த சம்பந்தர், உடனே அப்பர் வீற்றிருந்தருள்வதெங்கெனவினவித்தெரிந்துஅவரைக்கண்டு கலந்தின்புறக்கருதி விரைந்து வந்தனர். வருவதுதெரிந்த அப்பமூர்த்திகள், மிகுந்த காதலுடன் விரைந்துவந்து தூரத்தே வணங்கித் தமதுகோலம் பிறரறியாதபடிமறைந்து, திருத்தொண்டர்கூட்டத்துட்சென்று சம்பந்தர் சிவிகையைத்தாங்கிக்கொண்டு வந்தனர். சம்பந்தர், அதிதூரத்துவந்துகாட்சிதரும்நமது அப்பரைச்

சமீபித்துவந்துங்காணப் பெற்றிலோமென்னும் ஆவல் மிகுதியால் அப்பர் எங்குற்றனரென்றார். அப்பர், தேவரீர் சிவிகையைத்தாங் கும் பெருவாழ்வு பெற்றிங்குற்றேனென்றனர். உடனே சம்பந்தர் மிகப்பதைத்துக்கீழேகுதித்து அப்பர்பாதங்களில் வீழ்ந்துவணங் கினர். அதற்குமுன் அப்பரும் அவரை வணங்கினர். இவ்வாறு இருவரும் ஒருவரை ஒருவருவந்துபரவுந்தகுதிநிலைகண்டு, இரு வகைத்திருத்தொண்டர்களும் வணங்கிஎழுந்து ஆனந்தவெள்ளத் தழுந்தி அரகரமுழக்கஞ் செய்தார்கள். அப்பரும் பிள்ளையாரும் திருக்கோயில் தெரிசித்துத் திருமடத்துவந்துவீற்றிருந்தருளினர். உடனே சம்பந்தர், மதுராபுரியிற் சமணிருள் தொலைத்துத்திருநீற் றொளிபரப்பிப் பாண்டியன் கூனிமிர்ந்தது முதலிய வைபவங்க ளும், இந்நிகழ்ச்சிக்குக்காரணராய் விரும்பியழைத்த மங்கையர்க் கரசியார், குலச்சிறையாரிருவரிடத்துள்ள திருவருள் விளக்கப் பெருமகிமையும் எடுத்துவிளக்கியருளினர். அப்பமூர்த்திகள் அவ் விருவர்மகிமைநோக்கிஅப்பாண்டிநாட்டிற்குச்சென்றருளவிரும்பித் தாம்தொண்டைநாட்டுத்தலங்கள்தெரிசித்துதிருக்காளத்திதென் கயிலையினின்று வடகயிலைக்கு வழிச்சென்று, திருவருளால் திரு வையாற்றில் வடகயிலை தெரிசித்துவந்தது விளக்கியருளக்கேட்ட பிள்ளையார், அப்பர்நோக்கப்படி விடைபெற்றுத்தொண்டைநாடு நோக்கிச்சென்றருள, அப்பர், பிள்ளையார் நோக்கப்படி விடை பெற்றுப்பாண்டிநாட்டுக்குவந்து திருப்புத்தூர் வணங்கித் திருப்ப கம்பாடி மதுராபுரிக்குவந்து, மங்கையர்க்கரசியார், நெடுமாறநாய னார், குலச்சிறைநாயனார் மூவரும் மகிழ்ந்து சர்வாலங்காரவரிசை யுடன் எதிர்வந்து வணங்கி உபசரிப்பத், திருவாலவாய்த் திருக் கோயில் திருக்கோபுரம் வணங்கிச் சென்று வலம்வந்து திருமுன் பணிந்துட்புகுந்து திருவருளுருவத்திருமூலலிங்க திவ்யரூபந்தெரி சிக்கப்பெற்று ஆனந்தவெள்ளத்தழுந்திநின்று, அம்மூர்த்தி, திருக் கயிலாசமுதலிய திருத்தலங்களெல்லாவற்றிலுஞ் சிவலிங்கங்கள் தோன்றுமுன்னரே, உலகெலாமுய்யும்பொருட்டு அநாதியாய், அவ்விலிங்கங்கட்கெல்லாம் மூலமாய் தத்துவாதீத துவாதசாந்த நிலையில்விளங்குவதென்று, சிவபிரானே மகரிஷிகட்கருளிச்செய்த உண்மைவிளக்கி முத்திரைவைப்பாராய், "மூலத்தானை யெல்லார்

க்குமுன்னே தோன்றி" என்று திருப்பதிகம்பாடியருளி ஒருவாறு புறம்போந்து, உடன்வந்த அரசர், பத்தினியார், மந்திரியார் மூவரும் மேலும்வணங்கிவேண்ட அங்குவீற்றிருந்தருளிச்சிலநாளான பின், திருப்பூவணம் வந்து, சுவாமி எதிர்வந்துகாட்சிகொடுத்தருள அத்திருக்கோலத்தை வியந்து "வடிவேறுதிரிசூலந்தோன்றும்" என்று பாடியமர்ந்து, அந்நாட்டுத்தலங்களெல்லாந் தெரிசித்துச் சென்று, சோழநாட்டுக்கு வந்து அங்குள்ள தலங்களெல்லாம் மேலுஞ்சென்றுதெரிசித்து வந்து திருப்புகலூரையடைந்துதினந் தோறுங்கைத்தொண்டுசெய்து பற்பல திருப்பதிகங்கள் பாடித் தெரிசித்துக்கொண்டிருந்தருளினர்.

அந்நாளில், வாகீசத்திருவடிகள், விருப்புவெறுப்பற்ற சிவசொரூபரேஎன்னுமுண்மையைஉலகெலாமுணர்ந்துவழிபாடுசெய்யும்பொருட்டுச், சிவபிரான், இவர் உழவாரப்பணிசெய்யுமிடமெல்லாம் பொன்னும் நவரத்தினங்களுங் கிடக்கும்படி செய்ய, அவைகளையும் குப்பையாகவே அள்ளி வெளியிலெறிந்தனர். இதனால் இவர் பொன் மணி முதலியவை உயர்பொருள்கள் கல்,மண் முதலியவை இழிபொருள்களென்னும் பொருள்வேற்றுமை இன்மையன்றோ? பொன்கல் என்பன முதலிய அச்சொற்களிலும்வேற்றுமைதோன்றுதுநிற்கும் அதீதநிலை தெளிவாகின்றது. † பின்பு தேவரம்பையர்கள், தங்களிடத்து வாகீசர்க்கு மோகமுண்டாகும்படி, அவர் முன்னின்று இசைபாடுதல், நடனஞ்செய்தல், பூக்களைத்தூவுதல், அணைவார்போல சமீபித்தல், உடைநழுவினது போற்காட்டல் முதலியவெல்லாஞ்செய்தும், வாகீசர் தமது திருத்தொண்டினிலே சிறிதும்வழுவாதுநின்று, அவர்கள்செய்யும்மோகச் செயல், சீவர்க்கு வினைவசத்தால் வருவதாதலால், இருவினை முதலியவைகளை முன்னிலைப்படுத்தி, வினைகளே உங்களால் நம்மை அலைக்கமுடியாது, நமக்கு உங்களாலாகவேண்டிய குறைஒன்றுமில்லை (கர்மசேஷமில்லை) என்பது முதலிய உண்மைநிலைவிளங்க

---

† இது, புல்லோடுங் கல்லோடும், பொன்னோடுமணியோடுஞ், சொல்லோடும் வேறுபாடிலாநிலைமை துணிந்திருந்த "நல்லோர்" என்னுந் திருவிருத்தத்தாற்காணலாம்.

"பொய்ம்மாயப்பெருங்கடலில்" என்னும் திருப்பதிகம்பாடி, அத னால் தாம் இயல்பாகவே வினையினீங்கி விளங்கிய முற்றறிவினை யுடைய முதல்வனாகிய தத்துவாதீத சிவசொரூபராய் நிற்றலை விளக்கியருளினர். அரம்பையர்கள், தங்கருத்துமுடியாமையால், அவர் திருவடிகளைவணங்கிக்கொண்டு சென்றனர். தேவர் முனி வர் யாவரும்இந்நிலைமைதெரிந்து இவர்மகிமையையெடுத்துத்துதித் தார்கள். இவ்வாறு வாகீசர் திருப்புகலூரில் இருவகைத்திருத் தொண்டுகளுஞ்செய்துகொண்டிருந்து, தம்மைச்சிவபிரான்"வளர் திருத்தொண்டினெறிவாழ" சைவசமயந் தழைத்தோங்கும்பொரு ட்டுப்பூமிக்கு அனுப்பியருளியபடி இப்பூமியில் இதுவரை நிகழ்த் திய சைவஸ்தாபன நிலைபோதியதே. இனித் திருவடியிற்சேர்த்த ருள்வாரென்னுந் திருவுளக்கருத்தமைந்த திருவிருத்தங்கள் பாடி யருளினார். இதனைச் சேக்கிழார்பெருமான் "என்னையினிச் சேவ டிக்கீழிருத்திடுமென்றெழுகின்ற, முன்னுணர்வின்முயற்சியினாற் றிருவிருத்தம்பலமொழிந்தார்" என்றருளியதனாற்காண்க. பின்பு அத்திருவிருத்தக் குறிப்பின்படி, சித்திரைச் சதயநாளில் சிவபி ரானைநோக்கி எம்பெருமானே அடியேன் உமதுதிருவடியிலிருந்து மீளாதுவாழவருகின்றேன், "புண்ணியாவுன்னடிக்கேபோதுகின் றேன்" என்றுபாடிக்கொண்டு சிவானந்த சொரூபராய்த் திருவடி நிழலில் வீற்றிருந்தருளினர்.

குறிப்பு;—திருவடி தந்தருளுகவென்று பன்னெடுங்காலம் வேண்டித் தியானித்துப் பரிபாகபூர்த்திநோக்கி வருகவென்றழை த்தபின், அவ்வாஞ்ஞையின்படி,செல்லுதலே சீவர்க்குரியநிலைமை யாம். இவர் நான் வருகின்றேனென்றுதாமாகச்சென்றருளியதே இவரது சிவசொரூப நிலையை விளக்கும்.

திருச்சிற்றம்பலம்.

## குலச்சிறைநாயனார் புராணசாரம்.

கோதில்புகழ் சேர்மணமேற் குடியார் கோவண்
குலச்சிறையார் தென்னர்குல வமைச்சர் குன்று
மாதவர்க ளடிபரவு மரபார் பாண்டி
மாதேவி யாரருள்வான் பயிர்க்கு வேலி

காதன்மிகு கவுணியர்கோன் வாதிற் றோற்ற
கையரைவை கைக்கரைசேர் கழுவி லேற்றும்
நீதியினு ராலவாய் நிமலர்ச் சேர்ந்த
நின்மலனு ரென்மலங்க ணீக்கி னாரே.

இ—ம். குலச்சிறைநாயனுர், பாண்டிநாட்டில் மணமேற்குடியில்அவதரித்தவர். வெளிவேடம்பூண்டுஉலகை வஞ்சிக்கும்பொய்யடியரை ஒதுக்கி, உள்ளபடி சிவனையேபற்றிச் சிவவேடம்பூண்டு, மெய்யடிமைத்திறமே பேணுஞ் சிவனடியார்களைச், சிவமாகவே வணங்கிவிதிப்படி பூசித்துத்திருவமுதளித்தலாகிய மாகேசுரபூஜா நியமத்தொண்டுசெய்கின்றவர். (சோழராஜர்க்கு மந்திரியாயிருந்து அச்சோழர் தமது புத்திரியார் மங்கையர்க்கரசியாரைப் பாண்டியர்க்கு மணஞ்செய்வித்தபோது, ஸ்ரீதனமாகக்கொடுக்கப்பெற்று வந்து,) பாண்டியராஜமுதல் மந்திரியாராய், மங்கையர்க்கரசியார், திருவருள்வழிநின்று செய்துவந்த சைவதவ தெய்வப்பயிர்க்கு வேலியாகப் பக்கத்துணை செய்துவந்தவர். பாண்டிநாட்டிற் பரம்பிய சமணிருள் நீக்கிச் சைவஒளிபெருக்கி உய்வித்தற்காக அரசியார் திருவுளக்கருத்தின்படி தங்கள் வேண்டுகோட்கிரங்கிவந்தருளுகின்ற சம்பந்தரை, எதிர்கொள்ளச்சென்று அதிதூரத்தேதிருக்கோலங்கண்டு பூமியில் வணங்கியபடியேகிடந்து, சம்பந்தர்திருக்கரங்களால் தூக்கி அருள்புரியப்பெற்றவர். பின்பு வாதுசெய்து இருமுறைதோற்ற சமணர் மேலும் வரம்பின்றி மீறுமல், இனித் தண்டனை விதித்தே மூன்றுமுறை வாதஞ்செய்யத்தக்கதென்று நியமித்து, அச்சமணர்கள்தோற்றுல் கழுவிலேறுகின்றேமென்று கூறத், திருவருளால் அவர்கள் தோற்றொழிவது நிச்சயமெனத் துணிந்து, முன்னரேகழுக்கள்தயாரித்து மூன்றுமுறையுந்தோற்ற பின் அவர்களைக் கழுவிலேற்றுது விட்டால், அவர்கள் சைவகுல மன்னராகியபாண்டியரைவஞ்சித்துவகித்துச்செய்துவந்தபாதகம் வளர்ந்து வருத்துமென்றிரங்கும் கருணையினுல் கழுவிலேற்றி உய்வித்தவர். இம்மகிமைகள்நோக்கியே சிவசுந்தரரால் திருத்தொண்டத்தொகையில் "பெருநம்பி" என்று விசேஷித்துப் பாடப்பெற்றவர். இவ்வாறே மேலும் மதுராபுரியிற் சைவநெறித் தெய்வச் செங்கோல்வளர்த்துவந்து திருவாலவாயுடையார் திருவடிநிழலிற் கலந்து பெருவாழ்வு பெற்றனர்.

குறிப்பு:—இவர், அந்நியசமய நிராகரணமும் சைவசமய ஸ்தாபனமுஞ்செய்தலைமேற்கொண்டு, அதற்குரியதிருத்தொண்டு செய்வார்க்குடனின்று தளர்ச்சிவாராதுகாத்து நிலைநிறுத்தலேஉன் ருயிர்போலும் சிவபுண்ணியமென்பதுவிளக்கிஉய்விக்கத்திருவரு ளால் வந்தருளித்தம்மைவழிபடும் மெய்யன்பர் மலவலிநீக்கிஉய் யக்கொண்டருளுஞ் சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## பெருமிழலைக்குறும்பநாயனார் புராணசாரம்.

---

கொண்டல்பணி வளர்சோலை மிழலை நாட்டுக்
கோதில்புகழ்ப் பெருமிழலைக் குறும்ப னார்சீர்
அண்டர்பிரா னடியவருக் கடியா ராகு
மாதரவா லனுக்கவன் றொண்டர்க் காளாய்
மண்டொழுமெண் டருசித்தி வாய்த்து ளார்தாம்
வன்றொண்டர் வடகயிலை மருவு நாண்முன்
எண்டிகழு மறைமூல நெறியூ டேகி
யிலங்கொளிசேர் வடகயிலை யேகி னாரே.

இ-ம். பெருமிழலைக்குறும்பநாயனார், மிழலைநாட்டுப் பெரு மிழலைநகரில் அவதரித்தவர். சிவனடியாரைச் சிவனெனவணங்கித் திருவமுது செய்வித்துத் திரவியமுங்கொடுத்து ஏவல் செய்கின்ற வர். இவர், சுந்தரமூர்த்திநாயனார் சொரூபமகிமை தெரிந்து அவர் திருவடிவணக்கமே சிவபதவாழ்வு தருவதென்று தினந்தோறும் தியானித்து வந்தனர். அந்நன்மையால் இவரை அணிமாதிஅஷ்ட சித்திகள் சார்ந்து ஏவல் செய்யத்திருவருட்சித்தராய் வாழ்ந்து சுந்தரமூர்த்திநாயனார் நாளை திருவஞ்சைக்களத்தினின்று திருக் கயிலாயஞ்செல்லுதலை யோகநிலையாலறிந்து முதல்நாளே பிரமாந் திரவழியில் திருக்கயிலைசென்று சிவபதநிழலையடைந்தனர்.

குறிப்பு:—இவர், சுந்தரமூர்த்திநாயனார் சிவசொரூபரேஎன்ப தறியாதுசிலர், சீவர்கள்போற் பத்தினிகளுடன்கூடிச்சிற்றின்பம்

அநுபவித்தவரென்றுகூறி நாகுருமல் சுந்தரசிவத்தியானமே தமக்குச் சிவபதந் தந்தருளியதென்று நேரிற்காட்டியுய்விக்கத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## காரைக்காலம்மையார் புராணசாரம்.

தங்குபுகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தருமதத்தன் .தரும்புநித வதியார் மாவின்
செங்கனிக டிருவருளா லழைப்பக் கண்டு
திகழ்கணவ னதிசயித்துத் தேச நீங்க
அங்கவுட லிழந்துமுடி நடையா லேறி
யம்மையே யெனநாத னப்பா வென்று
பொங்குவட கயிலையணிந் தாலங் காட்டிற்
புனிதநட மனவரதம் போற்றி ஞரே.

இ-ம். காரைக்காலம்மையார், சோழநாட்டில் காரைக்காலில் வைசியர் குலத்தில் அவதரித்துப் புநிதவதியார் என்னும் திருப் பெயர் பெற்றவர். இவர், தளர்நடையுற்றுமொழிபயிலும் விளை யாட்டுப்பருவத்திலும் சிவத்தியானுதி சிவசம்பந்த நிலைமைகளே விளங்க வளர்ந்து வந்தனர். இதனை, இவர்,

பிறந்து மொழிபயின்ற பின் னெல்லாங் காதல்
சிறந்து நின்சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப திடர்.

என்றருளிய அற்புதத்திருவந்தாதியாலும், சேக்கிழார்பெருமான்

வணிகர்பெருங் குலம்விளங்க வந்துபிறந் தருளியபின்
அணிகிளர்மெல் லடிதளர்வுற் றசையுநடைப் பருவத்தே
பணியணிவார் கழற்கடிமை பழகிவரும் பாங்குபெறத்
தணிவில்பெரு மனக்காதல் ததும்பவரு மொழிபயின்றார்.

"விடையவர்பால், அல்கியவன் புடனழகின் கொழுந்தெழுவதென வளர்வார்." "வண்டல்பயில் வனவெல்லாம் வளர்மதியம் புனைந்த

சடை, அண்டர்பிரான் றிருவார்த்தை யணையவரு வனபயின்று, தொண்டர்வரிற் றொழுது." என்பனவாதியாக விளக்குதலானும் காணலாம். இவ்வாறு வளர்ந்து மங்கைப்பருவமடுத்த புநிதவதியாரை, இவர்பிதா நாகபட்டணம் பரமதத்தனுக்கு மணஞ்செய்து கொடுத்தும், தமக்கு வேறு பிள்ளையின்மையானும், தெய்வத்தன்மையே திகழும் புத்திரியாரைப் பிரியலாற்றாத வாஞ்சைமிகுதியானும், காரைக்காலிலேயே ஒருமிருக்கம் அமைத்து இருவரும் வாழ்ந்திருக்கும்படி செய்தார். அப்போது பரமதத்தன், தன்னிடத்து வந்த இரண்டு மாம்பழங்களைப் பத்தினியாருக்கனுப்ப, வாங்கி வைத்த புநிதவதியார், ஒரு சிவனடியார் பசியினராய் வரக்கண்டு வணங்கி, திருவமுதுபடைத்துக், கறியமுதுபாக மாகாமையால் ஒரு மாம்பழத்தை உடன்படைத்தனர். அடியவர் புசித்துச்சென்றனர். பின்பு நாயகன் வந்து புசிக்கும்போது ஒரு பழத்தைப் படைத்தனர். நாயகன் அதனைஉண்டு ருசிமிகுதியால் மற்றொரு பழமும்படைக்குக என்றனன். புநிதவதியார் உட்சென்று சிவபிரானை வேண்டித்தியானித்துநிற்ப, அவர் திருக்கரத்தில் ஒரு மாங்கனி வந்தது. உடனேவந்துபடைத்தனர். அதனையும்உண்டு அதிமாதுரிய தெய்வச்சுவைகண்டு மிக ஆச்சரியமுற்று, இது முன்கனிபோன்றதன்று; மூவுலகிலும் பெறற்கரியது; எங்கே கிடைத்தது என்றனன், பத்திநியார், திருவருளால் வந்ததென்றால் தமது பெருமைகூறினதாகும். வேறொன்றுகூறினால்பொய்யாகும். யாது செய்வோமென்று யோசித்து ஒருவாறு துணிந்து உள்ளபடிகூறினர். நாயகன், திருவருளால் வந்ததானால் இன்னும்ஒருகனிதருக என்றனன். பத்திநியார் உட்சென்று சிவபிரானைவேண்டினர். ஒரு கனி திருக்கரத்துவந்தது. அதனைக்கொடுத்தனர். நாயகன்வாங்கி மிகமகிழ்ந்தனன். உடனே அக்கனிமறைந்தது நாயகன் புநிதவதியாரைத் தெய்வமேயென்று நிச்சயித்து வெளியிடாமலிருந்து, அவர் செய்யும் பணிவிடைகளை ஏற்றுக்கொள்ளப் பயந்து, வியாபாரமுறையில் செல்கின்ற ஒரு முகாந்திரங்காட்டிப், பாண்டிநாட்டிற் கடற்கரையிலோர் நகரில்வந்து, தன் குலத்தில் ஒருபெண்ணை மணஞ்செய்திருந்து, ஒரு புத்திரியைப்பெற்றுப், புனிதவதியார் பேரிட்டுவாழ்ந்துவந்தனன்.

அவனிலைமை பிதாமுதலியர்தெரிந்து புநிதவதியாரைப் பல்லக்கில் வீற்றிருந்தருளச் செய்துவந்து, அவனுக்குத் தெரிவிப்ப, அவன் பயபக்தியுடன் விரைந்துவந்து பத்நிபுத்திரியுடன் புநிதவதியாரை வணங்கி, அடியேன் உமது கருணையினால் இங்கு வாழ்கின்றேன்; இப்புத்திரிக்கு உமதுபேர் தரித்தனன் என்றுகூறப், பிதா முதலியர் இவ்வாறு செய்ததென்னென்றுகேட்ப, அவன் இவர், மானுடரல்லர்; நாமெல்லாம் வணங்கும் குலதெய்வமே. இவரிடத்தில் தெய்வச்செயல் கண்டேன்; நீங்களும் வணங்குங்களென்றான். அதுகேட்டு அவர்கள் திகைத்து நிற்பப், புநிதவதியார், சிவத்தியானஞ்செய்து, சுவாமி! இவனுக்காகவே இவ்வுடலில் அழகுகாட்டுந் தசையைச்சுமந்தேன். இவன் செயலிவ்வாறுதலால், இனித் தேவரீரையே சேர்ந்தின்புறுகின்ற பேய்வடிவு தந்தருளுகவென்று வேண்டித், தமது திருமேனித் தசை முழுதையும் உதறிவிட்டு, அரிபிரமாதி தேவரும் போற்றும் பேய்வடிவம் பெற்றனர். தேவர் பூமாரிபொழிந்தனர். தேவதுந்துபி முழங்கின, சிவகணங்கள் கூத்தாடின. பிதா முதலியர் பயபக்தியுடன் வணங்கிச்சென்றனர். உடனே புநிதவதியார், தாம் வேண்டியபடி தத்துவாதீத சுத்தாத்துவித இன்பநிலைதந்தருளிய திருவருளைநினைந்துருகி, அந்நிலையினை நம்மனோர்க்கும்விளக்கி உய்விக்கத்திருவுளங்கொண்டு"அற்புதத்திருவந்தாதி'முதலியதிப்பியநூல்கள்பாடியருளிச் சித்தாந்தநிலையினையே அந்நூல்களில்விளக்கியருளினர். பின்பு திருக்கயிலைசெல்லவிரும்பி,நாடுகள்,காடுகள்,நதிகள் மலைகளெல்லாம் நடந்துசென்றுஅடிவாரத்துவந்து, கயிலையைமிதிக்கப்படாதென்று தலையால் நடந்தேறினர். இவர்வருதலை உமாதேவியார் தெரிந்து, இவரது திடபத்திமகிமையை உலகெலாம் சிவவாக்கினாலுணர்ந்துய்கவெனத்திருவுளங்கொண்டு சுவாமீ! என்பே வடிவாயிருக்கவும் தலையால் நடந்துவருகின்ற இவர்யார்? இவரது பேரன்பின்வீரமெத்திறத்ததென்றுகேட்பச், சிவபிரான்,உமையே இவள் நம்மைத்தனது தியான கெர்ப்பத்தில்வைத்துநெடுங்காலம் சுமந்துவந்து வெளியிலுந் தோன்றப்பெற்று வளர்த்துப் பேணுகின்ற அம்மையென்றறிகவென்றுகூறி, அப்புநிதவதியார் சமீபிக்கும்போதே, உலகெலாமுய்யும்படி ஆவலுடன் அம்மையே வந்த

னையாவென்றழைத்தருளி அவ்வுண்மை விளக்கினர். உடனே அம்மையார், அப்பா உனதுதிருவருளால் வந்தனனென்று பன்முறை பணிந்தனர். சுவாமி, யாதுவேண்டுமென்றருள, அம்மையார்மேலும் வணங்கி எம்பெருமானே ஒருகாலத்தும் அழியாத நித்தியானந்தமே தருகின்ற மெய்யன்புவேண்டும். இனிப்பிறவாமை வேண்டும். பிறப்பதுண்டேல் உன்னை ஒருபோதும் மறவாமைவேண்டும் இன்னும் நீ திருநடனஞ்செய்யும்போது பேரின்பத்துடன் உன்னையே பாடிக்கொண்டு திருவடியின்கீழிருத்தல் வேண்டும் என்று வேண்டினர். சுவாமி, அம்மையே திருவாலங்காட்டில்நமதுநடனந் தரிசித்து பதநிழலிற் பாடிக்கொண்டிருப்பாயென்றருளினர். அம்மையார், வணங்கி மீண்டுந் தலையால் நடந்து திருவாலங்காட்டுக்கு வந்து திருநடனந்தெரிசித்து, " கொங்கைதிரங்கி " என்று மூத்த திருப்பதிகமுதலிய திருப்பதிகங்கள்பாடிச் சிவானந்தானுபவ நிலையராய்த் திருவடியின்கீழ் நீங்காது வீற்றிருந்தருளுகின்றார்.

குறிப்பு:—இவர், உலகத்துள்ள பெண்களெல்லாரும் தத்தம் நாயகர் கருத்துக்கிசைந்து பணிவிடைசெய்தலும், அதிபுத்திசாதுரியர்களானாலும், அதனை வெளிக்காட்டாமல் அடங்கிநிற்றலும் எவ்விதத்திலாவது உடற்குரிய அந்நாயகர் பணிசெய்யவியலாது நீக்கம்வந்தபோது, உடல்புஷ்டியாகாது உணவுசுருக்கி வேதசிவாகமவிதி வழுவாது விபூதி உருத்திராக்ஷ வேடப்பொலிவுடன்விரத நெறிநின்று, உயிர்க்குரிய நாயகனாகிய சிவனையேபற்றிச் சிவத்தியான பூஜாதிபதிருத்தொண்டுகள் செய்தலுமே முறையென்பது காட்டியுய்விக்கத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வியாரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## அப்பூதியடிகணாயனார் புராணசாரம்.

அந்தணனார் றிங்களூர் வருமப் பூதி
யருமறையோர் திருநாவுக் கரசி னாமம்
பந்தரிடை யெழுதக்கண் டாசு மெய்தப்
பரிந்துபரி கலநேடிப் படப்பை சேர்ந்த

மைந்தனுயி ருயர்கதலி யிலைமேற் றுஞ்சும்
வாளரவு கவ்ரவுடன் மறைத்தல் கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தாற் றீர்த்துத்
திருவமுது செயவருளைச் சேர்ந்து ளாரே.

இ--ம். அப்பூதியடிகளுயனூர், சோழநாட்டில் திங்களூரில் பிராமணகுலத்தில் அவதரித்தவர். இவர் வேதசிவாகமாதிசிவசாஸ்திர விளக்கத்தால் வைதிக சைவமார்க்கமே உண்மைநிலை என்பது துணிந்து, உலகப்பற்றற்றுச் சிவனையேபற்றிப் பஞ்சாக்ஷரசெபதியான பூஜாநியமசீலராய் இல்லறநெறிநின்று, சிவனடியார்களைச் சிவனென்றே வழிபடுகின்றவர். திருநாவுக்கரசுநாயனாருடைய அருட்செயல் பலவும் கேள்வியுற்று, அவர் சைவசமய மகிமையை உலகெலாமுணர்ந்துய்தற்காகவே சமண்சமயம் புகுந்தனர். பற்பல அற்புதச்செயல்களால், சைவசமய மெய்ப்பலமும், அந்நிய சமய துர்ப்பலமும் நேரே காட்டினர் என்றுஉண்மைதெரிந்தனர். கேள்வியால் தெரிந்த அம்மட்டிலன்றித் திருவுருவும் திருவேடப்பொலிவும் நேரே காணப்பெறுதிருந்தும், நிக்கிரகம், அனுக்கிரகம் இரண்டுஞ்செய்தருளுகின்ற பாமசிவனே, அனுக்கிரக மாத்திரஞ் செய்தருளுதற்காகவே, திருநாவுக்கரசு நாமங்கொண்டு வந்தனரென்று தெளிந்து, இவ்வாகீச சிவவழிபாடே பாமுத்தியை எளிதில் தருவதென்றிறுகப்பற்றி, வேதமத்தியில் விளங்கும் பஞ்சாக்ஷரத்திலும், சிறந்த திவ்விய பஞ்சாக்ஷரம் "திருநாவுக்கரசு" என்னுந் திருமந்திரமே எனக்கொண்டு, அத்திருநாமமே தமது புத்திரர் முதலிய எல்லாப் பொருள்களுக்கும் வைத்து வழங்கி வருவனராயினர்.

அந்நாளில் தண்ணீர்ப்பந்தரில் திருநாவுக்கரசு விலாசம்நோக்கித்தமது திருமாளிகைக்குவந்த வாகீசரை, ஒருசிவனடியாரென்று வந்து வணங்கி, வாகீசர் உமது தண்ணீர்ப்பந்தரில் உமதுபேரெழுதாமல் திருநாவுக்கரசுஎன்று வேறொருபேரெழுதியதென்னென்று கேட்ப, அப்பூதியடிகள், திருநாவுக்கரசு என்னுஞ் சிவமந்திரசெபதியானவழிபாட்டில் உறைத்துநிற்கின்றாராதலால், வேறொருபேர் என்றளவிலே அத்திருமந்திரத்தை அந்நியமென்று புறக்கணித்ததாக எண்ணி, அந்தோ இவர் சிவனடியாராயிருந்தும், இத்திருமந்

திரத்தை வேறொரு பேரென்றனரே, நாமும் இப்பாதக வசனம் கேட்கும்படிநேர்ந்ததே என்றுசகிக்கமுடியாதுவருந்திநிலையழிந்த மனக்கலக்க முடையராயிருந்தும், அப்பரை நோக்கிச் சிவனடியாரை உயர்த்தியுந் தம்மைத் தாழ்த்தியும் பேசவேண்டிய சைவ சாம்பிரதாய நிலைதவறாது " நன்றருளிச்செய்திலீர் " என்று அக்கலக்கநிலையிலும் அருளிப்பாடு மறவாது விளக்கியருளினர். "நன்றருளிச்செய்திலீர்" என்றதன் கருத்து, தண்ணீர்ப்பந்தரில்"திருநாவுக்கரசு" என்று எழுதிய திருமந்திரம், வேதசிவாகமங்களால் விதந்தெடுத்தோதப்பெற்றஸ்ரீவாகீசர்என்னும்மகாமந்திரமன்றோ! இது மங்கல சிவவேடம்பூண்ட சிவனடியார்க்கெல்லாஞ் சொந்தமாயிருக்கவும், இதனை மங்கலமாகக்கூறாமல் வேறொருபேர்என்று அந்நியமாகக் கூறினீரே என்பதாம்.

இவ்வாறுகூறிய அப்பூதியடிகள் மேலும் அப்பரைநோக்கி அடியவரே, சமணர்கள் வெட்கமுதலிய குணமெல்லாங்கைவிட்டு, தீக்குணங்கொண்டு, கொலைபாதிகளுக்கஞ்சாமல், அநீதியேசெய்கின்றவர்கள். அவர்கள்வசப்பட்ட அரசனால்வந்த பெருந்தீங்குகளொன்றுந் தம்பாலணுகாமல் நீங்கியொழிதற்கு, யாதொன்றுஞ் செய்யாமல் என்றுமுள்ளசிவத்துவநிலையிலிருந்தே நித்தியமங்கள செயபேரி உலகெலாமுழங்கக்கடல்மீதுகல்லில்மிதந்து, கரையேறி வந்தவருடைய திவ்வியநாமசிவபஞ்சாக்ஷரத்தையா வேறொருபேரென்றுகூறுவதெனக்கோபங்காட்டி, ஆனாலும் சமணராயிருந்து வந்தவர்தாமேனநினைத்து வேறொருபேரென்றீரோ? அவர்சமண் சமயம்புகுந்தது சிவபிரானைவழிபட்டுநின்றுள்ளபடிசெய்யுந்திருத்தொண்டின்பிரயோசனம், யகாதிகர்மபலன்போலமறுமையிற்றான் கிடைக்குமென்றெண்ணவேண்டா; இம்மையிலுங்கிடைக்கப்பெற்றுய்யலாமென்று சிவசாஸ்திரங்கூறுமுண்மையை அனுபவமுகத்தால் விளக்குவாராய்த், தமது அனவரததியான தேவாரஉழவாரமுக்கரணத்திருத்தொண்டுகளே, அரசன்செய்ததீமைகளைஉடனே விலக்கியுய்வித்து, இம்மையிலும் பலன்தந்துநின்றதுகாட்டி, அறிவில்லாத என்போல்வாருந்தெளிந்துசைவநிலையையேஇறுகப்பற்றி நின்றுய்தற்காகச்செய்த செம்மையான செயலேயாம். கோணலான செயலன்று. இத்தகைய பெரியார் திருப்பேரெழுதியது

கண்டு மகிழாதொழிந்ததுமன்றி, வேறொருபேரென்று கொடுஞ்சொற் கூறினீர் இப்பெரியார் கல்லின்மீது கடல்கடந்து வந்தது முதலிய அற்புதமகிமைகளை அறியாதார் இப்புவனத்தில் ஒருவருமிலர். நீரோ விபூதி ருத்திராக்ஷ மங்கலவேடத்துடனின்று இக்கொடுமைகூறினீர் நீர் யார் எங்கிருப்பவரென்று கேட்டனர். இது சிவவேடமில்லாதார் இவ்வாறு கூறினால் அந்நிமிஷமே அவரால் தண்டிக்கப்படுவாரென்பதைக் குறிப்பாலுணர்த்துகின்றது. வாகீசத்திருவடிகள், தம்மிடத்து அப்பூதியடிகள் வைத்திருக்குந்திடபத்திநிலை தெரிந்தும், நீர் இதுவரைவிசேடித்துக்கூறிய திருநாவுக்கரசரே நாமென்று கூறலாம். அவ்வாறு கூறாது, நம்மையெல்லாந் "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாஞ் சமய"த்திற் புகுத்தியுய்விக்க வந்ததற்கிணங்க, அவரது அத்தியந்த பரமசாந்தநிலைவிளங்க, அந்நியமார்க்கத்தினின்ற அடியேன் அதைக்கடந்து வரும்படி சிவபிரான் சூலைநோயாலழைத்து ஆட்கொளப்பெற்ற அறிவிலாச் சிறியேன் என்று தாழ்மைகூறி விளக்கியருளினர்.

உடனே அப்பூதியடிகள் ஆ! ஆ!! நமது குலதெய்வமா இங்கு வந்து இவ்வாறு திருவாய்மலர்ந்தருளியது; அந்தோ உண்மையறியாதுளறிய பாதகனாயினேனே என்று பதைபதைத்துக்கண்ணீர் பாந்தொழுகக் கைகள் மேலேறிக்குவியஉரைகுளற மயிர்சிலிர்ப்ப பூமியில்வீழ்ந்து புரண்டலறித்திருவடி சிரமேற்பொருந்தப்பற்றிக் கொண்டுகிடந்தார். செய்வதறியாதுதிகைத்தார். சிறியேன்செய்த பெரும்பிழைதீர்த்துய்வதெவ்வாறென்றார். அதனைநினையுந்தோறும் உள்ளங்குழைந்துருகினார். ஓடினார் மனைவி மக்கள் உறவர் யாவரையும் அழைத்துவந்தார். அவர்களுடன் மேலும்வணங்கினார். அரசனைத் திவ்யாசனத் தெழுந்தருளச் செய்தார். அர்க்கியபாத்திய ஆசமனீய பத்திரபுஷ்பாதிகளாற் பூசித்தார். பாதோதகம் உட்கொண்டார். யாவர்க்குங் கொடுத்தார். மாளிகை எங்குந்தெளித்தார். திருவமுதுசெய்தருளவேண்டினார். திருவமுது பாகமாகும்போது தமதுபுத்திரர்மூத்த திருநாவுக்கரசரை வாழையிலைஅரிந்துவர விடுத்தார். அவர் சென்று பாம்புதீண்டி விஷந்தலைக்கேறவும், விரைந்து ஓடிவந்து இலையை மாதா கையில் நீட்டி விழுந்துயிர்நீங்கினர். உடனே இருவரும் சுவாமிகள் திருவமுதுசெய்தற்குஇடர்

வருமோவென்றுவருந்தி, அவ்வுடலை ஒருபக்கத்தில்மறைத்துவிட்டு அரசுகளைவணங்கி அமுதுசெய்தருளுகவென்று வேண்டினர். அரசுகள் திருவருளால்அவ்விருவருஞ்செய்தஅருஞ்செயல்தெரிந்துஅவ்வுடலைச் சிவாலயத்தின்முன் வைப்பித்துத்திருப்பதிகம்பாடியருள, உடனே மூத்த திருநாவுக்கரசு உயிர்பெற்றெழுந்துவணங்கவிபூதி கொடுத்தருளினர். இருவரும் முன் துக்கப்படாமைபோல இப்போது மகிழ்தலுமின்றி நமது சுவாமிகள் உரியநேரத்தில் அமுது செய்தருளவிடாது இடர்செய்தனனேயென்றுவருந்திநிற்பதுதெரிந்து, அரசுகள்விரைந்துவந்து யாவர்க்கும்விபூதிகொடுத்தருளினர்.

அவர் அமுதுசெய்தற்குரிய சுத்தஸ்தானத்தில் ஆசனமிட்டு அதன்முன் பூமியிற் சதுரமாக மெழுகிக் கோலமிட்டுப் பரிகலந் திருத்தித்திருவமுது கறியமுது பக்ஷணவகையெல்லாம் படைப்பித்துஅரசுகள் அவ்வாசனத்து வீற்றிருந்தருளியபின் சிவாசன சிவமூர்த்தி சிவமூலமந்திரங்களாற் பூசித்துத்தூபதீப கற்பூராதிகள் செய்து நமஸ்கரித்து நிற்ப, அரசுகள் அவரொடும் புத்திரர்கள் உறவினரொடுந் திருவமுது செய்தருளி அவர் வேண்டுதற்கிணங்கி மேலும் பலநாளங்கமர்ந்தருளிக், திருப்பழனஞ்சென்று அவர் திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடியருளினர். இவ்வாறே அப்பூதியடிகள் பலநாள் திருநாவுக்கரச சிவத்தியான செபபராயணராயிருந்தே சிவனடிநிழலிற்கலந்து சிவானந்தப் பெரும்போகந்திளைத்து வாழ்கின்றனர். இவரோ சிவநியமாசாரசீலர். தமக்கு ஆசௌசமுண்டென்பதும் அந்த நிலையில் உயிர்நீங்கிய உடலை ஒருமனையுள் மறைத்து வைத்துப் பெரியவரமுது செய்ய வேண்டுதல் விதிவிரோதமென்பதுந் தெரியாதவரல்லர். அங்ஙனமாகவும் அவ்வாறுசெய்தது அரசுகளால் புத்திரன்உயிர்த்தெழுவானென்ற துணிவுகொண்டு அவன் உறங்குகின்றவனாக நினைத்தே அரசுகள்காலதாமசமின்றி அமுதுசெய்தருளவேண்டுமென்றஅன்பின் வசத்தராய்நின்றுசெய்த செயலேயாம். அதுவே உண்மையென்பதை, அரசுகளும் அவ்வுடலைப் பிரேதமென்று நினையாமல் உறக்கநிலைய உடம்பெனக்கருதியே சிவாலயமுன்பு வைப்பித்து உறக்கநீங்கி எழுகின்றவனாகச் செய்தருளிய துணிவினாலுந்தெளியலாம்.

குறிப்பு:—இந்நாயனார், உலகத்திற் சிலர் அரசுகளின் பூர்வ நிலையையும்பெரியபுராணத்தில் அங்கங்குள்ளஉள்ளீடானஉண்மை நிலைகளையும் உற்றுநோக்காமல் அரசுகள் சமண் சமயத்திற் புகுந்திருந்து வந்தது நோக்கி, அவரை மலசகித சீவர்களிலொருவராக நினைத்து, நாகுற்று வருந்தாவண்ணந் திருவுளங்கொண்ட சிவனருளால், அவர் சமண்சமயம்புகுந்து வந்ததனுண்மைகாட்டி அவர் எக்காலத்தும் மலரகித சிவத்துவநிலையினரேஎன்னுமியல்புவிளக்கி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## திருநீலநக்கநாயனார் புராணசாரம்.

---

நீதிதரு மறையோர்வாழ் சாத்த மங்கை
நீலநக்க ரயவந்தி நிமலர் மேனி
மீதிவிழுஞ் சிலம்பிகடிந் தவளை நீத்தார்க்
குமியாத விடநாத வுறுநோய் காட்டக்
காதன்மிகு மனைவியையு மகிழ்ந்து மேவிக்
காழியர்கோ னமுதுசெயக் களித்து வாழ்ந்து
வேதிகையிற் பாணனார்க் கிடமு நல்கி
விளங்குபெரு மணத்தானை மேவி னாரே.

இ-ம். திருநீலநக்கநாயனார், சோழநாட்டில்சாத்தமங்கையில் பிராமணகுலத்தில் அவதரித்தவர். பல தேவர்க்கும் உபசாரத் தலைமைதந்து பொதுவாய் விரிந்த வேதங்களிற்கூறும் யாகமுதலிய தருமங்களெளவற்றினுஞ் சிறந்தவைகள் சரியாதி சிவதருமங்களே. அவைகளுட்சிறந்தன சிவபூசனையும் அதன்மேல்மாகேசுர பூசனையுமே என்னும் உண்மைதெளிந்து, அவ்விரண்டுமே செய்கின்றவர். இவர் ஒரு திருவாதிரைநாளில் ஆன்மார்த்த சிவபூசை முடித்துக்கொண்டு, அங்குள்ள அயவந்தி என்னுஞ்சிவாலயத்திற் சிவலிங்கபூசனையும் விரும்பிப், பத்தினியார் பூஜாத்திரவியங்கள் கொண்டுவரச்சென்று, சிவாகமவிதிப்படி பூசித்துப் பஞ்சாக்ஷர செபதியானத்திருக்கும்போது, சிவலிங்கத்தில் ஒரு சிலம்பிவிழக் கண்டு பத்தினியார் பதைத்துக், குழந்தைகள்மேல் சிலம்பிவிழுந்தால் அவ்விடத்திற்கொப்புளம் எழுந்து உபாதிசெய்யுமென்றஞ்சி

உடனே ஊதி வாய்நீரை உமிழ்ந்து மாற்றும் உலகவழக்கம்போல் சிவலிங்கத்தில் ஊதி வாய்நீரை உமிழ்ந்தனர். நாயனார் அதனைமெய்யன்பின்விசேடச்செயலென்றுமகிழாமல் அநாசாரமென்றெண்ணி இவ்வநுசிதஞ்செய்த நீ நம்மைவிட்டு நீங்குக என்றனர். பத்நியார் பயந்து ஒதுங்கினர். அஸ்தமயனமாயிற்று. நாயனார், நியமமுடித்துவந்து தமது திருமாளிகையில் நித்திரைசெய்யும்போது, அவர்கனவில் அயவந்திநாதர் தமதுமேனியில்உமிழ்ந்தஇடமன்றி மற்றிடமெல்லாங் கொப்புளங்காட்டினர். நாயனார் விழித்தெழுந்து அச்சத்துடன் கோயில்சென்று மனைவியாரைஅழைத்துவந்து நாடோறும் சிவபூஜை மாகேசுரபூசைகள் முன்னிலுஞ் சிறப்பச் செய்துவந்தனர். அப்போது ஞானசம்பந்தர்மகிமை கேள்வியுற்று அவரைத் தரிசிக்கவிரும்பினர். அச்சமயம் அவர் அங்கு வருவது தெரிந்து, அலங்கரித்து நடைப்பந்தரிட்டு வாழை கமுகுகள்நிறைத்துப், பாவாடை பரிமளபுஷ்பங்கள் பரப்பிப், பூரணகும்ப தூபதீபாதிகளுடன் எதிர்சென்றுவணங்கி அழைத்துவந்து, அயவந்திநாததெரிசனமானபின், தமது திருமாளிகையில் திருத்தொண்டர் பல்லாயிரவருடன் திருவமுதுசெய்வித்து, மேலும்வேண்ட ஞானசம்பந்தர் அன்றிரவிலும் அங்கிருந்து அமுதுசெய்தருளியபின், திருநீலகண்டயாழ்ப்பாணர் பத்நியாருடன் இவ்விரவில் தங்குதற்கு இடங்கொடுக்குகவென்றருளினர். நீலநக்கர் எங்குந் திருத்தொண்டர் நிறைதலால், தமது மாளிகையுள்ளே பிறர்புகுதாத அதிபரிசுத்த பூஜாமண்டபத்துள், நித்தியாக்கினிநிகழும் ஓமகுண்டத்தின் பக்கத்திலே அவ்விருவருந் தங்கும்படி செய்தனர். இருவரும் வந்தவுடன் அவ்வோமகுண்டத்து அக்கினி ஆகுதிசெய்யும் போதுள்ள அளவினும் பன்மடங்கதிகமாய்ச் சுவாலித்து வலஞ்சுழித்தெழுந்தது. நீலநக்கர் மிகமகிழ்ந்தனர். இருவரும் அங்கே சயனித்தனர். இவ்வரியசெயல், நாம் உயர்ந்த சாதியென்றகங்கரித்து நிற்பாரும் உண்மையுணரும்படி பாமுத்தி முதலியஇஷ்டசித்திகள் தருவது, அன்பு, அருள், அறிவு, அடக்கமுதலிய உத்தமகுணங்களேயாம். சாதிநிலையன்றென்பதை நேரேவிளக்கியது. விடிந்தபின் சம்பந்தர் கோயிலிற்சென்று நீலநக்கரைச் சிறப்பித்துப்பாடி, அவர் பிரிவாற்றாமை நோக்கிச் சிலநாளிருந்து, மேலும்

உடன்வருகின்ற நீலநக்கருக்குச் சமாதானங்கூறி நிறுத்திச் சென்றனர். நீலநக்கர் மறுக்கமாட்டாது ஒருவாறு பிரிந்துவந்து தமது நியமத்தொண்டு செய்திருந்து சம்பந்தர் திருமணந் தெரிசிக்கச் சென்று அவருடன் சிவசோதியிற்கலந்தருளினர்.

குறிப்பு:—இவர், வேதம் பலசமயங்களையும் உபசாரமுறையில் தழுவிநிற்கும் பொதுநூலாயினும், முடிந்தமுடிவாய்எவராலுமறுக்கமுடியாதுவிளங்குவது சைவசமயமேஎன்பதும் சிவபூசையும் அதனுயிர்போன்ற மாகேசுரபூசையுமே சிறந்தனஎன்பதும், வேதங்கூறும்யாகாதிகள் சுவர்க்கபோக அற்பபலன்தந்து மீட்டும் பூமியில் தள்ளிவிடுவனவே என்பதும், சிவபூஜாங்கத்தில் செய்யும் சிவயாகம் அப்பூஜாங்கமாய்நின்று மீண்டுவாராப்பேரின்பே தருவதென்பதும் விளக்கியருளுதற்காகத் திருவருளால் பிராமணகுலத்துவந்தருளிய சிவவுர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## நமிநந்தியடிகணாயனார் புராணசாரம்.

நண்ணுபுகழ் மறையோர்வா ழேமப் பேறூர்
நமிநந்தி யடிகடிரு விளக்கு நல்க
எண்ணெயம ணர்கள்விலக்க நீரா லாரூ
ரிலங்குமா நெறியாருக் கேற்று நாளிற்
கண்ணமணர் கெடக்கண்பெற் றடிகள் வாழக்
காவலனு னிபந்தங்கள் கட்டு வித்தே
அண்ணலருள் கண்டாரூ ரமர்ந்து தொண்டர்க்
காணியெனு மரசினரு ளடைந்து ளாரே.

இ-ம். நமிநந்தியடிகணாயனார், சோழநாட்டில்ஏமப்பேறூரில் பிராமணகுலத்தில் அவதரித்தவர். உலகப்பற்றொழிந்து சிவபூசை சிவாலயசேவை முதலிய திருத்தொண்டுகளேசெய்கின்றவர். பலநாளும் திருவாரூர்க்குவந்து சுவாமி தெரிசனஞ்செய்கின்றவர். அங்குள்ள அரநெறி என்னுங்கோயிலில் திருவிளக்கிடநினைந்துஒரு வீட்டில் நெய்கேட்ப, அதுசமணர்வீடாதலால் அவர்கள் உங்கள் கடவுள்கையில்நெருப்பிருத்தலால்விளக்குமிகையே. வேண்டுமேல்

நீரால்விளக்கிடுமென்றார்கள். நாயனார்வருந்திவந்துசந்நிதியில்வணங்கினர். சுவாமிஅன்பனே திருக்குளத்துநீரால்விளக்கிடுகவென்று அசரீரியாயருளினர். நாயனார்மகிழ்ந்து திருக்குளத்துவந்துபஞ்சாக்ஷரஞ்செபித்து நீர்முகந்து திருவிளக்கேற்றினார். தீபங்கள் மிகப் பிரகாசித்தன. மேலும்நீர்முகந்து நிறையவிட்டுவணங்கித் தம்மூர்க்குவந்துசிவபூசைமுடித்துஅமுதுசெய்துமறுநாட்பூசைமுடித்துக் கொண்டு திருவாரூர்க்குவந்து திருவிளக்குப்பணிமுதலியன செய்தனர். இவ்வற்புதம்தெரிந்து யாவரும் வியந்தனர். அப்போது தண்டியடிகணாயனாரால் சமணர்கலக்கம் அடியோடழிந்தது. அவர்களைத் தண்டித்தொழித்த சோழராஜர், நமிநந்தியடிகளுடைய மகிமைதெரிந்து, திருக்கோயில் நித்திய நைமித்திகாதி பூசாத்திரவியங்கள் சிவாகமவிதிப்படி பழுதறஆராய்ந்து நிறையஅமைத்து, நாயனார் திருமுன்புவந்து பணிந்து சுவாமீ, தியாகேசர் திருவாரூரில் திருப்பூங்கோயிலில் திவ்யரத்தினசிங்காசனத்தில், கொலுவீற்றிருந்தருளுகின்ற ராசாங்கவியல்பை யாவர்க்கும் விளக்கும் வசந்தோற்சவமும், பங்குனிஉத்திர மகோற்சவமும்முதலியசிறப்பெல்லாம் தாங்களே தலைமைவகித்து நடத்தியருளுகஎன்று வேண்ட அவ்வாறுசெய்துவந்தனர். ஒருநாள், சுவாமி திருமணலிக்குஎழுந்தருளும்போது சேவித்துவந்து தமதூரிற்சென்று மனையுட்புகாமல் புறத்தேசயனிப்ப, மனைவியார் பூசை போசனமுடித்துவந்து சயனித்தருளுக என்று வேண்ட, இன்று சுவாமியுடன் சேவித்து வரும்போது சகலசாதிசன நெருக்கத்தால் தீட்டுண்டாயிற்று; ஸ்நானம் பிராயச்சித்தஞ்செய்து பூசிக்கவேண்டும். ஜலமுதலியன கொண்டுவருகஎன்றனர். மனைவியாருட்சென்றனர். நாயனார் திருவருளால் மேலுஞ்சயனித்தனர். அவர்கனவில் சுவாமி, திருவாரூரிற்பிறந்தாரெல்லாருஞ் சிவகணங்களேகாண் என்றருளினர். நாயனார் விழித்தெழுந்து அஞ்சி ஸ்நானமுமின்றிப்பூஜாதிமுடித்துமறுநாள் திருவாரூர்க்குவரும்போது, எல்லாருஞ் சிவசாரூபர்களாய்த் தோன்றவணங்கி, உடனே அவ்வுருவமாறியதுங்கண்டு சுவாமீ, அடியேன் குற்றத்தைப் பொறுத்தருளுகஎன்று பிரார்த்தித்துத் திருவாரூரிலேயே குடிபுகுந்திருந்து திருத்தொண்டுகள் செய்து வந்தனர். நெடுங்காலம்சிவனடியார்க்குவேண்டுவனநிறையக்கொடு

த்து, அவரவர் தொண்டுகள் தளராதுவளரச்செய்துவந்தமையால் "தொண்டர்க்காணி" என்று அப்பமூர்த்திகளாற்பாடப்பெற்றார். இப்படியே திருத்தொண்டுகள் செய்துவந்து சிவபதநிழலிற் கலந்தருளினர்.

குறிப்பு:—இவர், சிவபூஜாதிகள்செய்வதுடன், சிவாலயபூஜாதிகளும் சிவாகமவிதிவழுவாது ஆராய்ந்து நடத்துவது மிகவிசேடமென்பதும், கோயிலதிகாரிகள் சிவபக்தியும் சிவபூஜாதியபழக்கமும், சிவாகமவிதிவிலக்குகளைச்சந்தேகவிபரீதமின்றி ஆராய்ந்தும் கேட்டுந்தெளிந்த நிச்சயபுத்தியும் உடையவர்களாய்ச், சிவாலய நித்தியபூஜாதிகளை வேதசிவாகமத்தெளிவும் சமயவிசேடநிர்வாண தீக்ஷைஆசாரியாபிஷேகமுதலியசிவசமஸ்காரமும்பெற்றசிவத்துவிஜர்கள்செய்துவருதலே சிவாகமவிதியென்றும் சிவத்துவிஜரல்லாத பிறர் தமதுஅதிகாரத்தலைமைமுதலிய எவ்விதகாரணத்தாலாவது சிவலிங்காதிமூர்த்திகளைத்தீண்டினாலும், தேசத்துக்கும் அரசனுக்குந் தீமையேவிளைக்குமென்றும் சிவாகமங்கூறுதலைத், தாக்ஷணிய முதலியவற்றால் சிறிதும்நழுவவிடாதுபாதுகாத்துவருதலேமுறையென்பதும், இம்முறைதவறினால்வரும்பாதகம்எவற்றினுங்கொடிய நீக்கமில்லாதசிவத்துரோகமென்பதும், உற்றுநோக்கிச், சிவகாரியங்களில்கண்ணுங்கருத்தும்வைத்துஉண்ணின்றுநடத்தலும், இவ்வாறு நடத்தற்குரியவிரிந்தஅறிவும்ஆற்றலும் சிவசாஸ்திரத்தெளிவும் முதலியதிறமையில்லாதவர்கள், அஃதுள்ளவர்களிடத்து ஒப்பித்து, அவர்கள்அவ்விதிவழுவாதுநடத்துந்திறமைகண்டுமகிழ்ந்து மேலும் உதவியாய் ஊக்கஞ்செய்து நிற்றலுமே நீதியென்பதும் விளக்கி, உலகை உய்விக்கத் திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ் செல்வரென்க.

இதனை, விளக்கும் சிவாகமாதி சிவசாஸ்திரப் பிரமாணங்கள் பலவுள்ளன. சோழராஜர், தாம் நடத்திய இத்திருவாரூர்க்கோயில் அதிகாரத்தலைமையை இந்நாயனாரை வணங்கிவேண்டி ஒப்பித்து மேலும்உதவிநின்றாக்கஞ்செய்துஅவர்செய்யும்அருமைபெருமை யாவுங்கண்டு மகிழ்ந்தமையாலும் இவ்வுண்மைநன்குதெளியலாம்.

திருச்சிற்றம்பலம்.

## திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணசாரம்.

காழிநகர்ச் சிவபாத விதயர் தந்த
கவுணியர்கோ னமுதுமையாள் கருதி யூட்டும்
ஏழிசையி னமுதுண்டு தாளம் வாங்கி
யிலங்கியநித் திலச்சிவிகை யிசைய வேறி
வாழுமுய லகனகற்றிப் பந்த ரேய்ந்து
வளர்கிழிபெற் றரவின்விட மருகற் றீர்த்து
வீழிநகர்க் காசெய்தி மறைக்கதவம் பிணித்து
மீனவன்மே னியில்வெப்பு விடுவித் தாரே.

ஆரெரியிட் டெடுத்தவே டவைமுன் பேற்றி
யாற்றிலிடு மேடெதிர்போ யணைய வேற்றி
ஓரமண ரொழியாமே கழுவி லேற்றி
ஓதுதிருப் பதிகத்தா லோட மேற்றிக்
காருதவு மிடிபுத்தன் றலையி லேற்றிக்
காயாத பனையின்முது கனிக ளேற்றி
யீரமிலா வங்கமுயி ரெய்த வேற்றி
யிலங்குபெரு மணத்தரனை யெய்தி னாரே.

இ-ம். திருஞானசம்பந்தமூர்த்திநாயனர், திருக்கயிலாசபதி உமாதேவியார் இருவர் மத்தியில் வீற்றிருந்தருளுகின்ற சுப்பிரமணியப்பெருமானே. இவர், சீகாழியில் பிராமணகுலத்தில் கவுணிய கோத்திரத்தில், சிவபக்த சிகாமணிகளாகிய சிவபாதவிருதயர் பகவதியாரிருவருஞ்செய்த அருந்தவத்துக்கிரங்கிச்சிவாஞ்ஞை மேற்கொண்டுவந்து பிரமதீர்த்தக்கரையில் சிசுரூபியாய் அவ்விருவருக்கும் புத்திரராய் அவதரித்தருளினர். இவ்வுண்மை பெரிய புராணமுதலிய உண்மைநூல்களின் விளக்கமே. இவற்றைப்பின் வருவனநோக்கித்தெளிக. சிவபாதவிருதயர், சமண்முதலிய சமயங்கள் பரம்பிச் சைவசமயம் மலினமாதல்நோக்கிவருந்தி, அந்நிய சமய நிராகரணமும் சைவஸ்தாபனமுஞ்செய்யத்தக்க அருள்வலி

யிருந்த ஒரு புத்திரர்தந்தருளுகவென்று, பெரியநாச்சியாருடன் திருத்தோணியில் வீற்றிருந்தருளுகின்ற திருக்கயிலாசபதியை நோக்கி அருந்தவஞ்செய்தார். பகவதியார், அவர் கருத்தை நிறைவேற்றியருளும்படி உடனின்றுபிரார்த்தித்துவந்தார். அவர் வயிற்றில் உலகெலாமுய்யும்படி கெர்ப்பக்குறியுள்ளதுபோல விளங்கியது. இதனை "காதலியார் மணிவயிற்றில், உருத்தெரிய வரும் பெரும்பே றுலகுய்ய வுளதாக" என்று பெரியபுராணம் விளக்குகின்றது. இதனில், வயிற்றில்கெர்ப்பமுண்டாயதென்று விளக்காமல், உருவங்காணும்பேறுஉலகெலாமுய்யும்படிஉளது ஆகஎன்று ஊகித்துணர வைத்தமையாலும், ஆகஎன்றது போலஎன்னும்உவமச்சொல்லாதலாலும், கெர்ப்பம்உள்ளதுபோலவிளங்கியதென்றே மற்றும் பற்பல இடங்களில் வரும் உண்மைகளுக்கு விரோதம் வாராமல் உள்ளபடி கூறுதலே பொருத்தமெனக.

மாசந்தோறும் கெர்ப்பத்துக்குரியசடங்குகள்நடந்தன. நவக்கிரகங்கள் சிறந்த உச்சஸ்தானங்களிலே வலிபெற்றுநிற்கவும், சுபலக்கினபெலம்விளங்கவும், திருவாதிரைநக்ஷத்திரம் சிறந்தோங்கவும், அந்நியசமயங்கள்தளர்ந்தொழியவும்,வைதிகசைவம்வளர்ந்து தழைக்கவும், திருத்தொண்டருள்ளங்கள் களிக்கவும், திருநீற்றொளியே எண்டிசையிலும் விளங்கவும், ஏழுலகங்களும் இன்புறவும், அரிபிரமாதி தேவரெல்லாம் அதிசயிக்கவும், அருமறையோர் ஆகுதிகள் பெருகவும், அருமுனிவர் அருந்தவங்கள் தடையின்றி நிகழவும், எப்பாஷைகளினுஞ்சிறந்ததெய்வச்செந்தமிழ்ப்பாஷையே சிறந்துவிளங்கவும், எண்டிசைகளினும் தென்றிசையேவென்றேறவும், எவ்வுலகினுஞ்சிறந்த பூலோகமே பொலிவெய்தவும், சப்தசுரங்கள் மலிவெய்தவும் சென்றகாலம் ஏங்க நிகழ்காலமும் எதிர்காலமும்ஓங்கவும், சீகாழி எப்பதியினுஞ்சிறந்துவிளங்கவும்,* திருத்தோணியப்பர் திருவருள்பெருகவும், ஒவ்வொரு ஊழிதோறும் பிரளயவெள்ளத்தில் அமிழ்ந்தியொழிகின்ற ஏனைத்தலங்கள் போலாகாமல், அவ்வெள்ளங்களில்மிதந்து, அரிபிரமாதி தேவர் முதலியர்க்கும் புகலிடமாய்நின்று, தனது நித்தியத்தை விளக்குந் தவப்பெருக்கங் காட்டுகின்ற சீகாழித்திருப்பதியிலே, பிரமதீர்த்தக்கரையிலே, சர்வாத்மாக்களுக்கும் சிவத்துவவிளக்கஞ்செய்தரு

னாகின்ற சிவகுமாரராகிய இளையபிள்ளையார், திருவவதாரம் செய்தருளினரென்று விளக்கும் உள்ளீடுகள் நோக்கித் தெளியலாம். தவம்பெருக்குஞ்சண்பைஎன்பதற்குதன்னிடத்துவந்து செய்வார் தீவத்தை ஒன்றுகோடியாகப்பெருக்கும் சீகாழி என்பதுமாம்.

இதனில், பகவதியார் வயிற்றில் கெர்ப்பம் உள்ளதுபோல என்றுகூறி, அதன்மேல் பலமகிமைகள் எடுத்துக்காட்டி முடிவில் தவம்பெருக்குஞ் "சண்பையிலேதாவில்சராசரங்களெலாஞ், சிவம்பெருக்கும்பிள்ளையார் திருவவதாரஞ்செய்தார்." என்று கூறியதனால், பகவதியார் கெர்ப்பம், முன் தடாதகாதேவியார் கெர்ப்பம் போல வெளித்தோற்றமன்றிச், சுக்குல சுரோணிதக் கலப்பினால் வந்ததன்றென்பது தெளியலாம். பிள்ளையார், குமாரர் என்னுஞ் சொற்கள் இன்னார்பிள்ளை, இன்னார் குமாரரென்றுகூற வேண்டாமலே, தனித்துநின்று சிவன்பிள்ளை சிவன்குமாரர்என்றே விளக்குமியல்பினவாயிருந்தும், அதன்மேலும் "தாவில்சராசரங்களெலாஞ், சிவம்பெருக்கும் பிள்ளையார்" என்ற விசேஷணமும் சிவகுமாரர் என்ற அதனையே வலியுறுத்தும். சராசரசீவர்க்கெல்லாம் சிவத்துவம் பெருக்குமியல்பு மலரகித சிவகுமாரர்க்கன்றி, முற்பிறப்பில் ஞானமின்றி இப்பிறப்பில் அது பெற்றுய்யவரும் மலசகிதசீவர்க்கியலாதாதலால், இங்கே பிள்ளையாரென்றது சிவபிரானதுஇளையகுமாரரையே என்பதும், பகவதியார் கெர்ப்பமுற்றார் அவர்வயிற்றிலிருந்து ஒரு புத்திரர் பிறந்தாரென்று கூறாமல், அவர்வயிற்றில் உலகெலாமுய்யும்படி உருவங்காணும்பேறு உள்ளதைப் போல விளங்கச், சீகாழியிலேதிருவவதாரஞ்செய்தாரென்று கூறியதனால் அவர் கெர்ப்பத்திருந்து வந்தவரன்றென்பதும் நிர்ச்சந்தேகமாம். இதனை, "ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை யுலகியல்பி னுபநயன முறைமையாலும், இருபிறப்பினிலைமையினைச்சடங்குகாட்டி யெய்துவிக்கும் மறைமுனிவர்" என்று பெரியபுராணம் விளக்குகின்றது. பிரளயகாலத்தில் பெருகிநின்று, சீகாழியைத் தன்மீது கொண்டது பிரமதீர்த்தமேயாதலால் சீகாழியில் அவதரித்தாரெனினும் பிரமதீர்த்தக்கரையிலென்பதே பொருளாம்.

இங்கே "பிள்ளையார்" என்று கூறப்பெற்ற சம்பந்தர், சிவகுமாரராகிய சுப்பிரமணியரே என்பதை, மேலும் பெரியபுரா

ணத்தில் "ஈசர்மிழலை யிறையவர்பா லிமையப்பாவை திருமுலைப் பால், தேசமுய்யவுண்டவர்தாந் திருமாமகனு ராதலினால், காசு வாசியுடன்பெற்றார்" என்றும் இதனை வசனமாக்கியருளிய நமது சற்குரு ஸ்ரீமந் நாவலர்பெருமான், "திருஞானசம்பந்தமூர்த்திநாய னார், தாம்பரமசிவனுக்குப் புத்திரராகையாலும்" என்றும்விளக்கு தலாலும், மேலும் பெரியபுராணம் பல இடங்களில் சிவகுமாரர் என்று நேரே கூறுதலாலும் தெளியலாம். சீகாழிப்புராணமும், சிவபாதவிருதயர்க்குச் சிவபிரான் இளையகுமாரரைப் புத்திரராய் வந்தருளும்படிசெய்து,மேலும்பதினாறுயிரஞ்சிவகணங்களைத்தொ ண்டர்களாகவரும்படி ஆஞ்ஞாபித்தருளினர். அப்படியே குமாரர் பிரமதீர்த்தக்கரையில் தேசோமய சிசுவாய் வந்தருளக்கண்டு சிவ பாதவிருதயர், இது, திருத்தோணியப்பர் நமதுதவத்துக்கிரங்கித் தந்தருளிய புத்திர ரத்தினமென்றெடுத்தணைத்தின்புற்று, மனைவி யார் கையிற்கொடுத்து வளர்த்துவந்தனரென்று விளக்குகின்றது. பெரியபுராணத்துக்கு முந்தின சிவானுபூதிச் செல்வராகிய நம்பி யாண்டார்நம்பிகளும் "மயிலேந் தியவள்ள றன்னை யளிப்ப மதி புணர்ந்த—எயிலேந்திய சண்பை நாதன்" என்று விளக்கியருளி னர். சித்தாந்தச்செல்வராகிய சிற்றம்பலநாடிகள் "சைவம்வளர்க் குஞ் சம்பந்தமூர்த்தி" என்று திருச்செந்தூர்ச் சுப்பிரமணியரைத் துதிக்கின்றனர். இனிச் சம்பந்தரும் "பாலனுயதொண்டுசெய்து பண்டுமின்று முன்னையே" என்று, தமது தேவாரத்தில், தம்மை இளையபிள்ளையாரென்று விளக்குகின்றனர். சிவனேதாமாகிய சுந் தரமூர்த்திகள் "எம்பிரான்சம்பந்தன்"என்று அவ்வுண்மையைத் தெளிவிக்கின்றனர். சுப்பிரமணியப்பெருமானுடைய திருவருட் பூர்த்திபெற்ற அருணகிரிநாதர், அவரையே துதிக்கின்ற திருப்புக ழில் அவர் மகிமைகளெவற்றினுஞ் சிறந்தமகிமை அவர் சம்பந்த ராய்வந்து சைவஸ்தாபனஞ்செய்ததே என்பது விளங்க,

பஞ்சவ னீடு கூனு மொன்றிடு தாப மோடு
 பைந்தமிழ் வாது கூறு—சமண்மூகர்
பண்பறு பீலி யோடு வெங்கழு வேற வோது
 பண்டித ஞான நீறு—தருவோனே."
கனசமண் மூங்கர் கோடி கழுமிசை தூங்க நீறு
 கருணையில்பாண்டி நாடு—பெறவேதான்

கவிதரு காங்கை பால கழுமல பூந்த ராய
"கவுணிய வேந்த தேவர்—பெருமாளே."
புத்த ரமணர்கள் மிகவே கெடவே தெற்கு நரபதி திருநீ றிடவே
புக்க வனல்புனல் திருவே டிடவே—யுமையாடன்
புத்ரனெனவுரைபகர்வோன்மறைநூல்கற்றதவமுனிபிரமாபுரம்வாழ்
பொற்பு கவுணியர் பெருமா னுருவாய்—வருவோனே."
பால ருத்திருவாயாலோதிய வேடுநீர்க்கெதிர்போயேவாதுசெய்
பாடல் தோற்றிடு நாலீ ராயிர—மமண்மூடர்
பாரின் மேற்கழு மீதே யேறிட நீறி டாத்தமிழ் நாடேடேறிட
பாது காத்தரு ளாலே கூனிமி—ிறையோனும்
ஞால மேத்திய தோர்மா தேவியு மால வாய்ப்பதி
வாழ்வாய் வீறுள ஞான பாக்கிய பாலாவேலவ—மயில்வீரா."
அங்கத்தைப் பாவைசெய் தேயுயர் சங்கத்திற் றேர்தமி ழோதிட
வண்டிக்கிட் டார்கழு வேறின—ரொருகோடி."
வெடித்தமணர் கழுவேற ஒருத்திதனி வளைமேவ
விளைத்ததொரு தமிழ்பாடு—புலவோனே."
சீட்டை யெழுதிவை யாற்றினெதிருற வோட்டிய மூல்பசை
காட்டிய மணரை சீற்றமொடுகழு வேற்றியருளிய—குருநாதா"
சருவியிகழ்ந்து மருண்டு வெகுண்டறுசமயமுமொன்றிலையென்று
வரும்பறி தலையரு நின்று கலங்கவிரும்பிய-தமிழ்கூறும்."
பறித்ததலைத் திருட்டமணக் குருக்களசட்
டுருக்களிடைப் புழுக்களுகக் கழுக்கள்புகத்—திருநீறு
பரப்புமனத் திருப்பதிகக் கனற்புனலிற் கனத்தசொலைப்
படைத்தெழுதித் திரட்டுபுகழ்க்—கவிராச"
அடரெழுதி யேமிகுத்து வருபுனலி லேறவிட்ட
வரியதமிழ் வாதுவெற்றி—கொளும்வேலா
வமணர்குலம் வேரறுத்து மதுரைநகர் வாழவைத்த
வறுமுகவ வீரமுற்ற—பெருமாளே." என்பனவாதிய பற்பல
பாடல்கள் எடுத்தோதித் தெளிவிக்கின்றனர். இப்படியே பற்பல பெரியோர்களும் கூறுகின்றனர். இத்தனை பிரமாணபெலங்களையெல்லாம் ஒதுக்கிவிட்டுஇக்காலத்திற் சிலர் சம்பந்தர் சுப்பிரமணியரல்லர்; சீவர்களில் ஒருவரே கர்மவசத்தால் முற்பிறப்பில்

சிவஞானஞ் சித்திக்காமல் இப்பிறப்பில் அது பெற்றுய்யவந்தவ ரென்று கூறுகின்றனர். "முன்னைப்பழம் பொருட்கு முன்னைப் பழம்பொருளே"யாகிய சிவமே தாமாய் விளங்குஞ் சேக்கிழார் பெருமான், நம்பியாண்டார்நம்பிகள், சுந்தரமூர்த்திகள், ஞானசம்பந்தர் முதலிய பழையரினும் பழைய சைவசித்தாந்திகள் கூறும், திருவட்டிருவாக்குகளாகிய திருமந்திரங்களெல்லாவற்றையும்புறக் கணித்து ஒதுக்கிவிட்டுத், தாம் பிடித்ததே சாதிக்கும் சில புதிய சித்தாந்திகள்,சம்பந்தர்சுப்பிரமணியரல்லர்சீவர்களில்ஒருவரென்று வாய்கூசாது மனம்நடுங்காது கூறும் கொடுஞ்சொல்லை உண்மை உணர்ந்த உத்தமசீலர்கள், ஒதுக்கிவிட்டுத் தமதுண்மை நிலையே பற்றிநின்று உலகர்க்குமுணர்த்தி உய்வழிகாட்டுவரென்க.

மேற்கூறியபடி, இருவரும் பிரமதீர்த்தக்கரையிற்சுப்பிரமணியப்பெருமானே சிசுரூபியாய் வீற்றிருந்தருளக்கண்டெடுத்தணைத்தின்புற்றசமயம், சர்வலோகத்துமுள்ள சகல சீவர்களிடத்துந், தம்மையறியாமே ஒருகாலத்துமில்லாத அரிய பெரிய ஆனந்தம் விளைந்தன. தேவதுந்துபிகள்முழங்கின. தேவர்கள் பூமழைபொழிந்தனர். திசையெங்கும் நன்னிமித்தங்களுண்டாயின. செடிகொடிமாமுதலியனநிறையப்பூத்து மலிந்தன. எங்கும் புழுதியடங்கப் புதுத்தேன்மழைபொழிந்தது. எவ்விடங்களினும்நறுமணங்களே நிறைந்தன. கடுங்காற்றுஅடங்கிமந்தமாருதமாகவேவீசியது.ஆகாசமெங்கும் மேகமறைப்பு முதலிய மாசின்றிச் சுத்தமாய் விளங்கியது. சிவபிரான், தமது இளையகுமாரரை அவ்விருவருக்கும் புத்திரராய் வரும்படி அருளியதை நேரே தெரிந்த சிவகணநாதர்கள், இவ்வற்புத மகிமையெல்லாங்கண்டு அருளின்பெருமையை நினைந்துருகி ஆனந்தக்கூத்தாடினூர்கள். சீகாழியிலுள்ளார் யாவரும் தங்கள் தங்கள் புத்திரோற்சவமாகக் கொண்டாடினூர்கள். அந்நகரெங்கும்அனேகவகைவாத்தியங்களெல்லாந்தாமாகவேமுழங்கின. இப்படியே பற்பல அற்புதமகிமைகள் விளங்கின. இத்தனையும் பெரியபுராணத்துள்ளனவே. இவையெல்லாம் பரதெய்வமாகிய சுப்பிரமணியர் புத்திரராய் வந்ததுநோக்கிநிகழ்ந்ததெய்வச்செயல்களா? புதுச் சித்தாந்திகள் கூறுவதுபோல் முன்பு ஞானமின்றி அது பெறவந்த ஒருசீவனுக்காக நிகழ்ந்தனவா? என்று ஊகிக்கும் புத்திமான்கள் உண்மை கூறுவார்கள்.

• சிவபாதவிருதயர், சாதகர்ம நாமகரணாதிகள்செய்துஅருமை பெருமை பாராட்டி வளர்த்துவருகின்ற இளையபிள்ளையார், சைவ ஸ்தாபனஞ்செய்துலகையுய்விக்கவந்ததற்குஇணங்க,அதனைவிரும் பித்தவஞ்செய்த சிவபாதவிருதயர்க்கு முதலில் பூரணானுக்கிரகஞ் செய்யக்கருதி, அவர்பரிபாகம்வளர்ந்துமுதிரும்பொருட்டுதாமும் வளர்ந்துவரும் வியாசங்காட்டியிருந்தனர். அவர்க்கு மூன்ருவது ஆண்டுவந்தது. அப்போது பிள்ளையார், தம்மைச்சிவபிரான், சிவ பாதவிருதயர்க்குப்புத்திரராய் வரும்படி கொடுத்தமையால்முன்பு திருக்கயிலையில் பிதாமாதாக்களை நீங்காது தொடர்ந்திருந்த நிலையி னின்றும் பிரிந்துவந்ததுநோக்கி, ஒவ்வோர் சமயம் பிள்ளைமைக் குணத்தால் அச்சங்கொண்டவர்போலக், குறிப்புவேருய்அழுதரு ளுவர். இதனைச் சேக்கிழார்பெருமான்,

பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய்.

என்றுவிளக்கியருளினர். பெரியபுராணத்தை வசனரூபமாகவெளி யிட்டுபகரித்தருளிய எமதுசற்குரு ஸ்ரீமந் நாவலர்பெருமான் இத் திருவிருத்தத்தின்பொருள், "பிள்ளையார்தம்முடைய தந்தையாரா கிய சிவபெருமான் தம்மைச் சிவபாதவிருதயர்க்குப் புத்திரராக் கொடுக்க அவரைப்பிரிந்தமையால் ஓரோர்கால் அப்பிரிவுஉள்ளத் திற்றோன்ற வெருக்கொண்டாற்போலக் குறிப்பயலாய் அழுவர்" என்று விளக்கியருளினமையாலும் அப்பெருமான்கருத்தும், சம் பந்தர் சிவகுமாரராகிய சுப்பிரமணியர் என்பதையே விளக்கியது

இத்தெய்வ மகிமைகள் சிறந்துவிளங்க வளர்ந்து வருகின்ற பிள்ளையார், ஒருநாள் சிவபாதவிருதயர் ஸ்நானத்துக்குச்செல்லும் போது பின்சென்று பிரமதீர்த்தக்கரையிலிருந்தனர். பிதா உட் சென்று அகமருஷணசூக்த முதலிய செபித்துக்கொண்டு மூழ்கி யிருந்தனர். பிள்ளையார் திருத்தோணித்திருக்கோயிலைப்பார்த்துக் கொண்டே அம்மே அப்பா என்றென்றுபலமுறை அழைத்தருளி அழுதருளினர். உலகத்துப் பிள்ளைகள் பசிமுதலிய குறித்து

அழுதலேஇயல்பு. இவரோஉலகாதீதமானதிருவருட்சரீரியே பசி முதலிய நோய்க்கிடமான கர்மசரீயன்று. ஆதலாற்ருன், இவர், வேதநெறி தழைத்தோங்கவும், மிகுசைவத்துறைவிளங்கவும், பூத பரம்பரை பொலியவுமே, தமது பிதாமாதாக்களாகிய பார்வதி, பரமேசுரர்வீற்றிருந்தருளுகின்றதிருக்கயிலையாகியதிருத்தோணித் திருக்கோயிலையே பார்த்து அழைத்தருளி அழுதருளினர். இவ் வழுகைமேற்கூறியபடிவேதம்ஓங்குதலையும்,அதன்சாரமாய்அதற்கு இன்றியமையாச் சிறப்பினதாகிய சிவாகம சைவம் விளங்குதலை யும், அதனைத் தளரவிடாது பாதுகாத்துவரும் சுத்த பரம்பரையா கியசற்குருசந்தானம் பொலிதலையுஞ்செய்யும் திருவருள்நிலையதே யாதலால், சேக்கிழார்பெருமான் அழைத்தார் அழுதார் என்று கூருமல் "அழைத்தருளி அழுதருள" என்று அடுத்தடுத்து அரு ளிப்பாடுவைத்துஇப்பிள்ளையார், திருவருளுருவினராகிய சிவகுமா ரரே என்பதை மேலும் விளக்கியருளினர்.

அழுவதுகண்டு திருத்தோணியப்பர் பெரியநாச்சியாருடன் இடபாரூடராய்ப்பிள்ளையார்முன் வந்தருளினர். அம்மையார்தமது இளைய பிள்ளையைக்கண்டவுடனே நெடுநாட்பிரிந்திருந்து காணப் பெற்றதனுல், நிகழும் ஆராமைமுதலியன விளங்கத் திருமுலைகள் பால்சுரந்துபொழியநின்றனர். தோணியப்பர்அதுகண்டுஇப்பாலை பொன்வள்ளத்து வாங்கி ஊட்டுக என்றருளினர். இவ்வுண்மை விளங்கவே சேக்கிழார்பெருமான் 'பொழிகின்றபாலடிசில்'என்று நிழ்காலத்தாற்கூறியருளினர். அம்மையார் ஞானமாகிய அப்பால் நிறைந்த பொற்கிண்ணத்தை அவர் திருக்கரத்திற்கொடுத்துஊட் டியருள, அப்பனுர் அழுகைதீர்த் தாண்டருளினர். அப்பொழுது வந்து ஆட்கொண்டதாகக்காட்டியதனுல "ஆளுடையபிள்ளையா" ரென்றும் ஞானப்பாலூட்டியதனுல் "ஞானசம்பந்த" ரென்றும் பேர்பெற்றனர். "சிவனடியே சிந்திக்குந்திருப்பெருகு சிவஞானம் உவமையிலாக்கலைஞானம், பவமதனை யறமாற்றும்பாங்கினிலோங் கியஞானம் உணர்வரிய மெய்ஞ்ஞானந், தவமுதல்வர்சம்பந்தர்தா முணர்ந் தாரந்நிலையில்" அரிபிரமாதி தேவர்முதலிய சீவர் யாவ ருஞ் செய்யுந் தவத்துக்குவந்து அருள்செய்கின்ற முதல்வராகிய சம்பந்தர் உலகத்தவரைச் சைவநெறியில் முறைதவருது நிறுத்தி

உய்வித்தற்காகவே மானுடரூபியாய் வந்ததற்கிசைய அவ்வுலகர் குருமுகமாக ஞானம் பெற்றுய்யும் நிலைகாட்டுவாராய் அபர ஞானம் பரஞானமிரண்டுமாகிய திருமுலைப் பாலுண்டருளியதனால் அவ்விருஞானங்களும் பெற்றவராகக்காட்டி நிற்கும்போது, சிவ பாதவிருதயர் நியமமுடித்துவந்து சம்பந்தர் திருக்கரத்திற் பாற் கிண்ணங்கண்டு*"எச்சின்மயங்கி டவுனக்கீதிட்டாரைக் காட்டுக" என்றனர்.

இதனால் அவர் கருத்து, இந்த எச்சிற்பால் உன்னிடங்கலக் கும்படி உனக்குத்தந்தவரைக்காட்டுக என்பதாயினும், அச்சொற் பொருள், எச்சு இல்-யாவும் ஒடுங்குமிடமாயும், (இல்—இடம்) எச்சு இல்-மிஞ்சி நிற்பதாயும், (இல்—தொழிற்பெயர் விகுதி) எச்சு இல்—அழிவில்லாததாயும் (இல்—இன்மை) உள்ள பரம சிவத்தைக்கலக்கும்படி, இந்தப்பால் தந்தவரைக்காட்டுக என்னும் உண்மை அச்சொல்லில் விளங்குதலால், அப்படியே அச்சிவபாத விருதயாது பரிபாகபூர்த்திநோக்கிச் சிவத்தைக் காட்டுவாராய், வலத்திருக்கரத்துச் சுட்டுவிரலினால், மேலே இடபாரூடராய் விள ங்குகின்ற சுவாமியைக்காட்டிநின்று, இப்பால்தந்தவர்இவரல்லவா என்று திருப்பதிகத்தால்விளக்குகின்றவர், அப்பதிகத்தைக்கேட் டருளுகின்ற திருச்செவியை முதலில் சிறப்பிக்குமிடத்துப் பால் தந்தவள்அம்மையேஎன்னும் ஆதரவாலோ? அம்மையே அப்பனை யடைவிக்கின்றவளென்னுஞ் சிவசாஸ்திரமுறைபேணியோ? மே லும் எந்தெந்நயங்கள்கருதியோ அம்மை திருச்செவியைச்சிறப் பித்துத், தாம் பாடியருளுகின்ற சீரிய தமிழ்வேதம் ஆரியவேத சாரமாதலால், அவ்வேத முதல்போல் இத்தமிழ் வேதமுதலினும் அப்பிரணவமேவிளங்கஓகாரஉயிரெழுத்தைஎடுத்து, அதனைத்தாங் கும் உடம்பாக வேறு மெய்யெழுத்துக்களிருப்பவும் அவற்றை நோக்காது, அவ்வேதமூலசம்பந்தம் நோக்கியே, காயத்திரியின் முதலெழுத்தாகிய தகரமெய்யெழுத்தையே எடுத்துடன்சேர்த்து "தோடுடைய செவியன்" என்று தொடங்கி அச்சொற்றொடை களிற் பற்பல அற்புதப் பொருள்நயங்க ளமையவைத்து, பிரமா புரமேவிய பெம்மானிவனன்றே" என்று ஒவ்வொரு திருப்பாடலி

* எஞ்சு என்னும் மென்றொடர்க்குற்றியலுகரம் வன்றொடராயது.

னும் விளக்கியருளினர். இத்திருப்பதிகத்தில் எட்டாவது திருப்பாடலில், தவறு செய்தவர்களானாலும் பின்பு அந்தோ இப்பாதகம் எப்படி நீங்குமென்று பதைபதைத்துப், பெரியார்முகமாக அறிந்து அன்புடன் அடுத்து வணங்கி வேண்டினால், அவர்களைச்சிவனருள் தள்ளிவிடாது ஏன்றுகொண்டருளுமென்பது காட்டுவாராய்த், திருக்கயிலையை அசைத்த ராவணன் அம்மலைக்கீழகப்பட்டுவருந்தி ஸ்ரீ வாகீச குருமுகமாயுணர்ந்து அஞ்சிநின்றுதுதிப்ப, அவனுக்கு வந்தருளிய சிவமகிமையை விளக்கியும், ஒன்பதாவது திருப்பாடலில் சீவர்களாகிய தம்மையே சிவமாகிய பிரமமெனக்கருதி, நாம் பிரமமென்பார்கொள்கை சிவத்துரோகமாய் மேலும் அகந்தையே விளைத்து மீளாநரகுக்கே ஆளாக்குமென்று அஞ்சி அப்பசுஞான நிலையினீங்கிச், சுதந்திரனாகியசிவனொருவனேஆண்டவன், நாமெல்லாம் அவனை வழிபட்டுய்யவேண்டிய பாதந்திரர்களாகியஅடிமைகளே என்றுணரும் உண்மைஞானமாகிய பதிஞானநிலையினின்று உலகலாமுய்கவென்னுங்கருணையினால், நானேபிரமம்நானேபிரமமென்று மாறுபட்டுப் பசுஞானநிலையில் நின்ற பிரம விஷ்ணுக்களிருவரும், பல்லூழிகாலம் அகந்தை வசத்தராய்ப் பெருங் கஷ்டப் பட்டிளைத்து ஆற்றாது மெலிந்து, பின்பு திருவருளால் நாம் பிரமமன்று அடிமைகளேயென்றுண்மையுணரும் பதிஞான நிலையினின்று ஸ்ரீ பஞ்சாக்ஷர செபதியான நிலையராய்த் துதிப்ப, அவர்க்குவந்தருளியசிவமகிமையைவிளக்கியும், இவ்விளக்கத்தால் மாயாவாதம் வைஷ்ணவம் இரணியகர்ப்பம் முதலிய சமயங்கள் வேதவழிப்பட்டனவாயினும், அவையெல்லாஞ் சயயாதீத சைவ சித்தாந்தத்தின் கீழ்ப்படிவரிசைகளாயுள்ளனவேஎன்னுமுண்மை காட்டி, அவ்வியல்பிற்றமுவியும், பத்தாவது திருப்பாடலில், வேத வழிப்படாத சமண், பௌத்த முதலிய சமயங்கள் பின்னையோரால் கற்பித்துக்கொண்ட கபடமார்க்கங்களேயென்றொதுக்கியும், தந்தைகுணம் மைந்தர்க்குண்டென்பது விளக்குவாராய்த், தமது பிதாவாகிய சிவபிரான் பாடியவேதமுடிவில், "சிவஏகோ" என்று அவர் திருநாமமுத்திரை படர்க்கையில் வைத்துவிளக்கிய வழக்கமே மேற்கொண்டு, பதினொராவது திருப்பாடலில், தமது ஞானசம்பந்தநாமமுத்திரைவிசேஷம் படர்க்கையில் வைத்துத் திருப்பதிகம் திருக்கடைக்காப்புச் செய்தருளினர்.

தேவர்கள் பூமழைபொழிந்தனர். தேவதுந்துபிகள்முழங்கின சிவகணநாதர்கள் பாடியாடினர். திருத்தொண்டர்கள் சிவநாம முழக்கஞ்செய்தனர். வேதங்கள் கோஷித்தன. சிவபிரான் திருத் தோணித்திருக்கோயில் சென்றருளினர். யாகாதி தர்மங்கள்யோ லழிந்தொழியாது, தொடர்ந்துவருகின்ற அளவிலாத சிவபுண்ணி யங்கள்செய்துஅவருக்குப்பிதாவென்று உலகெலாம்புகழப்பெற்ற சிவபாதவிருதயர், அச்சமும், ஆச்சரியமும் அன்பும்பெருகச், சம் பந்தரிடத்து, நிகழ்ந்த அற்புதக்காட்சிகள் நேரேகண்டும், திருப் பதிகமுழுதுங்கேட்டும், அப்பதிகத்துள்ளஅரும்பொருள்நயங்கள் சிந்தித்தும், அளவுகடந்தஆனந்தநிலையாய்க், கண்ணீர்பெருகக், கைகள்சிரமேற்குவிய,ரோமஞ்சிலிர்ப்ப,இப்புத்திராத்தினம்நம்மை ஆட்கொள்ளவந்த சிவகுமாரபரதெய்வமேஎனநிச்சயித்து, அன்பு வசத்தாய்ப் பன்முறைபணிந்து துதித்தனர். இவ்வற்புதமகிமை கேட்டு, அங்குள்ள பிராமணர் முதலியஎல்லாரும் இம்மகிமையை யேஎடுத்துத் துதித்துக்கொண்டுவந்து நெருங்கிச் சூழ்ந்தார்கள்.

சிவபிரான் சென்றதுநோக்கியசம்பந்தர், திருக்கோயிலுட் புகச்செல்லுங்கால், முன்பு ஸ்நானத்துக்கு வரும்போது பெத்த நிலைவிளங்க முன்வந்த சிவபாதவிருதயர், இப்போது முத்திநிலை விளங்க அவர்க்குப்பின் பணிந்துசென்றனர். சம்பந்தர், திருத் தோணித்திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற தமது தாய் தந் தையரைத் தெரிசித்துவணங்கி, "இங்கெனையாளுடையானுமை யோடுமிருந்தான்" என்று திருப்பதிகம் பாடிக்கொண்டு புறத்து வந்தருளினர். பிராமணர் முதலிய எல்லாரும் சம்பந்தரது திரு வருட்டிருக்கோலந்தெரிசிக்கப்பெற்றளவே, ஆனந்தபரவசராய்த் திருவடிகளில் விழுந்துவணங்கி,"காழிபர்தவமேகவுணியர்தனமே கலைஞானத், தாழியகடலே யதனிடையமுதே" என்பனவாதி மகிமை எடுத்தோதித் துதித்தார்கள். சிவபாதவிருதயர் தமது பிள்ளையாரை எடுத்துத்தோளில் வைத்துக்கொண்டு, மங்கலவாத் தியங்கள் முழங்கவும், பிராமணர்கள்வேதபாராயணஞ்செய்துடன் வரவும், அடியார்கள் ஹரஹரகோஷஞ்செய்யவும், வீதியிலுள்ளா ரெல்லாம் பூரணகும்ப தூபதீபாதி மங்கலவரிசைகளுடன் எதிர் வந்து வணங்கி வாழ்த்தவும், திருவீதிவலமாகத் தமது திருமாளி

கையில் வந்து திவ்வியாசனத்தில் வீற்றிருந்தருளச்செய்து திரு வடிகளில்வணங்கினர். யாவரும்வணங்கித்திருவருள்பெற்றார்கள்.

சம்பந்தர், அன்றிரவும் மறுநாட்காலையிலுந்திருத்தோணியில் அம்மை அப்பரைப்பணிந்து திருக்கோலக்கா வந்து சுவாமியை வணங்கித் தமது திருக்கரங்களால் தாளமிசைத்துக் கொண்டு "மடையில்வாளைகள்" என்னுந் திருப்பதிகம்பாடும்போது,சுவாமி நமது இளங்குழந்தையின்மென்கரம் நோகுமேஎன்று பரிந்துதிரு வைந்தெழுத்தெழுதிய செம்பொற்றிருத்தாளங்கள் அவர் திருக் கரத்தில் வரும்படி செய்தருளினர். அத்தாளங்களுக்கு உமையம் மையார் ஓசைகொடுத்தருளினர். இதனை, ஓசைகொடுத்த நாயகி யார் என்றதிருநாமமும் விளக்குகின்றது. சுவாமி கொடுத்தமட்டி லிருந்தால், அத்தாளங்கள் பொன்னாதலால் ஓசையின்றி நடை பெறாதென்று, அம்மையார் ஓசைகொடுத்து நடைபெறச் செய் தருளினர். இதனால் சிவச்செயல்கள் யாவும் சிவசத்தியால் நடப் பனவே என்பதும், எக்காலத்தும் பிரிவின்றிக் குணகுணிகளாய் ஒற்றித்து நிற்கின்ற அவ்விருவராற் கொடுக்கப் பெற்றமையால், ஓசையுடன் பிரிவின்றிஒற்றித்து நிற்குமியல்பினதாகிய அத்தாள மும் சிவசத்திசொரூபமே என்பதும், அத்தாளத்தில் தமதுபோரா கிய பஞ்சாக்ஷரவிலாச மெழுதிக்கொடுத்தமையால், மானுடரூப ராய்வந்த இந்த நிலையிலும் அவ்விலாசத்துக்குரிய பாத்தியஸ்தரா கிய சிவகுமாரரே சம்பந்தரென்பதும் விளக்கமாம். அத்தாளம் சிவசத்திரூப தைவிக நிலையதாதலாலும், அதனை இசைக்கின்றவர் சர்வ சத்திமானாகிய சிவகுமாரரேயாதலாலும், அத்தாளத்தெழு கின்ற இசை, தோல், துளை, நரம்பு, தாளம், கண்டமாகிய ஐந்து கருவிகளினும்,பலவிகற்பமாய் ஒத்தெழுகின்றஓசைபோலெழுந்து எங்கும்பரந்து மேலுலகங்களினும் செல்லுதலால், அவ்வுலக வாசி களாய்ச் சங்கீத மகாவித்துவசிரோமணிகளாகிய தும்புருநாரதர் முதலியதேவர்களும், அவ்வற்புதஇசைகேட்டளவேஆச்சரியமும் நாணமும் ஆனந்தமுங்கொண்டு, பூமழைபொழிந்து பூமியில்வந்து வணங்கித்துதித்துச் சூழ்ந்தார்கள். இதனை, "உம்பருல கதிசயிப்ப வோங்கியநா தத்தளவி னுண்மை நோக்கித், தும்புருநா ரதர்முத லாஞ் சுருதியிசைத் துறைவல்லோர் துதித்து மண்மேல், வம்பலர்

மாமழைபொழிந்தார்" என்று சேக்கிழார்பெருமான்விளக்குதலாற் காண்க. சம்பந்தர் திருப்பதிகம் பூர்த்திசெய்து வணங்கி விடைபெற்றுத்திரும்பினார். அவர் பூமியில்நடக்கச்சகியாத தந்தையார் தோளில் வைத்துக்கொள்ளத், தோணிக்கோயில்சென்றுஅம்மை அப்பரை வணங்கிப்பதிகம்பாடித் திரும்பிவந்து திருமாளிகையில் வீற்றிருந்தருளினர்.

இவரது அற்புதமகிமைகள் தெரிந்து இவர் தாயார் பகவதியார் பிறந்த ஊராகிய திருநனிபள்ளியந்தணர் முதலியரும், மற்றும் நகரவாசிகளும் பெருமகிழ்ச்சியினராய் வந்துவணங்கத் தமதிளங்கோலக்காட்சி கொடுத்தருளினர். இவ்வாறு தினந்தோறும் வந்து தெரிசிக்கப்பெற்று வணங்குகின்றார்க்கெல்லாம், விருந்து முதலிய உபசாரங்கள்செய்து கொண்டாடுகின்ற சீகாழித் திருப்பதி சிவலோகமெனச்சிறந்து விளங்கியது. அப்போது சம்பந்தர் திருநனிபள்ளி அந்தணர்வேண்ட, தோணியப்பரை வணங்கிக் கொண்டு தந்தையார் தோண்மீது செல்லுங்கால், அவ்வழி பாலைநிலம்போல வெப்பமாயிருத்தல்கண்டு, தந்தையார்க்கும் உடன் வருவார்க்கும் சூடுதாக்குமே என்றுபரிந்து பதிகம்பாட, உடனே வெப்பநீங்கி மருதநிலமாய்க்குளிர்ந்தது. மேலும் அதுவேநெய்தனிலமாய்க் கடற்காற்றுவீசியது. இதனை நம்பியாண்டார்நம்பிகள் ஆளுடையபிள்ளையார் திருவந்தாதியில் " நாத னனிபள்ளி சூழ்நகர் கானகமாக்கியஃதே, போதின் மலிவய லாக்கியகோன் " என்றும், திருவுலாமாலையில்"ஞாலத் தினரறிய மன்னுநனி பள்ளியது, பாலை தனை நெய்த லாக்கியும் " என்றும் விளக்குகின்றனர். "பாலைநெய்தல் பாடியதும்" என்று திருக்களிற்றுப்படியார் தெரிவிக்கின்றது. சம்பந்தர் திருநனிபள்ளிமுதலிய தலங்கள்பணிந்து பதிகம்பாடிச்சீகாழியில்வந்துவீற்றிருந்தருளினர். இருக்குநாளில், இவரது தெய்வச்செயல்கள் தெரிந்து தெரிசிக்கவிரும்பித்திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் மனைவியாருடன் அங்குவந்து, எதிர்வந்த சம்பந்தர் திருவடிகளில் வணங்கி மகிழ்ந்துநிற்ப, அவரை அழைத்துவந்து தோணியப்பரைத் தெரிசிப்பித்து, இசைபாடச்செய்து வசிக்க இடங்கொடுத்து விருந்துசெய்வித்தார். அவர், சம்பந்தரை வணங்கி எம்பெருமானே தேவரீருடைய தெய்வத்

திருக்கோலந் தினமுந் தெரிசித்துத், திருப்பதிகங்களை யாழில் அமைத்து வாசித்துக்கொண்டிருக்கும்படியருளுகவென்றுபிரார்த்தித்து, அநுமதிபெற்று அவரை நீங்காதுடனிருந்து வாழ்வாராயினர்.

பின்பு சம்பந்தர்சிதம்பரதெரிசனம்விரும்பித்,தோணியப்பரை வணங்கிச்சென்று தில்லைஎல்லையைவணங்கிவருவதுதெரிந்துதில்லைவாழந்தணர்முதலியயாவரும்பூரணகும்ப தூபதீபவாத்தியகோஷாதிகளுடன்எதிர்வந்துபணிந்துபசரிப்ப, வணங்கிச்சென்று திருவீதிகோபுரங்கள்பணிந்து புகுந்து பேரம்பலத்தைவணங்கிச், சிவஞானமேயாகிய சிற்சபையும், சிவஞானாநுபவத்தா விளங்கும் சிவானந்தமேயாகிய திருநடனமும் நேரேகண்டுபணிந்து, திருக்கரங்கள் சிரமேற்குவியத் திருக்கண்கள் சிவானந்தவெள்ளம் பொழிய நின்று, சிவஞானாநுபவத்தினுள் விளைகின்றசிவபோகத்தையிடையீடின்றி அனவரதமும் ஐம்பொறிகளாலும் அநுபவிக்கும்படி வெளிநின்றருளுகின்ற எம்பெருமானே! தேவரீர் திருவருட்பெருமை செப்புதற்கெளிதோ எனத்துதித்து,'கற்றாங்கெரியோம்பி' என்னுந் திருப்பதிகம்பாடி, மேலுங் காலந்தோறுந் தெரிசித்துப் பதிகங்கள்பாடி வலம்வந்து வணங்கி, ஒருவாறு புறம்போந்து அத்தலத்தில் வசிப்பதொழிந்து திருவேட்களஞ்சென்று, சுவாமியை வணங்கிப்பதிகம்பாடி அங்கிருந்துகொண்டே,சிதம்பரம்வந்துதெரிசிக்கின்றவர்; ஒருநாள் வரும்போது வழக்கப்படி எதிர்கொள்ள வருகின்றதில்லைவாழந்தணர்மூவாயிரவரும், திருவருளால்சிவகணநாதர்களாய்த்தோன்றக்கண்டு, அதனைதிருநீலகண்டயாழ்ப்பாணருக்கும் காட்டியருளினர். அவ்வாறு காணப்பெற்ற தில்லைவாழந்தணர்கள் நெருங்கிவந்து சம்பந்தரைவணங்க, அவரும் அவர்களை வணங்கிச்சென்று சபாநாதரைப்பணிந்து "ஆடினாய் நறுநெய்" என்னும் திருப்பதிகம்பாடி அதனில் "நீலத்தார் கரியமிடற்றார்" என்று தில்லைவாழந்தணரைச் சிவகணநாதராய்க் கண்டதைவிளக்கியருளினர்.

அதன் பின்பு பாணனார்வேண்ட, அவரவதாரஸ்தலமாகிய திருவெருக்கத்தம்புலியூர் சென்று பணிந்து பதிகம்பாடித், திருமுதுகுன்ற முதலியதலங்கள் தெரிசித்து வரும்போது, தந்தை

யார் தோள்மீது செல்வதொழிந்து, அவர் மிகவருந்தவும் திருவரத்துறை தெரிசிக்கும்படி நடந்துசென்றார். உடன் வருகின்ற திருத்தொண்டரின் இளைப்புநோக்கி, மத்தியில் மாறன்பாடி என்னும் ஊரில் தங்கியிருந்தார்.* அன்றிரவு திருவரத்துறைநாதர், அங்குள்ள பிராமணரெல்லார்க்கும் கனவில்தோன்றி, நமது குமாரனாகிய சம்பந்தன் மாறன்பாடியிலிருக்கின்றான், நீங்கள் நமது கோயிலுள்ளிருக்கின்ற முத்துப்பல்லக்கு, முத்துக்குடை, முத்துச்சின்னங்களை எடுத்துக்கொண்டுபோய்க் கொடுங்களென்றருளிச், சம்பந்தருக்கும் ஏற்றுக்கொண்டு எப்போதும் அப்பல்லக்கின்மீது செல்லுகவென்றருளினர். பிராமணரெல்லாரும் விழித்தெழுந்து அன்புபெருக ஆலயத்துவந்து, திருப்பள்ளியெழுச்சிப் பூஜாகாலத்தில் திருக்கதவுதிறந்து, அனந்தகோடி சந்திரப்பிரகாசத்துடன் அவைகளிருப்பக்கண்டு, ஆச்சரியங்கொண்டு, எடுத்துச்சென்று சம்பந்தர் திருமுன்பு வந்துவணங்கி, எம்பெருமானே இவை திருவரத்துறைநாதர் திருவருள் என்று விண்ணப்பித்தார்கள். சம்பந்தர் திருவருளைநினைந்துருகி "எந்தையெம்பெருமான்" என்றுதிருப்பதிகம்பாடித்துதித்து வலஞ்செய்துவணங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை ஓதிக்கொண்டு உலகெலாமுய்யும்படி அப்பல்லக்கிலேறியருளினர். உடனே அரிபிரமாதி தேவர்கள் பூமழைபொழிந்தார்கள். தேவதுந்துபிகள் முழங்கின. பிராமணரெல்லாரும் வேதங்களை எடுத்தோதினார்கள். சிவபாதவிருதயர் இதுவன்றோ யான்செய்ததவப்பேறென்று அளவுகடந்த ஆனந்தவெள்ளத்தழுந்தினர். திருத்தொண்டர்கள் அரகரகோஷஞ் செய்தார்கள். உலகத்திலேபிள்ளைகளுக்கு அமுதுகொடுப்பது தாயர் கடமை என்பதுவிளங்க, உமாதேவியார் தமதுகுமாரராகிய இவர்க்குமுன் அமுதுகொடுத்தருளினர். அறிவுகொடுப்பது தந்தையர் கடமைஎன்பது விளங்க, இப்போது அரத்துறைநாதர்அருள்ஞானமயமாகிய பல்லக்குமுதலியன கொடுத்தருளினர் என்று ஞானசம்பந்தமகிமைகளை வியந்துதுதித்தார்கள். திருத்தொண்டர் சிலர் முத்துக்குடையை மேலே நிழற்றிப் பல்லக்கைத் தாங்கிச்செல்லவும், சிலர் முன்னின்று முத்துச்

---

* சம்பந்தர், மெல்லடி சிவப்படைத்தலாற்றான் தொண்டர்களுக்கு இளைப்பு வந்ததுபோலும்.

சின்னம், காளம், தாரை, மூன்றுங்கொண்டு, உலகெலாமுய்யும்படி அவதரித்தருளிய ஞானசம்பந்தர் வந்தார். உமையம்மையார் ஊட்டியருளிய பாலறுவாயர் வந்தார். முத்தமிழ் விரகர்வந்தார். என்பனவாதிய மகிமாநாமங்கள் விளக்கி ஊதிக்கொண்டு வரவும், சம்பந்தர், திருவாத்துறை சமீபிக்கவந்து பல்லக்கினின்று இறங்கியருளிக், கோபுரவாயிலில் வணங்கி உட்சென்று வலஞ்செய்து சந்நிதியிற்பணிந்து, அரத்துறைநாதர் அருளைநினைந்துநினைந்துஅன்பு ஆராமைபெருகத் துதித்துநின்று திருப்பதிகம்பாடி அங்கு வசித்தருளினர்.

சில நாளானபின், திருத்தோணியப்பர் தெரிசனம்விரும்பித், திருவாத்துறைநாதர் திருவடிபணிந்து திருவருள்பெற்றுச்சிவிகைமீதெழுந்தருளித், திருத்தொண்டர்கள் திருச்சின்னங்கள்பிடித்துத் திருநாமங்களெடுத் தோதச்சென்றருளி, மார்க்கத்துள்ள திருத்தலங்களெங்கும் பிராமணர்கள் அடியார்கள் யாவரும், சர்வாலங்காரவரிசைகளுடன் எதிர்வந்து வணங்கியுபசரிப்ப, அங்கங்கே சுவாமி தெரிசனஞ்செய்து பதிகம்பாடிக்கொண்டு, சண்டேசுரநாயனார் திருவவதரித்தருளிய திருச்சேய்ஞலூர் சமீபித்தவுடன் சிவிகையினின்றிறங்கித் திருக்கோயில் பணிந்து "பீரதடைந்த பாலதாட்ட "என்று பதிகம்பாடிச் சண்டேசுரவிசேஷதெரிசனஞ்செய்து வணங்கிமகிழ்ந்து, சீகாழிக்குச் சமீபமாகவருவதுதெரிந்த திருத்தொண்டர்கள், பிராமணர்கள், நகரவாசிகள் யாவரும், திருவீதிகளெங்கும் அலங்கரித்து மங்கலவரிசைகளுடன் எதிர்வந்து, சிவிகைமீது வீற்றிருந்தருளுந் திருக்கோலந்தெரிசித்துப் பெருமகிழ்வுற்று வணங்கித்துதிப்ப, அவர்க்கெல்லாம் அருள்புரிந்து சென்றருளிச், சிவிகையினின்றிறங்கித் திருத்தோணியப்பர் திருமுன்புவந்து, மிகுந்த ஆராமையுடன் பணிந்து பதிகம்பாடிப் புறம்போந்து தமது திருமாளிகைக்கு வந்தருளுஞ்சமயம், அவரைத் தமது பிள்ளையென்று நெடுநாளபிமானித்துவந்தபழக்கமிகுதியால் பகவதியார், எங்கும் சிவிகைமீதுவந்தருளுந் திருக்கோலம் கண்டவர்கள் பலராதலால், திருஷ்டிதோஷம் நீங்கவேண்டுமெனக்கருதி, பூரண கும்பாதிகளுடன் எதிர்வந்து ஆலத்தி எடுத்துப்பிள்ளையார் நெற்றியில் விபூதிபூசினர். உடனே ஆ! ஆ!! என்னகாரியஞ்செய்

தோம். இவர் நம்மையெல்லாம் ஆட்கொண்டருளவந்தபரதெய்வ மன்றேமென்றஞ்சி, அப்பிழைபொறுத்தருளவேண்டுமென்னுங் குறிப்புவிளங்க, அவர் திருவடிகளில் விழுந்துவணங்கி அஞ்சலித்து நின்று துதித்தனர் சம்பந்தர் அவர் குறிப்புநோக்கி அம் முறையின் அருள்புரிந்து உட்சென்று வீற்றிருந்தருளினர்.

இதனை, "இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென் றீன்றதாயார்சாத்தி யிறைஞ்சியேத்த, முறைமையவர்க் கருள்செய்து மடத்துப் புக்கார் முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகை பெற்றார்." என்று விளக்கும் பெரியபுராணத்திருவிருத்தத்தாற்காண்க. காலங்கள்தோறும் தோணியப்பரைத்தரிசித்துப்பதிகங்கள்பாடிக் கொண்டு வசிக்குநாளில் உபநயன கல்யாணப்பருவம் வர, அது, வேதசிவாகம விதிமுறையென்பதைத், தாமும்மேற்கொண்டியாவருக்குங்காட்டியுய்விக்குந் திருவுளக்கருணையினால், சுபமுகூர்த்தத்தில் உபவீத காயத்திரி பஞ்சாக்ஷரமந்திரமுறைபெற்றனர். அப்போது வேத வேதாங்க சிவாகமாதி சிவசாஸ்திரங்களெடுத்தோதினர். கேட்ட பிராமணரெல்லாரும் ஆச்சரியமுற்று முன்னுள்ள சந்தேகங்களெல்லாம் கேட்டுத்தெளிந்து இவர், வேத முடிவிற் கூறுந்தியானப்பொருளாகிய குகப்ரஹ்ம பரமசிவமேயென நிச்சயித்து திருவடிகளில் பணிந்து தியானித்து நின்றனர். இதனை, "கருதியா தரவோடும் வியப்புற் றேத்துங் கலைமறையோர் கவுணியனார் தம்மைக் கண்முன், வருதியா னப்பொருளென் றிறைஞ்சித் தாமுன் வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார்" என்று பெரியபுராணம் விளக்குகின்றது. அப்போது ப்ரஹ்ம, க்ஷத்ரிய, வைசியமூவருணத்தார்க்கும்முதலில்ப்ரஹ்மகாயத்திரிமுக்கியமே. அதுவும்அதற்குள்ளுயிராய்ச்சிறந்த பஞ்சாக்ஷரமுஞ்சேர்ந்துபதேசிக்கப்பெற்றால்தான் சபலமாகுமென்னுமுண்மை விளக்குவாராய் (மூவருணத்து) * "வேதியர்க்கு, அந்தியுண் மந்திரமஞ் செழுத்துமே" என்று திருப்பதிகம்பாடித் தெளிவித்தருளினர்.

அந்நாளில், அவரது மகிமைதெரிந்த வாகீசத்திருவடிகள், அவரைத் தெரிசித்தின்புறும் ஆவலுடன் தொண்டர்சூழ வருவது

* வேதபாராயணம் மூவருணத்தார்க்கும் உரித்தாதலின் அதனையுடைய அம்மூவரும் வேதியரென்று கூறப்பெறுவரென்க.

தெரிந்து, சம்பந்தர், இவ்வாகீசதெரிசனமே நமது பூர்வபுண்ணியப்பேறென்றுகூறி அதிவிருப்பத்துடன் வரும்போது, அரசுகள் திருக்கோலந் தூரத்தில் தோன்றக்கண்டு, ஆ! ஆ!! நெடுநாளாக நாம் மனத்தால் துதித்துவந்த இப்பெருமானது திருவேடம்நேரே காணும் பெரும்பாக்கியம் பெற்றேமென்ற ஆசைமிகுதியால், உடனே நிலத்தில்விழுந்து வணங்கிஎழுந்துநெருங்கிச்செல்ல,அரசுகளும் அவரது இளந்திருக்கோலங் கண்டவுடனே திருவடிகளில் வணங்க, அவர்வணங்குமுன் சம்பந்தரும்வணங்க, இருதிறத்துத் திருத்தொண்டர்களும் எதிரெதிர்வணங்கிஅரகரமுழக்கஞ்செய்து ஆனந்தவெள்ளத்தழுந்தினார்கள். சம்பந்தர், வாகீசரதுசிவவேடப் பொலிவு முதலியவெல்லாங்கண்டு, இவர் நமது பிதாவாகிய கயிலாசபதியேஎன்றுநோக்கி,நெடுநாளாகநேரேகாணப்பெறுதிருந்து கண்ட பேராசைவிளங்க, எமது அப்பரே வந்தருளுகஎன்று அதிமாதுரிய இன்பமொழிபுகன்று, அழைத்துக்கொண்டு திருக்கோயிலில் சென்றுபணிந்து தமது திருமாளிகையில் திருத்தொண்டர் பல்லாயிரவருடன் அரசுகளைத் திருவமுதுசெய்வித்து அவருடன் வசிக்குநாளில், அரசுகள் பிறதலங்கள் தெரிசிக்கவிரும்புதல்கண்டு பிரிவாற்றுதவராய் உடன்சென்று, அவர் நின்றருளுகவென்று வேண்டுதலை மறுக்கமாட்டாது திரும்பிவந்து, காலந்தோறுங் கோயில்சென்று திருப்பதிகங்கள் பாடிக்கொண்டுவசித்தருளினர்.

சில நாளானபின் பிதா முதலியரை நோக்கிப் பலதலங்கள் தெரிசித்து வருவேன் நீங்களிங்கிருங்களென்று கூறியருளினர். பிதா, சிவயாகங்கள் செய்யவும்வேண்டும், ஆயினும், தேவரீரைப் பிரிந்திருக்க முடியாமையால் இன்னுஞ்சிலகாலம் உடன்வரும்படி அருளுகவென்றுவேண்ட, அவரும் அங்குள்ள பிராமணர் முதலியரும் திருத்தொண்டர்களுஞ்சூழத் திருத்தோணியப்பரைத்தெரிசித்துக்கொண்டு, முத்துப்பல்லக்கின்மீது முத்துக்குடைநிழற்றவீற்றிருந்தருளி, முத்துச்சின்னங்கள் திருஞானசம்பந்தர்வருகின்றார் என்பது முதலிய திருநாமங்கள் எடுத்தோதப் பலதலங்கள் சென்று தரிசித்துப்பதிகங்கள் பாடிக்கொண்டு, திருப்பாச்சிலாச்சிராமத்துக்கு வரும்போது, முயலகநோயால் வருந்துகின்ற தம் புத்திரியைச், சிவசந்நிதியிலிட்டு நோய்நீக்கியருளும்படி வேண்டி

நின்ற கொல்லிமழவரென்னும் பேரன்பர் அலங்காரமங்கலவரிசைகள் பொலிய எதிர்வந்து வணங்கியபடியேகிடப்ப, எழுகவென்றருளிக் கோயிற்குவந்து சிவசந்நிதியில் அறிவிழந்துகிடக்கின்ற அப்புத்திரியைநோக்கி நிகழ்ச்சிதெரிந்து, பதிகம்பாடி நோய்நீக்கியருளினர். எழுந்து ஒதுங்கிவந்த தம்புத்திரியுடன் கொல்லிமழவர் வணங்கினர். சம்பந்தர் சிலநாளங்கிருந்து பிறதலங்கள் தெரிசித்துத், திருச்செங்குன்றூர்க்கு வந்து சுவாமிதெரிசனஞ்செய்து கொண்டிருந்தனர். அந்நாளிற் பனி மிகுதியால் திருத்தொண்டர்கள் குளிர்சுரமுற்று வருந்துவதுதெரிந்து "அவ்வினைக் கிவ்வினை" என்னுந் திருநீலகண்டத் திருப்பதிகம்பாடியருளினர். உடனே அந்நோய் அந்நாடெங்குமில்லாதொழிந்தது. பின்பு பலதலங்கள் தெரிசித்துக்கொண்டு திருவலஞ்சுழியினின்று திருப்பழையாறை மேற்றளிசென்று பணிந்து, திருச்சத்திமுத்தம் வந்து வணங்கித் திருப்பட்டீச்சரம் பணியக்கருதி வெளிவந்தார்.

அக்காலம் முதிர்வேனிலாரம்பிக்கின்ற ஆனிமாசத்தொடக்கமாதலால், வெய்யில் வெப்பத்தால் திருத்தொண்டர்கள் வருந்தினால் அதனை நமது இளையகுமாரன் சகிக்கமாட்டானென்று திருவுளங்கொண்ட திருப்பட்டீசர் திருவருளாற், சிவகணங்கள் முத்துப்பந்தர்கொண்டுவந்துமுத்துக்குடையின்மேற்சேர்ப்ப, அதனை திருத்தொண்டர்கள் பிடித்துவந்தார்கள். உடனே அப்பந்தர்நிழலே எங்கும்விரிந்ததிருவடிநிழலெனயாவர்க்கும் காற்சூடுநீக்கிகுளிர்ச்சி செய்தது. இதனை, " திருமன்றில், அண்டர்பிரானெடுத்ததிருவடிநீழலெனவமர்ந்தார்" என்று பெரியபுராணம்விளக்குகின்றது. தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். திருத்தொண்டர் அரகரமுழக்கஞ்செய்தார்கள். வெப்பத்தால் வருந்துவார்க்கே தட்பஞ்செய்யவேண்டும். சம்பந்தரோ, எக்காலத்தும் எவ்விதத்தும் வெப்பமுதலிய துக்கலேசமும் பரிசிக்கப்பெறுத நித்திய சுகசர்வசத்திமானே. அவரும் பல்லக்கின்மீது குடைநிழற்ற வருகின்றவரே. திருத்தொண்டர்களே பாதசாரிகளாய் வருகின்றவர்கள். இவர்களுக்கேவெப்பமுள்ளதாகவும், திருப்பட்டீசர்சம்பந்தர்க்கே முத்துக்குடையின் மேலும் முத்துப்பந்தர் நிழல் கொடுத்தருளினர். இது, ஒரு மரத்தின் தூரில் விடுகின்ற நீர் அம்மரத்தில்விரிந்துள்ள தளிர், பூ, பிஞ்சுமுதலியவைகளைக் குளிர்வித்து வளர்த்தல்

போல், சர்வான்மாக்களிடத்தும் அந்தரியாமியாய் நிறைந்துள்ள சர்வவியாபக சிவகுமாரராகிய சம்பந்தர்மேல் நிற்கும் முத்துப்பந்தர்நிழல்,எங்கும்விரிந்துயாவர்க்குங்குளிர்ச்சிதருமென்னுமுண்மை நோக்கிச்செய்த செயலேயாம். சம்பந்தர் சுப்பிரமணியரல்லரென்பார் சிலர் இவ்வுண்மை நோக்கியுந் தெளியலாம். இதனையும் ஒப்புக்கொள்ளாவிடில், வெய்யிலில் நடந்து வருவார்க்கு நிழல்கொடாது பல்லக்கின்மேற் குடைநிழற்ற வருகின்றவர்க்கு நிழல்கொடுத்தது பக்ஷபாதமென்றாகித், திருப்பட்டீசர் யாவரையும் ஒப்ப நோக்கும்பரமபதி என்னுஞ் சுருதி விரோதமாகும். ஆதலால்மேற் கூறிய உண்மையே துணிவென்க.

உடனே சம்பந்தர் திருப்பட்டீசர் திருவருளை நினைந்துருகிச் சென்று பணிந்து பதிகம்பாடி வசித்துப், பலதலங்கள் பணிந்து சென்று திருவாவடுதுறை சமீபிக்கவந்து, திருத்தொண்டர்கள் மங்கலவரிசைகளுடனெதிர்வந்து வணங்கிவாழ்த்தத், திருக்கோயில் புகுந்து திருமுன்பணிந்து திருப்பதிகம்பாடி வலமாக வாயு மூலையில் வரும்போது, தமது திருநாசியில் திருத்தமிழ்மணப்பது தெரிந்துசென்று, திருமூலநாயனார் திருமந்திர மூவாயிரமிருப்பக் கண்டெடுத்து, அத்திருப்பாடல்களிலுள்ள சித்தாந்த சைவத்திருவருள்விளக்கப் பொருள்நயந்தெரிந்து சிரமேற்கொண்டுபாராட்டி யாவர்க்கும் விளக்கிச்சி[illegible]நாளங்கு வீற்றிருந்தருளினர். இவர்திருநாசி திருத்தமிழைமணந்த தெய்வச்செயலும் இவரது சொரூப நிலையைநன்குவிளக்கும். அப்போது சிவபாதவிருதயர்சம்பந்தரை வணங்கி, யாகஞ்செய்யுங் காலம் வருதலால் அதற்கு வேண்டும் பொருள்தந்தருளுகவெனவேண்டச்,சம்பந்தர்சுவாமியைவணங்கி 'இடரினுந்தளரினும்'' என்றுதிருப்பதிகம்பாடியருளினர். உடனே சம்பந்தர் திருவுளக்கருத்தின்படியே செய்துவருகின்ற சிவனருளால், ஒருசிவபூதம் ஆயிரம்பொன்னுள்ள ஒரு முடிப்பைப்பீடத்தின் முன்வைத்து இதுசிவபிரான் தந்த உலவாக்கிழி என்று கூறியது. சம்பந்தர் அதனை எடுத்து பிதாவைநோக்கி, இம் முடிப்பிலுள்ள பொன் நீர்செய்யும் சிவயாகங்களுக்கும் மற்றும்பிராமணர் யாவருஞ் செய்யும்சிவயாகங்களுக்கும் வேண்டிய பொருள்தந்து, நிறைவு குறையாதுபகரிக்குமென்று கொடுத்தருளினர். பிதா மேலும் வணங்கி விடைபெற்றுச் சீகாழிக்குச்சென்றனர்.

சம்பந்தர் சிலநாளங்கிருந்து பலதலங்கள் பணிந்துசென்று தருமபுரத்தைஅடைந்தார். திருத்தொண்டர்களெதிர்வந்துவணங்கினார்கள். அத்தலம் பாணனார் தாயார் பிறந்ததலமாதலால், அவர் சுற்றத்தவர்களும் எதிர்வந்து வணங்கினார்கள். பாணனார் அவர்களைநோக்கிச், சம்பந்தரது பதிகங்களை யாழிலிட்டு வாசித்துக் கொண்டு சார்ந்துவரும் பெரும்பேறு பெற்றுவாழ்தலை விளக்கினர். அவர்கள் நீர் யாழிலிட்டுவாசித்தலாலன்றோ! அத்திருப்பதிகங்களிசைசிறந்து விளங்குகின்றன என்றார்கள். அதுகேட்டபாணனார், மிகவருந்திச், சம்பந்தர் பாதங்களிற்பணிந்து சுவாமீ! தேவரீர் பாடியருளும் திருவருள்மயமாகிய திருப்பதிகங்களிலுள்ள தெய்வத்தனியிசை யாழிலடங்காமகிமையாவருந்தெரிந்துஉய்யும்படி, ஒரு பதிகம் பாடியருளப்பெற்றால், அவ்விசை யாழிலடங்காமை காட்டப்பெறுவேன் என்றனர். சம்பந்தர் சிவசந்நிதியில் "மாதர்மடப்பிடி" என்னும் பதிகம்பாடியருள, அதனை யாழிலிட்டுப் பாடத்தொடங்கி, அது அதனிலடங்காமைகண்டுபயந்து, சம்பந்தர்திருவடிகளில்வணங்கி, அந்தோ இவ்வடங்காத அற்புத மகிமைத்திப்பியவிசையை யாழிலமைத்துப்பாடுவோமென்று நினைக்கச்செய்தது இந்த யாழன்றோவென்று உடைத்தெறியும்படி ஓங்கினார். உடனே சம்பந்தர் அதனை வாங்கிக்கொண்டு அம்மை அப்பர் திருவருளால்வருகின்ற திருப்பதிகத்தினிசைமகிமையைவிளக்கும்போது, சிவபிரான் மூலலிங்கத்தினின்று சங்கீத வித்துவக்கோலத்துடன் வெளிவந்து அந்த யாழை வாங்கி, அப்பதிகத்தையே மேலும் பாடச்செய்து அதனிலமைத்துப் பாடியருளிப் பதிக முடிந்தபின் சம்பந்தரை நோக்கி, நமதுரிய மைந்தனே நீ பாடுந் திருப்பதிகமெல்லாம் திருவருள்மயமே. வாக்கு மனங்களை கடந்து அதிகமாய்நிற்பது. மனசுக்கும் அடங்காதஇவ்விசை யாழ் முதலிய கருவிகளில் பாடுஞ்செயல்வகையிலடங்குமா? உலகெலாமுணர்ந்துய்யும்படிஇயன்றமட்டில்பாடும்படி இப்பாணன்கையிற் கொடுப்பாயென்று அந்த யாழைச் சம்பந்தர் திருக்கரத்திற்கொடுத்து மறைந்தருளினர். இது, அத்தருமபுர புராணத்துள்ளது. சம்பந்தர் இயன்றமட்டில் பாடிவரும்படி அருள்புரிந்து பாணரிடங்கொடுத்தருளி அத்தலத்தில் வீற்றிருந்தருளினர்.

பின்பு, திருச்சாத்தமங்கைக்கு வந்துபணிந்து, திருநீலநக்க நாயனார் திருமாளிகையில் திருவமுதுசெய்து, திருப்பதிகத்தில் அவரைச் சிறப்பித்துத், திருச்செங்காட்டங்குடி சமீபிக்கவரும் போது, சிறுத்தொண்டநாயனார் அன்புமீதூர நகரலங்கரித்து மங் கலவரிசைகளுடனெதிர்வந்து வணங்கக், கணபதீச்சரம் பணிந்து அவரைச் சிறப்பித்துப்பாடி, அவர் திருமாளிகையில் திருவமுது செய்தருளி, திருமருகலுக்கு வந்து சுவாமி தெரிசனஞ் செய்து கொண்டிருந்தார். அந்நாளில் ஒருவைசியன், தன்மாமன் செய்த வஞ்சனையால் வருந்துவதுதெரிந்து, அம்மாமன் மகள் அவனிடத் துள்ள இரக்கமிகுதியால், பிதாவுக்குத் தெரியாமல் அவனுக்குப் பாரியாகி வருத்த நீக்கி வாழும்படி வந்தனள். அவன் தன்னூரிற் சென்றுமணம்புரியக்கருதி அவளையழைத்துவந்து அன்றிரவு அத் திருமருகற் கோயிலருகில் மடத்திற் சயனித்துப், பாம்புதீண்டப் பட்டுயிர் நீங்கினான். விஷவயித்தியர்கள் மணிமந்திர மருந்துவகை கள் செய்தும் பலிக்கவில்லை. அக்கன்னிகை மாமன்மகளாயிருந் தும், விவாகமாகாமையால் இந்த ஆபத்திலும் அவனைத்தீண்டாது பக்கத்து வீழ்ந்து அலறி அன்னை பிதாவையும்விட்டு உம்மையே புகலாக அடைந்தேன் நீரும் விஷத்தாலிறந்தீர் இனி என்செய்வே னென்றுபுலம்பி, அன்பும்அறிவுமிகுந்த உத்தமகுணவதியாதலால் திருமருகற் சிவபிரான் திருமுன்னின்று,

அடியாரா மிமையவர்தங் கூட்ட முய்ய
 வலிகடல்வாய் நஞ்சுண்ட வமுதே செங்கண்
நெடியானு நான்முகனுங் காணாக் கோல
 நீலவிட வரவணிந்த நிமலா வெந்து
பொடியான காமனுயி ரிரதி வேண்டப்
 புரிந்தளித்த புண்ணியனே பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலை மருங்கு சூழுங்
 கவின்மருகற் பெருமானே காவா யென்றும்,

வந்தடைந்த சிறுமறையோ னுயிர்மேற் சீறி
 வருகாலன் பெருகால வலியும் போலும்
செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலஞ்
 சிதைத்தருள வுதைத்தருளுஞ் செய்ய தாளா

இந்தவிடக் கொடுவேக நீங்கு மாறும்
யானிடுக்கட் குழிநின்று யேறு மாறும்
அந்நிமதிக் குழலிவளர் செய்ய வேணி
யணிமருகற் பெருமானே யருளா யென்றும். பிரார்த்

திக்கின்ற ஓசை, திருப்பள்ளியெழுச்சி தெரிசிக்க வருகின்ற திருஞானசம்பந்தர் திருச்செவியிற்சேர, மிகவிரைந்துவந்து அக்கன்னிகையை நோக்கி நீ பயப்படாதே என்று அபயங்கொடுத்தருளி, இத்துன்பத்துக்குக் காரணமும் உன் வரலாறுங்கூறுகவென்றருளினர். உடனே திருவடிகளில் விழுந்துவணங்கிஎழுந்து கண்ணீர் சொரிய அஞ்சலித்துநின்று, எங்களை ஆண்டருளவந்த பரதெய்வமே, அடிமை, வைப்பூரிலுள்ள தாமன்என்னும் வைசியனுடைய புத்திரி, இங்கு உயிர்நீங்கிக்கிடக்கின்ற இவர், அவன் சகோதரி புத்திரராகியமருகர். என்னுடன் ஏழுபுத்திரிகளுண்டு; ஒவ்வொருவரையும்உனக்குத்தருகிறேனென்றென்றுகூறித், திரவியவாஞ்சையால்எனக்குமூத்த ஆறு புத்திரிகளையும் பிறர்க்குவிவாகஞ்செய்துவிட்டான். அதுநோக்கி வருந்துகின்ற இவரிடத்துள்ள இரக்கத்தால், பிதா மாதாக்களுக்குந் தெரியாமல் இவரை அடுத்து வந்தேன். இவர் மிகமகிழ்ந்து என்னை அழைத்துவந்து விஷத்தால் உயிர்நீங்கினர். அடிமை, கடல்நடுவில் கலங்கவிழப்பெற்றார்போல யாதொரு கதியுமின்றி நின்றேன். இச்சமயம் எக்கதியுந் தந்தருளுகின்ற உயிர்த்துணையாய தேவரீர் திருவுளமிரங்கி எழுந்தருளி. அடிமைபடுந் துன்பமுழுதும் நீக்கியருளினீர். அடிமைக்குஉயிர்ப் பிதாமாதா முதலிய சுற்றமெல்லாந் தேவரீரே என்றுகூறி மேலுந் திருவடியில் விழுந்து வணங்கினாள். சம்பந்தர், அவ்விஷத்தைஅந்நிமிஷமே நீக்கியருளக்கூடிய சர்வசக்திமானாயிருந்தும், பாதந்திராகிய உலகத்தவர், தமக்கு வருந்துன்பங்களைச், சுதந்திர சிவனை வழிபாடுசெய்துதிருவருளால்நீங்கப்பெற்றுய்கவென்னுமுறைமை விளக்குவாராய்த், திருக்கோயில் நேர்வந்துவணங்கிஎழுந்துநின்று "சடையாயெனுமால்"என்று எடுத்துப் பாடத்தொடங்கினர்.

சடையானை யெவ்வுயிர்க்குந் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மௌலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்று மெரியச் செற்ற

படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையிற் றுயின்றானும் பரவுங் கோலம்
உடையானை யுடையானே தகுமோ விந்த
வொள்ளிழையா ளுண்மெலிவென் றுரைத்துப் பாட.

பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான் சூழ்ந்த
பொருவிறிருத் தொண்டர் குழாம் பொலியவார்ப்ப
அங்கையினை யுச்சியின்மேற் குவித்துக் கொண்டங்
கருட்காழிப் பிள்ளையா ரடியில் வீழ்ந்த
நங்கையவ ளனையந்த நம்பி யோடு
நானிலத்தி னின்புற்று வாழும் வண்ணம்
மங்குறவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். அப்பதிகம் பாடும்போதே வைசியன் உயிர்பெற்றெழுந்து சம்பந்தர் திருவடிகளில் வணங்கினான். திருத்தொண்டர்கள் ஆரவாரித்தார்கள். அக்கன்னிகை மிகமகிழ்ந்துவணங்கினாள். அவ்விருவருக்கும் அங்கே விவாகம் நடத்தி ஆசீர்வதித்து விடைகொடுத்தனுப்பி விட்டுக் காலந்தோறுந் தெரிசித்துக் கொண்டிருந்தருளினர்.

அப்போது சிறுத்தொண்டர் மீட்டுந்தம்பதிக்கு வந்தருளும்படி வேண்ட, அங்குச்செல்வாராய், அம்மருகற்கோயிலில்வணங்கி எழும்போது, சுவாமிசெங்காட்டங்குடியிருந்தருளுந்திருக்கோலம் காட்டக்கண்டு மகிழ்ந்து, அத்தலத்திலேயே சிலநாளமர்ந்தருளி, மேலும் வேண்டுஞ் சிறுத்தொண்டர்க்குச்சமாதானங்கூறித்திருப்புகலூர் சமீபிக்கச்செல்லும்போது, முருகநாயனார் அடியார்களுடன் பூரணகும்ப முதலிய மங்கலவரிசைகள் பொலிய எதிர்வந்து வணங்கச்சென்று, சுவாமியை வணங்கிப்பதிகம்பாடி, முருகநாயனார் திருமடத்தில் வீற்றிருந்தருளி, அவரால் பூசிக்கப்பெற்ற வர்த்தமானீச்சரம் பணிந்து, அப்பதிகத்தில் அவர் திருத்தொண்டைச் சிறப்பித்துப் பாடியருளினர். அந்நாளில் வாகீசத்திருவடிகள் திருவாரூரினின்று திருத்தொண்டர் பல்லாயிரவர்சூழ வருவது தெரிந்து சம்பந்தர், மிகவிரைந்து நகரெல்லைகடந்துசென்று அப்பரைவணங்க, அவர் வணங்குமுன் அப்பர்வணங்க, இருதிறத் தொண்டரும் ஆனந்தவெள்ளத்தழுந்தி எதிரெதிர் வணங்கிமகிழ்ந்

தார்கள். சம்பந்தர் அப்பரைநோக்கி எம்பெருமானே தேவரீர் இங்கெழுந்தருளும் பெரும்பாக்கியங்கிடைக்கப்பெற்றேமென்று அவரிடத்துள்ள ஆசைப்பெருக்கம் விளக்கித், தேவரீர் திருவாரூர் பணிந்துமகிழ்ந்து வீற்றிருந்தருளும் நாளில் அங்கு நிகழ்ந்த சிறப்புயாதென்று கேட்டருள, அப்பர், "முத்துவிதானம்" என்னுந் திருப்பதிகம்பாடித் திருவாதிரை மகோத்சவச்சிறப்பு விளக்கியருளினர். பிள்ளையார் அடியேன் திருவாரூர் பணிந்துவந்து, தேவரீருடனிங்குவசிக்க விரும்புகின்றேனென்று வேண்டி அவர் அனுமதிபெற்றுச்சென்றருளினர். அப்பர், தமதன்பு அவரைத் தொடர்ந்துசெல்லப், புகலூர் புகுந்து சுவாமியை வணங்கி முருக நாயனார் திருமடத்தில் வீற்றிருந்தருளினர்.

சம்பந்தர், விற்குடிவீரட்டானம்பணிந்துமீண்டு 'பாடலனான்மறை'பாடிக்கொண்டுசென்றுதிருவாரூர்ப்புறம்பணைவளங்கள் கண்டு மகிழ்ந்து "அள்ளற்கழனியாரூரடைவோம்" எனமொழிந்து பதிகம்பாடிக்கொண்டு புறத்துவந்து திருவாரூர் சிவலோகமாகிவிளங்கக்கண்டு "பருக்கையானை" என்னும் பதிகம்பாடி அவ்வெல்லையில் வந்து சிவிகையினிறங்கித்திருக்கைகளால் நிறைமலர்தூவிவணங்கி "சித்தந் தெளிவீர்காள், அத்த னாரூரைப் பத்தி மலர்தூவ முத்தியாகுமே" என்று பாடிக்கொண்டு, அத்தலத்தார் யாவரும் மங்கலவரிசைகள் பொலிய எதிர்வந்திறைஞ்சிச் சூழ்ந்துவர அந்நகரவாசிகளை நோக்கி, " அந்த மாயுல காதி" என்றெடுத்து "எந்தைதானெனையேன்றுகொளுங் கொலோ," எனவினுவுந்திருப்பதிகம் பாடிச்சென்று தேவாசிரயன்முன்பணிந்து, வன்மீகநாதர், தியாகேசர் திருமுன்புவந்து திருவருட்கோலந் தெரிசித்தின்புற்று, அருள்வெள்ளந்திளைத்துப் பணிந்து பதிகம்பாடி ஒருவாறு புறம்போந்து திருமடத்து வீற்றிருந்தருளிப், பலதலங்கள் தரிசித்து வந்து சிலநாளங்கமர்ந்து, அப்பரைநினைந்து தடுக்கமுடியாதபோராசைசெலுத்தச் சுவாமியை வணங்கி வெளிவந்து, " பவனமாய்ச் சோடையாய்" என்றுபாடிக்கொண்டுதிருப்புகலூர்சமீபிக்கவந்து, அப்பர், முருகநாயனாருடன் திருத்தொண்டர்சூழஎதிர்வந்துவணங்க, அவரைவணங்கிச்சென்று சுவாமிதரிசனஞ்செய்து திருமடத்துவீற்றிருந்தருளினர். அப்போது சிறுத்தொண்டர் திருநீல

ஷக்கர் முதலியர்வந்து இருவரையுந்தரிசித்துவணங்கி இன்புற்றம ர்ந்தார்கள். சிவாலயதெரிசனநிகள்செய்து ஒழிந்தநேரங்களில்; பல்லாயிரந்தொண்டர்மத்தியில் வீற்றிருந்தருளுகின்ற ஞானசம் பந்தர், சரியை கிரியாயோக ஞானத்திருத்தொண்டுகளினுண்மை களையெடுத்துவிளக்குமுகமாக, சைவசித்தாந்ததெய்வச்சிறப்புகளை தெளிய விளக்கிக்கொண்டு வீற்றிருந்தருளிப் பிறதலங்கள்தெரிசி க்கச்செல்லுங்கால் அப்பர் உடன்வருதலால் சிவிகையிலேறாமல் நடந்துவரக்கண்டு சகிக்காத அப்பர்சிவாஞ்ஞையைமறாது சிவிகை யில் எழுந்தருளுகவென்றுவேண்ட, அதனை மறுக்கமாட்டாது தேவரீர்முன்சென்றருளுக அடியேன் பின்வருவேனென்றுவேண் டிச்சென்று, அவர்சென்ற அம்பர்மாகாளத்துவந்து அவருடன் பணிந்துபாடி, அம்பர்ப்பெருந்திருக்கோயில்திருக்கடவூர்முதலிய தலங்கள் தெரிசித்துக்கொண்டு திருவீழிமிழலை செல்வாராயினர்.

அந்நகரத்தார் பிராமணர் திருத்தொண்டர் யாவரும் மங்கல வரிசைபெருக எதிர்வந்து வணங்கியுபசரிப்ப "அரையார்விரிகோ வணவாடை" என்று பாடிச்சென்று, திருக்கோபுரம்பணிந்து சிவ சந்நிதியில்வந்து தெரிசித்துச்சிவானந்தவெள்ளந்திளைத்து "சடை யார் புனலுடையார்" என்றுபாடிப்புறம்போந்து, வடக்குவீதியில் அப்பர் ஒரு திருமடத்தமர்ந்தருளத், தாம் ஒரு திருமடத்தமர்ந் தருளி, அப்பருடன் பிறதலங்களும் தெரிசித்துவந்து காலந்தோ றும் திருவீழிநாதரைத் தெரிசித்துக்கொண்டுவீற்றிருந்தருளினர். இவரைப்பிரிந்து நெடுநாளாயினவென்று வருந்திய சிவபாதவிருத யர் முதலிய பிராமணர்கள், அங்குவந்து எதிர்கொண்டுபசரிக்கின்ற வீழியந்தணர்களுடன்கோயில்சென்றுபணிந்து,திருமடத்துவந்து சம்பந்தரைவணங்கிச்சீகாழிக்கு வந்தருள்கவென்றுவேண்டவீழி யப்பரனுமதிபெற்றுத் தோணியப்பரைத் தெரிசிக்கவருவோமென் றருளினர்.காழியந்தணர் யாவர்க்கும் வீழியந்தணர்விருந்துமுதலி யனசெய்துபசரித்தார்கள். தோணியப்பர்,சம்பந்தர்கனவில்வந்து திருத்தோணித் திருக்கோல மிங்குக்காட்டுவோமென்றருள மகிழ் ந்து வீழியப்பர் சந்நிதிக்குவந்து தோணியப்பர் திருக்கோலங் காணப்பெற்றுப் பெருமகிழ்வுற்று "மைம்மருபூங்குழல்" என்று பதிகம்பாடிக்காழியந்தணர்களைநோக்கி,நாம், மேலும்பலதலங்கள்

தெரிசிக்க விரும்புதல் நோக்கி, நமது தோணியப்பர் இத் தலத்திலேயே தமது திருக்கோலந்தெரிசிப்பித்தருளினர்; நீங்கள் சீகாழிக்குச்செல்லுகவென்றருளினர். அவர்கள்மறுக்கமுடியாது வணங்கிச்சென்றனர்.

பிள்ளையார் திருவீழிமிழலையில் அப்பருடனிருக்கு நாளில், நீர்வளங்குறைந்து பஞ்சமுண்டாயது; சனங்கள் வருந்தின. இருவரும், திருத்தொண்டர்க்கும் வருத்தம்வருமோவென்றிரங்கினர். வீழிநாதர் அவ்விருவர்கனவில்தோன்றி, உலகநிலையால் வருந்துன்பம், உலகாதீத நிலையாராகிய உங்களையணுகாதாயினும், உங்களைச் சார்ந்த திருத்தொண்டர் பசிவருத்தமின்றி வாழும்படி, பஞ்சம் நீங்குமளவும் ஒவ்வொரு பொற்காசு தருகின்றோமென்றருளினர். (இதனால், இவ்விருவர் திருமேனிகளும் மானுடரூபம்போலப் பிறருக்குக் காணப்படினும் மானுடசரீரத்துக்குள்ள பசிவருத்த முதலிய ஊனங்கள் எக்காலத்துமின்றித், திருவருள்மயமேயாய் விளங்குமுண்மை தெளியலாம்.)இருவருமகிழ்ந்து கோயில்புகுந்து பணிந்து, கிழக்குப் பீடத்துள்ள பொற்காசு சம்பந்தரும், மேற்குப்பீடத்துள்ள பொற்காசு அப்பரும் எடுத்துவந்து, பாகுகர்களிடங்கொடுத்துச், சிவனடியார் யாவரும் வந்துண்குகவென்று இரண்டுகாலமும் பறைசாற்றுவித்து, யாவர்க்கும் நெய் பால் தயிர் முதலியன பெருக அன்னமளித்து வந்தார்கள். சம்பந்தர், தமது காசு வட்டங்கொடுத்து மாற்றப்படுதலாற் காலதாமசந்தெரிந்து, நமது அப்பர் கைத்தொண்டும் புரிதலால் அவர்காசு வட்டமின்றி மாற்றப்படுவது திருவருள் சம்மதமே. இனி வட்டமில்லாத காசு தந்தருளும்படி பாடுவோமென்று திருமுன்புவந்து "வாசிதீரவே, காசுநல்குவீர், மாசின்மிழலையீர் ஏசலில்லையே" என்றுபாடிநற்காசு பெற்று உரியகாலங்களில் அன்னமளித்துவந்தனர். சில காலஞ் சென்றபின் எங்கும் மழைபெய்து நீர்வளம்பெருகித் தானியாதிகள் மலிந்தன, சர்வசனங்களும் சுகமாக வாழ்ந்தனர்.

சில நாளானபின், இருவரும் பலதலங்கள் பணிந்துசென்று வேதாரணியஞ் சமீபிக்கவரும்போது, அத்தலத்தார் பிராமணர் திருத்தொண்டர் யாவரும் மங்கலம்பொலிய எதிர்வந்து வணங்கி உபசரிப்பத், திருக்கோபுரம் பணிந்து திருக்கோயில் முன்புகுந்து

திருவாயிலடைத்திருப்பது தெரிந்து, சம்பந்தர் அப்பரைநோக்கி நாம் நேர் வாயில் வழியேசென்று தெரிசிக்கவேண்டும். தேவரீர் இத்திருக்கதவு திறக்கப்பாடியருளுகவென்றனர். அதனை மறுக்க மாட்டாது அப்பர் "பண்ணினேர் மொழியாள்"என்றுபாடியருள் வேதாரணியேசுரர் அத்திருப்பாடல்களிலுள்ள அத்தியற்புத அதிமாதுரிய மெய்ப்பொருட்சுவையமுதமுண்டு அதன் வசத்தராய் நிற்றலால், அப்பதிகமுடிவில், "இரக்கமொன்றிலீர்" என்று பாடியருளியபின்பு திருக்கதவு திறப்பித்தருளினர். பிள்ளையார் அப்பரை வணங்கினர் அவரும் அதன் முன்பணிந்து மகிழ்ந்தனர். திருத்தொண்டர் அரகரமுழக்கஞ்செய்தார்கள். இருவரும்உட்புகுந்து தெரிசனானந்தப்பெருவெள்ளந்திளைத்துப் பன்முறைபணிந்து பதிகம்பாடி ஒருவாறு புறத்துவந்தார்கள். அப்பர், இத்திருக்கதவு திறந்தபடியேயிராமல் அடைத்தலும் நிகழ்ந்து வரும்படி தேவரீர் பாடியருளுகவென்று வேண்டினர். திறந்தபடியே இராமல் என்ற இதனாலும் இவர்திருவாக்கின் பெருவல்லபம்செவ்வேதெளிவாம். சம்பந்தர், "சதுரம்மறை" என்று தொடங்கும்போதே திருக்கதவு திருக்காப்பிடப்பட்டது. இருவரும்பணிந்தார்கள். தேவர் பூமழைபொழிந்தார்கள். வேதங்கள் தாமேமுழங்கின. திருத்தொண்டர் சிவநாமகோஷஞ்செய்தார்கள். தலவாசிகள்யாவரும் பன்னெடுங்காலமாகக்கிடைக்காதபெருவாழ்வுகிடைத்ததேஎன்று பெருமகிழ்வுற்று இருவர் திருவடிகளில் பணிந்து துதித்தார்கள். சம்பந்தர் பதிகம் பூர்த்திசெய்தருளினர். பின்பு இருவரும் சுவாமியை வணங்கிச்சென்று திருச்சந்நிதித் திருவீதித்திருமடங்களில் அமர்ந்தருளினர்.

அப்போது நாவரசர், சிவபிரான்பாடியருளியவேதங்கள்,அவரருள்செய்த விஷயங்களைத்தான்கூறும்; அதனைக்கடந்துவேறொன்றையுஞ் செய்யமாட்டா. சிவபிரானே தாமாய் வேறுபடாது ஒருமையுற்று நிற்கின்ற தொண்டர்கள், அரிய பெரிய திருவருட்செய்கைகளைச் சிவனைப்போலத்தாமாகவே செய்ய வல்லவர்களே. இதனால், இம்மெய்த்தொண்டர்க்கும் அவ்வேதங்கட்குமுள்ளதாரதாரம் பெரிதாகும். அத்தகைய சிவனேயாகிய சிவகுமாரரே சம்பந்தராதலால் அவரே அவ்வேதங்களின் ஆணையைக்கடந்துதிருக்

க்கதவு திறந்தருளுதற்கு உரியராயிருக்க, நாம் திறந்தருளப்பாடியது தவறுபோலும்; அரிதிற்றிறந்தது'மெளிதிலடைத்ததும்அதனாலன்றோவென நினைந்து அருநித்திரை செய்தருளினர். வேதவனேசர், அப்பர் கனவில் வாய்மூர்க்கு வருகவென்று அழைத்து, அவ்வழைக்குமுரிமைச் சிறப்பு அவர்பால் வைத்தும், அவ்வாறு தொடர்ந்து வந்த அப்பருக்கு நடுவில் ஒரு கோயில் காட்டி மறைந்து நின்று, தம்மால் அழைக்கப்பெறாது, தாயைத் தொடர்ந்து வரும் கன்றுபோல அப்பரைத்தொடர்ந்துவந்த சம்பந்தர் மூலமாகத் தெரிசிப்பித்தருளும் உரிமைச்சிறப்பு அவர்பால் வைத்தும், அரிதிற்றிறந்ததனாலும் எளிதில் அடைத்ததனாலுமுள்ள திருவுளக் கருத்து, வேற்றுமையில்லை இருவரும் ஒத்த நிலையினரே என்னுமுண்மைவிளக்கி மறைந்தருளினர். உடனே அப்பர் முன்சென்றருளச் சம்பந்தர் பின்சென்று அவருடன் திருவாய்மூர் தெரிசித்து மீண்டுவந்து வேதாரணியத்தில் வீற்றிருந்தருளினர்.

தொன்றுதொட்டுப் பரம்பரையாக வழுவாது வைதிகசைவ மார்க்கமே எங்கும் நிறைந்து விளங்கும் பாண்டிநாட்டிலே, அச்சைவ சீலங்கள் இடையில் தவறினமையால், சமயம் பார்த்துவஞ்சித்துநின்று கொல்லாமை வெளிக்காட்டி வசப்படுத்துங்கபடிகளாகிய சமணர்கள், மெய்யறிவில்லாத சிலஏழைச்சனங்களைவெகுவெகுவாகத் தமது துர்ப்போதனையால் சமணராக்கி வருதலால், அப்பொய்ச்சமயம் பரந்து நமது மெய்ச்சமயநிலை கலக்கமடைந்தது. அச்சமயம் பாண்டியராசனும் முன்புரிந்த தீவினைவசத்தால் அத்துர்ப்போதனையை நம்பி அதுவே புண்ணியமார்க்கமென்று கைப்பற்றி நின்றனன். அந்நாடெங்கும் சமண் சமயமே ஏறின. வைதிக சைவசீலங்கள் மாறின. இப்பெருங்கேடு முழுது நீக்கிச் சைவநிலை தளராது நிறுத்தியருளுதற்கென்றே, உலகெலாம்புரிந்த அரும்பெருந்தவமே திருவுருவமாகச் சோழராச புத்திரியாராய் அவதரித்தருளிப், பாண்டியராசபத்தினியாராய்வந்தருளியமங்கையர்க்கரசியாரும், அவர்க்கு ஸ்ரீதனமாக சோழராசாவினாற்கொடுக்கப்பெற்றுவந்து பாண்டியமந்திரியாராயிருந்து, சைவநிலைத்துணையாய் அரசியார்க்குடனுதவி செய்துவருகின்ற குலச்சிறைநாயனாரும், சமணிருள்பரந்து சைவஒளிமறைந்ததே அந்தோ இவ்வொளி

பெருகுங்காலங்கிட்டுமோவென்று ஸ்ரீமீனாக்ஷிசுந்தரேசரைப்பிரார்த்தித்து வந்தார்கள். அப்போது ஞானசம்பந்தர் அற்புதமகிமையும் அவர் வேதாரணியத்திலிருப்பதும் தெரிந்து, அவரை வணங்கும் பேராசையினால் சிலரையேவ, அவர்கள் வேதாரணியத்துவந்து சம்பந்தர் திருவடிகளில் வணங்கி அஞ்சலித்துநின்று, பாண்டிநாட்டில் சைவநிலைகரந்து சமணிலைபரந்து நிற்றலும், மிகவருந்தி அரசியாரும் மந்திரியாரும் திருமுன் விண்ணப்பிக்கும்படி ஏவியதும் தெரிவித்துமேலும்வணங்கினார்கள். சம்பந்தர், அப்பருடன்கோயிலிற் பணிந்துவந்து கோபுரத்துள்ளிருந்து, பாண்டிநாட்டில்சைவமெலிந்து, சமணிருள் மலிந்து நிற்குநிலையும், அதனை மாற்றியருளும்படி இருவர் வேண்டுதலையும் அப்பருக்குத் தெரிவித்துச், சென்றருளக் கருதுதலை நோக்கிய அப்பர், அப்பிள்ளையிடத்து வைத்த அன்பின்மேலீட்டினால், அவரைஅச்சமணக்கொடுங்காட்டுட்போகவிட மனம்சகியாது, வற்புறுத்துங்கருத்துவிளங்க ஏகவசனத்தால் பிள்ளாய் என்றழைத்து, அச்சமணர் வஞ்சனைக்கு அளவில்லை, தற்காலகிரகநிலைகளும்வலியில்லை அங்குச்செல்லுதல் கூடாதென்று தடுத்தனர். பிள்ளையார் அவரைநோக்கிப் பரமசிவன் நமதுசிந்தையிலிருத்தலால் யாவும் நன்மையேயாம். தீங்குவாராதெனவிளக்கும் "வேயுறுதோளிபங்கன்" என்ற திருப்பதிகம்பாடியருளினர்.

அப்பர் மேலுந் தடுக்கமாட்டாது உடன்செல்ல எழுந்தனர். சம்பந்தர் வணங்கித் தேவரீர் இந்நாட்டிலிருந்தருளுக; அடியேன் போய்வருவேனென வேண்டிக்கொண்டு மேலும் வேதவநேசரை வணங்கி அருள்பெற்றுவந்து, பின்னரும் அப்பரைவணங்கி அவரநுமதிபெற்று முத்துச்சிவிகைமீது எழுந்தருளி, ரிஷபத்துவஜர் திருவடிசிரமேற்கொண்டு,பஞ்சாக்ஷரம்ஓதித்திருவெண்ணீற்றொளி விளங்குஞ் சிவனுருவந்தியானித்தனர். இதனால், இவர், மதுராபுரியில் இப்போது சமணிருளில்அகப்பட்டு மலினமுற்றிருக்கும் ரிஷபக்கொடியாகிய சைவஜெயத்தம்பத்தை நிலைநிறுத்தி, பஞ்சாக்ஷரசிவசந்மார்க்கத்தைவிளக்கி,திருவெண்ணீற்றொளியை எங்கும் பரப்புதற்கிணங்கவே, இவ்வாறு சிவிகையிலிருந்து முக்கரணங்களாலும் சிவவழிபாடுசெய்து நம்மனோர்க்குக் காட்டியருளினர். திருத்தொண்டர்கள் திருநாமப்பெருமுழக்கஞ்செய்தார்கள்.இதனை,

"திருநாவுக் கரசருமங் கிருந்தா ரிப்பாற்
  றிருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின்
பெருநாமச் சிவிகையின்மீ தேறிப் பெற்ற
  முயர்த்தவர்தாள் சென்னியின்மேற் பேணு முள்ளத்
தொருநாமத் தஞ்செழுத்து மோதி வெண்ணீற்
  றொளிவிளங்குந் திருமேனி தொழுதார் நெஞ்சில்
வருநாமத் தன்புருகுங் கடலா மென்ன
  மாதவரார்ப் பொலிவைய நிறைந்த தன்றே."

என்று சேக்கிழார்பெருமான் குறிப்பித்தருளியதனாற் காண்க. பின்பு வாத்தியங்கள் கோஷிக்க வேதங்கள்முழங்க அகத்தியான் பள்ளிமுதலிய தலங்கள்பணிந்துசோழநாடுகடந்து, பாண்டிநாட்டு வந்து கொடுங்குன்றம்(பிரான்மலை)பணிந்துபாடி மதுராபுரிநோக்கி மிகுந்த ஆவலுடன்வருகின்றார். அப்போது, எட்டுமலைகளில் வசிக்கின்ற (அசு) சமண்குருமார்களும், அவரைச்சார்ந்த பல்லாயிரஞ் சமணர்களும், துர்நிமித்தங்களும் துச்சொப்பனங்களுங்கண்டு, அரசருக்குத்தெரிவித்து தீங்குவருவதுதிடமெனக்கருதிஊணுறக்கமின்றிக் கவலையுற்று வருந்தினர். மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் பலநன்னிமித்தங்கள்கண்டு சமணிருள் தொலைந்து சைவஒளிபரந்து விளங்குவது திடமெனக்கருதிப் பெருமகிழ்வுற்றார்கள். அச்சமயம் சிலர்வந்து ஞானசம்பந்தர்வருகின்ற திருவெழுச்சிவிசேடந்தெரிவிப்ப ஆனந்தபரவசர்களாய் அளவிலாத் திரவியங்கள் அள்ளிப்பொழிந்தனர். மங்கையர்க்கரசியார் மந்திரியாரை, நமது பெருவாழ்வின் நல்வரவெதிர்கொளச்செல்லுக என்றருள, அவர்வணங்கிச்சென்றனர். அரசியாருந் திருவாலவாயிற் சென்று, சித்திவிநாயகர் மீனாக்ஷிசுந்தரேசர் திருவடிகளைவணங்கிப் புறத்துவந்து ஞானசம்பந்தரை, எதிர்பார்த்து நின்றனர்.

சம்பந்தர் அதிதூரத்துவரும்போதே ஊரின்புறத்துவந்த மந்திரியார், பற்பலவாத்தியங்கள் முழங்கவும், பிராமணர்கள் ஒவ்வொருவேதங்களையும் முறையாக எடுத்தோதிப் பந்தி பந்தியாகச் சூழவும், திருத்தொண்டர்கள், சமண்சமயமுதலிய பாவப்படைகளை ஒழிக்கவருகின்ற சிவபுண்ணியப் படையெழுச்சியேயாய்ச் சிவநாமகோஷஞ்செய்துவரவும், பலதிருநாமங்கள்கூறும் முத்துச்

சின்னங்கள் அப்போது அந்நியசமயங்களாகிய மதயானைகளையழித்துச் சைவசமயஸ்தாபனஞ்செய்கின்ற வெற்றிச்சிங்கமே ஞானசம்பந்தரென்பது விளங்கப் பரசமய கோளரிவருகின்றார் பரசமய கோளரிவருகின்றாரென்றேஊதிவரவும், அதுகேட்டசமணக்குழாங்கள் திடுக்கிட்டொடுங்கவும், இன்னும்பற்பல அற்புதமகிமைகள் பொலியவும், அருள்ஞானரூபமுத்துச்சிவிகைமீதுஎழுந்தருளிவருகின்ற சிறப்பெலாம் நேரேகண்டும், திருச்சின்னங்களிலெழுகின்ற திருநாமத்திருந்தொலிகள் கேட்டும் மகிழ்ந்து, வணங்கி எழுந்து சென்று, திருத்தொண்டர் திருமுன்பணிந்து விரைந்து நெருங்கி வந்து நிலத்தில் வணங்கியபடியே ஞானசம்பந்தபரவசராய்க்கிடந்தார். அதுகண்டதொண்டர்கள் சம்பந்தரைவணங்கித்தெரிவிப்ப, உடனே சிவிகைநின்றிறங்கியருளித் தூக்கிஎடுப்ப, அவ்வருமைத் திருக்கரங்கள்தீண்டுதற்கு அனந்தகோடிசிவபுண்ணியங்கள்செய்த மந்திரியார், அவர்திருமுகம்பொழிகின்ற திருவருள்வெள்ளத்தும், தமதுகண்கள்பொழிகின்ற அன்புநீர்வெள்ளத்தும் மூழ்கிச், சிரமேற் கைகுவித்துநின்றனர்.

சம்பந்தர் அவரைநோக்கி, "திருந்திய சிந்தையீர்" மெய்ச் சமையம் சைவமேஎன்பதை நாளடைவிலே நூல்முகமாக லேசுலேசாகப் பிறர்போதித்துத் திருத்தவேண்டாது, இயல்பாகவே திருத்தமடைந்து, அது அணுமாத்திரமுங்குறைவின்றிநிறைந்து அந்நிய மதவாதிகள் எத்தனைபேர்வந்து வாதித்தாலும், அசைந்து தளராதுகிளர்தலே செய்யுந்திடசிந்தையராகியபேரன்பரே, "செம்பியர்பெருமான் குலமகளார்க்கும்" பெற்ற தாய்தந்தையர் மாத்திரமோ அக்குலமெலாம் உலகெலாமுய்ந்தீடேற வந்தவதரித்த, சோழராஜராஜகுலபுத்திரியாராகிய மங்கையர்க்கரசியார்க்கும்,அவருக்கு அணுக்கராய் உடனின்றுதவுகின்ற உமக்கும், திருவாலவாயுடையார்திருவருள்அனவரதம் பெருகிநின்றுபகரித்துவருகின்ற பெருநன்மைவாவிதே (உண்மையே)என்றருளினர். இதுக்ஷேமம் விசாரித்தருளிய சைவசாம்பிரதாயத்தகுதி முறையாமென்க. அத் திருவாக்குக் கேட்டளவிலே அளவிலானந்தம்பெருக மேலும்வணங்கி எழுந்து சிரமேற் கைகுவித்துநின்று, அவரது திருவருள் எக்காலத்தும் உபகரித்துநிற்கும் நிலைமையை விண்ணப்பிக்கின்றார்,

அடியேங்கள் செய்த அளவிலா அரும்பெருந்தவமே உருவா யவதரித்தருளிய எம்பெருமானே, தேவரீர் இங்கு வந்தருளிய பெருங்கருணையினால்திவ்வியதெரிசனப்பெரும்பேறுஇந்நிகழ்கால த்திற்பெற்றோம். இதுவே,சென்றகாலத்தில்(பூர்வசென்மங்களில்) அடியேங்கள் அருந்தவத்திறத்தினோமென்பதும், இனிஎதிர்காலத் திலும் தேவரீர் திருவருளுக்கே உரியோமென்பதும் விளக்குகின் றது. இதனால் அடியேங்கள் முற்காலம் இக்காலம் பிற்காலம் எக் காலத்தும் தேவரீர் திருவருட்பெருவாழ்வேயுடையோம். இது மாத்திரமோ, நன்மை சிறிதுமில்லாத சமணிருளில்முழுகிக்கிடந்த இந்நாடும், அவ்வசப்பட்டநற்றமிழ்வேந்தனும், அவ்விருளினின்று நீங்கி, எக்காலத்தும் இயற்கைவெற்றியுடைய திருநீற்றொளியில் விளங்கியுய்ந்தீடேறும் பெருநன்மையும் இப்பொழுதேபெற்றனம். அரசியார் தேவரீர் இங்குவந்தருள்வதுதெரிந்து நமதுபெருவாழ்வு எழுந்தருளுகின்றது; எதிர்சென்று திருவடிபணிவீரென்று அடி யேனை ஏவியருளினர்என்று விண்ணப்பித்து, மேலும்பணிந்தெ ழுந்து அஞ்சலித்து நின்றனர். இதனை,

செம்பியர் பெருமான் குலமக ளார்க்குந் திருந்திய சிந்தையீ ருமக்கும்
நம்பெரு மான்றன் றிருவருள் பெருகு நன்மைதான் வாலிதே யென்ன
வம்பல ரலங்கன் மந்திரி யாரு மண்மிசைத் தாழ்ந்தடி வணங்கித்
தம்பெருந் தவத்தின் பயனனை யார்க்குத் தன்மையா நிலையுரைக் கின்றார்.

சென்றகா லத்தின் பழுதிலாத் திறனு மினியெதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந் தருளப் பெற்றபே றிதனா லெற்றைக்குந் திருவரு ளுடையோம்
நன்றியி னெறியி லழுந்திய நாடும் நற்றமிழ் வேந்தனு முய்ந்து
வென்றிகொ டிருநீற் றொளியினில் விளங்கும் மேன்மையும் படைத்தன மென்பார்.

இங்கெழுந் தருளும் பெருமைகேட் டருளி யெய்துதற் கரியபே றெய்தி
மங்கையர்க் கரசி யாருநம் முடைய வாழ்வெழுந் தருளிய தென்றே
அங்குநீ ரெதிர்சென் றடிபணி வீரென் றருள்செய்தா ரெனத்தொழு தார்வம்
பொங்கிய களிப்பான் மீளவும் பணிந்து போற்றினர் புரவல னமைச்சர்,

என்று பெரியபுராணம் விளக்குகின்றது. அவ்வாறு பணிந்து நிற் கும் மந்திரியார்க்கு அதிமதுர அமுதமொழிகள் புகன்று திருவ ருள் செய்யும்போது, மதுராபுரி தோன்றக்கண்டருளி, இந்நகரில்

நம்பெருமான் வீற்றிருந்தருளுகின்ற திருவாலவாயென்னுந்திருக் கோயில்எவ்விடத்துள்ளதென்றுகேட்டருள, அடியார்கள்வணங்கி இதோ எதிரே பூஞ்சோலைசூழ, விண்மேல் விளங்கும் விடைக் கொடிகளுடன்கூடிய திருமதில் கோபுரங்கள் தோன்றுகின்றன வன்றோ! இக்கோயிலேதிருவாலவாயென்றுவிண்ணப்பித்தார்கள்.

உடனே சம்பந்தர், திருக்கரங்கள் சிரமேற்குவிய நிலமுறப் பலமுறை பணிந்தெழுந்து, "மங்கையர்க்கரசி" என்றெடுத்து, அப்பெருமாட்டியார் தினந்தோறும் வழிபாடுசெய்ய, அங்கயற் கண்ணியுடன் சொக்கநாதசுவாமி வீற்றிருந்தருளுகின்ற ஆலவா யாவதுமிதுவே என்றும் அடுத்ததிருப்பாடலில்,

வெற்றவே யடியா ரடிமிசை வீழும் விருப்பினன் வெள்ளைநீ றணியுங்
கொற்றவன் றனக்கு மந்திரி யாய குலச்சிறை குலாவிநின் றேத்தும்
ஒற்றைவெள் விடையோ னும்பரார் தலைவ னுலகினி லியற்கையை யொழிந்
டற்றவர்க் கற்ற சிவனுறை கின்ற வாலவா யாவது மிதுவே. [திட்

என்றும், இப்படியே பின்வரும் திருப்பாடல்களிலும் முன்பு மங் கையர்க்கரசியார் பின்பு குலச்சிறைநாயனாரிருவருடைய அரும் பெருஞ்சைவத்திருத்தொண்டின் அசையாநிலைமைவிளக்கிக், குலச் சிறைநாயனார் அன்புபெருக வணங்கியபடியே நிலத்திற்கிடந்த அருஞ்செயல்கண்டபோதே அப்பேரன்பைவியந்துமகிழ்ந்த திரு வுளக்கருத்துவெளியாக, "வெற்றவே அடியார் அடிமிசை வீழும் விருப்பினன்" என்றும், அதனிலும் "வெற்றவே" என்ற அருள் மொழியிற் பலபொருள்விரியவைத்தும், இனிச்சமணிருள் முழு துந்தொலைத்து, அவ்விருளில்முழுகிக்கிடக்கின்ற அரசனையும் திரு வெண்ணீறணிவித்துச், சைவஒளிபரப்பிச் செயல்தம்பாநாட்டுவது திண்ணமென்பதை முன்னரே யாவரும் அறியும்படி, தற்சமயம் வெண்ணீறு கனவினுங்காணாதஅரசனை "வெள்ளைநீறணியுங்கொற் றவன் என்றும் அதனால் பாண்டியர்கள் எப்போதும் தொன்று தொட்ட சைவபரம்பரையினரே என்பது விளக்கி அத்திருப்பதி கம்பாடிக்கொண்டு சென்று, கோபுரம்பணிந்து திருவாலவாயுட் புகுந்து வலம்வந்துவணங்கித் திருமுன்சென்று, திருவருள்மய சிவமூலலிங்க தெரிசனானந்தப் பெருவெள்ளந் திளைத்துத் திருக்

கண்கள்நீர்பொழியத் திருமேனிபுளகிப்பத் திருவாக்கினால் "நீல மாமிடற்—றால வாயிலான்—பால தாயினார்—ஞால மாள்வரே." "ஆடிக் ளாலவாய்ப்—படிகொள் சம்பந்தன்—முடிவி லின்றமிழ்—செடிக ணீக்குமே." என்னுந் திருப்பதிகம்பாடிநின்று ஒருவாறாக வெளிவந்தருளுகின்றார்.

முன்னரே அவரது நல்வரவேற்றுவணங்குதற்கு அங்குவந்து நின்ற மங்கையர்க்கரசியார் அவரை விரைந்துதரிசிக்கும் பேராசையினராயிருந்தும் அவர்கோயிலுள்வருஞ்சமயம் மிகுந்தஆவலுடன் மூலலிங்கதெரிசனமே நோக்கி விரைந்துசெல்லுதல்கண்டு, இச்சமயம் எதிர்வணங்கித் தாமதிப்பிக்கப்படாதென்று நணுகிநோக்குந் தனியில் பேரன்பின் திடத்தால், ஒருபக்கத்து ஒதுங்கிநின்றவர், இருகரங்களும் சிரமேற்குவியச் சம்பந்தரை வணங்குதற்கு எதிர்வரும்போது, மந்திரியார்வணங்கி எம்பெருமானே, இதோ வருகின்றவரே மங்கையர்க்கரசியம்மையாரென்று விண்ணப்பிக்க, அரசியாரும் விரைந்துவந்து திருவடியில்வணங்க, உடனே பாலறுவாயர் அம்மே எழுகவென்று திருக்கரங்களால் தூக்கியெடுத்து அருள்புரிந்தனர். அரசியார் தமதுகருத்துநிறைவேறியதென்று மகிழ்ந்து கண்ணீர்சொரிய வாய்குழறி அடியேனும் பதியும் உய்ந்தனம். இதற்கு எப்பெருந்தவஞ்செய்தனமென்று அன்புரிமை காட்டினர். பிள்ளையார், எங்குஞ்செறிந்த சமணசமயத்திருட்டுக்குள்ளே, சைவசமயத்தொளிவிளக்கி வாழுகின்ற உம்மைக்காணுதற்கே இங்குவந்தனமென்றருளினர். அரசியார் பிள்ளையாரிடத்து வைத்த அன்பேசொரூபாராய்நிற்றலால், சிவாலயங்களில் சிவமூர்த்திகளையன்றிப் பிறரைவணங்கப்படாதென்றும், பெண்கள்சிரசின் மேற் கைகளைநீட்டிக்கும்பிடப்படாதென்றும் கூறும்விதி தோன்றாதபரவசராய்ச்சம்பந்தர் பாதங்களில் பன்முறைபணிந்துசிரமேற் கைகூப்பிநின்றனர். திருவாலவாய்த்திருக்கோயில் திருத்தொண்டர் யாவரும் கிட்டாதபெருவாழ்வுகிட்டியதென்று பெருமகிழ்வுற்றுவந்து திருவடிகளில்வணங்க, அவர்க்கெல்லாம் பிள்ளையார் பேரருள்புரிந்து வெளிவந்தருளக், குலச்சிறையார் இத்திருமடாலயத்தில் வீற்றிருந்தருளுக என்றுவேண்ட, அங்குச்சென்று திவ்வியாசனத்தமர்ந்தருளினர், குலச்சிறையார் அரசியார் ஆஞ்ஞை

யின்படி யாவர்க்கும் விருந்துமுதலியஉபசாரங்கள் காலந்தோறும் அதிவிசேடவரிசையுடன் நடத்திவருவாராயினர்.

அந்நகரெங்கும் திருத்தொண்டர்கள் முழக்குகின்ற சிவநாம கோஷமுதலிய ஆரவாரம் பெருகுதல் கண்ட சமணர்கள் அன்று இராத்திரி ஓரிடத்திற்கூடித், திருமடத்தில் திருத்தொண்டர்கள் தேவாரப்பதிகங்கள் பண்முறையாகப்பாடுதலுங்கேட்டுமிகவருந்தி அரசனிடம்வர, அவன் அவர்கள் முகவாட்டங்கண்டு பதைத்து, உங்களுக்கு என்னதுன்பம்வந்ததென்று பரிந்துகேட்ப, யாவரையும்வென்று பகையின்றிவாழும் அரசர்பெருமானே இதுவரை நமக்கு அடுக்காத ஒரு பெருந்துன்பம் வந்தது. அது, சொல்லத்தகாததென்றார்கள். ஆயினும் தெரியக்கூறுங்களென்றான், உமது மதுரையில் சைவவேதியர்கள்பரந்துவந்தனர்; காணும்படிநேர்ந்துவிட்டது; அதனால் எல்லாருங்கண்டு முட்டுப்பட்டோம், அத்தோஷம் நீங்கும்படி ஸ்நானம் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளவேண்டுமென்றார்கள். அரசன் அந்தோ இக்கொடுஞ் சொல்லைக்கேட்டதனால் நானுங்கேட்டு முட்டுப்பட்டுவிட்டேன். நமது சமண்சமயத்தைப் பரிபாலித்துவந்த அரசாக்ஷி மிகநன்றென்றுகூறிமிகவருந்தி அச்சைவர்கள் வந்தகாரணமென்னென்றுகேட்ப, சீகாழியில் சிவனிடத்தில் ஞானம்பெற்றவனென்றொருபாலன், தன் கூட்டத்துடன் எங்களை வாதில்வெல்ல வந்திருக்கின்றானென்றுகூற, அரசன் மிகக்கோபித்து இதற்கு யாதுசெய்வோமென்றான். பாதகங்களே செய்யும் பாவிகள், அப்பாலனிருக்குமடத்தில் நெருப்புப்பற்றும்படி மந்திரித்தால் ஓடிப்போவானென்றார்கள். அரசன் அப்படியே சீக்கிரஞ்செய்யுங்களென்றுஅனுப்பிவிட்டுச் சயனத்திற்புகுந்தான். அச்சமயம் அரசியார் அங்குவந்தனர். ஒன்றும் பேசாது கவலையுற்றிருந்தான்.

அரசியார், நாயகரே நீர் கவலையுற்றிருப்பதென்னென்றனர். அரசன் ஒரு பாலன் நமது குருமாரை வாதில்வெல்ல வந்திருக்கின்றான். இதுதான் கவலையென்றான். அரசியார் என்பிராணநாயகரே இருபக்ஷத்தாரும் அவரவர்தெய்வத்தன்மைகளைப்பற்றிவாதித்து வென்றவர் யாரோ அவர் பக்ஷந்தானே தெய்வபலமுள்ளதாகும். அதனைச்சார்ந்து நிற்பதுதானேநமக்கும்உறுதியாகும்கவலைப்

படுவானேன். நன்குயோசித்துக் கருத்துக்கிசைந்ததைச்செய்க வென்றுகூறிவிட்டு, சம்பந்தர் சமணிருள்நீக்கிச் சைவஒளிபரப்பிப் பெருவாழ்வு தந்ததாக மகிழ்வுற்றுத்தமது திருமாளிகையிற்சென்றருளினர். அப்போது குலச்சிறையார் அங்குவந்தனர். தாம் அரசர் முன்சென்றதும் அவர் நிலைமையும் அந்நிலைமைக்கிணங்கச் சமயோசிதமாகக் கூறியதுந்தெரிவித்து மகிழ்ந்தனர். குலச்சிறையார் சிரமேற் கைகுவித்துநின்று, நமது வேண்டுகோளுக்கிரங்கிச் சீகாழிப் பெருவாழ்வு இங்குவந்தருளி, நமக்குப் பெருமகிழ்வைத்தந்ததுண்மையே. சமணர்களோ பாதகங்களுக்கஞ்சாத பாவிகளாதலால், இனி அவர்கள்செய்யும் வஞ்சனையாதோதெரிந்திலதென்று கூறினர். அதனை உற்றுநோக்கிய அரசியார் அப்பாதகர்களால் ஏதும் அடாத காரியம் நிகழுமேல் நாம் உயிர் துறப்பதேதிண்ணமென்று கூறியருளினர். சமணர்கள் சம்பந்தர் திருமடத்தில் அக்கினிபற்றும்படி மந்திரஞ்செபித்தனர். மெய்யன்புடன் சிவபஞ்சாக்ஷரசெபதியானமுறைசெய்வோர் பார்க்குந்திசையினும்வேறெம் மந்திரங்களும் பலியாதென்றால், அதிபாதகராகியசமணர்செபித்த மந்திரம் சிவகுமாரர் வீற்றிருந்தருளுகின்ற திருமடத்திற்செல்லுமோ பலியாதொழிந்தது, அதுகண்ட சமணர்கள், இதனை அரசன் தெரிந்தால், நம்மிடம்வைத்த நன்குமதிப்பும் ஒழிந்து நமது விருத்தியும் தொலைந்துவிடுமேயென்று பயந்து, அன்று ராத்திரி அத்திருமடத்தின் புறத்துவந்து பிறரறியாதபடி எல்லாரும் நித்திரை செய்யுஞ்சமயம் நெருப்பைக்கொளுத்தினார்கள். அதுசிறிது வெளிப்படலும் அடியார்கள் அதனை நீக்கிவிட்டுச், சம்பந்தர் திருவடிகளில் வணங்கித்தெரிவிப்ப, அது சமணர்செய்ததாயினும்அரசனாணையால் வந்ததாதலால்,

செய்ய னேதிரு வாலவாய் மேவிய
அப்ப னேயஞ்ச லென்றருள் செய்யெனைப்
பொய்ய ராமம ணர்கொளு வுஞ்சுடர்
பைய வேசென்று பாண்டியற் காகவே. என்றருளினர்.

"பையவே" என்றுவிட்டால், அந்நெருப்பு அதிகுரூரமா விரைந்துசென்று, அரசனைவிடாதுபற்றிஉயிரையும்நீக்குமாதலால் ஊபர்தி மாத்திரஞ்செய்து நீங்கட்டுமெனத் திருவுளங் கொண்டே

"பையவே" என்றுபாடியருளினர். அப்பாண்டியராஜ பத்தினியார் ஈாகிய மங்கையர்க்கரசியார், தமது மகிமை கேட்டளவிலே திரு முலைப்பால் சுரந்தொழுக அன்பே சொரூபராய்நின்று அத்தியந்த அபிமானத்தராயாராதலாலும் அவரது திருமங்கிலியம் நித்திய மங் களநிலையினதாய் பிரகாசித்து நீண்டுநிற்பதாதலால், அதனை இடை யிற்சலியாது நிறுத்திப்பாதுகாக்கவேண்டியது குமாரராகியதமது கடமையாதலாலும், சைவநிலையிலுறைத்து நிற்குந்திடபக்த சிவ ஞானவீரராகிய குலச்சிறையார், சமணிருள் நீக்கி அரசரைத் திரு நீறணிவித்துச் சைவவொளி விளக்கியருளுகவென்று வேண்டிக் கொண்டபோன்பினும், இவைகளைநோக்குமிடத்து அரசனுக்கு யாதொரு கஷ்டமும் நேராதபடி செய்யலாமென்றால், அவனிடத் தில் எவற்றினும் மேலாய் விளங்கும் சைவமெய்ச் சமயத்தினின் றும் நீங்கிப் பொய்ச்சமயத்திற்புகுந்து அதனையேவிருத்திசெய்து வந்த பாதகமாத்திரமோ, திருமடத்தில் தீக்கொளுத்தச் செய்த பாதகமுஞ்சேர்தலாலும், கஷ்டத்தை அனுபவித்தாற்றான் அப் பாதகநீங்கிச் சுத்தனுவானுதலாலும், சுத்தனுகிமீண்டு முன்போற் சைவநெறிக்குவந்து சிவானந்தப்பெருவாழ்வுறுதற்குரிய நல்லூழ் அவனுக்கிருத்தலாலும், சைவசமயத்திற்புகுதற்கு விபூதியும் மந் திரோபதேசமும் பெறவேண்டியதே விதியாதலால் அதற்கிணங்க அவன், சுரம் நீங்கும்படி தமது திருக்கரந்தீண்டி விபூதிபூசப்பெறு தலும் திருநீற்றுப்பதிகமந்திரோபதேசம் பெறுதலுமுடையனுத லாலும், அவ்வாறு திருவுளங்கொண்டு "தீப்பிணியைப் பையவே செல்க" என்று தேற்றேகாரமும் விளங்கத் திருவாய்மலர்ந்தருளி னர். இவையெல்லாம், திருக்களிற்றுப்படியார்,

சுரந்த திருமுலைக்கே துய்யசிவ ஞானஞ்
சுரந்துண்டார் பிள்ளையெனச் சொல்லச்—சுரந்த
தனமுடையாள் தென்பாண்டி மாதேவி தாழ்ந்த
மனமுடையா ளன்பிருந்த வாறு. என்றும், பெரியபுராணம்,

பாண்டிமா தேவியார் தமது பொற்பிற்
பயிலுநெடு மங்கலநாண் பாது காத்தும்
ஆண்டகையார் குலச்சிறையா ரன்பி னாலும்
அரசன்பா லபாரத முறுத லாலும்

மீண்டுசிவ நெறியடையும் விதியி னாலும்
வெண்ணீறு வெப்பகலப் புகலி வேந்தர்
தீண்டியிடப் பேறுடைய னாத லாலுந்
தீப்பிணியைப் பையவே செல்க வென்றார். என்றும்

விளக்குதலாற்காணலாம்.

அவ்வாறுபாடியருளியவுடனே அந்நெருப்புச்சுரநோயாய் அரசரை வருத்தியது. அரசியாரும் மந்திரியாரும், சமணர்கள்செய்த பாதகங்கேள்வியுற்று மனம்பதைத்துத், தீங்கின்மைதெரிந்து ஒருவாறுதேறி இப்பெரும்பாதகம்யாதாய்முடியுமோவென்று வருந்திநிற்குஞ்சமயம், அரசர் சுரத்தால் வருந்துவதுதெரிந்து அங்குவந்தார்கள், பற்பல வைத்தியர்கள்செய்யும் மணிமந்திரமருந்துகளால் நீங்காதுஅதிகரிப்ப அரசர் மூர்ச்சித்தனர். சமணர்கள் நாம் மடத்தில் வைத்த நெருப்புத்தான் இப்படி வந்ததோவென்று பயந்து அதனை வெளிக்காட்டாமல் எல்லாரும் தமது சமய மந்திரங்கள் கூறி மயிற்பீலிகளால் தடவினர். பீலிகள் வெந்து சாம்பராயின. அருகனே காவாய் என்று கமண்டலத்துள்ளமந்திரநீரைத்தெளித்தனர். அதனால் நெய்சொரிந்த நெருப்புப்போல மேலும் வருத்துதலால், சகிக்கமுடியாது, சமணரை ஒருவரும் இங்கிராது போய்விடுங்களென்று கடிந்துகூறி அறிவிழந்தனர். பக்கத்துள்ளாரும் அக்கினிச்சுவாலை வெதுப்பலால் சகிக்கமுடியாது புறத்தோடினார்கள். அரசியார்இப்பாதகர்கள் திருமடத்திற்செய்ததீமைதான் இப்படிவந்ததோவென்றனர். மந்திரியார் அதுசந்தேகமில்லைஅவர்கள் நீக்கப்புகுந்தால் அதிகப்படுவதேயாமென்றனர்.

பின் இருவரும் அரசரை வணங்கி எம்பெருமானே ஞானசம்பந்தர் திருமடத்திற்செய்த தீவினைதான் சுரநோயாய் வந்தது. இதற்குத்தீர்வு அவர்திருவருளேயாம். அத்திருவருள் இந்நோயைமாத்திரமா? தொடர்ந்துவரும் பிறவிநோயையும்நீக்கிவிடும் இதுசத்தியமென்றார்கள். ஞானசம்பந்தரென்ற திருமந்திரம்செவியிற்புகுந்தளவிலே, உபாதிசிறிதுநீங்கி அறிவுவரப்பெற்றுசமணரால்உபாதி அதிகரித்தலுந்தெரிந்த அரசர், நீங்கள்கூறுகின்ற ஞானசம்பந்தர் இங்குவந்து அவர்அருளால் இந்நோய்நீங்குமானால் அவ்வுண்மை அறிவேன், இந்நோய் முழுதும்நீக்கி வென்றவர் பக்ஷமே சேர்

வேன், முடியுமானால் அழையுங்கள் என்றார். அதுகேட்டவுடனே இருவரும் மிகவிரைந்து திருமடத்திற்சென்று திருத்தொண்டர் முகமாகத் திருவருளநுமதிபெற்றுத் திருமுன்பு வந்து,

ஞானத்தின் றிருவுருவை நான்மறையின் றனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

திருவருட்டிருவிளங்கோலந் தெரிசிக்கப்பெற்றுப் பெருமகிழ்வுற் றும்திருமடத்தில்தீயர்செய்ததீவினைநினைந்துதிருக்கரங்கள்சிரமேற் குவியத், திருக்கண்ணீரில் திருமேனிமுழுகத், திருவுளங்கரைந் துருகித் திருவடியிற்பணிந்து திகைத்துக்கிடந்தனர்.

சம்பந்தர் அருமைத்திருக்கரங்களால் தூக்கிஎடுத்து அருள் மொழிபுகன்று தேற்றவும் தெளிவுறாது வருந்துவதுகண்டு, எக் காலத்தும் நழுவாதசைவப்பெருந்திருவினராய மெய்யன்பர்களே யாதேனுந் தீங்குளதோவென்றருள, எம்பெருமானே தீயர்கள் செய்த தீவினைதெரிந்து சிந்தைநொந்து திகைப்புற்றோம். அது, தேவரீர் திருவருண்மேனியின்பக்கத்துஞ்செல்லாதென்று தெளி ந்து அச்சம் நீங்கினோம். அந்நெருப்பு அரசர் மேனிமுழுதும்பற்றி வருத்துகின்றது. தேவரீர் அந்நோய்நீக்கி அமணரைவென்றருளி னால், அரசருயிரும் அடியேங்களுயிரும் உய்யுமென விண்ணப்பித் தார்கள். சம்பந்தர் அன்பர்களே அமணர் செயலுமாற்றி அரச ரையும் திருநீறணிவித்துச் சைவசந்மார்க்கத்து உத்தமசத்திநிபாத நிலையராக்குவோம், அஞ்சாதீர்களென அபயங்கொடுத்தருளினர். இருவரும் மேலும்வணங்கி எம்பெருமானே, தேவரீர் அமணிருள் நீக்கி அடியேங்களை ஆட்கொண்டருளுதற் கென்றே இந்நாடு செய்த பெருந்தவத்தால்இங்குவிஜயஞ்செய்து வீற்றிருந்தருளும் போது, அடியேங்களுக்கு யாதுகுறையுளது சகல பாக்கியமும் பெற்றனமென்று விண்ணப்பித்தார்கள்.

சம்பந்தர், திருநீறணியாத முகத்தைப்பார்ப்பது பாதகமாத லால்,திருவாலவாயுடையார்திருவுளந்தெரிந்துசமணருடன்வாதஞ் செய்வோமென்று திருக்கோயில்சென்று திருமுன்பணிந்து "காட் டுமாவது" என்றெடுத்துப்பாடிச் சம்மதந்தெரிந்து அச்சமணரை

இப்பெண்ணை அழைத்துக்கொண்டு தில்லைக்குச்சென்று சிற்சபேசர் திருமுன் தேவாரப்பண்முறை வகுக்கக்கடவீர்களென்று அசரீரி வாக்கெழுந்தது. யாவரும் மிகமகிழ்ந்து பணிந்துவந்து சிற்சபேசர் திருமுன் அப்பெண்மணியின் வாக்கினின்றும் திருவருளால் வெளிவருகின்ற தேவாரப்பண்முறை தெரிந்து மகிழ்ந்தார்கள். நம்பிகள் அம்முறைப்படியே இன்னின்ன தேவாரப்பதிகங்கள் இன்னின்னபண்ணுடையனவென்று வகுத்தமைத்து, ஒவ்வொரு பண்ணுக்கும் இத்தனை கட்டளைகளுள்ளனவென்று விளக்கியருளினர். இத்திருவருட்செயலெல்லாம் தெரிந்து பெருமகிழ்வுற்ற அரசர் நம்பிகள் திருவடிபணிந்து பிரியாவிடைபெற்றுத் திருவரூர்க்குவந்து திருமுறைபாராயண சிவத்தியான சீலாய்ச்சைவ தலைமை அரசுபுரிந்துவந்து சிவபதநிழலிற் சேர்ந்தனர். நம்பிகள் சிற்சபேசர் திருவருளை நினைந்துருகித் தெரிசன நியமசீலராய் தினந்தோறும் பணிந்து ஒருவாறாகத் திருநாரையூர்க்கு வந்து பொல்லாவிநாயகபூஜாதி சிவநியமதற்பரராய்வாழ்ந்திருந்து வைகாசிப்பூசத்தில் சிவபதநிழல் சேர்ந்து வீற்றிருந்தருளினர்.

திருச்சிற்றம்பலம்.

---

நம்பியாண்டார்நம்பிகள் சரித்திரம்.

முற்றிற்று.

இப்பதினோராந் திருமுறையிற் சேர்த்தருளுகவென்று வேண்டினர். நம்பிகள் அவ்வாறு உண்மைநாயன்மார் சரித்திரங்களைத் திருத்தொண்டர் திருவந்தாதியென ஒவ்வொரு திருப்பாடலாகப் பாடியருளி அதனையுஞ் சேர்த்து முன்பாடிய பொல்லாவிநாயகர் திருவிரட்டைமணிமாலை முதலாய பத்துப்பிரபந்தங்களையும் பதினோராந்திருமுறையில் முன்சேர்த்துள்ள முப்பது பிரபந்தங்களுடன் நாற்பதாக வைத்தருளினர்.

அதன் பின், தேவாரங்களுக்குப் பண்முறை தெரியக்கருதி, ஆரிய வேதங்களுக்குச் சிவபிரானே சுரபேதங்கள் வகுத்தருளினர். அவ்வேதசாரமாய் வந்த செந்தமிழ்ச் சீரியவேதங்களாகிய தேவாரங்களும், "ஒருமையி னின்ற தொண்டர் தம்பிரா னூர்பாமாலைக்க, வருமருட் செய்கை தாமே வகுத்திட வல்ல ரென்றால்" என்னுங்கருத்தே திருவருட்சுருதிகள் தெளிவிக்கின்றபடி சிவபிரானுடன் ஒத்த அருள் குணஞ்செயல் வகைகளையுடைய சிவானுபூதிச்செல்வர்கள் பாடியருளிய திருவருண்மய சிவவாக்கேயாதலால், இத்தேவாரங்களுக்குஞ் சிவபிரான் முகமாகவேபண்முறை தெரிந்து சேர்க்கவேண்டுமெனநிச்சயித்து, நம்பிகளும், அரசரும் தில்லைவாழந்தணர்களுடன் பண்ணிசைகள் சிறந்து விளங்குகின்ற திருவெருக்கத்தம்புலியூரிற்சென்று, சிவபிரானை வணங்கிஎம்பெருமானே தேவரீர் திருவருளாற்கண்ட தேவாரங்களுக்குப் பண்முறை தெரிவித்தருளுகவென்று வேண்டினர். அப்போதுஅசரீரிவாக்கு, அன்பர்களே இந்நகரில் திருநீலகண்டயாழ்ப்பாணர் மரபில் ஒரு பெண்ணுக்குப் பண்ணிசை வகைகள் அறிவித்தனமென்று தெரிவித்தது. உடனே அப்பெண்ணை அழைத்துவந்து பண்முறைகள் கேட்டு மகிழ்ந்தனர். அப்போதும் அன்பர்களே,

வென்றபின், அவர்கள் செய்துவந்த பாதகத்துக்குரிய தண்டனை செய்தொழிக்கத் திருவுளமோவென்பதுந் தெரியும்படி "வேத வேள்வியை நிந்தனை செய்துழல், ஆத மில்லி யமணொடு தேரரை, வாதில் வென்றழிக் கத்திரு வுள்ளமே, பாதி மாதுட னாய பர மனே" "ஞால நின்புக ழேமிக வேண்டுந் தென், ஆல வாயிலு றையுமெம் மாதியே" என்று மேலும்பாடித் திருவுளச்சம்மதந் தெரிந்து பணிந்து புறத்துவந்து, சிவிகைமீதெழுந்தருளி அரசியாரும் மந்திரியாரும் அணுக்காய்வரத், திருத்தொண்டர் சூழப் பரசமயகோளரி வந்தாரென்று சின்னங்கள் கூற, ராஜமாளிகை நோக்கிச் செல்வாராயினர்.

அப்போது மந்திரியார் முன்சென்று திருஞானசம்பந்தர் திருவெழுச்சி விசேடந்தெரிவிப்ப, அதுதெரிந்த அரசர் தமது தலைமாட்டில் ஒருதிவ்யாசனமிடச்செய்து, எதிர்கொண்டுபசரித்து அழைத்து வருகவென்று கூறினர். மந்திரியார் அவ்வாறு சென்றனர். சமணர்கள், மகாராஜாவேநமதுமெய்ச்சமயத்தைநிலைநிறுத்துவது இப்படியா? உமது சமயநெறியைப் பாதுகாக்கவேண்டியது உமக்கே கடமையன்றோ! உமது நோயை நாங்களுஞ்சேர்ந்து நீக்கும்படி உத்தரவுசெய்து முழுதும் அவரே நீக்கினாலும் நாங்களுங் கூடியே தீர்த்ததாகச் சொல்லவேண்டுமென்றார்கள். அரசர் இருதிறத்தாருந்தீருங்கள் நான் வஞ்சகம் பேசேன் என்றார். சமணர்கள் அரசர் மனமிப்படியானால் இனி என்செய்வோமென்றுகவலையுற்றிருக்குஞ்சமயம், சம்பந்தர் சிவிகையினின்றிறங்கி உள்ளே வந்தருளக்கண்டளவிலேஅரசர், தலைமாட்டிலுள்ளஆசனங்காட்டி வீற்றிருந்தருள்கவென்றனர். சம்பந்தர் அதில் அமர்ந்தருளினர்.

அரசர், அவரதுதிருவருட்டிருமேனித்திருவிளங்கோலந்தெரிசிக்கப்பெற்றவுடனே தீப்பிணியுபாதி சிறிதுநீங்கிற்று. அன்பும் ஆச்சரியமுங்கொண்டு சுவாமீ தேவரீர்திருவவதரித்தருளியதிருத்தலம் யாதோவென்றுகேட்ப, அவரைநோக்கி நமதுதிருத்தலம் பன்னிரண்டு சிறப்புத்திருநாமங்களுடையதென்றுவிளக்குவாராய் "பிரமனூர் வேணுபுரம்" என்றெடுத்து "கழுமலம்நாம்பரவுமூரே" என்று திருப்பதிகமுகமாகத் தெரிவித்தருளினர். சமணர்கள் இன்றுவந்தஒருசிறுவன்அரசனால்உபசரிக்கப்பெற்றுத்திவ்யரத்தின

சனத்திருப்ப, நெடுங்காலம் அபிமானிக்கப்பெற்ற நாமெல்லாம் அரசன் கோபத்துக்கே இலக்காய் இருப்பிடமுமின்றி நிற்கும்படி நேர்ந்ததேஎன்று பொறாமைமிகுந்தும், தம்மால்ஒன்றும் ஆகமாட்டாதுவருந்தி அஞ்சியும், திடசித்தமுடையயர்போல நெருங்கிநின்று தமதுநூல்களை எடுத்துககூறிக் கூச்சலிட்டார்கள். பிள்ளையார் வீண்கூச்சல்வேண்டா. உங்கள்சமயநூற்பொருள்களை ஒவ்வொருவராய்முறையாக்கூறுங்களென்றனர். சமணர்களுப்பலரும்ஒன்றாய்க் கதறினார்கள். அரசியார் அரசனைநோக்கி நமதுசுவாமிகள் சிறுபாலர்; சமணர்களோ முதியர் பற்பலர். முறையாகவாதிக்கவல்லராளுல், சுவாமிகள் இந்நோயைநீக்கியருளியபின்புபேசுக என்று கூறியருளினர். அரசர் தமது தேவியாரை நீ வருந்தவேண்டாவென்றுஆறுதல்கூறி, அமணரைநோக்கிவரம்பின்றி யாவருஞ்சேர்ந்துகதறிஆவதில்லை. இந்தஒருபாலரூபசிவபத்தரும்,வயசுமுதிர்ந்த நீங்கள் இத்தனைபேருங்கூடி உங்கள்தெய்வபலனை என்நோய்நீக்கலால்காட்டுங்கள். வீண்கூச்சலிடாதீர்கள்என்றுஆஞ்ஞாபித்தனர்.

அப்போதுசம்பந்தர், தம்மைஅற்புதமகிமைஅருளுருவத்தெய்வப்பிள்ளையாகப்பேணிவருகின்ற அன்புருவத்தாயாராகிய அரசியார் அரசர்க்குப்பரிந்துகூறியதுநோக்கித், தாம்அவரை மாதாவாகப்பேணிவரும்திருவருட்குணத்தால், தமதுசுப்பிரமஸரியசொரூபநிலைவிளக்குவாராய், அம்மேநீ நம்மை ஒருபாலனென்று நினைத்து இச்சமணர்பெருங்கூட்டம்வந்துமோதுதல்நோக்கிச் சிறிதும்வருந்தாதே. திருவாலவாயுடையார் திருவருள் நமக்கெப்பொழுதுமுன்னிற்கின்றது. உண்மையறிவிழந்துஒருங்குகூடி, இத்தனைகாலமாகராஜோபசாரம்பெற்று வாழ்ந்தநமக்கு ஆபத்து வந்துவிட்டதேஎன்று பதறிக்கதறுகின்ற உள்ளீடற்ற பதர்களாகிய சமணர்களுக்கு நான் எளியவனல்லேனென்னும் கெம்பீர வாக்கியங்களால்,

"மானி னேர்விழி மாத ராய்வழு திக்கு மாபெருந் தேவிகேள்
பானல் வாயொரு பால னீங்கிவ னென்று நீபரி வெய்திடேல்
ஆனை மாமலை யாதி யாயவி டங்க ளிற்பல வல்லல்சேர்
ஈனர் கட்கெளி யேன லேன்றிரு வால வாயர னிற்கவே."

என்றுதிருவாய்மலர்ந்தருளினர். அரசர், சம்பந்தரையும்சமணரையும்நோக்கி என்நோயைநீக்கினவர்களே வென்றவர்களெனறுகூறி,

அமணர்கள் உமது இடப்பக்கநோயைநீக்குகின்றோமென்று பீலியி னால்தடவினர். நோய்அதிகரித்தது. அரசர் சகிக்கலாற்றாது சம் பந்தரை நோக்க, அவர்விபூதிஎடுத்து "மந்திரமாவதுநீறு" என்று பாடிக்கொண்டு வலப்பக்கத்தில்தடவியருளினர். வெப்பமுழுது நீங்கியது. இடப்பக்கத்துவெப்பம் அதிகரித்தது சமணர்கள் பக் கத்துநிற்கவுமுடியாமல் ஒதுங்கினர். அரசர், சமணர்களே நீங்கள் தோற்றொழிந்தீர்கள் இங்கிராது போய்விடுங்களென்றுகூறிவிட்டுச் சம்பந்தரைவணங்கி அதிபாதகனாகிய நாயேனைவலியவந்தாட்கொ ண்டருளியகருணைக்கடலே, இடப்பக்கத்து முழுவெப்பமுந் தேவ ரீரே தீர்த்தருளுக எனவேண்டினர். பிள்ளையார்முன்போல விபூதி தடவியருள வெப்புமுழுதும்நீங்கியது. அரசியாரும்மந்திரியாரும் அளவிலானந்தமுற்றனர். அரசர் பன்முறைபணிந்து சிரமேற்கை கூப்பிநின்று, இச்சமண்பாதகர்முன்னே எனது நோய்முழுதும் நீக்கியாளவந்தருளிய ஞானசம்பந்தப் பெருவாழ்வின் திருவடி பணியப்பெற்றுய்ந்தேன் உய்ந்தேனென்று கூறினர்.

சம்பந்தர்சமணரைநோக்கி, இனிஉங்கள்சமயநூற்பொருளைக் கூறுங்களென்றருளினர். அவர்கள் சாஸ்திரவாதத்தில் வெல்ல முடியாதென்றுகருதி அதனைவெளியிடாமல், சமய உண்மையை யாவர்க்கும் நேரேகாட்டிவெல்வோமென்றனர். அரசர், ஒரூனுவளை வும் நோய்நீக்கமாட்டாது பீலியுமுடலுங்கரிந்தொதுங்கிய பேதை களே, உங்களுக்கு இனி என்னவாதமென்றனர். அவ்விகழ்ச்சி மொழிதெரிந்தும் அரசர் எந்தவாதஞ்செய்கின்றீர்களென்றுகேட் டதாகவைத்துக்கொண்டு, இருதிறத்தரும் சமயநிலையை ஏட்டில் எழுதி நெருப்பிலிட்டால், வேவாததே வெற்றியுள்ளதென்றனர். அரசர், அவ்வஞ்சனையைவெளியிட்டு விலக்குவாராய் மறுமொழி கூறத்தொடங்கும்போது சம்பந்தர் நீங்கள்கூறியபடி செய்வோ மென்றருளினர். அரசர் அவ்வாஞ்ஞையை மறுக்கமாட்டாது சிலரைவவி நெருப்புஅமைப்பித்தனர். சம்பந்தர்தாம்பாடியருளிய தேவாரத்திருமுறையைப்பூசித்துக் கயிறுசாத்தி எடுத்த "போக மார்த்தபூண்முலையாள்" என்னும் திருப்பதிகத்திருவேட்டை இவ் வேடுகள் அக்கினியிற் பழுதுபடாதெனவிளக்கும் "தளிரிளவள ரொளி" என்னும்பதிகம்பாடிக்கொண்டுஅக்கினியில்இட்டருளினர்.

அது பச்சையாய் விளங்குகின்றது. சமணர் யாவரும் தங்கள் ஏடுகளை உய்யுமோ என்றஞ்சி நெருப்பிலிட்டனர். அவைமுழுதும் சாம்பராயின. சம்பந்தர் குறித்தநாழிகைசென்றபின் அக்கினியுள் வேவாதொளிரும் திருவேட்டை எடுத்து, அதுபசுமையும்புதுமை யும்பெற்று விளங்குதலை யாவர்க்குங்காட்டி முன்னுள்ளபடி திரு முறையிற்சேர்த்தருளினர். அரசர் அமணர்களைநோக்கி உங்கள் ஏட்டைக்காட்டுங்களென்றார். அவர்கள்சென்றுஅக்கினிவெப்பம் தாக்கலால் சமீபிக்கவுமுடியாமல் விலகினார்கள்.

திண்ணியஉடலினராகிய பல்லாயிரஞ்சமணருள் ஒருவராலும் சமீபத்திலும் நெருங்கமுடியாது விரிந்தெரிகின்றபெருநெருப்பின் மத்தியிலிட்ட திருவேட்டை, ஞானசம்பந்தர் தாமேபுகுந்தெடுத் தருளியதனாலும், இவர் அக்கினிகெர்ப்பர் அக்கினிசொரூபரென்று வேதங் கூறுகின்ற குகப்பிர்ம்மமாகிய சுப்பிரமணியரே என்னு முண்மைதெளிவாம். இவர் தாம்பாடிய திருமுறையைத் தாமே பூஜித்துக்கயிறுசாத்தி எடுத்தது, திருமுறைமுழுதுந் திருவருளே யாதலால் பின்வரும் அன்பர்களும் இவ்வழக்கமேற்கொண்டு பூஜி த்துவந்து இஷ்டசித்திபெற்றுவாழுகவென்னுந் திருவுளக்கருணை யேயாம். இதுவே தம்மைத்தாமேபூஜித்துக்காட்டிய சுந்தரபாண் டியர் மகாலிங்கர் செயலுமாம். இவர், நெருப்பிலிட்ட ஏடு உள்ள படி இருந்தாலே போதியதாயிருக்கவும் மேலும் பச்சையாயிருந் தது, அவ்வேட்டில் முதலிலுள்ள "போகமார்த்தபூண்முலையாள்" திருமேனிநிறத்தைவிளக்கியதென்பார் விவேகிகள். அரசர் அந் நெருப்பை நீரால் அவிப்பித்தனர். அமணர் சாம்பரை பிசைந்து பார்த்துத்திகைத்தனர். அரசர்நகைத்துப் பொய்யைமெய்யெனப் பற்றிநின்றலைகின்ற அறிவிலிகளே! முன்னுந்தோற்றீர்கள். பின் னும் உங்கள் ஏடுகள்சாம்பராயொழிந்தன. அதனைப்பிசைகின்றீர் இன்னுந் தோற்றிலீரோவென்றனர். அதனை, அறிவிழந்து திகை த்து நிற்கும் அமணர்கள் இழிவுரையென்றறியாது அரசர்பிரானே எதனையும் மூன்றுமுறைபார்த்து நிச்சயிப்பதே முறையாதலால், இன்னும் ஒருமுறை பார்க்கவேண்டும், இதனில் நாங்கள் வெற்றி பெறுவோமென்றனர். அரசர், இருமுறை தோல்வியுற்றும் ஆசை வயத்தாய் அமணர் கூறியதை மறுத்துக்கடிந்து கூறினர்.

பிள்ளையார் அதன்மேலும் அருள்கூர்ந்து இனியென்னவாதஞ் செய்வதென்றருள, அமணர்கள் நமது ஏடுகளை வைகையாற்றிலிடுவோம். எதிர்த்துச் செல்லும் ஏடு உண்மையுடையதென்றனர். பிள்ளையார் சம்மதித்தருளினர். அதுதெரிந்தும்குலச்சிறையடிகள் ராஜாதிராஜ ஞானசம்பந்த சைவமகாராஜ சந்நிதியில்வணங்கி, எம்பெருமானே, இனிச்செய்யும் வாதில் தோற்றவர்க்குத் தண்டனை இன்னதென்று நிச்சயித்துச்செய்கவென்று விண்ணப்பித்தனர். இதனால், இவர் அரசர்க்கு ஆலோசனைத்துணை மந்திரியாராய் நிற்பினும், சைவராஜாங்கத் தனிச்செங்கோல் நடத்தும் தெய்வராஜ ஆலோசனைத்துணை மந்திரியாராய் நிற்பதே இவரது உண்மைநிலையென்பது செவ்வேகாணலாம். மந்திரியார் இவ்வாறு கூறியது கேட்டஅமணர்கள், பொறாமையினால், நாங்கள்தோற்றால்எங்களை அரசர் கழுவிலேற்றக்கடவரென்றார்கள். இதுநிச்சயமே. தாமசியாது கழுவிலேற்றி இவர்கள் பாதகநீக்கவேண்டுமென்ற கருணையினால், மந்திரியார் பல்லாயிரங்கழுமரங்கள் செய்வித்து ஆற்றங்கரையெங்கும் நாட்டுவித்தனர், அரசர்சமணரைவைகையாற்றுக்கு வருகஎன்று ஆஞ்ஞாபித்து, அரசியார் மந்திரியாருடன் சேவித்து வந்தனர். பிள்ளையார் சிவிகைமீது எழுந்தருளிவருவாராயினர்.

அப்போதுதிருஞானசம்பந்தர் திருவருட்டிருக்கோலந்தெரிசிக்கப்பெற்றின்புறுகின்ற அந்நகரவாசிகள், இவர், அரசர்நோய்முழுதும் விபூதியால்நீக்கினரென்பார். இவர்தெரிசனமே நமதுதுன்பமெல்லாம்நீக்கிவிடுமென்பார். இவர் இப்பாண்டிநாடுவாழவந்தனரென்பார். சமணரெல்லாம் இருமுறையுந் தோற்றனரென்பார். சைவத்திருநீறே தெய்வப்பொருளென்பது தெரிந்தோமென்பார். இப்பிள்ளையார்திருக்கோலத்திருவழகுஎங்குமில்லாததைவிகத்தனியழகே என்பார். இத்திருவழகு தெரிசிக்கப்பெற்ற கண்களே கண்களென்பார். திருவாலவாயுடையார்ஒருவரேஎவர்க்குமேலானமகாதேவரென்பார். இவரை அறியும்ஞானமே ஒப்புயர்வில்லாததிப்பியஞானமென்பார். இனி விபூதி முதலிய சிவசாதனங்களே இந்நாடெங்கும் விளங்குமென்பார். சமணரால்விளைந்த துன்பமெல்லாந்தொலைந்தனவென்பார். இவர்கள்செய்துவந்த கொடியவஞ்சனையெல்லாங் குலைந்தன வென்பார். இப்பாவிகள் முகங்கரிந்து

வாடினரென்பார். நெடுங்காலமா நீங்காதுநிறைந்தசமணிருள்முழு தும் விடிந்து சைவஒளி பெருகியதென்பார். முன்னிருமுறையுந் தோற்றவர்கள் இனி வெல்வதெங்கே என்பார். இச்சமணர் வன் னெஞ்சவலியராயினும் இத்தெய்வப் பிள்ளையார்க்கெதிரோவென் பார். இவர்களிடத்து அரசர் வைத்திருந்த ஆசைமுழுதுமாறியது அழகிதே என்பார். அதிசூக்குமமாய், நுணுகி ஆராய்ந்து தெளி யத்தக்கதாய், எவ்வாதிகளாலும் அசைக்கமுடியாது நிலைநின்று விளங்கும் வேதசிவாகமாதி சிவசாஸ்திர நுண்பொருளுணர்ச்சி சிறிதுமின்றித், தூலப்பொருளுணர்ந்து மேல்நோக்காது அம்மட் டிலேயே அவ்விழிபொருட்சமணிருள்பற்றித், தம்வாயாற்கெட்டு நிற்கும் பாவிகள் இனிப்படும் பெருந்துன்பமும்பாருங்களென்பார். மந்திரியார், கூரியசூலங்கள் உச்சியிலுள்ள கழுமரங்கள் செய் வித்து எங்கும் நிறுத்தினரென்பார். இப்பாதகர் வைகையிலிடும் ஓலை ஓடாது நிற்குமோவென்பார். தெய்வப்பிள்ளையார் தமதுதிரு வேடு எதிர்த்துவரும்படி செய்யவல்லவரே என்பார். யாவருங் காணும்படி அத்திருவேடு எதிர்த்துவரும் அத்தியற்புத அருஞ் செயலையுமினிப்பாருங்களென்பார். இருமுறைதோற்றதும்பிள்ளை யார் தெய்வத்தன்மையும், தெரிந்தும், தம்வாயாற் கழுவிலேற்றக் கூறியதென்னையோவென்பார். இது திருவருட்செயலே என்பார். பிள்ளையார்சிறிதும்வன்கண்மையின்றி, இப்பாதகரிடத்துங்கருணை கூர்ந்து, இவர்கள் செய்த பெரும்பாதகங்கள் நீடித்து வளர்ந்து நின்று வருந்தாமல், உடனே கழுவேற்றி நீக்கியருளச் சம்மதித் தது, இவரிடத்துள்ள பேரருளுக்கழகிதே என்பார். அரசரைப் பிடித்துவருந்திய அதிகுரூரவெப்புநோய், இச்சமணர்பலருங்கூடிச் செய்த மந்திரவலிகளெவற்றாலும் நீங்காமல், இத்தெய்வப்பிள்ளை யாரொருவர் திருக்கையிற்றிருநீறே முழுதுநீக்கியது நேரே கண் டோம் இனி வேறு விசாரணையேன் யாவரும் சமண்மார்க்கத்தை அடியோடு தொலைத்துச், சைவசன்மார்க்கத்தை மேற்கொண்டு பேணிநின்றுய்யும் நல்லூழ் நமக்குவாய்த்தது நமது அருந்தவப் பயனே என்பார். இவ்வாறு யாவரும் எடுத்தோத, முத்துச்சின் னங்கள் திருஞானசம்பந்த ஜெயநாமங்கள் பிடித்தூதத், திருத் தொண்டர்செய்யும் ஆரகாரமுழக்கமலிய, பற்பலவாத்தியகோஷம்

பொலிய, வைகையாற்றங்கரைக்குவந்து சிவிகையினின்றுமிறங்கித் திவ்வியாசனத்தில் வீற்றிருந்தருளினர்.

அரசர், சமணர்களைநோக்கித், திருமேனித்திருநீற்றுத் திருந் தொளி செகமெலாம் விளக்குந் தெய்வப்பிள்ளையாரும், உடலுங் கருகி இருளடைந்து சமணிருளிலாழ்ந்து கிடக்கின்ற நீங்களும், முன் விதித்தபடி ஏடுகளை வைகைநீரிலிடுங்களென்றார். வெள்ளம் இருகரைமேலும்பெருகி அதிவேகமாய் ஓடுகிறதுதெரிந்தும், இம் முறையாவது வெல்வோமென்ற ஆசைமிகுதியால் சமணர்பலரும் "அஸ்திநாஸ்தி" என்னுந் தங்கள் மந்திரங்களைஎழுதி அவ்வெள் ளத்திலிட்டனர். அத்தனை ஏடுகளும் அந்நீரோட்டத்திலிழுபட் டோடின. அதுகண்டும் மானமிழந்து மதிகெட்ட அமணர்கள் எடுக்கச்சென்றனர். இத்தனை காலமாக நம்பியிருந்தஅவ்வேடுகள் அவர்களை நட்டாற்றில்கைவிட்டு எட்டாதுமறைந்தன. அத்தனை பேரும் உயிர்க்கிறுதிவந்து விட்டதேஎன்று திகைத்து மயங்கிச் சிதறிஓட நினைந்தும், அரசராணைக்கஞ்சிச் சம்பந்தரை நோக்கி, உமது ஏட்டை இட்டால் அறியலாம் என்றார்கள். அரசர் சம்பந் தர் திருவுளக்குறிப்பையே நோக்கினர். சிவகுருசிகாமணியாகிய சம்பந்தர், முன்பு ராஜமாளிகையில் வந்து அரசரைப் பார்த்ததே "நயனதீக்ஷை"யும், தலைமாட்டிலாசனத்தின்மீது திருவடிகீழுறச் சுகாசனராயிருந்ததே "திருவடிதீக்ஷையும்" திருநீறறுத் திருக்கரந் தீண்டியதே "ஸ்பரிசதீக்ஷையும்" திருநீற்றுப்பதிகம் பாடியருளி யதே 'வாசகதீக்ஷ'யும்' அத்திருப்பதிகத்தரும்பொருள்விளக்கமே பாசவியல்புணர்த்தி அவ்வலிநீக்கியருளுதலும், பின்பு "மானி னேர்விழி" என்றருளியதிருப்பதிக விளக்கமேபசுவியல்புணர்த்தி அப்பசுத்துவம் நீக்கியருளுதலுமாகவைத்து அரசரைப் பரிபக் குவராக்கிவந்தமுறையில், இனிப்பதி இயல்புணர்த்திச்சிவத்துவப் பேறளித்தருளத் திருவுளங்கொண்டருளி அவ்வுண்மை விளக்குந் திருப்பதிகம்பாடியருளி அத்திருவேட்டை அவ்வெள்ளத்திலிடத் தொடங்கினர்.

அத்திருப்பதிகத்தி னுண்மைப்பொருளைச் சிறப்புவகையால் விளக்கியருளக்கருதிய சேக்கிழார்பெருமான் முதலில் பொதுமை யாக "உலகியல் வேதநூ லொழுக்கமென்பதும், நிலவுமெய்ந்நெறி

சிவ நெறியதென்பதும், கலதிவா யமணர்காண் கிலார்க ளாயினும், பலர்புகழ் தென்னவ னறியும்பான்மையால்'' என்றுவிளக்கியருளினர். இதன்கருத்து, வேதவேதாந்த வழிவந்த வைதிகமார்க்கம்; பலமதஸ்தர்க்குமிடந்தந்து உலகர் யாவர்க்கும் பொதுவாயிருத்தலால் அது, கீழ்க்கீழுள்ள ஒவ்வொரு தத்துவலோகநிலையையே பொருளெனப்பற்றி நிற்குஞ் சாமானிய பக்குவர்களாகிய உலகர் பொருட்டு முதல்வன் பொதுவாயருளிய சாமானியசுருதி என்பதும், சிவாகமவழிவந்த சுத்தாத்துவித சித்தாந்தமார்க்கம், பிறமதஸ்தர்க்கு இடங்கொடாமல், (௩௬) தத்துவங்களையுங் கடந்து லோகாதீத உண்மைநிலையொன்றையேபற்றிநிற்கும் விசேடபக்குவர்களாகிய சத்திநிபாத உத்தமர்பொருட்டு, முதல்வன் சிறப்பாய் (தனதாய்) அருளிய விசேடசுருதி என்பதுமாகிய இவ்வுண்மையெல்லாம் அபக்குவராகிய அமணர்காணமாட்டாராயினும் அதிதீவிரதரபக்குவராகிய அரசர் உள்ளபடிகண்டுய்யும் பான்மையாயிருத்தலால் (அவ்வுண்மைவிளக்கத் திருப்பதிகம் பாடத்தொடங்கினர்) என்பதாம்.

இவ்வாறுபாடத்தொடங்கியசம்பந்தர், சிவஞானபோத திவ்வியோபதேசநிறைவாயுள்ள அத்திருப்பதிகத்தை, "வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, வாழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந் துயர் தீர்கவே" என்பது முதலாகஎடுத்து மேற்கூறிய உண்மைப் பொருளெலாம் பொருந்தவைத்துப், பன்னிரண்டுதிருப்பாசுரங்களாற்பூர்த்திசெய்தருளி, அத்திருப்பதிகம் எழுதப்பெற்ற திருவேட்டைத், திருக்கரத்தால் அப்பெருவெள்ளத்திலிட்டருளினர். இப்பதிகம் (௧௨) பாசுரங்களால் அமைந்ததுநோக்கியும் இது, சிவாகமசாரரௌரவாகமத்துள்ள (௧௨) சுலோகங்களாலமைந்த சிவஞானபோத சித்தாந்தவிளக்கமே வாய்ந்ததென்னும் உண்மைதெளியலாம். சம்பந்தரிட்டதிருவேடு, அப்பெருவெள்ளத்தின் அதிவேகத்தைமறுத்து, பிறவிப்பெருவெள்ளத்தில்துறவிப்பெருமக்களுடையபற்றொழிந்த திருவுள்ளம் எதிர்த்துச்செல்லுதல்போல, எதிர்த்து நீரைக்கிழித்துக்கொண்டு, யாவர்க்கும் இதுவே உண்மைப்பொருளென்பதை நேரில்விளக்கி, அந்நீர்வேகத்திலும் அதிவேகமாக ஓடியது. அது

கண்டு தேவர்களெல்லாம் பூமழைபொழிந்து துதித்தார்கள். திருத்தொண்டர் பல்லாயிரவரும் சிவநாமப்பெருமுழக்கஞ்செய்தார்கள்.

இத்திருப்பதிகத்தின்முதலில் "வேந்தனுமோங்குக" என்று பாடியருளும்போதே, அரசர்நெடுங்காலநீங்காதிருந்தகூனும் நீங்கப்பெற்று அளவுகடந்தஆச்சரியநிலையராயினர். இதனை, "எம்பிரான் சிவனே யெல்லாப் பொருளுமென் றெழுது மேட்டில், தம்பிரா னருளால் வேந்தன் றன்னைமுன் னோங்கப் பாட, அம்புய மலராள் மார்பன் அனபாய னென்னுஞ் சீர்த்திச், செம்பியன் செங்கோ லென்னத் தென்னன்கூ னிமிர்ந்த தன்றே" என்ற பெரியபுராணத்தாற் காண்க. அமணர்யாவரும் முகங்கவிழ்ந்து நின்றனர். கருத்துநிரம்பியதென்று பெருந்தெழுமன்பேவடிவாய் அனுக்கராய் நிற்கின்ற மந்திரிப்பெருந்தகையார், திருவேடு செல்லும் பெருவேகம்நோக்கிக், காற்றினுங்கடிதுசெல்லும் குதிரைமேற்சென்றனர். சென்றும் எட்டாமல் ஓடுதலால், பிள்ளையார் "வன்னியுமத்தமும்" என்றெடுத்துப்பாடியருள, அவ்வேடு அவ்விடத்தில்கரைமேலுள்ள சிவாலயத்தின்பக்கத்திலேதங்கிநின்றது. ஏடுதங்கிய இடத்திருத்தலால் அக்கோயில் திருவேடகமென்று வழங்கப்பெறுகின்றது. மந்திரியார், ஆற்றினுட்புகுந்து திருவேட்டை எடுத்துச்சிரமேற்கொண்டு திருவேடகநாதரைப்பணிந்து வந்து சம்பந்தர் திருவடிகளில்வணங்கி எழுந்து யாவர்க்குங்காட்டியருளினர். எல்லாருமகிழ்ந்து அரகரமுழக்கஞ்செய்தார்கள்.

அரசர், மந்திரியாரைநோக்கி, மும்முறையுந் தோற்றொழிந்த இச்சமணர்கள், நமது பரமாசாரியசுவாமிகளுக்கும் தீங்குசெய்த அதிபாதகர்களாதலால், இவர்களை, இவர்களே முன்கூறியபடி கழுவிலேற்றுக என்று ஆஞ்ஞாபித்தனர். அவ்வாஞ்ஞை, அவர்கள்செய்தபாதகங்களுக்குத்தக்க பக்ஷபாதமில்லாததண்டனையேயாதலாலும் எவராயினும் சிவசமயசிவசாஸ்திரசிவபூஜாதிகளுக்கு இடர்செய்யின், அவரைக்கொல்வதேதண்டனையாகச்சிவாகமங்கள் விதித்தலாலும், அவ்விதியை அச்சிவத்துரோகம்மேலும்விருத்தியாகிப், பிறவிதோறும்தொடர்ந்துநின்று பெருந்துன்பஞ்செய்யாது, அம்மட்டில்ஒழிகஎன்னும்பெருங்கருணையினாலேசிவபிரானேவிதித்ததாதலாலும், அவ்வாறே சண்டேசுரர்முதலியர் செய்துகாட்டி

யிருத்தலாலும், பரமகருணாநிதியாகிய ஞானசம்பந்தர், அரசர் கூறிய அவ்வாஞ்ஞையைத் தடுக்காதிருந்தருளினர். இடபக்தசிவ ஞானவிராகியமந்திரியார் (அ௲)சமண்குருமாரையுங்கழுவிலேற்றி யருளினர். ஞானசம்பந்தர், அரசர்க்குத் திருப்பதிக முறையிற் செய்த சிவஞானோபதேசபூர்த்தியில் திருநீறுகொடுத்தருளும் விதி விளங்க விபூதிகொடுத்தருள, அரசர், அவர் திருவடியில் வணங்கி யெழுந்து வாங்கித்தரித்து மகிழ்ந்து மேலும் வணங்கினர். அங்கு வந்துகூடிய சனங்களெல்லாம் விபூதியணிந்து பிள்ளையாரைவணங் கிப் பெருமகிழ்வுற்றன. எங்கும் வெண்ணீற்றொளியேபரம்பியது. சைவநெறி தழைத்தோங்கியது. ஞானசம்பந்தர், அரசர்அரசியார் மந்திரியார் மூவரும் சேவித்துவரத், திருவாலவாயிற்சென்றுசுவா மியை வணங்கிச், சமணிருள் நீக்குதற்குத் தாம் செய்தஅற்புதச் செயற்கெல்லாமுடனின்றருளிய திருவருட் பெருமை நினைந்து அன்புபெருக,

கைகளுந் தலைமீ தேறக் கண்ணிலா னந்த வெள்ளம்
மெய்யெலாம் பொழிய வேத முதல்வரைப் பணிந்து போற்றி
அய்யனே யடிய னேனை யஞ்சலென் றருள வல்ல
மெய்யனே யென்று வீட லாலவாய் விளம்ப லுற்றார்.

"வீடலாலவாயிலாய்" என்னுந் திருப்பதிகம்பாடித் துதித்தனர். அரசர்சுவாமியைவணங்கிஎம்பெருமானே, உண்மையுணராமற்சம ணிருளிற்கிடந்து தடுமாறிய பாதகனாகிய அடியேனை, அருட்கை யாலெடுத்தாளும்படி இப்பரமாசாரிய சுவாமிகளைத் தந்தருளிய பெருங்கருணை என்னாத்ததோவென்று துதித்து மகிழ்ந்தனர். சம்பந்தர் திருமடத்துவந்து வீற்றிருந்தருளினர். உடன்வந்தமூவ ரும் வணங்கிவிடைபெற்றுத் தமது திருமாளிகைசென்று தினந் தினமும் திருமடத்துவந்து தெரிசித்து வணங்கும் பெருவாழ்வு பெற்றுடனமர்ந்தனர். சம்பந்தர் காலந்தோறும் திருவாலவாய் சென்று தெரிசித்துத் திருயமகமுதலிய பதிகங்கள்பாடிப் பாண ஞர்க்கு அருளியதைச் சிறப்பித்தருளினர். அரசர், அந்நாடெங்கு முள்ள அருகன்பள்ளி அமணர்பாழி யெல்லாம் அகழ்ந்தெறிந்து சைவநிலையே விளக்கியருளினர். அந்நாளில் சிவபாதவிருதயர் ஞானசம்பந்தப்பெருவாழ்வை நெடுநாட்காணப்பெறாத போராசை

யால் அங்குவந்து மீனாக்ஷிசுந்தரேசரை வணங்கித் திருமடத்து வந்து அத்தியந்த ஆவலுடன் திருஞானசம்பந்தர் திருவடிகளில் வணங்க, அவரும் எதிர்வந்து அஞ்சலித்துத் திருமுலைப்பால் தந்தருளிய அம்மையப்பரை நினைந்துருகி, ஆராமையினாற்சேயுரிமை விளங்க க்ஷேமம் விசாரிக்குந்திறனிதுவென்று தெரிந்தோரெடுத்துரைப்ப, மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்

எண்ணினல் லகதிக் கியாதுமோர் குறைவிலை
கண்ணினல் லஃதுறும் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையா ளவளொடும் பெருந்தகை யிருந்ததே.

கருந்தடந் தேன்மல்கு கழுமல வளநகர்ப்
பெருந்தடங் கொங்கையோ டிருந்தவெம் பிரான்றனை
அருந்தமிழ் ஞானசம் பந்தன செந்தமிழ்
விரும்புவா ரவர்கள்போய் விண்ணுல காள்வரே. என்றுபாடியருளிச் சிலநாளங்கு வசித்தருளி மற்றைய தலங்கள் தெரிசிக்கக் கருதுங்குறிப்பறிந்த அரசர் அரசியார் மந்திரியார் மூவரும் பிரிவாற்றாது கண்ணீர்பாயக்கரைந்துருகிச் சிரமேற்காங்குவியத் திருமுன்னின்று வருந்துவதுகண்டு திருவுளமிரங்கித், தாமும் பிரியமாட்டாமல் இந்நாட்டுத்தலங்கள் தெரிசிக்கும்வரை கூடவருகவென்றருளித் திருப்பரங்குன்றம்பணிந்து, திருநெல்வேலி நோக்கிச் செல்வாராயினர்.

இதற்குமுன் அத்திருநெல்வேலியில் தேவபாண்டியரென்பவர், வைஷ்ணவர் செய்யுஞ் சைவநிந்தனை முதலிய கொடுமை நோக்கி, நெல்லையப்பர்கோயிலில் சுப்பிரமணிய சந்நிதியடைந்து வணங்கி, எம்பெருமானே இக்கொடுமை நீக்கியருளுகவென்று வேண்ட, அன்பனே நாமே உலகெலாமுய்யும்படிமானுடரூபியாய் அவதரித்தஞானசம்பந்தன், இன்னுமூன்றுதினத்தில் இங்குவந்து அக்கொடுமைநீக்கியருளுவானென்றருள, அத்திருவாக்கைநோக்கி

எதிர்பார்த்திருந்தஅப்பாண்டியர் சம்பந்தர் திருவெழுச்சிதெரிந்து நகரெல்லாம் அலங்கரித்துச் சகலவரிசைகளுடன் எதிர்வந்துவணங்க, அவர்க்கு அபயங்கொடுத்தருளிக் கோயில்புகுந்து பணிந்து "மருந்துமந்திரம்" என்னும் பதிகம்பாடிப்புறத்துவந்தொருமண்டபத்து வீற்றிருந்தருளினர். அகஸ்தியர், இவர் வரவுமுன்னரே தெரிந்துஅங்குவந்து திருவடிகளில்வணங்கி எம்பெருமானே தேவரீர் முன் சுப்பிரமணியரூபத்திருந்து ஆரியவேதத்தரும்பொருளெலாம் விளக்கியருளினீர். இப்பொழுது அவ்வேதசாரமாகிய சீரிய தமிழ்வேதத்தெளிபொருளெலாம் விளக்கியருளுகவென்றுவேண்டினர்; அப்போது தேவபாண்டியர் பணிந்து முன்னிகழ்ச்சியை விண்ணப்பித்தனர். சம்பந்தர், அப்பாண்டியர்முகமாக வைஷ்ணவர் யாவரையும் அழைப்பித்து, எதிரிருந்திவாதிக்கப்புகும்போது அகஸ்தியர் வணங்கிநின்று எம்பெருமானே இத்திருத்தொண்டை அடியேனுக்கருளுக எனவேண்டி அநுமதிபெற்று திருச்சந்நிதி விசேடத்திருவருள் வலியால், "மருந்துமந்திரம்" என்னுந் திருப்பதிகப்பொருள் விரித்துக்கூறி, அதனால்வைஷ்ணவர் கேள்வியெல்லாந் தாமே வருவித்துரைத்து ஒவ்வொன்றிற்கும் தக்கவாறு சமாதானஞ்செய்து, சைவசமயமே மெய்ச்சமயமென்னும் உண்மை விளக்கியருளினர். வைஷ்ணவர் யாவரும் நிராக்ஷேபமாக விளக்கிய அவ்வுண்மைதெளிந்து, ஞானசம்பந்தரைவணங்கி அவர்திருக்கரத்தால் விபூதிவாங்கித் தரித்துச் சைவர்களாய் வாழ்ந்தனர். சம்பந்தர் சிலநாளங்கிருந்தருளி அகஸ்தியர்க்கருள்புரிந்து, அந்நாட்டுத்தலங்கள் பணிந்துபாடிச்சென்று ராமேசுரம் பணிந்து அங்கிருந்தே திருக்கோணமலை திருக்கேதீச்சுரம்பாடிக், குலச்சிறையார் திருவவதாரச் சிறப்புவாய்ந்த திருமணமேற்கோடிக்குவந்தருளிக், குலச்சிறையார் செய்யும் விருந்துமுதலிய உபசாரங்களுக் கிசைந்திருந்து, சமீபத்துள்ள தலங்களும் தரிசித்து மீண்டும்வந்து வீற்றிருந்தருளினர்.

சிலநாளானபின் சம்பந்தர் சோழநாட்டுக்கு எழுந்தருளுங் குறிப்புத்தெரிந்து, மூவரும்திருவடிகளில்விழுந்துபற்றிக்கொண்டு கண்ணீர்பெருகக்கசிந்துருகி, எங்களை வாழ்வித்தருளவந்துபிறவிப் பெருங்குழியினின்றும் அருட்கையாலெடுத்து ஆதரித்தருளிய

பரமாசாரிய குலதெய்வமே, அடியேங்கள் தேவரீரைப்பிரியலாற்றாது வருந்துகின்றோம். எப்பொழுதுந் தேவரீர் திவ்வியரூபதெரிசனானந்தம் பெற்றுடனிருந்து வாழும்படி அநுமதிதந்தருளுகவென வேண்டக்கருதியும் "வேண்டத்தக்கதறிவோய் நீ" என்னுமுறையைபற்றி அதனை விண்ணப்பிக்க மாட்டாது திகைத்து நிற்பது தெரிந்த சம்பந்தர், மணமேற்கோடி பாண்டிநாட்டெல்லையாதலால் அதற்குமேல் சோழநாட்டில் அம்மூவரும் தனித்துத் தம்முடன் வருவது ராஜமுறைக்குப் பொருத்தமன்றாதலாலும், பரிவாரசைனியங்களுடன்வரினும் அது போர்நிலையை ஞாபித்து விரோதம் விளைக்குமாதலாலும், சமணிருள்நீக்கிச் சைவவொளிபெருக்கிய இந்தச்சமயம்அம்மூவரும் மதுராபுரியிலிருந்து அதனைஅபிவிருத்திசெய்யவேண்டியதே முக்கியமாதலாலும், அன்பர்களே இனிநாம் கூறுதற்கிசைந்து மதுராபுரியிலிருந்து திருவாலவாயுடையார் திருவருள் முறைப்படி திருநீற்று நெறியை பரிபாலனஞ் செய்து கொண்டு வாழுகவென்றருளினர். அம்மூவர் பேரன்புநிலையையென்னென்றுகூறுவது; அவ்வாஞ்ஞையைக் கடக்கவுமுடியாமல் பிரியவுமுடியாமல் "சாலமிகத் தளர்வாரைத் தளரா வண்ணந், தருவனவாங் கவர்க்கருளிச் செய்த பின்பு" அதற்கிசைந்து திருவடிகளில் பலமுறைவணங்கி எழுந்து பிள்ளையார் திருவுருவமே சிவிகைமீது தெரிசித்துக்கொண்டு அஞ்சலித்து நின்றாள்ளமுழுதும் அவர் திருவடியேபற்றிச்செல்ல, ஒருவாறுதிரும்பிமதுராபுரிவந்து சைவராஜாங்கந் தனிச்செங்கோல் செலுத்தி வாழ்ந்துவந்தனர்.

பிள்ளையார் திருக்களர் திருப்பாதாளீச்சுர முதலிய தலம் பணிந்து முள்ளியாற்றங்கரையில் வந்தனர். அந்நதி இருகரையுமோதிப் பெருவெள்ளமாய்ச் செல்லுதலால், ஓடக்காரர் ஓடங்களைக்கரையில் நிறுத்திவிட்டுச்சென்றனர். மெய்யன்பர்கள்,தமது திருவடித் தோணிபற்றிக் கரைகாணாத பிறவிப்பெருங்கடல்களையுங்கடந்துய்யும்படி அருளுகின்றபிள்ளையார், ஓடத்தைஅவிழ்த்துவிட்டு அவ்வோடமே, (கசுகூ) திருத்தொண்டர் முதலிய யாவர்க்கும் இடந்தந்து வெள்ளத்தில் அலையாது நிற்கச்செய்து, யாவரையும் ஏற்றி "கொட்டமேகமழும்" என்று திருப்பதிகம்பாடிக் கொண்டு கரையேறிக் கொள்ளம்பூதூர்க்குவந்து சுவாமியைவணங்கி,

நெருப்பில்பச்சையாய்விளங்கியபதிகத்தையுடைய அம்மையாரை தெரிசிக்க விரும்பித் திருநள்ளாற்றுக்கு வந்துபணிந்து சிலநாளிருந்து திருத்தெளிச்சேரிபணிந்து செல்லும்போது, புத்தர்கள் வசிக்கும் போதிமங்கை சமீபிப்பது தெரிந்த அடியார்கள், வாத்தியங்களெல்லாம் ஒன்றுசேர்ந்து கடலொலியினும் பெரிதாய் முழங்கும்படிசெய்து, பரசமயகோளரி வந்தாரென்றேமுத்துச்சின்னந் தாரைகாளமெல்லாம் ஊதிக்கொண்டு வந்தனர்.

திருக்கூட்டப் பெருக்கந்தெரிந்து பொறாமைகொண்டு புத்தர் கூட்டத்துடன் புத்தநந்தி என்பவன் எதிர்வந்துஎங்களைவெல்லாமல் பரசமயகோளரி வந்தாரென்று வெற்றிச்சின்னமூதுவது செல்லாதென்று தடுத்தான். அடியார் யாவரும் இவனைத் தண்டிக்காது விட்டால் புத்தசமயத்தையேஎங்கும் பரப்புவானென்று பிள்ளையாரைவணங்கி விண்ணப்பித்தனர். அவர், இஃதொருவாதம் நேர்ந்தது நன்மையே; அவன் வாதிக்கும்போது அச்சமயமொழி தலையறிவோமென்றனர், அதற்கு முன்னமே, அவர் நன்மாமறையோர் தேவாரம்எழுதிவருஞ்சம்பந்தசரணாலயர் அப்புத்தன்முன்சென்று

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே.

என்ற திருப்பாசுரத்தை எடுத்தோதிச், சிவனடியார் திருநெறி தடுத்த இவன் தலையில் இடிவிழுக என்றுஞ்ஞாபித்தனர். உடனே இடிவிழுந்துடலுந்தலையும் வேறாயிறந்தான். அதனை அடியார்கள் தெரிவிப்பப், பிள்ளையார், அடியார்க்கு எதிர்வந்ததடையை நீக்குமுறை இதுவே சிவசாஸ்திரசம்மதமென்றருளி, நீங்களெல்லாரும் அரகரமுழக்கஞ் செய்கவென்றருளினர். உடனே அம்முழக்கம் அண்டத்தின் மேலும் பொலிந்தது. அஞ்சியோடிய புத்தரெல்லாம் இது மந்திரவலியோ? அவரது சமயவலியோ? அறிவோமென்று சாரிபுத்தனெனுமொருவனை அழைத்துவந்து, நீங்கள் மந்திரவாதமின்றிச் சாஸ்திரவாதம்பேச வருகவென்றழைத்தனர்.

பிள்ளையார் விரைந்துசென்றொருமண்டபத்துவீற்றிருந்தருளி அழைப்பிக்கச், சாரிபுத்தன்கூட்டத்துடன்வந்துநின்றான். உடனே

சம்புந்தசரணாலயர் வணங்கிஇத்திருத்தொண்டுஅடியேனுக்குஅருளுகவெனவேண்டி அநுமதிபெற்றுத், திருமுன்னிருந்து சாரிபுத்தனே! உங்கள் கடவுளியல்பும் சமயநூற்பொருளும் கூறுகஎன்றனர். புத்தன், எல்லாரும் உய்யும்படி பிடகாகமங்கூறிய எங்கள் கடவுள், கற்பந்தோறும் பிறந்திறந்து ஒருகணப்பொழுதிற்கதிகள் மாறிமாறிவரும்இயல்பிலிருந்து, தானம் தவம்யோக முதலியனசெய்தலால் உண்டாகின்ற ஞானத்தினாலே ஒழியாத முத்திபெற்றான். என்றான். நல்லது அம்முத்திதான் யாதென்றார். உருவம்வேதனை குறிப்பு செய்கை ஞானமாகிய பஞ்சகந்தங்களுங் கெட்டொழிதலே முத்தி என்றான். (கந்தம்—கூட்டம். குறிப்பு-பாவனை) அன்பர், அவன்கூறியவைகளை (அநுவாதஞ்செய்து)நீ இன்னின்னவை தானே கூறுகின்றாயென்று தாமும் எடுத்துக்கூறி, உருவம் ஞான முதலிய ஐந்து கந்தங்களும் கெடும்போது அவற்றுள் ஒன்றாகிய உருவமுங்கெட்டதன்றோ! உருவமில்லாத உன்கடவுள் இங்கிருக்கின்றானென்று அவனுக்கு ஒரு உருவம் அமைத்து நீ செய்கின்ற பூஜனையை ஏற்பவர் யார்? பலன் தருபவர் யார்? என்றார். எங்கடவுள்பஞ்சகந்தங்களுங்கெட்டாலும்முத்தியிற்கலந்திருக்கின்றானாதலால் பூசனையை அவனே ஏற்றுக்கொண்டு பலன்தருவான் என்றான். ஐந்துங்கெடுதலே முத்தி என்றனையாதலால் அம்முத்தியிலிருக்கின்றானென்ற உன் கடவுளுக்கு அவ்வைந்தொன்றாகிய அறிவுமில்லை அறிவில்லாத கடவுள் நீ செய்யும் பூசனையைஅறிந்து ஏற்பதுமில்லை; ஏற்காதபோது பலன்கிடைப்பதுமில்லை என்றார். அறிவின்றி உறங்குகின்ற ஒருவனை, நிந்தித்துடலில் மிதித்தல்முதலிய தீமைசெய்தார்க்கு வருகின்ற பலன்போல அறிவின்றிமுத்தியிலிருக்கும் எங்கடவுளை வழிபட்டார்க்கும் பலன்வருமன்றோவென்றான். (பலன் சடமாதலால் தானாகவாராது, ஒருதலைவன் சேர்ப்பிக்கவரும்) நீ தானேவருமென்கின்றாய். தானே வருமானால் அவ்வழிபாட்டில் அவனுக்குச் சம்மதமும் அசம்மதமுமில்லையாதலால், அவ்வழிபாட்டை அவன் பெற்றதுமில்லை என்றார். சம்மதம் அசம்மதமின்றிக் கடுநித்திரை செய்கின்றவனை ஒருவன் கொன்றால், அது உயிர்நீங்கிக்கொலையாய் முடிதல்போல,அவ்வழிபாடும் எங்கடவுளை அடையுமென்றான். நீ உறங்குகின்ற ஒருவனை உன்கடவுளுக்கு உவமை எடுத்துக்காட்டியதனால், உறங்குகிறவ

னுக்குள்ள உயிர்காணங்கள்போல, உன்கடவுளுக்கும் உள்ளன வாக நீ கூறிய உவமைவிளக்குகின்றது. இதனால் முன்பு உன்கட வுள், பஞ்சகந்தங்கெட்டு முத்தியடைந்தானென்றது விரோதமாம். ஆகவே உயிர்காணங்களுடனிருக்கும் உன் கடவுள் நீ கூறியபடி ஐந்துங்கெட்டு முத்தியடைந்ததுமில்லையாம். இனிப் பஞ்சகந்தங் களுள் ஒன்றாய அறிவுங்கெடின், அறிவு கெட்டது எதுவோ அது சடமே. * சடத்துக்கு இன்பமில்லையாதலால், உன்கடவுள் முத்தி இன்பமடைந்ததுமில்லையாகும். இது, உன் வாக்கினால் நிச்சய மானதென்றார்.

அதற்கு மறுமொழியின்றி, இதுவரை உண்மையென நம்பிய நம்முதல்வன் முத்திநிலையும் பாழாய் முடிந்ததேஎன்று கவலைகொ ண்டுநிற்கும்புத்தனை நோக்கி, நீ கவலையுற்றனுவதென்ன? இதுவரை நிகழ்ந்த வாதமிவ்வாறாயது தெரிந்தாய். இனிப்பொய்ம்முத்தியிற் போன உன்கடவுள் எல்லாப்பொருளும் அறிந்து பிடகாகம முத லிய நூலுரைத்துப் போனானென்றாயே. அவன், நிலைபெறாதஒரு கணத்தின்மாறும் அறிவுகொண்டு அந்நூலெல்லாம் எவ்வாறுசெய் தான். அதுவும் அவன் முத்திநிலைபோல் பொய்யேயாமென்றார். அறிவு, பொதுவும் சிறப்புமென்றிருவிதமாம். இது,மாங்களென்று பொதுவாயறிதலும், இன்னின்னமாமென்று சிறப்பாயறிதலும் போலாம், இவ்வாறே எங்கடவுள், அக்கினியானது விறகுகளைத் தொகையாயிட்டாலும் தனித்தனியாயிட்டாலும் எரித்துவிடுதல் போல், நூல்களைத்தொகுத்தும் விரித்துங்கூறினானென்றான். இவ் வுவமையும் தொகுத்து ஒருசொல்லாற்கூறுதற்கு ஒருவாறு பொ ருந்துமன்றி அவ்வொருகணநேரத்தில் தனித்தனிவிரித்துக்கூறினா னென்பதற்குப் பொருந்தாது. இதுவுந்தவிர நீ உன் கடவுளறி வுக்குவமையாக அக்கினியைக்கூறினை. அது ரூபமுள்ளது அறிவு ரூபமில்லாதது. அன்றியும், அக்கினி,நிகழ்காலத்திலிட்டவிறகைத் தான் தகிக்கும். முக்காலநிகழ்ச்சியும் அறியக்கூடிய கடவுளறி வுக்கு அது பொருந்தாதாதலால், அவன் எல்லாம் அறிந்துவிரித் துரைத்தானென்றதும் முத்திபோல் பொய்யேயாயது. அந்த

* இதனால் புத்தர்கள் சடமாகியபுத்தி தத்துவத்தையே பற்றி நிற்ப வர்களென்பது தெளிவாயது.

அற்ப அறிவாற்சொன்ன நூல்களும் பழுதுபட்டுத்துன்பம்விளைப்பதேயாமென்று, ஏற்றுக்கொள்ளத்தக்கமுறையாக எடுத்துக்கூறியருளினர். புத்தன்மேலும் வாதித்தற்கிடமின்றித்தோற்றொடுங்கிநின்றான். அவனைவென்றருளிய சம்பந்தசாணாலயர் சம்பந்தர்திருவடிகளில் வணங்கி அஞ்சலித்து நின்றனர். இதனால் அவர்நமக்குயாதொருசுதந்தரமுமில்லை,இச்செயல் சந்நிதானவிசேடத்திருவருளாலேயே நிகழ்ந்ததென்றமைந்தபோன்பின்பெருக்கத்தைவிளக்கியது. புத்தர் யாவருந்தமது சமயக்கொள்கைமாறி சம்பந்தரை வணங்கினார்கள்.

சம்பந்தர், சைவசமயம் ஒன்றே சகல சாஸ்திரங்களாலும் எடுத்துக்கூறும் மெய்ச்சமயம்; மற்றெச்சமயமும் அரசன் கீழ்ப் பொய்மை மெய்யெனப்பற்றி நிற்பனவேயாமென்றருளி அருள் நோக்கஞ்செய்தருளினர். புத்தரெல்லாரும் உண்மையறிந்து திருநீறணிந்து மேலும் திருவடிகளில் வணங்கிச் சைவரானார்கள். தேவர்கள் பூமழை பொழிந்தார்கள். சைவநிலை அப்புத்தர்களிடத்து மாறாதுநிலைத்துநிற்கும்படி, யானைமுதலெறும்புவரையுள்ள எல்லாரூபங்களும் பகாகார லிங்காகாரங்களாய்நிற்றலாலும், சகல சராசரங்களிலும் சைவநிலையே விளங்குதல் நேரேகண்டு தெளிகவென்று மேலும் அவர்க்கருள்செய்து, அங்குநின்றும் சென்று திருக்கடவூர்பணிந்து, அப்பமூர்த்திகளிருக்குமிடம்வினவித்தெரிந்து, அவர் வீற்றிருந்தருள்கின்ற திருப்பூந்துருத்திக்குச் செல்வாராய் முன்பு தம்மைத்தடுத்தருளிய அப்பரை விரைந்துதெரிசித்து மதுராபுரியில் சைவஸ்தாபனஞ்செய்துவந்தது தெரிவித்து மகிழ்விக்கக்கருதி அதிவேகமாகவரும்போது, அப்பர் அடியார் கூட்டத்துடன் எதிர்வந்து தூரத்தே வணங்கி இருபெருந் திருக்கூட்டத்தின் நெருக்கத்துள்ளே ஒருவரும் அறியாதபடி புகுந்து, முத்துச்சிவிகை தாங்கிக்கொண்டு வந்தனர். அவரைத் தெரிசிக்கவே வருகின்ற பிள்ளையார் திருவுள்ளத்தில் வேறொன்றுநிகழ, நமது அப்பர் இங்கிருந்தால் அத்தியந்த ஆவலுடன் முன்னரேவிரைந்து வந்திருப்பர். இன்னுங்காணப்பெற்றிலோமேஎன்று திருவுள்ளத்திற்கொண்ட தேட்டம் புறத்தும் யாவர்க்கும் விளங்க, அப்பர் எங்குச்சென்றனரோஎன்று வினவியருளினர். அது கேட்ட அப்

பர் மேலும் சிவிகை தாங்குதலிலேயே பேராசையுடையராயிருந்தும், இன்னும் மறைவாய்த் தாங்கிவந்தால், பிள்ளையார் சகிக்க மாட்டாரென்றுகருதி உடனே, அடியேன்தேவரீருடையசிவிகை தாங்கும்பெருவாழ்வுபெற்றிங்கேதான் வருகின்றேனென்றருளினர். பிள்ளையார் அச்சொல் முடியுமுன்னரே கீழேகுதித்தருளி அப்பர் திருவடிகளில் வணங்கினர். அப்பர் அதன்முன் வணங்கினர். இவ்வற்புதப்பெருங்காட்சிகண்ட இருதிறத்தொண்டர்களும் எதிரெதிர்வணங்கி அஞ்சலிகூப்பிநின்று ஆனந்தகோஷஞ்செய்தார்கள். பிள்ளையார் அப்பருடன்கோயில்சென்றுபணிந்துபுறத்து வந்து திருமடத்தில் வீற்றிருந்தருளினர்.

அப்பமூர்த்திகள் பிள்ளையாரைத் தேவரீர் மதுராபுரியிற் செய்த செயல்களென்னென்றுகேட்ப, அங்கு நிகழ்ந்தவெல்லாம் விளக்கியருளி, அரசியார் மந்திரியாருடைய பேரன்பின் திடத்தை பெரிதும் எடுத்துப்பாராட்டியருளினர். அது கேட்கும்போதே அவர்களைக்காணவேண்டுமென்றாசைகொண்ட அப்பர், தாம் தொண்டை நாட்டுத்தலங்கள் தெரிசித்து வந்ததுகூறியருளினர். சம்பந்தர், அத்தலத்தில் வைஷ்ணவர்கள் சிவநிந்தாதிகள் செய்து, எச்சிற்கல்லைகளை அப்பமூர்த்திகள் உழவாரப்பணி செய்யுமிடங்களில் எறிதல் முதலிய அநுசிதங்கள்செய்து வருதலையறிந்து அத்தூர்ச்செயல் நீக்கத்திருவுளங்கொண்டு திருப்பதிகம் பாடியருளினர். உடனே பூமிவெடிக்க, அதனுள்ளே அக்கொடியாருடன் அவர் வீடுமுழுதும் வீழ்ந்தொழிந்தன. பின்பு பூமி முன்போலாயது. இதனை அத்தலபுராணத்திற்காண்க. அப்பர் பிள்ளையாரைவணங்கி விடைபெற்று மதுராபுரி நோக்கிச்சென்றருளப், பிள்ளையார் திருவையாறு முதலிய தலங்கள்பணிந்து சீகாழிக்குவந்து தோணியப்பர் தெரிசனஞ்செய்து பதிகம்பாடிக்கொண்டுவீற்றிருந்தருளினர்.

பின்பு சம்பந்தர் தொண்டைநாடுதரிசிக்கவிரும்பிச் சிதம்பர முதலிய தலங்கள்பணிந்து, தொண்டைநாட்டில் திருவோத்தூர் சென்று சுவாமியைப்பணிந்துபாடியருளினர். அங்குள்ள ஒருசிவனடியவர் சம்பந்தரைவணங்கி எம்பெருமானே அடியேன்சிவபிரானுக்காக உண்டாக்கிய பனைகளெல்லாம் உயர்ந்துவளர்ந்தும்காயாவாயின, சமணர்சிலர் உங்கள்சமயவலியால் இப்பனைகள் காய்க்

கும்படி செய்யக்கூடுமோவென்று நகைத்திகழ்கின்றனர். தேவரீர் திருவருள்புரியவேண்டுமென்றுவிண்ணப்பித்தனர். சம்பந்தர் கோயில்சென்று பணிந்து "பூந்தொத்தாயின" என்று தொடங்கி யீற்றில் "குரும்பை யாண்பனை யீன்குலை யோத்தூர்" என்றுபாடியருளினர். உடனே அவ்வாண்பனைகளெல்லாம் பெண்பனைகளாய்க் குரும்பையீன்றுக்காய்த்தன. யாவரும் ஆச்சரியமடைந்தார்கள். சைவத்தினுண்மையுணர்ந்த சமணர்பலரும் திருநீறணிந்து சைவராயினர். சிலர்பயந்து அந்நாட்டைவிட்டோடினர். சிவபிரானுக்கென்றே பிறந்துவளர்ந்த அப்பனைகளும், திருப்பதிகத்திருவாக்குப்பெற்ற விசேடத்தால் காலமுடிவில் சிவபதமடைந்தன. சம்பந்தர் காஞ்சிபுரத்துவந்து ஏகாம்பரதெரிசனஞ்செய்து அங்குள்ள பலதலங்களும்பணிந்து திருமேற்றளிக்குவந்தனர்.

இதற்குப்பன்னெடுங்காலத்துக்குமுன், விஷ்ணுமூர்த்தி பாற்கடலில்வந்த விஷவெப்பத்தால் மேனிகருகியதுகண்ட இலக்குமி மனம்விகற்பித்தது தெரிந்து அவ்விஷ்ணு அக்கருநிறமாற்றியருளும்படி ஏகாம்பரநாதரைநோக்கித் தவஞ்செய்து அவரருளால் பவளநிறம்பெற்றனர். இவர்கருநிறத்துடனிருந்த இடம்பச்சைவண்ணப்பெருமாள்கோயிலென்றும், பவளநிறம்பெற்றிருந்த இடம் பவளவண்ணப்பெருமாள்கோயிலென்றும் இன்றும் வழங்கப்பெறுகின்றன. பின்பு விஷ்ணுமூர்த்தி நாம் இந்தப்பிரகிருதிமாயாசரீரியாயிருத்தலால் ஆபத்துக்கள்வருகின்றன. மாயையைக்கடந்த திவ்வியரூபியாயிருந்தால் என்றும்மாறாத நித்திய சுகியாய் வாழலாமென்றுகருதி, அத்தகைய சிவசாரூபம்பெறவிரும்பி ஏகாம்பரநாதரைநோக்கித் தவம்புரிந்தார். அத்தவத்துக்கிரங்கி எழுந்தருளிவந்த ஏகாம்பரர் உனக்குயாதுவேண்டுமென்றருளினர். அவர்சிவசாரூபந்தருளுகவென்றுவேண்ட, நமது இளையகுமாரன் இனிமேல் சீகாழியில்வந்தவதரித்துப், பலதலங்களுந் தெரிசித்துக்கொண்டு இங்குவருவான்; அவனைவணங்கிவேண்டினால், நமதுசிவரூபந்தருவானென்றருளி மறைந்தருளினர். அவ்வாஞ்ஞையின்படி, ஞானசம்பந்த மகாமந்திர செபதியானபரராய், அத்திருமேற்றளியில் அருந்தவம்புரிந்திருந்த விஷ்ணுமூர்த்தி, அங்குவந்தருளிய ஞானசம்பந்தர் திருக்கோலந்தெரிசிக்கப்பெற்றுக், திருவேகாம்பரநாத

சிவாஞ்ஞை சிரமேற்கொண்டு செய்துவந்த தவம்பழுதுபடுமோ? சபலமாயிற்றென்று ஆனந்தமேலீட்டினால் அடியற்றமரம்போல அடியில் வீழ்ந்து பன்முறைபணிந்து துதித்து நின்றனர். உடனே ஞானசம்பந்தர் திருவருட்பார்வைபுரிந்து அவ்விஷ்ணுவின் மாயா சரீரத்தை மாயாதித சிவரூபமாக்கித், திவ்விய விமானத்தின் மீதி வர்ந்து சிவலோகஞ்சென்று வாழும்படிசெய்தருளினர். இதனைக் காஞ்சிபுராணம் விளக்குகின்றது.

பின்பு சம்பந்தர், திருமேற்றளி வணங்கி மற்றுந் தலங்கள் பணிந்து திருவாலங்காடு சமீபிக்கவந்து, அது, உலகெலாமுய்யவந் தருளிய பாட்டியாராகிய காரைக்காலம்மையார் தலையால் நடந்து வந்த திருத்தலமன்றோவென மிதியாமல் ஒதுங்கிச் சென்று பக் கத்து ஒரு நகரில் பள்ளிகொண்டனர், அவர் கனவில் சிவபிரான் நம்மை மறந்தனையோவென்றருளினர். உடனே சம்பந்தர், பாட் டியார்மீதுள்ள அன்பினால் சிவபிரான் வலியவந்தருளிய பின்னும் மிதித்துட்செல்லாது அங்கிருந்தபடியே "துஞ்சவருவாரும்" என்று பாடிச்சென்று அன்பின்சொரூபநிலை விளக்கவந்தருளியதிருக்கண் ணப்பர் திருவடிபணியும் திருவேட்கைசெலுத்த, அவரைச் சிறப் பித்துத் திருப்பதிகம் பாடிக்கொண்டு திருக்காளத்தித் திருமலைக்கு வந்து பணிந்து, மேலேறித் திருச்சந்நிதிபுகுந்து நேர் தோன்றுந் திருக்காளத்தியப்பனைவணங்கி, அப்பலனே திவ்விய ரூபமாய்க் கைவரப் பெற்றதெனவே, வலப்பக்கத்து நின்றருளுகின்ற கண் ணப்பநாயனார் கமலபதங்களிற் பணிந்து, கண்ணீர் பொழியத் துதித்துநின்று, ஒருவாறு புறம்போந்து காலந்தோறுந் தெரிசித் திருந்து திருக்கயிலை, திருக்கேதாரம், திருக்கோகர்ணம், திருப்பரு ப்பதம் முதலிய திருத்தலத் திருப்பதிகங்களும் பாடியருளிப், பன்னாட்சென்றபின் பலதலங்கள் பணிந்து திருவொற்றியூர்க்கு வந்து தெரிசித்துக்கொண்டிருந்தனர்.

நெடுங்காலத்துக்குமுன் திருமயிலாப்பூரிலே, அன்பு, குணம், அருள், பொருள் முதலிய எவற்றாலும் சிறந்த சிவநேசச்செட்டி யாரென்பவர், ஞானசம்பந்தரது மகிமை கேள்வியுற்று அளவு கடந்தபேரன்பினராய்த், தமது அருந்தவப் புதல்வியாராகிய பூம் பாவையாருடைய உத்தம சத்துவகுண நிலைகள் நோக்கி அவரை

ஞானசம்பந்தர்க்கே அர்ப்பணஞ்செய்ய நினைந்து, மனைவியார் சுற்றத்தாரெல்லார்க்குந்தெரிய என் புத்திரியையும், என்பொருளையும் என்னையும் ஞானசம்பந்தர்க்கே கொடுத்துவிட்டேனென்று உறுதிகூறி மகிழ்ந்தனர். பூம்பாவையார், ஒருநாள் மலர்கொய்யும்போது விஷந்தீண்டப்பட்டு உயிர்நீங்கினர். செட்டியார்மிகவருந்தி இப்பெண்ணை ஞானசம்பந்தர்க்கே தத்தஞ்செய்து விட்டேனாதலால் அவரிடம் சேர்ப்பதே தகுதியென்று அவ்வுடம்பை முறைப்படி தகனஞ்செய்து எலும்புசாம்பலை ஒருபொற்குடத்தில்வைத்துக் காலந்தோறும் பத்திரபுஷ்ப தூபதீப நைவேத்தியாதிகளால் நெடுநாட்பூசித்துவந்தனர். அப்போதுஞானசம்பந்தர் திருவொற்றியூரிலிருப்பதுதெரிந்தார். தெரிவித்தார்க்கெல்லாம் பொன் மணியாதிகள் பொழிந்தார். மயிலாப்பூர் முதல் ஒற்றியூர்வரை நடைப்பந்தரிட்டு வாழை, கமுகு, கரும்பு, பூமாலை, பொன்மாலை, மணிமாலை மேற்கட்டி தொங்கல் கவரி குச்சம் முதலியசர்வாலங்காரங்களுஞ்செய்வித்தார். நடைப்பாவாடைவிரித்து சுகந்தபுஷ்பங்கள் நிறைவித்தார். திருவொற்றியூரிற்சென்று தெரிசிக்க விரைந்தெழுந்தார். உடன் வருவார் பலருடன்சென்றார். சம்பந்தர் திருமயிலாப்பூர் தெரிசித்தற்கெழுந்தருளி வருதலைத் தூரத்தே கண்டார். அளவிலானந்தங்கொண்டார். நிலமுறப்பலமுறைபணிந்தார்.

சம்பந்தர் அதுகண்டு சிவிகையினிறங்கியருளி அவர் செயல் அடுத்தவர்கூறத் தெரிந்துவந்து கபாலீசர் கோபுரம் பணிந்துட்சென்று வலம்வந்து திருமுன் பணிந்து கோபுரவாயில்வந்து, சிவநேசரை நோக்கி உமது புத்திரியின் அங்கம் நிறைந்தகுடத்தைக் கொண்டுவருகவென்றருளினர். செட்டியார் அக்குடத்தை அலங்கரித்துச் சிவிகையுள்வைத்துத் திரைசூழ்ந்து, சேடியர்சூழச் சகல வரிசைகளுடன் கொண்டுவந்து எடுத்துக் கோபுரவாயிலிற் கபாலீசர் திருமுன்வைத்து வணங்கினர். இவர் இக்குடத்துக்குநியம பூசைசெய்து வந்ததும், சிவசந்நிதியில் வைத்ததும் புத்திரிவாஞ்சையாலன்று. ஞானசம்பந்தர் சொத்தாய்விட்டபடியால் அவரது திருவருளால் உய்திபெறும் உண்மை நோக்கி உயிருள்ள உடலாகவே ஞானசம்பந்தருடைய ஞானசத்தி முறையில் வைத்துப் பூசித்து வந்தனர். அம்முறையில் அநாசாரமின்மையால் சிவசந்

நிதியில் வைத்தனர். இதுவே உண்மையென்பது யாவர்க்கும் விளங்கவே, சிவசந்நிதியில் வைக்கும்படி சம்பந்தரும் ஆஞ்ஞாபித்தனர். அப்பூம்பாவை உயிர்பெறச்செய்யும் வல்லபம் சிவனேயாகிய தமக்கிருந்தும், சிவசந்நிதியில் வைக்கும்படி ஆஞ்ஞாபித்ததுவும் "உம்பர்பிரா னுற்பத்தி யாதிகளுக் குரிய னுயிர்தானுஞ் சிவானுபவ மொன்றினுக்கே யுரித்தாம்" என்ற சித்தாந்தசுருதிப்படி, சிருஷ்டியாதி கிருத்தியங்கள் சிவனுக்கேயுரியன. அயனரியாதிய சீவரெவர்க்குமில்லை. சீவர்க்குரியது திருவருளாற்பெறும் சிவானுபவமே என்னுமுண்மை விளக்குதற்கேயாமென்க.

பின்பு சம்பந்தர், அக்குடத்தை நோக்கிப் "பூம்பாவாய்"என்றழைத்துப் பாடத்தொடங்கினர். அக்குடத்தில் எலும்புஞ்சாம்பருந்தானிருக்கிறதென்று நினைத்தால் பூம்பாவாய் என்றழைக்கமாட்டார். பூம்பாவை இருப்பதாகவேகருதி அழைத்த இதுவும் மேற்கூறிய உண்மையை வலியுறுத்துகின்றது. அவ்வாறு பாடத்தொடங்கியவர், "பூம்பாவாய்" பூமியிற் பிறந்தவர்கள்பெறும் உத்தமப்பிரயோசனம், சிவாகமவிதிப்படி சிவதீக்ஷை பெற்றுப்பூசித்துச்சிவனைப் பிரியாமல் ஒட்டிக்கலந்துவாழும் உத்தமகுண நிலைமையால், உருத்திரகணங்களென்றெடுத்தோதப்பெறும்சிவபக்தபூசனையாகிய மாகேசுரபூசனை, சிவமகோற்சவசேவை, சிவபக்தமகோற்சவசேவை, சிவமகாகும்பாபிஷேகமாகிய மகாசாந்திதெரிசனமுதலிய சிவதருமங்களேஎன்று சிவசாஸ்திரங்கூறுகின்றதுண்மையேயாதலால், இவ்வுலகத்தார் காணும்படி இக்குடத்தினின்றும் வெளிவருவா யென்னுங் கருத்து அத்திருப்பதிகத்தில் விளங்க வைத்து, மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்

கட்டிடங் கொண்டான் கபாலீச் சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிடல் காணாதே போதியோ பூம்பாவாய். என்று

தொடங்கிப் பாடிவரும்போது "போதியோ போதியோ" என்று ஒவ்வொரு பாட்டிலு மியைந்த திருவாக்கு முதலிய திருமந்திரத்திறவமுதஞ் சேர்தலால், முதற் பாட்டினாலத்திருக்குடத்திலுள்ள எலும்புஞ் சாம்பருந் திரண்டுருவமாகி, அதன்மே லெட்டுப்பாட்டுக்களால் வளர்ந்து பன்னிரண்டு வயசு நிரம்பியது. பத்தாந்திருப்

பாட்டில் "பூம்பாவாய்" நீ வெளிவந்தால், சைவம்பொய்ச் சமய மென்று எடுத்துப்பேசிய சமணர் சாக்கியர் முதலிய அந்நியசமயி களும், சைவமே மெய்ச்சமயமென்று எடுத்துப் பேசிப்பாராட்டு வார்கள் என்று பாடும்போது, இதுவே உண்மையென்பதுபாவர் க்கும் விளங்கப் பூவை அக்குடத்தினின்றும் எவ்வுலகத்து மிணை யில்லாத சர்வாங்க லக்ஷண அதிசுந்தரவதியாய் அஞ்சலி சிரமேற் கொண்டு வெளிவந்தனள். சம்பந்தர் திருப்பதிகந் திருக்கடைக் காப்புச் செய்தருளினார். யாவரும் ஆச்சரியமுற்றார்கள். திருத் தொண்டர் சிவநாமமுழக்கஞ்செய்தார்கள். தேவர் முனிவர்யாவ ரும் புஷ்பமழைபெய்தார்கள். சமணர் முதலிய புறச்சமயிகளும் சைவவலிதெரிந்து வியந்து உள்ளீடில்லாத பொய்ச்சமயம்புக்கு நின்ற தம் எளிமைநோக்கி மெய்குலைந்து வீழ்ந்தார்கள். முன்னு ளில்எண்ணில்லாத வயசுமுதிர்ந்தபிரமன்தான்படைத்ததிலோத்த மையிடத்து அழகு வெள்ளத்தைக்காமமீதூர நான்குமுகங்களாற் கண்டான். இந்நாளில்அவளினுமிக்கபேரழகுள்ள பூம்பாவையிடத் துச் சிவபுண்ணியமே ரூபமாகவளர்ந்து பதினாறுவயசுள்ள ஞான சம்பந்தர் சிவனருள்வெள்ளமே ஆயிரமுகங்களாற்கண்டருளினார்.

சிவநேசச்செட்டியார் இவ்வற்புதமெல்லாங் கண்டுமகிழ்ந்து ஞானசம்பந்த பாதங்களிற் பணிந்தனர். பிரமசிருட்டியில் முன் வந்த மலசரீரத்தினீங்கி இப்போது ஞானசம்பந்த சிவசிருட்டியில் அவரது அருள்வாக்கமுதமயஞானமே சரீரமாகவந்த "பூம்பாவை யார்" கபாலீசரைப்பணிந்துவந்து சம்பந்தர் பாதங்களில்வணங்கி ஒதுங்கி நின்றனர். சம்பந்தர் சிவநேசரைநோக்கி இப்புத்திரியை அழைத்துக்கொண்டுசெல்லுகவென்றருளினர். சிவநேசர்மேலும் வணங்கி எம்பெருமானே இவ்வருந்தவப் புதல்வியைத்திருமணஞ் செய்தருளுகவென்று வேண்டினர். சம்பந்தர் அவரை நோக்கி நீர் பெற்ற பெண் விஷத்தாலிறந்தனள். பின்பு திருவருட்செயல் யாவர்க்கும் விளங்கும்படி நாம் பிறப்பித்தமையால் நீர் கூறியது தகாதென்றருளினர். அதுஉண்மையானாலும்முன்னிச்சயித்திருந்த எண்ணம் முறைபட்டு நிற்றலால், எண்ணிய காரியங் கைகூடவில் லையேயென்று சுற்றத்தவருடன்மிகவருந்தினர். சம்பந்தர்அவர்க்கு வேதாகமத்துணிவை எடுத்து விளக்கித் தேற்றியருளினர். சிவ

நேசர் தெளிந்து அவர்க்கென்றே தத்தஞ்செய்த அப்பூம்பாவை யாரைக் கன்னிகாமாடத்தில் வீற்றிருப்பச்செய்து பேணிவருவாரா யினர். ஞானசம்பந்தர் கபாலீசரை வணங்கித் திருவருளைத்துதித் துப் புறத்துவந்து காலந்தோறும் தெரிசித்திருந்து சிலநாளான பின் திருவான்மியூர் முதலிய தலங்கள் பணிந்து சிதம்பரம் வந்து சிற்சபேச தெரிசனஞ்செய்துகொண்டிருந்து அதுதெரிந்துஅங்கு வந்த சிவபாதவிருதயர் முதலியருடன் சீகாழிக்குவந்து தோணி யப்பரைத் தெரிசித்துக்கொண்டு திருமாளிகையில் வீற்றிருந்தரு ளினர். பூம்பாவையார் ஞானசம்பந்த சிவத்தியானமே செய்து கொண்டு நெடுநாளிருந்து சிவபதநிழலிற் சேர்ந்தனர்.

முருகநாயனர், நீலநக்கநாயனர் முதலியர் சுற்றத்தவர்களு டன் சீகாழிக்குவந்துசம்பந்தரை இடையறாது சேவித்துக்கொண் டிருந்தார்கள். சிவபாதவிருதயரும் சுற்றத்தவர்களும் பிள்ளை யாரைவணங்கிநின்று, ஒருகன்னிகையை மணந்தருளவேண்டுமெ ன்றுபிரார்த்தித்தனர். சம்பந்தர் அதனைமறுத்தருள, மேலும்பணி ந்து தேவரீர் வைதிக சைவமுறையை இப்பூமியிற்செய்துகாட்டி நிலைநிறுத்த வந்தவராதலால், மணம் புரிதலையும், மேற்கொண்டு, காட்டி உலகையுய்வித்தருள வேண்டுமென்று விண்ணப்பிக்க உடன்பாடு செய்தருளினர். இவ்வாறு சம்பந்தர், சமுசாரபந்தம் மேற்சென்றுய்யவிடாமல் அதுவே இன்பென நிறுத்தித் தடை செய்து துன்பமே தருமென்பதுலகுணர்ந்து அதனில் உவர்ப்புண் டாகும்படி பொது நிலையால் மறுத்தருளிப், பின்பு உத்தமகன்னி கையை உத்தமநிலையில் மணந்து முறைபிறழாது வைதிக சைவ வழிநின்று இல்லறம் புரிவதுமேற்சென்றுய்தற்கிடமாமென்னுஞ் சிறப்பு நிலையில் உடன்பாடு செய்தருளினர். இவ்வுண்மையை இனி இத்திருமணமூலமாகப் பெருமணத்தில்யாவர்க்கும்பேரின்பு தந்தருளுதலும் விளக்கும். உடன்பாடுதெரிந்த சிவபாதவிருதயர் சுற்றத்தவருடன் திருநல்லூர் நம்பாண்டார் நம்பியாரென்னும் வைதிக சைவோத்தமருடைய அருந்தவ புத்திரியாரே தகுதி யுடையரென்றுநிச்சயித்து, அவ்வூர்க்குச்சென்று,எதிர்வந்துபணிந் துபசரிக்கின்ற நம்பியாருடன் அவர் மாளிகையில் வந்திருந்தனர். நம்பியார், அவர் வந்தகாரியந்தெரிய விரும்புங்குறிப்புணர்ந்து சிவ பாதவிருதயர் உள்ளபடி தெரிவித்தனர்,

நம்பியார் பெருங்களிப்பினராய், உமாதேவியார் திருமுலைப் பாலுண்டருளிய செல்வக்குமாரர் அடியேன் புத்திரியை மணஞ் செய்ய எப்பெருந்தவம் புரிந்தேன்? யானுமுய்ந்தனன், என்குல மெலாமுய்ந்தனவென் றுகூற, அவரது அன்பின் பெருமையை வியந்து சிவபாதவிருதயர் சீகாழிக்குவந்து ஞானசம்பந்தரைப் பணிந்து தெரிவித்துத், திருக்கல்யாண சுபதினம் நிச்சயித்து மங் கலவரிசைகள் பொலிய, எங்கெங்குந்திருமணப்பத்திரிகையனுப்பி அலங்காரவகையெலாஞ் செய்வித்துச் சுபதினத்தில் அங்குரார்ப் பணமுதலியன செய்துவந்தனர். இத்திருக்கல்யாணநிகழ்ச்சிதெரி ந்து எல்லையில்லாத்தொண்டர் உறவினர் எல்லாரும் வந்து நெருங் கினர்கள். நம்பாண்டாரும் திருமணப்பத்திரிகையை மங்கலம் பொலிய எதிர்வந்து வாங்கிச் சிரமேற்கொண்டுபசரித்து அலங் காரங்கள் செய்வித்து ஏழுநாள்முந்தியே அங்குரார்ப்பணமுதலிய சடங்குகள் செய்து வந்தனர்.

ஞானசம்பந்தர் திருக்கல்யாண முதற்றினத்தில், பிரமசரிய சமாவர்த்தனமும் ரக்ஷாபந்தனமுஞ் செய்துகொண்டு, திருக்கல் யாணதினத்தில் நித்திய நியமங்களை முடித்துத் திருத்தோணியப் பர் தெரிசனமும் இம்மட்டில் சமாப்தி யென்னுந் திருக்குறிப்பு விளங்கப், பன்முறைபணிந்து துதித்து அரிதிற் புறம்போந்து, சீகாழி எல்லைவரை நடந்துவந்து அப்பால்நின்று, அவ்வெல்லையை பணிந்தெழுந்து, முத்துச்சிவிகையில் வீற்றிருந்தருளினர். இதனை "வாழி மாமறை முழங்கிட வளம்பதி வணங்கி, நீழல் வெண்சுடர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார்" என்று பெரியபுராணம்விளக் குகின்றது. இதற்குமுன்னெல்லாம் தோணியப்பரைப் பணிந்து கோயிலுக்குவெளிவந்தவுடன் சிவிகையிலெழுந்தருளிச்செல்வதே வழக்கமாகயிருக்க, இப்போது ஊருக்குப் புறத்துவந்து அப் பதியை வணங்கியது, சீகாழியானது உலகெலாமுய்யும்படி தாம் அவதரித்தருளுதற் கிடமாயும், சரவணத்தடத்தில் கார்த்திகை மாதர் பாலூட்டப் பார்த்திருந்த உமையம்மையார் நேர்வந்து பாலூட்டுதல் முதலியநன்மைகளுக்கிடமாயுமுள்ளவிசேடநோக்கி யும்,இனிஇங்குத்திரும்பாத பிரிவுநோக்கியுமேபோலும். இதனும், பிறர் உலகமணமென்று நோக்கும் அத்திருமணத்தையே மீளாத

உலகாதீத சிவப்பெருமணமாக்கியுய்விக்கத் திருவுளங்கொண்டே செல்கின்றாரென்பது தெளிவாம். இவ்வாறுஞானசம்பந்தர் (௧௬௮) திருத்தொண்டர்களும் மேலும் அங்குவந்து நிறைந்த சிவநேசர் திருக்கூட்டமும் அரகரமுழக்கஞ்செய்துடன்வர, வேதபாராயணம் மலிந்துமுழங்க, மங்கலவாத்தியங்கள் பொலிந்தெழுங்க, முத்துச் சின்னங்கள் திருநாமங்களெடுத்தோத இவ்வருட்பெருந்திருமணந் தெரிசித்துய்யக்கருதி முப்பத்துமுக்கோடி தேவர் யாவரும் ஆகாசவீதியில் நெருங்கிவரப் பற்பலநகர்களிலிருந்து பலவகைத் தொண்டர்களெல்லாரும் நெருங்கிச்சூழ்ந்து சேவித்துவர நல்லூர் சமீபிக்கவந்து எதிர்கொண்டு வணங்குவாருடன் திருக்கோயில் சென்றுபணிந்து பதிகம்பாடிவெளிவந்து திருமடத்தில் வீற்றிருந் தருளினர்.

பின்பு பிராமணர்கள் பணிந்து திருமணக்கோலங்கொண்டரு ளுகவெனவேண்டித், திருமேனியில், பற்பல வாசனைத் திரவியங்க ளும், பனிநீரும் சேர்த்தரைத்த சந்தனக்குழம்புபூசித், திவ்விய பரிமள சுகந்தவகையெல்லாம் நிறைந்து அஷ்டதிக்குங்கமழுகின்ற திருமஞ்சனத்திருவபிஷேகஞ்செய்து, திருவொற்றாடைசாத்தினர். உடனே சம்பந்தர் இனி யாவர்க்கும் பசுத்துவநீக்கமும் சிவத்துவ விளக்கமுந்தந்து சிவசோதியிற்கலப்பித்தருளும் திருவுளக்குறிப்பு விளங்கத், திருவைந்தெழுத்தோதித் திருவெண்ணீறணிந்து திரு வருள் விளக்கத் திருவடையாளமாலையும் (உருத்திராக்கவடமும்) தாமே அணிந்துகொண்டனர். பின்பு பிராமணர்கள், பலவகைக் களங்கமாய்ப் பந்திக்கின்ற மலவழுக்குமுழுதும் நீக்குதற்கின்றி யமையாத களங்கமற்ற தூவெள்ளொளிச் சிவஞானங்கொடுத்தரு ளும் அவர் திருவுளக்குறிப்பின்படியே, யாவும்வெள்ளொளியணிக ளாகவே அலங்கரிப்பாராய்த், திருவெண்பட்டாடை வெண்பட் டுத்தரியஞ்சாத்தித், திருவடியில் முத்துக்களாலாகிய தண்டை சிலம்பு சதங்கையாதிகளும், திருப்பாட்டின்மேல் பொற்சரட்டிற் கோத்த முத்துவடமும், திருவரையிற்சாத்திய வெண்பட்டினது முத்துவரிசை விளிம்பிற்சேர்ந்து விளங்குகின்ற முன்றானைமேல் கடிசூத்திரமாக முத்துப்பட்டிகையும், திருவயிற்றின்மீது திருவுதா பந்தனமாக முத்துவடமும், அதன்மேல் முத்துச்சன்னவீரமும்,

அதன்மேல்முத்துவடப்பூணூலும், முத்துஆரமும், திருக்கைவிரல்களில் வயிரமோதிரங்களும், திருக்கரங்களில் முத்துக்கங்கணமும், காப்புக்கொலுசுவளைகளும், திருமுழங்கைகளில் பொட்டுவரிசை முத்துவடமும், திருத்தோள்களில் முத்துவலயங்களும், திருக்கழுத்தில் முத்துக்கண்டிகையும், திருக்காதுகளில் முத்துக்குண்டலங்களும், தெய்வத்திருநீற்றுத்திருந்தொளிமேலாகத் திரண்டதென்னத் திருநெற்றியின்மேல் முத்துத்திரணையும், அதன்மேல் முத்துமகுடமும் முறையாகச்சாத்தி அலங்கரித்தார்கள்.

இவையெல்லாம் பிறரணியத், திருவெண்ணீறு திருவடையாளமாலைகளின் தெய்வமகிமைச்சிறப்புவிளங்கத் தாமேஅணிந்துகொண்ட திருஞானசம்பந்தர் சிவத்தியானத்துடன் முத்துச்சிவிகைமேலெழுந்தருளி, மங்கலவாத்தியங்கள் முழங்கத் தேவர்கள் பூமழைபொழியத்திருச்சின்னங்கள் திருஞானசம்பந்தர்வருகின்றாரென்றெடுத்தோதக் குடை கொடி சுருட்டி ஆலவட்ட முதலியன மலியச், சகலவைபவங்களும்பொலியத், திருமணப்பந்தர்முன்புவந்தருளிச், சிவிகையினின்றும் சுகந்தபுஷ்பங்கள்பொற்சுண்ணங்கள் பரப்பிவிரித்தபாவாடைமீதிறங்கியருளிச் சுமங்கலமாதர்கள்,பூரணகும்பங்கள், ரத்தினதீபங்கள், பரிமளதூபங்கள், சுக்ந்தபுஷ்பமாலைகள், பொற்பாலிகைகள், கலவைச்சாந்துமுதலியவைகள் ஏந்திக் கொண்டெதிர்வந்துவாழ்த்த, அப்பாவாடைமேல் நடந்தருளித்திருமணமண்டபமுன்னிட்ட ரத்தினபீடத்தின்மீதுநின்றருளி, அம்மாதர்கள் மங்கலம்பாடிக்கரகநீரொழுக்கிக்கொண்டு வலம்வந்துவாழ்த்திக்கொண்டுநேர்முகமாகமுன்செல்ல, அம்மண்டபத்தினுட்புகுந்து திவ்வியரத்தினசிங்காசனத்தில் வீற்றிருந்தருளினர்.

அச்சமயம் நம்பாண்டார்நம்பியார் தமதுபத்தினியார் கரகநீர் வார்ப்ப, ஞானசம்பந்தசிவபாதங்களில் அபிஷேகித்துப்பூசித்து, அத்தீர்த்தஞ்சிரமேற்றெளித்து உள்ளும்பூரித்து மணமண்டபம் மாளிகை சுற்றத்தார் யாவர்மேலுந்தெளித்துத், திருமுன்னின்று, அளவிலானந்தம்பெருகக் குலங்கோத்திரமுதலியன விளக்கும் மந்திரங்கூறி என்புத்திரியை ஞானசம்பந்தருக்குக் கொடுத்தேனென்று அவர்திருக்கரத்தில் நீர்வார்த்துத் தத்தஞ்செய்தனர். பின்பு பாணிக்கிரகணசமயம்வர, முன்னமே கன்னிகாசமாவர்த்தனாகூடி

பந்தனுதி சடங்குகள் நிறைவேறி மணக்கோலம் புனையப்பெற்ற மணமகளை, மாதாபிதா சகோதரிகள் அழைத்துக் கொண்டுவந்து மணவாளர் வலப்பக்கத்திலிருக்கச் செய்தார்கள். அச்சமயம் அத் தம்பதிகள் திருமணத் திருக்கோலத்திருவருட்பெருஞ்சிறப்பைத் தெரிசிக்கப்பெற்றாரெல்லாரும், கண்ணிமையாதுநோக்கியபடியே நின்று அளவிலானந்தப் பெருங்கடலின் மூழ்கித் தேவரினும் மேலாஞ்சிறப்படைந்தார்கள். திருநீலநக்கநாயனார் திருமுன்னிருந்து திருக்கலியாணத் திருச்சடங்குகள் சிவாக்கினிமுகமாகச் சிவபதநிழலில் சேரவிரும்புமனத்துடன் செய்துவந்தனர். திருஞான சம்பந்தர் தேவியார் திருக்கழுத்தில் திருமங்கலத் திருப்பூட்டித், தேவியார்திருக்காம்பற்றிக்கொண்டெழுந்து சிவாக்கினியில்பொரி தூவி அதனைவலஞ்செயத்தொடங்குஞ்சமயம், வேதமுதலிலெடுத் தோதும் அக்கினிசிவனேயன்றோ! அவனையேவலஞ்செய்து பணிவோமெனத்திருவுளங்கொண்டு, கைப்பிடித்ததேவியாருடன்யாவருஞ்சூழ்ந்துவரத், திருக்கோயிலுட்சென்று வலஞ்செய்து பணிந்து திருமுன்நின்று, "கல்லூர்ப்பெருமணம் வேண்டா கழுமலம், பல்லூர்ப் பெருமணம் பாட்டுமெய் யாய்த்தில, சொல்லூர்ப் பெருமணஞ் சூடல ரேதொண்டர், நல்லூர்ப் பெருமண மேயநம் பரனே." என்றுதொடங்கித் திருப்பதிகம்பாடியருளினார்.

இதனில், நல்லூரென்னும்நகரிலுள்ள திருப்பெருமணமென்னுந் திருக்கோயிலில் வீற்றிருந்தருளுகின்ற ஆப்தனென்று சுருதி கூறும் நம்பனே, அம்மிமிதிப்பித்து அருந்ததிகாட்டுதலானது, மனைவிகாலைப்பிடித்து அம்மிக்கல்லின்மீதுவைத்து, அகலிகைகற்புநெறிதவறினமையால் கல்லாயிழிந்தனள். ஆதலால் நீ கற்புநெறியிற் சிறிதுந்தவறாதேயென்றும், அருந்ததியை நேர்காட்டிக் கற்பிற் சிறந்தமையால் இவ்வருந்ததி மேற்பதவிபெற்று வாழ்கின்றனள் ஆதலால் நீயுங்கற்பிற்சிறந்துவந்தால் மேற்பதவிபெற்றுவாழுவாயென்றும், மனைவியைக்கைப்பிடித்தவுடனே அவளுக்குநாயகன் முதலில்தெரிவிப்பதாகிய நற்செயலேயாம். ஆயினும் இருவகையும் ஒத்தசம்மதத்துடன் நிச்சயித்துப், பிரசித்திசெய்து,யாவருங்காணப்பெண்ணின் பிதா அன்புடன் தத்தஞ்செய்யும் நீதிமுறையில் அப்பெண்ணை ஏற்றுக்கொண்டு அக்கினி சாக்ஷியாகத் திருப்

பூட்டி, மணிவியென்று அவள் கையைப் பிடித்தவுடனே தாழ்ந்து அவள் காலைப்பிடிக்கும்படி நேர்ந்து சமுசாரத்தினிழிவை விளக்குகின்றது. ஆதலால் அடியேனுக்கு (அம்மிமிதிப்பிக்கின்ற மணம்) இக்கல்லூர்ப்பெருமணம் வேண்டா. (இதனை வேண்டினால்) அடியேன், கழுமலம் (சீகாழி) முதலாகப் பல்லூர்களினுஞ்சென்று, சமுசாரபந்தம் துக்கமுடையதென்றுபாடிய சிவப்பெருமணத்தைத யுடைய பாட்டுக்கள் மெய்ம்மையுடையனவாகில அதனால் சொற்களாற் றொடுக்கப்பட்ட பெருமணத்தையுடைய அப்பாட்டுக்களை தொண்டர்கள் சிரமேற் சூடிக்கொள்ளமாட்டார்கள். (ஆதலால் திருவருட்சோதிப் பெருமணமே தந்தருள்க) வென்று வேண்டுந் திருவுளக்குறிப்புணர்ந்த சிவலோகத்தியாகேசப்பெருமான், தமது திருக்கோயிலைத் தன்னுட்கொண்டு எங்கும் விரிந்து நிறைந்துயர்ந்து விளங்கும் ஒரு பெருஞ்சோதிகாட்டி, நமது அருமை மைந்தனே, இச்சோதியுள்ளே நீயும் பத்தினியும், உன் திருமணந்தெரிசிக்கவந்தார் யாவரும் புகுந்தின்புற்று வாழுகவென்று ஆஞ்ஞாபித்து வாயிலும் வகுத்தருளினர்.

உடனே ஞானசம்பந்தர் அக்கோயில் வாயில் முன்னுள்ள இடபநந்தியை இந்நகர்ப் பக்கமெங்குஞ் சென்று யாவரையுந் தூரத்திவருகவென்றருளினர். இதனாலிவர் நந்தியையும் ஏவிப்பணிகொள்ளும் சிவசுப்பிரமணியப் பெருமானே யென்பதுவிளக்கமாம். அவ்வாணை சிரமேற்கொண்ட அந்நந்தி எங்குஞ் சென்று யாவரையுந்தூரத்திவந்து நின்றது. நின்ற இடம் இப்பொழுதும் "ரிஷபந்தூரத்தி" என்ற பேருடன் விளங்குகின்றது. தூரத்திவரப்பட்ட யாவர்க்கும், உமையம்மையார் தாமே வலியவந்து திருவாயிலில் நின்று, தமது இளையகுமாரர் திருவுளக்குறிப்பிற்கிணங்க விபூதிகொடுத்து உள்ளே புகுத்தியருளினர். இதனை இவாது சுவேதவிபூதிநாயகி (திருவெண்ணீற்றுமையம்மை)என்று வழங்குகின்ற திருப்பேரும் விளக்கும். இச்சரித்திரம் நல்லூர்ப்பெருமண ஸ்தலபுராணத் துள்ளது. பின்பு ஞானசம்பந்தர், சிவதீக்ஷைமுறையில் இருவினையொப்புமலபரிபாக சத்திநிபாதமுற்ற தீவிரதர பக்குவ ஞானிகளுக்கே பாமுத்திகிட்டுமென்றுகூறுஞ் சிவசாஸ்திர வரம்பைப் பாதுகாத்தற் பொருட்டு, அத்தகைய

"ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சி வாயச்சொ லாமென்று" திருவுளங்கொண்டு,

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
யோது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாத நாம நமச்சி வாயவே. என்று வானுலக மண்ணுலக மெங்குமுள்ள யாவர்க்குங் கேட்கும்படி பாடியருளி, எல்லாரும் இந்தத் திருவருட்பெருஞ்சோதியுள்ளே புகுந்துபேரின்ப முற்று வாழுகவென்றருளினர்.

உடனே திருநீலநக்கநாயனார், முருகநாயனார், சிவபாதவிருதயர், நம்பாண்டார்நம்பியார், திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் முதலியர்கள், தங்கள் தங்கள் பத்தினி புத்திர பந்து மித்திரர்களுடன் அச்சோதியுட்புகுந்தனர். சிவிகை தாங்குதல், குடைபிடித்தல், திருச்சின்னம் ஊதுதல் முதலிய பலவகைத் திருத்தொண்டுகள் செய்துவந்த பதினாறாயிரந் திருத்தொண்டர்களும் பணிந்து புகுந்தார்கள். சைவர், பாசுபதர், மகாவிரதர், காளாமுகர், வாமர் வைரவர் என்னும் ஆறுவகை உட்சமயிகளும், சித்தாந்த சைவர்களும் வைதிக சைவர்களும், பூஜாகாலங்களில் எப்போதும் கும்பிட்டுவருகிற முறைப்படி அப்போது கும்பிடவந்தநியமத்தொண்டர்களும், திருநந்திதேவரால் எங்கும் தூரத்தப்பட்டுவந்த வழிப்போக்கர் முதலிய பல்லாயிரவர்களும், புகுந்தார்கள். பன்னெடுங் காலங்களுக்குமுன் பற்றெல்லாநீங்கி, முத்தி ஒன்றையேவேண்டி அருந்தவம்புரிந்த எண்பதினாயிரமுனிவர்க்குச், சிவபிரான் எதிர் வந்து நீங்கள் முத்தியையே விரும்பிச்செய்யுந்தவங்கண்டு மகிழ்ந்தனம். நமது இளையகுமாரன் இனிமேல் சீகாழியில் வந்தவதரித்துப், பற்பல அற்புதங்கள் விளங்க எங்குஞ்சென்று சைவஸ்தாபனஞ்செய்து, முடிவில் நல்லூர்ப்பெருமணத்துவந்து யாவர்க்கும் பரமுத்திதந்தருளும்போது உங்களுக்குந்தருவான், நீங்கள் அத்தலத்திற்சென்று தவஞ்செய்து கொண்டிருங்களென்று ஆஞ்ஞாபித்தபடி, அங்குவந்துஅருந்தவஞ்செய்து அதனையே எதிர்நோக்கியிருந்தமுனிவர்களும் அச்சோதியுள்ளே புகுந்தார்கள். (அம்ஙு) முனிவர் சரித்திரம் பெருமணஸ்தலபுராணத்துள்ளது. இதனைச்

சேக்கிழார்பெருமானும் "வேறு திருவருளினல் வீடுபெற வந்தாரும்" என்று விளக்கியருளினர், யாவரையும் சோதியுட்புகுத்தியருளிய ஞானசம்பந்தர், பத்தினியாரைக் கைப்பிடித்துக் கொண்டு திருவருட்பெருஞ்சோதியுட்புகுந்தருளி, பாசபசுஞானங்களைக்கடந்து மேனிற்கும் சிவஞானமுதிர்ந்து முறுகிவிளைந்தமுடிவின்கண், அதிதீவிரதரபரிபாகமுற்றபெரியார்க்கு ஒன்ருய் வேருய் உடனுய் நின்றருளுகின்ற சிவபிரான் சுத்தாத்துவித சித்தாந்தசைவ பரமுத்திதந்தருளும் நித்தியானந்தாநுபவநிலையை விளக்கி வீற்றிருந்தருளினர்.

பின்பு அச்சோதி மறைந்தது திருக்கோயில் முன்னுள்ளபடி விளங்கியது. பின்வந்து இப்பேறுகிட்டப் பெருதவர்கள் வருந்தி வணங்கித்துதித்தனர். பிரமவிஷ்ணுவாதி தேவர்கள்வந்துநாமெல்லாம் அதிகாரத்தலைமையால் ஒவ்வோர்காலங்களில்அகந்தையுற்று மயங்கியும், நெடுங்காலம்வருந்தி முட்டுப்பட்டபின் அகந்தைமாறி திருவருளாற்றெளிந்தும் இவ்வாறு மாறிமாறியுழலுதற்கிடந்தருகின்ற சிருஷ்டி திதியாதி சிறுதொழில்களிலேயே காலம்போக்கியொழிந்தோமே, சிறிதுநேர முன்புவந்தால் நமது துன்பமுற்றும் நீங்கி மீளாத பேரின்புற்று வாழலாமே, அந்தோ முந்திவிட்டதே என்று மிகவருந்தி, எம்பெருமானே இனியாவது அடியேங்களை இச்சிறுதொழில்களில் வைத்தலைக்காமல் இப்பெருவாழ்வு தந்தருளுகவென்று பன்முறைபணிந்து துதித்தார்கள்.

திருச்சிற்றம்பலம்.

## ஏயர்கோன்கலிக்காமநாயனுர் புராணசாரம்.

ஏதமில்வே ளாளர்பெரு மங்க லத்து
ளேயர்கோன் கலிக்காம ரிறையை நேரே
தூதுகொளு மவனுணுகி லென்னு மென்னுந்
துணிவினர்பா லிறைவனருஞ் சூலை யேவி
வேதனைவன் றொண்டன்வரி னீங்கு மென்ன
வெகுண்டுடல்வாள் கொடுதுரந்து மேய நாவற்
போதகமு முடனிகழ வெழுந்து தாழ்ந்து
போற்றியது விலக்கியருள் பொருந்தி னரே.

இ-ம். கலிக்காமநாயனார், சோழநாட்டிலே பெருமங்கலநகரிலே வேளாளர்குலத்திலே சோழமன்னர்களுக்குச் சேனாபதித்தொழில்செய்யும் ஏயர்குடியிலே அவதரித்தவர். சிவபத்தி சிவனடியார்பத்தியிற் சிறந்தவர். திருப்புன்கூர்ச் சிவலோகநாதர் திருவடியேபற்றிநின்று சிவாலயத் திருப்பணியாதிகள் செய்து வருகின்றவர். இவர், சுந்தரமூர்த்திகள் சிவபிரானைத் தூதனுப்பியது தெரிந்து வருந்திச் சிவபிரான் சம்மதித்தாலும் அவன் ஏவலாமா? ஆண்டவனை அடியவன் மனைவிபிணக்குநீக்கஏவியதுபாதகமன்றோ! அவனைக் காணில் யாதுவிளையுமோவென்று வயிரித்த கோபமுற்றிருந்தனர். அதுதெரிந்து சுந்தரர் சிவபிரானைவணங்கி விண்ணப்பித்தனர். சிவபிரான் சுந்தரர்மகிமை தெரிவிக்கும்படி சூலைநோலையை அனுப்பினர். அதனால் வருந்துங்கலிக்காமர் நீக்கியருளும்படி பிரார்த்திக்க, அவர்கனவில்வந்து இந்நோய் சுந்தரனாலன்றித் தீராதென்றருள, என்குடிமுழுதும் உமக்கே பரம்பரை அடிமையாயிருக்க இந்நோயைப் புதிதாகவந்தவன் வந்துதீர்ப்பதிலும் தீராதொழிதலே நன்றென்றுகூற, அதற்குமேல் ஒன்றுங் கூறாது மறைந்தருளினர். இதனால் நீ நம்மில்வேறாகாத சுந்தரனுண்மை நோக்காது பழுதுகூறியபாதகம் பெரிதாதலால், அதனால் வந்த இந்நோய் அவனாலன்றி நம்மாலுந்தீராதென்பதே திருவுளக்கருத்தென்பது தெளிவாம், பின்பு சிவபிரான் சுந்தரனே கலிக்காமனுக்கு நாம்அனுப்பிய சூலைநோயை நீ தீர்ப்பாயென்றருளினர். இதனால் அவரே இவரென்பதுந் தெளிவாம்.

பின்பு சுந்தரர் சிவாஞ்ஞையின்படி கலிக்காமர் நோய்தீர்க்க அவருருக்குச்சமீபத்தில் வருவதுதெரிந்த கலிக்காமர்முன் அவனைக் காணில் யாதுவிளையுமோவென்றெழுந்த கடுங்கோபத்தைச் சுந்தரரிடஞ்செலுத்தக்கருதாது நோயின்பாற் செலுத்தி இந்நோயை உயிரோடு நீக்குவேனென்று வாளால் வயிற்றைக்கிழித்துஉயிரும் நீங்கப்பெற்றனர். கற்பிற்சிறந்த பத்தினியாரும் உடன்செல்லப் புகுஞ்சமயம், சுந்தரர் மிகச்சமீபித்து வந்ததுதெரிந்துயாவரையும் அழாதொழிக எதிர்சென்று வணங்கி அழைத்து வருகவென்று அனுப்பி அவ்வாறுவந்த சுந்தரரைவணங்கி ஒதுங்கிநிற்பச்,சுந்தரர் திவ்வியாசனத்திருந்து பாதபூசை ஏற்றுக்கொண்டு கலிக்காமரை

வினவ, தீங்குஒன்றுமில்லை நித்திரைசெய்கின்றாரென்றார்கள். அது மிகையாதலால் அதனை நம்பாமல் உட்புகுந்து அவர்செயல் தெரிந்து அவ்வாளை எடுத்தருள, கலிக்காமர் பதறிஎழுந்துவாளைப் பிடித்துக்கொள்ளச், சுந்தரர் வாளைவிட்டு வணங்கினர். அவரும் பன்முறைவணங்கி உட்கலந்த நட்பினராயினர். யாவரும் மகிழ்ந்தனர். தேவர்பூமழைபொழிந்தனர். பின்புகலிக்காமர்சுந்தரருடன் திருப்புன்கூர்பணிந்து திருவாரூர்க்குவந்து சுவாமியை வணங்கி அநுமதிபெற்றுத் தம்மூர்க்குவந்து தமதுசிவநியமநெறியில்நின்று சிவபதநிழல் சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர் சுந்தரர் சொரூபமகிமையை உற்றுநோக்கார் சிலர்பழுதுகூறி மீளாநரகுக்காளாகாவண்ணம் அம்மகிமைநேரிற் கண்டுயாவர்க்கும்விளக்கி உய்வித்தற்காகவே திருவருளால்வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## திருமூலநாயனார் புராணசாரம்.

---

கயிலாயத் தொருசித்தர் பொதியிற் சேர்வார்
  காவிரிசூழ் சாத்தனூர் கருது மூலன்
பயிலாநோ யுடன்வீயத் துயர நீடு
  பசுக்களைக்கண் டவனுடலிற் பாய்ந்து போத
அயலாகப் பண்டையுட லருளான் மேவி
  யாவடுதண் டுறையாண்டுக் கொருபா வாகக்
குயிலாரு மரசடியி லிருந்து கூறிக்
  கோதிலா வடகயிலை குறுகி னாரே.

இ—ம். திருமூலநாயனார், திருநந்திதேவர் திருவருட்பூர்த்திபெற்ற திருக்கயிலைச் சிவயோகிகளில் ஒருவர். இவர், அகஸ்திய முனிவர் நண்பினால் பொதிகைக்குச்செல்ல விரும்பிக், கயிலையினின்று பலதலங்கள்பணிந்து திருவாவடுதுறைக்குவந்து சுவாமிதெரிசனஞ்செய்து, திருவருள் வசத்தாற் பிரியமனமின்றி சிலநா

ளிருந்து ஒருவாறுசென்று, பக்கத்திற்பசுக்கள் புலம்புதல்கண்டு நெருங்கி, அப்பசுக்களைப்பேணி மேய்த்துவந்த சாத்தனூர் மூலனென்னுமிடையன் இறந்துகிடத்தலும், அவனுடலைச் சூழ்ந்து நின்று பசுக்கள் துக்கமுறுதலுங்கண்டு, பசுக்களின் மகிமைதெரிந்து வைத்த அன்பின் மிகுதியால், அத்துக்கம் நீக்கக்கருதித், தமதுடம்பை ஒரு பாதுகாப்பில் வைத்துவிட்டுத் தாம் மூலனுடலிற் புகுந்து மூலராயெழுந்தார். மூலன் உயிர்பெற்றெழுந்தானென்று பசுக்கள் துக்கநீங்கியின்புற்றன. அவைகளை மாலைக்காலம்வரை இதமாகமேய்த்து, அவைகள் வழக்கப்படி செல்லத்தாமும்உடன் சென்று வீடுகளுட்புகுந்தபின் மீண்டனர். மூலன் மனைவி நாயகன் உரியநேரத்தில் வாராமையால், தேடிவந்துதிருமூலரைக்கண்டு அழைப்ப, அவர் பேசாமைகண்டு, நமதுநாயகருக்கு ஏதோ ஊனமடுத்ததெனநினைத்துத் தீண்டச்சென்றாள். திருமூலர்உன்னுடன் நமக்கு யாதொருதொடர்புமில்லையென்று மறுத்துவிட்டு, ஒருமடத்திலிருந்து விடிந்தபின்சென்று தமதுடம்பை வைத்தவிடத்திற் காணாமையால், இதுதிருவருட்செயலே; அஃதாவது, சிவபிரான், சிவாகமங்கூறுஞ் சரியைகிரியாயோகஞானநான்கையும், தமிழில் மந்திரவாக்கியங்களால் நம்முகமாகத் தெளிவிக்கவே, நமதுசரீரத்தை மறைத்தருளினரென்று, சிவயோகநிலையினால் தெரிந்து மீண்டு திருவாவடுதுறையில் சுவாமியைவணங்கி, அக்கோயில்வாயுதிசையில் அரசடியில் சிவயோகத்திருந்து ஒவ்வொருவருஷ முடிவிலும் அச்சிவயோகாநுபவமே ஒவ்வொரு செய்யுளாகமூவாயிரந் திருமந்திரம்பாடியருளித் திருவருளால்திருக்கயிலைசென்றுதிருவடி நிழலில் பெருவாழ்வுபெற்றனர்.

குறிப்பு:—இவர், சிவாஞ்ஞையால், சிவாகமச்செம்பொருளைச் செந்தமிழில்வைத்து, யாவருந்திருமந்திரமென்றே மேற்கொண்டு, அம்மந்திரப்பொருள் வேதாந்தசார சுத்தாத்துவித சித்தாந்தமேயென்னுமுண்மைபற்றி நின்றுய்யவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## தண்டியடிகணாயனார் புராணசாரம்.

திருவாரூர் வருந்தண்டி யடிகள் காட்சி
சேராதார் குளந்தொட்டங் கமணர் சீறிக்
குருடாநீ முன்செவிடுங் கூடிற் றென்று
குறித்தறியைப் பறித்தெறியக் கொதித்துத் தங்கண்
அருளாலே விழித்தெவரு மந்த ராக
வமணர்கலக் கம்பலகண் டவர்கள் பாழிப்
பருவான கற்பறித்தா விக்கரையுங் கட்டிப்
பரனருளா லமருலகம் பற்றி னாரே.

இ-ம். தண்டியடிகணாயனார், சோழநாட்டில் திருவாரூரில் அவதரித்தவர். இவர் அவதரிக்கும்போதே, சிவசந்நிதியில் முற்பட்டு விளங்காதபிரபஞ்சத்தைச், சிவபிரான் அறியாமைபோல, உலகப்பொருளையறியும் புறக்கண்ணின்றிச் சிவனையே அறியும் அகக்கண்விளக்கத்துடன் வந்தவர். அனவரதசிவதெரிசனபஞ்சாக்ஷரஜெபதியானபாராய்க், காலந்தோறும்பூங்கோயிலென்றுசொல்லுங் கூறும் வன்மீகநாதசிவாலயசேவை செய்துவருகின்றவர். அக்கோயில் மேற்கிலுள்ளதேவதீர்த்தமாகிய கமலாலயத்திருக்குளத்தின்சுற்றிடமெங்கும், சமண்பாழிப்பள்ளிகள் மலிந்து அத்திருக்குளங் குறைந்து வருதல் தெரிந்துவருந்தி, அக்குளத்துள்ளுங் கரையிலுந்தறிநட்டுக்கயிறுகட்டி, அக்கயிற்றைத்தடவிக்கொண்டுபோய் மண்ணைவெட்டிக்கூடையிலிட்டுச்சுமந்து, அப்படிபோகரையில்வந்துகொட்டுதலாகியதிருப்பணிசெய்துவந்தார். சமணர்தமது பாழிகளுக்குக் கேடுவருமென்று நினைத்து, மண்ணைவெட்டினால் பிராணிகளிறந்துவிடும்; இக்கொலைசெய்யாதொழிகவென்றார்கள்.

நாயனார், சற்சமயஞ் சார்ந்துய்யவறியாத அறிவிலிகளே! சிவபிரானுக்குகந்த சிவபுண்ணியமேயிதுவென்பதை நீங்களறிவீர்களோ என்றார், சமணர், நீ, கண்குருடானதுமன்றிக், கொலைப்பாதகம்நீங்கி உய்கவென்று கூறுதலுங் கேளாமையால் காதுஞ் செவிடாயினையோ என்றனர். நாயனார், உங்களுக்கேஉண்மையுணரா மூடபுத்தியும் கேளாதசெவியும் காணாதகண்ணுமுள்ளன.

நானோ, சிவபிரானையன்றி வேறொன்றையுங்காணாத நியமமுடையேன். அதனையறிதற்கு நீங்களார். சிவனருளால் என்கண்காணவும், உங்கள்கண் குருடாகவும்பெற்றால், யாதுசெய்வீர்களென்றார். சமணர் நாங்களிவ்வூரிலிராமல் நீங்கிவிடுவோமென்று மண்வெட்டியைப்பறித்தெறிந்தார்கள். நாயனார், பூங்கோயிலடைந்துபணிந்து வேண்டிக்கொண்டு திருமடத்திற்சென்றனர். சுவாமி அவர்கனவில் வந்து உன்கண்காணவுஞ் சமணர்கண் மறையவுஞ்செய்வோமென்றருளி, அரசர்கனவில்வந்து நமதுமெய்யன்பன் கருத்தை முடிப்பாயென்றருளினர். அரசர்வியந்து காலையில்நாயனாரை அடைந்து வணங்கிநிகழ்ந்தனதெரிந்து, சமணரை அழைத்து அவர்களுடன் பட்டதுந்தெரிந்து, திருக்குளக்கரையில்வந்து நாயனாரைநோக்கித்; தேவரீர் கண்பெறுதல்காட்டுக என்றனர்.

நாயனார் திருக்குளத்துட்சென்று சிவனொருவனேமெய்க்கடவுள் மற்றெவரும்அவனடிமைகளே அடியேன்செய்புமித்தொண்டு அவனுக்குகந்ததே என்பதுண்மையானால், இவ்வரசர்முன் நான் கண்பெறுதலும், சமணர் கண்ணிழத்தலும் நிகழுக என்றுகூறி, ஸ்ரீபஞ்சாக்ஷரசெபதியானத்துடன்முழுகிக் கண்பெற்றெழுந்தார். சமணர்கள் கண்கெட்டுலைந்தார்கள். அரசர் அவர்களை அவ்வூரை விட்டுநீங்கும்படி ஆஞ்ஞாபிக்க, ஏவலர் துரத்த, அவர்கள்வழிகுழி தெரியாது விழுந்தலைந்து தடுமாறிஓடினார்கள். அரசர், தண்டியடிகளைவணங்கி மகிழ்ந்து, அமண்பாழிபள்ளிகள் முழுதுமிடித்துத் திருக்குளத்தின் நாற்கரையும் படித்துறைமுதலியனவும் செவ்வே செய்வித்தார். நாயனார், தமது திருத்தொண்டின்பரிபூர்த்திகண்டு மகிழ்ந்து, ஸ்ரீபஞ்சாக்ஷரசெபதியானதிருத்தொண்டுவழுவாது செய்துவந்து சிவபதநீழலடைந்தார்.

குறிப்பு:—இவர், உலகநோக்கமின்றி உண்மைநோக்கிநிற்கு மெய்யன்பர் திருத்தொண்டுக்கு, அறிவிலார்செய்யும் இடர் அவர்க்கே கேடும், இவர்க்கே ஆக்கமுந்தருமென்னுஞ் சிவசாஸ்திரத் தெளிவை விளக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## மூர்க்கநாயனூர் புராணசாரம்.

தொண்டைவள நாட்டுவளர் வேற்காட் டூர்வாழ்
　　தொல்லுழவர் நற்சூதர் சூது வென்று
கொண்டபொருள் கொண்டன்பர்க் கமுத ளிக்குங்
　　கொள்கையினூர் திருக்குடந்தை குறுகி யுள்ளார்
விண்டிசைவு குழறுமொழி வீணர் மாள
　　வெகுண்டிடலான் மூர்க்கரென விளம்பு நாமம்
எண்டிசையு மிகவுடையா ரண்டர் போற்று
　　மேழுலகு முடனூரு மியல்பி னூரே.

இ—ம். மூர்க்கநாயனூர், தொண்டைநாட்டிற் பாலிநதிவடபால் திருவேற்காடென்னுந் தலத்தில் சற்சூத்திரகுலத்தில் அவதரித்தவர். இவர், சைவத்தினுண்மையுணர்ந்திறுகப்பற்றி நிற்றலால், அதற்கின்றியமையாத சிவவழிபாடும், அதற்குயிர்போன்றமாகேசுரபூசையும் விதிப்படி புரிந்து அதன்பின்பே உணவுகொள்ளும் நியமப்பெருஞ்செல்வர். இவ்வாறு நெடுங்காலம்புரிந்து மாகேசுரர் மிகுதியாய் வருதலால் பொருள் ஒழிந்தபின்னும், நிலமுதலியன விற்று மகிழ்வுடன்செய்துவந்தனர். அப்பொருளும்ஒழிந்தபின்னும் முன் பழகிய சூதாடிப்பொருளீட்டி நடத்தநினைந்து, கும்பகோணத்துவந்து சூதாடி, வரும் பொருள்கொண்டு, தமது சாமர்த்தியத்தால் வந்ததாகநினையாது திருவருளால் வந்ததாகவேநினைத்து மாகேசுரபூசனைசெய்துவந்தனர். சூதாட்டத்தில் முன்புதோற்றும் பின்பு வென்றும், பந்தயப்பொருளைக்கொடாது நீந்தவறினரை வாளாற்கொன்றும், பொருள்கொண்டு, நற்சூதரென்றும் மூர்க்கரென்றும்பெயர்பெற்றூர். அப்பொருளைத் தாம் தீண்டாமல் பாகுகர்களைஎடுத்துக்கொண்டு வேண்டியனசேகரித்துப்பாகஞ்செய்ய மாகேசுரர் திருவமுது செய்தபின், பிரசாதம் புசித்துவருவார். இப்படியே நெடுங்காலஞ் செய்துவந்த புண்ணிய விசேடத்தாற் சிவபதநிழல் சேர்ந்தனர்.

குறிப்பு;—இவர், சிவபுண்ணியங்களுக்கிடாராக நீதிமாறி வஞ்சிப்பா[illegible]வது, அப்பாதகத்துக்குப் பிராயச்சித்தமும், சிவபுண்ணி[illegible]தவறுமைக்கு ஏதுவுமாகுமென்பதும் நான் செய்

தேனென்னு முனைப்பின்றி இயன்றதொழிலெதனைச் செய்தாவது பொருளீட்டிச் சிவபுண்ணியஞ் செய்தலே அவசியமென்பதும் விளக்கியுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரெனக.

திருச்சிற்றம்பலம்.

---

## சோமாசிமாறநாயனார் புராணசாரம்.

---

அம்பர்நக ரந்தணர்சோ மாசி மாற

ரன்பர்களாம் யாவர்க்கு மன்பினமு தளிப்பார்

உம்பர்திகழ் வகையாகம் பலவுஞ் செய்யு

முண்மையினு ரைத்தெழுத்து மோவா நாவார்

நம்பர்திகழ் திருவாரூர் நயந்து போற்று

நாவலர்கோ னடிபரவு நன்மை யாலே

யிம்பர்தொழ வும்பர்பணிந் தேத்த மேலை

யேழுலகு முடனுறு மியல்பி னூரே.

இ-ம். சோமாசிமாறநாயனர், சோழநாட்டில் திருவம்பரில் பிராமணகுலத்திலவதரித்தவர். இவர், சிவன் பிராமணன், விஷ்ணு க்ஷத்திரியன், பிரமன்வைசியன், இந்திரன்சூத்திரன் என்று வேதம் தேவசாதி நான்கு வகுத்தமுறைப்படி, தமது சாதிக்குரிய பிராமணத்தெய்வமாகிய சிவனையேபற்றிச் சிவனடியாரைப்பூசித்துத் திருவமுதுசெய்விப்பவர். சிவயாகங்களை விதிப்படி செய்பவர். இப்புண்ணியங்கட்குயிர்போற் சிறந்தது, சிவசொரூப சுந்தரமூர்த்திவழிபாடேயென்று துணிந்து, திருவாரூரடைந்து சுந்தரரைப் பணிந்து திருத்தொண்டுகள்செய்துவந்து, அவ்விசேடத்தால் சிவபதநிழல்சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், திருவருட்சிறப்புநூலாகிய சிவாகமவிதிப்படி, அமலபதியாகிய சிவனையேநோக்கிச்செய்யும் சிறப்புயாகம் அநுபவவரையறைப்படாது தொடர்ந்துவந்து மீண்டுவாராநித்தியமுத்திதருவதென்பதும், திருக்கருணைப் பொ[illegible] நூலாகிய வேதவிதிப்படி சமலபசுக்களாகிய பலதேவரை[illegible] ம்பொதுயாகம் அநுபவவரையறைப்பட்டு அநித்திய[illegible] ாகப்பட்டுந்

தந்து முடிவிற்கிழேதள்ளிவிடுமென்பதும், இதுவும் பசுப்படுத்துச் செய்யும்படி வேதங்கூறியது பசுபோதநீக்கமுதலிய உண்மைப் பொருள் குறித்ததன்றிப், பசுக்களைக்கொன்று யாகாக்கினியில் காய்ச்சித்தின்னும்படி கூறியதன்றென்பதும், இப்பொழுதுயாகஞ் செய்துவருந்தி அற்பபலன்பெற்று மீண்டும்பிறந்து துன்புறாமல், சிறப்புயாகமேசெய்து மீண்டுவாராப்பேரின்புறுதலே புத்திமான் கள்செய்கையென்பதும் விளக்கி உய்விக்கவந்தருளிய சிவவாக்யப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## சாக்கியநாயனார் புராணசாரம்.

---

சங்கமங்கை வருவேளாண் டலைவர் காஞ்சிச்
சாக்கியரோ டியைந்தவர்தந் தவமுஞ் சைவத்
துங்கமலி பொருளுமுணர்ந் தந்த வேடந்
துறவாதே சிவலிங்கந் தொழுவோர் கண்டோர்
அங்கன்மலர் திருமேனி யமுந்தச் சாத்தி
யமருநாண் மறந்தொருநா ளருந்தா தோடிச்
செங்கலெறிந் திடுமளவின் மகிழ்ந்த நாதன்
றிருவருளா லமருலகஞ் சேர்ந்து ளாரே.

இ-ம். சாக்கியநாயனார், சங்கமங்கையில் வேளாளர் குலத்தில் அவதரித்தவர். இவர், பாலியத்திலேயே பிறப்பிறப்பு நீங்கி உய்தற்குரிய சன்மார்க்கம்எதுவென்று ஆராய்வாராய்க், காஞ்சிபுரமடைந்து முதலிற்சாக்கியசமயம்புகுந்து அதனியல்பும் மற்றைச் சமயநிலைகளுமாராய்ந்து அவையெல்லாம் சன்மார்க்கமல்லவென்று உண்மைதெரிந்து, மேல் நோக்குநிலையில், திருவருள் கைகூடுதலால், சீவரே பிறப்பிறப்புறுவர்; அவைகள் முற்செய்வினையின்பயனுய் வரும் அவ்வினைசடமாதலால் அப்பலனைத் தானேகொடுக்க மாட்டாது. சீவர், சிற்றறிவினராதலால் தாமாகஅப்பலனைஎடுத்துக் கொள்ளமாட்டார். அதனை ஏறுமல் குறையாமல் ஒருயிர் செய்த வினைப்பயன் மற்றோருயிர்க்கு வந்துமாறுமல் அறிந்து கொடுப்ப

வன், முற்றறிவினனாகிய கடவுளொருவனே. ஆதலால், சீவரும், வினையும், பலனும் அதனைக் கொடுக்குங் கடவுளுமாகிய நான்கும் உண்டென்று கொள்ளுஞ்சமயம் எதுவோ அதுதான் மெய்ச் சமயம் என்றுள்ளபடிநிச்சயித்து, இந்நாற்பொருளும்சைவத்திலன்றி மற்றெச்சமயங்களிலு மில்லையென்பதை அந்தந்த நூலால் நன்குணர்ந்து சிவனே மெய்க்கடவுளென்று துணிந்த நிலைசலியாது நின்றனர்.

இவர், எந்நிலையினின்றாலும் எக்கோலங் கொண்டாலும் சிவனை மறவாமையே பொருளென்றுதுணிந்து சாக்கிய முதலிய எல்லாச்சமயங்களுக்கும் பாமகர்த்தா சிவனொருவனேயாதலால், நாம் முதலிற்கொண்ட சாக்கியவேடத்தைமாற்றினால் இச்சாக்கிய சமயத்தில்சிவவியாபகமில்லையென்றாகும். இது,சிவசர்வவியாபகத்துக்கிழுக்கா மென்னுமுண்மை நோக்கி அவ்வேடத்தை மாற்றாமலே சிவவழிபாடு செய்வாராய், அவ்வழிபாடுகளுள்ளே சிவனுக்குரிய அருவம் அருவுருவம் உருவமாகிய மூவகைத் திருமேனிகளில், மேலுள்ள அருவம் நான்கு கீழுள்ள உருவம் நான்காகிய எட்டுக்கும் நடுநின்று அவ்வருவமும் உருவமுந் தன்னிடத்தமைந்துள்ளனவென்பதை,அருவுருவமென்னும்பேராலும்விளக்குகின்ற அருவுருவத்திருமேனியாகிய சிவலிங்கமூர்த்திவழிபாடே சிறந்ததென்பதும், இம்மூர்த்தியேபிரமவிஷ்ணுக்கள்மயக்கம்நீக்கி மத்தியில் சோதியாயெழுந்ததென்பதும் தெளிந்து, தினந்தோறும் சிவலிங்கவழிபாடுசெய்யும் நியமம்மேற்கொண்டனர். அப்போது பக்கத்தில் ஒருசிவலிங்கங்கண்டு ஆனந்தங்கொண்டு பாவசராய்நிற்றலால் நேரிற்கிடந்த ஒருகல்லையெடுத்து லிங்கத்தின்மேலெறிந்தார். சிவபிரான் யிளம்புதல்வர்செயலாகமகிழ்ந்தார். மறுநாள் அங்கு வந்து நேற்றுநாம் கல்லெறிந்தது நமதுசெயலன்று; திருவருட்செயலே எனத்துணிந்து, அதுவேதொண்டாகச்செய்துவந்தனர். ஒருநாள் திருவருளால் மறந்துண்ணப்புகுந்து ஆ! ஆ!! மறந்துவிட்டேனேயென்று பதைப்புற்றோடிவந்து வழக்கப்படிசெய்ய, உடனே சிவபிரான் ஆகாயத்தில் உமாதேவியாருடன் இடபாரூடராய்த்தோன்றி, மிகமகிழ்ந்துவணங்குகின்ற நாயனாரைத் திருவடியிற்சேர்த்தருளினர்.

குறிப்பு:—இவர், எல்லாச்சமயங்களுக்கும் பரமகர்த்தா சர்வ வியாபகசிவனே என்பதும், அதனால் எல்லாச்சமயிகளும் சிவனை வழிபடுவது அவசியமென்பதும், அவ்வழிபாடின்றி ஒதுங்கும் மற்றைச்சமயங்கள் சர்வவியாபகமில்லாத ஏகதேசநிலையவே என்பதும், தத்துவாதீதசிவனையேபற்றி மற்றெப்பற்றும்நீங்கிய அதீத நிலையினர் செயலெல்லாம் சிவச்செயலேஎன்பதும், அந்நிலையில் நிகழுஞ் செயல்களில் ஏதும்பிறர்பார்வைக்கு அஹிதமாயினும் அதுயாண்டும் நிறைந்துநின்றுசெய்விக்கின்ற சிவனுக்கு ஹிதமே யாமென்பதும், விளக்கியுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## சிறப்புலிநாயனார் புராணசாரம்.

திருவாக்கூ ரருமறையோ ருலக மேத்துஞ்
சிறப்புலியார் மறப்புலியா ருரிசேர் செங்கண்
அரவார்த்தார் வருமேற்றூர்க் கன்ப ரானார்க்
கமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்த மார்பர்
பெருவாக்கா மறைபாலி யாகம் போற்றும்
பெற்றியினா ரைந்தெழுத்தும் பிறழா தோதிக்
கருவாக்கா விறைவன்று ளிணைகள் சேர்ந்த
கருத்தினா ரெனையாவுந் திருத்தி னாரே.

இ-ம். சிறப்புலிநாயனார், சோழநாட்டில் திருவாக்கூரில் பிராமணகுலத்தில் அவதரித்தவர். இவர், பஞ்சாக்ஷரசெபம் தியானம் சிவபூசை சிவயாகமுதலியசிவவழிபாடும் சிவனடியார்களைவணங்கி அழைத்துவந்து பூசித்துத் திருவமுதளித்தல் பொருள் கொடுத்தல் முதலிய சிவனடியார் வழிபாடும் நியமமாகச் செய்துவந்து சிவபதநிழலிற் சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவனடியார் வழிபாடுதான் சிவவழிபாட்டுக்குயிராய் நிலைபெறச்செய்து சிவபதந் தருவதென்னுமுண்மை விளக்கியுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## சிறுத்தொண்டநாயனார் புராணசாரம்

பல்குமருத் துவரதிபர் செங்காட்டங் குடிவாழ்
படைத்தலைவ ரமுதளிக்கும் பரஞ்சோதி யார்மெய்ச்
செல்வமிகு சிறுத்தொண்டர் காழி நாடன்
றிருவருள்சேர்ந் தவர்வளருஞ் சீராளன் றன்னை
நல்குதிரு வெண்காட்டு நங்கைசமைத் திடப்பின்
னன்மதிச்சந் தனத்தாதி தலைக்கறியிட் டுதவப்
புல்கவரும் வயிரவர்தா மகிழ்ந்துமக வருளப்
போற்றியவர் சிவனருளே பொருந்தி னாரே.

இ-ம். சிறுத்தொண்டநாயனார், சோழநாட்டில் செங்காட்டங்குடியில் மகாமாத்திரர்குலத்தில் அவதரித்தவர். பரஞ்சோதியாரென்னுந்திருப்பேருள்ளவர். இவர், சிவத்தியானபூஜாதிகள், சிவனடியார்க்கமுதளித்தல் முதலிய திருத்தொண்டுகளை செய்கின்றவர். ஆயுள்வேதம் வில்வித்தை யானை குதிரையேற்றங்களில் மிகச்சிறந்தவர். அரசனால் அபிமானித்தழைக்கப்பெற்று அணுக்கராயிருந்துபகைவென்று பெரும்பொருள் சேர்ப்பவர். ஒருநாள் மகாபெலவானாகிய உத்தரதேசத்தரசனையும்வென்று திரவியங்களெல்லாங்கொண்டுவந்தார். அரசன் ஆச்சரியமுற்று இவ்வல்லபம் சிவபத்திவிசேடத்தால் வந்ததென்னுமுண்மைதெரிந்து, இவரைப் போர்முனையில்ஏவினேனேஎனவருந்திச், சுவாமீ அடியேன் குற்றத்தைப் பொறுத்தருள்கவென்றான். பரஞ்சோதியார் அரசரே, எனது உத்தியோகத்துக்கியைந்த காரியஞ்செய்தேன். இதனால் குற்றம்யாதென்றார். அரசன், வணங்கி நிறைந்த திரவியங்களும் விருத்திகளும்கொடுத்து இஷ்டப்படி திருத்தொண்டுசெய்துகொண்டிருங்களென்று விண்ணப்பித்தான்.

நாயனார், செங்காட்டங்குடிக்குவந்துகணபதீசுரரைப்பணிந்து பத்தினியார் திருவெண்காட்டுநங்கையாருடன் இல்லறம்புரிந்து, சிவனடியார்க்கமுதளித்துஅதன்பின்உண்ணும்நியமசீலராய், அடியார்முன் சிறியராய்த் தாழ்ந்துநிற்றலாற்சிறுத்தொண்டரென்னுந் திருப்பேர்பெற்றுவாழுநாளில், திருவருளால் சீராளரென்றொரு

சற்புத்திரர் அவதரித்து ஐந்துவயசில் வித்தியாரம்பஞ்செய்யப் பெற்றனர். அந்நாளிற்சம்பந்தர் வருவதுதெரிந்து எதிர்சென்று பணிந்து அழைத்துவந்து திருவமுதுசெய்வித்தனர். சம்பந்தர் அவரைச்சிறப்பித்துப்பாடியருளியெழுந்தருள, உடன்சென்று பணிந்து பிரியாவிடைபெற்றுவந்தனர்.

இவரது அன்புறுதிவிளக்கி உலகையுய்விக்கத் திருவுளங்கொண்டருளிய சிவபிரான், திருவமுதுண்ணும் வியாசங்காட்டி அசையா அன்பாகிய அருஞ்சுவையமுதுண்பாராய், வயிரவவேடங்கொண்டு, நாயனார் திருமாளிகைமுன்நின்று, சிறுத்தொண்டர் இருக்கின்றாரோ என்றுகேட்பச், சந்தனத்தாதியார்பணிந்து அடியார்களைத்தேடிச்சென்றனர். சுவாமிகள்உள்ளேஎழுந்தருளுகவென்றார். வயிரவர் பெண்களிருக்குமிடத்தில் தனித்துப்புகுதேம் என்றனர். வெண்காட்டுநங்கையார் இவ்வடியவர் போய்விடுவரோவென்று விரைந்துவந்துபணிந்து அடியேனுடையநாயகர் தினமும் அடியார்க்கு அமுதளிக்கு நியதியுடையார். அடியாரைத்தேடிச் சென்றனர். தங்கள் திருவேடங்கண்டால் மிகமகிழ்வர். சீக்கிரம் வந்துவிடுவர். உள்எழுந்தருளுகஎன்றார். அவரில்லாதபோதிங்கிரோம். கணபதீச்சரத்தில் ஆத்தியின் கீழிருக்கின்றோமென்று சென்று அவ்வாத்தியின்கீழிருந்தனர்,

நாயனார், அடியார் ஒருவரையுங்காணாது வருந்திவந்தனர். பத்தினியார் நிகழ்ந்ததுதெரிவிப்ப, மிகவிரைந்துசென்றுபணிந்து நிற்ப, வயிரவர் பெரியசிறுத்தொண்டர் நீரோவென்றார். நாயனார் மேலும்பணிந்து சுவாமீ அடியார்கள்பிரியத்தால் அவ்வாறுசொல்வார்கள், அடியேன்செய்த பெருந்தவத்தால் தேவரீரைக்காணப் பெற்றேன். எழுந்தருளி அமுதுண்டருளுகஎன்றார். வயிரவர் நாம் உத்தரதேசத்துள்ளோம். உம்மைக்காணவே வந்தோம். நம்மை உண்பிப்பது மிகஅரிதென்றார். நாயனார், அரியசெயலும் தேவரீர்தெரிசனவிசேடத்தால் எளிதின்முடியும். தெரிவித்தால் அவ்வாறுசெய்விப்பேனென்றார். வயிரவர், ஆறுமாசத்துக்கொரு முறைபசுவைக்கொன்று உண்போம். அந்நாளும் இன்றுதான் உம்மாலியலாதென்றார். நாயனார், அடியேனிடத்திற்பசுக்களுண்டு இன்னபசுஎன்றுதெரிவித்தருளுகவென்றார். வயிரவர், நாம் உண்

பது நரபசு. ஐந்துவயசினதாய் அவயவப்பழுதின்றிக்குடிக்குஒரே பிள்ளையாயிருக்கவேண்டும். மகிழ்ந்து தாய்பிடிக்கத் தந்தைஅரிய வேண்டும். அவ்வாறுசெய்து சமைத்தகறியோடுதான்உண்போம். என்றார். தேவரீர் திருவமுதுசெய்யப்பெற்றால் இதுவும் அரிதன்றெனவணங்கி விடைபெற்றுவந்து, தம்மையே நோக்கி வாயிலில் நிற்கின்ற பத்தினியாரிடத்து எல்லாந்தெரிவித்தனர்.

பத்தினியார் இப்படி ஒருபிள்ளைகிடைக்குமோ என்செய்வோமென்றுவருந்த, நாயனார், ஒருவாறுகிடைத்தாலும்தாய்தந்தைகள் பிடிக்கவும் அரியவும் சம்மதிப்பார்களா? நமதுபிள்ளையை அழைப்போமென்ன, மனைவியார், மகிழ்ந்துடன்பட, நாயனார், பள்ளிக்கூடஞ்சென்று அழைத்துவர, மனைவியார், புதல்வனைவாங்கித்திருமஞ்சனமாட்டிக்கோலஞ்செய்துகொடுக்க, நாயனார், வாங்கிப் பிறரறியாத உள்ளிடத்திற்சென்றார். மனைவியார் பின்சென்று புதல்வன்கால்களை மடியில்இடுக்கிக் கைகளைப்பிடித்துக்கொள்ளத், தந்தையார் தலையைஅரிந்தனர். தாயார், அதுகறிக்காகாதென்று தாதியாரிடங்கொடுத்துவிட்டு, மற்றவைகளைப்பாகம்பண்ணி அன்னமுஞ்சமைத்துத்தெரிவிப்ப, நாயனார், வயிரவரைஅழைத்துவந்து பூசித்து அவராஞ்ஞைப்படி கறியமுது திருவமுதெல்லாம் படைப்பிக்க, வயிரவர் எல்லாம்படைத்தீர்களாவென்ன, மனைவியார்தலைக்கறிஆகாதென்றுகழித்துவிட்டோமென்ன, வயிரவர்அதுவும்உண்பதே என்ன, இருவரும்வருந்த, உடனேதாதியார் அதனையான் சமைத்தேனென்று கொண்டுவர, அதையும்படைப்பித்தனர்.

வயிரவர், நாம்தனித்துண்ணோம்அடியார்களைஅழைத்துவருகவென்ன, நாயனார் மிகவருந்திச்சென்று காணாது எங்குந்தேடி அடியாரைக்கண்டிலேன்; அடியேனும் விபூதிதரிப்பாரைக்கண்டுதரித்துவருகின்றேனென்றுகூற, வயிரவர் உம்மைப்போல்விபூதிதரிப்பார் யாவர். நீர் சிறந்த அடியவரே. உடனிருந்துண்ணுமென்று பக்கத்தில் அமுதுபடைப்பிக்க, நாயனார் வயிரவர் சீக்கிரம்உண்டருளவேண்டுமென்ற ஆசையாலும் அவர்சொன்னபடி அடியார் முறையினாலும்முன்புஉண்ணத்தொடங்கினார். வயிரவர், ஆறுமாதஞ்சென்றுண்ணவந்தநாம்உண்ணுமுன்நீர்உண்பதென்னை? நம்முடன் உண்ணுதற்கு உமக்குப்புத்திரனுண்டேல் அழையுமென்ன, நாய

னார் இந்தச்சமையம்உதவாமென்ன, வயிரவர் அவன்வந்தாற்றான் நாமுண்போமென்ன, நாயனார்மனைவியாருடன்வெளிவந்துவருந்தி அழைத்தனர். உடனே திருவருளால் அவ்வரும்புதல்வர் ஓடிவரக் கண்டு, தாயார்எடுத்தணைத்து தந்தையார்கையிற்கொடுக்கவாங்கி அடியவர் திருவமுதுசெய்யும் பெரும்பாக்கியம் பெற்றோமென்று மகிழ்ந்துள்ளேசென்று, வயிரவரைக்காணாதுதிகைத்துப் படைத்திருந்த அமுதுங்காணாது அச்சமுற்று, அவரைத்தேடிப்புறத்து வந்து, சிவபிரான், இளையகுமாரர் உமாதேவியாரிருவருடன் இடபாரூடராய்த் தோன்றியருளக்கண்டு, அளவிலானந்தங்கொண்டு, பன்முறைபணிந்துதுதித்து அஞ்சலித்துநிற்ப, அந்நாயனார்பத்தினியார் புத்திரர் தாதியார் நால்வரில், நாயனார் சிவபிரானையும், புத்திரர் இளையகுமாரரையும், பத்தினியாரும் தாதியாரும் உமாதேவியாரையும் பிரியாது பேரானந்தப்பெரும்பேறு பெற்று வாழும்படி அழைத்துக்கொண்டு திருக்கயிலாசஞ்சென்றருளினார்கள்.

குறிப்பு:—இந்நாயனார், பத்திநிபுத்திரர்முதலியருடன் மனை வாழ்க்கையிலிருப்பது, அவர்களால்வரும் அநித்தியமாகிய அற்ப சுகம்பெரிதெ‌ன அவர்களைப்பற்றிநிற்றற்கன்று; சிவனடியார்க்குத் திருவமுது படைத்தல்முதலிய சிவதருமங்கள்செய்தற்குத்துணைக் கருவிமாத்திரமாக்கொள்வதேயாமென்பதை நன்குணர்ந்து, அப் பற்றுமுற்றும்நீங்கிநின்று அத்திருத்தொண்டுகளேசெய்து நித்தியானந்தம்பெற்று வாழுகவென்றுணர்த்தி உலகையுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## சேரமான்பெருமாள்நாயனார் புராணசாரம்.

---

காவலர்ம கோதையார் கொடுங்கோ ளூர்க்கோக்
கழறியவை யறிந்தகோச் சிலம்போசைக் கருத்தார்
நாவலர்கோ னண்பரடிச் சேர னென்றே
நவின்றுவரும் வண்ணானை நமந்த கோநற்

பாவலர்கோப் பாணபத் திரனுல் வாய்ந்த
பரமர்திரு முகம்வாங்கிப் பணிகோ வெற்பின்
மேவியகோ வானைக்குக் குதிரை வைத்த
வீரர்கோ வெனையாளுஞ் சேரர் கோவே.

இ-ம். சேரமான்பெருமாள்நாயனூர், மலைநாட்டில் மகோதை யென்னுங் கொடுங்கோளூரில் சேராராஜகுலத்தில் சைவசமயந் தழைப்பத் திருவருளால் அவதரித்தருளிப் பெருமாக்கோதையா ரென்னும் பெயர்பூண்டவர். அவதரிக்கும்போது தேவரெலாம் பூமழை பொழிந்தனர். மங்கலவாத்தியங்கள் தாமேமுழங்கின. பற்பல நன்னிமத்தங்கள் விளங்கின. இவர், வைராக்கியசீலர். விராகசம்பந்தம்—வைராக்கியம். விராகம்—நிராசை. பெரியோர்கள், ஜனனவைராக்கியம், தேகவைராக்கியம், ஐசுவரியவைராக்கியம், பிரபஞ்சவைராக்கியம், திரவியவைராக்கியம், சங்கவைராக்கியம், ஸ்திரீவைராக்கியம், போசனவைராக்கியம், பிரதிக்கிரகவைராக்கியங்களையுடையாரவர். அவர்களும் அவைகளில் ஒவ்வொன்றையும் அனுபவித்தறிந்து, முதிர்ச்சியில் துக்கமுதலியன கண்டபின்பே அவற்றில்வைத்த ஆசைநீங்குவார்கள். பிறந்தபொழுதேமுழுதும் நீங்குதலரிது. அவ்வாசை நீக்கமே அந்தந்த வைராக்கியமாம். இவரோ, அனுபவித்தறியாதபாலியத்திலேயே, பூர்வசிவபுண்ணிய விசேடத்தால், அவ்வைராக்கியங்களில் ஒவ்வொன்றுமாத்திரமன்றி அவ்வொன்பதும் அதன்மேல் பத்தாவதாகிய சர்வவைராக்கியமு முள்ளவராயினர். இதனால், இவர், ராஜமரபுக்குரிய செயல்களிற் புகுதாமல், சிவனொருவனே பரமபதி. அரிபிரமாதி சகலரும் அவனடிமைகளாகிய பசுக்களே என்னுமுண்மைதெளிந்து சிவாதீனராய் நின்று, சிவபதநிழற்பேரின்பையே விரும்பி, அந்நகரிலுள்ள திருவஞ்சைக்களமென்னுஞ் சிவாலயத்திருத்தொண்டு செய்யும் நியமசீலராய்த், தினமும் விடியலைந்து நாழிகைக்குமுன்னெழுந்து ஸ்நானுனுஷ்டானுதிமுடித்து நந்தனவனம்புகுந்து களைபிடுங்கல், நீர்பாய்ச்சல் முதலியசெய்து, பூக்கொய்துமாலைகளமைத்துவந்து, சிவாலயத்தில் திருவலகு திருமெழுக்குத்திருக்கோலம்திருவிளக்கு முதலிய திருப்பணிகள்செய்து, திருச்சந்நிதியில்பன்முறைபணிந் தெழுந்து அஞ்சலித்துநின்று, திருப்பாடல்களாற்றுதித்துத்திருக்

கண்ணீர்பெருகச் சிவானந்தவெள்ளமூழ்கிச் சிவத்தியானநிலையில் அமர்ந்து வாழ்வாராயினர்.

இவ்வாறு நிகழுநாளில், செங்கோற் பொறையனென்னுஞ் சேரமகாராஜர், அரசியல் முதலிய உலகப்பற்றொழிந்து சிவனையே பற்றிநிற்கும் உண்மைஞானமுதிர்ச்சியால், அரசியலை வெறுத்துத் தபோவனஞ்சென்று தவநிலையினிற்பாராயினர். மந்திரிகள் அரசரின்றி நாடுநடைபெறாதே என்செய்வோமென யோசித்துத், திருவஞ்சைக்களத்திலமர்கின்ற சேரகுலமுதல்வராகிய பெருமாக்கோதையாரை வணங்கிவேண்ட, அவர், இவ்வரசியில் நமது தொண்டுக்குமிடரின்றிச், சைவசமயவிருத்திக்கும் ஏதுவாய்நிகழுமேல், திருவருள்தெரிந்து செய்வோமென்று சந்நிதியடைந்து பணிந்து விண்ணப்பஞ்செய்து உடனே திருவருளால், சிவபத்தி நழுவாமல் அரசுபுரியும் நிலையும், அதற்குரிய முழுவலியும், படைவலியும், ரதகெஜதுரகாதிகள்செலுத்தும்வலியும், மிருகபக்ஷிமுதலிய எல்லாச் செந்துக்களின் பாஷைகளும் அறியும்அறிவும் தடைப்படாத கொடைநிலையும், மேலும் அரசியலுக்குரியனவெல்லாமும் அப்பொழுதே கைவரப்பெற்றுவணங்கி, வெளிவந்து, உடன்பாடு காட்டியருளினர். மந்திரிகள்வணங்கி முடிசூடற்குரியவிதிக்கிரியாவகைகள் அலங்காரவகையெல்லாஞ் செய்வித்தனர். சேரர்பெருமான், நற்றினத்தில்இகலோகமட்டுமோபரலோகத்துக்கும்இதுவே முடியாகத் திருவருளால் திருமுடிசூடப்பெற்றுத், திருக்கோயிலிற்சென்று பணிந்து வெளிவந்து, சதுரங்க சைனியங்கள், வாத்தியங்கள், மந்திரிகள் முதலியர் நாடு நகரங்களெல்லாஞ்சூழப், பட்டவர்த்தன யானைமீது வலம்வரும்போது, ஒருவண்ணான் ஒரு பக்கத்து ஒதுங்கி உவர்மண் பொதிசுமந்து வந்தனன். அம்மண், மழையால் நனைந்துஉடம்பில் வழிந்துகாய்ந்தபின்வெண்ணிறமாத் தோன்றுதலைக்கண்டு, உடனேயானையினின்றிறங்கிவிரைந்துவந்து வணங்கினர். வண்ணான் அஞ்சி அவரடியிற்பணிந்து, அடியேன் தேவரீர் தொண்டுசெய்யும் அடிவண்ணானென்றுதிகைத்து நிற்ப, அரசர், அடியேன் உமது அடிச்சேரன் திருநீற்றுத் திருவேடத்தை நினைப்பித்தீர். வருந்தாது செல்லுமென்று கூறியருளினர்.. இதனையுமிவர் சிவவேடமே பொருளாகக்கொண்ட அன்

புறுதி தெளிவாம். யாவரும் ஆச்சரியமுற்று அரசரைவணங்கினர். அரசர் யானைமீது நகர்வலமாக அரண்மனைவாயில்வந்து, அஷ்டமங்கலாதிகள் பொலிய உட்சென்று ரத்தினசிங்காசனத்து வீற்றிருந்தருளினர். அயலரசர் முதலிய யாவரும் பணிந்தெழுந்து அஞ்சலித்துநின்றனர். சைவந்தழைக்க அரசுபுரியுமிவ்வரசர், தேடும்பொருளும் பெருந்துணையுஞ் சிற்சபேசன் திருவடியே என்னுந்திடஞானத்தால் சிதம்பரேச சிவபூஜாநியமத் திருத்தொண்டு புரிந்து வந்தனர். இவரது பேரன்பு நோக்கிப்பூசைமுடிவில் சிற்சபேசர் திருச்சிலம்போசையளித்து வந்தனர். இது இவர் பூசனையை விரும்பி ஏற்றுக்கொண்ட குறிப்பேயாம்.

அந்நாளில் மதுரேசர் பாணபத்திரர்க்குப் பொருள் கொடுக்கும்படி "மதிமலிபுரிசை" என்னுந் திருமுகப்பாசுரம் கொடுத்துச் சேரர்பெருமானிடஞ் செல்லும்படி அனுப்ப, அப்பாணர் அங்கு வருவதுதெரிந்த அரசர் புறத்துவந்து வணங்கித், தேவரீர் தெரிசனம் முற்றவட்பயனேஎன்று துதித்துநிற்ப, பாணர் திருமுகப்பாசுரங்கொடுத்து வணங்க, அதனைச் சிரமேற்கொண்டு பூசித்து வாசித்து, அதன் பொருளருமைநோக்கி, அவ்வசத்தராய் நின்று உள்ளபொருள் முழுதும் பாணரிடஞ்சேர்ப்பித்து, இந்தராசாங்க முழுதும் தேவரீரே கொண்டருளுக என்றுபணிந்தனர். பத்திரர், அரசரைவணங்கிஅடியேனுக்கு வேண்டுவனமட்டுமே தந்தருளுக இதுவே சிவாஞ்ஞை என்றுகூற, அதனை மறுத்தற்கஞ்சியமைந்தனர். பத்திரர் வேண்டியமட்டுங்கொண்டு யானைமேற் சென்றனர். அரசர் கூடவேவந்துவணங்கி விடைபெற்றுமீண்டனர். ஒரு நாள் பூசைமுடிவில் திருச்சிலம்பொலி நிகழாமையால் வருந்திக் குற்றம் யாதோவென்றஞ்சிச், சிவாபசாரஞ்செய்த உடலோடிருத்தலினும் நீக்கிவிடுதலே நலமென்று வாளாயுதத்தை எடுத்தனர். சிற்சபேசர் சிலம்பொலி கேட்பித்தனர். அவாருளாற் சுந்தரர் செயலறிந்த அரசர் இப்பெருமகிமைவாய்ந்த சிவசுந்தர தெரிசனங் கிட்டாது வாணாள் வீணாயதேஎனவருந்தி, பரிவாரங்கள் சூழவந்து தில்லை எல்லைபணிந்து சிற்சபைமுன்சென்று திருநடனந்தெரிசித்து நித்தியானந்த நிறைகடலில் மூழ்கிநின்று "பொன்வண்ணத்தந்தாதி" பாடியருளினர். சபேசர் அப்பொழுதுஞ்சிலம்பொலி கேட்பித்தரு

ளினர். அரசர்பின்பு திருவாரூர்க்குவந்து எதிர்கொள்ளவந்த சுந்தரர் திருவடிகளிற் பணிந்தனர். அவரைச் சுந்தரர் தூக்கியெடுத்துதழுவிப் பிரியாநண்பின் பெருமை விளக்கினர். அடியாரெல்லாம் அரகரமுழக்கஞ்செய்து பெருமகிழ்வுற்றனர். இருவரும் நண்புரிமை இன்பமொழிகள்கூறிமகிழ்ந்தனர், சுந்தரர், சேரர்கைபற்றித்திருக்கோயில் சென்றருளினர். அரசர் தேவாசிரயன் பணிந்துசென்று வன்மீகநாதரை வணங்கி எழுந்து "திருமும்மணிக்கோவை" பாடியருளினர்.

அவரை ஆரூரர் அழைத்துவருவது தெரிந்த பரவைநாச்சியார், பூரணகும்பாதிகளுடன் எதிர்வந்துபணிய, இருவரும் உட்புகுந்து திவ்வியாசனத்துவீற்றிருந்தருள, நாச்சியார் முறைப்படி பூசித்து மகிழ்ந்துட்சென்று திருவமுதமைத்து வந்துவேண்டிநிற்ப, ஆரூரர் உடனிருந்துண்ணும்படி அரசரை அழைப்ப, அவர் அஞ்சிவணங்க ஆரூரர் அரசர் கையைப்பிடித்துச்சென்று அவருடனாக வீற்றிருந்தருளினர். பரவையார் அமுதுபடைத்து அரசநிலைமேலியைந்த அடியார் முறைநோக்கித் தூபதீப புஷ்பாதிகளாற் பூசிப்ப, இருவருந் திருவமுது கொண்டருளினர். பரவையார் சந்தன புஷ்ப தாம்பூலமுகவாசாதிகளாலுபசரித்து, பரிசனங்களுக்கெல்லாம் விருந்தளித்தனர். அரசர், நமது அரசநிலைக்குத் தூரித்ததாகிய அடியார் நிலைமையை நமக்குத் தந்தருளியது, இப்பெருமான் திருவருளன்றோவென்று அன்புபெருகஆரூரர் திருவடிகளிற் பணிந்து மகிழ்ந்தனர். அவரை எதிர்பணிந்துதழுவி இவரைநமக்கு நண்பராகத்தந்த சிவனருள் வாழ்கவென்று துதித்துச் சிலநாள் அரசருடன் வன்மீகநாதரை வணங்கி வீதிவிடங்கத் தியாகேசர் திருப்பவனியுந் தெரிசித்துக் கொண்டிருந்து, மதுரை முதலிய தலங்கள் பணியநினைந்தனர். அரசர் அவர்பிரிவாற்றுதுடன்சென்றனர். இருவரும் வேதாரணியத்துவந்து பணிந்தனர், சுந்தரர், "யாழைப்பழித்தன்ன" என்னும் பதிகம்பாடியருளினர். அரசர் தாம் முன்பாடியருளிய பொன்வண்ணத் தந்தாதியிற் சிறப்பித்த வேதாரணியேசுர மகிமையே மீட்டும்பாடித்துதித்தருளினர். இருவரும் பின்பு அகத்தியான்பள்ளி கோடிக்குழகர் தெரிசனமுஞ்செய்து பாண்டிநாட்டுவந்துதிருப்புத்தூர்பணிந்து மதுரைநோக்கி

வந்தருளினர். அதுதெரிந்தபாண்டியர் தமதுமருகர் சோழருடன் எதிர்வந்து பணிந்தனர். சுந்தரர் மூவேந்தருடன் ஆலவாயுட் சென்றுபணிந்துபாடியருளினர். சேரர்பெருமான், தமக்குமீனாக்ஷி சுந்தரேசர் திருமுகப்பாசுரந்தந்த பேருளைநினைந்துருகி, எம்பெருமானை நாயினுங் கடையேனையும் ஒரு பொருளாத் திருவுளங் கொண்டு திருமுகமளித்தருளிய திருவருளை என்னென்றுகூறுவேன் வாக்கு மனங்கடந்த மாண்பினையுடைத்தன்றோவென்று வாய்குழற விழி நீர்பெருகவின்னணம்பிதற்றினர். சுந்தரர் அவருடன்வெளிவந்தருளிப் பாண்டியபூபதி வேண்டியுபசரிப்பக் காலந்தோறும் தெரிசித்துக் கொண்டு சிலநாளங்கிருந்தருளினர்.

பின்புமூவேந்தருடன் பலதலங்கள்பணிந்து மீண்டும்மதுரைக்குவந்திருந்து, பிரிவாற்றாதவருந்தும் பாண்டியர்சோழரிருவரையுந்தேற்றி நிறுத்திவிட்டுச், சேரருடன் திருவாரூர்க்குவந்து நெடுநாளானபின், சேரர்பிரான் தம்மூர்க்கு வந்தருளும்படிவேண்ட, அங்குவந்தருளினர். சேரர்நகரலங்காரஞ்செய்வித்துச்சுந்தரர் திருவஞ்சைக்களத்துவந்து பதிகம்பாடிவெளிவந்தருள, உடன்வந்து வேண்டி அவரையானைமீதெழுந்தருளுவித்துத், தாம்பின்னிருந்து சாமரைவீசிக்கொண்டு நகர்வலம்வந்து, அரண்மனைவாயிலில் இறங்கியருளிச்சிங்காசனத்தில் வீற்றிருந்தருளச்செய்து, திருவடிபூசிக்கப்புகும்போது, சுந்தரர் இதுதகாதென்று பாதத்தைமடக்கிக் கொள்ளச், சேரர் பன்முறைபணிந்து அடியேன்செய்யுந்தொண்டெலாமேற்றருளுகவென்றுபிரார்த்திப்பச், சுந்தரர்மறுக்கமுடியாதிசைந்தருளினர். சேரர்பூசித்துவணங்கித்திருவமுதுசெய்விப்பத் தொடங்கச், சுந்தரர் அவரைஉடனிருந்துண்ணச்செய்து திருவமுதுகொண்டருளிச், சிலநாள் அந்நகரில்தங்கியருளினர். ஒருநாள் வீதிவிடங்கத்தியாகேசரை மிகநினைந்து திருவாரூர்க்குச்செல்லத் தொடங்கிப், பிரிவாற்றாதவருந்தும் சேரர்பிரானைத்தேற்றிப் புறம் போந்தருளினர் சேரர் அளவில்லாத்திரவியங்களைமுன்அனுப்பிஉடன் வந்து பிரியாவிடைபெற்று அவரையே நோக்கிநின்று ஒருவாறுக மீண்டுவந்தனர். திருவாரூர்க்குவந்தசுந்தரர், நெடுநாளான பின்பு சேரர்பிரானைநினைந்து, வன்மீகநாதரைவணங்கி அனுமதிபெற்று புல்தலம்பணிந்துசென்று, அவிநாசியில்முதலைவாயிற்பிள்ளையழைத்

தருளித் தமதுநகர்க்கு வருவதுதெரிந்த சேரர்பிரான், தெரிவித்தார்க்கெல்லாம் பொன்மழைபொழிந்து, எதிர்வந்துபணிந்து, சுந்தரரை யானைமீதெழுந்தருளுவித்துக் குடைபிடித்துக்கொண்டு வந்து, ரத்நாசனத்துவீற்றிருந்தருளச்செய்து பூசித்துப்பாதோதகமுட்கொண்டு மகிழ்ந்தனர். அவருடன் தினமுந் திருவஞ்சைக்களந்தெரிசித்துவந்த சுந்தரர் ஒருநாள், அரசர் ஸ்நானஞ்செய்யும்போது திருவஞ்சைக்களத்துவந்து திருப்பதிகம்பாடித்தெரிசித்து நின்றருளினர். என்றுமுள்ளவழக்கப்படி அரசர் தம்முடன்வரும்வரை தாமசிக்காதுவந்தது, அவ்வாசாரது திடபத்தியின்சிறப்பை உலகெலாம்விளக்கத் திருவுளங்கொண்டுபோலும். திருப்பதிகத்துள்ள சுந்தரர் திருவுளக்குறிப்பறிந்தசிவபிரான் வெள்ளானையை அனுப்பியருளினர். அதனுடன்வந்த அரிபிரமாதிதேவர்கள் வணங்கித்தெரிவிப்பச் சுந்தரர் சேரர்பிரானை நினைத்துக்கொண்டு யானைமீதெழுந்தருளி மேற்சென்றருளினர். கற்பகமலர் பொழிந்தன. தேவதுந்துபிகள்முழங்கின. சுந்தரர்நினைப்பறிந்த அரசர், குதிரைசெவியில்பஞ்சாக்ஷரம்ஓதி அதன்மேற்சென்றுயானைமுன் வலம்வந்து பணிந்துமுற்சென்றனர். படைவீரர் அரசர்பிரிவாற்றுததிடபத்தியினால் வீரசரீரிகளாய் அரசர்முன்பு வந்துபணிந்து முன்னணியாய்ப்பரவிச்சென்றனர். தோழரும்சேரரும் திருக்கயிலைத்தெற்குவாயிலில் யானைகுதிரையினின்றிறங்கி உட்சென்றருளினர். சேரர் முதல்வாயிலினிற்பச், சுந்தரர் திருமுன்புவந்துபணிந்து எம்பெருமானே சேரர்பெருமான் திருவாயிற்புறத்துநிற்கின்றனர் என்று விண்ணப்பிக்கச், சிவபிரான் திருநந்திதேவரை அனுப்ப, அவர் அரசர்முன் தெரிவித்தருள, அரசர்அவரடிகளில்வணங்கி எழுந்து, அவருடன்விரைந்து திருமுன்புவந்து பன்முறைபணிந்து ஆராமைமீதூர அஞ்சலித்துநின்று துதித்தனர். சிவபிரான் அவருடைய மெய்யன்பின்வலியும், சுந்தரருடைய அருளாணைவலியும், அவ்வாணை, அழைத்தலுமின்றி அழையாமையுமின்றி நினைத்தல்மாத்திரையே அனுக்கராய்வரச்செய்து, முடிவில் தன்னிடமே (சிவனிடமே) அப்பயன் பூர்த்தியாகின்ற அற்புதமகிமையும், அவர் நினைப்பின்படி ஒத்துநின்றுகுதிரைசெலுத்திய ஸ்ரீபஞ்சாக்ஷரமகாமந்திரமகிமையும்விளக்கத்திருவுளங்கொண்டோ! மேலும்எங்கெந்தலங்கள் கருதியோ! சேரனே நீ நாமழையாமல் வந்ததென்

னென்றுசிரித்த முகத்தினராய்த் திருவாய்மலர்ந்தருளினர். சேரர் பெருமான் மேலும்பணிந்து எம்பெருமானே, தேவரீரின் வேறல்லாத்திருத்தோழராகிய சுந்தரமூர்த்திகள் திருவடி பணிந்துடன் வந்துபுறநின்றேன்; தேவரீர் திருவருள்வெள்ளம் திருநந்திமுகமாகப்பெருகிவந்து உட்புகுத்தலால் திருமுன்வரப்பெற்றேன்; அருமறையாதிகலைகளாலும் அரிபிரமாதிதேவர்களாலும் அரிதற்கரிய தேவரீர் திருவருளேதுணையாக, அடியேன் திருவுலாப்பிரபந்தம் பாடினேன் திருச்செவிசாத்தியருளுகவென்று விண்ணப்பித்து, அவரனுமதிபெற்று அதனைத்திருமுன்நின்று பாடியருளினர். சிவபிரான் முழுதுங்கேட்டுமகிழ்ந்து அன்பனே நீநமது திருவடிநிழற்பெருவாழ்வுற்ற சிவகணத்தலைமைபெற்றுவாழுகவென்றருளினர். சேரமான்பெருமாள்நாயனர் அப்பெரும்பேறுபெற்று வாழ்கின்றனர். அவர் பாடிய திருக்கைலாய ஞானவுலாவை அக்கயிலையிற் கேட்டிருந்த மகாசாஸ்தாவானவர் பூமியிலே திருப்பிடவூரிலே வந்து பாடியருளி உலகெங்கும் விளங்கவைத்தருளினர்.

குறிப்பு:—இந்நாயனர் தனியரசாய்ப் பெருஞ்செல்வராயினும் அவ்வரசுஞ்செல்வமும் அரனடியேயெனப்பற்றி நியமபூசனைமேற்கொண்டு அவனடியார் சார்பும்பெற்று அவ்வழியினின்றுற்றுன் நிலைபெறுமென்னு முண்மையுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## கணநாதநாயனர் புராணசாரவிளக்கம்.

---

கந்தமலி வயற்காழி மறையோ ரேத்துங்
　　கணநாதர் திருத்தோணிக் கடவு ளார்க்கு
நந்தவனம் பலவமைத்து மலருங் கொய்து
　　நற்றாமஞ் சொற்றாம நயந்து சாத்தி
வந்தவரைத் தொண்டாக்கிப் பணிகள் பூட்டி
　　வாதுசெய்த வாரணத்தை மகிழ்ந்து வாழ்த்திப்
புந்திமகிழ்ந் தரனருளாற் கயிலை மேவிப்
　　பொருவில்கணத் தவர்காவல் பொருந்தி னாரே.

இ—ம். கணநாதநாயனார், சோழநாட்டில் சீகாழியில்பிராமண குலத்தில் அவதரித்தவர். இவர், எவற்றினும் மேலாய் விளங்கு வது சைவமே என்னும் உண்மைதெளிந்த உறுதியினால் திருத் தோணியப்பர் திருவடியேபற்றித் திருத்தொண்டுகள் செய்கின்ற வர். தாமே செய்தலுமன்றிச், செய்பவர்க்கு உதவியுஞ்செய்பவர். அவை, திருநந்தனவனம் வளர்த்தல், மலர்கொய்தல், திருமாலை தொடுத்தல், திருவலகு, திருமெழுக்கு, திருவிளக்கிடுதல், திருமுறைகள் எழுதல், ஏடுசேர்த்தல், பூசித்தல், வாசித்தல் முதலிய திருப்பணிகள் ஒவ்வொன்றுக்கும் வேண்டிய கருவிகள் முழுதுங் கொடுத்தல் உணவளித்தல் முதலியனவாம். இவ்வாறு திருத் தொண்டுகள் எவ்வித இடையூறுமின்றி நடந்துவரச்செய்து திருஞானசம்பந்தர் திருவடிமறவாத சிந்தையராய்த் தினந்தோறும் பூசித்துவந்து திருக்கயிலையடைந்து சிவகணத்தலைவராயினர்.

குறிப்பு:—இந்நாயனார், செல்வராயினோர் யாவரும்நாம்செய் வதே போதுமென்று பராமுகமாகாமல் சிவபுண்ணியஞ்செய்வா ரெவர்க்கும் இடைநழுவாது நிகழும்படி உதவிசெய்ய வேண்டியதும் அத்தியாவசியமென்பதுணர்த்தியுய்விக்க வந்தருளிய சிவ வர்க்கப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## கூற்றுவநாயனார் புராணசாரம்.

---

குன்றாத புகழாளர் களந்தை வேந்தர்
கூற்றுவனார் மாற்றலர்மண் கொண்டு சூடப்
பொன்றாழ் முடிவேண்டப் புலியூர் வாழும்
பூசுரர்கள் கொடாதகலப் புனித னீந்த
மன்றாடுந் திருவடியே முடியாச் சூடி
மாநிலங்காத் திறைவனுறை மாடக் கோயிற்
சென்றாசை யுடன்வணங்கிப் பணிகள் செய்து
திருவருளா லமருகலஞ் சேர்ந்து ளாரே.

இ-ம். கூற்றுவநாயனார், களந்தை என்னும் பதியில் குறுநிலமன்னர் (சிற்றரசர்) குலத்தில் அவதரித்தவர். இவர், சிவபத்தியிற்சிறந்து சிவபஞ்சாக்ஷரசெபநியமான பூஜாதி சிவநியமசீலராய்த் திருவமுதளித்தல் முதலிய சிவனடியார்பூசனை சிறப்பச் செய்கின்றவர். திருவருள் வலியால் பகைமுழுதும்வென்று தனியரசாய் நால்வகைச் சைநிய முதலியவெல்லாம்பெருக எதிரின்றி வாழ்ந்தும் ராஜமுடியில்லாமையால் தில்லைவாழந்தணரை அதுதருக என்று கேட்க, அவர்கள் சோழராஜராகிய முடியரசர்க்கல்லது, சிற்றரசர்க்கு அம்முடிசூட்டுவதில்லையென்று மறுத்து, அதனைக் காக்கும்படி தம்முள் ஒரு குடியை வைத்துவிட்டுச், சேரதேசஞ் சென்றனர். அதுதெரிந்தும் தமக்குமுழுவலியிருந்தும் அக்கிரமித்துச் செல்லாமல், சிற்சபேசரைவணங்கி எம்பெருமானே தேவரீர் திருவடிகளையே தந்தருளுகவென்றுவேண்ட அவர் கனவில்வந்தருளி அவர் சிரமீது திருவடிசூட்டியருள, அவ்வடியே முடியாக் கொண்டு பூமிமுழுதும் பொதுநீக்கி அரசுபுரிந்து சிவஸ்தலங்கள் எங்குந்திருப்பணிகள்செய்து வாழ்ந்திருந்துசிவபதமடைந்தனர்.

குறிப்பு:—இந்நாயனார், சகலசெல்வமும் பெற்றுத்தனியரசாய் வாழ்ந்தாலும், சிவனடிகளேசிரமேற்கொண்டுதிருவருளையே பற்றிநின்று நடத்தினாற்றான் அவ்வரசு நிலைபெறுமென்னும் உண்மைகாட்டி உலகை உய்விக்க வந்தருளிய இவவர்க்கப் பெருஞ் செல்வமொன்க,

திருச்சிற்றம்பலம்.

## பொய்யடிமையில்லாப்புலவர் புராணசாரம்.

பொய்யறியாக் கபிலரொடு பரணராதிப்
　　புலவோர்பொற் பார்கலைகள் பொருந்த வோதிச்
செய்புளிடை வளராசு மதுரா நல்ல
　　சித்திரம்வித் தாரமெனத் தெரிக்குஞ் செம்மை
மெய்யுடைய தொடைகளெல்லா மன்று ளாடல்
　　மேவியகோ னிருதாளில் விரவச் சாத்திக்
கையுடையஞ் சலியினரா யருளான் மேலைக்
　　கருதரிய வமருலகங் கைக்கொண் டாரே.

இ—ம். இவர்கள், பாண்டிநாட்டிற் சிறந்த மதுராபுரியிலே மீனாக்ஷிசுந்தரேசர், தெய்வப்புலமைவிளக்குந்திருப்பலகைகொடுத்தருளப்பெற்று ஒரு முழச்சதுரமான அப்பலகை ஒருவர்க்கு ஒரு முழம்வளர்ந்திடங் கொடுக்க அதன்மீதிருந்து, தமிழ் வளர்த்து வந்த நாற்பத்தொன்பதின்மர்களாகிய சொக்கநாதர் நக்கீரர், கபிலர் பரணர் முதலிய சங்கப்புலவர்கள். இவர்கள் சகல சாஸ்திரமுந்தெளிந்து பரமபதி சிவனே என்னுமுண்மைகண்டு, கற்றதனாலாய பயன் வாலறிவனாகிய சிவபரன்றிருவடிகளையே தொழுது பாடுதலாமென்றுதுணிந்து, அவனையேபாடுகின்றவர்கள். மற்றைய தேவர் மனிதர் யாவரையும்பாட வாய்திறத்தலுஞ் செய்யார். நினைத்தலுஞ்செய்யார். இந்நிலை தவறாது பொய்யடிமையில்லாப் புலவர் என்னும் பெயர்பெற்று துவாதசாந்தபுர நிவாசர்களாய் நெடுநாளமர்ந்து சிவபதமடைந்தார்கள்.

குறிப்பு:—இவர்கள், சகல கலாவல்லவர்களாயுள்ள வித்துவான்கள் யாராயிருந்தாலும் அவர்கள் பரமபதியாகிய சிவனையே பாடுதலன்றிப் பசுக்களாகிய மற்றைத் தேவர் மனிதரைப்பாடின், அதனால் மெய்ப்பயனுறுமையொன்றோ விதிவிரோதமுமாதலால் சிவனையேபாடி உய்கவென்றுணர்த்தியருள வந்தருளிய அகாராதி அக்ஷராவதார நிர்ச்சலபக்த சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## புகழ்ச்சோழநாயனார் புராணசாரம்.

---

பொழின்மருவுங் கருவூர்வாழ் புகழார் சோழர்
போதகம்போ லென்னுயிரும் போக்கு மென்றே
யழலவிர்வாள் கொடுத்தபிரா னதிக மான்மே
லடர்ந்தபெரும் படையேவ வவர்கொண் டேய்ந்த
தழல்விழிகொ டலைகாண்பார் கண்ட தோர்புன்
சடைத்தலையை முடித்தலையாற் றூழ்ந்து வாங்கிக்
கழல்பாவி யதுசிரத்தி னேந்தி வாய்ந்த
கனன்மூழ்கி யிறைவனடி கைக்கொண் டாரே,

இ—ம். புகழ்ச்சோழநாயனார், சோழநாட்டில் உறையூரில் சோழராஜகுலத்தில்அவதரித்தவர். இவர், தமதுபரம்பரைக்குரிய வைதிகசைவந்தழைத்தோங்க அரசுபுரிந்து, சிவாலயங்களெங்கும் நித்தியநைமித்திகாதிபூசைகள்சிறப்புறநடத்திச்,சிவனடியார்குறிப்பறிந்து ஏவல்செய்து வழிபடுஞ்சீலமிக்கவர். இவர், தமதுராஜதானியாகிய கருவூரில் அரசுவீற்றிருந்தருளுங்காலத்து, சிவகாமியாண்டார் திருப்பூங்கூடையைப்பறித்துச்சிதறிய தமதுபட்டத்து யானையைப்பாகருடன்கொன்ற எறிபத்தநாயனாரைப் பிறர்சொல்லால் பகைவரென்றுகருதிப் போர்க்கோலங்கொண்டு கோபாவேசத்துடன்வந்தும், தூரத்திற்கண்டவுடனே ஆ! ஆ!! இவர் சிவனடியாரன்றோவென்று பதைத்து ஓடிவந்து பாதங்களில்விழுந்து சுவாமீ, அடியேனையுங்கொன்று சிவத்துரோகம் நீக்கியருளுகவென்று வாளைக்கொடுத்து வேண்டிநின்று, உயிர்க்கிறுதிவரினும் உண்மையன்பு ஒருசிறிதும்வழுவாநிலைகாட்டிய உத்தமநிடபத்தர். ஒருநாள், தமதுசேனைவீரர்கள் பகைவரைவென்று கொண்டுவந்த தலைகளில் ஒன்றிற்சிறிய சடைகண்டுநடுங்கி, அந்தோ! இதுசிவனடியார் சிரசன்றோ! இச்சிவத்துரோகம் உயிரொழிந்தாலன்றி நீங்காதெனநிச்சயித்து, மந்திரிகளைஅழைத்து நமதுசிறுவனுக்கு முடிசூட்டிநீதிவழுவாதுசைவநெறிபாதுகாத்து அரசுபுரிகவென்று ஆணைதந்து, அதுகேட்டு வருந்தும் அவரைத்தேற்றி, அக்கினி வளர்ப்பித்து அச்சடைத்தலையைச் சிரமேற்றாங்கிக்கொண்டு அக்கினியை வலஞ்செய்து ஐந்தெழுத்தோதிக்கொண்டு அதனுட்புகுந்து சிவபதநிழலடைந்தருளினர்.

குறிப்பு:—இவர், சிவனடியார் திருவேடமே உயிரினுஞ் சிறந்தபொருள். சிவனடியார்க்கு எவ்வித இடரும் வாராமல்பாதுகாத்தலே அரசுக்குரியமுக்கியாங்கமென்னும் உண்மையைவிளக்கிஉய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## நரசிங்கமுனையரையநாயனார் புராணசாரம்.

நாடுபுகழ் முனைப்பாடி நாடு மேய
நரசிங்க முனையர்புவி நயந்து மன்றுள்
ஆடுமவ ராதிரைநா ளடியார்க் கம்பொன்
அமுதளிப்பா ரொளிவெண்ணீ றணிந்து தூர்த்த
வேடமுடை யவர்க்கிரட்டிச் செம்பொ னீந்து
விடுத்தழகா ராலயங்கள் விளங்கச் செய்து
தோடலர்தா ருடையபிரா னருளை யாளத்
தோன்றினு ரெனையருளி னூன்றி னூரே.

இ-ம். நரசிங்கமுனையரையநாயனார், திருமுனைப்பாடி நாட்டிற் குறுநிலமன்னர் குலத்தில் அவதரித்தவர். இவர் விபூதிருத்திராக்ஷபஞ்சாக்ஷரமே மெய்ப்பொருளெனவும், சிவனடியார்திருவடியடைதலே பெரும்பேறெனவும், சைவநெறி எங்கும்பரவச்செய்தலே சிறந்ததிருத்தொண்டெனவும்பற்றிநின்று, பகைமுழுதும் வென்று சிவாலயமெல்லாம் நித்தியநைமித்திகாதிபூசனை சிறப்பித்துத், திருவாதிரைத் தினந்தோறும் விசேஷபூசைசெய்வித்துச், சிவனடியார்க்கமுதளித்து நூறுநூறுபொன்னுங் கொடுத்தல்முதலியநியமமே அரசியலென நடத்தி வருகின்றவர். ஒருதினத்தில் தூர்த்தர் ஒருவர் சிவவேடம்பூண்டு வரவும் அவர்க்கு இருநூறு பொன்கொடுத்துபசரித்தனர். நெடுங்காலம் இத்திருத்தொண்டுகளே செய்துவந்து சிவபதமடைந்தருளினர்.

குறிப்பு:—இவர், சிவவேடங்கண்டஅளவிலே சிவமாகவே நோக்கி வழிபடுந்தீவிரதரபக்குவநிலைவிளக்கி உய்விக்கவந்தருளிய இவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## அதிபத்தநாயனார் புராணசாரம்.

அலைபாருங் கடனாகை நகருள் வாழும்
அதிபத்தர் பரதவர்க ளதிபர் வேலை
வலைவாரி வருமீனிற் றலைமீ னீசன்
வார்கழற்கே யென்றுவிடு மரபார் பன்னாட்

டலையான தொருமீனே சார நாளுந்
தந்தொழிலால் விடுத்துமிடி சாரச் செம்பொன்
நிலையாரு மணிநயந்த மீனொன் றெய்த
நீத்தருளா லிறைவனடி நேர்ந்து ளாரே.

இ—ம். அதிபத்தநாயனார், சோழநாட்டிலே நாகபட்டினத்தில் கடற்கரையிலுள்ள நுளைப்பாடியில் வலைவீசி மீன்பிடிக்கும் (பரதவர்) வலைஞர்குலத்தில் அவதரித்தவர். அக்குலத்தினர்க்கு அரசராய் மீன்குவியல்களால்வரும் பெருஞ்செல்வராயினர். இவர், தமதுசாதிக்குரிய மீன்கொலைஞராயிருந்தும் பூர்வபுண்ணியவிசேடத்தால் உண்மைஞானம் விளங்கப்பெற்றுச் சிவனடியேபற்றி நிற்கின்ற திடபக்தசிலர். இதனை, இவரது அதிபத்தர் என்னுந் திருநாமமுந்தெளிவிக்கும். இப்பத்திவலியினால் தமதுகுடிகளாகிய வலைஞர்கள் மீன்பிடிக்கும்போதெல்லாம் முதலில்வருமீனைச் சிவபிரானுக்கென்றுவிட்டுவிடும்படி ஆஞ்ஞாபித்துத், தாமும்அவ்வாறே நடந்துவந்தனர். சிவபிரான் இவரது மெய்யன்பை யாவர்க்கும் விளக்கி உய்விக்கத்திருவுளங்கொண்டு, பலநாளும் ஒவ்வொருமீன் மாத்திரம் அகப்படச்செய்தனர். அதனையும் விட்டுவருதலால் வருவாய்குறைந்து வருந்தும்போதும், ஒருநாள் சுவர்ணரத்தினமயமான ஒரேமீன்மாத்திரம்அகப்பட அதனை நேரேகண்டும் இம்மீன் கோடிசூரியப்பிரகாசமாய் லோகாதீதமாய்விளங்கலால் இது, லோகாதீத சிவனுக்கே உரியதென்று கடலில்திருப்பிவிட்டனர். உடனேசிவபிரான் உமாதேவியாருடன் இடபாரூடராய்த்தோன்றியருளினர். நாயனார்பணிந்துதுதித்தனர். அவரைச்சிவபிரான் திருவடிசேர்த்தருளினர்.

குறிப்பு:—இந்நாயனார், இழிகுலத்திற் பிறந்தவர்கள், அக்குலத்துக் குரியதாய் நூல்கள் விதித்தமுறையில் நிற்பதே தகுதியாம். அம்முறைதவறி மேற்குலங்களுக்கு விதித்த நெறியிற்புகுத நினைப்பரேல் அது அப்பலனைத்தாராதொழிதல்மட்டிலமையாமல், மேலும் அதோகதியிற்றள்ளிவிடுமாதலால், அவரவர் குலமுறையினின்று செய்யக்கூடிய சிவதருமங்கள் செய்வதே மேற்கதியிற் புகுத்திவாழ்விக்குமென்னும் உண்மைகாட்டி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## கலிக்கம்பநாயனார் புராணசாரம்.

கடவுளருட் கண்ணானர்கள் பயிலுந் தொல்லைக்
கடந்தைநகர் வணிகர்கலிக் கம்ப ரன்பர்க்
கடிமையுற வமுதளிப்பா ரடியா ரீங்கி
யருளுருவா யன்பருட னணைய வேத்தி
யிடையிலவ ரடியிணையும் விளக்கா நிற்ப
விகழ்மனைவி கரகமலி யிரண்டு கையும்
படியில்விழ வெறிந்தவன்செய் பணியுந் தாமே
பரிந்துபுரிந் தானருளே பற்றி னாரே.

இ-ம். கலிக்கம்பநாயனார், நடுநாட்டிலே திருப்பெண்ணாகடத்தில் வைசியகுலத்தில் அவதரித்தவர். இவர், அங்குள்ள திருத்தூங்கானைமாட மென்னும் திருக்கோயிலில் திருத்தொண்டுகள் செய்பவர். அத்தொண்டெல்லாம், சிவனடியார் திருத்தொண்டும் உடன்புரிந்தாற்றான் பயனைத்தருமென்னு முண்மையுணர்ந்தவராதலால், சிவனடியார்க்கு அமுதளித்தலாகிய மாகேசுரபூசனையும் தினந்தோறுஞ் செய்துவருவார். ஒருநாள் வழக்கப்படி பத்தினியார் கரகநீர் வார்க்க அடியார் பாதம் விளக்கிப் பூசித்துவரும்சமயம், முன்பு தம்மனையில் வேலைசெய்துவிலகிய ஒருவர் சிவவேடம் பூண்டுவர அவர் பாதம் விளக்கப்புகும்போது, பத்தினியார் அவரது முன்னைநிலை நோக்கிச் சிறிது தாமதித்தனர். நாயனார் அவர் கையைத்தடிந்து தாமே பூசித்து யாவர்க்கும் அமுதுசெய்வித்தனர். இத்திருத்தொண்டுகளையேநெடுநாட்செய்துவந்து சிவபதநிழலில் புகுந்து சிவனடியாருடன் பேரின்புற்று வாழ்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவனடியாரிடத்துத் தாழ்வு நோக்காது சிவவேடமே நோக்கி வழிபடுமுறையுணர்த்தியுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## கலியநாயனார் புராணசாரம்.

தடமதில்சூ ழொற்றியூர் நகருள் வாழுஞ்
சக்கரப்பா டியர்குலமெய்த் தவமா யுள்ளார்
படர்புகழார் கலியனார் நலியுங் கூற்றைப்
பாய்ந்தவர்க்கு விளக்கெரிக்கும் பரிவான் மற்றோர்
உடலிலராய்ச் செக்குழல்வார்க் கதுவு நேரா
துயர்மனைவி யைக்கொள்வா ருளரு மின்றி
மிடறரிந்திர மகனிறைய வரிய நாதன்
வியன்கைகொடு பிடிப்பவருண் மேவி னாரே.

இ-ம். கலியநாயனார், திருத்தொண்டைநாட்டில் திருவொற்றியூரில் செக்கார் குலத்தில் அவதரித்த பெருஞ்செல்வர். இவர், செல்வமுதலியவற்றின் அநித்தியம்நோக்கிநித்தியசிவபுண்ணியமே செய்வாராய்த் திருவொற்றிநாதர் திருக்கோயிலெங்கும் திருவிளக்கேற்றி வந்தனர். இவரது திடபத்தியை விளக்கி உலகை உய்விக்கத்திருவுளங்கொண்டருளிய தியாகேசர், இவரது செல்வங்குறைவுறச்செய்தருளினர். பின்னும் இனத்தாரிடம் எண்ணெய் வாங்கி விற்று கூலிகொண்டு திருவிளக்கேற்றினர். அதுவுந் தடைப்பட்டது. பின்செக்காட்டி அக்கூலி வாங்கி விளக்கேற்றினர். அதுவுங் கிடைத்திலது. தமது பத்நியை விற்கச்சென்றுவாங்குவாரின்றி வருந்திவந்து, விளக்கேற்றுஞ்சமயம்அகல்களைப்பரப்பிரத்தத்தை விட்டு விளக்கிடக்கருதிக் கழுத்தை அரிந்தனர். உடனே சிவபிரான் அவர் கையைப்பிடித்து அதனைமாற்றி ரிஷபாரூடராய்த் தோன்றியருள, நாயனார் ஊறுநீங்கிப் பன்முறைபணிந்து துதித்து நின்றனர். சிவபிரான் அவரைத் திருவடியிற்சேர்த்தருளினர்.

குறிப்பு;—இந்நாயனார், சிவநியமத்திருத்தொண்டுசெய்வோர் எவ்வித இடர்வரினும் நழுவவிடாது எந்த உபாயத்தாலாவது, செய்துவருதலே முறையாம். எவ்வாற்றாலும் இயலாவிடின்உயிர் துறத்தலே உலகாதீத உத்தமநிலைதருமென்பதுணர்த்தி உய்விக்க வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## சத்திநாயனார் புராணசாரம்.

விரிதருகா விரிநாட்டு வரிஞ்சி யூர்வாழ்
வேளாளர் சத்தியார் விமலர் பாதத்
தரியவர்க ளடிபரவு மொருமை யார்நா
வோவாமே யைந்தெழுத்து முரைக்கு நீரார்
இருளின்மிட றுடையபிரா னடியார் தம்மை
யிகழ்வார்நாத் தண்டாயத் திடுக்கி வாங்கி
யரியுமது திருத்தொழிலா வுடையார் மன்று
ளாடியசே வடிநீழ லடைந்து ளாரே.

இ-ம். சத்திநாயனார், சோழநாட்டில் வரிஞ்சியூரில் சற்சூத்திர குலத்தில் அவதரித்தவர். இவர், சிவனடிமறவாச் சிந்தையர். சைவசித்தாந்தமே தழைத்தோங்குதற்குரிய அரும்பெருந் தொண்டுகளே செய்கின்றவர். எத்துணைச்சிறந்த பெருவலியினராயினும், சிவநிந்தனை, சிவாகமாதி சிவசாஸ்திரநிந்தனை, திருவெண்ணீறு முதலிய சிவசாதனநிந்தனைகளில் யாதொன்றைச் செய்யினும், மிக்ககோபத்துடன் விரைந்துசென்று கன்னத்தில் ஓங்கி அறைந்து, வாய்திறக்கும் அந்நிமிஷமேதண்டாயத்தினுல்(பற்றுக்குறட்டினுல்) நாக்கை இழுத்துச் சத்தியால் (கத்தியினுல்) அறுத்தெரிகின்றவர். இதனுலேயே இவர் சத்திநாயனுர் என்னுந் திருப்பேர் விளங்கப்பெற்றனர். இவ்வரிய திருப்பணியே நெடுங்காலஞ் செய்துவந்து சிவபதநிழலிற் சேர்ந்தருளினர்.

குறிப்பு:—இந்நாயனுர் சிவாபசாரம் செய்தவர் யாராயிருந்தாலும் அவரை உடனே சிக்ஷித்து அச்சிவத்துரோகத்தை நீக்குவது சிவபுண்ணியமென்று சிவாகமங்கூறுதலே நேரே விளக்கி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## ஐயடிகள்காடவர்கோனயனர் புராணசாரம்.

வையநிகழ் பல்லவர்தங் குலத்து வந்த
மாமணிமா நிலமுழுது மகிழ்ந்து காக்கும்
ஐயடிகள் காடவர்கோ னருளா னூல்க
ளறிந்தரசு புரிந்திடுத லமையு மென்றே
பொய்யனைய வுடல்வாழ்வு கழியு மாறு
பொருந்தியிடும் புகழ்வெண்பாப் புலியூர் மேவுஞ்
செய்யதிரு வடிமுதலாப் பதிக டோறுஞ்
செப்பினா ரென்வினைக டப்பி னாரே.

இ-ம். ஐயடிகள் காடவர்கோனயனர், தொண்டைநாட்டில் காஞ்சிபுரத்தில் பல்லவர் (குறுநிலமன்னர்) குலத்தில் அவதரித்தவர். சகல சாஸ்திர ஆராய்ச்சிமுறையில் சைவமே மெய்ச்சமயம் என்பது தெளிந்து அது தழைத்தோங்க அரசுபுரிந்து வந்தனர். நெடுநாளானபின், சிவசிந்தனை வழுவாது நடத்தும் இவ்வரசும் செல்வப்பெருக்கினால் அகந்தை விளைக்குமென்றஞ்சி அதனைப் புதல்வனிடஞ் சேர்த்துவிட்டுத் துறந்துசென்று திருத்தில்லைமுதலிய சிவக்ஷேத்திரமெங்கும் பணிந்து, தேகமுதலிய பொருளெல்லாம் அநித்தியமென்றும், சிவனடியே சிந்திக்குந் திருத்தொண்டுகளே நித்தியவாழ்வு தருமென்றும் விளக்கும் திருவெண்பாக்கள் பாடுதல் முதலிய திருத்தொண்டுகளே செய்துவந்து சிவபதநிழலிற்புகுந்தருளினர்.

குறிப்பு:—இவர், நியமகாலவரையின்றி அனவரதமும்புரிதற்குரிய திருத்தொண்டு திருப்பாடல்கள்செய்துபோற்றுதலேஎன்பதுணர்த்திஉய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

# கணம்புல்லநாயனார் புராணசாரம்.

இலகுவட வெள்ளாற்றுத் தென்பால் வாழு
மிருக்குவே ளூரதிப ரெழிலார் சென்னிக்
கலைநிலவா ரடிபரவுங் கணம்புல்லர் தில்லைக்
கருதுபுலீச் சரத்தரற்குக் காதற் றீப
நிலைதரத்தா மிடமிடியா லொருநாட் புல்லா
னீடுவிளக் கிடவதுவு நேரா தாகத்
தலைமயிரி னெரிகொளுவு மளவி னாதன்
றுவாதவாழ் வருளுந் தன்மை யாரே.

இ-ம். கணம்புல்லநாயனார், வடவெள்ளாற்றுத் தென்கரை இருக்குவேளூரில் அவதரித்த பெருஞ்செல்வர். இவர், செல்வத்தாலடையும் பலன் திருத்தொண்டுகளே எனத்துணிந்து சிவாலயத்தில் திருவிளக்குத்தொண்டு செய்துவந்தார். திருவருளால் செல்வங்குறைந்தும், சிதம்பரத்தையடைந்து சிற்சபேசரைத்தெரிசித்து ஒருவசதியிலிருந்துகொண்டு தமது வீட்டுப்பொருள்களை விற்றுத், திருப்புலீச்சரம் என்னும் இளமையாக்கினார்கோயிலில் திருவிளக்கிட்டுவந்தார். பொருள்களும்ஒழிந்தபின் கணம்புல்அரிந்துவிற்று நெய்வாங்கிவிளக்கேற்றினர். ஒருநாள் அதுவும்விலையாகாமல் அதனையே நெருப்பிலிட்டு விளக்கெரித்தார். அதுவும் குறித்தயாமவரை எரியாமையால் தமது சிகையைநீட்டி எரித்தனர். உடனே சிவபிரான் திருவருள்செய்யச் சிவலோகப் பெருவாழ்வு பெற்றனர்.

குறிப்பு:—இவர் சிவபணிகளிற் சிறந்த திருவிளக்குப்பணி சிரமேற்கொண்டு தினந்தோறுந் தவறாதுசெய்துவந்தால் சிவஞானம்பிரகாசிக்கப்பெற்றுச் சிவகதிபெறுதல்திண்ணமெனுமுண்மை புணர்த்தியுய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## காரிநாயனார் புராணசாரம்.

திருக்கடவூர் வருமுரவோர் காரி யாராந்
திகழ்தொண்டர் வண்டமிழ்நூ றிருந்த வோதி
விருப்பொடுதம் பெயராற்பா விளம்பி மும்மை
வேந்தரையு முறைமுறையே மேவி யங்கண்
உரைத்தவுரை நயமாக்கி யவர்பா லேய்ந்த
வொண்பொருளா லாலயங்க ளோங்கச் செய்து
தரைக்குளருந் தவர்க்கேவ றகமுன் போற்றுந்
தன்மையா லருள்சேர்ந்த நன்மை யாரே.

இ-ம். காரிநாயனார், சோழநாட்டில் திருக்கடவூரில் அவதரித்தவர். இவர், தமிழ்நூல்களாராய்ந்து ஒருசொற்குப் பலபொருளமையத் தம்பெயராற்பாடியருளிய "காரிக்கோவை" என்னும் பிரபந்தத்தை சேர்சோழ பாண்டியர்களாகிய மூவேந்தரிடத்து வந்து அவர்கள் தம்மைப்பாடியதாக மகிழும்படி பொருள் விளக்கி, அவருவந்து தரும்பொருள்கொண்டு சிவாலயங்கள் பலசெய்வித்தல், பூசனையாதிசிறப்பித்தல், சிவனடியார்க்கு வேண்டுவன கொடுத்தல் முதலிய திருத்தொண்டுகளே செய்துவந்து சிவபத நிழலிற்புகுந்தருளினர்.

குறிப்பு;-இவர், பொருளில்லையேயென்று பராமுகமாயொழியாது, தம்மாலியன்ற எத்தொழிலைச் செய்தாவது பொருளீட்டிச் சிவபணிகளே செய்துய்கவெனுமுண்மைகாட்டி உய்விக்கவந்தருளிய சிவவுர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## நின்றசீர்நெடுமாறநாயனார் புராணசாரம்.

கன்னன்மலி நெல்வேலிக் கலிஞர் மாறர்
கவுரியர்கோ னமணருறு கலக்க மெல்லாம்
பொன்னெயில்சூழ் சிரபுரக்கோ னிணைய மாற்றிப்
புனிதமிகு நீறணிந்து போற்றி செய்து

மன்னுபுகழ் மங்கையருக் கரசி யாராம்
மலர்மாது மணிமார்ப மகிழ்ந்து மாற்றார்
வெந்நிடுதல் கண்டரசு புரிந்து காழி
வேந்தரருள் சேர்ந்தபெரு விறலி னாரே.

இ-ம். நெடுமாறநாயனார், பரம்பரையாகச் சைவநெறியே பாதுகாத்துவந்த பாண்டியர் குலத்தில் அவதரித்தவர். பூர்வகர்ம வசத்தால் சமண்சார்பினராயிருந்து, பின்பு சைவலோகஞ்செய்த தவப்பயனாலவதரித்தருளிய மங்கையர்க்கரசியாராகிய பத்தினியார் மந்திரியாரிருவர் சார்பின்விசேடத்தால், திருஞானசம்பந்தர் திருவருள்பெற்றுச் சமண்சார்பு நீங்கி, நீதிமுறையே சமணரைத் தடிந்து, சைவம் வளர்த்துவந்து, திருநெல்வேலியில் எதிர்த்து வந்த பகைவரைவென்று செங்கோல் செலுத்தி வாழ்ந்து சிவபாத நிழலடைந்தனர்.

குறிப்பு:—இவர், அந்நிய சமயங்கள் தந்தம் அளவில்நில்லாமல் அதிக்கிரமித்து அநீதிசெய்யின் உடனே தடிந்து இடர்நீக்கிச் சைவநெறி வளர்த்தற்கே திருவருளால் வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## வாயிலார்நாயனார் புராணசாரம்.

---

ஞாயிலார் மதிற்றிருண்டை நாட்டு மேன்மை
நண்ணுமயி லாபுரியின் வேளாண் டொன்மை
வாயிலார் மலைவில்லா னடியே போற்றி
மறவாமை தலைநின்ற மனமே செம்பொற்
கோயிலா வுயர்ஞானம் விளக்கா நீராக்
குலவியவா னந்தமன்பே யமுதாக் கொண்டு
தாயிலா னிருசரண நிகழ வேத்துந்
தன்மையா ரருள்சேர்ந்த நன்மை யாரே.

இ-ம். வாயிலார்நாயனார், தொண்டைநாட்டில்மயிலாப்பூரில் சற்சூத்திர குலத்தில் அவதரித்தவர். இவர், வேதசிவாகமாதிக ளால் விதந்தெடுத்தோதும் பரமபதி சிவனே என்பதும், அவ னுகந்ததொண்டுகளிற் சிவபூசை சிறந்ததென்பதும் தெளிந்த தமது மனமாகியகோயிலிலே, ஞானமாகியதீபமிட்டு, ஆன்மாவே லிங்கமாக அதனில் சிவபரம்பொருளை ஆவாகித்து, ஆனந்தமாகிய திருமஞ்சனமாட்டி, க்ஷமையாதி அஷ்டபுஷ்பஞ்சாத்தி, ஆணவ மல சமர்ப்பணமாகிய தூபமும் ஞானவிளக்கமாகியதீபமுங்காட்டி அன்பையே நிவேதித்து இவ்வாறு அனவரதம் பூசித்துவந்து சிவ பதநிழலிற் சேர்ந்தனர்.

இவர், சிவபூசையே சிறந்தது; அது புறப்பூசை மட்டிலமை யாது அகப்பூசையுஞ் செய்தாற்றான் அப்பயன் கைப்பொருளா மென்பதுணர்த்தியுய்விக்க வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வ ரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## முனையடுவார்நாயனார் புராணசாரம்.

---

பொன்னிவளந் தருநாட்டுப் புகழு நீடூர்ப்
பொருவிறரு மலிவேளாண் டொண்மை மிக்கார்
முன்னியவர் முனையடுவா ரிகலார் போரின்
முரணழிவார் தமக்காக மொழிந்த கூலி
மன்னுநிதி கொண்டுசயங் கொடுத்து வந்த
வளர்பொருளா லிறைவனடி வழுவா வன்பர்க்
கன்னமவர் நசையின்மிக வினைய நல்கு
மன்பர்துன்ப மவையாவு மகன்று ளாரே.

இ-ம். முனையடுவார்நாயனார், சோழநாட்டிலே திருநீடூரில் சற்சூத்திரகுலத்தில்அவதரித்தவர். இவர், சிவனடியார்க்கமுதளித் தலாகிய மாகேசுரபூசைசெய்கின்றவர். பகைவர்களை வெல்லமுடி யாதவர்கள், தம்மைவேண்டுங்கால் அதற்குக்கூலிபேசிநடுநிலையில்

வைத்து, யுத்தம்புரிந்துஎப்பகைவரையும் அருள்வலியால்வென்று அக்கூலிப்பொருள்பெற்றுமேற்குறித்தமாகேசுரபூசையைமுறைப் படிசெய்துவந்து சிவபதநிழலடைந்தனர்.

குறிப்பு:—இவர், சிவபூஜாதிகளிற்சிறந்ததொண்டு மாகேசுர பூசையே அதற்குப் பொருளில்லையானால், தம்மாலியலுந்தொழி லெதுவாயினும்நீதியொடுசெய்து கூலிவாங்கியும்நடத்தலாமென்ப துணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்,

---

## கழற்சிங்கநாயனார் புராணசாரம்.

---

காடவர்தங் குலமுவந்த கழலார் சிங்கர்
காதன்மிகு தேவியுடன் காவ லாரூர்
ஆடவல பெருமானைப் பணிவா ரங்கோ
ரகன்றமலர் தனைமோந்த வரிவை மூக்கைச்
சேடுடைய செருத்துணையா ரரியக் கேட்டுத்
திறலரசர் மலரெடுத்த செங்கை யென்றே
சூடகமுன் கைதடிந்து ஞாலங் காத்த
தூய்மையா ரருள்சேர்ந்த வாய்மை யாரே.

இ-ம். கழற்சிங்கநாயனார், குறுநிலமன்னர்களாகிய காடவர் குலத்திலே அவதரித்தவர்; சிவனடிமறவாச்சிந்தையர். திருவருள் வலியினால்வடபுறத்தரசரையும்வென்று அந்நாடுகளைவசப்படுத்திச், சைவந்தழைத்தோங்கத் தனியரசுபுரிந்து, சிவக்ஷேத்திரங்களெல் லாஞ்சென்று திருப்பணிகள்புரிந்துவருநாள், திருவாரூர்ச் சிவால யந்தெரிசித்து வலம்வரும்போது, தமதுபத்திநியார் புஷ்பமண்ட பத்தின்பக்கத்திற்கிடந்த ஒருபூவை எடுத்து மணந்தனர். அது கண்டசெருத்துணைநாயனார் அவர்மூக்கைஅரிந்தனர். பத்திநியார் ஆற்றுதுவருந்திவீழ்ந்தலறினர். அரசர்வந்து அஞ்சாது இக்கொ

டுமைசெய்தவன் இந்தஅண்டத்திலுள்ளவன்ருனென்றனர். இவர் அண்டத்திலென்றமையால் பூவுலகமட்டுமன்றி மேலுங்கீழுமுள்ள பதினாலுலகங்களையும்வெல்லும் மகாவீரரென்பதுதெளிவாம். இத் தகுவீரராயிருந்தும், செருத்துணைநாயனார்வந்து இப்பூவைஎடுத்து மணந்தமையால் மூக்கை அரிந்தேன் என்றது கேட்டவுடனே, கோபமுழுதுமாறி அதிசாந்தராய்ச் சுவாமீ பூவைமணந்த சிவாப சாரம்வளர்ந்துபெருந்துன்பஞ்செய்யாமல் இம்மட்டில்ஒழிகவென் னும் பெருங்கருணையினுல் மூக்கையரிந்து அவ்வபசாரநீக்கியருளி யதுபேருதவியேயாம். பூவைஎடுத்தகையையன்றே முன்புதடிய வேண்டுமென்றுகூறி, உடைவாளையுருவி அக்கையைத் தடிந்தனர். தேவர்பூமழைபொழிந்தனர். யாவரும்ஆச்சரியமடைந்தனர். இவ் வருஞ்செயல்புரிந்த கழற்சிங்கநாயனுர் நெடுங்காலம்சைவநெறியே பாதுகாத்து அரசுபுரிந்திருந்து சிவபதநிழலிற்சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவாலயசேவை முதலிய சிவதருமங்கள் செய்வோர் நுணுகிஆராய்ந்து சிவாபசாரம்வராமல் விதிப்படிசெய் தாற்ருன் அப்பயன்பெற்றுவாழலாம்; ஆராய்தலின்றிச்செய்தால் விதிவிரோத சிவாபசாரங்கள் நேரினும்நேரும். அதனுல்அப்பயனு மிழந்து மேலும் பெருந்துன்பமுமடைவர். ஆதலால் விதிமுறை ஆராய்ந்துசெய்கவென்றுணர்த்தி உய்விக்கவந்தருளியசிவவர்க்கப் பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## இடங்கழிநாயனுர் புராணசாரம்.

---

கோனாட்டுக் கொடும்பாளு ரிருக்கும் வேளிர்
குலத்தலைவ ரிடங்கழியார் கொங்கிற் செம்பொன்
ஆனேற்ருர் மன்றின்முக டம்பொன் வேய்ந்த
வாதித்தன் மரபோர்நெற் கவர்ந்தோ ரன்பர்

போரப்ப ணிருளின்கட் காவ லாளர்
புரவலர்முன் கொணரவவர் புகலக் கேட்டு
மானேற்ற ரடியாரே கொள்க வென்று
வழங்கியர சாண்டருளின் மன்னி னாரே.

இ-ம். இடங்கழிநாயனார், கோனாட்டுக் கொடும்பாளூரிற் குறுநிலமன்னர்குலத்தில் கனகசபையைக் கொங்குச்செம்பொன்னால்வேய்ந்த ஆதித்தன்குடியில் அவதரித்தவர். சிவபணியேஉயிர்த்துணையெனப்பற்றிநின்று செய்பவர். வேறுநெறிகளைக்கனவிலும் நினையாதவர். பேராசையுடன் சிவனடியார் விரும்புவனவேசெய்பவர். இவர், சிவாலயங்களெங்கும்நித்தியநைமித்திகாதிதிருப்பணிகள் சிறப்பநடத்திச் சைவந்தழைப்ப அரசுபுரியும்நாளில், ஒருமெய்யன்பர் நியமமாச்செய்துவரும் மாகேசுரபூசைக்கு பொருளில்லாத ஒருசமயத்தில், எவ்விதத்திலும் அப்பணிதவறாது நடத்தவேண்டுமென்ற ஆசைவசத்தராய் நின்றமையால், அரசர் நெற்கொட்டாரத்தில் நடுராத்திரியிற்சென்று அள்ளினார். காவலர் பிடித்துவந்து அரசர்முன்விட்டனர். அவர் சிவவேடங்கண்டு பரிந்து அரசர் (இடங்கழிநாயனார்) அன்பரே இவ்வாறு செய்ததென்னையென்றுகேட்ப, அன்பர் மாகேசுரபூசைக்குப் பொருளின்மையாற் செய்தேனென்றார். இவரன்றோநமதுபண்டாரம் (செல்வம்) என்று மகிழ்ந்து நெற்பண்டாரமட்டுமோ? நிதிப்பண்டாரமுஞ் சிவனடியார்கள் அள்ளிக்கொள்ளுகவென்று பறைசாற்றுவித்தும், பண்டாரமுழுதுந்திறந்துவிட்டு அடியாரெல்லாருங்கொள்ளையாக்கொள்ளும்படி கொடுத்தருளினர். இவ்வாறு தண்ணளியுடன் நெடுங்காலம் அரசுபுரிந்திருந்து சிவபதநிழலிற் சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவனடியார்செயல்களிற் சிலஉலகமுறைக்கு விரோதமாக்காணப்படினும், அவை சிவபணிக்குதவியாகவே முடியுமாதலால், நன்குணர்ந்து ஆதரவுசெய்தலே உலகாதீத சைவநிலைக்குரியமுறையென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## செருத்துணைநாயனார் புராணசாரம்.

இரைத்தணையார் புனற்பொன்னி மருக னன்னாட்
டெழிலாருந் தஞ்சைநக ருழவ ரேத்துஞ்
செருக்துணையார் திருவாரூர் சேர்ந்து வாழ்வார்
செல்வமிகும் பல்லவர்கோன் றேவி வீழ்ந்த
மருத்துணையார் மலரெடுத்து மோப்பக் கண்டு
வளமலிபூங் கத்தியா லவண்மூக் கீர்ந்த
கருத்துணையார் விறற்றிருத்தொண் டினையே செய்து
கருதலரு மமருலகங் கைக்கொண் டாரே.

இ-ம். செருத்துணைநாயனார். சோழநாட்டிலொருபகுதியாகிய மருகல்நாட்டுத் தஞ்சாவூரிலே சற்சூத்திரகுலத்தில் அவதரித்தவர். இவர், சைவநெறித் திருத்தொண்டுகளே செய்பவர். திருவாரூரையடைந்து வன்மீகநாதரை வணங்கி அக்கோயிலிற் பல திருத்தொண்டுகள் செய்துகொண்டிருக்குநாளில் கழற்சிங்கநாயனாருடைய மாதேவியார் புஷ்பமண்டபத்தின் புறத்தே கிடந்த ஒரு பூவை மணப்பக்கண்டு ஓடிவந்து மூக்கை அரிந்தனர். இவ்வாறு அரிய திருத்தொண்டுகள் செய்துகொண்டு நெடுநாளிருந்து சிவபதநிழல் சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவபணிசெய்கின்றவர்கள் சிவாபசாரங் கண்டால் தாக்ஷிணிய முதலியவற்றால் பராமுகமாயொதுங்காமல் உடனே சிக்ஷித்துப் பணிவழுவாதுபுரிதலே சிவாகமமுறையென்பதுணர்த்திஉய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## புகழ்த்துணைநாயனார் புராணசாரம்.

புண்ணியர்கள் புகழழகார் திருப்புத் தூர்வாழ்
புகழ்த்துணையா ரகத்தடிமைப் புனிதர் சின்னாண்
மண்ணிகழ மழைபொழியா வற்கா லத்தால்
வருந்துடல நடுங்கிடவு மணிநீ ரேந்தி

அண்ணன்முடி பொழிகலச முடிமேல் வீழ
வயர்ந்தொருநாட் புலம்பவா னருளா லீந்த
நண்ணலரு மொருகாசுப் படியால் வாழ்ந்து
நலமலிசீ ரமருலக நண்ணி னாரே.

இ-ம். புகழ்த்துணைநாயனார், செருவிலிபுத்தூரில் சிவத்துவி ஜர் குலத்தில் அவதரித்தவர். இவர், சிவாகமவிதிப்படி தினமும் ஆன்மார்த்தபூசனை முடித்தே திருக்கோயில்சென்று பரார்த்த பூசனை செய்துவருகின்றவர். ஒருக்கால் பஞ்சமிகுதியால் உண வின்றி வருந்தியும், கோயில்சென்று பூசிக்கத்தொடங்கி அபிஷே கிக்கும்போது, திருமஞ்சனக்குடந்தாங்க முடியாமையால் தவறி விழுந்தது. அவரும் விழுந்து அயர்ந்தனர். சுவாமி அவர் கனவில் வந்து பஞ்சநீங்கும்வரை பொற்காசுதருவோம் என்றருள,விழித் தெழுந்து திருப்படியில் பொற்காசு கண்டெடுத்துப் பசிநீங்கி நிய மந்தவறாது பூசித்து வந்தனர். நெடுங்காலமித் திருத்தொண்டே செய்துவந்து சிவபதநிழல் சேர்ந்தருளினர்.

குறிப்பு;—இவர், நியமத்திருத்தொண்டு செய்வார் எவ்வித இடர்வரினும் நழுவாது செய்துவந்தால் திருவருள் கைவிடாது காக்குமென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப் பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## கோட்புலிநாயனார் புராணசாரம்.

---

துல்வுபுகழ் நாட்டியத்தான் குடிவே ளாளர்
கோட்புலியார் குவித்தபர்த்த செந்நெற் கூடு
நிலவணிவார்க் கமைத்தாணை நிறுத்தி யொன்னார்
நேர்மலைவார் திருவாணை நினையார் தேநெற்
சிலமிடியா லழித்தபடி யறிந்து வாளாற்
சேர்ந்தபெருங் கிளைஞருடல் சிதற வீசி
யிலகுமொரு குழவியையு மெறிந்து நாத
னெண்ணரிய கருணைநிழ லெய்தினாரே.

இ-ம். கோட்புலிநாயனார், சோழநாட்டிலே திருநாட்டியத்தான்குடியில் சற்சூத்திரகுலத்தில் அவதரித்தவர். இவர், அரசனிடம் சேனாதிபதியாயமர்ந்து அவ்வரும்படியாற் சிவாலய பூசைக்கு அமுதுபடிமுதலிய கொடுக்கும் சிவபுண்ணியமே செய்பவர். ஒருக்கால், அரசன் ஏவலால் போர்முனைக்குச்செல்லும்போது, தாம்வரும்வரை கோயிலுக்குவேண்டியநெல்லைநிறைத்துவைத்துச் சுற்றத்தாரெல்லார்க்கும் இந்நெல்லை உங்கள்செலவுக்காக ஒருசிறிதும் எடுக்கப்படாது இதுசிவாஞ்ஞை என்றுகூறிச் சென்றனர். சிலநாளானபின் பஞ்சத்தால்வருந்தி வேறுதவியின்றி மெலியும் சுற்றத்தார், நாம் உணவின்றி இறப்பதைக்காட்டிலும் இந்நெல்லை எடுத்துண்டு பஞ்சநீங்கினபின்வாசியுடன்கொடுப்போமென்று நிச்சயித்துக் கணக்கு எழுதிவைத்து அந்நெல்லை எடுத்துண்டு சீவித்தார்கள். போர்முனையில்வென்று அரசன் வெகுமானம்பெற்று வந்தநாயனார், முன்நிகழ்ச்சிதெரிந்து அதனைவெளியிடாமல், சுற்றத்தார்க்கு உபகாரஞ்செய்வதாக அழைத்து எல்லாரும்வந்தபின் வாயிலில் காவலாளனைவைத்துவிட்டு, உண்ணத்தகாத *நிர்மாலிய

* சிவநிர்மாலியம் ஆறுவிதம். சிவாலயத்துக்குரிய விளைநிலமுதலியவைகள் (க). விளைந்துவந்த தானியாதிகள் பொன் மணி ஆடை ஆபரணம் வாகனாதிகள் (உ). நிவேதனஞ்செய்தற்கென்று பாகமாகி மடைப்பள்ளியிலிருக்கின்ற அன்னமுதலியவைகள் (ங). அங்கிருந்து எடுத்துவந்து நிவேத்தியமானவைகள் (ச). அபிஷேகமாகிய பஞ்சாமிர்தம் பால்முதலியன (ரு) சிவநைவேத்தியத்திற் சண்டேசுரபாகம் (சு). இந்த ஆறுவகையில்நைவேத்தியமாகிய ஒருவகைதான் புசிக்கத்தக்கது. அதுவும் "சிவனுக்குநைவேதஞ் செய்த சேடமச் சிவனைத் தீண்டும், அவனுக்குந் தவத்தினோர்க்கு மாக்குக வஃதான் றெஞ்சிற், புவனிக்குண் மறைக்க——" என்ற சிவாகம விதிப்படி செய்யத்தக்கது, இவ்விதிகடந்து இதனைப்பிறருக்கு உபயோகிப்பதும் சிவத்துரோகமேயாகும். இனி மற்றை யைந்துவித நிர்மாலியங்களும் பிறர் உபயோகிக்க நினைப்பதும் தீராதசிவத்துரோகமேயாம். இது சிவாகமத்துக் கூறியருளிய சிவாஞ்ஞை. இனி, இவ்வாஞ்ஞைகடந்து நேர்ந்தபடி சிவசொத்தைக் கிரகிப்பார்கதியைக் கூறுவானேன். நிற்க. நிர்மல சம்பந்தம் நிர்மாலியம், எந்தப்பொருளுஞ் சிவாலயத்துக்குரியனவாக வந்தவுடன் அவை நிர்மலத்துவத்தை அடைதலால் நைவேத்தியமாகிய ஒரு வகை மாத்திரமன்றி மற்ற ஐவகைகளும் நிர்மாலியமென்றாயின.

மாகிய நெல்லையுண்ட பாவிகளைக் கொல்கின்றேனென்று தாய் தந்தைமனைவிமக்கள்முதலியஎல்லாரையும் வாளால்வெட்டி ஒழித்தனர். அப்போது காவலாளன் ஒரு ஆண் சிசுவை இது குடிக்கு ஒரேபிள்ளை இந்நெல்லன்னமுண்டிலது; இதனைக்கொல்லாதருளுக என்றுவேண்டினன். இது இவ்வன்னமுண்டவளுடையபாலுண்டதன்றோவென்று அச்சிசுவையுங்கொன்றருளினர். உடனே சிவபிரான் எதிர்தோன்றியருளி அன்பனே, உன்கைவாளாலுயிரிழந்தாரெல்லாரும் சிவத்துரோகநீங்கிப் பரிசுத்தரானமையால் பொன்னுலகின் மேலுலகம்புகுந்துவாழுக; நீ நமது சிவலோகம்செல்க என்றருளினர். அவ்வாறேசென்று சிவபதகதிமுலில் வாழ்ந்தனர்.

குறிப்பு:—இந்நாயனார், சிவனாணைகடந்தார் எவராயினும், அவர் சிவத்துரோகிகளே. சிவசொத்தைத் திருடாது பின்பு (வாசியுடன்) லாபத்துடன் கொடுத்துவிடுவோமென்று அடுத்துச் சமயத்திலெடுத்தாலும் அதுசிவத்துரோகமே. அதற்குப்பரிகாரம் உடனேகொல்லுதலே. அது அவரிடத்துள்ளதகருணையேயென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## பத்தராய்ப்பணிவார்கள் புராணசாரம்.

---

தொண்டரடித் தொழல்பூசைத் தொழின்மகிழ்த லழகார்
துளங்கியவர்ச் சினைபுரித றுருகுதிநிய மங்கள்
கொண்டபணி திருவடிக்கே கொடுத்த லீசன்
குணமருவு மருங்கதையைக் குலவிக் கேட்டு
மண்டிவிழி துளும்பன்மயிர் சிலும்ப லுன்னன்
மருவுதிருப் பணிகாட்டி வருப வாங்கி
உண்டிகொளா தொழிதலென விவையோ ரெட்டு
முடையாரவர் பத்தரென வுரைத்து ளாரே.

உஅ

இ-ம். பத்தராய்ப்பணிவார்கள், தொகையடியார் ஒன்பதின்மரில் ஒருவகையார். இவர்கள் "எட்டுவான்குணத்தீசனை"யே வழிபடுகின்ற எட்டுவிதமான உத்தமச்செயலுடையவர்கள். அச்செயல்கள், சிவனடியார்களைச் சிவனாகவே பாவித்து, பசுவைக்கண்டவுடன் ஆவலாகவணையுங்கன்றுபோல, விரைந்துசென்றுபணிந்து, அவர்களையுயர்த்தியும் தம்மைத்தாழ்த்தியும் இனியமொழி கூறி உபசரித்தல் (க). யாவராயினும் அன்புடன்செய்யும் சிவபூசனையைக்காணுந்தோறும்மனமிகமகிழ்தல் (உ). தாங்களும் மெய்யன்போடு சிவபூசனையும் சிவனடியார்க்குவிதிப்படி திருவமுதளித்தலாகியமாகேசுரபூசனையும்செய்தல் (ங). சிவனுக்கேநியமத்தொண்டுகள்பலவுஞ்செய்தல் (ச). சிவனையன்றி மற்றுமோர்தெய்வமுண்டென்று சிந்தையிலுநினைத்தறியாத மெய்யன்புடன்சிவசரித்திரங்களையே கேட்டல் (ரு). இடையறாது சிவபிரானைத் தியானித்து மெய்ம்மயிர்பொடிப்ப விதிர்விதிர்ப்பெய்திப் பரவசமாதல் (சா) நின்றாலும் இருந்தாலும் உண்டாலும் உறங்கினாலும் எப்போதுஞ் சிவனடியையே மனம்பற்றிநிற்றல் (எ). சிவவேடம்பூண்டு ஊர் தோறுஞ்சென்று செல்வர்களிடம் இன்னின்ன திருப்பணிசெய்கின்றோமென்று பற்பலஉபாயங்கூறிப்பொருள்வாங்கி, அவற்றில் தம்உணவுமுதலியவைகளுக்குங் கிரகிக்கும்பெரும்பாதகர்போலாகாமல் அப்பொருள்முழுதும் சிவசொத்தேஎன்றஞ் சிஎட்டுணையுங் கவராது அத்திருப்பணிகளையே செய்தல் (அ) ஆகிய இவ்வெட்டுமேயாம். இவற்றையுடையவர்களே பத்தராய்ப்பணிவாரென்று சிவாகமங்களால் விளக்கப்பெறுவார்கள்.

குறிப்பு:—இவர்கள், பத்தராய்ப்பணிதலாகிய உடற்றிருத்தொண்டு செய்யினும், அதுவும் மனத்தொண்டு வாக்குத்தொண்டுகளுஞ்சேர்ந்தமைந்து முழுப்பலனையுந் தருமென்றுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## பரமனையேபாடுவார் புராணசாரம்.

அருந்தமிழால் வடகலையா லருளா லொன்று
லறிவுநெறி மருவுமருங் கவிகள் யாவுந்
திருந்தியவா னவர்பணிய மன்று ளாடுந்
தேவர்பிரான் கழலிணையே சேர வோதி
விருந்திடுநா வுடையபயன் மேவி னோர்தா
மேலானோ மெனமகிழ்ந்து விழிநீர் சோரப்
பரிந்தருளாற் பரமனையே பாட வல்ல
பான்மையா ரெனையாளு மேன்மை யாரே.

இ-ம். பிறப்பிறப்புடைய பசுக்களாகிய பிரமவிஷ்ணுவாதி தேவர்களைமதித்து, அவர்கள் அநித்தியவாழ்வை விரும்பிப்பாடி வாணாளைவீணாக்காமல், அநாதி மலமுத்த நித்திய பதியாகிய பரம சிவனையே தென்றமிழும்வடகலையும் தேசிகமுமாகியமொழிகளால் மனமுருகப்பாடுகின்றவர்களே பரமனையேபாடுவார்என்று சொல்லப்பெறுவர்.

குறிப்பு:—இவர்கள், பரமனைப்பாடுதலாகியவாக்குத்தொண்டு செய்யினும், அது மனமும் உடலுஞ் சேர்ந்தமைந்த முழுப்பலனுந்தருமென்றுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## சித்தத்தைச்சிவன்பாலேவைத்தார் புராணசாரம்.

பாரணவும் புலனந்தக் கரண மொன்றும்
படராமே நடுநாடி பயிலு நாதங்
காரணபங் கயன்முதலா னமவர் வாழ்வுங்
கழியுநெறி வழுபடவுங் கருதி மேலைப்
பூரணமெய்ப் பரஞ்சோதிப் பொலிவு நோக்கிப்
புணர்ந்தணைந்த சிவாநுபவ போக மேவுஞ்
சீரணவு மவரன்றோ வெம்மை யாளுஞ்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்து ளாரே.

இ-ம். அநித்தியமான உலகப்பற்றுமுற்றுமற்றுப் பரமசிவனையேபற்றிநின்று, பிராணவாயு இடைபிங்கலை வழிச்செல்லுதல் மாற்றி, சுழுமுனைவழியேமேலேற்றி, ஆறுதாரங்களுங்கண்டுமூலாதாரகணேசரருள்பெற்று, மற்றை ஐந்தாதாரங்களினதிதெய்வங்களைவழிபட்டு மேற்சென்று, பிரமாந்திரத்தின்மேல் ஆயிரத்தெட்டிதழ்த்தாமரைமீது நடிக்குந்திருநடங்கண்டு, சிலம்பொலிகேட்டு, ஆனந்தாமுதமுண்டு, சிவமணமே உயிர்த்து, சிவத்துடனுற்று வாழும் நிலைநழுவாது பாவித்துநிற்பவர்களே சித்தத்தைச்சிவன் பாலே வைத்தவர்என்று சொல்லப்பெறுவர்.

குறிப்பு:—இவர்கள், சித்தத்தைச் சிவன்பாலேவைத்தலாகிய மனத்தொண்டு செய்யினும், அது வாக்கும்உடலுஞ் சேர்ந்து நின்று முழுப்பலனையுந்தருமென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## திருவாரூர்ப்பிறந்தார் புராணசாரம்.

பொங்கியமா தவமுடையார் வருண நான்கிற்
  பொருந்தினர்க ளல்லாத புகழி னுள்ளார்
சங்கையிலா வருந்தவமுன் புரிந்தா ரிங்குச்
  சார்விலா ரிறைவனருள் சார்த லாலே
கங்கைவாழ் சடைமுடியா னருளை நீங்காக்
  கணநாத ரெனவாழுங் கருத்தர் கன்னிச்
செங்கண்வரால் வளர்வாவி திகழு மாரூர்ச்
  சிறந்துளா ரெமையாளப் பிறந்து ளாரே.

இ-ம். திருவாரூர்ப்பிறந்தார்கள், பூர்வபுண்ணிய விசேடத்தால் தியாகேசர்திருவருளையேபேணும் சைவநெறியினராய், அத்திருவருணிறைவுக்குரியராய் நிற்றலால் நான்குவருணத்தாராயினும் மற்றையாராயினும் யாவருஞ் சிவகணத்தவர்களே. இவர்கள் திருக்கயிலைச்சிவகணத்தரென்பதைத் தியாகேசர்அருளால்நமிநந்தியடிகள் நேரேகண்டமையாலுந் தெளியலாம்.

குறிப்பு:—இவர்கள் திருவாரூர் திருக்கயிலையிற்சிறந்தவென்பதுணர்த்தியுய்விக்க வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## முப்போதும்திருமேனிதீண்டுவார் புராணசாரம்.

செப்பலருந் தவமுடையர் செம்மை யாளர்
சிறுகாலே மலர்வாவி திகழ மூழ்கி
ஒப்பிறிரு நீறணிந்து நியதி யாற்றி
யோவாமே யைந்தெழுத்து முரைத்து மேன்மைத்
தப்பில்சிவா கமவிதியா லின்பா லன்பாந்
தன்மையா னன்மையாந் தகையா ரென்று
முப்பொழுதுந் திருமேனி தீண்ட வல்ல
முறைமையார் பிறவிதெறுந் திறமை யாரே.

இ-ம். முப்போதுந்திருமேனிதீண்டுவார், சிவாலயங்களெங்கும் சிவபிரானைப்பூசிக்கும்பரார்த்தபூஜாதிகாரமானது, சிவமுகத்து வந்த சிவசாதியாராகிய சிவப்பிராமணர்க்கே உரியதென்று சிவாகமங்கள்கூறும்முறையே உலகெங்குநடைபெறும்பொருட்டுச், சிருட்டியாரம்பத்தில் அநாதிசைவராகியசாதாசிவமூர்த்தி, தமதுஐந்துமுகங்களினின்றும் தோற்றுவித்து, சிவதீக்ஷாதிசிவசமஸ்காரமுழுதுஞ்செய்யப்பெற்ற கௌசிகர், காசிபர், பாரத்துவாசர், கௌதமர், அகஸ்தியராகிய ஐந்துமகரிஷிகள்கோத்திரங்களில் அவதரித்த ஆதிசைவர்களே. இவர்கள், சிவனருளால் நாற்சாதியர்க்கும் சிவதீக்ஷாதிகள் செய்துய்விக்குங் குருமார்களாய்விளங்குதலால் குருக்கள் என்றுயாவராலும்வழங்கப்பெறுகின்றார்கள். இவர்கள் வேதசிவாகமவிதிப்படி நித்தியம ஆன்மார்த்தபூஜாதிகள் முடித்துப் பரார்த்தசிவலிங்காதி திருமேனிமுப்போதுந்தீண்டிப் பூசித்து வருதலால் முப்போதுந்திருமேனிதீண்டுவாரென்னும் பேர்பெற்று விளங்குகின்றார்கள்.

குறிப்பு:—சமய விசேட நிர்வாணதீக்ஷை ஆசாரியாபிஷேக முதலிய சிவசம்ஸ்கார முழுதும்பெற்ற முப்போதுந் திருமேனி தீண்டுவார், உலகெலாம் சிவாலயசேவைசெய்து உய்தற்காகவே சிவாலயபூஜாதிகாரிகளாகச் சிவசிருஷ்டிவழி வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

சிவாலயங்களிற் சிவலிங்கத்திருமேனியையும், சிவனையேசார்ந்து சிவமேயாய் விளங்கும் சிவபரிவாரதேவர்கள் திருமேனியையும் தீண்டிப்பூசித்தல், சிவசாதியராகிய சிவப்பிராமணர்க்கே உரியதென்பதை, உலகிற்பிராமணர்முதலியரை அந்தந்தச்சாதியாரன்றி மற்றையர் தீண்டாத உலகவழக்கத்தாலும்தெளியலாம். இனி நால்வருணத்தார்க்கும் சிவதீக்ஷாதிசெய்து சிவநெறிபுகுத்தும் அதிகாரத்தைச், சிவமுகமாகப்பெற்றுவிளங்கும் சிவாசாரியர்களாகிய சிவப்பிராமணர்களிடம், சிவதீக்ஷாதிபெற்று ஆன்மார்த்த சிவலிங்கபூசைசெய்யும் மற்றைவருணத்தாரும், மந்திரங்கிரியை பாவனைகளாற்றம்மைச் சிவமாக்கிக்கொண்டே அச்சிவலிங்கத்தைத்தீண்டிப் பூசிக்கும்படி விதித்த சிவாகமநூல்வழக்கமும், அவரெல்லாம் அம்முறையேசெய்துவரும் அநுபவவழக்கமும் அதனைவலியுறுத்தும். பிரமன்முகத்துவந்த பிராமணர்களைக்காட்டிலும், அப்பிரமனுக்குமேலுள்ள விஷ்ணு ருத்திரர் மகேசுரர் மூவருக்குமேல் நான்காவது மூர்த்தியாகிய சதாசிவமுகத்துவந்த சிவப்பிராமணர்கள் நான்குபடி மேலானவர்களென்பதை, இவ்விருவகையினருந் தோன்றியமுறையே தெளியவிளக்கும். இதன்மேல் அதிகாரவிசேடமும் பெற்றுயர்ந்த சிவசாதிப்பிராமணர்களாகிய இவர்களே சிவாலயபரார்த்த பூஜாதிசர்வாதிகாரசிவாசாரியசீலர்கள். இவரையன்றிப்பிரமன் சாதிப்பிராமணர்முதலியர்க்குப் பரார்த்த பூஜாதிகாரம் எக்காலத்துமில்லை. இதுவே, சிவாலய பூசைக்கிரமங்கூறும் சிவாகமநூற்றுணிபு. இவ்விதிக்கு விரோதமாக மற்றைப்பிராமணர்கள் அதிக்கிரமித்துச் சிவாலயபரார்த்தபூசையிற் புகுவரேல், அது அரசருக்கும் குடிகளுக்கும் பெருங்கேடுவிளைக்குமென்று சிவாகமங்கள்கூறுதலால் கோயிலதிகாரிகள்உயர்வைத்தாழ்வாகவும் தாழ்வை உயர்வாகவுங்கருதித் தள்ளுதலுங்கொள்ளுதலுஞ்செய்யும் விபரீத உணர்ச்சியாலாவது மோகலோபதாக்ஷிணியாதிகளாலாவது மற்றையரைச் சிவாலய பூசையிற்புகுதவிடாமல் சிவப்பிராமணரைக்கொண்டேசிவாகமவிதிவழுவாது செவ்வேநடத்தித் திருவருள்பெற்றுய்வாராக.

கௌசிகக்காசிபச்சைவபாரத்துவாஜோத்ரிரேவச, கௌதமச்சேதி பஞ்சைதே பஞ்சவக்த்ரேஷு தீக்ஷிதா, கர்ஷணாதிப்ரதிஷ்டாந்தம்ப்ரதிஷ்டாதியுத்ஸவாந்தம், உத்ஸவாதி பிராயச்சித்தாந்தம் ஞாத்வாஸர்வம்ஸமாசரேத், அந்நியேஷாம்சுவார்த்தயஜனம்நகுர்யாதுபரார்த்தகம், மோகால்லோபாச்ச குர்வீதாராக்ஞோராஷ்டரஸ்யதுஸ்திதி. என்னும் வாதுளகமவசன முதலிய சிவாகமவசனங்கள் விரிவாய் விளக்கும்.

திருச்சிற்றம்பலம்.

# முழுநீறுபூசியமுனிவர் புராணசாரம்.

கற்பமனு கற்பமுப கற்ப மென்றிக்
கடனணைந்த திருநீறுங் கனற்க ணீறும்
பொற்புடைய வாணுசா னங்கி யாறு
பொல்லாத பூமியெதிர் புனைத லாகா
அற்புதமாந் திரிபுண்ட மதியின் பாதி
யகிலாங்கந் தீபமிகு மழகார் வட்ட
முற்பொலிய வுடலணியு முறையா ரன்றே
முழுநீறு பூசவல்ல முனிவர் தாமே.

இ-ம். முழுநீறுபூசியமுனிவர், அணியுந்திருநீறு, கற்பம் அநுகற்பம் உபகற்பமெனமூவிதமாம். ஈன்றணிமைமுதலியகுற்ற மின்றிச் சுத்தமுள்ள பசுவின்சாணம் நிலத்தில்விழுமுன், இலையில் வாங்கிக் கோசலம்விட்டுப்பிசைந்து உண்டையாக்கி உலர்த்திச், சிவாக்கினியில் தகித்தெடுப்பது கற்பமாகும். இச்செயலெல்லாம் சத்தியோஜாதாதி மந்திரமூலமாகச்செய்யத்தக்கது. காட்டில் உல ர்ந்துகிடக்கும் பசுவின்சாணத்தைப் பொடியாக்கி மந்திரமுறை யாகக் கோசலம்விட்டுப்பிசைந்துருட்டி உலர்த்திச் சிவாக்கினியிற் தகித்தெடுப்பது உபகற்பமாகும். காட்டில் மாமுதலியவைகள் அக்கினிபற்றி எரிந்தநீறும், பசுக்கூடங்கள் எரிந்தநீறும், மற்றை இடங்கள் எரிந்தநீறும், செங்கல்சுட்ட காளவாய்நீறும் தனித்தனி கொண்டுவந்து, மந்திரமுறையால் கோசலம்விட்டுப் பிசைந்துருட் டிச் சிவாக்கினியிற் தகித்தெடுப்பது உபகற்பமாகும். இத்திருநீற் றினை வடித்தெடுத்துப் புதியபாண்டத்துவாசனைசேர்த்து வாயிற் புதுவஸ்திரஞ்சூழ்ந்து வைத்திருந்து, இத்திருநீறு, ஆன்மாக்களின் மும்மலந்தகித்துப் பசுத்துவநீக்கிச் சிவத்துவவிளக்கஞ்செய்யும் திருவருளே என்னும் உண்மைகடைப்பிடித்து சிவபிரான், குரு அக்கினிமுன்னும் அசுத்தபூமியிலும் நடக்கும்போதும் பூசாமல்,

மெய்யன்புடன் சிவனடியேசிந்தித்துக்கொண்டு சிந்தாமல் சிரசு நெற்றிமுதலிய அங்கங்களிற்பரவப்பூசுதலாகிய உத்தூளனம் முக்குறியாகிய திரிபுண்டர முதலியவாகப்பூசுகின்றவர்கள் முழுநீறு பூசியமுனிவரென்று கூறப்படுவர்.

குறிப்பு:—இவர்கள், திருநீற்றினுண்மைவிளக்கி உய்விக்க வந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## அப்பாலுமடிச்சார்ந்தார் புராணசாரம்.

---

தாரரு மூவேந்தர் பயிலுந் தொல்லைத்
　　தமிழ்நாட்டுப் புறத்திறைவன் சரணஞ் சார்ந்த
சீராருந் தொண்டர்களு மண்ட ரேத்துந்
　　திருத்தொண்டத் தொகையருளாற் செய்யுங் காலத்
தோராருந் தொடையினுறு மிப்பா லப்பால்
　　எந்தைபிரா னடியடைந்த வியல்பி னோரும்
ஆராத காதலுடை யவர்க ளன்றோ
　　வப்பாலு மடிச்சார்ந்த வடியார் தாமே.

இ-ம். சேரர் சோழர் பாண்டியர்நாடுகளுக்குப்புறத்துள்ள நாடுகளிலிருந்து தவஞ்செய்துதிருவடியடைந்தவர்களும், திருத்தொண்டத்தொகையிலுள்ள நாயன்மார்காலத்துக்கு முன்னும் பின்னும் சிவனடியடைந்தவர்களும்அப்பாலுமடிச்சார்ந்தாரென்று கூறப்படுவர்.

குறிப்பு:—இவர்கள், திருத்தொண்டின் சிறப்புவிளக்கி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## பூசலார்நாயனார் புராணசாரம்.

பொருவருந்தொண் டைநாட்டு நின்ற வூர்வாழ்
பூசுரர்கோப் பூசலார் புந்தி யாலே
இருநிதியந் தேடியா லயமு மாக்கி
யெழுந்தருளப் பண்ணுவதா வெண்ணுங் காலை
ஆனதனைக் காடவர்கோற் கருள மன்ன
னந்நகா மணைந்தவ்வா றறிந்து தாழ
விரவுமனக் கோயிலுற விருத்தி யங்கண்
வேண்டுவகொண் டிறைஞ்சியருண் மேவி னாரே.

இ-ம். பூசலார்நாயனார், தொண்டைநாட்டிலே திருநின்றவூரிலே பிராமணகுலத்தில்அவதரித்தவர். இவர் வேண்டுவனவெல்லாந்தேடிக்கொடுத்துச் சிவனடியாரை வழிபடுஞ்சீலமிக்கவர். சிவாலயஞ்செய்யவிரும்பிப் பொருளின்மையால் மனசினால் எல்லாப்பொருளுந்தேடிக்கொண்டு, சுபதினத்தில் தொடங்கி அஸ்திவார முதலிய எல்லாப்பணிகளும் இடையறாது செய்துமுடித்துப், பிரதிஷ்டை (கும்பாபிஷேகஞ்) செய்யச் சுபதினங்குறிப்பிட்டிருக்கும்போது, காஞ்சிபுரத்தில் காடவராஜா நெடுங்காலமாச் செய்துவந்த திருக்கோயிற்கும்பாபிஷேகம்செய்ய அதேதினத்தில் நிச்சயித்தனர். சிவபிரான் அவ்வரசர் கனவில்வந்து அரசனே, நின்றவூரில் பூசல் என்பவன் நமக்குச்செய்த கோயிற்குச்செல்கின்றோம்; நீ அடுத்ததினஞ்செய்க என்றருளினர். அரசர்வியந்து பூசலாரை வணங்க நின்றவூர்க்குவந்து கோயிலின்மை தெரிந்து, பிராமணர்களை அழைத்துப் பூசலார் யாரென்றுவினவித் தெரிந்து சென்றுவணங்கிச் சுவாமீ தேவரீர்செய்த சிவாலயப்பிரதிஷ்டை இத்தினமென்று சிவபிரானாலறிந்து தெரிசிக்கவந்தேன்என்றனர். நாயனார், சிவனருளை நினைந்துருகி அரசரே, சிவபிரான் அடியேனை

யும் ஒருபொருளாக்கொண்டு உமக்குத்தெரிவித்தது, புறக்கோயி லன்று மனக்கோயிலே என்றனர். அரசர், அவரன்பைவியந்து மேலும்பணிந்துவிடைபெற்றுச்சென்றனர். நாயனர், குறித்தபடி சிவபிரதிஷ்டைசெய்து நெடுங்காலம்பூசித்துவந்து சிவபதநிழலிற் சேர்ந்தனர்.

குறிப்பு:—இந்நாயனர், மனம்பொறிவழிச்செல்லப்புறத்தே செயலளவில் நிகழ்வனவெல்லாந் திருத்தொண்டாகா, மனமும் பற்றிநிற்ப மெய்யன்புடன் செய்வனவே திருத்தொண்டுகளாய்ச் சிறந்தபயன்றருமென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க் கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## மங்கையர்க்கரசியார் புராணசாரம்.

மங்கையர்க்குத் தனியரசி வளவர்குலக் கொழுந்து
மன்னவர்சூழ் தென்னவர்க்கு மாதேவி யார்மண்
சங்கைகெட வமண்சமயஞ் சாட வல்ல
சைவசிகா மணிஞானத் தமிழிற் கோத்த
பொங்குதிரு வருளுடைய போத வல்லி
பொருவினெடு மாறனுர் புயமேல் வாழுஞ்
செங்கலச முலையாட னருளா லின்பஞ்
சேர்ந்தவரைப் புகழ்ந்தடியேன் வாழ்ந்த வாறே.

இ-ம். மங்கையர்க்கரசியார், சோழராஜபுத்திரியாராய், அக் குலமெலாம் விளங்கவும், உலகெலாம் சைவந்தழைத்தோங்கவும், சைவாத்தினதீபமேயாய் அவதரித்துப், பாண்டியராஜபத்திநியா ராய்ப், பிதாவினுணையால் தமக்கு ஸ்ரீதனமாக உடன்வந்தமந்திரி யாராகியகுலச்சிறைநாயனுருடன், திருஞானசம்பந்தரால்புகழ்ந்து

பார்ப்பெற்று அவரருளால் தமதுநாயகர் முன் வினைவசத்தாற் சார்ந்த சமணிருள்முழுதுநீக்கி, நாடெங்குந் திருநீற்றுநெறியே பரப்பிப் பாதுகாத்துவந்து சிவபதநீழலிற்சேர்ந்தருளினர்.

குறிப்பு:—இவர், பெண்கள், தம்நாயகர் அந்நியநெறியிற் சென்றாலும் அப்போதும் அடங்கியே உடனிருந்து, திருவருளை வேண்டி அவ்வழியினாற் பலஉபாயமுறையில் நாளடைவில்பதமாக மனைசைத்திருப்பி நன்னெறிப்படுத்தலே கற்பினியல்பென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வியாரென்க.

திருச்சிற்றம்பலம்.

---

## நேசநாயனார் புராணசாரம்.

---

சாலியர்கோக் காம்பீலித் தலைவர் மேன்மை
தாவாத புகழ்நேசர் தஞ்சொ லென்றுங்
கோலியவைந் தெழுத்தோதிச் சிந்தை யுன்னிக்
கொண்டபொரு ளன்பர்கொளக் கொடுத்து வாழ்வார்
சீலமிகு திருத்தொண்டர்க் குடையுங் கீளுந்
திருந்தியவெண் கோவணமுஞ் சோவீந்து
பாலனைய வொளிநீற்றான் பாத மேத்திப்
பரலோக முழுதாண்ட பான்மை யாரே.

இ-ம். நேசநாயனார், காம்பீலிநகரிற் சாலியர்குலத்தில் அவதரித்தவர். இவர், சிவனடியே சிந்தித்தலும், திருவைந்தெழுத்தே செபித்தலும், சிவனடியார்க்கு வஸ்திரம் லங்கோடு கோவணங்கள் நெய்துகொடுத்தலுமாகிய மனம் வாக்கு காயத்திருத்தொண்டுகளேசெய்து, சிவனடியார் வேண்டும்போதெல்லாம் மெய்யன்போடுபணிந்து இடையறாது கொடுத்துவந்து சிவபதநிழலையடைந்தனர்.

குறிப்பு:—இவர், எக்குலத்திற்பிறந்தாலும் அக்குலத்தொழிலளவிலுந் திருத்தொண்டு செய்துய்யலாம்; குலவரம்பு கடந்து அதிக்கிரமித்தல் பாதகமென்றுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவுர்க்கப்பெருஞ்செல்வரென்க.

திருச்சிற்றம்பலம்.

## கோச்செங்கட்சோழநாயனூர் புராணசாரம்.

வெண்ணாவ லிறைக்கொளிநூற் பந்தர் செய்த
வியன்சிலம்பி யதுவழித்த வெள்ளா னைக்கை
உண்ணுடிக் கடித்தவுட லொழியச் சோழ
னுயர்குலத்துச் சுபதேவன் கமலத் தோங்கும்
பெண்ணாகி யவள்வயிற்றில் வைகிச் செங்கட்
பெருமானாய்த் தென்னவராய்ப் பெருங்கோயில்பலவுங்
கண்ணார்வித் துயர்தில்லை மறையவர்க்கு முறையுள்
கனகமய மாக்கியருள் கைக்கொண் டாரே.

இ-ம். கோச்செங்கட்சோழநாயனூர், சோழராஜகுலத்தில் அவதரித்தவர். இவர், முற்பிறப்பில் சிலந்தியாய்ப்பிறந்து திருவானைக்காவில் சிவலிங்கத்தின்மேல் சருகுவிழாமல், தன்வாய் நூலால் மேற்கட்டிமுதலியன செய்துவந்தனர். ஒருயானை அதனை அநுசிதமென்றுநீக்கி, துதிக்கையால்நீர்கொண்டுவந்து அபிஷேகித்துமலர்களாற்பூசித்துவந்தது. இப்படியேநிகழும்போது சிலந்தி, நாம் அரசனாய்ப்பிறந்தால் பிறரால் அழிக்கப்படாதகோயில்கள் செய்யலாமே, திருவருள் அவ்வாறு செய்விக்குங்காலங்கிட்டுமோவென்றுவருந்தி இத்திருப்பணியை அழித்தயானையைக்கொல்வேனென்று துதிக்கைத்துளைவழியாகத் தலையிற்சென்று கடித்து, யானை கையை உதறியும் தலையைக்கல்லில் முட்டியும் நீங்காமல், மேலுங்கடித்தலால் யானையிறந்து கயிலாசமடைந்தது. அச்சிலந்தியும் வெளிவரமாட்டாமலிறந்தது. சிவபிரான் அது கருதியபடிசெய்வாராய், சுபதேவசோழராஜா, தன்பத்தினி கமலவதியுடன் சிதம்பர தெரிசன நியமத்துடனிருக்குநாளில், கமலவதி புத்திரப்பேறு வேண்டுதல்நோக்கி, அவட்குப் புத்திரனாய்வரும்படி திருவருள் செய்ய, அச்சிலந்தி அவள்வயிற்றிற்சிசுவாய்வளர்ந்துவரும்போது பிரசவசமயத்தில் சோதிடர்கள் இச்சிசு ஒருநாழிகைசென்றுபிறந்தால் திரிலோகத்தையும் ஆளுமென்றுகூறியதுதெரிந்த கமலவதி, அவ்வாசைமிகுதியால், துன்பம்நோக்காது, தன்னைத் தலைகீழாகக் கட்டித்தூக்கும்படிசெய்து, ஒருநாழிகைசென்று புத்திரனைப்பெற

ரூள். மேலும்ஒருநாழிகையிருந்துவந்தமையால் புத்திரன்கண்கள் சிவந்திருத்தல்கண்டு, என்கோ செங்கண்ணானோவென்றுசொல்லி உடனேயிறந்தனள். சுபதேவன் புத்திரரை வளர்த்துவந்து உரிய காலத்தின்முடிசூட்டிச்சென்று தவஞ்செய்து சிவபதமடைந்தான். அப்புத்திரராகிய கோச்செங்கட்சோழநாயனார், திருவருளினாலே பூர்வஜன்மவுணர்ச்சியுடன் சைவநெறிதழைத்தோங்க, அரசுபுரிந்து, முன்பு அருள்பெற்றதிருவானைக்காவையடைந்து திருவருளை நினைந்துருகி, அத்திருக்கோயிலைவிரிவாக யானைபுகாதபடிசெய்து, நித்தியபூசாதிகள் முறையே நடத்திவசித்து வந்தனர். மேலும் மந்திரிகளையேவி பற்பலசிவாலயங்கள் யானைபுகாதபடிசெய்வித்து நித்தியபூசாதிகள் நடத்திச், சிதம்பரமடைந்து சிற்சபேசதெரிசனானந்தம்பெற்று, தில்லைவாழந்தணர்களுக்குத் திருமாளிகைசெய்வித்து மேலும் பற்பல திருத்தொண்டுகள்செய்துவந்து குஞ்சிதபத நிழலிற் சேர்ந்தருளினர்.

குறிப்பு:—இவர், சிவாலயாதி பெருந்திருப்பணிகள்செய்தற்குரிய செல்வமில்லாதவரும், பாராமுகமாய் ஒதுங்காமல் தம்மாலியன்றமட்டில் மனம் வாக்கு காயங்களினாலாகிய திருத்தொண்டுகள் செய்து, இறைவனைவேண்டிநின்றால் திருவருள்வேண்டியவாறே தந்தருளுமென்பதுணர்த்தி உய்விக்க வந்தருளிய சிவவர்க்கப் பெருஞ்செல்வமென்க.

திருச்சிற்றம்பலம்.

## திருநீலகண்டயாழ்ப்பாணநாயனார் புராணசாரம்.

பிறங்கெருக்கத் தம்புலியூர் வாழும் பேரியாழ்
　　பேணுதிரு நீலகண்டப் பெரும்பாண னார்சீர்
நிறந்தருசெம் பொற்பலகை யால வாயி
　　னிமலன்பாற் பெற்றாரூர் நேர்ந்துசிவன் வாயில்
திறந்தருளும் வடதிசையே சேர்ந்து போற்றித்
　　திருஞான சம்பந்தர் திருத்தாள் வாழ்த்தி
அறந்திகழுந் திருப்பதிகம் யாழி லேற்றி
　　யாசிறிருப் பெருமணஞ்சேர்ந் தருள்பெற் றாரே.

இ-ம். திருநீலகண்ட யாழ்ப்பாணநாயனார், நடுநாட்டிலே திருவெருக்கத்தம்புலியூரிலே பாணர்மரபிலவதரித்தவர். இவர், தம்மரபுக்குரிய யாழிசையிற்சிறந்தவர். தமதுசாதிவரம்புகடவாது சிவாலயங்களிற் புறத்துநின்று சிவமகிமைகளையே யாழிலிட்டுப் பாடுகின்றவர். மதுராபுரியிற் கோயிற்புறநின்றுபாடினர். அவ் வின்னிசைகேட்டுளங் குழைந்த சுந்தரேசுரர், அவரை அழைத்து வரும்படி சிவனடியார்க்கு ஆஞ்ஞாபித்தருள, அவர்கள் வந்தழைப்பச் சமீபித்து வந்து சுந்தரேசர் திருவருளால் பொற்பலகை பெற்று அதன்மீதிருந்து தினந்தினமும்பாடித் திருவருள்பெற்று, மீண்டு, திருவாரூர்க்குவந்து புறத்தேநின்றுபாட, வன்மீகநாதர், வடதிசையிலொருவாயில்வகுத்து வருகவென்றழைத்தருள, அவ் வழியிற் சமீபித்துவந்துபாடித் திருவருள்பெற்றிருந்து, பின்பு சீகாழியை யடைந்து, திருஞானசம்பந்தர் திருவடிகளைவணங்கி, அவர் பாடுந்திருப்பதிகங்களெல்லாம் உடனிருந்து யாழிலிட்டுப் பாடிக்கொண்டு, பிரியாதுவாழும் பெரும்பேறுபெற்று, திருநல் லூர்ப்பெருமணத்திலவரருளாற்சிவபதநிழலிற்சேர்ந்தனர்.

குறிப்பு:—இவர், சிவபிரானுடைய திருவுள்ளங் குழையச் செய்துதிருவடிப்பேறுதருவது, அவர்மகிமையையாழிலிட்டு அபசுரமுதலிய பழுதுகளின்றி தெளிவாகப்பாடுமின்னிசையே யென்பதும், அதுவும் சிவாநுபூதிப்பெருஞ்செல்வர்களுடன்சேர்ந்து பிரிவின்றி நின்றால் மிகஎளிதிற்பயக்குமென்பதும் உணர்த்திஉய்விக்க வந்தருளிய சிவ்வர்க்கப்பெருஞ்செல்வரென்க,

திருச்சிற்றம்பலம்,

## சடையநாயனார் புராணசாரம்.

சங்கையிலா வரன்மறையோர் நாவ லூர்வாழ்
தவாதிபர் தம்பிரான் றோழ ராய
எங்கள்பிரான் றவநெறிக்கோ ரிலக்கு வாய்த்த
விசைஞானி யார்தனைய ரெண்ணூர் சிங்கஞ்

மங்கையர்க டொழும்பரவை மணவாள நம்பி
வந்துதிக்க மாதவங்கள் வருந்திச் செய்தார்
வெங்கணரா விளங்குமிளம் பிறைசேர் சென்னி
விடையினு ரருள்சேர்ந்த சடைய னூரே.

இ—ம். சடையநாயனுர், நடுநாட்டிலே திருநாவலூரிலே சிவ வேதியர்குலத்தில் அவதரித்தவர். இவர், திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர்முதலிய உண்மைநாயன்மார்மகிமைதெரிந்து வழிபாடு செய்து உலகெலாமுய்தற்குரிய, திருத்தொண்டத்தொகைதந்தருளும்பொருட்டுப், பூவுலகஞ்செய்த பெருந்தவத்தால், தம்பிரானடிமைகளாகிய அரிபிரமேந்திராதியர்களாலும் அடைதற்கரிய, தம்பிரான்றோழராகிய சிவசொரூபசுந்தரமூர்த்திநாயனுர், தமக்குப் புத்திரரென்று உலகெலாம்புகழும்படி வந்தருளப்பெற்ற அருந்தவப் பெரியர். தமதுமாபுக்குரிய ஆன்மார்த்தபரார்த்தசிவபூசனையிடையறுதுசெய்துவந்து சிவபதநிழலிற்சேர்ந்தனர்.

குறிப்பு:—இந்நாயனுர், தாமுந் தங்குலமுமாத்திரமன்றி உலகெலாமுய்வித்தற்குரிய சற்புத்திரரைப் பெறுதலே ஒப்புயர்வில்லாத மெய்ப்பயன்தருவதென்றுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ் செல்வரென்க.

எனவே ஒருநன்மையுமின்றி மேலுந்தீங்குவிளைக்குந் துர்ப்புத்திரரைப்பெறுவதிலும் அப்பேறில்லாமையே சிலாக்கியமென்பது விளக்கமாதல்காண்க.

திருச்சிற்றம்பலம்.

---

## இசைஞானியார் புராணசாரம்.

---

நாவற் றிருப்பதிக்கோர் செல்வச் சைவ
நாயகமாஞ் சடையனுர் நயந்த வின்பப்
பூவைக் குலமடந்தை பொற்பார் கொம்பு
புனிதமிகு நீறணிந்து போற்றி செய்தே
ஆவிற் றிகழ்தலைவன் வலிய வாண்ட
வாரூா ரவதரிக்க வருந்தவங்கள் புரிந்தார்
யாவர்க்கு மெட்டாத விசைந்த வின்ப
விசைஞானி யெனஞான மெளிதா மன்றே.

இ-ம். இசைஞானியார், சிவவேதியர்குலத்தில் அவதரித்தவர். இவர், மேற்கூறிய சடையநாயனாருடைய தர்மபத்தினியார். திருநாவலூரீசனைப் பிரார்த்தித்துவந்தபடி, தமக்கும்நாயகருக்கும் நடுவிலே, திருவருளினாலே சிவசொரூப சுந்தரமூர்த்தி நாயனார் மூன்று வயசுப்புத்திரராக வந்தருளப்பெற்று, எடுத்தணைத்துச்சி மோந்துபெருமகிழ்வுடன் பேணிவளர்த்துவரும் பெரும்பாக்கியம் பெற்று, நாயகருடன் இல்லறத்துணையாய் வாழ்ந்துவந்து சிவபத நிழலிற் சேர்ந்தருளினர்.

குறிப்பு:—இவர், எப்பொருளும், இறைவனைவேண்டி வருணாச்சிரமத்துக்குரிய விதிதவறாதுநின்று வழிபாடுசெய்துவந்தால், எளிதிற்கிடைக்குமென்பதுணர்த்தி உய்விக்கவந்தருளிய சிவவர்க்கப்பெருஞ்செல்வியாரென்க.

வைய நீடுக மாமழை மன்னுக
மெய்வி ரும்பிய வன்பர் விளங்குக
சைவ நன்னெறி தான்றழைத் தோங்குக
தெய்வ வெண்டிரு நீறு சிறக்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

திருத்தொண்டர் புராணசாரவிளக்கம்

முற்றிற்று.

---

அருண்மொழித்தேவரடிமலர்துணையே.

உமாபதிசிவபதம்உயிர்த்துணையாமே.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சேக்கிழார்நாயனார் புராணம்.

## காப்பு.

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

## திருத்தொண்டத்தொகையடியார் சேக்கிழார்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி.

## நூல்.

சேக்கிழார்நாயனார், தொண்டைநாட்டிற் பெரும்பகுதியாய் விளங்கும்(உச) கோட்டங்களுள்(நாடுகளுள்) ஒன்றாகிய புலியூர்க் கோட்டத்து உட்பிரிவாயுள்ள (எகூ) நாடுகளுள், நன்மைமிகுந்த குன்றைவள நாட்டின்கண்ணே, முதன்மையார் கூட்டம் நிறைந்து வாழுகின்ற குன்றத்தூரிலே, சுத்தபாரம்பரைச் சற்சூத்திர வேளாண்குலத்திலே சேக்கிழார்குடியிலே, உலகெலாம் சித்தாந்த சைவச்செந்நெறி நின்றுய்யும்படி,திருவருளினாலேதிருவவதாரஞ் செய்தருளிப், பாலியத்திலும் அருள்மொழிகளே வழங்கிவரும் தெய்வச் சிறப்பினால், அருண்மொழித்தேவரென்னுந் திருநாமம் பூண்டு வளர்ந்து வருவாராயினர்.

இவரவதரித்தருளியசேக்கிழார்குடியானது, சோழராஜாவானவர், எல்லாநாடுகளிலும்ஆராய்ந்துதெரிந்தெடுத்துஇத்தொண்டைநாடெங்குங் குடியேற்றிய நாற்பத்தெண்ணாயிரநற்குடிகளுள்ளே, கூடல்கிழார் புரிசைகிழார் முதலிய உரிமைப்பேர்வாய்ந்த குடிகளுள் ஒன்றாய்ச்சிறந்துவிளங்குகின்றது. இந்நாயனார், சேக்கிழார் குடியில் யாவரினுஞ்சிறந்து தெய்வத்திருவருள் கைவரப்பெற்று விளங்குதலால், அப்பெயர்தமக்கே சிறப்பாய்ச் சேக்கிழாரென்று யாவராலும் வழங்கப்பெற்றனர். இவர்க்குப்பின்னர் பாலறாவாயரென்பாரொருவர் சகோதரராயவதரித்தனர்.

சேக்கிழார், வித்தியாரம்பஞ்செய்யப்பெற்றுப் படித்துவருநாளில், அநபாயசோழமகாராஜா, தமக்கு மந்திரிகள்பலரிருக்கவும் திருவருள் செலுத்துதலால் உயிர்த்துணையாய் ஒருமந்திரியை ஆராய்ந்துதெரிந்தெடுத்துக்கொள்ளும்கருத்தினராய், "பூமியினும் பெரிதுயாது? மலையினும்பெரிதுயாது? கடலினும்பெரிதுயாது?" என்று மூன்றுகேள்விகள் பத்திரிகைகளில் எழுதிப்பதில்சொன்னவர்க்கு இன்னது சன்மானமென்பதுந்தெரிவித்து வித்துவான்களுக்கு அனுப்பினர். சேக்கிழார் பிதா பிரபலவித்துவானாதலால் அவர்க்குமவந்தது. அதனை அவர்பார்த்துக்கொண்டிருக்குஞ் சமயம், பள்ளிக்கூடத்திருந்துவந்த சேக்கிழார் இப்பத்திரிகையாதென்றனர். பிதாவானவர், குழந்தாய்! இதுபிரபல வித்துவான்களும் யோசிக்கக்கூடியவிஷயம்; நீகேட்டு ஆவதென்னை? உணவுசெய்து பள்ளிக்குச்செல்க என்றனர். சேக்கிழார் மேலும் விரும்பிக்கேட்டனர். அவரை அரிதுபாராட்டிவரும் அன்புரிமைநோக்கி இன்னதென்றுகூறினர். உடனே சேக்கிழார் இதற்குத்தானா இத்தனை யோசனையென்றனர். பிதா ஆச்சரியமடைந்து எடுத்தணைத்து முத்தமிட்டு அருமைக்குழந்தாய் இக்கேள்விகளுக்குப்பதில்தெரிந்தால் கூறுவாயென்றனர். சேக்கிழார்

"காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது."

"பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கின்
நன்மை கடலிற் பெரிது."

என்று கூறியருளினர். பிதா அளவுகடந்த ஆனந்தவாரியின் மூழ்கி அம்மூன்றுதிருக்குறள்களேயும் அப்பத்திரிகையில் எழுதி அருண்மொழித்தேவரென்று அவர் திருப்பெயரையே வைத்து அனுப்பினர் *.

அதுகண்ட அநபாயசோழர், தமதுகேள்விகளுக்குப்பதில், கேட்கும்போதேதாம் கருதியபடி அப்பத்திரிகையிற் குறித்திருப் பதுநோக்கி மிகுந்தஆச்சரியமடைந்து, உடனே அழைத்துவரும் படி ராஜவரிசைகளுடன் சுவர்ணரத்தினமயமான சிவிகை அனுப்பி னர். சேக்கிழார், அதன்மேல் வீற்றிருந்தருளி வாத்திய முதலிய வைபவங்களுடன் வந்தனர். அரசர் மகிழ்ந்து உபசரித்து முதன் மந்திரியாராக்கி உத்தமச்சோழப்பல்லவர் என்றுதமது ராஜமாபுக் குரிய பேர் கொடுத்தனர். அதனே வகித்த சேக்கிழார், திருவருள் வலியால், இமசேதுபரியந்தமுள்ள எல்லாத்தேசங்களிலும்ஆணை நடத்தி அரசு புரிந்துவந்தனர்.

இவர்க்குச் சோழநாட்டிலுள்ள திருநாகேசுரத்தில் அன்பு மிகுதலால் தமது திருவவதாரஸ்தலமாகிய குன்றத்தூரிலே அம் மாதிரி ஒரு திருக்கோயில் செய்வித்து சிவலிங்காதி மூர்த்திகள் பிரதிஷ்டித்து திருநாகேசுரமென்றே பேர்வைத்து நித்தியநைமித் தியாதிகள் சிறப்பித்து வந்தனர். அக்காலத்தில் நாட்டிலுள்ளார் சிலர் செந்நெல்லிருக்க உமியைக்குத்திக் கைவருந்தலும், வெளி யிடத்தில் கறவையிருக்க இருட்டறையில் மலடுகறந்து உளந்தளர் தலும், பூஞ்சோலை வழியிருக்கக் குழியில் வீழ்ந்து சேற்றிலாழ்த லும், கரும்பிருக்க இரும்பு கடித்துப் பல்லுடைபடுதலும்போலச் சைவநூல்களாகிய வேதசிவாகமாதி சிவசாஸ்திரங்களிருக்கஅவை களேப் படித்தும் கேட்டும் உய்வதொழிந்து, கலகமே செய்யும்

---

* இதனே, " காவலன், மண்ணிற் கடலின் மலேயிற் பெரிதெதென, எண்ணியெழு திக்கொடுத்த வேற்றக்கை" என்னுந் திருக்கை வழக்கத்தாலும் காண்க.

சமணர்களாகிய கீழ்மக்கள், சீவகன் என்னும் சமணாசன் கதையாகிய பொய்ப்பொருளையே ஒரு காவியமாகச்செய்து, உலகரை வஞ்சித்துப் பரப்பிவருகின்ற சிந்தாமணிநூலையே படித்து வந்தனர். அநபாயசோழரும் அப்புரட்டுத் திருட்டுச் சிந்தாமணிக்கதையை மெய்யென்று நம்பிப்பாராட்டினர். அது தெரிந்த சேக்கிழார், அரசரே நீர் பரம்பரையாகச் சைவசமயமே மேற்கொண்டு உலகெங்கும் அதனையே பரப்பிப் பாதுகாத்துவரும் சைவராஜமாபில் வந்து அந்நிலையிலே நின்றும், பயனற்ற பொய்க்கதையாகிய சமணநூலைப் பாராட்டுதல் தகுதியன்று நமது சிவகதைகளே இம்மை மறுமை மோக்ஷமென்னும் முப்பயனுந்தருவனவென்று கூறியருளினர்.

அரசர், முப்பயனுந்தரும் சிவகதை எது? அதன் வரலாறு முதலியனஎவை? என்றுமகிழ்ந்துகேட்க, அருண்மொழித்தேவர், அரசரே, உண்மை நாயன்மார் மகிமையை உலகெலாமுணர்ந்துய்யும்படி, பரமபதியாகிய வன்மீகநாதர், சுந்தரமூர்த்திகளுக்கு முதலடி கொடுத்துச் செய்வித்தருளிய திருத்தொண்டத் தொகைப் பொருளை அதிலுள்ள நாயன்மார் சரித்திரங்கள் உள்ளவாறுவிளங்கும்படி, சர்வஞ்ஞ பரமபதியாகிய நாரையூர்ப் பொல்லாப்பிள்ளையார் தம்மை பூஜித்துவந்து தமதருள் முழுதும் பெற்றுச் சிவத்துவிஜகுல சிகாமணியாய் விளங்கும் நம்பியாண்டார்நம்பிகளுக்கு விரித்து விளக்கியருளினர். நம்பிகள் அந்நாயன்மார் சரித்திரங்களை ஒவ்வொரு பாடலுள் அமையவைத்து திருவந்தாதியாகப் பாடியருளினர். அது, திருத்தொண்டத் தொகையைச் சிறிது விரித்துவகையாய் விளக்குதலால் திருத்தொண்டர் வகையந்தாதியென்றுபெயர்பெற்றுவிளங்குகின்றது. அதனைத்திருமுறைகண்ட சோழர், சிவாலயமுனிவர்முதலிய சிவாநுபூதிமான்களெல்லாரும் படித்துச்சிரமேற்கொண்டுபாராட்டினார்களென்று கூறியருளினர்.

அரசர் அத்திருவந்தாதிப் பொருளைக்கேட்க விரும்பினர். அருண்மொழித்தேவர் விரித்துக்கூறியருளினர். அரசர் அன்புமீதூர, அவ்வுண்மை நாயன்மார்கள், உலகப்பற்றுமுற்றும் நீங்கி அருளையேபற்றிநின்று, உயிர்க்கிறுதியுறினும் அசையாது மேற்

செல்லும் அன்பின் இடத்தால் புரிந்துவந்த லோகாதீதமான அடிமைத்திறத்தின் பெருமையும், அவர்களுக்கு ஆங்காங்குவந்து முன்னின்றருளிய சிவபிரானது அருளின்திறத்தையும் நினைந்து நினைந்துருகி அவ்வசத்தராய் நிற்றலால், சேக்கிழாரை, இவர், புத்திநுணுக்கம் நன்காராய்ந்து நாமே தெரிந்தெடுத்த முதன்மந்திரியாரன்றோ! நமதுராஜகாரிய முழுதுந்தாமே வகித்து ஒன்றும் நம்மை வந்து தாக்காமல் உற்ற துணையாய் உடனிருந்து நடத்திவந்த உத்தமசோழப் பல்லவரன்றோ! என்பனமுதலிய ஒன்றையும் நோக்காமல், இவ்வரியசரித்திரங்களைப்பெருங்காவியமாகச்செய்து தருகவென்று விடைகொடுத்தனுப்பினர்.

விடைபெற்ற அருண்மொழித்தேவர், அவ்வரிய சரித்திரங்கள் அருளே முன்னின்று நடத்த அன்புறுதியால் நிகழ்ந்தனவாதலால், அவற்றினுண்மை விளக்குங்காவியமும் அருளாற்றுகும். அவ்வருள் முழுதும் அனவாதமும் நிறைந்து விளங்கும் பொதுஸ்தலம் சிதம்பரமே என்னுந்துணிவு பற்றியே அறிவிருப்புடன் அங்குவந்து சிவகங்கையில்ஸ்நானம்செய்து திருநீறு கண்மணிகள் திருமேனியில் நிறைகின்ற சிவவேடப்பொலிவினராய் சிவபூஜாநியமமுடித்துச் சிரமேற்குவித்த திருக்கரங்களுடன் சிற்சபை முன் சென்று தெரிசித்துவணங்கி, மெய்ம்மயிர்பொடிப்ப விழிநீர் பெருக விழைமனமுருக, மெய்ம்மையானந்த விரிகடன் மூழ்கிநின்று, எம்பெருமானே, தேவரீரது திருவருணெறித் திருத்தொண்டர் திருச்சரித்திரம் திவ்வியகாவியமாகிச் செகமெலாந்திகழத் திருவடிதந்து செய்வித்தருள்க வென்று வேண்டித் திருமுன்பணிந்து நிற்கும்போது, திருவருளால் சிற்சபையாகிய சிதாகாசவெளியிலே "உலகெலாம்" என்றொரு (பாநாதம்)பேரோசைமிகுந்தெழுந்து, தில்லைமூவாயிரவர், திருமடாதிபர் முதலிய சீரடியார் செவிகளிலும் புகுந்து செகமெலாம் நிறைந்து விளங்கியது. யாவரும் இவ்வற்புதங்கண்டு ஆனந்த பரவசர்களாய்ச் சிரமேற்கைகுவித்து

மனமுருகி அருண்மொழித் தேவர்து அன்பின் பெருமையும் ஆனந்தக்கூத்தரது அருளின் பெருமையும் நோக்கி எடுத்துரைத்து இச்சேக்கிழார் சபாநாதரேவேறல்லர் என்றேதுதித்தார்கள். திருவுடையந்தணர்கள் சிற்சபேசரது திருநீறும் திருமாலையும் திருப்பரிவட்டமும் சேக்கிழார்க்கணிந்து மகிழ்ந்து பாராட்டினார்கள்.

அது பெற்ற சேக்கிழார்பெருமான், உண்மை நாயன்மார் சரித்திரம் பாடுதற்குரிய முதல்நூல்கள் திருத்தொண்டத்தொகை முதலிய தேவாரங்களாதலால் அத்திருநெறித் தலைவர்களைப் பணிந்துசென்று ஆயிரக்கால்மண்டபத்து வந்திருந்து சபாநாதருளிய "உலகெலாம்" என்ற மந்திரவாசக முதலாகக்கொண்டு *தாணுவான புராணகாவியம் பாடியருளத் தொடங்கினர்.

"உலகெலாம்" என்றருளிய சிவமந்திரம் ஐந்தெழுத்துக்களால் விளங்குகின்றது. இது, சிதாகாச வெளியாகிய நிஷ்கள சிவசொரூபநிலையில் தோன்றிப் புராணம் நிறைவேறும் வரையும் நீண்டொலித்து, இனிஅமைகஎன்னுந்திருவுளக்கருத்தால் அம்மட்டில் நின்றது. இதனை, உமாபதிசிவம் "உலகெலாம்" எனவடியெடுத் துரைசெய்த பேரொலி" என்றும் அம்மட்டிலும் அமையாமல் "ஓசைமிக்கு" என்றும் அதன்மேலும் "எங்குமாகிநிறைந்ததால்" என்றும்அருளிய திருவாசகங்கள்தெளிவிக்கின்றன. 'உலகெலாம்' என்றருளிய இவ்வரியபெரிய பஞ்சாக்ஷரங்கள், முதலில்மாத்திரமன்றி நடுவிலும் முடிவிலும் விளங்குதலாலும், இப்புராணம், நிஷ்களசிவசொரூபபரநாதமே, அருண்மொழித்தேவர் திருவாக்கினின்றும் திருவருளால் புராணரூபமாக வெளிவந்ததென்பதுதெளிவாகின்றது. இதனால், சகளநிஷ்களசதாசிவமுகத்துவந்துபஞ்சாக்ஷரங்களை நடுவில்விளக்குவதாகிய வேதத்தைக்காட்டிலும் மிகச்

---

*சிவவிளக்கமேவாய்ந்து எக்காலத்தும் எவராலும் அசைக்கமுடியாது விளங்கலால், உமாபதிசிவாசாரியார் தாணுவான புராணம் என்றருளினர்.

சிறந்ததென்பது தோன்றியமுறையிலும் விளக்கமாம். இத்தகு சிறப்பின் மெய்த்தவர் துதிக்கும் பத்தர்கள்விலாச சுத்தமாபுராணம் புத்தமுதின்சுவைப் பத்தியவடிவாய் முத்திசெய்முதலாய்நித்தமும் விரிந்து நிறைவேறியது. இவ்வுண்மையை,

ஓருலகோ வொருதிசையோ வொருபதியோ தம்மி
லொருமரபோ வொருபெயரோ வொருகாலந் தானோ
ஏருலகி லொருமைநெறி தருங்கதையோ பன்மைப்
பெருங்கதையோ பேசொன்றோ வல்லவே யிதனை
யேருலகெ லாமுணர்ந்தோ தற்கரிய வன்னென்
றிறைவன்முத லடியெடுத்துக் கொடுத்தருளக் கொண்டு
பாருலகி னுமகனின் றெடுத்துக்கை நீட்டப்
பாடிமுடித் தனர்தொண்டர் சீர்பரவ வல்லார்.

கருங்கடலைக் கைநீத்துக் கொளவெளிது முந்நீர்க்
கடற்கரையி னெய்மணலை யெண்ணியள விடலாம்
பெருங்கடன்மேல் வருந்திரையை யொன்றிரண்டென் றெண்ணிப்
பிரித்தெழுதிக் கடையிலக்கம் பெருக்கிவிட லாகும்
திருங்கடலின் மீனையள விடலாகும் வானத்
தாரகையை யளவிடலாஞ் சங்கரன்ற டமரு
சிரங்கொடிருத் தொண்டர்புரா ணத்தையள விடஞ்
சேக்கிழார்க் கெளிதலது தேவர்க்கு மரிதே.

என்று உமாபதிசிவம் விளக்குதல்காண்க. இதற்குத்திருத்தொண்டர்புராணம் என்று திருப்பெயர்தந்தருளினர். அநபாயசோழர், இப்புராணம்நிகழ்ச்சி பலமுறை ஏவலர்மூலமாகத்தெரிந்து மகிழ்ந்து நன்கொடைபுரிந்து, நிறைவேறியதுதெரிந்து சொர்ணமழை பொழிந்து பெருமகிழ்வடைந்து, சுபதினத்திற்பயணமாகிச்சைனியஞ்சூழச் சிதம்பரம்சமீபிக்கவந்தனர். தில்லைவாழந்தணரும் திருட்டபதிகளும் சேக்கிழார்பெருமானும் எதிர்வந்து ஆசிபுகன்று உபசரித்தனர். அரசர், சேக்கிழார்பெருமான் சிவவேடப்பொலிவு கண்டு அளவுகடந்த ஆனந்தபரவசராய்க் கைகள் சிரமேற்குவிய

அவ்வடிகளில்பலமுறைபணிந்து அவர்களுடன் சிற்சபைக்குவந்து சபாநாதரைப்பணிந்து துதித்துநின்றனர். அப்பொழுதுசோழனை நமதுசேக்கிழான் திருத்தொண்டர்சரித்திரங்களை விரித்துப் பாடும்படி "உலகெலாம்" என்னுமுதல்கொடுத்தனம். அம்முதல்கொண்டு பாடிமுடித்தனன். *இப்புராணத்தை விரைந்துகேட்பாயென்னும் வழக்கமான திருவாக்குத் திருச்சிலம்பொலியுடனெழுந்தது. அவ்வாக்கும் ஒலியும் அங்குவந்துபாவிநிற்கும் சர்வசனங்களின் செவிகளெங்கும்நிறைந்து, மேலும்சராசரங்களெங்கும்நிறைதலால் சர்வசீவகோடிகளுமங்கிசிந்துருகிஒலிட்டன. (அரஅரமுதலிய பேரொலி செய்தன).

இத்தன்மையுங்கண்ட அரசர், பெருமகிழ்வுற்றுத் திருவருளை நினைந்துருகிப் பணிந்துவந்து, சிற்சபேசர் திருவருளாற் சேக்கிழார்முனிவரர் பாடியருளிய திருத்தொண்டர் புராணங்கேட்டின் புறுதற்குச் சிவனடியார் எல்லாரும் வருகவென்று எத்திசைகளுக்கும் பத்திரிகைகள் அனுப்பினர். அவரேவலர்கள் திருக்கோயில் திருவீதிகளெங்கும் அலங்காரவகைகள் சிவப்பொலிவு விளங்கச் செய்தார்கள். பத்திரிகைகண்டு மகிழ்ந்து பற்பலதேசத்தரசர்கள் மந்திரிகள் சிவனடியார்கள் திருமடபதிகள் தர்க்கம் வியாகரணம் வேதவேதாங்கசிவாகமபுராணாதி வடநூல்கள், தேவாரதிருவாசகாதிய செந்தமிழ்ச்சங்கநூல்கள்வல்லார் பல்லாயிரவர் கூட்டங்கூட்டமாகச் சிதம்பரத்துவந்து திருமடங்களெங்கும் நிறைந்தார்கள். எங்கெங்கும் வேதாகமதேவாரதிருவாசகாதி சிவசாஸ்திரமுழக்க மலிந்தன. தேவர்பூமழைபொழிந்தனர். தேவரம்பையர்நடித்தனர். மங்கலவாத்தியங்கள் முழங்கின. இவ்வாறுபற்பல சுபசோபனங்களை நிறைந்த சிதம்பரம் பூலோகசிவலோகமாகவே விளங்கியது.

---

* இத்திருத்தொண்டர்சரித்திரம், பிறரெவராலுஞ்சொல்லமுடியாத அபாரமகிமையுடையதே என்பது விளங்கவே, முன்பு திருத்தொண்டத்தொகைக்கும் சிவபிரானே முதல்கொடுத்து மலமுத்த சுந்தரமூர்த்தியால் வெளியிட்டனர். அதன்வகையந்தாதியும் விநாயகரருளால் மலமுத்த நம்பி முகமாகவந்தது. அதன்விரியாகிய இப்புராணமும்சிவமுதல்கொண்டு சேக்கிழாராகிய சிவமுகமாகவந்தது. இவர் சிவனென்பதை சேக்கிழாரென்னும் இவரதுபேருந்தெரிவிக்கும்.

தில்லைவாழந்தணரொருவர், சிற்சபேசர்திருமுன் திருமெழுக்குந் திருக்கோலமுஞ்செய்து ஆறுகாற்பீடமிட்டுப் பசும்பட்டுவிரித்து அதன்மேல் வெண்பட்டுமடித்திட்டு நறுமலர்தூவிச் சிவமந்திரங்களாற்சிவாசனமாக்கி, அதன்மேல்திருத்தொண்டர்புராணத் திருமுறையைவைத்துச், சிவமாகவே தியானித்து விதிப்படி பூசித்துவணங்கினர். அப்போது அரசர்முதலிய அடியாரெல்லாரும் சேக்கிழார்பெருமானைவணங்கிச் சுவாமீ இதன்பொருள்கூறியருளுகவென்றுவேண்டினர். அவர், அவ்வாறேவிரித்துரைத்தருள, யாவரும் ஒருவழிப்பட்டமனத்தராய் மெய்யன்புடனிருந்துகேட்பாராயினர். சேக்கிழார்நாயனார், இத்தினம், சிவபிரானுக்குரியதும், திருஞானசம்பந்தர் அவதரித்தருளியதும், அவர்திருமுலைப்பாலுண்டருளியதுமாகிய சித்திரைத்திருவாதிரைத்தினமாதலால், இத்தகுசிவதினத்தில் தொடங்கிய இப்புராணத்தை, இப்படியே நடத்தி அடுத்தவருஷத்துச்சித்திரைத்திருவாதிரையில் முடிப்போமென்று தெரிவித்துத் தினந்தோறும் பொருள்விரித்துரைத்துவந்தனர். ஆரம்பதினமுதலாக அரசர்ஏவலினால் மந்திரிகள்சபாநாதர்க்கு விசேஷபூசையும் திருமடங்கடோறுமாகேசுரபூசைமுதலியனவும் அதிவிரிவாய்நடத்தினர்.

திருமடங்களெங்கும் வசிக்கின்ற சிவனடியா ரெல்லாரும் இடையிட்டநேரங்களில் புராணத்திருமுறைசேர்த்தல், எழுதுதல் படித்தல், சேக்கிழார்நாயனார்கூறியதை ஞாபகத்தில்வைத்திருந்து பொருள்கூறுதல், மகிழ்ந்துகேட்டல் முதலியனவே செய்வார். சேக்கிழார்தவமே தவமென்பார். இப்புராணமேபுராணமென்பார். இதுதிருவருள்மயமே என்பார். இவ்வரியபெரியபுராணங்கேட்ட அரசர்செவிகளுக்கு இனிச்சிந்தாமணிப்புரட்டுக்கதைபிடிக்குமோ என்பார். இன்னும் பலவகையாப்பாராட்டிவரும் சிவனடியாரெல்லாரும் அன்புபெருகச் சூழ்ந்திருந்துகேட்பச், சேக்கிழார் திருவாக்கினின்றும் விரிந்துவந்த சிவபுராணம் அடுத்தவருஷம் சித்திரைத்திருவாதிரையிற்பரிபூர்த்தியாகியது. எல்லாரும் அரகரமுழக்கஞ்செய்தார்கள். அவ்வோசை அஷ்டதிசையுங்கடந்து அண்டமுகட்டினப்பாலும் பரம்பியது. தில்லைவாழந்தணர், இப்புராணம், நான்குவேதங்களினுமேலாய், உலகெலாம், அன்பின்திறமும்அரு

ளின் திறமும் செவ்வே கண்டுய்யும்படி திருவருளால் வந்த ஐந்தாவது வேதமே என்றுகருத்திலிருத்தித், திருமாலைமுதலியன அணிந்து, அதிவிசேஷ சோடச உபசாரங்கள்மலிய, அன்புடன் பூசித்து வணங்கினர். உடனே அரசர், சபாநாதர்க்கும் விசேஷ பூசைசெய்வித்து, அப்புராணத் திருமுறையைப் பசும்பட்டினாற் சூழ்ந்து, சுவர்ணரத்தினபீடத்தில் வைத்துப் பீடத்துடனெடுத்துப் பட்டவர்த்தனயானைமீது வைத்துச், சேக்கிழார்பெருமானை வணங்கி, யானைமேலெழுந்தருளுங்களனவேண்டி அவ்வாறு அவர் வீற்றிருந்தருளச்செய்து, தாமுமேறி அவர்பின்பாக இருகரங்களிலும் இரண்டு சாமரங்கள் பிடித்துவீசிக்கொண்டிருந்தனர்.

யானை திருவீதியிற்செல்லும்போது சிற்சபேசர் தரும்அருட்பெருக்கமும் தில்லைவாழந்தணர்முதலியர் திருவீதியில்வேதம்ஓதிக்கொண்டு மிகமகிழ்ந்து வருந்தெருட்பெருக்கமும்,சிவநேசர் திருக்கூட்டத்தெழுகின்ற சிவநாமவகையின் உருப்பெருக்கமும், பற்பல தேசத்தரசர்கள் மந்திரிகள் ரதகெஜதுரகபதாதிகள்சூழ்ந்துவரும், திருப்பெருக்கமும், வீதிகளெங்கும் தோரணங்கள் நடைப்பந்தர் வாழை கமுகு கரும்பு மேற்கட்டி பொன்னரிமாலை ரத்தினமாலை பூமாலை பூரணகும்பம் ரத்தினதீப முதலிய அலங்காரவருக்கமும், அறுகுமலர்தூவிப்பூரணகும்பந்தாங்கி வேதம்ஓதி எதிர்வந்து வாழ்த்தும் பிராமணர்நெருக்கமும், பதினெட்டுவகைவாத்தியமுழக்கமும் பற்பலமெய்யன்பர் தோத்திரவழக்கமும் முதலிய மகிமையெல்லாம்நேரேகண்டஅரசர் ஆனந்தமேலீட்டினால் 'இதுவன்றோ நான்செய்த தவப்பயனென்றிசைத்தார்'.

இத்தகுவைபவங்கள்பொலியச் சேக்கிழார்நாயனார் யானைமீதெழுந்தருளிஅரசர்சாமரைவீசத்திருவீதிவலம்வருதல்கண்டவரிற் சிலர், இவர்க்குச்சோழமகாராஜா சாமரைவீசுகின்றனரே இஃதென்ன அற்புதமென்றார். சிலர் அஃதன்று இவர் சிவமேயாய்விளங்குஞ் சிறப்பன்றோ பேரற்புதமென்றார். சிலர், இவர், சம்பந்தர் முதலியசமயாசாரியர்களெல்லாரும்ஒருவடிவுகொண்டுவந்தருளிய முதற்பொருளே யென்றார். சிலர், இச்சேக்கிழார்முனிவர்க்கு, வான்மீகர் வியாசர் ஆதிசேடர் அகஸ்தியர்முதலியஎம்முனிவரும் ஒப்பாகாரென்றார். இவரது சிவவேடப்பொலிவும், யானைமேல் இத்தனைமகிமையுடன்வரும்போதுஞ் சிவனையேபற்றிநிற்குந் திரு

உள்ளம் நைய்யுந்தோறும் திருவாக்கினின்று அரஅரவென்று வெளிவரும் சிவநாமச்சிறப்பும், நாமெல்லாம் உய்யும்படி திருமுக மண்டலம் பொழிகின்ற திருவருள்வெள்ளமும் மிகஅழகாய் எல்லார்மனசையும் வசிக்கின்றதென்று தொழுதார்கள். உலகர்க்கு வாக்கருளும் சரஸ்வதிக்கும் அவ்வன்மைதந்தருளும் சிற்சத்தியாகிய ஞானவாணியே இவர் திருநாவில்குடியிருத்தலால், அன்பும் அருளுமே நிறைந்த ஞானமயபுராணம் வெளிவந்ததென்றார்கள். மேகங்கள் மலினநீங்கி எங்கும்பிரகாசமழைபொழிந்தன. தேவர்கள், தேவதுந்துபி முழக்கொடு கற்பகப்பூமழை பொழிந்தனர். சேக்கிழார்முனிவர் சிவநாமச்சொன்மழை பொழிந்தனர். அநபாயசோழமகாராஜர் பொன்மழை பொழிந்தனர். கசிந்துருகி அன்பரெல்லாரும் கண்மழைபொழிந்தனர். பற்பலசுபசகுனங்கள் மலிந்தன. இன்னுமளவில்லா வைபவங்கள்நிகழத் திருவீதிவலமாகச் சிற்சபைமுன்வந்து நாயனூர், அரசர் தில்லைவாழந்தணர் முதலியரொடு உட்புகுந்து புராணத்திருமுறையைச் சிற்சபேசர் திருமுன்வைத்து வணங்கினர். எல்லாரும்வணங்கித் திருவருளினால் சேக்கிழார்நாயனூருக்குத் "தொண்டர்சீர்பரவுவார்" என்று திருப்பெயர்புனைந்து சிவஞானத்திருமுடிசூட்டினர். சேக்கிழார்பெருமான், சிற்சபேசரைப்பணிந்து ஆயிரக்கால்மண்டபத்துவந்து வீற்றிருந்தருளினர். அவர்திருவடிகளில், அரசர் முதலிய யாவரும் பணிந்தனர். பின்பு இத்திருப்புராணம், "தோடுடையசெவியன்" முதலிய திருநெறிச்செந்தமிழாகிய திருமுறைகளுடன் ஒத்ததே என்னும் உண்மைகருதியே, அதனைச்செப்பேட்டில் எழுதி, நம்பியாண்டார்நம்பிகளால் முன்வகுக்கப்பெற்ற பதினொருதிருமுறைகளுடன் பன்னிரண்டாந் திருமுறையாகச் சபாநாதர் திருமுன்சேர்த்துவைத்தனர். அரசர், சேக்கிழாரது தம்பியார் குன்றத்தூரில் திருக்குளஞ்சமைத்துத் திருநாகேசுரசிவாலயநித்தியநைமித்திகாதி திருப்பணிகள்செய்துகொண்டிருப்பது தெரிந்தழைத்து அவரை மந்திரியாராக்கிக்கொண்டனர். பின்பு அரசர் சேக்கிழார் முனிவர் திருவடிகளிற் பலமுறைபணிந்து பிரிவாற்றாது கண்ணீர் சொரிய நின்று ஒருவாறுகப் பிரியாவிடைபெற்றுச் சென்றனர். சேக்கிழார்நாயனூர் அடியார்கூட்டஞ்சூழ அத்தலத்திற்றனே சிற்சபேசதெரிசனபூஜாநிசிவநியமங்கள்நிகழத் திருத்தொண்டர்புராணசிரவணசிந்தனநிஷ்டானுபூதிநிகழ வீற்றிருந்தருளி வைகாசிப்பூசநக்ஷத்திரசுபதினத்தில் குஞ்சிதபதநிழலிற்புகுந்தருளினர்.

'வாழி தில்லைமணி மன்று ளென்றுநட மாடு மங்கணர் மலர்ப்பதம்
வாழி காழிநகர் வாழ வந்ததிரு நெறிய ஞானபதி வள்ளலார்
வாழி யன்பர்திரு நீறு மிட்டதிரு முண்டமூர் துவ்ய கவசமும்
வாழிகுன்றைமுனிசேவையாகிதிருவாய்மலர்ந்தருள்புராணமே.

அண்ட வாணர்தொழு தில்லை யம்பலவ ரடியெ டுத்துலகெ லாமெனத்
தெண்டர் சீர்பரவு சேக்கி ழான்வரிசை துன்று குன்றைநக ராதிபன்
தண்ட காதிபதி திருநெ றித்தலைமை தங்கு செங்கைமுகில் பைங்கழற்
புண்ட ரீகமலர் தெண்ட னிட்டுவினை போக்கு வார்பிறவி நீக்குவார்.

இப்புராணம் பாடியருளினவர், ஸ்ரீமந் நடேசப்பெருமான்
அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டு—படியின்மிசைப்
பெற்றான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்றுபணிவுகாட்டிப் புகழ்ந்து சீட்டுக்கவியால் வேண்டிக்கொள்ளப்பெற்ற உமாபதிசிவாசாரியர். இவர், உண்மைநாயன்மார் மகிமையை உலகெலாமுணர்ந்துய்கவென்னுங் கருணையால் அப்புராணந்தாமேபாடத்தொடங்குங்கால், சேக்கிழார்முகமாகமுன்னமே வெளிவந்துள்ளதென்னுமுண்மைதெரிந்து அதனைத்தேடிக்கண்டு முழுதும்படித்து அதனருமைபெருமையெல்லாம் செவ்வேதெரிந்து, இப்புராணந்திருவருள்மயமாகவே திகழ்தலால், இது, உலகவித்துவான்களாலாவதன்று. உலகாதீத சிவாநுபூதிநிலையாலாகியதே. இத்தகைய திருவருட்பெருஞ்செல்வராகிய சேக்கிழார் பெருமானைப்பாடுதலே, உண்மைநாயன்மார் யாவரையும்பாடிய பெரும்பயன்தருவதென்றுகடைப்பிடித்தே, சேக்கிழார்பெருமை செகமெலாம்விளங்கப் பாடியருளினரென்றுபெரியார்கூறுகின்றார்கள். இப்பெருஞ்சிறப்புவாய்ந்த சேக்கிழார்பெருமான் திருவவதாரஸ்தலமாகிய குன்றத்தூரிலே திருக்கோயில்செய்து இவர்திருவுருவந்தாபித்து, நித்தியபூசை திருவிழாச்சிறப்புமுதலியன முன்னையோரால் நெடுங்காலமாநடந்துவருகின்றன. இத்திருக்கோயில் திருப்பணிமுதலியன சிறப்பித்து நடத்துவது சிவாலயத்திருப்பணியினுஞ் சிறந்ததென்பதே சிற்சபேசர் திருவருட்சம்மதமாகும். இதனைச் சிவதருமசீலர்கள்சிந்தித்து மேற்கூறியவாறு சிறப்பித்து நடத்தும்படி திருவருளைப்பிரார்த்திக்கின்றேன்.

சேக்கிழார்நாயனார் புராணம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

# நம்பியாண்டார்நம்பிகள் சரித்திரம்.

இது, ஸ்ரீமந் நடேசப்பெருமானால் புகழ்ந்து பாடப்பெற்ற உமாபதிசிவாசாரியர் பாடியருளிய திருமுறைகண்ட புராணத்துள்ளது.

நம்பியாண்டார்நம்பிகள், சோழநாட்டில் திருநாரையூரில் பிரமன் முகத்துவந்த பிராமணர் முதலிய நாற்சாதியினர்க்கும் மேற்சாதியினராய்ச் சதாசிவமுகத்து வந்த சிவசாதியினராகிய ஆதிசைவர் குலத்தில் அவதரித்து, உரியகாலத்தில் உபநயனம், சிவதீக்ஷை முதலிய சிவசம்ஸ்காரம் பெற்று வேதாகமாதிகள்படித்து வருநாளில், தமது பிதா ஒரு ஊருக்குப் போம்பொழுது சொல்லியபடி, பொல்லாவிநாயகர்க்கு அபிஷேகாதிசெய்து நைவேத்தியத்தை முன்வைத்து உண்டருளும்படி வேண்டி, உண்ணாமை கண்டு வருந்தி தவறு செய்தேன்போலுமென்று கவலையுற்றுத் தலையை மோதப்புகும்போது, விநாயகர் நைவேத்திய முழுதும் உண்டருளினர். நம்பிகள்மகிழ்ந்து எம்பெருமானே அடியேனுக்கு வேதசிவாகமாதிகளெல்லாம் உபதேசித்தருளுகவென்றுவேண்டி, முழுதும் உபதேசித்தருளப்பெற்றுப்,பணிந்து திருவிரட்டைமணிமாலை பாடித்துதித்து, ஒவ்வொருநாளும் பூசித்து விநாயகரை நைவேத்திய முழுதும் உண்டருளச்செய்து வந்தனர். அந்நாளில் ஒவ்வோர்தேவாரங்கேள்வியுற்று, அதனுண்மைப்பொருள்நோக்கி அன்புமேலிடலால், நெடுங்காலமாக அத்தேவாரத் திருமுறைகள்

தேடிக்காணப்பெறாது வருந்தும் அபயகுலசேகரசோழமகாராஜாவானவர், மேற்கூறிய நம்பிகள் மகிமைதெரிந்து, தமது நாட்டிலுள்ளார் யாவரும் இன்னதினத்தில் திருநாரையூர்க்கு நைவேத்தியவகையெல்லாங்கொண்டுவருகவென்றுஆஞ்ஞாபித்துத்தாமும் அத்தினத்தில் திருநாரையூர்க்கு வந்தனர். நாட்டிலுள்ளாரெல்லாம் அன்னவகை, மோதகவகை, எள்ளுருண்டை, அப்பம் முதலிய வகைகள் பற்பல கனி வகைகளெல்லாங்கொண்டுவந்து திருநாரையூரில்சூழப் பதின்காதவெல்லைவரை பரப்பிவைத்தார்கள்.

அரசர், நம்பிகளை வணங்கி இவையெல்லாம் விநாயகப்பெருமானுக்கு நிவேதித்தருளுகவென்று வேண்டினர். நம்பிகள் அவை முழுதும் மந்திரபூர்வகமாக நிரீக்ஷணாதிகளாற் சுத்திசெய்து நிவேதிப்ப, விநாயகர் துதிக்கை நீட்டி எடுத்து முழுதும் உண்டருளினர். அரசர், அவ்வற்புதங்கண்டு மகிழ்ந்து நம்பிகளைவணங்கி, எம்பெருமானே தேவாரத்திருமுறைகளும், திருத்தொண்டர் சரித்திரங்களும்உலகெங்கும் விளங்கவேண்டுமென்று பிரார்த்தித்தனர். நம்பிகள், விநாயகர் திருமுன்பணிந்துவேண்டி, அவர் தெரிவிப்பத்தெரிந்துவந்து, அரசரே திருமுறைகள், சிதம்பரத்திற் சிற்சபையின் புறத்துள்ள அறைகளில், சம்பந்தர், அப்பர், சுந்தராகிய மூவருடைய கையடையாளம் வைக்கப்பட்டிருக்கின்றன. திருத்தொண்டர் சரித்திரங்கள் இவை என்று தமக்கு விநாயகர், திருத்தொண்டத்தொகைப் பொருள் விரித்தருளியபடி விளக்கியருளிச் சிவபிரானருளிய ஆரியவேதங்கள் கைகாணா மந்திரங்களாகும். மூவருளிய தேவாரங்களாகிய செந்தமிழ்ச் சீரியவேதங்கள் கைகண்ட திருமந்திரங்களாகுமென்று மேலுந் தேவார மகிமைகளைச் செவ்வே தெரிவித்து, அத்தேவாரங்கள், திருஞானசம்பந்தர் திருப்

பதிகம் பதினாறாயிரமும், திருநாவுக்கரசர் திருப்பதிகம் நாற்பத்தொன்பதினாயிரமும், சுந்தரமூர்த்திகள் திருப்பதிகம் முப்பத்தெட்டாயிரமுமாக ஒருலெக்ஷத்திரண்டாயிரந் திருப்பதிகங்களுள்ளனவென்று விளக்கியருளினர். அரசர் மிகமகிழ்ந்து நம்பிகளுடன் சிதம்பரத்துக்குவந்து சிற்சபேசர் திருமுன்பணிந்து துதித்தனர். நம்பிகள் அன்புபெருக முன்புபணிந்து கோயிற்பண்ணியர் விருத்தம் பாடித்துதித்தனர். அரசர், தில்லைவாழந்தணர்களை நோக்கித் திருநாரையூர்ப் பொல்லாவிநாயகர் கனகசபையின் மேற்றிசை அறைகளுள்ளே தேவாரத் திருமுறைகளிருக்கின்றனவென்றருளினர். அவைகளை எடுத்தல் வேண்டுமென்றனர். அந்தணர்கள், அரசரே அத்திருமுறைகள், அவற்றைப் பாடியருளிய மூவரால், அந்நாளில் அவ்வறைகளுள் வைக்கப்பட்டு அவ்வாயிலில் அவர்கள் திருக்கையடையாளமுஞ் சேர்த்திருத்தலால், அதனைக் கடந்து நாம் திறத்தல் கூடுமா? அம்மூவரும் வந்தால் அவ்வறைகள் திறக்கப்படுமென்றார்கள். அரசர் அதற்கமைந்து, சிற்சபேசர்க்கும் சமயாசாரியர்க்கும் விசேஷபூசை செய்வித்து சமயாசாரியர்மூவரையும் திருவீதியில் எழுந்தருளச் செய்துகொண்டு கோயில் வலமாக அவ்வறைமுன் வந்துநின்று இனி அறை திறக்கலாமே என்றனர். அந்தணர்கள் அரசரது ஆழ்ந்து நோக்கும் புத்திநலத்தையும் அருளையே நோக்கும் பத்திவலத்தையும் வியந்து பாராட்டி அம்மூவரை வணங்கி அவராணை வேண்டிப்பெற்று அவ்வறைகளை திறப்பிக்க, அரசர் உள்ளிருந்த திருமுறைகளை வன்மீகமூடியதை கண்டு வருந்தி, அம்மண்ணைப் புறத்தில் மெல்ல ஒதுக்கி, உள்ள ஏடுகளும் பழுதுபடாவண்ணம் எங்கும் எண்ணெயால் அபிஷேகித்து நனைந்தபின் சாவதானமாக எடுத்து, மிகுந்த திருப்பதிகங்

கள் கறையானால் மறைந்ததை நோக்கி மிகவருந்தி, விழிநீர் பெருக மனங்கசிந்துருகத் திருவருளை வேண்டி நின்றனர். அப்போது திருவருளால் தேவாரங்களை மண்மூடச்செய்து இக்காலத்துக்கு வேண்டிய மாத்திரம் வைத்தோமென்று யாவருங்கேட்க ஆகாயவாக்கெழுந்தது. அதுகேட்டு அரசர் கவலை நீங்கி நம்பிகளை வணங்கி இத்திருமுறைகளை முன்போல வகுத்தருளுகவென்று வேண்டினர்.

நம்பிகள், திருவருள் இக்காலத்துக்குவேண்டியமட்டில்வைத்துள்ள திருஞானசம்பந்தர் திருப்பதிகங்கள் முந்நூற்றெண்பத்துநான்கையும் மூன்று திருமுறைகளாகவும், திருநாவுக்கரசர் திருப்பதிகங்கள் முந்நூற்றுப்பன்னிரண்டையும் மூன்று திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்திகள் திருப்பதிகங்கள் நூற்றொன்றையும் ஒரு திருமுறையாகவும், ஆகத் திருப்பதிகங்கள் எழுநூற்றுத்தொண்ணூற்றேழையும், ஏழுகோடி மகாமந்திரங்களே என்ன, ஏழுதிருமுறைகளாக வகுத்தருளி, அதன்மேல் திருவாசகமுந் திருக்கோவையாரும் எட்டாந் திருமுறையாகவும், திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலர் திருமந்திரம் மூவாயிரமும் பத்தாந்திருமுறையாகவும், திருவாலவாயுடையாரருளிய திருமுகப்பாசுர முதலியவைகளைப் பதினோராந்திருமுறையாகவும், ஈசானாதிய பதினொரு திருமந்திரங்களென்னும்படி வகுத்தருளினர். அரசர் அம்முறைநோக்கி மகிழ்ந்துநம்பிகளை மேலும் பணிந்து எம்பெருமானே தேவரீர் பாடியிருக்கின்ற நூல்களுடன் பொல்லாவிநாயகர் முகமாகத் திருத்தொண்டத்தொகைப்பொருள் கேட்டு அடியேனுக்கு விளக்கியருளிய திருத்தொண்டர் சரித்திரங்களை ஒரு நூலாகப்பாடியருளி அதனையும்